
நூற்றாண்டு மாணிக்கம்

(1907–2007)



டாக்டர் மா. இராசமாணிக்கனார்
இதழியல் ஆய்வுமையம்


Nalli®
Since 1928
First and the Finest...
நாயகி
கலெக்ஷன்
நல்லி சின்னசாமி செட்டி
பனகல் பார்க், தி.நகர், சென்னை-17. தொ. பே. : 24344115 / 42604567. Fax : (044) 24343062
Email : inquiry@nalli.com Website : www.nalli.com

நூற்றாண்டு மாணிக்கம்

டாக்டர் மா. இராசமாணிக்கனார்
இதழியல் ஆய்வு மையம்

நூற்றாண்டு மாணிக்கம்
முதற் பதிப்பு: ஆகஸ்டு 2007
வெளியீடு: டாக்டர் மா. இராசமாணிக்கனார் இதழியல் ஆய்வு மையம்
G4 போகன்வில்லா குடியிருப்பு. K பிளாக்
ஆறாவது நிழற்சாலை
அண்ணாநகர் கிழக்கு. சென்னை - 600 102
அச்சுக்கோப்பு: முத்துக் கணினியகம். சென்னை - 42
அட்டை வடிவமைப்பு - அச்சாக்கம்: அலமு அச்சகம். சென்னை - 14
விலை ரூ.200

63-5

பதிப்புரை

ஆண்டாண்டுக் காலமாகத் தொடரும் மனித வாழ்வில் வரலாற்றுப் பதிவுபெறும் பெருமை மிகச் சிலருக்கே வாய்க்கிறது. உழைப்பும் உண்மையும் சமுதாயப் பார்வையும் உடைய அத்தகு பெருந்தகைகளின் படைப்புகளையே காலம் தன் தலையில் சுமந்து தலைமுறைகளுக்கு எடுத்துச்செல்கிறது. தமிழ்கூறும் இந்த நல்லுலகத்திலும் அப்படிச் சில சான்றோர்கள் வாழ்ந்து, மொழியையும் இனத்தையும் நாட்டையும் செழுமைப் படுத்தியுள்ளனர். அத்தகு ஆற்றல்நிறை பேரறிவாளர்களில், 'மனிதரில் தலையாய மனிதரே' எனும் அப்பர் பெருமானின் கூற்றுக்கு ஒப்ப வாழ்ந்து வரலாறான பெருந்தகை அறிஞர் மா. இராசமாணிக்கனார் குறிப்பிடத்தக்கவர்; தனித்தன்மையர்.

வளரும் தலைமுறைகளையே நோக்கமாகக் கொண்டு தம் எழுத்தாற்றலாலும் சொல்வன்மையாலும் அந்த இளம் புலங்களை ஆழ உழுது பண்படுத்திய இராசமாணிக்கனார் எல்லா வயதினருக்கும் ஏற்ப எழுதியவர். 'இது செய்', 'அது செய்' என்று ஆணையிடாமல் எது செய்யவும் வழியும் வகையும் காட்டிய தமிழ்மொழிச் செல்வர் அவர். சொல்வதும் செய்வதும் ஒன்றுபோல் வாழ்ந்த அவரின் வேரும் கிளைகளும் தமிழ் வளர்த்தாற் போலவே இன்று விழுதுகளும் தமிழில் தோய்ந்து தவழ்கின்றன.

மாணவர்களிடம் நெருங்கிப் பழகுதல் வேண்டா எனத் தடுக்கமுயன்ற உடன்கூட்டப் பேராசிரியர்களிடம், 'இளைஞர்களிடமிருந்து பேராசிரியர்கள் கற்றறிய வேண்டுவன நிறைய உள' எனக் கூறி இளமை, புலமை இவற்றின் பெருமையை உயர்த்திய நல்லாசான் இராசமாணிக்கனாரின் நூற்றாண்டு பொலியும் இந்த நல்லோரையில், அப்பெருந்தகையின் வாழ்வு, வழங்கிய தமிழ்க்கொடை இவற்றை நினைவுகொள்ளவும் நிறைவாய்ப் பதிவுசெய்யவும் இந்த நூற்றாண்டு மலர் கருதப்பட்டு உங்கள் கைகளில் வழங்கப்பட்டுள்ளது.

இராசமாணிக்கனாரின் நண்பர்களும் மாணவர்களும் எழுதிய கட்டுரைகள் அவரை அடையாளம் காட்டும் கண்ணாடிகள் என்பதால், திருச்சிராப்பள்ளி டாக்டர் மா. இராசமாணிக்கனார் இலக்கிய மன்றம் 1982இல் வெளியிட்ட டாக்டர் மா. இராசமாணிக்கனார் 75ஆவது பிறந்த நாள் விழா மலரில் பதிவாகியுள்ள பல கட்டுரைகள் இம்மலரிலும் இடம்பெற்றுள்ளன. இராசமாணிக்கனாரோடு பழகிய, தொடர்புடைய அறிஞர்களிடமிருந்து புதியனவாகவும் கட்டுரைகள், கவிதைகள் பெற்று இணைத்துள்ளோம்.

இளைய தலைமுறையினருக்கு இராசமாணிக்கனாரை முறையாக அடையாளப் படுத்தும் நோக்கோடு, ' இராசமாணிக்கனார் ஒரு கண்ணோட்டம்' உருவாகியுள்ளது. கவிதை, கதை, கட்டுரை எனும் முத்துறைகளிலும் விளைந்த அவருடைய படைப்புகளில் துறைக்கொரு சான்று தரப்பட்டுள்ளது. யார் நோக்கி எழுதப்பட்டவை என்ற தெளிவுடன் அவற்றை அணுகுதல் வேண்டும்.

இராசமாணிக்கனார் தம் நூல்களுக்கு எழுதியுள்ள முன்னுரைகள், அவர் நோக்கும் சிந்தையும் வெளிப்படுத்தும் தகைமையன என்பதால், அவற்றுள் சிலவும் இணைக்கப்பட்டுள்ளன. இராசமாணிக்கனாரின் நூல்களுக்கு அணிந்துரை, மதிப்புரை, பாராட்டுரை எழுதிய பெருமக்கள் பலராவர். இராசமாணிக்கனாரின் புலமை வளமையையும் உழைப்பின் அருமையையும் நன்குணர்ந்த அப்பெருமக்கள் வழங்கியுள்ள ஆய்வுரைகள் இளம் ஆய்வாளர்களுக்கு வழித்தடம் அமைக்குஞ் சால்பின என்பதால் அவற்றுள்ளும் சில பதிவு செய்யப்பட்டுள்ளன.

மொழி, இனம், நாடு என நாளும் தமிழ் சார்ந்து சிந்தித்த அப்பெருந்தகையின் எண்ணச் சிதறல்கள் அவர் படைப்புகளில் பரவலாக இடம்பெற்றுள்ளன. முத்துக் கோப்பதுபோல் உகந்த தலைப்புகளின்கீழ் அவை ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

இராசமாணிக்கனார் என்ற நாடறிந்த நல்லறிஞர் அவர் குடும்பத்தினரால் எப்படி அறியப்படுகிறார்; நேசிக்கப்படுகிறார்; இன்றும் நினைக்கப்படுகிறார் என்பதை நினைவு மலர்களின் இரண்டாம் பகுதி தெளிவுபட எடுத்துவைக்கிறது. நடுநிலைப்பள்ளி ஆசிரியராக வாழ்க்கையைத் தொடங்கிய அப்பெருந்தகை, பல்கலைக்கழகப் பேராசிரியராக உயரும் அளவு அவர் கைப்பிடித்துத் துணைநின்ற அவர்தம் வாழ்வரசியார் திருமதி கண்ணம்மாள், குடும்பத்தைத் தம் பொறுப்பில்கொண்டு கணவரைத் தமிழுக்களித்த பெருமாட்டி. பேராசிரியரின் உயரங்களுக்கெல்லாம் படிக்கட்டுகளாக அமைந்த அந்த அன்புள்ளத்தை நினைக்காமல் இராசமாணிக்கனாரை அடையாளப்படுத்துவது எங்ஙனம்? அதனால்தான், அந்தத் தமிழ்ச் சிந்தனையாளரின் சிந்தையில் நிறைந்த கண்ணம்மாள், மலரிலும் மணமாய் நிறைந்துள்ளார்.

இந்த இணையரின் தலைமகனார் இளங்கோவன். இளமையிலேயே அமரரான இதழியல் கோ இளங்கோ. அவர் உரையிலும் எழுத்திலும் நின்றுநிலவிய இளநலம், உடலை மறுத்ததால் தமிழ் இதழியல் உலகம் வளமை இழந்தது. அன்புக்கு மறுபெயர் அண்ணன் எனுமாறுபோலத் தம்பிகளும் தங்கைகளும் போற்ற வாழ்ந்தவர்; மாணவர்களால் பெரிதும் விரும்பப்பட்ட நல்லாசிரியர். இராசமாணிக்கனாரின் நூற்றாண்டு, இளங்கோவனின் எழுபத்தைந்தாம் ஆண்டாய் அமைவதால் அவரைப் பற்றிய பதிவுகளையும் வரலாற்று நோக்கோடு மலர் பெற்றிருக்கிறது.

உழைப்பாலும் அறிவுத் திறத்தாலும் அளப்பரிய ஆற்றலாலும் நிகரற்ற நூல்களைப் படைத்துப் பெருமைகொண்ட அறிஞர் பெருந்தகை இராசமாணிக்கனார், அவருக்குப் பின்புலமாக விளங்கி அவர் வளர்ச்சிக்கெல்லாம் உறுதுணையான அவர் துணைவியார் கண்ணம்மாள், அந்த இணையரின் தலைமகனாய்ப் பிறந்து இதழியலில் தமக்கென்று ஓர் இடத்தைச் செதுக்கிக்கொண்ட இளங்கோவன் எனத் தமிழ் வளர்த்த இவர்களைப் பற்றித் தங்கள் நினைவலைகளையும் கருத்துரைகளையும் ஆய்வுச் சிந்தனைகளையும் கேட்ட அளவில் எழுத்து வடிவில் பகிர்ந்தளித்த அறிஞர்கள், நண்பர்கள், உறவினர்கள் ஆகிய அனைத்துப் பெருமக்களுக்கும் உளமார்ந்த நன்றி உரியது.

இம்மலர் உருவாகத் திட்டமிட்டு உழைத்த இதன் படைப்பாளி பேராசிரியர் முனைவர் மா.ரா. அரசு, துணைநின்ற மருத்துவர் முனைவர் இரா. கலைக்கோவன், பேராசிரியர் முனைவர் சிவஅரசி முத்துக்காளத்தி இவர்களும் மெய்ப்புகளைத் திருத்தி உதவிய திருமதி இசையரசி பாலமுத்துசாமி, திருமதி திரிபுரசுந்தரி அரசு, முனைவர் மு. நளினி இவர்களும் மிகுந்த நன்றிக்குரியவர்கள். இம்மலரைக் கணினி அச்சுச் செய்தளித்த வேளச்சேரி முத்துக் கணினியக உரிமையாளர் முனைவர் கி. ஜெயகுமார்,

அட்டையை வடிவமைத்து உதவியதுடன் மலரையும் அச்சிட்டுத் தந்திருக்கும் இனிய நண்பர் திரு. அலமு இராமநாதன் இவர்தம் பணிகள் போற்றத்தக்கவை. மலர் வடிவம் பெற விளம்பரங்கள்வழித் துணைநின்ற அனைத்து நல் உள்ளங்களுக்கும் நன்றி.

இராசமாணிக்கனாரின் நூற்றாண்டு, தமிழ்நாட்டளவில் பல அமைப்புகளால் விழைந்து கொண்டாடப்பட்டது. பல இதழ்கள் அப்பெருந்தகையின் திருவுருவப் படத்தை அட்டையில் கொண்டு தமிழுக்குப் பெருமைசேர்த்தன. சில இதழ்கள் அவரை நினைவுகூர்ந்து கட்டுரைகள் வெளியிட்டன. உரிய காலத்தே, உரிய முறையில் இராசமாணிக்கனாரின் பெருவாழ்வை நினைவுகூர்ந்து மக்களோடு அந்த நினைவுகளைக் கருத்தரங்குகளாகவும் உரைவீச்சுகளாகவும் கட்டுரைகளாகவும் கவிதைகளாகவும் பகிர்ந்துகொண்ட அத்துணை இலக்கிய, கல்வி அமைப்புகளுக்கும் இதழாசிரியர் களுக்கும் இராசமாணிக்கனாரின் தமிழ்க் குடும்பம் கடமைப்பட்டுள்ளது.

வரலாறாய் வாழ்ந்த ஓர் அறிஞர் பெருந்தகையின் வாழ்வை வரலாறாக்கும் எங்கள் முயற்சியின் கனிவே இந்த மலர். குறைகள் இருந்தால் பொறுத்துக்கொள்வதுடன் தெரியப்படுத்துங்கள். நிறைகள் இருந்தால் இராசமாணிக்கனாரின் பெருமையும் புகழுமே அதற்குக் காரணம் என எண்ணி மகிழுங்கள்.

அன்புடன்,

விழாக் குழுவினர்

பொருளடக்கம்

நினைவு மலர்கள் - 2

(உறவும் சுற்றமும்)

நினைவு மலர்கள் - 3

இளங்கோவன் - 75

ஆய்வு மலர்கள்

கவிதை மலர்கள்

English Articles



டாக்டர் மா. இராசமாணிக்கனார்
(1907-1967)



வித்துவான் கண்ணம்மாள் இராசமாணிக்கனார்





பேராசிரியர் மா.ரா. இளங்கோவன்



புகழ் மலர்கள்

பாரத அரசில் பணியாரத்துண்டுகள் பெறுவதற்காகப் பல்லிளித்துக் கிடப்போர் மொழி, பண்பாடு, அரசு எனும் எதனை விட்டுக்கொடுத்தேனும் நத்திப்பிழைத்திடும் போக்கிலே செல்வதைக் காணும்போது மிகுதியும் துக்கம் துளைத்திடுகிறது.

அந்த வேளையில் ஓரோர் இடத்திலிருந்து உள்ளத்திலுள்ளதைச் சிலர் துணிந்து கூற முன்வருவது காண்பது, பாலைவனத்திலே கிடைக்கும் நீரோடை போலாகிறது; மகிழ்ச்சி இனிப்பூட்டுகிறது.

இதோ மற்றொரு தமிழாசிரியர்; ‘ழ’கர ‘ற’கரத்தோடு நிற்பவரல்ல; நம்மோடு நெடுந்தூரம் வருபவருமல்ல. எனினும், நாம் செல்லும் திசையைச் சுட்டிக் காட்டிடும் அளவுக்கு முன்னணிக்கு வருகிறார். அவர், டாக்டர் இராச மாணிக்கனார்; மதுரை தியாகராசர் கல்லூரியில் உள்ளவர்.

அறிஞர் அண்ணா
திராவிட நாடு
11-9-1955

வித்துவான் மா. இராசமாணிக்கம்

திரு.வி.க.

வித்துவான் மா. இராசமாணிக்கம் சீர்திருத்த நோக்குடையவரென்பது எனக்குத் தெரியும். இவர் இதுபோழ்து திருமணச் சீர்திருத்தத்தில் கருத்தமைத்துச் செயல்பட்டு வருகிறார். சீர்திருத்தங்களுள் சிறந்த ஒன்றன்மீது நாட்டம் செலுத்திய வித்துவான் இராசமாணிக்கத்துக்கு எனது நன்றியுரியதாகுக (மா. இராசமாணிக்கம், 'தமிழ்ப் பெரியார் கருத்துகள்', தமிழர் திருமண நூல், 1939, ப.49).

❖ ❖ ❖

இராசமாணிக்கத்தை யான் முதல்முதல் சீர்திருதவாதியாகக் கண்டேன். பின்னே அவர் ஆராய்ச்சியாளர் என்று உணர்ந்தேன். அவர்தம் சொற்பொழிவுகள் பல என் தலைமையில் நடந்துள்ளன. அவைகளுள் சிறந்தது பெரியபுராண ஆராய்ச்சிச் சொற்பொழிவு.

1942ஆம் ஆண்டிலே சென்னை நக்கீரர் கழகச் சார்பிலே பிரமசமாஜ மண்டபத்திலே, வித்துவான் இராசமாணிக்கம் பெரியபுராணத்தைப் பற்றி நான்கு நாள் பேசினார். பெரியபுராணம் ஒரு பெரிய சரித்திர நூல் என்பது அவரால் நன்கு நிறுவிக் காட்டப்பட்டது. சேக்கிழாரைச் சரித்திரக் கண்கொண்டு நோக்கச் செய்த இராசமாணிக்கத்தை மனமார வாழ்த்தினேன். போலி ஆராய்ச்சியால் தமிழுலகத்தில் இருள் சூழ்ந்துவரும் இந்நாளில், சரித்திரக்கண் கொண்டு சேக்கிழாரை நோக்கிய இராசமாணிக்கம் பாராட்டுக்குரியவர்.

ஆராய்ச்சி இன்றியமையாதது. ஆனால், அது நன்முறையில் நடைபெறுதல் வேண்டும். தமிழ்ப் புலவர் சிலர் ஆராய்ச்சியுலகில் நடம் புரிகின்றனர். நடம் மயிலுக்கு உரியது; அது வான்கோழிக்கு உரியதாகுமோ? ஆராய்ச்சிக்குப் பலதிறக் கண்கள் தேவை. வித்துவான் இராசமாணிக்கம், பி. ஓ. எல். ஆராய்ச்சியுலகில் இறங்கி இருள் போக்கி வருவது எனக்கு மகிழ்ச்சி யூட்டுகிறது (திரு.வி.க., வாழ்க்கைக் குறிப்புகள், 1944, ப.216).

❖ ❖ ❖

'பெரியபுராண ஆராய்ச்சி' காலக் கணக்கின்மீது பெருங்கவலை செலுத்தியிருக்கிறது. காரணம், நமது நாட்டுச் சரித்திரக் காலங்கள் கருக்கொண்டுள்ளமையும் அவை இன்னும் நன்முறையில் உருக் கொள்ளாமையுமாகும். இந்நூலாசிரியர், கருவை உருவாக்க விண்ணும் மண்ணும் அதிரச் சுழன்று சுழன்று உழைத்த உழைப்பு அதிகம்.

ஆசிரியர் நிகழ்த்தியுள்ள ஆராய்ச்சி, இனி நாட்டில் எழப்போகுஞ் சரித்திர நிலையத்துக்குக் கால்கோளாகியுள்ளது. அது பின்வருவோர் அறுதியீட்டுக்கும் பெருந்துணை புரிவதாகும்.

புலவர் இராசமாணிக்கம் சிறந்த ஆராய்ச்சியாளர். அவர்தம் ஆராய்ச்சி சில நூல்களாகப் பயன்படுகிறது. தோழர் இராசமாணிக்கத்தின் புலமை ஆராய்ச்சித் துறையை நண்ணியது தமிழ் நாட்டின் திருவேயாகும் (மா. இராசமாணிக்கனார், 'அணிந்துரை', பெரியபுராண ஆராய்ச்சி, 1948, பக்.IV-VI).

❖ ❖ ❖

காலத்தை வென்று வாழும் சேக்கிழாரின் பெரியபுராணத்திற்கு வரலாற்றுப் பின்னணியைத் தந்த முதல் ஆராய்ச்சியாளர் டாக்டர் இராசமாணிக்கம் அவர்களே என்று சொல்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன் (திரு.வி.க. அவர்கள் டாக்டர் மா. இராச மாணிக்கனாருக்கு வழங்கிய பாராட்டுக் கடிதத்தின் ஒரு பகுதி, 1952).

❖ ❖ ❖

இதோ ஒரு தமிழாசிரியர்*

அறிஞர் அண்ணா

இந்தி இழிவுபடுத்துகிறது - அதனை இழிவென்று எண்ணாதீர்; என்னைப் பாரும்; என் சொல்லைக் கேளும். அடுத்த உத்தியோகம் கிடைக்கும்வரை நான் இப்படி 'அடப்பம்' தாங்கும் பணிபுரிபவன் அறிமின்! என்று கூறி வருகிறார் பணிக்கர்.

பணிக்கர்கள் இதுபோலப் பேசுவது கேட்டும் பாரத அரசில் பணியாரத் துண்டுகள் பெறுவதற்காகப் பல்லிளித்துக் கிடப்போர் மொழி, பண்பாடு, அரசு எனும் எதனை விட்டுக் கொடுத்தேனும் நத்திப்பிழைத்திடும் போக்கிலே செல்வதைக் காணும்போதும் மிகுதியும் துக்கம் துளைத்திடுகிறது. அந்த வேளையில், ஓரோர் இடத்திலிருந்து உள்ளத்திலுள்ளதைச் சிலர் துணிந்து கூற முன்வருவது காண்பது, பாலைவனத்திலே கிடைக்கும் நீரோடை போலாகிறது; மகிழ்ச்சி இனிப்பூட்டுகிறது. இதோ மற்றொரு தமிழாசிரியர்; 'ழ'கர 'ற'கரத்தோடு நிற்பவரல்ல; நம்மோடு நெடுந்தூரம் வருபவருமல்ல. எனினும், நாம் செல்லும் திசையைச் சுட்டிக்காட்டிடும் அளவுக்கு முன்னணிக்கு வருகிறார். அவர், டாக்டர் இராசமாணிக்கனார், மதுரை தியாகராசர் கல்லூரியில் உள்ளவர்.

> இந்திய வரலாற்றுக் காலம் தோன்றிய நாள்தொட்டு, வெள்ளையர் ஆட்சி ஏற்படும் வரையில் தமிழகம், இந்தியாவை ஆண்ட எந்தப் பேரரசாலும் ஆளப்படவில்லை என்பது கவனிக்கத்தக்கது. இந்தியாவின் பெரும்பகுதியை ஒரு குடைக்கீழ் வைத்தாண்ட அசோகன் காலத்திலும் தமிழகம் தனியாட்சி புரிந்தது என்பதை அப்பேரரசன் வெளியிட்ட கல்வெட்டுகளே தெரிவிக்கின்றன. இங்ஙனம் பல நூற்றாண்டுகளாகத் தனிப்பட்டு இருந்த தமிழகம் தனக்கென ஒரு மொழியையும் அதற்குரிய இலக்கியங்களையும் தனிப்பட்ட பண்பாட்டையும் வளர்த்து வந்தது.

தமிழாசிரியர்கள் அனைவரும் இத்தகைய வரலாற்று உண்மைகளை எடுத்துக்கூறும் உள்ளத்திண்மை பெற்றுவிட்டால், மொழி ஆராய்ச்சித் துறையிலே அல்ல, ஆட்சியாளர்களுக்கு நேசத் தொடர்புகளை ஏற்படுத்தித்தரும் துறையிலே பணியாற்றும் பணிக்கர் இவ்வளவு பதட்டமாகவா பேசிடுவார்!

ஏன், தமிழறிந்தோர் துணிவு பெறாதுள்ளனர்?

டாக்டர், அந்த நோயின் தன்மையையும் விளக்குகிறார்.

> தமிழன் - தமிழனாக வாழ்தல் வேண்டும். அவன் தன் தாய்மொழியின் சிறப்பை அறிதல் வேண்டும்; தமிழிலேயே தனக்குரிய சடங்குகளைச் செய்துகொள்ள வேண்டும் என்று தமிழில் வல்ல சான்றோர் கூறினால், இவர்கள் நாத்திகர்கள் -

---

* *அறிஞர் அண்ணா, 'ழ' கரமும் 'ற' கரமும் (கட்டுரையின் ஒரு பகுதி), திராவிட நாடு, 11 - 9 - 1955, பக். 8 - 9*

வடமொழியை வெறுப்பவர் - ஒருமைப்பட்டுள்ள சமுதாயத்தில் வேற்றுமையை உண்டாக்குகின்றனர் என்று ஒருசாரார் பழிதூற்றுகின்றனர். இவர்களுக்குள்ள நாளிதழ்களின் செல்வாக்காலும், உயர் அலுவலரது மறைமுகமான செல்வாக்காலும் இச்சான்றோர் - பலவாறு அழுத்தப் படுகின்றனர். தமிழருள்ளே அறிவற்ற புல்லுருவிகளை ஏவிவிட்டுத் தூற்றவும் செய்கின்றனர்.

இந்த அச்சம்தான் பலரை 'ழ'கர 'ற'கரத்தோடு நிறுத்திவிடுகிறது.

❖ ❖ ❖

மா. ரா. எனும் புகழ்க் கோ!*

கவியரசு கண்ணதாசன்

தன்னிக ரில்லாத் தமிழினம் பெற்ற
தகையவர் கோடிஇந் நாட்டில்
அன்னவ ருள்ளும் அறிஞருக் கறிஞர்
ஆயிரத் தொருவரே ஏட்டில்
என்னிவன் பெருமை எனப்புவி வியக்க
எண்ணிடும் சிலரிடை வந்து
மன்னிய புகழில் வாழ்ந்தவர் எங்கள்
'மா. ரா.' எனும்புகழ்க் கோவே! (1)

மெல்லிய பேச்சு மேதகு பழக்கம்
மிக்குயர் நட்பெனும் மூன்றும்
துல்லிய வடிவில் தொடர்ந்தவர் வாழ்வைத்
துலக்கிடச் செய்ததைக் கண்டோம்
நல்லவர் மேதை நனிபெரும் தமிழர்
ராசமா ணிக்கனார் பெயரைச்
சொல்லிய தமிழும் சுவைபெறக் கண்டோம்
ஜோதியாய் நின்றவர் வாழ்க! (2)

❖ ❖ ❖

*டாக்டர் மா. இராசமாணிக்கனார் 75ஆவது பிறந்த நாள் விழா மலர், 1982, ப. xi



வாழ்க்கை வரலாறு

இராசமாணிக்கனார் ஒரு தலைசிறந்த தமிழ் அறிஞர் என்பதை அவருடைய பல நூல்களையும் கட்டுரைகளையும் படித்தவர்கள் உணர்ந்திருப்பார்கள். அவருடன் நேரில் பழகும் வாய்ப்புப் பெற்றவர்களுக்கே புலமைக்கும் அப்பாற்பட்ட அவருடைய குணநலன்கள் தெரிந்திருக்கும். பண்பாளர்; நிதானப் போக்குப் படைத்தவர்; தணிந்த குரலில் மென்சொற்களில் அவருடைய பேச்சு இருக்கும். ஆழ்ந்த புலமை இருந்தது; ஆனால் அகந்தை இல்லை.

மாணவர்களிடம் அவர் காட்டிய பரிவையும் மாணவர்களும் மற்ற ஆசிரியர்களும் அவர்மீது வைத்திருந்த பெருமதிப்பையும் நான் நேரில் அறிவேன். சமூக சீர்திருத்தங்களைப் பற்றிய அவரது கொள்கைகள் தீவிரமானவை; அவற்றைத் தம் வாழ்க்கையில் கடைப்பிடித்தார். ஆனால், பிறர்மீது திணிக்க முயலவில்லை. அவரது தமிழறிவும் சீரிய வாழ்வும் இராச மாணிக்கனாருக்கு அழியாப் புகழைத் தேடித்தந்துள்ளன.

ஐராவதம் மகாதேவன்
'நானறிந்த இராசமாணிக்கனார்'
நூற்றாண்டு மாணிக்கம்
ப. 112

வரலாற்றின் வரலாறு

இரா. கலைக்கோவன்

> தென்னிந்திய வரலாறு பற்றியும் இலக்கியம் பற்றியும் வித்துவான் மா. இராசமாணிக்கம் எழுதியுள்ள நூல்கள் பலவும் அவரது மகத்தான சாதனைகளாகும். பல்லவர், சோழர் வரலாறுகளின் பல்வேறு கால கட்டங்களைப் பற்றி அவர் இயற்றிய இந்த நூல்கள் அயராத அவர் உழைப்புக்கு அழியாச் சின்னங்களாகும்.
>
> ஹீராஸ் பாதிரியார்

என்றுமுள தென்றமிழ் ஏற்றம் பெற உழைத்த தமிழறிஞர்கள் எண்ணற்றவர். தங்கள் எழுத்தாற்றலால் தமிழுக்கு எழில் சேர்த்தவர்கள், பேச்சாற்றலால் பெருமை குவித்தவர்கள், பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்தவர்கள், சங்க நூல்களுக்குச் சிறந்த விளக்கமளித்தவர்கள், படைப்பிலக்கியம் புனைந்தவர்கள், முத்தமிழ் செழிக்க முழுமூச்சுடன் பாடுபட்டவர்கள் என்று இவர்கள் பல திறத்தவர் ஆவர். தங்கள் உடல், பொருள், ஆவி அனைத்தும் அருந்தமிழ் உயர்வுக்கே அமைக என்று அயராது பாடுபட்ட இத்தகு தமிழ்ச் சான்றோர்களில் முன்னணியில் வைத்து எண்ணத் தக்கவர்களில் டாக்டர் மா. இராசமாணிக்கனார் குறிப்பிடத்தக்கவர். தமிழுடன் மிகுதியான தொடர்போ, தமிழில் தனித்த ஈடுபாடோ இல்லாத ஒரு குடும்பத்தில் பிறந்து, இளம் வயதில் தெலுங்கு மொழியே பயின்று வளர்ந்தவரான இவர் பின்னாளில் தமிழ் வளர்த்த செம்மலாக மலர்ந்தமை வியப்பும் சுவையும் நிரம்பிய நெடிய வரலாறாகும்.

நிலம் அளந்து தரம் விதிக்கும் அலுவலகத்தில் ஒரு பிரிவின் மேலாளராக இருந்து, வட்டாட்சியராக உயர்ந்தவரான மாணிக்கம் என்பவரின் கடைசி மகனாகத் தோன்றியவர் இராசமாணிக்கனார். பணி காரணமாகப் பல ஊர்களுக்கு மாறிய மாணிக்கம், கர்நூலில் வாழ்ந்தபோது 1907ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 12ஆம் நாள் இவர் பிறந்தார். இராசமாணிக்கனாரின் அன்னை பெயர் தாயாரம்மாள். ஏழு பேர் பிறந்த குடும்பத்தில் இராசமாணிக்கனாரும் அவர் தமையனார் இராமகிருட்டிணருமே எஞ்சினர்.

அரசுப் பணியாளரான தந்தையார் அலுவல் காரணமாகப் பல ஊர்களுக்கும் மாற்றப்பட்டார். அதனால் இராசமாணிக்கனாரின் கல்வியும் பல ஊர்களில் வளர்ந்தது. பல ஆண்டுகள் வரையில் தெலுங்கு நாட்டில் கர்நூல், சித்தூர் முதலிய ஊர்களில் இருக்க நேரிட்டதால் நான்காம் வகுப்புவரை தெலுங்கு மொழியே பயின்ற இவர், 1916இல் தந்தையார் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த நிலக்கோட்டைக்கு மாற்றப்பட்ட பிறகே அதாவது, தம்முடைய ஒன்பதாவது வயதிலிருந்துதான் தமிழ் பயிலத் தொடங்கினார். அது முறைசார்ந்த கல்வியாக அமையாவிடினும் தமிழே அறியாத இராசமாணிக்கனார் விரைவில் கற்க வேண்டும் என்னும் ஆர்வத்தால் ஓராண்டிற்குள் ஐந்தாம் வகுப்பு வரையிலான தமிழ் நூல்களைப் படித்துத் தேர்ந்தார்.

நிலக்கோட்டையில் வாழ்ந்த காலத்தில், 'அல்லி அரசாணி மாலை', 'பவளக்கொடி மாலை', 'பஞ்சபாண்டவர் வனவாசம்' முதலிய கதைப்பாடல்களையும் தாலாட்டு, கும்மி, நொண்டிச்சிந்து முதலிய நூல்களையும் அக்கம் பக்கத்தில் இருந்தார் கொணர்ந்து கொடுத்துப் படிக்கச் சொல்வது வழக்கம் . 'அவர்கள் பொழுதுபோக்குக்காகக் கொண்டு வந்த நூல்கள் என் தமிழறிவை வளர்த்தன' என்று தம்முடைய தமிழ் வாழ்க்கையின் தொடக்க நாட்களை நினைவு கூர்ந்துள்ளார் இராசமாணிக்கனார்.

நல்லது எங்கிருந்தாலும் போற்றவேண்டும்; சொல்லுவது யார் என்று பார்க்கக்கூடாது; சொல்லப்படுவது என்ன என்பதை மட்டுமே நோக்க வேண்டும். இக்கோட்பாடுகளைத் தம் வாழ்வின் அடிநாளிலிருந்து இறுதிநாள்வரையிலும் பின்பற்றி வந்த இராசமாணிக்கனார் தாம் சந்திக்க நேர்ந்த பல தரத்தினரான மக்களிடமிருந்து அறிந்து கொண்டவை, ஏற்றுக் கொண்டவை, முன் மாதிரியாக ஆக்கிக் கொண்டவை எண்ணிறந்தவை. அவையே, வாழ்வில் அவர் உயர்வெய்த அடித்தளம் அமைத்துத் தந்தவை. எந்தச் சூழ்நிலையிலும் உண்மையாகப் பாடுபடுபவன் அப்பாட்டின் பயனை அடையமுடியும் என்னும் பேருண்மையை நெஞ்சில் ஆழப் பதித்தவர் இராச மாணிக்கனார். அதன் விளைவே, அவர் மடியறியா உழைப்பினராகி எண்ணிய எண்ணியாங்கு எய்தும் பேராற்றல் பெற்றவராகி விளங்க முடிந்தது.

1917இல் பணி காரணமாகத் திண்டுக்கல் வந்த தமையனார் இராமகிருட்டிண னாருக்குத் துணையாகத் தாயாருடன் இராசமாணிக்கனாரும் வந்தார். திண்டுக்கல் வாழ்க்கை அவருடைய கல்விப் பாதையில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. நிலக்கோட்டையில் தொடங்கிய அவருடைய தமிழ்க் கல்வி, திண்டுக்கல் தூய மேரி உயர்நிலைப்பள்ளியில் ஐந்தாம் வகுப்பு மாணவராக அவர் சேர்ந்த நிலையில் தொடர்ந்தது.

திண்டுக்கல் நகரவை உயர்நிலைப்பள்ளியில் அந்நாளில் உடற்பயிற்சி ஆசிரியராகப் பணியாற்றிவந்த ஒருவர் இராசமாணிக்கனாருக்கு அறிமுகமானார். அவர்வழி இவர் அறிந்தவை பல. திண்டுக்கல்லில் இராசமாணிக்கனாரின் குடும்பம் வாழ்ந்த இடத்திற்குச் சற்றே தள்ளி, 'மௌனசாமி மடம்,' என்னும் மடம் இருந்தது. அவருக்கு முன்பே அறிமுகமாகியிருந்த உடற்பயிற்சி ஆசிரியர் அம்மடத்திற்கு அவரை அழைத்துச் சென்றார். அதன்பின் அடிக்கடி அங்குச் செல்வதை வழக்கமாக்கிக்கொண்ட இராசமாணிக்கனார், அம்மடத்திலிருந்த இளந்துறவியின் அன்பிற்குப் பாத்திரமானார். அத்துறவி, சித்தர் பாடல்களையும் அருட்பாவையும் இவர் அறியுமாறு செய்தார்.

அந்த இளந்துறவியே பாடல்களை இனிமைக்காக மட்டுமல்லாது, அவை வெளிப்படுத்தும் வாழ்வியல் உண்மைகளுக்காகவும் நேசிக்கவேண்டும் என்பதை இராசமாணிக்கனாருக்கு உணர்த்தியவர். சாதிகள் யாவும் மனிதன் படைத்துக் கொண்டவை. கடவுள் படைத்தவை ஆண், பெண் என்ற இரண்டு சாதிகளே என்னும் பேருண்மையையும் அவரே இராசமாணிக்கனாரின் இளம் நெஞ்சத்தில் ஆழப் பதியச் செய்தார். அந்த இளந்துறவியின் வழிகாட்டல்களே எழுத்திலும் பேச்சிலும் செயலிலும் சாதிகளைக் கடிந்து வன்மையாக எதிர்க்க, சாதிகளற்ற சமுதாயம் காணப் பாடுபட, சாதி ஒழிப்பு மாநாடுகளில் கலந்துகொண்டு சாதி ஒழிப்பில் தீவிரம் காட்ட இராச மாணிக்கனாருக்கு எழுச்சியூட்டின.

திண்டுக்கல் உடற்பயிற்சி ஆசிரியரின் தொடர்பால் எதையும் வரலாற்றுக் கண்ணோட்டத்தோடு அணுகவேண்டும் என்னும் உணர்வைப் பெற்ற இராச மாணிக்கனார், திப்புசுல்தானோடு இணைத்துக் கூறப்படும் திண்டுக்கல் குன்றின் மீது அமைந்திருக்கும் கோட்டைக்கு அவ்வாசிரியருடன் சென்றார். அதுவே, இராச மாணிக்கனார் கண்ட முதல் வரலாற்றுச் சிறப்புடைய இடமாகும். அப்போது,

அவ்வாசிரியர் கூறிய, ‘படிக்கும் பிள்ளைகள் எந்த இடத்திற்குச் சென்றாலும் அந்த இடத்தைப் பற்றிய வரலாறு, அங்குள்ள கட்டடங்கள், விளைபொருள்கள், செய்பொருள்கள் இவற்றைப் பற்றி அறியவேண்டும். இந்த அறிவு பெரிதும் வேண்டற்பாலது. பலர் இவற்றைக் கவனிப்பதே இல்லை’ என்னும் அறிவுரையே பின்னாளில் இராசமாணிக்கனார் ஒரு வரலாற்று அறிஞராக மலரக் காரணமாக அமைந்தது. ‘அவர் கூறிய செய்திகள் என் மனத்திற் பதிந்தன. அன்று முதல் நான் எந்த ஊருக்குச் சென்றாலும் அவ்வூர் பற்றிய விவரங்களை அறிந்து குறிப்பெடுத்துக் கொள்ளத்தொடங்கினேன்’ என்று இராசமாணிக்கனார் கூறியிருப்பது இங்குக் கருதத் தக்கது.

ஐந்தாம் வகுப்புத் தேர்வெழுதவிருந்த நேரத்தில் தந்தையார் மறைந்ததால் திண்டுக்கல்லில் இருந்து நிலக்கோட்டைக்கு வந்த இராசமாணிக்கனாரின் கல்வி மீண்டும் தடைபட்டது. குடும்பப் பொறுப்பேற்ற தமையனாருடன் அவரும் அன்னையாரும் இருக்க வேண்டிய சூழல் அமைந்ததால் தமையனார் பணிமாற்றம் பெற்ற இடங்களுக்கெல்லாம் அவரும் செல்லநேர்ந்தது. நன்னிலத்தில் நிலையாக ஓராண்டு தங்கிப் பணியாற்றும் வாய்ப்பைத் தமையனார் பெற்றநிலையில் 1920இல் இராசமாணிக்கனார் மீண்டும் ஐந்தாம் வகுப்பில் சேர்ந்து பயின்று தேறினார்.

அங்குப் பயின்ற காலத்துச் சில மாணவ நண்பர்களை அழைத்துக்கொண்டு நன்னிலத்தைச் சுற்றியிருந்த திருவாஞ்சியம், திருப்புகலூர், திருச்செங்கட்டாங்குடி, திருக்கண்ணபுரம், திருமருகல் முதலிய திருத்தலங்களுக்குச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார் இராசமாணிக்கனார். அப்போது அவருக்கு வயது பதின்மூன்று. இந்த வயதில் எழுந்த இந்த ஆர்வம்தான் பின்னாட்களில் தென்னாட்டுக் கோயில்கள் பற்றி அறியும் விழைவை அவரிடம் மிகுவித்தது.

தமையனார் இராமகிருட்டிணனாருக்கு நன்னிலத்திலிருந்து தஞ்சாவூருக்குப் பணி மாற்றலாகிய நிலையில் அங்குத் தம் படிப்பைத் தொடர விரும்பினார் இராசமாணிக்கனார். ஆனால், ‘இவனது படிப்புப் பலமுறை தடைபட்டு வீணாகிவிட்டது; பதின்மூன்று வயது நிரம்பப்பெற்ற இவனை எப்படி முதல் படிவத்தில் சேர்ப்பது?’ என்று பலரும் கூறியதால் தயங்கிய தமையனார், ‘இவனைத் தையற்கடையில் விடுவது நல்லது’ என்று கருதி, இவரை வேலை கற்க வாய்ப்பாக ஒரு தையற்கடையில் விட்டார். ‘நான் பதினைந்து நாட்கள் வேலை பழகி காஜா எடுக்கக் கற்றுக்கொண்டேன். சிறிய பைகளைத் தைக்கவும் பயின்றேன். நாள்தோறும் இரவில் வீடு திரும்புகையில் கடை உரிமையாளர் எனக்குக் காலணா கொடுப்பார்’ என்று தம் தையற்கடை வாழ்க்கையை விவரிக்கின்றார் இராசமாணிக்கனார்.

எப்படியாவது படிக்கவேண்டும் என்பதில் முனைப்பாக இருந்த இராச மாணிக்கனாரின் மனம், தையல் தொழிலில் ஈடுபடவில்லை. தஞ்சாவூர் தூய பேதுரு பள்ளித் தலைமையாசிரியரின் பேருதவியால், தடைபட்டு நின்ற படிப்புத் தொடர்ந்தது. 1921இல் ஆறாம் வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்ட இராசமாணிக்கனாரின் படிப்பு, தலைமையாசிரியரின் கருணையால் நாளும் வளர்ந்தது. அனைத்துப் பாடநூல்களையும் வாங்கும் வாய்ப்பு இன்மையின் ஆங்கில, கணித நூல்களை மட்டும் வாங்கிக் கொண்டார். ஏனைய பாடநூல்களை இரவல் வாங்கிப் படித்தார். ‘தலைமையாசிரியர் சொற்படி இரண்டு நூல்களை மட்டும் வாங்கிக்கொண்டேன். சிலரை நண்பராகக் கொண்டு ஒவ்வொரு வெள்ளிக்கிழமை மாலையும் என்னிடம் இல்லாத நூல்களை அவர்களிடம் பெற்றுச் சனி, ஞாயிறுகளில் படித்து வந்தேன்’ என்பார் இராசமாணிக்கனார்.

பேதுரு பள்ளிக்கு மூன்று கிளைகள் உண்டு. இந்த மூன்றிலும் இருந்த முதல் படிவ மாணவர்களுக்குள் முதல் மாணவராகத் தேறியதன் வாயிலாகப் பள்ளியிலும், வீட்டிலும்

பெரும் பாராட்டைப் பெற்றார் இராசமாணிக்கனார். இதனால் அவரது மேற்படிப்புத் தடையின்றித் தொடர்ந்தது. பள்ளி நாட்களில் அவர் தமிழார்வம் வளரக் காரணமானவருள் அவருடைய அண்ணியார் அம்புஜம் அம்மையும் ஒருவர். தேவாரம், திருப்புகழ் ஆகியவற்றில் தமக்கு மிகுந்த ஈடுபாடு எழக் காரணமாக இருந்தவர் அவர் என்பதை, 'என் அண்ணியார் முருக வழிபாடு செய்பவர்; திருப்புகழ் படிப்பவர்; அவர் எங்கள் வீடு வந்த பிறகு நான் திருப்புகழும் தேவாரமும் மிகுதியாகப் படிக்கும் வாய்ப்பு கிடைக்கப் பெற்றேன்' என்ற இராசமாணிக்கனாரின் குறிப்பால் அறியமுடிகிறது.

இராசமாணிக்கனார் உயர்நிலைப்பள்ளியில் படித்துக்கொண்டிருந்தபோது அவர் தமையனார் ஆந்திர நாட்டிற்குப் பணி மாற்றமாகிச் சென்றார். தாயாருடன் தஞ்சாவூரிலேயே தங்கித் தம் படிப்பைத் தொடர்ந்த இராசமாணிக்கனாருக்கு அன்றாட வாழ்க்கைத் தேவைகளுக்கும் கல்வி சார்ந்த செலவுகளுக்கும் தமையனார் திங்கள் தோறும் அனுப்பிய பதினைந்து ரூபாய் போதுமானதாக இல்லை. அதனால் அந்த வயதிலேயே அவர் பொருளீட்ட வேண்டியிருந்தது. 'மூன்றாம் படிவ மாணவரும் இரண்டாம் படிவ மாணவரும் ஆக நால்வர் என்னிடம் தனியே பாடம் படிக்க வந்தனர். அவர்கள் தந்த தொகையைக் கொண்டுதான் என்னுடைய பள்ளி வாழ்க்கையை நடத்தினேன்' என்பார் இராசமாணிக்கனார்.

பேதுரு உயர்நிலைப்பள்ளியில் தொடர்ந்து கல்வி பயின்றவர், ஒவ்வோர் ஆண்டு இறுதித் தேர்விலும் முதல்வராகத் தேறி, அதற்குரிய பரிசைப் பெற்றார். பள்ளி இறுதித் தேர்வில் சிறந்த முறையில் வெற்றி பெற்றுப் 'பியர்ஸ்' பரிசைப் பெற்ற இவர் மூன்று ஆண்டுகள் தமிழ் மன்றச் செயலாளராக இருந்து பல போட்டிகளில் கலந்துகொண்டு பரிசுகள் பெற்றிருக்கின்றார். மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் நடத்திய பள்ளி இறுதித் தமிழ்த் தேர்வில் இவர் முதல்வராகத் தேறினார்.

தஞ்சாவூர்ப் பள்ளியில் பயின்றபோது, இவருக்குத் தமிழாசிரியராக அமைந்தவர் கரந்தைக் கவியரசு ரா. வேங்கடாசலம் பிள்ளை ஆவார். வகுப்பில் முதல் மாணவராகத் திகழ்ந்த இவரை அப்பெருந்தகை, தனியே அழைத்துத் தமிழ் இலக்கண, இலக்கியங்களைக் கற்பித்தார். அப்பெரியாரிடம் இவர் மூன்றாண்டுகள் முறையாகப் படித்தார்.

நிலக்கோட்டையில் அக்கம்பக்கத்து வீட்டுப் பெண்களுக்குப் படித்துக் காட்டிய கதைப்பாடல்களும் திண்டுக்கல் மௌனசாமி மடத்து இளந்துறவி வழி அறிந்து கொண்ட திருவருட்பாவும் சித்தர் பாடல்களும் அண்ணியார் துணையுடன் அறியநேர்ந்த தேவாரமும் திருப்புகழும் வளர்த்த தமிழார்வம், ரா. வேங்கடாசலம் பிள்ளையால் முறைப்படுத்தப்பட்டது. அவரே இராசமாணிக்கனாரின் தமிழ் உணர்வையும் அறிவையும் ஆர்வத்தையும் புரிந்துகொண்டு அவரை வளர்த்தவர்; இளைஞர் இராசமாணிக்கத்தின் ஆற்றல்களை இனங் கண்டு ஊக்கிய முதல்வர் என்ற பெருமைக்கு உரியவரும் அவரே. அவர் இராசமாணிக்கனாரிடம் கொண்டிருந்த அன்பும் பற்றும் ஈடுபாடும் தூயவை; எல்லை கடந்தவை.

கரந்தைக் கவியரசுவின் துணையால் கரந்தைத் தமிழ்ச் சங்கத்துடன் இராச மாணிக்கனாருக்குத் தொடர்பேற்பட்டது. இதனால் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் உமாமகேசுவரம் பிள்ளை, ந.மு. வேங்கடசாமி நாட்டார் முதலிய பெரு மக்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பமைந்தது. உ.வே. சாமிநாதையர், ரா. இராக வையங்கார், எல். உலகநாத பிள்ளை, கதிரேசன் செட்டியார், சோமசுந்தரம் பிள்ளை போன்ற தமிழ்ப் பெருமக்களின் சொற்பொழிவுகளைக் கேட்கும் வாய்ப்பும் கிடைத்தது. இவையெல்லாம் சேர்ந்து, இராசமாணிக்கனாரின் நெஞ்சில் கனன்று கொண்டிருந்த

தமிழ்ப்பற்று என்னும் நெருப்பைக் கிளறிவிட்டன. இராசமாணிக்கனாரின் வாழ்க்கையும் கல்வியும் தமிழார்வமும் நெறிப்பட்ட இடம் தஞ்சாவூராகும்.

தஞ்சாவூரில் இருந்தபோது திருவையாற்றை மையமாகக் கொண்டு ஆண்டுதோறும் நடைபெற்ற ஏழூர் விழாவில் இராசமாணிக்கனார் நண்பர்களுடன் கலந்து கொள்வது இயல்பு. தஞ்சாவூரைச் சேர்ந்த தேவாரக் குழுவினருடனும் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தாருடனும் சேர்ந்து திருவையாறு, திருச்சோற்றுத்துறை, திருக்கண்டியூர், திருநெய்த்தானம், திருப்பூந்துருத்தி,. திருப்பழனம், திருவேதிகுடி எனும் ஏழு ஊர்களுக்கும் தேவாரம் பாடிக்கொண்டு கால் நடையாகச் செல்வதும் வழக்கம். சமய உணர்வும் ஈடுபாடும் இளமையிலேயே அவர் நெஞ்சில் இடம்பெற இவ்வழக்கமும் காரணமானது.

1927 மார்ச்சுத் திங்களில் நடைபெற்ற பள்ளி இறுதி வகுப்புத் தேர்வில் தேறியதும் ஆந்திர மாநிலம் சென்று தமையனாருடன் சில மாதங்கள் இருந்த இராசமாணிக்கனார் தஞ்சாவூர் மீண்டு ஒரத்தநாடு போர்டு உயர்நிலைப்பள்ளியில் எழுத்தராகச் சேர்ந்தார். அப்பணியில் அவருக்கு நாட்டம் இல்லாமல் போனதால் தந்தையாரின் நண்பரும் சென்னை பின்னி கம்பெனியில் உதவி துவிபாஷியாக (மொழி பெயர்ப்பாளர்) இருந்தவருமான கே. திருவேங்கடம் என்பாரின் உதவியுடன் 1928ஆம் ஆண்டு சென்னை வந்து, வண்ணாரப்பேட்டையிலுள்ள தியாகராயர் நடுநிலைப்பள்ளியில் தமிழாசிரியராகப் பொறுப்பேற்றார். தஞ்சாவூர் மண் விதைத்திருந்த மொழி, சமய, சீர்திருத்த உணர்வுகளுடன் சென்னையில் தம் வாழ்க்கையைத் தொடங்கியவர், தெளிவாகவும் இனிமையாகவும் உள்ளம் கவரும் வகையிலும் பாடம் நடத்துவதில் திறமை பெற்றவராக விளங்கியமையால் மாணவர் இடையில் செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்தார்.

பள்ளி ஆசிரியராக நிலையானதொரு பணியில் அமர்ந்த நிலையில் 1930 செப்டம்பர் ஒன்பதாம் நாளில் திரு. துரைசாமி, திருமதி. ஜெயலட்சுமி மகளார் கண்ணம்மாளை மணந்தார். அப்பொழுது இவருக்கு வயது 23; மணமகளுக்கு வயது 14.

1928ஆம் ஆண்டு ஜூலை முதல் 1936ஆம் ஆண்டு ஜூன் வரையில் தியாகராயர் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றிய இவர் மாணவர்க்கான பாட நூல்களையும் துணைப்பாட நூல்களையும் எழுதும் பணியிலும் ஈடுபட்டார். இவர் எழுதிய முதல் நூல் 1930இல் வெளிவந்தது. அப்போது இராசமாணிக்கனாருக்கு வயது 23. கல்வித் தகுதி வெறும் எஸ். எஸ் எல். சி மட்டுமே. கே. பழனியாண்டிப் பிள்ளை கம்பெனியின் மூலம் வெளியிடப்பட்ட 102 பக்க அளவிலான 'நாற் பெரும் வள்ளல்கள்' என்னும் அந்நூல், மிகுந்த அனுபவமோ ஆழ்ந்த பயிற்சியோ பெரிய கல்வித் தகுதியோ இல்லாத ஒருவரால் எழுதப்பட்டதெனக் கருத முடியாதபடி கருத்துக் கருவூலமாய் அமைந்துள்ளமை அந்த இளம் வயதிலேயே இராசமாணிக்கனார் பெற்றிருந்த புலமையைப் பறைசாற்றுவதாய் உள்ளது.

1935இல்தான் இராசமாணிக்கனார் வித்துவான் பட்டம் பெற்றார். ஆனால், அதற்குள் பல நூல்களை அவர் எழுதி வெளியிட்டிருந்தார். அவற்றுள் குறிப்பிடத்தக்க சில: 'ஹர்ஷவர்த்தனன்' (1930) 'முடியுடை மூவேந்தர்' (1931), 'ஏப்ரஹாம் லிங்கன்' (1934), 'முசோலினி' (1934). இவருடைய முதல் பாடநூலான, 'பொற்கால வாசகம்' 1932இல் வெளியிடப்பட்டது.

தம்முடைய இருபத்து மூன்றாம் வயதில் முதல் நூலையும் இருபத்தைந்தாம் வயதில் முதல் பாடநூலையும் எழுதித் தம் தமிழ்த் தொண்டைத் தொடங்கிய இராச மாணிக்கனார், பள்ளி மாணவர்களுக்கான நூல்களில் தொடங்கி, பல்துறை சார்ந்த நூல்களையும் எழுதியுள்ளார். அவர் எழுதிய இலக்கிய, சமய, வரலாற்று ஆராய்ச்சி நூல்கள் அவரைப் புகழின் உச்சிக்குக் கொண்டுசென்றன; அழியாமையை அவருக்கு வாழ்வாக்கித் தந்தன.

ஏறக்குறைய எட்டு ஆண்டுகள் தியாகராயர் நடுநிலைப்பள்ளியில் பணியாற்றிய பிறகு, 1936 ஆம் ஆண்டு ஜூலையில் சென்னை ஜார்ஜ்டவுனில் தம்புசெட்டித் தெருவிலிருந்த முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராகப் பொறுப்பேற்றார். அங்கு இருந்த காலத்தில் (1936 ஜூலை முதல் 1947 ஜூன் முடிய) பள்ளிக்குரிய பாடநூல்களை எழுதி வெளியிட்டதோடு, பி. ஓ. எல். (1939), எல். டி. (1944), எம். ஓ. எல். (1945) என்னும் பட்டங்களும் பெற்றார்.

எல். டி. வகுப்பில் வரலாறு, தமிழ் என்னும் இரண்டு பாடங்களையும் விருப்பப் பாடங்களாக எடுத்துக் கொண்டு படித்தார். அங்குத் தமிழ்ப் பேராசிரியராக இருந்த ச. ஆறுமுக முதலியார், 'தமிழிலக்கியத்தில் சில மைல் கற்கள்' என்ற தலைப்பில் ஆறு சொற்பொழிவுகள் எல். டி. வகுப்பில் இவரைக் கொண்டே நடைபெறச் செய்தார். வரலாற்றுப் பேராசிரியர், வரலாற்றுக் குழு ஒன்றுக்கு இவரையே தலைவராக ஆண்டு முழுவதற்கும் அமர்த்தினார். ஆண்டு இறுதியில் நடந்த தேர்வில் இவர் முதல்வராகத் தேறினார். இச்செய்தி அவ்வாண்டு வெளியான அரசிதழில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

எம். ஓ. எல். பட்டத்திற்குப் பெரியபுராணத்தை நன்கு ஆய்வு செய்து, 'பெரியபுராண ஆராய்ச்சி' என்ற தலைப்பில் தம் ஆய்வேட்டினை அளித்தார். அந்த ஆய்வேட்டின் திருத்திய பதிப்பே பின்னாளில், 'பெரியபுராண ஆராய்ச்சி' என்னும் நூலாக வெளியாகியது.

இராசமாணிக்கனார் முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப்பள்ளியில் பணியாற்றிய போதுதான் 'மொஹெஞ்சொ - தரோ அல்லது சிந்துவெளி நாகரிகம்' (1941), 'பல்லவர் வரலாறு' (1944), 'சேக்கிழார் - ஆராய்ச்சி நூல்', (1945) 'சோழர் வரலாறு' (1947) ஆகிய அவருடைய சிறப்புக்குரிய நூல்கள் வெளியாயின.

சிந்துவெளி நாகரிகம் பற்றி விரிவான அளவில் முதன்முதலில் தமிழில் நூல் எழுதி வெளியிட்டவர் இவரே. பல்லவர் வரலாறு பற்றியதொரு முழுமையான ஆய்வு நூலாகத் தமிழில் அமைந்த நூல் இவருடைய 'பல்லவர் வரலாறு' ஆகும். சேக்கிழாரை வரலாற்று அறிஞராக அறிமுகம் செய்த முதல் ஆய்வாளர் என்ற பெருமையும் இராச மாணிக்கனாருக்கே உரியது. முதன் முதலில் தமிழில் சங்க காலம் தொடங்கி, பிற்காலம் வரையில் ஆண்ட சோழர் வரலாற்றை முழுமையாக - ஆராய்ச்சிப் போக்கில் பெற்றமைந்தது இராசமாணிக்கனாரின் 'சோழர் வரலாறு' என்ற நூலேயாகும்.

இராசமாணிக்கனார் தியாகராயர் பள்ளியிலும் முத்தியாலுப்பேட்டைப் பள்ளியிலும் பணியாற்றிய காலத்தில் சுயமரியாதை இயக்கத்தில் பற்றுக் கொண்டு, சீர்திருத்தப் பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர். 'பேராசிரியர் அவர்களுக்குச் சுயமரியாதை இயக்கத்தில் பற்று உண்டு. அடிக்கடி தமிழர்கள் மேற்கொண்டு ஒழுகும் மூடநம்பிக்கைகளைக் கண்டித்துக் கடிந்துரைப்பார்கள். கொள்கை வீரராய் அவர்கள் விளங்கியதைக் கண்டேன்' என்பார் சிறுவை நச்சினார்க்கினியன்.

தமிழர் திருமணத்தில் சடங்குகள் பெருகிச் செலவுகளும் மிகுந்த நிலையில் பல குடும்பங்கள் கடன் சுமையால் துன்பப்பட்டமையைக் கண்ணுற்ற இராசமாணிக்கனார் உளம் வருந்தினார். அச்சமயத்தில் 'தமிழர் நல்வாழ்க்கைக் கழகம்' என்ற அமைப்பு இராசமாணிக்கனாரிடம், 'தமிழர் திருமண நூல்' ஒன்றை இயற்றித் தருமாறு வேண்டியது. பழந்தமிழர்தம் எளிய திருமணமுறைகளை உரிய இலக்கியச் சான்றுகளோடு எடுத்துக்காட்டி 1939இல் அந்நூலை வெளியிட்டார். தமிழ்நாட்டு அறிஞர்களின் ஒருமுகமான போற்றுதலுக்கும் பாராட்டுதலுக்கும் அந்நூல் உரிய தாயிற்று.

சமுதாயச் சீர்திருத்தப் பணிகளில் ஒன்றியிருந்த காலத்திலும் இராச மாணிக்கனார் தமிழ்த் தொண்டை மறக்கவில்லை. வண்ணாரப்பேட்டையில் தனலட்சுமி தொடக்கப்பள்ளியில் தொடங்கிய பேராசிரியரின் தமிழ்த்தொண்டு தொடர்ந்து நிகழ்ந்தது. மாணவர்களுக்கும் ஆர்வமுள்ள மக்களுக்கும் அங்கு அவர் தமிழ் வகுப்புகள் நடத்தினார். இந்த நற்பணிக்களுக்குச் சில அன்பர்கள் தொண்டர்களாக விளங்கினர். சொந்தப் பணத்தைச் செலவு செய்து இவ் வகுப்புகளை நடத்தி ஏழை, எளியவர்களுக்குக் கல்வித் தொண்டு புரிந்த இராசமாணிக்கனார், 'இளம்பருவத்தில் கல்விபெற நான் பட்ட துன்பங்களே இப்பணியைத் தொடங்கவும் தொடர்ந்து நடத்தவும் என்னை ஊக்கின. நல்ல உள்ளம் படைத்த இளைஞர்கள் எனக்குத் துணைநின்றனர். மனம் இருந்ததால் பணம் ஒரு பொருட்டாக அமையவில்லை' என்று தம் வாழ்க்கைக் குறிப்பில் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

அதே காலத்தில் இந்தி எதிர்ப்பு அறப்போராட்ட வீரர் சுவாமி அருணகிரிநாதர், பேராசிரியரின் தமிழ் வளர்ச்சிப் பணிகளைப் பயன்படுத்திக் கொண்டார். தமிழ் மாமுனிவர் அமரர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் போல் அக்காலத்தில் சுவாமி அருணகிரிநாதரின் பணி தமிழ்மொழிக்கும் தமிழருக்கும் அரணாக இருந்தது. அருணகிரிநாதரின் ஆசிரியர் சாது நாராயண தேசிகர் மடத்தில் பேராசிரியர் பலமுறை சமயச் சீர்திருத்தப் பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார்.

சென்னை முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராய் இருந்தபோது பச்சையப்பன் பள்ளி விளையாட்டுத் திடலில் பேராசிரியர் மயிலை. சிவ. முத்து, பேராசிரியர் பாலூர் கண்ணப்பர், சிறுவை நச்சினார்க்கினியன் ஆகியோருடன் சேர்ந்து உரையாடுவது இவர் வழக்கம். அங்குப் பேராசிரியர்கள் மே. வீ. வேணுகோபால் பிள்ளை, கா. ர. கோவிந்தராசன் ஆகியோரும் வந்து சேர்ந்துகொள்வர். உரையாடல் அனைத்தும், 'மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்கள் அமைக்கும் விதம், மாணவர்களுக்கு எது தேவை, அவர்கள் எதை எதிர்பார்க்கிறார்கள், அன்றைய தினம் தாங்கள் பாடம் நடத்திய முறை' இவைகளைப் பற்றியதாகவே இருக்கும். 'அவ்வுரையாடல்களால் பல நூல்களைக் கற்ற அறிவினைப் பெறமுடிந்தது' என்று குறிப்பிட்டுள்ளார் சிறுவை நச்சினார்க்கினியன்.

1947 ஜூலை முதல் 1953 ஜூலை வரை சென்னை விவேகானந்தர் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றிய இராசமாணிக்கனாரை அப்பொறுப்பிற்குப் பணியமர்த்தியவர் அப்போது அக்கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராக இருந்த பேராசிரியர் சி. ஜகந்நாத ஆச்சாரியார் ஆவார். அப்பெருந்தகை அதுபற்றிக் குறிப்பிடும்போது, 'பண்டிட்டிற்கு அப்போது சம்பள கிரேடு ஆரம்பம் 100 ரூபாய். நான், அவர் தகுதி நோக்கி மூன்று இன்கிரிமென்ட் போட்டு 115 ரூபாய் அவருக்கு ஆரம்பத்தில் கொடுக்கும்படி பரிந்துரை செய்திருந்தேன். என் பரிந்துரையின்படியே மேன்மையான நிருவாகத்தார் 115 ரூபாய் அவருக்கு ஆரம்பத்தில் கொடுத்தார்கள்.

அக்காலத்துக் கல்லூரிகளில் வேலைசெய்த தமிழ்ப் பண்டிட்டுகளில் யாரும் தொடக்கத்தில் இந்தச் சம்பளம் வாங்கியதில்லை. எங்கள் கல்லூரியில், ஆறு ஆண்டுகள் (1947 - 1953) பணியாற்றினார். அங்குப் பணியாற்றும்போது இவர் சம்பளத்தை ஒரிரு ஆண்டுகளில் 130 ரூபாயாக உயர்த்தினோம். இவர் டாக்டர் பட்டம் பெற்றவுடன் இவர் சம்பளம் அந்த கிரேடின் முடிவான 150 ரூபாயாக ஆக்கப்பட்டது. இப்படிச் சம்பளத்தில் ஆநவநடிசஉை சளைந ஆன வேறொருவரை ஆசிரியர் துறையில் நான் கண்டதில்லை.

இராசமாணிக்கனார் கல்லூரிக்கு வந்தால், 'தாம் உண்டு தம் வேலை உண்டு' என்றிருப்பார். கடமைகளைத் தவறாமல், செவ்வனே செய்துவிடுவார். எல்லாவற்றிலும் ஒழுங்கு. வகுப்பிற்குச் சென்றால் மாணவர் முன்னரே வந்து காத்துக் கிடப்பர். நகைச்சுவை

ததும்ப மாணவர் உள்ளம் கவரும்படி பாடம் நடத்துவதில் வல்லவர். எல்லோருடனும் மதிப்புடன் பழகுபவர். ஆசிரியர் அறையில் வீண் பேச்சுக்கு இடந்தராதவர். மெதுவாகப் பேசும் இயல்பினர். ஆனால், பேச்சிலேயே நகைச்சுவை ததும்பும்படி உட்கருத்து வைத்துப் பேசுவார்' என்று கூறியுள்ளார்.

விவேகானந்தர் கல்லூரியில் பணியாற்றிய காலத்தில்தான், 'சைவ சமய வளர்ச்சி' என்னும் தலைப்பில் முனைவர் பட்டத்துக்குரிய ஆராய்ச்சியைச் செய்து 1951இல் அப்பட்டத்தையும் பெற்றார். தமிழ்நாட்டின் பல மாவட்டங்களைச் சேர்ந்த ஊர்களுக்கு நேரில் சென்று அங்குள்ள கோயில்களில் களஆய்வு செய்தும் தேவையான நூல்களைப் படித்தும் தெளிந்த பிறகே தம்முடைய பெரியபுராண ஆராய்ச்சி, சைவ சமய வளர்ச்சி ஆய்வுகளை முழுமையுறச் செய்ய முடிந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார். 'தாம் படித்த அல்லது கேட்ட செய்திகளைப் பற்றிய உண்மைகளை ஆராய்ந்து அறிந்த பிறகே அவற்றைத் தம் நூல்களில் எழுதினார். பேரறிஞர் பலரிடத்தும் அயராது சென்று கலந்துரையாடி உண்மை காணுவதில் இவர் வல்லவராய் இருந்தார்.' இத்தகு ஆய்வு நெறிமுறைகள் அவரது படைப்புகளுக்குப் பெருமதிப்பைப் பெற்றுத் தந்தன.

இருபத்தைந்து ஆண்டுக் கால சென்னை வாழ்க்கையில் (1928 - 1952) இராச மாணிக்கனார் ஆற்றிய பணிகளும் அடைந்த வெற்றிகளும் பெருமைக்குரியவை. பள்ளி இறுதித் தேர்வில் தேறியவராக வந்தவர், உயர்ந்த பல பட்டங்களைப் பெற்ற இடம் சென்னை. சீர்திருத்தம் பற்றிய கனவுகளோடு வந்தவர் அவற்றைச் செயற்படுத்தி வெற்றி கண்ட இடம் சென்னை. 'சமயம் போற்றுதலுக்கு உரியது; சமய ஊழல்கள் களைதலுக்கு உரியன' என்னும் எண்ணத்தோடு வந்தவர், தம்முடைய இக்கொள்கையைப் பரப்பத் தொடங்கிய இடம் சென்னை. எழுத்தில் ஆர்வத்தோடு வந்தவர், சிறந்த எழுத்தாளராக மலர்ந்த இடம் சென்னை.

நீண்ட காலம் சென்னையில் வாழ்ந்த இராசமாணிக்கனாரை 1953இல் மதுரை வரவேற்றது. மதுரையில் கருமுத்து தியாகராசர் தொடங்கிய கல்லூரிக்குத் தமிழ்த்துறைத் தலைவராகவும் தலைமைப் பேராசிரியராகவும் அவர் அழைக்கப்பட்டார். விவேகானந்தர் கல்லூரியை நீங்கிச் செல்வதற்கு முன் தமிழ்த்துறை மட்டுமின்றிப் பிற துறைப் பேராசிரியர்களும் சேர்ந்து ஒரு முகமாக ஒரு பெரும் பாராட்டினை இயற்பியல் ஆய்வுக்கூடத்தில் அவருக்கு அளித்தனர். அதில் அனைத்துத் துறைத் தலைவர்களும் அவரைப் பாராட்டிச் சிறப்பித்தனர்.

அவ்விழாவில் இராசமாணிக்கனார் வழங்கிய ஏற்புரையைப் பற்றிக் குறிப்பிடும் பேராசிரியர் சி . ஜகந்நாத ஆச்சாரியார், 'அந்த உரையின் ஒரு பகுதி என் நெஞ்சை விட்டு இன்னும் அகலவில்லை. அவர் கூறியது: 'நான் மதுரைக்குப் பேராசிரியராகப் போகிறேன். மதுரை தமிழ் வளர்த்த இடம். சங்கத்துச் சான்றோர் தமிழ் வளர்த்த பதிக்குப் போகிறேன். என் மனத்தில் ஒரு பக்கம் மகிழ்ச்சி இருந்தாலும், எங்கேயோ உயர்நிலைப்பள்ளியில் இருபது ஆண்டுகளுக்கு மேலாக ஊன்றி அழுந்திக் கிடந்த என்னை விவேகானந்தர் பெயர் தாங்கும் இப்பெருங் கல்லூரியில் வேலைக்கு அமர்த்தி, இப்பொழுது அனைவருமாகப் பாராட்டுவது என்னை நெகிழச் செய்கிறது. இத்தனைக்கும் என் குடும்பத்திற்கு விளக்கேற்றி வைத்தவர் நமது ஊ. து.' என்று சொன்னபோது அவர் கண்களில் நீர் நிறைந்தது. அதைக் கண்ட என் கண்களும் கலங்கின என்று உளம் உருகக் குறிப்பிட்டுள்ளார்.

1953ஆம் ஆண்டு ஆகஸ்டு முதல் 1959ஆம் ஆண்டு ஆகஸ்டு வரையில் மதுரைத் தியாகராசர் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றினார் இராச மாணிக்கனார். அக்காலத்தில் அவரிடம் பயின்ற மாணவர்களுள் ஒருவரான திரு. வீ. வீராசாமி, 'தம்முடன் பழக நேர்ந்த அனைவரையும் தம்மிடம் தனி அன்பும் மதிப்பும்

கொள்ளுமாறு செய்தது, வேறுபாடின்றி அனைவருடனும் பழகிய பேராசிரியரது நல்லியல்புதான்' என்று குறிப்பிட்டுள்ளார்.

'கல்வி பயிலும்போது பல ஆசிரியர்கள் நம் வாழ்க்கையில் எதிர்ப்படுகிறார்கள். அவர்களுள் சிலரே நம் மனத்தில் நிலைபெற்று வாழ்கிறார்கள். சில ஆசிரியர்கள் மாணவர்களுக்கு ஒன்றுமே தெரியாது; தாங்கள் தாம் அறிவுக்களஞ்சியங்கள் என நினைத்துக் கொள்வார்கள். மாணவர்கள்தாம் சிந்தனைக் கருவூலங்கள், அவர்களது சிந்தனையை நல்வழியில் கொண்டுசெல்வதுதான் ஆசிரியர்களது கடமை என உணர்ந்து, கற்றறிந்தோன் என்று சிறிதும் மமதையின்றி, அனைவரிடமும் மனம் திறந்து பேசும் எங்கள் மதிப்பிற்குரிய டாக்டர் இராசமாணிக்கனாரின் பண்பு எவரையும் அவர்பால் ஈர்த்துவிடும். கல்லூரியில் உடன் பணிபுரிந்த ஆசிரியர்கள், 'நீங்கள் இவ்வளவு தூரம் மாணவர்களுடன் நெருங்கிப் பழகக்கூடாது' என்று இவரிடம் கூறுவர். இவரோ புன்முறுவலுடன், 'நாமும் மாணவர்களிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டியன நிறைய இருக்கின்றன' என அவர்களுக்குப் பதிலிறுப்பார்.

ஒவ்வொரு மாலையும் மாணவர்களுடன் உலாவச் செல்வது இவரது வழக்கம். மற்றைப் பாடங்களுக்கு எவ்வாறு 'டிமிக்கி' கொடுப்பது என்று மாணவர்கள் யோசித்துக் கொண்டிருப்பர். ஆனால், இவரது பாடமோ வாரத்தில் மூன்று நாட்கள்தானே வருகின்றது என்று மனம் வருந்துவர். அவ்வளவு தூரம் இவர் நடத்தும் பாடங்கள் சுவையுடனும் மனத்தில் பதியும் எடுத்துக்காட்டுகளுடனும் விளங்கும். உலக நடப்புக்களை மிக்க நகைச்சுவையுடன் எடுத்துக் கூறுவதில் இவருக்கு நிகர் இவரேதான்' என்று பேராசிரியரின் பழகும் பாங்கையும் கற்றுத் தரும் திறனையும் நினைவு கூர்ந்துள்ளார் திரு. வீ. வீராசாமி.

இராசமாணிக்கனார் மதுரையில் வாழ்ந்தபோது அங்கு எழுத்தாளர் மன்றம் உருவாவதற்குப் பெருந்துணையாயிருந்தார். அதன் தலைவராகவும் விளங்கினார். மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பாடத்திட்டங்களை மாற்றியமைத்து அதன் சார்பில் சென்னைப் பல்கலைக்கழக வித்துவான் தேர்வுக்கு மாணவர்களை அனுப்பச்செய்யும் முயற்சியில் ஈடுபட்டார். எழுத்துப் பணி மதுரையிலும் தொடர்ந்தது. இக்காலகட்டத்தில் ஏறத்தாழ நாற்பது நூல்கள் இராசமாணிக்கனாரால் எழுதப்பட்டன. இவர் தலைமையேற்று நடத்திவைத்த திருமணங்களும் கலந்து கொண்டு சொற்பொழிவு ஆற்றிய நிகழ்ச்சிகளும் கணக்கற்றவை.

'ஆடம்பரத் திருமணச் செலவுகளை டாக்டர் அடியோடு வெறுப்பவர். பண வசதியுள்ளவர்கள் எப்படியாவது நடத்திவிட்டுப் போகட்டும். ஏழைகளும் குலப் பெருமை பேசிக் கடன் வாங்கிச் செலவு செய்து சீர்குலைந்து போகிறார்களே என மிகவும் மனம் வருந்துவார். திருமண அழைப்பிதழ்கள், 'இன்னின்னாருக்கு இந்தத் தேதியில் இந்த நேரத்துக்குத் திருமணம் நடைபெறவிருக்கிறது. தாங்கள் அப்போது இருந்த இடத்தில் இருந்துகொண்டே மணமக்களை வாழ்த்தியருளும்படி வேண்டுகிறேன்,' என அச்சடிக்கப் பட வேண்டும் என்று நகைச்சுவையுடன் கூறுவார். அதிலும், 'இருந்த இடத்தில் இருந்து கொண்டே என்பது அடிக்கோடு இடப்பட்டிருக்க வேண்டும் என்பார்' என்று இராசமாணிக்கனாரின் மணவினைக் கொள்கையினைத் தம் கட்டுரையொன்றில் விவரித்துள்ளார் திரு. வீ. வீராசாமி.

மதுரையில் இருந்தபோது தமிழ்நாடெங்கும் பயணித்து இராசமாணிக்கனார் ஆற்றிய சொற்பொழிவுகள் இலக்கிய நுகர்வையும் சமய, சமூக சீர்திருத்த மனப்பாங்கையும் மக்களுக்கு ஊட்டுவனவாக அமைந்தன. தமிழர் ஒற்றுமை, தமிழ் மொழியின் மேன்மை, எளிய நிலையில் அமையவேண்டிய தமிழர் திருமணம்,

இலக்கியங்கள் சுட்டும் தமிழர் வாழ்வு, உழைப்பின் உயர்வு, சாதி, சமயப் பூசலற்ற - ஏற்றத்தாழ்வுகள் கருதாத தமிழ்ச் சமூகம் என்பனவே பெரும்பாலும் அவர் பொழிவுப் பொருள்களாக அமைந்தன. எளிய, இனிய நடையில் நகைச்சுவை உணர்வு பொங்க ஆற்றொழுக்காகப் பேசும் ஆற்றல் அவருக்கு இருந்ததால் உரை கேட்டவர்கள் அவர் வயமாயினர்.

பள்ளி, கல்லூரி அளவிலான பாடப்புத்தகக் கட்டுரைகளாலும் துணைப்பாட நூல்களாலும் இத்தகு பயன்தரு பொழிவுகளாலும் இராசமாணிக்கனார் நாடறிந்த நல்லறிஞராகத் திகழ்ந்தார். இவரது இலக்கிய, சமய, சமுதாயப் பணிகளைப் பாராட்டிக் கோயமுத்தூர் திருவள்ளுவர் கழகம் 1956 ஆகஸ்டு 26இல் பெருமைக்குரிய பாராட்டு விழாவொன்றை அமைத்தது. இராஜா சர். முத்தையா செட்டியார், அமைச்சர் சி. சுப்பிரமணியம், தவத்திரு குன்றக்குடி அடிகளார், திருக்குறள் வீ. முனுசாமி முதலிய அறிஞர்கள் இராசமாணிக்கனார் தமிழுலகிற்கு ஆற்றிய அரும் பணிகளையும் அவரது ஆய்வுப் படைப்புகளையும் ஒருமனதாகப் பாராட்டி மகிழ்ந்தனர்.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் துணைத் தமிழ்ப் பேராசிரியராக 1959 செப்டம்பர்த் திங்களில் பொறுப்பேற்ற இப்பெருமகனார் 1967 மேத் திங்கள் முடிய அப்பணியில் இருந்தார். பணியிலிருந்த முதல் ஐந்தாண்டுகளில் சங்கத் தமிழ் இலக்கியமான பத்துப்பாட்டை ஆய்வு செய்து, 'பத்துப்பாட்டு ஆராய்ச்சி' என்ற பெயரில் நூலாக்கி, பல்கலைக்கழகத்திடம் ஒப்புவித்தார். அவ்வரிய ஆராய்ச்சி நூல் பின்னால் (1970) பல்கலைக்கழகத்தாரால் வெளியிடப்பட்டது. தொடர்ந்து தாம் செய்த ஆராய்ச்சிகளைக் கட்டுரைகளாக்கிப் பல இதழ்களிலும் வெளியிட்டார். பல மன்றங்களிலும் இலக்கியக் கழகங்களிலும் தாம் ஆற்றிய சொற்பொழிவுகளுக்குக் கட்டுரை வடிவம் தந்து நூல்களாக்கினார். தாம் அரிதின் முயன்று அறிந்த பல வரலாற்று உண்மைகளை என்றும் அழியாது இருக்குமாறு எழுத்து வடிவாக்கிய பெருமை இவருக்கு உண்டு.

சென்னை, திருச்சிராப்பள்ளி வானொலி நிலையங்கள் இராசமாணிக்கனாரின் பல பொழிவுகளை மக்களுக்கு வழங்கின. சமுதாய நலம் நாடும் கண்ணோட்டத்தில் அமைந்த அப்பொழிவுகள் பின்னாளில் தொகுக்கப் பெற்று நூல் வடிவமும் பெற்றன. இலங்கை வானொலியில் உரையாற்றவும் இலங்கைத் தமிழ் மன்றங்களில் மக்களுடன் கலந்துரையாடவும் அரசும் மக்களும் விரும்பி அழைத்தமையால் இருமுறை இலங்கை சென்று வந்த இப்பெருந்தகையின் ஆய்வுப் பணிகளைப் பெரிதும் போற்றிய தமிழ்நாடு அரசு 1966இல் மலேசியாவின் தலைநகரான கோலாலம்பூரில் நடைபெற்ற முதலாம் உலகத் தமிழ் மாநாட்டிற்குத் தேர்ந்தெடுத்து அனுப்பிய மிகச் சில தமிழறிஞர்களுள் இராசமாணிக்கனாரையும் ஒருவராகக் கொண்டது. அரசின் சார்பில் உலகத் தமிழ் மாநாட்டில் கலந்துகொண்ட இவரது சங்ககாலத் தமிழ்ச் சமுதாயம் பற்றிய ஆய்வுக் கட்டுரை அறிஞர்களால் உவந்து ஏற்கப்பட்டது

சமயத்துறையில் இவர் ஆற்றிய பணிகளில் மனம் நிறைந்த திருவாவடுதுறை ஆதீனம், 'சைவ வரலாற்று ஆராய்ச்சிப் பேரறிஞர்' (1951) என்னும் பட்டத்தையும், மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனம், 'ஆராய்ச்சிக் கலைஞர்' (1955) என்னும் பட்டத்தையும், தருமபுர ஆதீனம், 'சைவ இலக்கியப் பேரறிஞர்' (1963) என்னும் பட்டத்தையும் அளித்து உடன் பொற்பதக்கமும் பொன்னாடையும் வழங்கி மகிழ்ந்தன. தருமபுர மடத்தினர் டாக்டர் பட்டத்துக்குரிய ஆராய்ச்சி நூலான 'சைவ சமய வளர்ச்சி'யை ஆங்கிலத்தில் வெளியிட்டனர். இராசமாணிக்கனாரின் ஆய்வுகளைப் பிற மொழியினரும் அறிய இது வாய்ப்பாக அமைந்தது. சைவ சித்தாந்த சமாஜம், 'சைவ நெறிக் காவலர்' (1959) என்னும் பட்டத்தை வழங்கி மகிழ்ந்தது.

பல பல்கலைக்கழகங்களில் தலைமைத் தேர்வாளராகவும் பாடத்திட்டக்குழுத் தலைவராகவும் விளங்கிய இவ்வறிஞர், மாணவர் நலத்தில் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார். பாடத் திட்டங்களை வகுப்பதிலும் தேர்வுகளுக்கான வினாத் தாள்களைத் தயாரிப்பதிலும் மாணவர்களின் விடைத்தாள்களைத் திருத்துவதிலும் அவர் கொண்டிருந்த பொறுப்புணர்ச்சி குறிப்பிடத்தக்கது. 'தமிழ்ப்பாடத்தில் மாணவர்களுக்கு அவரவர் தகுதிக்குரிய மதிப்பெண்களைத் தருவதில் தயக்கம் கூடாது. இந்த அளவிற்கு மேல் உயர்ந்த மதிப்பெண் மொழிப் பாடத்தில் கூடாது எனும் போக்குத் தவறானது. மாணவர்கள் சிறப்பாக விடையெழுதியிருந்தால் உரிய உயரிய மதிப்பெண்களை வழங்கிடல் வேண்டும். அப்போதுதான் தமிழ்ப்பாடத்தைத் தயங்காது தேர்ந்துகொள்ள மாணவர்க்கு ஊக்கம் பிறக்கும்' என்பது இராசமாணிக்கனாரின் கருத்தாக இருந்தது. இதனால், சிறப்புத் தமிழ் மாணவர்கள் 1960களிலேயே தமிழ்ப்பாடத்தில் உயர்ந்த மதிப்பெண்களைப் பெறமுடிந்தது.

இராசமாணிக்கனாரின் பேச்சுத்திறம், உலகியல் அறிவு, பழகும் பாங்கியல் குறித்துக் குறிப்பிடும் ஆட்சிச்சொற் காவலர் கீ. இராமலிங்கனார், 'இவருடைய விரிவுரைகள் மனத்தில் பதியக்கூடிய முறையில் அமையும்; கேட்பாரைப் பிணிக்கும் நலம் பொருந்தியனவாக விளங்கும். இயலுமானால், கரும்பலகை இடச்சொல்லி, அதில் செய்திகளை எழுதியும் காட்டி விளக்குவார் என் தோழர். உள்ளத்தில் ஊன்றும்படி தேவையான இடங்களில் திரும்பத் திரும்பக் கூறிப் பதியவைப்பார். அவர் சொன்ன செய்திகளைக் கேட்டவர்கள் சிந்திப்பர்; அசைபோடுவர்; வெறும் மனத்தோடு செல்லமாட்டார்கள்.

ஒருமுறை பெங்களூரில் நடந்த தமிழகப் புலவர் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட பிறகு, இராசமாணிக்கனாரும் நானும் மட்டுமே 'சிரவணபௌகோளா' முதலிய இடங்களுக்குச் சென்றோம். மணலில் புதையுண்ட கோயில்கள் ஓர் ஊரில் இருந்தன. அந்த ஊரின் பெயர் இப்போது எனக்கு நினைவில் இல்லை. மேற்பகுதியிலிருந்த மணலை மட்டும் அகழ்ந்து எடுத்துவிட்டுக் கோயில்களின் கோபுரங்களும் பிற உச்சிப்பகுதிகளும் கண்ணில் படும்படிச் செய்திருந்தனர். அவற்றைக் காண்பதிலும் ஆராயும் அவரது சிந்தையில் அவற்றைப் படம்பிடித்துக் கொள்வதிலும் என் தோழர் கண்ணும் கருத்துமாக இருந்தார். பொழுது போனதும் தெரியவில்லை. இருட்டியே போய்விட்டது. அது எங்களுக்கு அடியோடு புதிய ஊர். இரவில் அங்குத் தங்கியாக வேண்டிய நிலையாக நேர்ந்துவிட்டதால், நான் திகைத்தேன். ஆனால், என் தோழரோ, 'இதற்கு ஏன் கவலை உங்களுக்கு? வசதியாகத் தங்கலாம் வாருங்கள்' என்று ஊருக்குள் அழைத்துச் சென்றார்.

அது சிறிய ஊர். சில ஐயங்கார்கள் வீடுகள் இருந்தன. அங்கேதான் தங்கும் வசதி கிடைக்கக்கூடும். ஒரு வீட்டுத் திண்ணையில் நாங்கள் இருவரும் படுத்துக்கொள்ள, அவரது உலகியல் ஞானமே துணை செய்தது. அவரது அரவணைத்த பேச்சினால் எங்களுக்குப் படுக்க விரிப்பும் தலைக்கு அணையும் கிடைத்தன. எதிர்ப்புறத்திலே, தமிழ் நலம் போற்றும் ஓர் ஐயங்கார் வீட்டு முகப்பிலே சிலர் தமிழில் உரையாடிக் கொண்டிருந்தனர். அங்கு என்னையும் அழைத்துக்கொண்டு சென்றார் என் தோழர். விரைவில் அங்கிருந்தவர்களில் முக்கியமானவரின் கருத்தை ஈர்த்துவிட்டார். எங்களுக்குப் பால், பழம் முதலியன வலியக் கிடைத்தன. பசியும் ஆறிற்று' என்று நினைவு கூர்ந்துள்ளார்.

இராசமாணிக்கனாரின் குடும்பம் தமிழ் மணம் கமழும் குடும்பமாகும். தாம் உயர்ந்ததோடு நிறைவடையாத இராசமாணிக்கனார் தம் துணைவியாருக்கும் தமிழ் கற்றுத்தந்து அவரையும் புலவராக, ஆசிரியராக வளர்த்தார். 1947 இல் வித்துவான் பட்டம் பெற்ற திருமதி கண்ணம்மாள் இராசமாணிக்கனார் சென்னையில், மண்ணடிப் பகுதியில் தம்புசெட்டித் தெருவிலிருந்த சி. எஸ். எம். பெண்கள் நடுநிலைப்பள்ளியில்

சில ஆண்டுகளும் பின்னர் மதுரையில், பாத்திமா கல்லூரியில் சில காலமும் தமிழாசிரியராகத் திறமையோடு பணிபுரிந்தார். அக்காலத்தே, பள்ளி மாணவர்க்கான பாடநூல்களில், 'குடும்பக் கலை' முதலிய பல கட்டுரைகளை எழுதியதுடன், 'தமிழ்ப் புலவர் பெருமக்கள்' முதலிய நூல்களையும் அவர் படைத்துள்ளார்.

மனைவியைக் கல்வியில் வளர்த்தாற் போலவே தம் எட்டுக் குழந்தைகளையும் - ஆண், பெண் என்ற வேற்றுமை பாராது உயர்கல்வியில் தேர்ச்சிபெறச் செய்தவர் இராசமாணிக்கனார். திருச்சிராப்பள்ளியில் கண் மருத்துவராகப் பணிபுரியும் ஒருவர் நீங்கலாக ஏனையோர் பல்வேறு கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் தமிழ்ப் பணியாற்றியவர்கள். 'நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகம் என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் படம்பிடித்துக் காட்டியது மிகையல்ல என்று மெய்ப்பிக்கிறது இராசமாணிக்கனார் குடும்பம்' என்கிறார் நெ. து. சுந்தரவடிவேலு.

இராசமாணிக்கனாரின் இல்லறம் நல்லறமாக விளங்கியது. சொற்பொழிவுகளுக்குப் போகாமல் வீட்டிலிருந்த நாட்களில் தம் துணைவியாருக்கு வீட்டு வேலைகளில் உதவுவதைத் தம் கடமையாகக் கொண்டிருந்தார். 'ஒருமுறை அவர் இல்லம் சென்றபோது, பேராசிரியர் தம் மனைவிக்கு வெங்காயம் நறுக்கி உதவி செய்து கொண்டிருந்தார். மற்றொரு முறை சென்றபோது தமிழ்ப் பாடம் சொல்லிக் கொண்டிருந்தார். ஒத்த நலம் - ஒத்த பண்புநிலை பேராசிரியர் இல்லத்தில் மலர்ந்தது' என்பார் சிறுவை நச்சினார்க்கினியன்.

வாழ்வரசியார்மீது இராசமாணிக்கனார் கொண்டிருந்த அன்பு அளவற்ற தென்பதை அவருடைய பாடல் ஒன்று தெரிவிக்கிறது.

உடம்புங் குணமில்லை; உணவுங் குணமில்லை;

படமுடியா தினித்துயரம் பாவையே! - திடமான
அன்பின் பெருக்கே ஆசைக் களஞ்சியமே!

இன்னே விரைந்து வருக

ஏதோ காரணத்திற்காக அன்னை இல்லம் சென்றிருந்த துணைவியின் பிரிவுத் துன்பம் தாங்காமல் அவர் எழுதியனுப்பிய இந்தப் பாடல் அவர்தம் இல்லற மாண்பை நன்கு படம்பிடிக்கிறது.

'எங்கள் வளர்ச்சியில் அதிக அக்கறையும் ஆர்வமும் உடையவர்கள். படிப்பில் விளையாட்டில் எங்களில் யாராவது முதலாவதாக வந்தால் அவர்களைப் பாராட்டி, பரிசுகள் தந்து ஊக்கப்படுத்துவார்கள். பள்ளியில் சுற்றுலாக்கள் செல்வதென்றால், விருப்பத்தோடும் மகிழ்வோடும் அனுப்பிவைப்பார்கள். பயணங்கள் தரும் அனுபவங்கள் வாழ்க்கையை வளப்படுத்தும் என்ற கண்ணோட்டம் உள்ளவர்கள் அவர்கள். நாங்கள் எந்த வகையிலும் துன்பப்படக்கூடாது என்பதில் அதிக அக்கறை காட்டினார்கள். ஆரம்ப நாட்களில் நாங்கள் வாடகை வீடுகளில்தான் இருந்தோம். வாடகை வீடுகள் என்றாலும் பிற குடித்தனங்கள் இல்லாத தனி வீடுகளைத்தான் விரும்புவார்கள். எந்த விதத்திலும் தம் குழந்தைகளுக்கு வசதிக்குறைவுகள் இருக்கக்கூடாது என்று கருதினார்கள்' என்பார் பேராசிரியரின் மகன் மா. ரா. வஞ்சிக்கோவன்.

தமிழ்ப்புலவர் பெருமக்களிடம் இராசமாணிக்கனார் கொண்டிருந்த ஈடுபாடு அவர் வாழ்ந்த இல்லங்களுக்கு அவர் சூட்டியிருந்த பெயர்களால் விளக்கம் பெறுகிறது. வண்ணையம்பதியில் குடியிருந்த இல்லத்தைத் தொடக்கத்தில், 'நக்கீரனார் அகம்' என்று அழைத்து மகிழ்ந்த இப்பெருந்தகை, பின்னாளில் அதே இல்லத்தை, 'இளங்கோ இல்லம்'

எனக் குறித்துப் பெருமிதப்பட்டுள்ளார். ‘பெரியபுராண ஆராய்ச்சி’யும் ‘சைவ சமய வளர்ச்சி’யும் அவர் உள்ளத்தே உருவாகத் தொடங்கிய நாள் முதல் சேக்கிழார் பெருமான் மீது அவருக்கு மிகுந்த ஈடுபாடு உண்டாயிற்று. அதன் விளைவாய் அவர் இல்லமும், ‘சேக்கிழார் இல்லம்’ ஆயிற்று. இந்தப் பெயரே பேராசிரியரின் இறுதிக் காலம் வரை அவர் வாழ்ந்த வளமனைகளின் பெயராய் நிலைத்தது.

பிள்ளைகள் கல்வி பெறுவதில் மிகுந்த கவனமுடன் இருந்த இராசமாணிக்கனார் தேவையான சமயங்களில் அவர்களுக்குப் பாடங்கள் எடுக்கவும் தவறியதில்லை. வளரும் காலத்தில் ஒரு மணித்துளியைக்கூட வீணாக்கக்கூடாது என்பது அவர் கருத்தாக இருந்தது. வாழும் இடத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்ளவேண்டும் என்பதில் உறுதியாக இருந்தமையால் விடுமுறை நாட்களில் அவரவர்க்கு ஏற்றவாறு வீட்டைத் தூய்மைசெய்யும் பணியைப் பிள்ளைகளுக்குப் பங்கிட்டுத் தருவார்.

காலையிலிருந்து இரவுவரை சோர்வின்றி உழைப்பவர் என்பதால், இரவு உணவின் போது இயன்றவரையிலும் குடும்பத்தின் அனைத்து உறுப்பினர்களும் உடனிருந்து உண்ணுவதை விரும்புவார். அந்த நேரத்தில்தான் பிள்ளைகளின் படிப்பு, நலம், பிற செயல்கள் முதலியன பேசப்படும். உறங்கப்போகும்போது தேவை ஏற்படும் நாட்களில் குடும்ப நிலை குறித்துப் பேராசிரியரும் அவர் துணைவியாரும் கலந்துரையாடுவது உண்டு. குடும்பச் செலவுகளை மாதந்தோறும் எழுதிவைத்து, வருவாய்க்கேற்ப செலவு செய்யும் பழக்கத்தை ஏற்படுத்தியவர். அவரது உலகியல் அறிவும் திட்டமிடும் பாங்கும் குடும்பத்தை உயர்த்த அவருக்குப் பெரிதும் உதவின.

சீர்திருத்தங்கள் வீட்டு வாயிலுக்கு வெளியில்தான் என்று வாழ்ந்த சமூகச் சிந்தனையாளர்களுக்கு நடுவே இராசமாணிக்கனார், வெறும் வாய்ச்சொல் வீரராக இருந்துவிடாமல், செயல் வீரராகவும் திகழ்ந்தமை அவருடைய தனிச் சிறப்பெனலாம். அவர் முன்னின்று நடத்தி வைத்த தம் திருமணம் பற்றிக் குறிப்பிடும் அவரது திருமகன் மா. ரா. வஞ்சிக்கோவன், ‘என் திருமணம் காதல் திருமணம். வேறு இனத்துப் பெண்ணை விரும்பி மணந்தவன் நான். எங்கள் காதலை வரவேற்று, பல எதிர்ப்புகளுக்கு இடையே என் திருமணத்தை நடத்தி வைத்தார்கள். பொதுவாக, காதல் திருமணம் செய்பவர்கள் வெளியேறுவார்கள்; அல்லது வெளியேற்றப்படுவார்கள். இந்த நடைமுறைக்கு முற்றிலும் மாறாக என் குடும்பத்தைத் தம்முடனே இருக்கச் செய்து, நெறிப்படுத்தி, ஆளாக்கி விட்டார்கள். எங்கள் நாட்கள் நிறைவோடும் மகிழ்வோடும் அமைந்தன. என் வாழ்வின் வளர்ச்சி நிலைகளுக்கெல்லாம் என் தந்தையாரின் பேருள்ளமும் பெருந்தன்மையுமே அடிப்படை. நிறைந்த மனத்தோடும் நன்றியுணர்வோடும் இன்று அதை நினைத்துப் பார்க்கிறேன்.’ என்று உளம் நெகிழக் கூறியுள்ளார்.

ஒல்லும் வகையெல்லாம் பிறருக்கு உதவுவதை இனிய கடமையாகக் கருதியவர் இராசமாணிக்கனார். அறிஞர் ந.மு. வேங்கடசாமி நாட்டாரின் அறுபதாம் ஆண்டு நிறைவையொட்டி அப்பெருந்தகைக்கு நிதி திரட்டித்தர இவர் எடுத்துக்கொண்ட முயற்சிகளைப் பேராசிரியர் சி. ஜகந்நாத ஆச்சாரியார் குறிப்பிட்டுள்ளார். மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணருக்குச் சிறப்பாக மணி விழா அமைக்க வேண்டும் என்று இவர் விழைந்தமையைத் தமிழறிஞர் இரா. இளங்குமரனார், ‘பாவாணர் வரலாறு’ எனும் தம் நூலில் சுட்டியிருப்பதுடன், பாவாணருக்கு எவ்விதத்தானும் உதவவேண்டும் என்று இராசமாணிக்கனார் ஆழக் கருதியிருந்தமையையும் அதற்கான வழிமுறைகளை மதுரை எழுத்தாளர் மன்ற ஆட்சிக்குழுவினரிடம் அவர் பகிர்ந்து கொண்டமையையும் தெளிவுபடப் பதிவு செய்துள்ளார்.

இராசமாணிக்கனாரால் வாழ்வு பெற்றவர்கள் மிகப் பலர். இன்னார், இனியார், அறிந்தார், அறியாதார் என்ற வேறுபாடு இல்லாமல், முடிந்தவரையில் முடிந்தவர்

களுக்கெல்லாம் உதவியவர் அவர். பகைவர்க்கும் அருளும் நெஞ்சம் அவர்தம் தனிச்சிறப்பு. தாம் செய்த உதவிகளுக்கு விளம்பரம் தேடாதவர். ஏழை - பணக்காரர், படித்தவர் - படிக்காதவர் என்ற வேறுபாடில்லாமல் எல்லோரிடமும் ஒரே மாதிரியான அன்போடும் ஆர்வத்தோடும் அவரவர் நலன்களில் அக்கறையோடும் பழகுவார். பேச்சிலும் எழுத்திலும் எளிமை வேண்டும் என்னும் கொள்கை உடையவர் அப் பெருந்தகை. எளிமையும் இனிமையும் அவரது உடைமைகள்.

இத்துணை சிறப்புக்களை ஈட்டிப் புகழ் படைத்திருந்த இராசமாணிக்கனார் தம் உடல் நலத்தையும் ஒழுங்காகவே பேணிவந்தார். ஆயினும் உழைப்பின் மிகுதியாலும் ஆராய்ச்சிகளாலும் கள ஆய்வுகளுக்காகப் பல ஊர்களுக்குச் சென்றுவந்த காரணத்தாலும் ஐம்பத்தொன்பதாம் வயதில் இதயத் தசைச் செயலிழப்பு ஏற்பட்டது. உடனே மருத்துவமனைக்குச் சென்று மருத்துவஞ் செய்து கொண்டமையால் நலம் பெற்றார். எனினும் மேத்திங்களில் இரண்டாம் முறை நேர்ந்த இதயத் தசைச் செயலிழப்பினால் 26. 5. 1967 வெள்ளிக்கிழமை அன்று பேராசிரியர் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

பொறுப்புடைய பெரிய குடும்பத் தலைவராகவும் கல்வியாளராகவும் சமுதாய சீர்திருத்தச் சிந்தனையாளராகவும் மாணவர் நலன் நோக்கிய எழுத்தாளராகவும் அறிவியல் அணுகு முறைகளைப் பயன்படுத்திய ஆராய்ச்சியாளராகவும் தமிழுலகும் வரலாற்றுலகும் இணைந்து போற்றிய பேராசிரியப் பெருந்தகையாகவும் சமயத் தூய்மை கருதிய சிவநெறிச் செல்வராகவும் பிறர்க்கு உதவும் பண்பாளராகவும் விளங்கிய டாக்டர் இராசமாணிக்கனார் தமிழ் உள்ளளவும் தமிழர் உள்ளத்தில் நீங்காதிருப்பார்.

❖ ❖ ❖



இராசமாணிக்கனார்
ஒரு கண்ணோட்டம்

மாந்த நேயமுடையவராகத் திகழ்பவர், நம்பா மதத்தராக இருப்பதும் உண்டு. நம்பும் மதத்தராக இருப்பவர், மாந்த நேயம் இல்லாராக இருப்பதும் உண்டு. ஆனால், இருவகை நேயமும் கொண்டு, இருவகை நேயத்தரும் ஒப்ப மதித்துப் போற்றும் பேறுபெறுதல் விரல்விட்டு எண்ணக்கூடிய சிலர்க்கே கைவரப் பெறும்.

அவ்வரப்பேறு பெற்று, நம்புவாரும் நம்பாரும் இருகூறு படாமல் ஒருமையுறப் பாராட்டப் பெற்ற பேறு பெற்றவர் பெருந்தகை அண்ணல் இராசமாணிக்கர்.

இரா. இளங்குமரன்
'மாணிக்க இராசமாணிக்கர்'
நூற்றாண்டு மாணிக்கம்
பக். 136 - 137



படைப்புகள்

கவிதை

கதை

கட்டுரை

தமிழகத்துப் பண்டை நகரங்களையெல்லாம் சாத்திரீய முறையில் ஆராய்ச்சி செய்யத் தமிழ்மக்கள் அரசியலாரைத் தூண்ட வேண்டும்; அப்பணியில் தமிழ்ப்பற்றுடைய அறிஞரையே ஆராய்ச்சியாளராக அமர்த்த முனைதல் வேண்டும். 'எல்லாம் ஆரிய நாகரிகமே' எனச் சாதிக்க முயலுவோரை அப்பணியில் அமர்த்தலாகாது; அங்ஙனமே எல்லாம் 'தமிழ் - திராவிட நாகரிகமே' என்பவரையும் அமர்த்தல் ஆகாது.

உள்ளதை உள்ளவாறு உரைக்கும் உண்மையாளரையே அத்திருப்பணியில் அமர்த்தல் வேண்டும். மெய்யான ஆராய்ச்சி நடைபெறின், இந்திய சரித்திர உலகம் வியப்புறுமாறு அரிய பொருள்கள் கிடைக்கும்; திராவிடர் தொன்மை நாகரிகம் உலகெங்கும் உணர வழியுண்டாகும்.

மா. இராசமாணிக்கனார்
மறைந்த நகரம் அல்லது மொஹெஞ்சொ - தரோ
(மாணவர் பதிப்பு)
1944 (முதற் பதிப்பு)
பக். 64 - 65

தமிழ்நாடு*

வயல்வளத்தில் மிகச்சிறந்தே வளம்பெறும்நன் னாடு
வள்ளல்களும் புலவர்களும் வாழ்ந்திருந்த நாடு
கயல்வாளை மீனினங்கள் களிப்பொடுவாழ் நாடு
கண்மணியிற் சிறந்ததமிழ் கவினுறுநன் னாடு
வயலுழவும் கைத்தொழிலும் வளர்ந்துவரும் நாடு
வண்மையுடை மூவேந்தர் வாழ்ந்திருந்த நாடு
மயிலிறகும் மிளகும்பெருங் கடல்கடந்த நாடு
மணமிகுந்த சந்தனமும் மகிழ்ந்தளித்த நாடே! (1)

பறவைகளும் தமிழ்மொழியிற் பாட்டிசைக்கும் நாடு
பல்புலவர் இருந்துசங்கப் பாஇசைத்த நாடு
குறத்தியரும் தமிழ்மொழியிற் குரவையாடு நாடு
குயிற்குரலார் கிளிமொழியார் கொஞ்சுதமிழ் நாடு
அறஞ்செறிந்த தமிழரசர் ஆண்டிருந்த நாடு
அடிகள்பலர் அருள்உரைகள் அளித்ததிரு நாடு
மறம்போற்றி வாள்வீரர் மகிழ்ந்துறைந்த நாடு
மாண்புறுநம் தெய்வத்தமிழ் மணங்கமழ்நன் னாடே! (2)

❖ ❖ ❖

* நேஷனல் தமிழ் வாசகம், இரண்டாம் படிவம் - இரண்டாம் பிரிவு, 1960 (எட்டாம் பதிப்பு), ப.103

தியாக உணர்ச்சி*

சம்பந்தன் நான்காம் வகுப்பு மாணவன். அவன் தகப்பனார் ஒரு மளிகைக் கடையில் கணக்கப்பிள்ளையாக இருந்தார். அவர் திங்கள் ஒன்றுக்கு இருபது ரூபாய் பெற்றார். அதனால் சம்பந்தன் எளிய உடைகளையே உடுத்துவந்தான்; ஆயினும் பாடங்களைப் படிப்பதில் ஊக்கமுள்ளவனாக இருந்தான்.

அவன் வகுப்பில் கண்ணப்பன் என்றொரு மாணவன் இருந்தான். அவன் பெற்றோர் அற்றவன்; தாய் மாமன் வீட்டில் வளர்ந்துவந்தான்; கந்தல் உடைகளையே உடுத்தி வந்தான். ஆயினும் வகுப்பில் முதல் மாணவன் அவனே.

சம்பந்தன் கண்ணப்பனை அன்போடு நேசித்து வந்தான்; அவனது ஏழ்மையை எண்ணி எண்ணி வருந்தினான்; அவனுக்கு உதவி செய்யக்கூடிய நிலையில், தான் இல்லாததை எண்ணி மனம் வருந்தினான்; அவனைப் பற்றிப் பலமுறை தன் பெற்றோரிடம் கூறிவந்தான்.

சம்பந்தன் பொங்கல் திருநாள் அன்று கண்ணப்பனைத் தன் வீட்டிற்கு அழைத்திருந்தான்; கண்ணப்பன் தன் மாமனிடம் விடைபெற்றுக் கொண்டு சம்பந்தன் வீடு சென்றான். சம்பந்தன் அவனைக் கண்டதும் ஓடிவந்து மார்போடு அணைத்துக் கொண்டான்; அவனைத் தன் பெற்றோர்க்கு அறிமுகப்படுத்தினான்.

சம்பந்தன் உள்ளே சென்று ஒரு புதிய சட்டையை எடுத்து வந்து, ‘நண்பனே, இந்த நல்ல நாளில் இதை நீ அணிந்து கொள், என் தகப்பனார் எனக்கு ஒரு வேட்டியையும் ஒரு சட்டையையும்தான் வாங்கி வந்தார். நான் வேட்டியைக் கட்டிக் கொள்கிறேன்; நீ சட்டையை அணிந்து கொள். மறுக்காதே, பெற்றுக்கொள்’ என்றான்.

கண்ணப்பன் சிறிது தயங்கினான். உடனே, சம்பந்தன் பெற்றோர் வற்புறுத்த, அவன் அச்சட்டையை மகிழ்ச்சியோடு பெற்றுக் கொண்டான். பெற்றோர் சம்பந்தனது தன்னலமற்ற உணர்ச்சியை எண்ணி, எண்ணி மகிழ்ந்தனர்.

❖ ❖ ❖

*கதைமலர் மாலை (மலர் ஒன்று), 1953 (இரண்டாம் பதிப்பு), பக். 65-66.

உண்மை*

கட்டுரை

மனிதன் தன் குழந்தைப் பருவத்திலிருந்து இறக்கும்வரை எத்தகைய கொள்கைகளில் - நம்பிக்கைகளில் - எண்ணங்களில் வாழ்ந்து வருகின்றான்? அவன் அவற்றைப் பற்றித் தன் வாணாட்களில் ஒரு நாளிலேனும் ஒரு மணி நேரமேனும் சிந்திப்பதுண்டா? இல்லை! இல்லை!! அவன் தனது குழந்தைப் பருவத்தில், தனது அறிவுக்கு எட்டாத - தெய்வீகத் தன்மையெனக் கூறப்பட்ட பல செய்திகளைக் கேள்விப்படுகிறான். அவனது தூய உள்ளத்தில் இச் செய்திகள் புகுத்தப்படுகின்றன. தனக்குக் கிடைத்ததைக் கொண்டு திருப்தியடைதல், அச்சம், சாபம் முதலிய பலவும் அவனது களங்கமற்ற மனத்தைக் கவர்ந்து பாழாக்கிவிடுகின்றன. அவன் மனம் சுதந்திரத்தை இழந்துவிடுகிறது. தன்னிடம் புகுத்தப்பெற்ற விஷயங்களை ஆராய்ச்சிசெய்ய சக்தியற்றதாகின்றது. 'ஆராய்ச்சி செய்யாதே; நம்பு' என்று பெரியோர் கூறிய சொல் தோன்றித்தோன்றி மனத்தை அடிமைப்படுத்திவிடுகின்றது. எனவே, மனிதன், 'உண்மை எது? உண்மை அல்லாததெது?' என்பவற்றைத் தன் பகுத்தறிவால் ஆராய்ந்தறியத் துணிவின்றித் தவிக்கிறான்.

உண்மை ஒன்றே ஆன்மாவை இருள்மயமாகிய 'மனித வாழ்க்கை' என்னும் பிரயாணத்திற் கடத்திச் செல்லும் ஒளியாகும்.' தன் பகுத்தறிவைக் கொண்டு ஆராய்ந்து, 'உண்மை இது, உண்மை அல்லாதது இது' எனத் துணிபவனே வீரன். அவன் கண்டறியும் உண்மையே அவனது பெருவாழ்வைத் தூய்மையுறச் செய்வது. உண்மையே மகிழ்ச்சிக்குத் தாய்; உண்மையே மனத்தை - வாழ்க்கையை - சமூகத்தை - ஏன்? உலகத்தையே தூய்மை செய்வது; நாகரிகம் ஆக்குவது; ஒளிரவும் செய்வது.

இத்தகைய பெருமைவாய்ந்த உண்மையைக் காண மனிதனை முழுவுரிமையுடன் விடுதல் வேண்டும்; 'வேதத்தின் வார்த்தை; பூதத்தின் வார்த்தை; நூல்கள் கூறுகின்றன' எனவும், பிறவாறும் விஷயங்களை மனத்துள் புகுத்தி, 'இவற்றை நம்பு; எதிர்மறுத்து உரையேல்; அங்ஙனம் உரைத்தல் பாவம்' எனக் கூறி, மனிதனுக்கு அச்சத்தை உண்டாக்கி, அவன் அறிவைக் குடத்துள் புகுத்திய விளக்கைப் போன்று ஓர் எல்லைக்குள் அடக்கி வைத்தல் எத்துணைப் பேதைமை! உண்மையைக் கண்டறிய அவாவும் ஒருவனை இங்ஙனம் தடுப்போன் மனித வர்க்கத்தின் விரோதியே ஆவன். 'இதை நம்பு; உனக்கு மோட்சம் கிடைக்கும்,' என்பவன், தன்போன்ற மக்கட் கூட்டத்தையே அழிக்கும் கொடியவனாவன்.

சுதந்தரம் இன்றி உண்மையை உற்றுணர்தல் இயலாது. சுதந்தரமாவது யாது? அது வேற்றுமை இன்றி, யாவரிடத்தும் சிறிதும் அச்சமின்றி, விஷயங்களை ஆராயத் துணிதல் என்க. இங்ஙனம் ஒருவன் முழுச் சுதந்தரத்தோடு தனக்கு உண்மையுள்ளவனாகித் தன்னிடத்தே நம்பிக்கையுடையவனாய், விஷயங்களை ஆராயின், உண்மை இன்னதென்பதை உணர்வன். இன்னணம் உண்மை காண்டலே மனிதனது முதற்கடமை;

---

* *அறிவுச் சுடர், 1938, பக். 31 - 36.*

மனித சமூகத்தைத் தூய்மைப்படுத்துவதும் இது. இதுவே சுதந்தரம். இதனைச் செய்யாது, பிறர் சொற்களுக்குப் பயந்து விஷயங்களை ஆராயாமல் அவற்றைப் பின்பற்றுவோன் 'அறிவிலி' என்பதில் ஐயமுண்டோ?

வேத வார்த்தைகளாய் இருப்பினும் மனிதர் வார்த்தைகளாய் இருப்பினும் மனிதர், நடுநிலையினின்றும் அவற்றை ஆராய்ந்து, உண்மை கண்டு, கொள்ள வேண்டுவனவற்றைக் கொண்டு, தள்ள வேண்டுவனவற்றைத் தள்ளலே முறை. அச்சம், சாபம், விருப்பு, வெறுப்பு என்பவை இன்றி, விஷயங்களை ஆராய்ந்து, உண்மை காண்பவனே உண்மை மனிதன். அவன், தனக்கு உண்மை எனப் படாதவற்றை உதறித் தள்ளிவிடுவான்; அவை, தன் முன்னோர் அபிப்பிராயம் ஆயினும் சரி; அவன் பொருட்படுத்த மாட்டான்; அவனது மனச்சாட்சிக்கு உகந்ததல்லாத எதனையும் அவன் ஒப்புக்கொள்ள மாட்டான். அவனே மனித வர்க்கத்திற் சிறந்தவன்.

ஓர் அசுரன் பூமியைப் பாயாகச் சுருட்டிக்கொண்டு கடலுள் ஒளிந்துகொண்டான் என்று கூறப்படுகின்ற கதையை நம் மூதாதையர் நம்பி இருந்தனர். அதனை இன்று நாம் நம்புகின்றோமா? இல்லை. ஏன்? நாம் பூகோள சாத்திரம் வாசித்திருக்கிறோம்; பூமி உருண்டை வடிவமுடையது என்பதை அறிந்திருக்கிறோம்; பூமி தட்டையாகவோ பாயாகவோ ஒரு காலத்திலும் இருந்திராதென்பதை அறிவோம். எனவே, 'இஃது ஒரு பொய்க் கதை' என்னும் எண்ணத்தைப் பெறுகிறோம். இங்ஙனம் ஒவ்வொன்றையும் நம் பகுத்தறிவைக் கொண்டு ஆராய்ந்து, உண்மையைக் கோடலே கற்றதனாலாய பயன் என்க.

மூளை விருத்தி செய்யப்படல் வேண்டும்; சிந்தனா சக்தி பெருகுதல் வேண்டும்; பரந்த நோக்கத்தையும் விரிந்த சிந்தையையும் வளர்த்தல் வேண்டும்; பகுத்தறிவைக் கொண்டு ஒவ்வொன்றையும் ஆராய்தல் வேண்டும். எதையும் நம்பிவிடுதலோ, நம்பிப் பின்பற்றுதலோ பெருந்தவறு; இங்ஙனம் பகுத்தறியும் முறையால் மனிதன் சுதந்தர நிலையை அடைகிறான். வீணான விஷயங்கட்கு அவன் அச்சப்படுதல் இல்லை; பல நோய்கள் தன்னை அணுகாதபடி அவன் காத்துக் கொள்ளக்கூடும்; தன் வாழ்க்கையை உயர்த்திக்கொண்டே போக இயலும். இதுவன்றோ உயரிய இலட்சியம்! உயரிய வாழ்க்கை! ஆனந்த நிலை!

மனிதன் ஒவ்வொன்றையும் ஆராய்ந்து உண்மையைக் கண்டு நடப்பானாயின், உலகில் தீமை ஏது? பஞ்சமாபாதகம் ஏது? நரகம் ஏது? என்றும் எங்கும் இன்பமே அன்றோ? உலகெலாம் இன்பமான பேரொளியாய் இலங்குமன்றோ? உண்மையைக் காண்பவன் தெய்வங்கள் எனக் கூறப்படுவனவற்றுக்கும் மகாத்துமாக்களுக்கும் பிறர்க்கும் நரகத்துக்கும் அஞ்சவேண்டுவதில்லை. அவன், இப்பரந்த உலகில் சுதந்தர வீரனாக விளங்குவான்; உலகத்தின் உண்மைத் தோற்றத்தினை உணர்வான்; தானே தனக்கு நிகர் என ஒளிர்வான்.

பகுத்தறிவுள்ள மனிதரை வசீகரிக்கத் தக்க மதம், 'உண்மையான விஷயங்கள்' என்னும் செங்கற்கள்மீது கட்டப்பட்ட கவினுறு மாளிகையாகக் காட்சியளித்தல் வேண்டும். அம் மதத்தை மனிதன் தானாகத் தழுவ வேண்டுமே தவிர, மதம் மனிதனைத் தழுவுவதாக இருத்தல் கூடாது.

குழந்தைகளைத் தங்கட்குத் தோன்றும் சந்தேகங்களைக் கேட்குமாறு பெற்றோரும் ஆசிரியரும் தூண்டுதல் வேண்டும். அவர்கள் ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் கேட்கும் கேள்விகட்குப் பெற்றோரும் ஆசிரியரும் விடை பகர்தல் வேண்டும். ஒவ்வொரு வீடும் - ஒவ்வொரு பள்ளிக்கூடமும் மனத்துக்கு வேலையைத் தரும் பள்ளியாக அமைதல் வேண்டும். வாழ்க்கையில் உள்ள ஒவ்வொரு காட்சியையும் சிறுவர் சிறுமியர் விளக்கமாகக் காணுமாறு அவற்றின் மூடத் திரைகளைப் பெற்றோரும் மற்றோரும்

நீக்குதல் வேண்டும்; உண்மை வாழ்க்கை இன்னதென்பதை இளைஞர்க்கு உணர்த்தல் வேண்டும். உண்மையே வடிவமாய் இலங்கும் இயற்கையைப் பரிசோதனை புரிய அவர்களை விடுத்தல் வேண்டும். 'இயற்கையே அறம்! இயற்கையே பொருள்! இயற்கையே இன்பம்! இயற்கையே வீடு!' என்பதை இளைஞர் இனிதுணருமாறு செய்வித்தல் வேண்டும்.

அன்பின் தோற்றுவாயாக இலங்கும் அன்னை, தன் மைந்தனுக்கு உண்மைக் கதைகளையும் உண்மைச்செய்திகளையும் எடுத்துக் கூறுவாளேயாயின், அம்மைந்தன் உண்மை அறிவோடு வளருவான்; எங்கும் உண்மையை ஆய்வான்; பள்ளி ஆசிரியர் உண்மைச் செய்திகளையும் உண்மைக் கதைகளையும் உணர்த்துவராயின், அச்சிறுவன் 'உண்மை' நாடும் உத்தம மாணவனாக ஒளிர்வான்; பின்னர், உண்மை மனிதத்தன்மையை எய்துவன்; உண்மை வாழ்க்கையைப் பெறுவன்; உண்மைச் சோதியில் ஒளிர்வன். அந்நிலையில் உலகமே உண்மையின் வடிவமாக அமையுமன்றோ!

உலகில் உள்ள ஒவ்வொருவரும் இங்ஙனம் உண்மையை உணர்ந்து, பொய் யானவையும் பகுத்தறிவுக்கு ஒவ்வாதனவுமாகிய செய்திகளை மனத்தினின்று வெளி யேற்றிச் செவ்விய நடத்தை, பேச்சு, வாழ்க்கை உடையராய் வாழ்வாராயின், இவ்வுலகமே சுவர்க்கமாக இலங்காதோ!

❖ ❖ ❖

அரிய சொற்களும் பிறமொழிச் சொற்களும்*

கட்டுரை

1. அரிய சொற்கள்

கீழ்வரும் பழந்தமிழ்ச் சொற்களுள் மிகச் சிலவே இன்று வழக்கில் உள்ளன; எஞ்சியவை வழக்கிறந்தன. அவற்றின் பொருள் நச்சினார்க்கினியர் உரைப்படி இங்குத் தரப்படுகின்றன.

1. வரை - கண் (கணு); கண்களையுடைமையால் ஆகுபெயராய் மூங்கிற்குப் பெயராயிற்று; அம்மூங்கிலை உடைமையின் இருமடியாகு பெயராய் மலையைக் குறிக்கலாயிற்று (திருமுருகு. அடி, 12, நச். உரை).
2. நியமம் - அங்காடித்தெரு (திருமுருகு. அடி, 70). இருபெரு நியமம் - நாளங்காடி, அல்லங்காடி (ம. கா. அடி, 365). விழுப்பெரு நியமம் - சீரிய பெரிய அங்காடித் தெரு (மலைபடு. அடி, 480).
3. செற்றம் - பகைமை. நெடுங்காலம் நிகழ்வது செற்றம் (திருமுருகு. அடி, 132). சினம் - கோபம் நீட்டித்து நிற்பது சினம் (திருமுருகு. அடி, 135).
4. காழ் - வடம் (அடி, 204).
5. மள்ளன் - இளமைப்பருவத்தினன் (அடி, 262).
6. சாறு - விழா (அடி, 283).
7. சிதாஅர் - சீரை (பொ. ஆ. படை, அடி, 81).
8. வயின் - திடர் (அடி, 180).
9. மூடை[2] - குதிர், கோட்டை (அடி, 245).
   மூடை - பொதி (ப. பாலை, அடி, 137).
10. கோடியர் - கூத்தர் (சி. ஆ. படை, அடி, 125).
11. முதுவோர் - அரசன், ஆசிரியன், தாய், தந்தை, தன்முன் முதலியோர் (அடி, 231).
12. இளையோர் - வீரர் (அடி, 232).
13. வயவர் - படைத்தலைவர் (அடி, 249).
14. கொள்ளை - விலை (பெ. ஆ. படை, அடி, 64).
15. மிரியல் - மிளகு (அடி, 78). இச்சொல் சங்க காலத்திலே அருகி வழங்கப்பட்டது; இன்று தெலுங்கில் மிரியாலு என்று வழங்கப்படுகிறது.
16. வாடுன் - (வாடு ஊன்), உப்புக் கண்டம்; உலர்த்தப்பட்ட இறைச்சி. (அடி, 100).

---

*டாக்டர் மா. இராசமாணிக்கனார், பத்துப்பாட்டு ஆராய்ச்சி, 1970 (முதற்பதிப்பு), பக். 706 - 722.

17. அம்பர்[3] - மற்றை நிலம்; பாலை நிலத்திற்கு அப்பாற்பட்ட குறும்புள்ள இடம் என்பது இங்குப் பொருள் (அடி, 117).

18. நுகம் - கணையமரம் (அடி, 127). இது கதவைத் தாழிட்டு மேலும் பாதுகாப்புக்காகக் குறுக்கே கதவினை அடுத்து இடப்படுவது.

19. மிளை - காவற்காடு (அடி, 126). இது பெரும்பாலும் அகழியைச் சூழ இருந்தது. இது கோட்டைக்குப் பாதுகாவலாய் இருந்த காடு.

20. நகர் - வீடு (அடி, 121). (பொன்துஞ்சு வியல்) நகர் - கோயில் (அரண்மனை) (அடி, 438-40). (நெடு) நகர் - (பெரிய) மாளிகை (ம. கா. அடி, 169). நகரம் - (அமணர்) கோயில் (அடி, 484). (நெடு) நகர் - (பெரிய) ஊர்[4] (அடி, 556).

21. வரைப்பு[5] - மதில் (பெ. ஆ. படை, அடி, 122).

22. குறும்பு[6] - அரண் (அடி, 129).

23. அணல் - தாடி (அடி, 138).

24. நொடை - விலை (அடி, 141).

25. சுமடு - இஃது இப்பொழுது 'சும்மாடு' எனப்படுகிறது. (அடி, 159).

26. மாறும்[7] - விற்கும் (அடி, 160).

27. தொடுதோல் - செருப்பு (அடி, 169).

28. கா - இஃது இன்று 'காவடி' எனப்படுகிறது. (அடி, 171).

29. ஓரி - தலை மயிர் (அடி, 172).

30. வன்புலம்[8] - முல்லை நிலம் (அடி, 206).

31. குப்பை[9] - பொலி (அடி, 240).

32. நொடி - சொல்லுதல் (அடி, 459).

33. புரிசை[10] - மதில் (மு. பா. அடி, 27).

34. பருவரல் - மனத்தடுமாற்றம் (அடி, 21).

35. நந்துதல்[11]- அவிதல் (அடி, 49).

36. நடுநாள்[12] - நடுயாமம் (அடி, 50).

37. கன்னல் - நாழிகை (அடி, 58). (தொகுவாய்க்) கன்னல் - (குவிந்த வாயையுடைய) கரகம் - கூஜா (நெடுநல். அடி, 65).

38. ஞாலம் - உலகம் (ம. கா. அடி, 4). ஞால் - தொங்கு; தொங்குதல். தொங்குதல் என்னும் தொழிற்பெயர் தொழிலாகுபெயராய்த் தொங்குதலையுடைய உலகிற்கு ஆகிவந்தது. உலகம் ஒரு பற்றுக்கோடுமின்றி அந்தரத்தில் தொங்குகிறது என்னும் உண்மையைச் சங்ககாலச் சான்றோர் அறிந்தனர் என்பது இதனால் தெரிகிறதன்றோ?

39. குழும்பு - திரள் (அடி, 24).

40. கலியாணர்[13] - பெருக்கினையுடைய புதுவருவாய் (ம. கா. அடி, 118); மனச்செருக்கு எழுதற்குக் காரணமான புதுவருவாய் (ப. பாலை. அடி, 32).

41. முருகு - தெய்வத்தன்மை; ஆகுபெயராய் முருகனை உணர்த்தும் (ம. கா. அடி, 181).

42. அவல் - பள்ளம் (அடி, 240).

43. எந்திரம்[14] - ஆலை (அடி, 258).

44. பரதர்[15] - செட்டிகள் (அடி, 317).

45. புழை - சாளரம் (அடி, 358).

46. புழல் - பண்ணியாரம்[16] (அடி, 395).
47. பிடகை - பூந்தட்டு (அடி, 397).
48. வந்திகை[17] - கை வந்தி (அடி, 415).
49. தொய்யில் - எழுதும் குழம்பு. இது கொண்டு மகளிர் மார்பில் கொடி எழுதுதல் மரபு (அடி, 416).
50. அரமியம் - நிலா முற்றம் (அடி, 451).
51. சிமிலி - நூல் உறி (அடி, 483).
52. சேயர் - புற மண்டலத்தார் (அடி, 571).
53. நணியர் - உள்ளூரார் (அடி, 571).
54. சாணம் - தழும்பு (அடி, 593).
55. கூவியர் - அப்ப வணிகர் (அடி, 627).
56. கவயம் - கவசம் (அடி, 740).
57. வறை - பொரிக்கறி (அடி, 756).
58. குய் - தாளிப்பு (அடி, 757).
59. மதலைப்பள்ளி - கபோதகத்தலை, வீட்டின் ஓர் உறுப்பு (நெடுநல். அடி, 48).
60. தடவு - இந்தளம் - தூபமுட்டி, (அடி, 66).
பகுவாய்த் தடவு - பகுத்தாற் போன்ற வாயையுடைய இந்தளம் (அடி, 64-6).
61. வம்பு - கச்சு (மார்பில் கட்டப்படுவது) (அடி, 150).
62. சூரல் - பிரம்பு (கு. பா. அடி, 42).
63. பாயம் - மனவிருப்பம் (அடி, 58).
64. பாணி - காலம் (அடி, 152).
65. வயிரியர்: வயிர் - கொம்பு; வயிரியர் - கொம்பு போன்ற இசைக்கருவிகளை இசைப்பவர் (அடி, 219).
66. பணவை - பரண் (அடி, 226).
67. பழு - பிசாசு (அடி, 259).
68. பாந்தள் - பெரும்பாம்பு (அடி, 259).
69. பஃறி - ஓடம், படகு (ப. பாலை. அடி, 30).
70. பாக்கம் - சீறூர் (ப. பாலை, அடி, 27; மலைபடு. அடி, 162).
71. துச்சில் - குடியிருப்பு (ப. பாலை, அடி, 58).
72. சூழ்தல் - பண்ணுதல் (அடி, 102).
73. படிக்கால் - ஏணி (அடி, 142).
74. புழை - சிறுவாயில் / வாயில் - பெருவாயில் } (அடி, 144).
75. மஞ்சிகை - கொட்டகாரம் (அடி, 163).
76. கூளி - ஆண்பேய் / பேய்மகள் பெண்பேய் } (அடி, 259-60).
77. மருங்கு - குலம், மரபு (அடி, 270).
78. தொண்டு - ஒன்பது (மலைபடு. அடி, 21).
79. வட்டி[18] - கடகம், பனையோலைக் கூடை (அடி, 152).
80. பொம்மல் - சோறு (அடி, 169).

81. பிணவு நாய் - பெண் நாய் (அடி, 177).
முடுவல் - பெண் நாய் (அடி, 563)
கடுவன்[19] நாய் - ஆண் நாய்.

82. அயினி - உணவு (அடி,467).

83. நிழத்தல் - நொக்குதல் (உண்டு குறையச் செய்தல்) (அடி, 193).

84. பள்ளி[20] - இடைச்சேரி (அடி, 451).

85. பழையர் - கள் விற்பவர் (அடி, 459).

2. பிறமொழிச் சொற்கள்

இந்தோ - ஆரிய மொழிகள்

தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு முதலிய சங்க நூல்களில் தமிழல்லாத பிறமொழிச் சொற்கள் சில இடம் பெற்றுள்ளன. அவை பெரும்பாலும் சம்ஸ்கிருதம் எனப்படும் வடமொழிச் சொற்களும் பிராக்கிருத மொழிச் சொற்களுமே யாகும். ஆதலின், அவற்றின் வரலாற்றை ஓரளவு இங்கு அறிதல் நலம் பயக்கும். அவற்றின் வரலாற்றை அறிந்த பின்பு அவை எங்ஙனம் தமிழில் கலந்தன என்பதைக் காண்போம்.

வடமொழி என்று சொல்லப்படும் சம்ஸ்கிருதம் **இந்தோ ஆரிய மொழி** எனப்படும். அது தன் வளர்ச்சியில் மூன்று வகையாகப் பிரிக்கப்படும். அவற்றுள் காலத்தால் முற்பட்டது **பழைய இந்தோ ஆரியம்** அல்லது சம்ஸ்கிருதம் எனப் பெயர் பெறும். கீழ்வரும் மூவகை நூல்கள் பழைய இந்தோ - ஆரியத்தைச் சேர்ந்தவையாகும்.

1. இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்பன நான்கு வேதங்கள்.
இவற்றின் காலம் ஏறத்தாழக் கி. மு. 1200 - 800.

2. சடங்குகளைப் பற்றிப் பேசும் உரைநடை நூல்கள் **பிராமணங்கள்** எனப்படும். இவற்றின் காலம் ஏறக்குறையக் கி. மு. 800 - கி. மு. 500.

3. பெருவேள்விகளைப் பற்றிப் பேசும் **சிரவுத சூத்திர நூல்களும்** வீட்டுச் சடங்குகளைப் பற்றிப் பேசும் **கிருகிய சூத்திர நூல்களும்** ஒருவகை. இவற்றின் காலம் ஏறத்தாழக் கி. மு. 600 - கி. மு. 300.

எனவே, இம்மூன்றின் காலமும் ஏறத்தாழக் கி. மு. 1200 - கி. மு. 300 என்னலாம். இந்நூல்களில் உள்ள மொழி கி. மு. 4ஆம் நூற்றாண்டினரான **பாணினியால்** இலக்கண வரம்புக்கு உட்படுத்தப்பட்டது.

வடவிந்தியாவில் பொதுமக்கள் பேசிவந்த மொழிகள் பல. அவை வடமொழியின் வழிவந்தவை. அவை **பிராக்கிருத மொழிகள்** எனப்பட்டன. அவை **இடைக்கால இந்தோ – ஆரிய மொழிகள்** என்று மொழி ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். அவை மூன்று கால நிலைகளை உடையவை.

1. இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்பன நான்கு வேதங்கள். இவற்றின் காலம் ஏறத்தாழக் கி. மு.1200 - 800.

2. சடங்குகளைப் பற்றிப் பேசும் உரைநடை நூல்கள் **பிராமணங்கள்** எனப்படும். இவற்றின் காலம் ஏறக்குறையக் கி. மு. 800 - கி. மு. 500.

3. பெருவேள்விகளைப் பற்றிப் பேசும் **சிரவுத சூத்திர நூல்களும்** வீட்டுச் சடங்குகளைப் பற்றிப் பேசும் **கிருகிய சூத்திர நூல்களும்** ஒருவகை. இவற்றின் காலம் ஏறத்தாழக் கி. மு. 600 - கி. மு. 300.

எனவே, இம்மூன்றின் காலமும் ஏறத்தாழக் கி. மு. 1200 - கி. மு. 300 என்னலாம். இந்நூல்களில் உள்ள மொழி கி. மு. 4ஆம் நூற்றாண்டினரான **பாணினி**யால் இலக்கண வரம்புக்கு உட்படுத்தப்பட்டது.

வடவிந்தியாவில் பொதுமக்கள் பேசிவந்த மொழிகள் பல. அவை வடமொழியின் வழிவந்தவை. அவை **பிராக்கிருத மொழிகள்** எனப்பட்டன. அவை **இடைக்கால இந்தோ – ஆரிய மொழிகள்** என்று மொழி ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். அவை மூன்று கால நிலைகளை உடையவை.

1. அவற்றுள் முதற்காலத்தது **பாலி மொழி**. அது கிறிஸ்துவுக்கு முற்பட்ட நூற்றாண்டுகளில் சிறப்புற்றது. **பௌத்த சமய நூல்கள்** அம் மொழியிலேதான் எழுதப் பட்டன. அதே காலத்தில் பல பகுதிகளில் வளர்ச்சி யடைந்த வேறு ஆரிய மொழிகள் அசோகன் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.

2. **இலக்கியப் பிராக்கிருத மொழி** கிறிஸ்துவுக்குப் பின்பே நன்கு வளர்ச்சி யடைந்தது. அக்காலப் பிராக்கிருத நாடக நூல்களும் **சமண சமய நூல்களும்** அம்மொழியிலேதான் எழுதப்பட்டன. அக் காலத்தில் அம்மொழிக்கு இலக்கணமும் வகுக்கப்பட்டது.

3. கி. பி. 10ஆம் நூற்றாண்டில் அபபிரமஸா (Apabhramsa) மொழியில் சில நூல்கள் எழுதப்பட்டன. இம்மொழி வங்காளி, இந்தி, குசராத்தி, மராத்தி முதலிய இக்கால இந்தோ - ஆரிய மொழிகளின் தோற்றத்திற்கு முற்பட்ட தாகும்.[21]

இந்தோ - ஆரிய மொழிகளில் திராவிட மொழியின் செல்வாக்கு

இருக்கு வேதத்தின் காலம் ஏறத்தாழக் கி. மு. ஆயிரம் என்னலாம். வேதங்கள், பிராமணங்கள் முதலிய முற்கால இந்தோ - ஆரிய மொழி நூல்களில் **பல நூற்றுக் கணக்கான திராவிடச் சொற்கள் உள்ளன**. அவை பாலி மொழியிலும் உள்ளன. முற்கால இந்தோ - ஆரியம் இங்ஙனம் திராவிடச் சொற்களைக் கடன் பெற்ற காலம் கிறிஸ்து பெருமானுக்கு முற்பட்ட காலமாகும்.

வேதங்கள் செய்யப்பட்ட காலத்தின் இறுதிக்கும் சம்ஸ்கிருதம் என்னும் பெயரில் வடமொழி செப்பம் செய்யப்பட்டதற்கு முன்பும் இருந்த **இடைக்காலத்திலேதான்** (கி. மு. 800 - கி. மு. 300) திராவிட மொழிச் சொற்கள் மிகுதியாய் வடமொழி நூல்களில் இடம் பெற்றிருத்தல் வேண்டும். மௌரியர் காலத்துக்கு முன்பு வடவிந்தியாவுக்கும் தென்னிந்தியாவுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டாகவில்லை. ஆதலால், இன்று தென்னிந்தியாவில் உள்ள திராவிட மொழிகளின் சொற்கள் வடவிந்தியாவில் செய்யப்பட்ட வடமொழி நூல்களில் இடம்பெற்றன என்று கூறுதல் இயலாது. மேலும், **மௌரியர் காலத்துக்கு முன்பே திராவிடச் சொற்கள் வடமொழியில் புகுந்துவிட்டன.**

கங்கைச் சமவெளியின் நடுவிடத்தில் இந்நுழைவு ஏற்பட்டதெனக் கொள்ளின், அப்பகுதியில் வாழ்ந்த ஆரியர்க்கு முற்பட்ட மக்களுள் திராவிடமொழி பேசியவர் பலராய் இருந்திருத்தல் வேண்டும். அந்நிலையிலேதான் திராவிடச்சொற்கள் அங்குச் செய்யப்பட்ட வடமொழி நூல்களில் புகுந்திருத்தல் இயல்பு என்று கூறுதல் பொருத்தமாகும். இன்றும் வடவிந்தியாவில் **குருக், மால்ட்டோ** (Malto) என்னும் திராவிட மொழிகள் சிறிய திட்டுகளாய் இருத்தல், முன்பு **அங்குப் பெரிய அளவில் திராவிடமொழி பேசப்பட்டு** வந்தது என்பதற்கு ஏற்ற சான்றாகும்.

இருக்கு வேதத்தில் உள்ள பின்வரும் சொற்கள் திராவிட மூலத்தையுடையன என்று கூறலாம்: அணு, அரணி, கடுக, கபி, கர்மரா, கலா (கலை), கால (காலம்), கிதவ, குட (குடிசை), குணாரு, குண்ட, கண (கணம் - கூட்டம்), நானா, நீல (நீலம்), நிஹார (மேகம், பனி), புஷ்கர (தாமரை), புஷ்ப, பூஜன (பூசை), பல (பழம்), பில (பிலம்), பீஜ (விதை), மயூர (மயில்), ராத்ரி, ரூப, சாயம் (மாலைப்பொழுது), வல்கு. திராவிட மொழிகள் இருக்குவேத வடமொழி எழுத்துகளின் ஒலியையும் இடைக் கால வடமொழி எழுத்துகளின் ஒலியையும் ஓரளவு மாற்றிவிட்டனவென்னலாம்.[22]

இங்ஙனம் இருக்கு வேதத்தில் உள்ள திராவிடச் சொற்களே, அது செய்யப்பட்ட காலத்தில் **வடமேற்கு இந்தியாவில் திராவிட மொழி இருந்தது** என்பதற்கு எடுத்துக்காட்டாகும். பலுச்சிஸ்தானத்திலுள்ள **பிராகுயி** என்னும் மொழி, வடமேற்கு இந்தியாவில் இருந்த திராவிட மொழியின் இக்காலப் பிரதிநிதியாகும்.[23]

ஒருமொழி பேசுவோர் அயல்மொழியாளருடன் கலந்து பழகும்போது, முன்னவர் அதுகாறும் அறியாத பொருள்களைப்பற்றிய சொற்கள் பின்னவர் மொழியில் இடம் பெறல் இயல்பு. அவ்வாறே பின்னவர் அதுகாறும் அறிந்திராத பொருள்களைப் பற்றிய முன்னவர் மொழிச் சொற்கள் பின்னவர் மொழியில் இடம் பெறல் இயல்பு. இவற்றோடு பேச்சு வழக்கில் மிகுதியான சொற்கள் இடம்பெறல் இயல்பாகும். இஃது எல்லா மொழிகட்கும் நேரும் இயற்கை நிகழ்ச்சியாகும். இந்தோ - ஆரியர் திராவிடரிடமிருந்து சில சொற்களைப் பெற்றுக் கொண்டாற் போலவே, தமிழகம் வந்த வேதியர், பௌத்தர், சமணர் கூட்டுறவினால் திராவிடரும் சில இந்தோ - ஆரியச் சொற்களை ஏற்றுக் கொண்டனர். இந்த உண்மையைச் சங்ககால நூல்களிற் காணலாம்.

தமிழகத்தில் பிறமொழியாளர் நுழைவு

வேதங்களில் வல்ல வடமொழியாளர் தமிழகம் வந்த காலம் ஏறத்தாழக் கி. மு. 7 ஆம் நூற்றாண்டாகலாம் என்பது பேராசிரியர் வி. அரங்காசாரியார் கருத்தாகும்.[24] திகம்பர சமணர் தமிழகம் வந்த காலம் ஏறக்குறையச் சந்திரகுப்த மௌரியன் இறுதிக்காலம் என்னலாம்.[25] பௌத்தம் தமிழகத்தில் நுழைந்த காலம் அசோகன் காலமாகும். (கி. மு. 273-232).[26] வேதியர் தமிழகத்தில் வேதநெறியைப் பரப்பினர். பின்பு வந்த சமணர் சமண சமயத்தையும் பௌத்தர் பௌத்தத்தையும் பரப்பினர்.

வேதியர் செல்வாக்கு

இவருள் முற்பட வந்தவர் வேதியர் ஆதலின், அவர்தம் செல்வாக்கு, சமணரும் பௌத்தரும் தமிழகம் வருவதற்கு முன்பே தமிழகத்தில் நன்கு வேரூன்றி வளரலாயிற்று. ஏறத்தாழக் கி. மு. 300இல் இயற்றப்பட்ட தொல்காப்பியத்திலேயே வடசொற்களைத் தமிழிற் சேர்த்துக்கொள்ள விதி கூறப்பட்டுள்ளது.[27] வடவர் செல்வாக்கும் தொல்காப்பியர் காலத்தில் ஓரளவு தமிழகத்திற் பரவியிருந்ததற்கு, 'அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கம்' முதலிய சில நூற்பாக்கள்[28] சான்றாகும். வேதநூல்களின் விதிப்படி தமிழரசர் வேள்வி செய்தனர் என்பதற்கு **இராச சூயம் வேட்ட** பெருநற்கிள்ளி என்ற பெயரே (புறம். 16) சிறந்த எடுத்துக்காட்டாகும். **செங்குட்டுவன்** மாடலன் சொற்படி **வேள்வி செய்தான்** என்று சிலப்பதிகாரம் செப்புகிறது. வேள்வி செய்வதற்குப் பல யாகசாலைகளை அமைத்துக் கொடுத்த பாண்டியன் **பல்யாகசாலை** முதுகுடுமிப் பெருவழுதி எனப் பெயர் பெற்றான் (புறம். செய். 6, 9, 12, 15, 64). போர்க்காலத்திலும் பிராமணர்க்குப் பாதுகாப்பு வழங்கப்பட்டமை புறநானூற்றால் (செ.9) அறியலாம். இவை அனைத்தையும் நோக்க, தொல்காப்பியர்க்குப் பின்பு தோன்றிய பத்துப்பாட்டுள் வடவர் செல்வாக்கும் வடசொற்களும் மிகுந்து காணப்படல் இயல்பே.

ஒய்மானாட்டை ஆண்ட நல்லியக்கோடன், புலவரைப் போலவே **அந்தணரையும் வரவேற்றுப்** பொருளுதவி செய்தான். அவனது நாட்டிலிருந்த **ஆமூர்** என்பது அந்தணர் ஊராய் விளங்கியது. தொண்டை நாட்டில் திரையன் ஆட்சியில் **மறையவர் உறைபதி** கடற்கரைப் பட்டினத்துக்கருகில் இருந்தது. அவர்கள் வேள்விகள் செய்தார்கள். பாண்டியர் தலைநகரான மதுரையில் வைகறையில் **அந்தணர்** மறை ஓதினர். திரையன் மீது பெரும்பாணாற்றுப்படையையும் கரிகாலன்மீது பட்டினப்பாலையையும் பாடிய **கடியலூர் உருத்திரங்கண்ணனார் பிராமணர்**. நன்னன்மீது கூத்தராற்றுப்படையைப் பாடிய பெருங்குன்றூர்ப் **பெருங்கௌசிகனார் பிராமணர்**.[29] முக்கோல் அந்தணராகிய துறவியர் தமிழகத்தில் இருந்தனர் (மு பா. அடி, 37-8). அவர் அனைவரும் வடமொழி வல்லுநர்.

முச்சமயத்தார் செல்வாக்கு

தென்னிந்தியாவில் புகுந்த பௌத்தம், **ஈனயான பௌத்தமாகும்**. அங்ஙனமே இங்குப் புகுந்த சமணம் **திகம்பர சமணமாகும். வைதிகசமயமும்** பௌத்தமும் சமணமும் தமிழ்நாட்டுப் பேரூர்களில் பரவியிருந்தன. மதுரையில் அந்தணர் பள்ளி, பௌத்தர் பள்ளி, சமணர் பள்ளி என்பவை இருந்தன. அவற்றுக்குரிய அடியாரும் இருந்தனர் என்பதை மதுரைக்காஞ்சியால் நன்கறியலாம். கச்சியிலும் இச்சமயங்கள் வேரூன்றி இருந்தன. இவற்றுக்குரிய விழாக்கள் நடைபெற்றன என்பதைப் பெரும் பாணாற்றுப் படையால் அறியலாம்.

இளம்போதியார், தேரதரன், சிறுவெண் தேரையார் என்ற பெயர் கொண்ட சங்ககாலப் புலவர் பௌத்த சமயத்தினராவர். பௌத்தர் பிராக்கிருத மொழிகளுள் ஒன்றான **பாலி மொழியில்** வல்லவர். சமணர் பிராக்கிருத மொழிகளுள் ஒன்றான **அர்த்தமாகதி** என்னும் மொழியில் வல்லுநர். ஆதலால், அந்தணர் சமயப் பிரசாரத்தால் வடமொழிச் சொற்கள் சங்ககாலத் தமிழில் நுழைந்தன; பௌத்தர் சமயப்பிரசாரத்தால் பாலி மொழிச் சொற்கள் நுழைந்தன; சமணர் சமயப் பிரசாரத்தால் அர்த்தமாகதி மொழிச் சொற்கள் நுழைந்தன. வேதியர் மற்ற இரு திறத்தாரையும்விட நெடுங்காலம் தமிழகத்தில் இருந்தமையால், வடசொற்களே தமிழில் மிகுதியாய் நுழைந்தன என்னலாம்.

இனி, பத்துப்பாட்டுள் வந்துள்ள பிறமொழிச் சொற்களைக் காண்போம்.

பொருநராற்றுப்படை

தேஎம் - தேசம், தேயம், தேஎம் (134)*
பலி - படையல் (183)

சிறுபாணாற்றுப்படை

ஆரம் - மாலை (2)
பதம் - செவ்வி (9)
கலாபம் - (மயில்) தோகை (15)
இமயம் - இமயமலை (48)
தெய்வம் - கடவுள் (73)
நாகம் - பாம்பு (96)
சாவம் - வில் (98)
அமிழ்து - அமிர்தம் (101)
பரிகாரம் - வாழ்க்கைக்கு வேண்டுவன (104)
சமம் - போர் (112)

தமனியம் - பொன் (147)

கோபம் - இந்திரகோபம் (தம்பலப்பூச்சி) (168)

நிதியம் - செல்வம் (249)

நேமி - உருளை (253)

பெரும்பாணாற்றுப்படை

உலகம் (32)

*அத்தம்** - வழி (39)*

படம் - சட்டை (69)

சாபம் - வில் (121)

பூதம் - பூதகணத்துள் ஒன்று (235)

குமரி - அழியாத்தன்மை (247)

எந்திரம் - சர்க்கரை ஆலை (260)

*சாடி** - தாழி (280)*

மண்டிலம் - வட்டம் (442)

கின்னரம் - ஒருவகைப்பறவை (494)

முல்லைப்பாட்டு

பார்ப்பான் - பிராமணன் (37)*

யவனர் - ஐயோனியர், கிரேக்கர் (61)

மிலேச்சர் - அநாகரிகர்,[30] அயல் நாட்டவர் (66)

விசயம் - வெற்றி (91)

மதுரைக்காஞ்சி

யூபம்[31] - குறைத்தலைப்பிணம் (27)

சலம் - மாறுபாடு (112)

*நியமம்** (நிகமெ) - வணிகநகரம் (365)*

ஆதி - குதிரையின் (ஆதி) கதி (390)

விலோதம் - கொடி (449)

அரமியம் - நிலாமுற்றம் (451)

அந்தி - சந்தி (460)*

தூரியம் - வாத்தியம் (460)

வேதம் - மறைகள் (468)

சாவகர்[32] - அறவுரையைக் கேட்பவர் (476)

ஆவுதி - யாகம் (494)

*பண்டம்** (பாண்டம்) - பொருள் (503)*

*பண்ணியம்** (பண்யம்) - பொருள் (506)*

*உவமம்** (ஒபமம்) - உவமை (516)*

ஓணம் - நட்சத்திரத்தின் பெயர் (591)

மோதகம் - இனிப்பு அப்பம் (626)

யாமம் - சாமம் (658)

சூதர் - அரசர் முன்பு நின்று ஏத்துவோர் (670)

மாகதர் - அரசர் முன்பு இருந்து ஏத்துவோர் (670)

வைதாளிகர் - அரசரைப் புகழ்ந்து பாடுவோருள் ஒரு வகையினர் (671)

கங்கை - கங்கையாறு (696)

பிண்டி - அசோகமரம் (701)

ஆணை** (ஆணா) - கட்டளை (761)

நெடுநல்வாடை

சாலேகம் - சன்னல் (125)

உரோகிணி - ஒரு நட்சத்திரத்தின் பெயர் (163)

குறிஞ்சிப்பாட்டு

வண்ணம்* - வர்ணம் (31)

ஏமம்* - க்ஷேமம் (32)

அமயம் - சமயம் (45)

பளிங்கு** - (பளிகொ) (57)

திலகம் - ஒரு வகை மரம் (74)

சிந்துவாரம் - ஒரு வகை மரம் (89)

நந்தி - ஒரு வகைச்செடி (91)

தகரம்** - மயிர்ச்சாந்து (108)

பட்டினப்பாலை

காமம் - ஆசை (39)

முனிவர் - துறவியர் (54)

மது - குடி வகை (108)

அமரர் - தேவர் (184)

புண்ணியம் - நன்மை (203)

திருமுருகாற்றுப்படை

கிண்கிணி - காற்சதங்கை (13)

தாது - மகரந்தப் பொடி (36)

பருமம் - முப்பத்திரண்டு வடம் கொண்ட மேகலை (146)

கிழக்கு இந்தியாவில் **முண்டா** அல்லது **கொலேரிய மொழிகள்** சிதறிக்கிடக்கின்றன. இவ்வினத்தைச் சேர்ந்த மொழிகள் மலாயாவிலும், ஆஸ்திரேலியாவிலும், கிழக்குத் தீவுகளிலும் இருந்து வருகின்றன. இவை அனைத்தும் **ஆசிய – ஆஸ்திரேலிய மொழிகள்** எனப்படும். இவ்வினத்தில் ஏறத்தாழ நூற்றைம்பது மொழிகளுக்கு மேற்பட்டவை உள்ளன. இம்மொழிகளைப் பேசும் மக்கள் நடு இந்தியாவிலும், சாத்பூரா மகாதேவ மலைகளிலும், ஒரிஸ்ஸாவிலும், தெலுங்கு நாட்டு மலைப்பகுதிகளிலும் வாழ்கின்றார்கள். ஆரியர் இந்தியாவில் நுழைந்த போது வடவிந்தியாவில் திராவிடமும் முண்டா - கொலேரிய மொழிகளும் வாழ்ந்தன என்பது மொழி ஆராய்ச்சியால் அறியப்படும் உண்மையாகும். ஆதலால், ஆசிய - ஆஸ்திரேலியச் சொற்கள் சிலவும் திராவிட மொழிகளுள் நுழைந்திருக்கலாம் என்பது அவ்வாராய்ச்சியாளர் முடிபாகும். கதலி, தாம்பூலம் போன்ற சில சொற்கள் வடமொழியில் இடம்பெற்றன என்றும், **மிளகு – நாஞ்சில் – ஐயவி**

போன்ற சில சொற்கள் **திராவிடத்தில் நுழைந்தன** என்றும் அந்த ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.[33]

குறிப்புகள்

1. நியமம் - வணிக இடம், கடைத்தெரு. இலங்கையின் தலைநகரான அனுராதபுரத்தின் நான்கு வாயில்களுக்கு அருகில் வணிக இடங்கள் இருந்தன. அவை நியமம் என்றே பெயர் பெற்றன - History of Ceylon, Vol. I, Part, I, pp. *224-6*

2. மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் **மூட்டை** என்னும் பொருளில் **மூடை** என்பது வழங்கப்படுகிறது. பிற மாவட்டங்களில் **மூட்டை** என்பது வழக்கில் உள்ளது.

3. தஞ்சை மாவட்டத்தில் பேரளத்திற்கு அண்மையில் **அம்பர்** என்பது ஓர் இடத்துக்குப் பெயர். **அம்பர், அம்பர் மாகாளம்** என்பன பாடல் பெற்ற தலங்கள். **இன்னம்பர்** (இனிய அம்பர்) என்பது மற்றொரு தலமாகும்.

4. திருத்திணை நகர் - கி. பி. 7ஆம் நூற்றாண்டில் பாடப்பெற்ற தலம்.

5. வயலுக்கு மதில் வரைப்பு. அஃது இக்காலத்தில் **வரப்பு** என வழங்கப்படுகிறது.

6. **குறும்பர்** - அரணையுடையவர்கள்; தொண்டை நாட்டு முதல் மக்கள். அவர்கள் பல குறும்புகளை அமைத்துப் பாதுகாப்புடன் வாழ்ந்தமையால், **குறும்பர்** எனப்பட்டனர் போலும்!

7. மாறி வருவன் - சிலம்பு காதை 16, அடி 93. இவ்வழக்கு இன்றும் திருச்சிராப்பள்ளி நகரத்திலும் சுற்றுப்புறங்களிலும் உள்ளது.

8. **புலம்** - இது தெலுங்கில் **பொலம்** என்று சொல்லப்படுகிறது. பொலம் என்னும் இச்சொல் இன்று தெலுங்கரிடம் வழக்கில் உள்ளது.

9. **நெற்பொலி** - நெற்குப்பை. **நெற்குப்பை** என்னும் பெயருடன் சில ஊர்கள் தமிழ் நாட்டில் உள்ளன; நெல் விளைச்சல் மிக்கிருந்தமையால் இப்பெயர் பெற்றன போலும்!

10. **பாக்கம்** - பக்கம். புரிசைக்குப் பக்கத்தில் இருந்த இடம் **புரிசைப்பாக்கம்** எனப்பட்டது. **புரிசை** என்றோர் ஊர் வடவார்க்காட்டு மாவட்டத்தில் உள்ளது.

11. **அவியா விளக்கு – நந்தா விளக்கு** எனப்படும். இது **நொந்தா** விளக்கு என்றும், **நுந்தா** விளக்கு என்றும் தவறாகச் சில கல்வெட்டுகளிற் பொறிக்கப்பட்டுள்ளது.

12. **நடுநாள்** - நடுயாமம்; அஃதாவது, இரவு பன்னிரண்டு மணி. இஃது 'நடு நாள்' எனின், பகல் பன்னிரண்டு மணிதான் நாளின் தொடக்கம் என்பது பொருளாகும். 'நடுநாள்', 'பானாள் கங்குல்', 'அரைநாள்' என்பன இம் முடிபையே வற்புறுத்தல் காண்க.

13. கலியாணர் என்பதிலிருந்து **கலியாணம்** என்பது பிறந்தது போலும்!

14. யந்த்ரம் என்னும் வடசொல் **எந்திரம்** என மாறியது போலும்!

15. பரதர் - வணிகர்; **'அரச குமரரும் பரத குமரரும்'** என்பது சிலப்பதிகாரம் (காதை 5; அடி 158).

16. **பண்ணியாரம்** என்பது இக்காலத்தில் **பணியாரம்** எனப்படுகிறது.

17. வந்தி என்பது இக்காலத்தில் **வங்கி** எனப்படுகிறது. இது தோளின்கீழ் அணியப்படும் நகை.

18. வட்டி என்பது செட்டிநாட்டில் வழக்கில் உள்ளது.

19. கரூர் வட்டத்தில் ஆண் நாய் - கடுவன் நாய் என்றும் சொல்லப்படுகிறது.

20. நாயன்மாரால் பாடப்பெற்ற தலங்களுள் **பள்ளி** என்னும் சொல்லை இறுதியிலே யுடைய தலங்கள் சில உண்டு. அவை அகத்தியான் **பள்ளி**, செம்பொன் **பள்ளி**, நனி**பள்ளி**, மயேந்திரப் **பள்ளி** என்பன. இவை பண்டைக்கால இடைச்சேரிகளா என்பது ஆய்வுக்குரியது. தஞ்சை மாவட்டத்தில் உள்ள காட்டு**ப்பள்ளி** என்பது முல்லைநிலச் சீறூராயிருந்திருத்தல் வேண்டும் என்பது பெயரைக் கொண்டே தெரிகிறது.

21. The Sanskrit Language, T. Burrow, pp. 2, 36 and 43.

22. Origin and Development of the Bengalee Language, Dr. S. K. Chatterji, Part I. pp. 42, 170 - 178

23. The Sanskrit Language. T. Burrow, pp. 43, 376-387.

24. Educational Review, October, 1928.

25. Gangas of Talkad, M. V. Krishna Rao, p. 192.

26. History of India, R. Satyanatha Ayyar, Vol. I, p. 171.

27. வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே.

சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்

-தொல்காப்பியம், எச்சவியல், 5, 6.

28. பொருளதிகாரம், புறத்திணை இயல், 74
தொல். அகத்திணை இயல், 1.

29. தொல். மரபியல், 74, பேராசிரியர் உரை.

30. இச்சொல் முதலில் ஆரியர் அல்லாதவரைக் குறித்தது. பின்பு சங்ககாலத்தில் யவனர், அராபியர், சீனர் முதலிய வெளிநாட்டாரைக் குறித்தது. The Sanskrit Language, T. Burrow, p. 1.

31. 'யூபம்' என்பது வேள்விச்சாலையில் நடப்படும் தூண் என்னும் பொருளிலேதான் வடமொழியில் வந்துள்ளது.

32. இது பாலியிலும் அர்த்தமாகதியிலும் உள்ள சொல். இது வடமொழியிலும் உண்டு.

* இக்குறியிடப்பெற்ற சொற்கள் சமணர் கூட்டுறவினாலும்

** இக்குறியிடப்பெற்றவை பௌத்தர் கூட்டுறவினாலும்

எக்குறியும் இடப்பெறாதவை வேதியர் கூட்டுறவினாலும் தமிழில் நுழைந்தவை. தமிழ் மொழி - இலக்கிய வரலாறு, பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை, பக். 41-43 அடிக்குறிப்புகள்.

பேராசிரியர் பிள்ளையவர்கள் பத்துப்பாட்டில் உள்ள கீழ் வரும் சொற்கள் பிற மொழிச்சொற்கள் என்று குறித்துள்ளனர்: **அன்னாய், கச்சு, சடை, சண்பகம், இரவு, தாழ், தும்பை, துழாய், தூண், தூம்பு, நகர், நீர், மலை, மீன், முகம், முத்து**.

பேராசிரியர்கள் பரோ, எமெனோ என்னும் இருவரும் தாம் தொகுத்துள்ள திராவிடச் சொல்லகராதியுள் இவை அனைத்தும் திராவிடச் சொற்களே எனக் கூறியுள்ளனர்.
Dravidian Etymological Dictionary, pp. 11, 79, 150, 151, 164, 206, 218, 219, 222, 235, 247, 314, 327, 328, 334.

33. **இலவங்கம்** என்பது இந்தோனேஷியாவிலிருந்து வந்த சொல்லாகும்;
The Sanskrit Language, T. Burrow, pp. 378-9.

❖ ❖ ❖

THE TAMIL SAIVA MATHAS UNDER THE COLAS *
(A. D. 900 - 1300)

M. Rajamanikkam

In the days of the Pallavas, there existed some mathas which imparted religious and moral education, served as resting places for the devotees and were also centers of charities. Just as temples and festivals grew and developed in the days of the Colas, mathas also increased in number. Among them, some had the name of the Lord; some had the names of the Cola kings and their feudatories; many were named after the Nayanmars; some others had various kinds of names. The different names of a few mathas are given here:

I. Mathas With God's Names

1. Avaduturai	Tirunila Vitangan - matha	144 of 1925
2. do	Sivalokanayakan - matha	148 of 1925
3. do	Sarvadevan - matha	103 of 1925
4. do	Sankaradevan - araccalai	159 of 1925
5. do	Panjanadivanan - matha	67 of 1926
6. Tiruvilimilalai	Alagiya Tiruc - Cirrambalam Udaiyan - matha	392 of 1909
7. Sikali	Tirumurait - tevarac - celvan matha	158 of 1911
8. Usattanam	Kuttadu Nayanar - matha	218 of 1908

II. Mathas With The Names of Kings or Feudatories

1. Tirunanipalli	Arumolidevan - matha	186 of 1925
2. Orriyur	Rajendra Colan - Matha	132 of 1912
3. do	Kulottunga Colan - matha	200 of 1912
4. Udaiyarkudi	Rajendra Colan-matha	622 of 1920
5. Usattanam	Vanarayan-matha	211 of 1908
6. Valisvaram	Virapandyan-matha	357 of 1916

* Essays in Philosophy, 1962 pp 217-225

III. Mathas That Had Nayanmars' Names

1. Tirumangalam	Paranjoti - matha	246 of 1930
2. Karkudi	Rajendracolan matha	467 of 1908
3. Madurantakam	Tillaival Andanar-matha	404 of 1922
4. Tiruppugalur	Nambi Tirumurugan - Tirumatha	88 of 1928
5. Kalukkunram	Naminandi adigal-matha	179 of 1894
6. Tiruvadigai	Vagisa-matha	49 of 1903
7. do	Tirunavukkarasadevar-matha	382 of 1921
8. Tirubuvanai	do	203 of 1909
9. Tirumananjeri	Parasamayakolari-matha	534 of 1918
10.Palaiyarai	Tirujnanasambandan-Tirumatha	392 of 1908
11. Tiruvilimilalai	Tirunavukkarasar-matha	402 of 1909
12.Tiruppalaitturai	Tirunavukkarasadevan-matha	583 of 1909
13.Visayamangai	Tiruttondattogaiyan-Tirumatha	192 of 1929
14.Tirupputtur (P.C.)	do	104 & 116 of 1908
15. do	Tirujananasambandan-Tirumatha	129 of 1908
16.Araiyaninallur	do	174 of 1935
17.Sengattankudi	Siruttondan-Tirumatha	76 of 1922
18.Valivalam	Tirumuladevar-matha	116 of 1911
19.Kanci	Sundarapperumal-matha	S. I. I.I. 87
20.Nodiyur	Tirujanana Sambandan-Tirumatha	199 of 1932 - 33

IV. Mathas With Other Names

1. Avaduturai	Tiruvidi-matha	147 of 1925
2. do	Pramanavasagan-matha	155 of 1925
3. do	Narpattennayiravan-matha[1]	150 of 1925
4. do	Peruntiruvatti - Araccalai	71 of 1926
5. do	Munnurru-Irupattu-nalvan[2]	158 of 1925
6. Draksharamam	Panmahesvara-matha	344 of 1893
7. Annamalai	Dhanmavanikar-matha	547 of 1902
8. Devarayanpettai	Manuvilangap-pillaiperral-matha	278 of 1923
9. Cidambaram	Arapperunjelvic-calai	266 of 1911

10. Vennainallur	Tiruvedam-Alagiya-Tirumatha	35 of 1922
11. Tiruvatpokki	Elunurruvan-Tirumatha	179 of 1914
12. Tirukkodikka	Ainnurrenman-Tirumatha	60 of 1930
13. Tiruvarur	Nalayiravan-Tirumatha	477 of 1912
14. Caturvedimangalam (P.C)	Colan-vasal-Tirandan matha	312 of 1927 - 28
15. Tiruppurambayam	Matha (Head - Andar Kadiya-baranar)	353 of 1917
16. Tiruvalankadu	Vannara-Madeva-Andan matha	93 of 1926
17. Tiruppugalur	Matha-hospital attached	97 of 1928
18. Kottur	Matha (Head-Tirumaligaip-piccan)	446 of 1912
19. Tiruvaiyaru	Matha (Head-Sadasiva-Bhattarar)	121 of 1925
20. Tiruppalaivanam	Anbarkkadiyar-matha	350 of 1928 - 29

Apart from these, there were mathas attached to the temples of Saikkadu, Tiruvallam, Tirumudukunram, Koyirkadu, Gomal, Tiruppampuram, Achuthamangalam, Tiruvidaikkali etc[3].

The Santana of the Mudaliyars of Tiruccattimurram

About the first part of the 13th century A. D., some new mathas arose. The most important of them was the Tirujnana Sambandan-matha at Tiruccattimurram. Tiruccattimurrattu - Mudaliyar was one of the descendants of the Santana of Andar Parudaipperumal. The Branch mathas belonging to his Santana sprang up at Anaikka, Usattanam, Vilimilalai and Valivalam. The Sishyas of Namasivaya-devar who belonged to the Tiruccattimurrattu-Mudaliyar Santana lived in the Narpattennayiravan Tirumatha at Tiruvanaikka.[4] Paripurana Sivacarya of the Santana of the Mudaliyar mentioned above was the pontiff of the Kuttadu Nayanar matha at Usattanam.[5] Tavapperumal alias Jnanasivacaryar granted land to the Alagiya - Tiruccirrambala Mudaliyar matha at Vilimilalai.[6] Somanathadevar alias Ediroppiladar of the same Santana was the pontiff of the Tavapperumal-Tirumatha that was at Valivalam.[7]

The Santana of The Mudaliyars of Maligai Madam

There was a matha called 'Maligai - madam' at Tiruvidai-marudur. It is not possible to say when it was founded. But in the days of Rajaraja III (about A.D. 1240), Dattan - Udaiyar-Isanadevar of the Santana of Maligai-madattu-Mudaliyar was at Nallur. His Sishyai granted him a matha and lands.[8]

Perumbarrappuliyur-Nambi says that his spiritual guru was Vinayaka, who was a disciple of Venkadar, the pontiff of the Maligaimadam at Tillai.[9] Most probably Nambi might have flourished after the Cola period.[10] But anyhow, it is gathered from this that there existed a Maligai-madam at Tillai in the time of Nambi. A certain pontiff of this Maligai-madam has been offered invocation in the prefaces of the later works, i.e., the Vedaranya Purana and the Tirukkannappar Purana.[11] It is clear from these invocations that the acaryas of the Maligai-madam were well-versed in the Saiva scriptures.

The Santana of the Mudaliyars of Senbaikkudi

There existed a matha called Andar-Embiranar-Tirumadam at Tiruvanaikka in the days of Rajendra III (at about A. D. 1250). It belonged to the Santana of the Mudaliyars of Tiruccattimurram at Tiruvanaikka. A matha belonging to the Santana of the Mudaliyars of Senbaikkudi was also existed there. Possibly its head matha was in existence at Senbaikkudi.

The Acaramalagiyan-tirumadam at Tiruvarur and its branches

A matha called Acaramalagiyan-tirumadam was in existence at Tiruvarur in the time of Maravarman Kulasekhara Pandiyan (about A. D. 1236).[12] Its branch with the name of Tirujnana Sambandan-tirumadam existed at Tirupputtur, in the Pandiya country. Its pontiff was Srikanthasiva. There were also the mathas of the Mudaliyars.[13] There was a matha called Tiruttondattogaiyan-tirumadam at Govanda-puttur in the time of Rajendra III. It had a branch at Tillai.[14] At about A.D 1280, there was a matha at Tirupputtur in the Pandiya land, with the same name.[15]

The Santana of Marudapperumal

One Namasivayadevar of the Santana of Marudapperumal built in about A. D. 1230, the Siruttondan-tirumatha at Sengattankudi. Land was granted to it.[16] The head matha of this Santana is not known.

Saiva mathas from Literature

Till now, information regarding the mathas referred to in the inscriptions were dealt with. Now, let us consider about the mathas that we come across in the Saiva Siddhanta works. R. Gopinatha Rao says that Meykandadeva of Tiruvennainallur mentioned in the inscription of Tiruvannamalai might himself be the Meykandadeva, the author of Siva -Jnana bodam and that he flourished in A. D. 1237.[17] Tiruviyalur-Uyyavanda-deva-Nayanar[18] composed Tiruvundiyar at Saiva Siddhanta work, before Meykandar's Siva-Jnana-bodam. Tirukkadavur-Uyyavanda-deva Nayanar, a student of his disciple, wrote another Siddhanta work called Tiruk-kalirrup-padiyar. The Sivacaryar of Meykandar's father was one Arunandi-Sivacaryar who was in the Tirutturaiyur matha. In his old age, he became the first disciple of Meykandar. Considering these details, it is revealed that there must have existed in this country, Saiva Siddhanta mathas at Tirutturaiyur and Tiruviyalur even prior to Meykandar. In the reign of Kulottunga I (A. D. 1115) Sivananda-Mahamuni was renowned.[19] Since Sivananda-Mahamuni also was undoubtedly a great Saiva like Parasamaya-kolari Mahamuni who wrote the Kannivana Purana in the reign of Kulottunga I, since Arunandi Sivacarya lived at Tirutturaiyur itself in the later days and since he was the spiritual guru of many disciples and was very old in the time of Meykandar, there is room to suppose that he might have been a disciple of Sivananda-Mahamuni mentioned above.

Meykandar had 49 disciples. Among them, Arunandi-Sivacarya was the first and foremost. He is the author of Siva-Jnana-Sittiyar and Irupa-Irupahdu, both Saiva Siddhanta Sastras. Another student of his called Manavasagam Kadandar wrote a Siddhanta work called Unmai-Vilakkam. The foremost among the students of Arunandi Sivacarya was Marai-Jnanasambandar. He stayed at Tillai and rendered religious services. It is his disciple Umapati Sivacarya who is the author of eight Saiva Siddhanta works, namely Sivaprakasam and others. He established a matha at Korravankudi and taught Saiva Siddhanta lessons to many.[20] Considering the facts

that from the time of Meykandar, his disciples spread far and wide in the country, established mathas and be60gan to foster the Saiva religion, that many of the Mudaliyar mathas mentioned above sprang up suddenly at several places in the 13th century in which Meykandar flourished, that when Meykandar was born, Nilakantha Bhashyam, Sankara Bhashyam, Ramanuja Bhashyam, Madhva Bhashyam, the commentaries to Brahma Sutra spread in the country and created religious confusion in the land and that Meykandar was born only to repair that confused state and to establish the true Saiva Siddhanta,[21] there is every possibility to suppose that the different kinds of Saiva mathas mentioned above might have been those founded by the disciples of Meykandar.[22] The following statement of the scholars in epigraphy confirm our suppostion.

"... Saivism thus appears to have gradually grown stronger and stronger under the patronage of the Cola kings so that in the beginning of the 13th century, we notice a number of mathas presided over by Saiva sanyasins, spreading their influence over a pretty large portion of the Tamil country. All this must have been in spite of the teachings of the great Advaita philosopher Sankaracarya whose doctrines are well-known. The philosophical expositions of the Advaita teacher do not exclude the methods of pious devotion to be practiced in the first stages of spiritual development, but insist on strict adherence to the paths of karma as laid down in the Sastras. The Saiva creed, on the other hand, does not appear to have paid much attention to Sastric karma but, taking unsullied devotion to Siva as its basis, it received into its fold all classes of people without any distinction of caste. This catholicity of the Saiva faith rendered it not very popular with the orthodox Brahmins but the non-brahmin classes eagerly took to it and at the beginning of the 13th century, as stated aleady, it was apparently very influential with its centers in many places ... The mathas of the Saiva Sanyasins called Sivayogins (177 of 1908) or Mahesvaras (164 of 1908) were mostly named after the famous Brahmin Saiva Saint, Tirujnanasambandar and the non-brahmin Saint, Tirunavukkarasar.[23] Tiruvavaduturai Adinam was founded by Namasivaya Desikar who belonged to the holy line of the first set of disciples of Meykandar and the Dharmapura matha was established by Jnanasambanda Desikar of the same line.[24] We see that both of these looked after the administration of many temples; in addition to that, they ran many institutions which imparted general and specific religious instructions. We may also suppose that the ancient Tamil mathas were maintained on similar lines. From the facts that there were men and women, branded with the sign of the trident to work in temples,[25] and that at one time 36 persons were sold as slaves to the matha,[26] we learn that a number of persons were required to do service and look after the different kinds of work in the matha. Therefore we can infer that many matters associated with religion were attended to in the matha".

"From about the tenth century onwards, it became a very common feature to attach mathas to temples. These institutions wielded great influence and in a majority of cases held control over the affairs of the temples. Pilgrims from abroad found a ready residence in them. They served a useful purpose as teaching disciplinary institutions. They maintained teachers for several Sastras. It is thus quite clear that the mathas, besides controlling the affairs of the temple and providing boarding and lodging to devotees, were important centers of educational activity and spiritual instruction."[27] "Not only devotees and helpless people but also those suffering from sickness received help in some mathas. Sometimes even animals were attended to in similar institutions and an instance from the Kerala country has been cited."[28]

NOTES

1. It is learnt that there were forty-eight thousand Sivanadiyars in Madurai and were rendering Sivattondu (Nambi Tiruvilaiyadal Prayer - 22). 'The forty - eight thousand' was a group name like Tillai three thousand; Tirupperundurai, the three hundred; Tiruvakkur, the thousand; Tiruvilimilalai, the five hundred and these groups of devotees flourished at Cidambaram, Tiruvanaikka, Tiruppuvanam and other places and were doing Sivattondu - Takkayagap-Parani, 219 and its commentary. The fact that a dancing woman called herself 'Narpattennayira-Manikkam' shows the regard and piety she had towards the group. 202, 214 of 1929 - 30.
2. The feeding house called 'Munnurrirupattu-nalvan', named after the assembly of the village suggests that strength of its members to have been 324. A. R. E. 1925, p. 83- other group names also may be taken in the name sense. Inscription No. 73 of 1914 also suggests the same view.
3. 269 of 1911, 232 of 1921, 63 of 1918, 243 of 1925, 40 of 1925, 86 of 1911, 409 of 1925 276 of 1925.
4. 586 of 1908. At present it is Sankaracarya's matha - A. R. E. 1909. pp. 104 - 05.
5. 218 of 1908.
6. 392 of 1908.
7. 108, 109 of 191; A.R. E. 1911, p. 75.
8. 49 of 1911; A. R. E. 1909, p. 75.
9. Nambi Tiruvilaiyadal Invocation V. 23.
10. Tamil Polil, Vol. 14, pp. 81 - 88.
11. N. T. int. p. 20.
12. 584 of 1908.
13. 129 of 1908, A. R. E. 1909 p. 104.
14. 192 of 1929.
15. 104 of 1908.
16. 76 of 1922.
17. Sentamil, Vol. 3, pp. 189 - 90.
18. In the inscription of A. D. 1213, since the name, 'Palaravayan Uyya Vandan' is found (149 of 1932 - 33), the name "Uyyavanda devar" is the name that was in vogue in those days.
19. 380 of 1908.
20. Santanacariyar caritram, pp. 17 - 31.
21. Ibid., pp. 6 - 7
22. There was a matha called Meykanda-Santati-matha at Villiyanur in the days of the late Nyayakas. In it, a disciple of Meijnana-Mamuni of Tiruvakkarai was the pontiff - 206, 207 of 1936 - 37.

23. A. R. E. 1909, p.103.
24. Santanacariyar caritram, p.17.
25. 76, 216 - 219, 409 of 1925 and 91 of 1926.
26. 90 of 1926.
27. A. R. E. 1923, p. 110.
28. A. R. E. 1 928 - 29, p. 78.

❖ ❖ ❖



சமுதாயச் சிந்தனைகள்

நாம் செய்யத்தக்க மணச்சடங்குகள்

தமிழகத்துப் பழம்பெரும் பண்புகளைப் பாதுகாருங்கள்

தமிழ் வளரச் சில வழிகள்

சமயத்தின் உடலில் புதிய இரத்தம் பாய்ச்சப்பட வேண்டும் என்ற குறிக்கோளைக் கொண்டு, மதத்துறையில் சீர்திருத்தம் நாடும் தமிழ் நாட்டின் மார்டின் லூதர் டாக்டர் மா. இராசமாணிக்கனார்.

ஒட்டிய சமயத்து உறுபொருள்களை அறிந்து நல்லன எல்லாவற்றையும் தழுவும் டாக்டர் அவர்களின் சமயப் பொதுமை, குறுகிய எல்லைக் கோட்டினுள் நிற்பார்க்கு அறிவுக்கண்ணைத் திறப்பதாகும்.

திருவள்ளுவர் கழகம் (கோவை)
வழங்கிய பாராட்டு
1956

நாம் செய்யத்தக்க மணச்சடங்குகள்*

ஒரே நாளில் திருமணம் முடித்தல் மிகவும் நல்லது. திருமண நாளுக்கு முன் செய்ய வேண்டும் சடங்குகள், அவரவர் வழக்கப்படியும் தமிழ் மரபுக்கு ஏற்றபடியும் (புரோகிதன் இல்லாமல்) செய்தல் வேண்டும். திருமணத்தன்று, மணவீட்டு வாசலில் மணப்பந்தல் அலங்கரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்; மண ஒலி முழங்குதல் வேண்டும்.

(1) தாய்மார் மணப்பந்தரில் மணப்பொங்கல் இடுதல்

இது நிகழ்ந்து கொண்டிருக்கையில், மணமக்கள் தனித்தனியே நீராடுதல்; பிள்ளை பெற்ற இல்லறப் பெண்கள் நால்வர் நெல்லும் மலரும் கலந்த நீரால் மணமகளை நீராட்டுதல் வேண்டும்; நீராட்டும் பொழுது, 'அறநெறி தவறாமல் நல்லன செய்து உன் கணவன் விரும்பத்தகும் இல்லாளாக இருக்கக் கடவாய்' என வாழ்த்துதல் வேண்டும். இதுவே பண்டைத் தமிழரின் திருமணச் சடங்குகளுள் சிறந்த பகுதி ஆகும். ஆதலின், இதனைத் தவறாது இம் முறைப்படி செய்தல் தமிழர்தம் நீங்காக் கடமையாகும்.

(2) மணப் பந்தலில் குத்துவிளக்கு[1] ஏற்றிவைத்தல்

(3) திருமணத்தை நடத்தி வைக்கும் அறிஞர் (இவர், அவரவர் குடும்பத்துள் பெரியவராகவோ, ஊரில் பெரியவராகவோ, உறவினருள் பெரியவராகவோ, வேறு சிறந்த அறிஞராகவோ இருத்தல் பொருந்தும்) மணப்பந்தரில் அவர்க்கெனப் போடப்பட்ட ஆசனத்தில் அமர்தல். மணமக்கள் மண அறிஞர் முன் வந்து அமர்தல்.

(4) கடவுள் வாழ்த்து

இஃது அவரவர் சமயக் கொள்கையின்படி நடத்தப்பட வேண்டும். வைணவர் ஆயின் நாலாயிரத் திவ்யப் பிரபந்தச் செய்யுட்களையும் சைவராயின் தேவார, திருவாசகச் செய்யுட்களையும் கடவுள் வாழ்த்தாகப் பாடலாம். அல்லது இந்நூலில் குறிப்பிடப் பட்டுள்ள பாக்களைப் பாடலாம்.

(5) மண அறிஞர் இரு திறத்துப் பெற்றோரையும் மண ஒருப்பாடு கேட்டறிதல்; அங்ஙனமே மணமக்களையும் கேட்டறிதல்.

(6) பின்னர் மண அறிஞர் வாழ்த்தித் தர, மணமக்கள் புத்தாடை பெற்றுக் கொண்டுபோய் அவற்றை அணிந்து மீளுதல்.

(7) தாலியை, வந்திருப்போர் வாழ்த்துப் பெற வைத்தல்

(8) மஞ்சள் கலந்த அரிசியும், மலர்களும் வந்திருப்போரிடம் தருதல்

தமிழர் திருமண நூல், 1939, பக். 15 - 19

1. 'விளக்கொளியை - திருமால்' என்பது திருமங்கையாழ்வார் திருநெடுந்தாண்டகம். 'சோதியே! சுடரே! போற்றி - சிவபெருமான்' என்பது நாயன்மார் கூற்று. எனவே, 'விளக்கொளி' இறை வழிபாட்டுக்கு உரியது காண்க.

(9) மணமகளைக் கொடுத்தற்கு உரியவர், அவளுடைய கையை மணமகன் கையின் மேல் வைத்து, "யாங்கள் எங்கள் அருமைப் பெண்ணாகிய . . . . . மனமுவந்து உமக்குத் தருகின்றோம். நீங்கள் இருவரும் என்றும் நிலைத்த அன்புடன் பிரிவின்றி நெடுங்காலம் வாழ்வீர்களாக" என்று வாழ்த்தி, இருவர்மீதும் மலர்களைத் தெளித்தல்.

(10) அறிஞர், தாலியை வாழ்த்தித்தர, மணமகன் அதனை மணமகள் கழுத்தில் அணிதல்.*

(11) மணமக்கள் ஒப்பந்தம்:

(அ) மணமகன் கூறுதல்: 'என் உயிர் அனையாய்! இந் நன்னாளில் இங்குக் கூடியுள்ள பெரியோர் முன்னிலையில் நாம் இருவரும் கணவனும் மனைவியுமாக இருந்து நமது தமிழ் மரபுக்கு ஏற்றமுறையில் இல்லறத்தை நடத்த ஒருப்பட்டோம். இன்றுமுதல் நாமிருவரும் மலரும் மணமும் போலவும், மணியும் ஒளியும் போலவும், பாலும் சுவையும் போலவும் இரண்டறக் கலந்து இன்ப வாழ்வு வாழ, எல்லாம் வல்ல இறைவன் அருள் புரியுமாறு வேண்டுவோமாக' எனக் கூறி மணமகட்கு மாலையிடுதல்.

(ஆ) மணமகள் கூறுதல்: "என் உயிர் அனையீர்! தாங்கள் மகிழ்ச்சியோடு தெரிவித்தபடி இந்நன்னாளில் நாம் இருவரும் நம் தமிழ் மரபுக்கு ஏற்றபடி பலர் அறியத் திருமணம் செய்து கொண்டோம். 'காதலர் இருவர் கருத்து ஒருமித்து ஆதரவுபட்டதே இன்பம்'. ஆதலால், நம் இருவர் கருத்தும் நம் வாழ்நாள் அளவும் ஒன்றுபட்டதாகி, என்றும் இன்பத்தையே நுகர்ந்து, இல்லறம் என்னும் நல்லறத்தை இனிது நடத்தி அருளுமாறு எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளை இறைஞ்சுவோமாக", எனக் கூறி மணமகனுக்கு மாலையிடுதல்.

(12) மணமக்கள் மாலை மாற்றி வாழ்த்துப் பெறுதல்

(13) வந்திருப்பவருள் பெரியோர்கள் எழுந்து மணமக்களுக்கு நன்மொழி கூறுதல்

(14) மணமக்கள் வந்திருப்போருக்கு நன்றி கூறி வணங்குதல்

(15) வெற்றிலைப் பாக்கு வழங்கல்

(16) விருந்தளித்தல்

❖ ❖ ❖

* இதற்கு ஈடாக அவரவர் வழக்கத்தை மேற்கொள்ளலாம்

தமிழகத்துப் பழம்பெரும் பண்புகளைப் பாதுகாருங்கள்*

ஒரு காலத்தில், இவ்வுலக வாழ்வில் பேரின்பம் துய்த்தற்குரிய ஒப்பற்ற இடமாகக் கோவில்கள் விளங்கின. இவ்வுயரிய நோக்கம் கொண்டே அவை கட்டப்பட்டன. ஆயின், நாளடைவில், அறிவற்ற - பக்தியற்ற - பழம்பெருமையும் வரலாறும் உணராத பலர் கைகளில் கோவில் ஆட்சி சென்றமையாலும், பூசை முதலியன உணர்ச்சியற்ற முறையில் நடைபெற்றமையாலும் பெறலாலும், கோவில்கள் தம் பொலிவிழந்துவிட்டன. அவற்றைப் பண்டைச் சிறப்பில் பாதியளவிலேனும் கொண்டுநிறுத்தல் தமிழறிஞர் - சமயப் பற்றாளர் நீங்காக் கடமையாகும்.

அதற்கு நாம் செய்ய வேண்டுவன

1. சைவர் கோவில்களில் தேவாரப் பாடசாலைகள் தேவை; பெருமாள் கோவில்களில் நாலாயிரப் பிரபந்தப் பாடசாலைகள் தேவை; வழிபாடு தமிழிலேயே நடைபெறல் வேண்டும்.

2. குருக்கள் தகுதி வரையறை செய்யப்படல் வேண்டும். பத்தாம் வகுப்புத் தேறியவர்க்குப் பல்கலைக்கழகத்துச் சார்பில் 4 ஆண்டுகள் வரலாறு - சமயம் - ஓவியம் - சிற்பம் - நடனம் - இசை - கட்டடக் கலைகளில் ஓரளவு பயிற்சி அளித்துத் தேர்வு வைத்துப் பட்டம் தரல் வேண்டும். அப் பட்டதாரிகளே குருக்களாக அமைய வேண்டும். அந்நிலையிற்றான் கோவில்கள் சாத்திரீய முறையில் விளங்கும்; யாவும் தூய்மையாக இருக்கும். இஃது அறிஞர் உடனே செய்யத்தக்கதாகும்.

3. கோவில் இயக்குநராக (Executive Officers) வருபவர் பல கலைகளில் புலமை உடையவராக இருத்தல் வேண்டும்.

4. இவை அனைத்திற்கும் மேலாக, 'நம் நாடு, நம் நாட்டுக் கோவில்கள், நம் நாட்டுச் சமயங்கள், நம் நாட்டுக் கலைகள் - இவற்றைப் பாதுகாத்தலும் போற்றுதலும் வளர்த்தலும் நமது கடமை' என்பதை உளமார உணர்ந்து பாடுபடும் ஒருமைப்பாடு, குருக்களிடமும் பிற (கோவில்) அலுவலரிடமும் இருத்தல் வேண்டும்.

இங்ஙனம் யாவும் அமையுமாயின், பண்டை வரலாற்றை இன்று கண்டு பேரின்பமும் பெருவாழ்வும் பெற வழியுண்டு. இம் முயற்சிக்குத் தமிழர் ஒன்றுபட்ட மனமே வேண்டற்பாலது. இஃது எப்பொழுது கைகூடும்?

❖ ❖ ❖

---

*ஆராய்ச்சிக் கட்டுரைகள், 1947, பக். 40 - 41

தமிழ் வளரச் சில வழிகள்*

1. தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் வழக்கில் உள்ள சொற்களைத் தொகுத்தல், ஆராய்ச்சிக்குரிய இடங்களைக் குறித்தல், மக்கள் பழக்க வழக்கங்களைத் தொகுத்தல், சிறுதெய்வ வழிபாட்டு விவரங்களைத் திரட்டுதல் போன்றனவற்றிற்கு அரசினர் எம். ஏ. பட்டம் பெற்ற பெருமக்களைஅமர்த்தல் வேண்டும். எல்லா மாவட்டங்களிலிருந்தும் வரும் இத் தகவல்களைக் கொண்டு மாவட்டக் கைப்புத்தகங்கள் (District Manuals) வெளியிட வேண்டும்.

2. ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள கல்வெட்டுக்களைத் தனித்தனி நூல்களாகத் தக்க விளக்கத்துடன் வெளியிட வேண்டும்.

3. தமிழகத்து ஊர்களின் பெயர்களைக் கல்வெட்டு - வரலாறு துணைகொண்டு திருத்தியமைத்து, அவற்றின் விளக்கங்களைப் படங்களாக வெளியிட வேண்டும்.

4. **இந்திய அரசின் கல்வெட்டுத்துறை படியெடுத்துள்ள கல்வெட்டுக்கள் ஆமை வேகத்தில் வெளிவருவதைத் தடுத்துத் தக்க இரு தமிழறிஞர்களின் மேற்பார்வையில் அவற்றை விரைவில் வெளிவரச் செய்தல் வேண்டும்.**

இவையனைத்தும் உடனடியாகச் செயலாற்றப் பெறுமேல், வரலாறும், மொழியும் வளம்பெறும்; செந்தமிழும் சிறந்த முறையில் சீரிய ஆக்கம் பெறும்.

❖ ❖ ❖

* மகிழ்ச்சி, 'டாக்டர் மா.இராசமாணிக்கனார்', தமிழ்ச் செல்வி (திங்களிதழ்), 16 - 10 - 1961, ப.5



அணிந்துரைகள்
முன்னுரைகள்

டாக்டர் மா. இராசமாணிக்கனார் ஆரம்பப்பள்ளி ஆசிரியராய் வாழ்க்கையைத் தொடங்கிச் சென்னைப் பல்கலைக்கழகத் துணைத்தமிழ்ப் பேராசிரியராய் உயர்ந்தவர் - தம் முயற்சியால், தளராத உழைப்பால். அவர்தம் முற்றிய அறிவின் பெற்றியாக - முழுமணியாக - இந்நூல் விளங்குகிறது என்னலாம். அவர்தம் நூல்கள் பலவற்றுள்ளும் இறுதியானதும் உறுதி யானதும் - பல்லோரும் பலகாலத்தும் பயன்படுத்தப் போவதும் இந்நூலே எனலாம்.

நெ.து. சுந்தரவடிவேலு
பத்துப்பாட்டு ஆராய்ச்சி
1970 (முதற்பதிப்பு)
பக். VII - VIII

அணிந்துரை*

கலைகள் பல திறத்தன. அவற்றுள் ஒன்று வரலாறு அல்லது சரித்திரம். வரலாற்றுக் கலை வாழ்க்கைக்கு இன்றியமையாதது. அது வாழ்க்கையைப் பண்படுத்தும் ஆற்றல் வாய்ந்தது.

வரலாறு - தனிமை, குடும்பம், ஊர், நாடு, உலகம், உயிர், கடவுள், சமூகம், ஆட்சி, புரட்சி, போர் முதலியவற்றினின்றும் பரிணமிப்பது. அதனுள் பற்பல நிகழ்ச்சிகளும் விளைவுகளும் நிலவுகின்றன. அவை, கொள்ளத்தக்கன இவை என்பதையும், தள்ளத் தக்கன இவை என்பதையும் உள்ளங்கை நெல்லிக்கனியென விளங்கச் செய்யும். இவ்விளக்கம் வாழ்க்கைக்குத் துணைபோதல் ஒருதலை. இத்தகைய வரலாற்றுக் கலையை, 'வாழ்க்கை வழிகாட்டி' என்று கூறலாமன்றோ?

நமது நாடு புராணக் கலைக்குப் பேர் பெற்றது. புராணம் புனைந்துரையா? சரித்திரமா? இரண்டுங் கலந்த ஒன்றா? இரண்டுங் கலந்த ஒன்று புராணம் என்று கொள்வது பொருந்தும். இதுபற்றி **வின்ஸெண்ட் ஸ்மித்** உள்ளிட்ட சரித்திர ஆசிரியன்மார் வெளியிட்டுள்ள கருத்துக்கள் சிந்திக்கற்பாலன.

தமிழ் நாட்டில் ஒரு தனிப் புராணம் உலவுகிறது. அது, 'திருத்தொண்டர் புராணம்' என்பது. அதற்குப் **பெரியபுராணம்** என்றொரு பெயரும் வழங்கப்படுகின்றது. அதைத் 'தமிழ் நாட்டு வரலாற்றுப் புராணம்' என்றுஞ் சாற்றலாம்.

சேக்கிழார் தொண்டுலகு உய்யவந்த தோன்றல் - பெருவாழ்வு - தெய்விகம். அவர்தங் கல்வி, கேள்வி, ஆராய்ச்சி, அன்பொழுக்கம், பணி முதலிய அடைவுகளெல்லாந் திரண்டு தொண்டாய் அவருள் ஒன்றின. அவர் தொண்டராயினர். தொண்டரிடத்திருந்து 'தொண்டர் புராணம்' முகிழ்த்தது.

திருத்தொண்டர் புராணம் அருளப் போந்த ஆசிரியர் அமைச்சர்த் தொண்டாற் றியவர். அமைச்சர் நெஞ்சம் வெறுங் கதையளவிலா நின்றிருக்கும்? அவர் நெஞ்சம் **வரலாற்றிலும்** படிந்தது. சேக்கிழார் தமது புராணக் காப்புக்கு வரலாற்று அரண் கோலினர். அவரது புராணம் தமிழ்நாட்டின் வரலாற்றுக்கு ஓர் ஊற்றாயிற்று. அவ்வூற்றுக்கண்கள் இடைநாளில் தூர்ந்தன. தூர்ந்த கண்கள் இந்நாளில் ஒருவருக்குப் புலப்பட்டன. அவரால் அக்கண்கள் திறக்கப்பட்டன. அவர் எவர்? அவர் புலவர் மா. இராசமாணிக்கம், B.O.L., L.T., M.O.L.

புலவர் இராசமாணிக்கம், சிறந்த ஆராய்ச்சியாளர். அவர்தம் ஆராய்ச்சி சில நூல்களாகப் பயன்படுகிறது. அந்நூல்களுள் ஒன்று **பெரியபுராண ஆராய்ச்சி** என்னும் இந்நூல்.

---

*பெரியபுராண ஆராய்ச்சி, 1948 (முதற் பதிப்பு), பக். III - VI

பெரியபுராணத்தைப் பற்றிய ஆராய்ச்சி நூல்கள் சில வெளிவந்துள்ளன. அவற்றுள் அறிஞர் இராசமாணிக்கத்தின் ஆராய்ச்சியே **விழுமியது – விரிந்தது – பொருள் செறிந்தது** - என்று கூற என் மனம் எழுகிறது.

பெரியபுராணம் ஒரு பெருஞ் செழும்புலம் - தமிழ்ப் புலம். அதை உழுவதற்கு வெறுங் கல்வி கேள்வி மட்டும் போதா; வேறு பல பண்பாடுகள் தேவை. புலவர் இராசமாணிக்கம் அஞ்சா நெஞ்சங் கொண்டு பெரியபுராணப் புலத்தில் இறங்கினர்; ஊக்கமும் உறுதியுங் கொண்டு அதை உழுதனர்; அதில் அன்பு விதை விதைத்தனர்; அருள்நீர் பாய்ச்சினர்; கலைக்கதிர் பொழிந்தனர். எழுந்தது ஆராய்ச்சிப் பயிர்; விளைந்தது சரித்திரச் சாலி. அமுதப் பசும் பரவை காட்சியளிக்கிறது. கண்ணுக்கும் கருத்துக்கும் மூளைக்கும் விருந்து; நல் விருந்து.

'பெரியபுராண ஆராய்ச்சி'யில் பல மணிகள் மிளிர்கின்றன. அவையாவும் அறிவுக்குரிய அணிகள். அவற்றுள் ஈண்டு எதைத் தொடுவது; எதை விடுவது; தயக்கம் ஏற்படுகிறது. இரண்டொன்றையாதல் தொட்டுவிடுதல் நல்லதென்று தோன்றுகிறது.

'பெரியபுராண ஆராய்ச்சி' காலக்கணக்கின்மீது பெருங்கவலை செலுத்தி யிருக்கிறது. காரணம், நமது நாட்டுச் சரித்திரக் காலங்கள் கருக்கொண்டுள்ளமையும், அவை இன்னும் நன்முறையில் உருக்கொள்ளாமையுமாகும். இந்நூலாசிரியர் கருவை உருவாக்க விண்ணும் மண்ணும் அதிரச் சுழன்றுசுழன்று உழைத்த உழைப்பு அதிகம்.

சேக்கிழார், நம்பியாண்டார் நம்பி, சுந்தரர், சம்பந்தர், பல்லவர் முதலியோர் காலங்களைக் காண இந்நூலாசிரியர் முயன்றுள்ளனர். அம்முயற்சியின் அருமைப்பாடு அத்துறையில் ஈடுபட்டவர்க்கே தெரியும். ஆசிரியர் நிகழ்த்தியுள்ள ஆராய்ச்சி, இனி நாட்டில் எழப் போகுஞ் சரித்திர நிலையத்துக்குக் கால்கோளாகியுள்ளது. அது, பின்வருவோர் அறுதியீட்டுக்கும் பெருந்துணை புரிவதாகும்.

பெரியபுராணக் கதைகள் சரித்திர உயிர்ப்பு ஏறப் பெற்றவை. அவ்வுயிர்ப்புக்கு இடைக்காலத்தில் சவலை நேர்ந்தது. அச் சவலையைப் போக்கிய பெருமை இந் நூலாசிரியருடையது. அவர்தம் முயற்சியால் பெரியபுராணம் மீண்டுஞ் **சரித்திர புராணமாய் உயிர்த்தெழுந்தது.**

சேக்கிழாரின் பல்கலைப் புலமை இந்நூலில் ஓதப்பட்டிருக்கிறது. அதை நோக்க நோக்க, இந்நூலாசிரியரின் கலைப் புலமை நெஞ்சில் நிலவுகிறது. சேக்கிழார் ஒரு பல்கலைக் கழகம் என்பது ஆசிரியரால் நிறுவப்பட்டிருக்கிறது.

சேக்கிழார் அன்பை ஒரு காவியமாக வடித்த கவிஞர். அவர் தம் கவிநலம், பல துறைகளில் ஈடுபட்டுக் கருவி கரணங்களோய்ந்து கனிந்து அகமனம் பெற்றவர்க்கே செவ்விதிற் புலனாகும். ஆசிரியர் இராசமாணிக்கம் பெரியபுராணத்தைப் பன்முறை உழுது உழுது தேர்ச்சியடைந்தவர். அவர்க்குச் சேக்கிழார் பாட்டின் நடை, ஒழுக்கு, மென்மை, எளிமை, பொருண்மை, ஆழம் முதலியன புலனாகியுள்ளன. 'சேக்கிழார் செய்யுட் சிறப்பு' என்னுந் தலைப்பின் கீழ் நூலாசிரியர் எடுத்துக்காட்டியுள்ள பாக்களை உன்னுக; முன்னுக.

நூலின் இறுதியில் **ஓர் அரிய சேர்க்கை** பொலிதருகிறது. அஃது ஆராய்ச்சி யாளர்க்குக் கொழு கொம்பாகும். அது திறம்படத் தொகுக்கப் பெற்றிருக்கிறது.

திருத்தொண்டர் புராணம் இதுகாறும் சமய உலகில் பெரிதும் போற்றப்பட்டு வந்தது. இனி **அது வரலாற்று உலகிலும் போற்றப் பெறும்**. இப் பேற்றை நாட்டுக்கு

வழங்கிய புலவர் இராசமாணிக்கத்தை நாடு வாழ்த்துவதாக. இராசமாணிக்கத்தின் ஆராய்ச்சி சேக்கிழார் நூலுக்கு ஒருவிதப் புத்துயிர் அளித்தது என்று கூறல் மிகை யாகாது.

இந்நூலின் உரைநடை எளிமையில் அமைந்துள்ளது. அஃது ஆராய்ச்சிக்கு ஏற்றது. அதில் வெற்றுரையோ சொல்லடுக்கோ பொருளற்ற மொழியோ காணோம். ஆசிரியர் எண்ணம் பெரிதுங் கருத்திலேயே சென்றிருக்கிறது. புலவர் நடை அருமை என்று சொல்லப்படுவது வழக்கம். புலவர் இராசமாணிக்கத்தின் நடை அவ்வழக்கைப் பொய்ப்படுத்திவிட்டது.

தோழர் இராசமாணிக்கத்தின் புலமை ஆராய்ச்சித்துறையை நண்ணியது தமிழ் நாட்டின் திருவேயாகும். தமிழ்நாட்டின் ஆக்கத்துக்கு இன்னும் பல ஆராய்ச்சி நூற்கள் தோழர் வாயிலாக வெளிவருதல் வேண்டும். தமிழ்த்தெய்வம் அவருக்கு நீண்ட நாளையும், நல்ல யாக்கையையும், மற்றும் பல பேறுகளையும் அருள்வதாக. இராசமாணிக்கம் வாழ்க; அவர்தம் முயற்சி வெல்க.

இராயப்பேட்டை
சென்னை

திரு.வி.க.

❖ ❖ ❖

அணிந்துரை*

செந்தமிழ்த்தாயின் சிறந்த செல்வங்களுள் தலையாய ஒன்று **பத்துப்பாட்டு**. இந்நூலின் சிறப்பை,

> **பத்துப்பாட் டாதிமனம் பற்றினார் பற்றுவரோ**
> **எத்துணையும் பொருட்கிசையும் இலக்கணமில் கற்பனையே**

என்று **மனோன்மணீயம்** பாடுகிறது.

> **மூத்தோர் பாடியருள் பத்துப் பாட்டு**

என்று **தமிழ்விடுதூது** முழங்குகிறது.

பழந்தமிழ் நாகரிகத்திற்கும் பண்பாட்டிற்கும் விளக்கமாய்த் திகழும் இந்நூலை டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் முதன்முதலாக - முழுமையாக - 1889ஆம் ஆண்டு பதிப்பித்து உதவினார். அந்நாள் முதல் கடந்த எண்பது ஆண்டுகளுக்கு மேலாகப் பத்துப்பாட்டைத் துணையாகக் கொண்டு இலக்கிய - வரலாற்று - ஆய்வுகள் பல நிகழ்ந்துள்ளன. அவற்றிற்கெல்லாம் மணிமுடியாய்த் திகழ்வது, சென்னைப் பல்கலைக் கழகத்தில் 1959 முதல் 1967 வரை துணைத்தமிழ்ப் பேராசிரியராய்த் திகழ்ந்த டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்கள் இயற்றியுள்ள **பத்துப்பாட்டு ஆராய்ச்சி** என்னும் இவ்வரிய பெரிய நூல்.

டாக்டர் மா. இராசமாணிக்கனார் ஆரம்பப் பள்ளி ஆசிரியராய் வாழ்க்கையைத் தொடங்கிச் சென்னைப் பல்கலைக்கழகத் துணைத்தமிழ்ப் பேராசிரியராய் உயர்ந்தவர் - தம் முயற்சியால், தளராத உழைப்பால், அவர்தம் முற்றிய அறிவின் பெற்றியாக - முழுமணியாக - இந்நூல் விளங்குகிறது என்னலாம். அவர்தம் நூல்கள் பலவற்றுள்ளும் இறுதியானதும் உறுதியானதும் - பல்லோரும் பலகாலத்தும் பயன்படுத்தப் போவதும் இந்நூலே எனலாம்.

பத்துப்பாட்டு ஆராய்ச்சி என்னும் இந்நூலுள் டாக்டர் மா. இராசமாணிக்கனார், பழந்தமிழ்ச் செல்வமாகிய பத்துப்பாட்டை 35 தலைப்புகளில் எளிய இனிய தமிழில் ஆராய்ந்துள்ளார். இத்தலைப்புகளின் பட்டியலே ஒரு பெருந்தொகை நூலை எப்படியெல்லாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும் என்பதைத் தமிழ் இலக்கிய மாணவர்கட்குத் தெளிவுபடுத்தும். மேலும், இவ்வாராய்ச்சியினை ஆசிரியர் எழுபதுக்கு மேற்பட்ட நூல்களின் துணைகொண்டு ஆராய்ந்து எழுதியுள்ளார். அதனினும் சிறப்பாயது சங்க இலக்கியச் செல்வத்தைப் புவியியல் பாதையில் - வரலாற்றுவழி - கல்வெட்டுக் கண்கொண்டு ஆசிரியர் நுணுகி நுணுகி ஆராய்ந்திருப்பதே ஆகும். இவ்வாராய்ச்சியையும் ஆசிரியர் தமது நேர்முகஆராய்ச்சியோடு (Field Study) பிணைத்திருப்பது அவருடைய உண்மை காணும் வேட்கையையும் உழைப்பின் பெருமையையும் உலகுக்கு உணர்த்தும். ஒருநாள் காஞ்சிபுரத்தில் பெய்த பெருமழையுங் கூட (பக்கம் - 139) ஆசிரியருக்கு உண்மை காண உதவியிருக்கிறது!

---

*பத்துப்பாட்டு ஆராய்ச்சி, 1970 (முதற்பதிப்பு), பக். VII - VIII

உண்மையான ஆராய்ச்சியாளனுக்கு நடுவுநிலைமையே உயிர். இவ்வுண்மைக்கு உரைகல்லாயும் இந்நூல் விளங்குகிறது. தம்முடைய மதிப்பிற்குரிய பெரியோர்கள் டாக்டர் சாமிநாத ஐயர், டாக்டர் சோமசுந்தர பாரதியார் போன்றோர்கள் கருத்துகளிடம் தமக்குள்ள வேறுபாட்டைப் பணிவுடனும் துணிவுடனும் ஆசிரியர் புலப்படுத்தியிருப்பது ஆராய்ச்சிக்கு அணிகலமாகும்.

எண்ணூறு பக்க எல்லையை எட்டும் இந்நூல் காண்பதற்கும் கற்பதற்கும் அரியது, பெரியது. டாக்டர் சாமிநாத ஐயர் அவர்களால் எண்பது ஆண்டுகளுக்கு முன்பு வெளியிடப்பெற்ற பத்துப்பாட்டுக்கு இவ்வாராய்ச்சி நூல் சிறந்த பரிசாகும். இத்தகைய ஆராய்ச்சி நூலை எழுதி உதவிய டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்களுக்குத் தமிழ் ஆராய்ச்சி உலகம் செய்யத்தக்க சிறந்த கைம்மாறு இத்தகைய - இயலுமேல், இதனினும் சிறந்த - ஆராய்ச்சி நூல்களை இன்னும் பலவாக வெளிப்படுத்துதலே ஆகும்.

பத்துப்பாட்டு ஆராய்ச்சியை *ஆசிரியர் ஆறு ஆண்டுகளுக்கு முன்பே (1964) பல்கலைக்கழகத்திடம் தந்துவிட்டார்கள். அவர்கள் மறைந்தும் மூன்று ஆண்டுகள் ஆகின்றன. யான் பதவியேற்று ஓராண்டு முடிவதற்குள் ஆறு ஆண்டுகளாய் அச்சேறாமல் இருந்த இந்நூலை அச்சேற்ற இயன்றமைக்கு அகமிக மகிழ்கிறேன்.*

கோலாலம்பூரில் நடைபெற்ற முதல் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் கலந்து கொண்ட ஓர் அறிஞரின் உயர்ந்த ஆராய்ச்சி நூலுக்கு மூன்றாவது உலகத் தமிழ் மாநாட்டுக்குப் புறப்படும் நேரத்தில் அணிந்துரை வழங்க நேர்ந்தமை குறித்துத் தனி மகிழ்வு - பெருமகிழ்வு - எய்துகிறேன்!

வளர்க, வாழ்க தமிழ் ஆராய்ச்சித்திறம்!

9-7-1970 **நெ. து. சுந்தரவடிவேலு**

❖ ❖ ❖

முகவுரை*

பல்லவர் வரலாறு

நான் **பல்லவர் வரலாறு** எழுத விரும்பி அதற்குரிய ஆராய்ச்சி நூல்களையும் பல்லவர் காலப் பட்டயங்களையும் கல்வெட்டுகளையும் இலக்கிய நூல்களையும் படித்துவந்த பொழுது, மூவர் திருமுறைகளில் வரும் சில குறிப்புகளும் பெரிய புராணத்தில் வரும் பல குறிப்புகளும் கல்வெட்டு-பட்டயக் குறிப்புகளுடன் ஒன்று படுதலைக் கண்டு வியந்து ஆராயத் தொடங்கினேன்; அவ்வாராய்ச்சியின் பயனாக, பெரியபுராணத்திற் காணப்படும் போர்கள் - பஞ்சங்கள் - ஊராட்சி முறை - நாணய முறை - சமுதாய வாழ்க்கை - சமயநிலை முதலியன **பல்லவர் கால உண்மை வரலாற்றை அடிப்படையாகக் கொண்டவை** என்பதை அறிந்தேன்; இந்த உண்மைகளுட் சிலவற்றை எனது பல்லவர் வரலாற்றில் ஆங்காங்குக் குறிப்பிட்டுள்ளேன்.

சோழர் வரலாறு

பெரியபுராணத்துக்கு மூல நூல்களாகக் கூறப்படும் 11 திருமுறைகட்கும் பெரிய புராணத்திற்கும் பல இடங்களில் வேறுபாடுகள் உண்டு; பின்னவற்றிற் காணப்பெறாத பல செய்திகளைச் சேக்கிழார் விரிவாகக் கூறலும், பின்னவற்றிற் குறிப்பாகக் கூறப்பட்டவற்றைச் சேக்கிழார் பல விவரங்களுடன் கூறலும் கவனிக்க, சேக்கிழார் கூற்றுக்குத் தக்க சான்றுகள் அவர் காலத்தில் இருந்திருத்தல் வேண்டும் என்ற எண்ணம் உண்டாயது. அவ்வெண்ணம் **சோழர் வரலாறு** எழுத விரும்பி ஆராய்ச்சி நிகழ்த்திய பொழுது உறுதிப்பட்டது. விஜயாலயன் மரபினரான சோழப் பேரரசர் காலத்தில் சைவ சமய வளர்ச்சி உச்சநிலையை அடைந்தது; பாடல்பெற்ற கோவில்கள் கற்றளிகளாக மாறின; நாயன்மார்க்குக் கோவில்களிற் பூசையும் விழாவும் நடத்த ஏற்பாடுகள் நடைபெற்றன; நாயன்மார் வரலாற்று நிகழ்ச்சிகள் ஓவிய-சிற்பங்களிற் காட்டப்பட்டன. அக்கால மக்கள் நாயன்மார் பெயர்களைத் தங்கள் பிள்ளைகட்கு இட்டு வழங்கினர். இத்தகைய பல விவரங்கள் சோழர் காலத்துக் கல்வெட்டுகளிலிருந்து தெரிந்தன. மேலும், பெரியபுராணத்திற் கூறப்பட்ட சிற்றரசர் மரபினர் சேக்கிழார் காலத்திலும் சிற்றரசர்களாகவே இருந்து வந்தனர் என்பதையும் கல்வெட்டுகள் மெய்ப்பிக்கின்றன. இத்தகைய பல விவரங்களைக் கொண்டும், சோழப் பெருநாட்டின் முதல் அமைச்சராக இருந்து தாம் பல வழிகளில் அறிந்த பிற செய்திகளைக் கொண்டுமே சேக்கிழார் வரலாற்றுப் பகுதிகளைத் தமது பெருநூலிற் பாடினார் என்பது விளக்கமாயிற்று.

அரங்கேற்றம்

இங்ஙனம் யான் அறிந்து வைத்த செய்திகள் பேரறிஞர் முன் அரங்கேற்றம் பெற வேண்டுமல்லவா? 1942 ஏப்ரல் திங்களில் தஞ்சை - மன்னார்குடியில், கோவை - பெரிய புராண விருத்தியுரை ஆசிரியர் **சிவக்கவிமணி சி. கே. சுப்பிரமணிய முதலியார், B. A.** அவர்கள் தலைமையிற் பேசினேன்; அதே ஆண்டு நவம்பர் முதல் நான்கு நாட்கள்

---

*பெரியபுராண ஆராய்ச்சி, 1948 (முதற் பதிப்பு), பக். VII - X

சென்னையில் தமிழ்ப் பெரியார் **திரு. வி. கலியாண சுந்தரனார்** அவர்கள் தலைமையிற் பேசினேன்; 1943 ஏப்ரலில் தஞ்சை - மன்னார்க்குடியில், சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் ஆராய்ச்சித்துறைத் தலைவர் - திரு. **ரா. பி. சேதுப்பிள்ளை, B.A., B.L.** அவர்கள் முன்னிலையிற் பேசினேன்; அதே ஆண்டு, செப்டம்பர்த் திங்களில் வேலூர் - நகரப் பெருமண்டபத்தில் சைவப் பெரியார் திரு. **ச. சச்சிதானந்தம் பிள்ளை, B.A., L.T.** அவர்கள் தலைமையில் ஐந்து நாட்கள் சொற்பொழிவாற்றினேன்; அதே ஆண்டு அக்டோபர் மாதம் சேலம் - செவ்வாய்ப் பேட்டையில் நடைபெற்ற சன்மார்க்க சங்க மாநாட்டில் - **மறைதிரு – மறைமலையடிகளார்** தலைமையில் இரண்டு நாள் பேசினேன்; 1944 மே மாதம் பழநி - சைவ சித்தாந்த மாநாட்டில் - தமிழ் அறிஞர் - திரு. **T.M. நாராயண சாமிப்பிள்ளை, M.A., B.L.** அவர்கள் தலைமையிற் பேசினேன். இப்பெருமக்கள் இவ்வாராய்ச்சிக்கு ஊக்கம் அளித்தனர்.

எனது விருப்பம்

இந்த ஆராய்ச்சிச் செய்திகளில் சமயத் தொடர்பான - கருத்து வேறுபாடுகட்கு இடமான - செய்திகள் இடம் பெற்றில. அவற்றை ஆராய்வதும் இம் முயற்சியின் நோக்கமன்று. சேக்கிழார் சிறந்த வரலாற்று உணர்ச்சியுடன் தக்க சான்றுகளைக் கொண்டே - சிறப்பாக, நாயன்மார் கால நிலையை உளங்கொண்டே தமது நூலைப் பாடியுள்ளார் என்பதும், பெரியபுராணம் வரலாறு - இலக்கியம் - இலக்கணம் - சமய சாத்திரங்கள் இவற்றை அடிப்படையாகக் கொண்டு செய்யப்பட்ட பெருங் காவியம் என்பதும் சாதாரண தமிழ்மக்களும் அறிதல் வேண்டும் என்பது எனது விருப்பம். ஆதலின் இவ்வாராய்ச்சிச் செய்திகளை நூல் வடிவில் வரைய விரும்பினேன்.

ஆராய்ச்சி நூல்

நூல் ஆங்கிலத்தில் எழுதப் பெறின் எம். ஒ. எல். (M.O.L.) ஆராய்ச்சிப் பட்டத்திற்கு அனுப்பலாம் என்னும் எண்ணம் தோன்றியது. எனது நூலைச் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் ஆராய்ச்சித்துறைத் தலைவராக இருந்த இராவ்சாஹிப் **எஸ். வையாபுரிப் பிள்ளை, B.A., B.L.** அவர்கள் நன்கு பார்வையிட்டு உதவினார்கள். பின்னர் 1945 ஜனவரித் திங்களில் நூலைச் சென்னைப் பல்கலைக் கழகத்துக்கு அனுப்பினேன்; அதே ஆண்டு ஜூலைத் திங்கள் எம். ஒ. எல். பட்டம் கிடைத்தது.

ஆங்கிலத்தில் நூலை வெளியிடுவதிலும் **தமிழில்** வெளியிடல் தமிழர் படிக்க நன்றாம் ஆதலின் **மிக விரிவான முறையில்** தமிழில் எழுதத் தொடங்கினேன்; ஆங்கில நூலில் சுருங்கக் கூறிய பல செய்திகளை இதனில் விரிவாகக் கூறியுள்ளேன்; ஆங்கில நூலில் இடம்பெறாத **பிற்சேர்க்கை** 1-10 இதனில் இடம்பெற்றுள்ளன.

காவியச் சிறப்பு

சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய தமிழ் நாட்டுக் காவியங்கட்குப் பல நூற்றாண்டுகட்குப் பிறகு தமிழ் நாட்டு மக்களைப் பற்றி எழுந்த காவியம் பெரியபுராணமே ஆகும். மேலும் இதன்கண் இடம் பெற்றுள்ள நாயன்மார் துங்கபத்திரையாற்றின் கரையில் உள்ள காம்பீலி நகரம் முதல் கன்னிமுனைவரை உள்ள நாட்டினராவர். அவர் பல மரபினர்; பல்வேறு காலத்தவர். அவர்கள் பழக்க வழக்கங்கள், உள்நாட்டு வாணிகம், கடல் வாணிகம், அக்காலச் சமயநிலை, பல கலை வளர்ச்சி, தென் இந்திய வரலாற்றுச் செய்திகள் முதலியன வேறு எந்தத் தமிழ் நூலைக் கொண்டும் இந்த அளவு அறிய வசதி இல்லை. இந்நூலைக் கொண்டுதான் பல்லவர் காலத் (கி. பி. 300-900) தமிழகத்தை ஒருவாறு அறிய முடியும்; பரந்துபட்ட இக்கால நிலையை விளக்கவும் நூற்றுக்கணக்கான தலங்களைக் குறிக்கவும் **சேக்கிழார் தமிழ்நாடு முழுவதும் சுற்றியவர்** என்பது கவனிக்கத் தக்கது. இங்ஙனம் அரும்பாடுபட்டு ஆராய்ச்சி செய்து காவியம்

பாடியவர் தமிழில் வேறெவருமே இல்லை. இவற்றால், பெரியபுராணம் தமிழர் வரலாற்றில் 600 வருடகால விவரங்களை ஓரளவு அறிவிக்கும் **ஆதார நூல்** என்னல் தவறாகாது. இத்தகைய வரலாற்று நூலைத் தந்த சோழப் பெருநாட்டின் முதல் அமைச்சராகிய சேக்கிழார் பெருமானுக்கு நமது நன்றியும் வணக்கமும் உரியவாகுக.

இந்த நூலுக்கு **அணிந்துரை** அளித்து எனது முயற்சிக்கு ஆசியளித்துள்ள பெரியார் திரு. வி. க. அவர்கட்கு என் நன்றியும் வணக்கமும் உரிய.

விவேகானந்தர் கல்லூரி
சென்னை

மா. இராசமாணிக்கம்

❖ ❖ ❖

முகவுரை*

இன்றுள்ள தமிழருள் பல வகுப்பாரிடம் திருமணத்தின் போது தாலி கட்டும் வழக்கம் இருந்துவருகிறது. இப்பழக்கம் தொன்றுதொட்டே தமிழரிடை இருந்து வந்ததா? இப்பழக்கம் இல்லையெனில், அப்பண்டைக் காலத்தில் மணவணியாகக் கருதப்பட்டு வந்தது யாது? எப்பொழுது மங்கலநாண் வந்தது? எப்பொழுது மங்கலநாணில் தாலி இடம் பெற்றது? மலையாளத்திலுள்ள தாலிகட்டுக் கல்யாணம் என்பதன் கருத்து யாது? பத்தொன்பதாம் நூற்றாண்டு முடிய, தமிழர் வகுப்புகளிலும், ஏனைய திராவிட வகுப்புகளிலும் தாலி கட்டும் பழக்கம் இருந்து வந்ததா? தாலியெனும் சொல்லுக்குப் பொருள் யாது? என்பன போன்ற பல கேள்விகட்கு இலக்கியம், இலக்கணம், வழக்காறு, வரலாறு, ஆராய்ச்சியாளர் இதுபற்றிக் கூறும் சான்றுகள் முதலியவற்றைக் கொண்டு விடையளிப்பதே இவ்வாராய்ச்சி நூலின் நோக்கமாகும்.

யான் 1954ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் **மதுரைத் திருவள்ளுவர் கழகத்தில்** 'தென்னிந்திய வரலாறும் தமிழிலக்கியமும்' என்ற பொருள்பற்றி ஆறு சொற்பொழிவுகள் செய்தேன். அப்போது. வளரும் சமுதாயத்தில் காலப் போக்கில் பல மாற்றங்கள் ஏற்படுதல் இயல்பு என்பதைக் கூறுமிடத்து, "சங்க காலமுதல் கி.பி. 10ஆம் நூற்றாண்டு வரையில் தமிழர் திருமணத்தில் தாலிகட்டும் வழக்கம் இருந்தமைக்குச் சான்றில்லை என்றும், பின்னரே மங்கல நாணும், தாலியும் வந்தன என்றும் கருதத்தக்க நிலையில் இலக்கியச் சான்றுகள் உண்டு" என்பதைக் குறிப்பிட்டேன். இச்செய்தி 'தினத்தந்தி'யில் வெளிவந்தது. தமிழரசுக் கட்சித் தலைவரும் என் மதிப்பிற்குரிய நண்பருமாகிய உயர்திருவாளர் **ம. பொ. சிவஞான கிராமணியார்** அவர்கள் யான் கூறிய செய்தி 'உண்மைக்கு மாறானது' என்று 'தினத்தந்தி' தீபாவளி மலரில் ஒரு கட்டுரை எழுதினார்கள். அவர்களது கட்டுரையை மறுத்துத் 'தென்றல்' ஆசிரியரும் என் மதிப்பிற் குரிய நண்பருமாகிய உயர்திருவாளர் **கண்ணதாசன்** அவர்கள் மறுப்புக் கட்டுரை எழுதினார்கள்.

இந்நிலையில், மதுரைத் திருவள்ளுவர் கழகத்தில் தாலி பற்றி யான் பேசியது என்ன என்பதை அறியத் தமிழ் மக்கள் பலர் ஆவலுற்று எனக்குப் பல ஊர்களிலிருந்து கடிதங்கள் எழுதிவந்தனர். அப்பொழுது, எதனிலும் உண்மை காண்பதையே குறிக்கோளாகக் கொண்டுள்ள உயர்திரு. கருமுத்து தி. சுந்தரஞ்செட்டியார் பி. காம். அவர்கள், இப்பொருள் பற்றித் தொடர்ச்சியாகத் தங்கள் 'தமிழ்நாடு' என்னும் செய்தித்தாளில் எழுதும்படி பணித்தார்கள். அவர்கள் பணித்தபடி இப்பொருள்பற்றி ஒன்பது கட்டுரைகள் 'தமிழ்நாடு' ஞாயிறு மலரில் வெளியிடப்பட்டன. இவ்விதழின் ஆசிரியராகவுள்ள உயர்திரு கருமுத்து தி. மாணிக்கவாசகஞ் செட்டியார் பி. ஏ. அவர்களும் இத்தகைய ஆராய்ச்சிக் கட்டுரைகளை மனமுவந்து வரவேற்றார்கள். இவ்விரு பெருமக்களுக்கும் எனது உளமார்ந்த நன்றி உரியது.

இவ்வாராய்ச்சிக்குப் பெருந்துணையாக இருந்து, எனக்கு அடிக்கடி ஊக்கமும் உதவியும் உவப்புடன் அளித்த எங்கள் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் அனைவருக்கும் -

---

*தமிழர் திருமணத்தில் தாலி, 1955 (முதற் பதிப்பு), பக். 5 - 6

சிறப்பாகச் சித்தாந்த கலாநிதி பேராசிரியர் **ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை** அவர்களுக்கும், இந்நூலை உடனிருந்து எழுதுவதிலும் அச்சுப்படிகளைப் பார்வையிட்டுத் திருத்துவதிலும் பேருதவிபுரிந்த எங்கள் கல்லூரித் தமிழ்த்துறையைச் சேர்ந்த உயர்திரு. சி. கனகசபாபதி பி.ஏ. ஆனர்சு. அவர்களுக்கும் எனது நன்றி உரியது.

யான் எக்கட்சியையும் சேர்ந்தவனல்லன்; ஆதலின் எல்லாக் கட்சியினரிடமும் பழகும் வாய்ப்புப் பெற்றவன்; எதிலும் உண்மை காணவேண்டும் - கண்ட உண்மையை உள்ளவாறு உரைக்கவேண்டும் என்பதே எனது குறிக்கோள். இக்குறிக்கோளைத் துணையாகக்கொண்டு, தமிழர் சமுதாய வரலாற்றை மேற்சொல்லப்பட்ட இலக்கியம் முதலிய சான்றுகளைக்கொண்டு விரிந்த நூலாக எழுத வேண்டும் என்பது எனது விருப்பம். அவ்விருப்பத்தைத் தொடங்குவிக்கும் முறையில் இத்துறையில் எனக்கு ஊக்கமூட்டியவர் அறிஞர் சிவஞான கிராமணியார் ஆவர். அக்கெழுதகை நண்பருக்கு எனது நன்றி உரியதாகுக.

பண்டை இலக்கியங்களில் மங்கலநாணோ, தாலியோ தமிழர் திருமணத்தின்போது கட்டப்பட்டதாகத் தெரியவில்லை. ஆதலால், இப்போது கட்டவேண்டா என்று யான் கூறவில்லை; இதுகாறும் கட்டிவந்தது தவறென்றும் சொல்லவில்லை. தாலி பற்றிய வரலாற்றைத் தமிழ் மக்கள் அறிய வேண்டும் என்னும் ஆர்வம் ஒன்றே இதனை எழுதத் தூண்டியது. இலக்கியங் கொண்டு காணத்தகும் இத்தகைய பழக்கவழக்கங்களும், சடங்குகளும், பிறவும் எத்தகைய கட்சிப்பற்று மின்றி, நடுவுநிலையிலிருந்து - ஆராய்ச்சி செய்யப்படுதல் வேண்டும் என்பதே எனது தாழ்மையான கருத்து.

இந்நூலில் கூறப்பட்டுள்ள பல நூல்களின் காலங்கள் பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் வெளியிட்டுள்ள 'தமிழ் இலக்கிய வரலாற்'றில் கூறப்பெற்றவை. இந்நூலினை வரவேற்றுச் சிறந்த முறையில் வெளிப்படுத்தியுள்ள காரைக்குடி செல்வி பதிப்பகத்தாருக்கு எனது நன்றி என்றும் உரியது. இவ்வாராய்ச்சியைப் பாராட்டி நேரிலும் கடித வாயிலாகவும் எனக்கு ஊக்கமளித்த தமிழ்ப் புலவர் பெருமக்களுக்கு எனது அகங்கனிந்த நன்றி உரியதாகுக.

தியாகராசர் கல்லூரி
மதுரை

மா. இராசமாணிக்கம்

❖ ❖ ❖

முகவுரை*

தமிழ் இலக்கியம், **சங்ககால இலக்கியம், இடைக்கால இலக்கியம், பிற்கால இலக்கியம்** *என மூவகைப்படும். பாண்டியர் வழிவழிச் சங்கம் வைத்துத் தமிழை வளர்த்த காலமே* **சங்ககாலம்** *என்பது. அதன் கீழ் எல்லை, ஏறத்தாழக் கி. பி. 300 என்னலாம்; மேல் எல்லை, வரையறுத்துக்கூற இயலாத பழைமையுடையது. பரந்துபட்ட அச்சங்க காலத்தில் செய்யப்பட்ட இலக்கிய நூல்களும் இலக்கண நூல்களும் பலவாகும் என்பது, தொல்காப்பியம் என்னும் பேரிலக்கணத்தாலும் அதன் உரைகளாலும், சிலப்பதிகாரம், யாப்பருங்கலம், இறையனார் களவியல் ஆகியவற்றின் உரைகளாலும் அறியப்படும்.*

பரந்துபட்ட அச்சங்ககாலத்தில் இயற்றப்பட்ட நூல்கள் பனையோலைகளில் எழுதப்பட்டவை. ஆதலால், அவற்றுள் பல, காலப்போக்கில் அழிந்துபட்டன. தமிழ் வளர்த்த பாண்டியர் தம் தலைநகரங்களைக் கடற்கரையில் அமைத்திருந்தனர். கடல்கோள்களால் அந்நகரங்கள் அழிந்தபோது அவ்வழிவில் சங்கநூல்கள் பலவும் மறைந்தன. இங்ஙனம் பல காரணங்களால் அழிந்தன போக, இன்று எஞ்சியுள்ள நூல்கள் சிலவேயாகும். அவற்றுள் **தொல்காப்பியம்** *என்பது பேரிலக்கண நூலாகும்;* **பத்துப்பாட்டு, எட்டுத் தொகை, திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை** *என்பவை இலக்கிய நூல்களாகும். இவற்றுள் எட்டுத்தொகை என்பது தொகுக்கப்பெற்ற எட்டு நூல்களாகும். அவை* **நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு** *என்பவை. இவற்றுள் ஒவ்வொரு நூலிலும் பல காலங்களில் வாழ்ந்த புலவர் பலருடைய பாக்கள் தொகுக்கப்பட்டுள்ளன.*

பத்துப்பாட்டு *என்னும் நூலில் நெடும்பாடல்கள் பத்து அடங்கியுள்ளன. அவை* **திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும் பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம்** *என்பவை. அவற்றுட் சிறிய பாட்டு 'முல்லைப்பாட்டு' என்பது. அது 103 அடிகளை உடையது; மிகப்பெரிய பாட்டு 'மதுரைக்காஞ்சி' என்பது. அது 728 அடிகளை உடையது. பத்துப்பாட்டுகளும் 3552 அடிகளை உடையவை.*

பத்துப்பாட்டுள் திருமுருகாற்றுப்படை சமயத் தொடர்பானது. முல்லைப்பாட்டும் குறிஞ்சிப்பாட்டும் அகப்பொருள் பற்றியவை. பிற பாக்கள் நெடுநிலமன்னர், குறுநில மன்னர்களைப் பற்றியவை. பொருநராற்றுப்படையும் பட்டினப்பாலையும் **கரிகாலன்** *மீது பாடப்பட்டவை. நெடுநல்வாடையும் மதுரைக்காஞ்சியும்* **பாண்டியன் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்** *மீது பாடப்பட்டவை. பெரும்பாணாற்றுப் படை, தொண்டை நாட்டை ஆண்ட* **தொண்டைமான் திரையன்** *மீது பாடப்பட்டது. சிறுபாணாற்றுப்படை, தொண்டை நாட்டை அடுத்த ஒய்மானாட்டை ஆண்ட* **நல்லியக்கோடன்** *மீது பாடப்பட்டது. மலைபடுகடாம் என்பது தொண்டை நாட்டுப்*

பத்துப்பாட்டு ஆராய்ச்சி, 1970 (முதற்பதிப்பு), பக். IX - XIV

பல்குன்றக் கோட்டத்தை ஆண்டு வந்த **நன்னன்மீது** பாடப்பட்டது. எனவே, இப்பாடல்கள் **தொண்டை நாடு, ஓய்மானாடு, சோழநாடு, பாண்டிநாடு** ஆகிய நாடுகளைப் பற்றியவை; அந்நாடுகளை ஆண்ட அரசர்களின் வீரச் சிறப்பையும் கொடைச் சிறப்பையும் ஆட்சிச் சிறப்பையும் நாட்டு அமைப்பையும் பல திறப்பட்ட மக்களின் வாழ்க்கை முறையினையும் படம் பிடித்துக் காட்டுபவை.

அப்பாடல்கள் அனைத்தும் கி.பி. முதல் மூன்று நூற்றாண்டுகளைச் சேர்ந்தவை. ஆதலால், அம்மூன்று நூற்றாண்டுகளிலும் நிலவிய தமிழ் நாட்டு அரசியல், மக்கள் வாழ்க்கை, பயிர்த்தொழில், கைத்தொழில், சமயம், நாகரிகம், பண்பாடு முதலியவற்றை அப்பாடல்களின் துணையைக் கொண்டு நன்கறியலாம்.

பத்துப்பாட்டை அரும்பாடுபட்டுப் பதிப்பித்த **டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர்** அவர்கள் தமிழர் பாராட்டுக்கு உரியவராவர். அப்பெரியார் நல்லியக்கோடனைப் பற்றி எழுதுகையில், "இவனுடைய ஊர்களுள் ஒன்றாகிய **மாவிலங்கை** என்பது, புனனாட்டுக்கு வடக்கிலுள்ள **அருவா நாடு, அருவாவடதலை நாடு** என்ற இரண்டும் சேர்ந்த இடமென்று கூறுவர்; அவ்வூர் இன்னதென்பது புறநானூற்றாலும் தெரிகின்றது. இவனுடைய மற்ற ஊர்களுள் **எயிற்பட்டினம், வேலூர், ஆமூர்** என்பவை தொண்டை நாட்டிலுள்ள இருபத்து நான்கு கோட்டங்களுள் **மூன்று கோட்டங்களுக்குத் தலைநகரங்களாயிருந்தவை;** வேலூர், உப்புவேலூரென்று இக்காலத்து வழங்குகின்ற தென்பர்,"[1] என்று எழுதியுள்ளனர்.

டாக்டர் ஐயரவர்கள் இங்ஙனம் எழுதினமையால், வேலூர்க்கோட்டம், ஆமூர்க்கோட்டம், எயிற்கோட்டம் என்னும் மூன்று கோட்டங்களும் சேர்ந்தது ஓய்மானாடு என்று கருதும் நிலை உண்டானது. எயிற்கோட்டம் காஞ்சியைச் சுற்றியுள்ள நிலப்பகுதி. வேலூர்க்கோட்டம் என்று ஒரு கோட்டமே தொண்டைநாட்டில் இருந்ததில்லை என்பது கல்வெட்டுகளால் தெரிகிறது. ஆமூர்க்கோட்டம் என்பது செங்கற்பட்டு மாவட்டத்தில் திருப்போரூர், மாமல்லபுரம் முதலியவற்றைக் கொண்ட நிலப்பகுதி. எனவே, ஓய்மானாடு என்பது, ஐயரவர்கள் கருத்துப்படி, செங்கற்பட்டு மாவட்டத்தில் காஞ்சிபுரப் பகுதியும் மாமல்லபுரப் பகுதியும் சேர்ந்தது என்று கொள்ளுதல் வேண்டும். அங்ஙனம் கொள்ளின், தொண்டை நாட்டின் இரண்டு கோட்டங்கள் ஓய்மானாட்டைச் சேர்ந்தனவாகக் கருதப்படும்.

ஆயின், ஓய்மானாடு என்பது திண்டிவனத்திற்கு வடக்கிலுள்ள மாவிலங்கையை வடவெல்லையாகவும், கடலைத் தென்னெல்லையாகவும், சூணாம்பேடு என்னும் ஊரையடுத்த வில்லிப்பாக்கத்தைக் கிழக்கெல்லையாகவும் கொண்டது. அந்நாடு மேற்கில் ஏறத்தாழ விழுப்புரம் வரையில் பரவியிருந்தது என்பது, இதுவரையிற் கிடைத்துள்ள கல்வெட்டுகளால் அறியப்படும் உண்மையாகும். இந்த நான்கு எல்லைகளுக்கு உள்ளேயே **எயிற்பட்டினம்** இருந்தது. **வேலூர், ஆமூர்** என்னும் ஊர்கள் இன்றும் இருக்கின்றன என்பது இங்கு அறியத்தகும். இன்றுள்ள மரக்காணத்தை அடுத்த கடற்கரையில் எயிற்பட்டினம் இருந்து மறைந்திருத்தல் வேண்டும் என்பது கல்வெட்டுகளிலிருந்து ஊகிக்கப்படும் செய்தியாகும். எயிற்பட்டினம் இருந்த இடத்தை அறிவதற்கு யான் இடைக்கழி நாட்டையும் அங்கிருந்து மரக்காணம் வரையில் உள்ள பாதையையும் நன்கு பார்வையிட்டேன். இன்றுள்ள திண்டிவனமே சங்ககாலக் **கிடங்கில்** என்பது. அதற்கு வடக்கில் ஏழுகல் தொலைவிலுள்ள மேல்மாவிலங்கை, கீழ்மாவிலங்கை என்னும் இரண்டு ஊர்களும் சேர்ந்த பகுதியே பண்டைக்கால **மாவிலங்கை** என்பது.

ஆராய்ச்சிப் பேரறிஞரான **நாவலர் டாக்டர் ச. சோமசுந்தர பாரதியார்** அவர்கள், 'பொருநராற்றுப்படைக்குரிய **கரிகாலன் வேறு;** பட்டினப்பாலைக்குரிய திருமாவளவன் வேறு', என்று ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையை எழுதியுள்ளார்.[2] ஆராய்ச்சித்

திறன் படைத்த அவர்கள் அந்த முடிவிற்கு வந்தது எனக்குக் குழப்பத்தை விளைத்தது. அவர்கள் தரும் சான்றுகளைப் பல முறை ஆராய்ந்து பார்த்த போது, அவர்கள் முடிவு பொருந்துவதன்று என்பது தெரிந்தது. அது பற்றிய விளக்கம் **கரிகாலன்** என்னும் தலைப்பின்கீழ்த் தரப்பட்டுள்ளமை காண்க.

வடவார்க்காடு மாவட்டத்திலுள்ள சவ்வாது மலைகள் சங்ககால நன்னனது மலை நாடாகும். அவற்றுக்குத் தெற்கே உள்ள **செங்கம்** என்னும் ஊரே நன்னனது தலைநகரான **செங்கண்மா** என்பது. இம்மலைகள் ஏறத்தாழ நாற்பது கல் நீளமும் பத்துக்கல் அகலமும் உடையவை. யான் இந்நீண்ட மலைத்தொடரைச் சுற்றிப் பார்த்தேன்; செங்கம் என்னும் ஊரையும் அவ்வூர்க் கோயிலிலுள்ள கல்வெட்டுகளையும் பார்த்தேன்.

இன்றுள்ள காஞ்சி நகரத்திற்குக் கிழக்கிலுள்ள நிலப்பரப்பிலேயே சங்ககாலக் கச்சிமாநகர் அமைந்திருந்தது போலும்! இன்றுள்ள மதுரைக்குத் தெற்கிலும் திருப்பரங் குன்றத்துக்குக் கிழக்கிலும் சங்ககால மதுரை அமைந்திருந்தது போலும்! யான் இவ்விடங்களுக்கெல்லாம் சென்று ஆராய்ந்து, கல்வெட்டுச் சான்றுகளையும் இலக்கியச் சான்றுகளையும் கண்டறிந்து, இவை பற்றிய என் கருத்துக்களைப் படவிளக்கத்துடன் அவ்வப்போது **கலைக்கதிர்ப்** பொங்கல் மலரிலும், **கலைமகள்** தீபாவளி மலரிலும், சென்னைப் பல்கலைக்கழக ஆங்கில வெளியீடுகளிலும் வெளியிட்டு வந்தேன். அவை அனைத்தும் விளக்கத்துடன் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

பாலாற்றின் போக்கும் வெஃகாவின் போக்கும் பின் நூற்றாண்டுகளில் மாறிவிட்டன. **கல்வெட்டு, இலக்கியம், நேர்முக ஆராய்ச்சி** ஆகிய இவற்றின் துணையால் யான் இவை பற்றிக் கண்டறிந்த உண்மைகளை இந்நூலில் எழுதியுள்ளேன்.

பத்துப்பாட்டுள் இடம் பெற்றுள்ள பிற மொழிச் சொற்கள் இந்நூலில் கூறப் பட்டுள்ளன. பத்துப்பாட்டுக்கு உரை வரைந்த நச்சினார்க்கினியரது புலமைத்திறன், இறுதிப் பகுதியாக அமைக்கப்பட்டுள்ளது.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் ஆராய்ச்சித்துறைத் தலைவராயிருந்து காலஞ்சென்ற **பேராசிரியர் டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளையவர்கள்**, 1959ஆம் ஆண்டின் இறுதியில், "நீங்கள் தென்னிந்திய வரலாற்றிலும் கல்வெட்டுகளிலும் பயிற்சி பெற்றிருத்தலால், மிக விரிவான முறையில் **பத்துப்பாட்டு** என்னும் சங்க நூலைப்பற்றிய ஆராய்ச்சி நூல் ஒன்று எழுத வேண்டும்" என்று பணித்தார்கள். அத்திட்டத்தைப் பல்கலைக்கழக அதிகாரிகளும் ஏற்றுக்கொண்டார்கள்.

யான் அத்திட்டத்தின்படி கடந்த நான்கு ஆண்டுகளாகப் பத்துப்பாட்டு ஆராய்ச்சியில் ஈடுபட்டேன். 1963 ஆம் ஆண்டு, சூலைத் திங்கள், முதல் நாள், ஆராய்ச்சித் துறைத் தலைவராகப் பதவி ஏற்ற **பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனார்** அவர்களிடம் யான் அதுகாறும் செய்து வந்த ஆராய்ச்சியையும் மேலும் செய்ய வேண்டியிருந்த வேலையையும் விளக்கினேன். தமிழ் ஆராய்ச்சித் துறையில் தலைசிறந்த அவர்கள், என் வேலைத்திட்டத்தைக் கேட்டு மகிழ்ந்தார்கள்; யான் சங்ககால மதுரை, சங்ககாலக் கச்சி மாநகர், எயிற்பட்டினம், மாவிலங்கை, கிடங்கில், இடைக்கழி நாடு, நன்னனது மலைநாடு என்பனவற்றை நேரிற்கண்டு ஆராய்ச்சி நிகழ்த்த வேண்டும் என்று கூறியபோது எனக்கு மிகுந்த ஊக்கமளித்தார்கள். அவர்கள் அவ்வப்போது அளித்துவந்த ஊக்கமே இந்நூலின் பெருக்கத்திற்கும் பல புதிய செய்திகளுக்கும் அடிப்படையாகும். ஆதலின், அவர்களுக்கு எனது நன்றி உரியது.

இவ்வாராய்ச்சி புரிய எனக்கு இசைவு தந்ததுடன் இந்நூலை அச்சிட்டு உதவிய சென்னைப் பல்கலைக்கழக அதிகாரிகளுக்கு எனது நன்றி உரித்தாகுக.

மதுரை முதலிய பல ஊர்களில் எனது ஆராய்ச்சிக்கு உதவி புரிந்த திரு. N.M.R. ஜம்புநாதன், M.A., முதலிய நண்பர் அனைவர்க்கும் எனது உளமார்ந்த நன்றி உரியது.

சென்னைப் பல்கலைக்கழகம் **மா. இராசமாணிக்கம்**
சென்னை

குறிப்புகள்

1. பத்துப்பாட்டு, மூன்றாம் பதிப்பு, பாடப்பட்டோர் வரலாறு, ப. 53

2. பழந்தமிழ் நாடு, பக். 32 - 49

❖ ❖ ❖



மதிப்புரைகளும் பாராட்டுரைகளும்

பத்துப்பாட்டு என்ற சங்க நூல்களைப் பற்றி இவ்வளவு முழுமையான, தெளிவான, ஆராய்ச்சி இதுவரை வெளிவந்ததில்லை. இது பொதுவாகத் தமிழ் வாசகர்களுக்கும் சிறப்பாக வரலாற்று மாணாக்கர்களுக்கும் இலக்கிய மாணாக்கர்களுக்கும் ஒரு சிறந்த வழிகாட்டி. பண்டித படாடோபம் சிறிதும் இல்லாத எளிமையும் இனிமையும் வாய்ந்த இவரது தமிழ் நடையும் ஆராய்ச்சியாளர்களுக்கு ஒரு நல்ல வழிகாட்டி.

பி. ஸ்ரீ.

தினமணி (நாளிதழ் - சுடர்)

16 - 9 - 1970

தமிழர் திருமண நூல்[1]

"தமிழர் என்று சொல்லிக் கொள்ளும் ஒவ்வொருவருடைய கையிலும் இந்நூல் இருக்க வேண்டியது அவசியம்" என்று சொன்னால், நான் ஏதோ, சம்பிரதாய ரீதியாய்ச் சொல்லுகிறேனென்று நீங்கள் கருதிவிடக் கூடாது. நூல் சிறியதாயிருந்தாலும், தமிழர்களின் நல்வாழ்க்கைக்கு இது அத்துணை இன்றியமையாதது.

❖ ❖ ❖

தமிழ் மொழி - இலக்கிய வரலாறு[2]

தமிழ் இலக்கிய வரலாற்றைத் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் விளக்கவல்ல நூல் இல்லாத குறை நெடுங்காலமாக இருந்து வருகிறது. டாக்டர் மா. இராசமாணிக்கனாரின் தமிழ் மொழி - இலக்கிய வரலாறு என்ற இந்த அழகிய நூல் அந்தக் குறையை ஒரு வகையில் போக்குகிறது.

நுணுகி ஆய்ந்த பின்னரே இவர் முடிவுகளுக்கு வருகிறார். இவருடைய வாதங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியவையாக இருப்பதைச் சொல்லியாக வேண்டும்.

தாம் எடுத்துக்கொண்ட பொருள் சம்பந்தமாகக் கிடைக்கக்கூடிய எல்லா இலக்கியங்களையும் இவர் பயன்படுத்திக் கொண்டுள்ளார். விருப்பு வெறுப்பற்ற நிலையில் சங்க காலத்தைச் சார்ந்த பல்வேறு நூல்களின் காலங்களை இவர் நிர்ணயம் செய்வது பொதுவாக எடுத்துக் கொள்ளக் கூடியதாக உள்ளது.

சங்க நூல்கள் பற்றி ஒருவர் தெரிந்துகொள்ள வேண்டிய எல்லா விவரங்களையும் உள்ளடக்கியதாக இந்த ஆய்வு விளங்குகிறது. ஆராய்ச்சி அறிஞர்களுக்கு இது மிகுந்த பயனுள்ளதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

❖ ❖ ❖

பொருநை[3]

பொருநை என்ற 110 பக்கங்கள் உள்ள ஒரு சிறு நூலில் டாக்டர் இராசமாணிக்கனார் தென்பாண்டி நாடாகிய தாம்பிரபருணிக்கரைப் பிரதேசங்களைக் குறித்துப் பழமையும் புதுமையுமான பல செய்திகளைத் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த நானும் அறியாத சில செய்திகளையும் கூட - மிக்க சுவையுடன் வெளியிட்டிருக்கிறார்.

---

1. திருவிளக்கு (திங்களிதழ்), நவம்பர் 1939

2. இந்து (நாளிதழ்), 3 - 5 - 1964

3. பி. ஸ்ரீ., மித்திரன் (ஞாயிறு மலர்), 3 - 6 - 1967

பத்துப்பாட்டு ஆராய்ச்சி[4]

சங்க காலத்தின் கீழ் எல்லை கி.பி.300என்று இந்நூலின் ஆசிரியர் கூறுவதே இவரது நடுநிலை ஆராய்ச்சிக்கு ஒரு சான்று. ஆனால் திருமுருகாற்றுப்படையும் கி. பி. முதல் மூன்று நூற்றாண்டுகளைச் சேர்ந்தது என்ற இவரது கருத்தை ஆராய்ச்சியாளர்கள் ஒருமுகமாக ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

ஆசிரியருக்குக் கல்வெட்டு, செப்பேடுகள் முதலியவற்றிலும்ஆராய்ச்சித் திறன் உண்டு. இதை இவர் உபயோகித்துக் கொண்டு டாக்டர் சாமிநாதையருடன் தமக்குள்ள கருத்து வேற்றுமையை அரண் செய்து கொள்கிறார். அதைப் பணிவாகவும் துணிவாகவும் வெளியிடும் பண்பாட்டை அணிந்துரையில் துணைவேந்தர் பாராட்டியிருக்கிறார்.

பத்துப்பாட்டின் காலம் குறித்து, கருத்து வேற்றுமைகள் உண்டு. இப்புத்தகத்தின் ஆசிரியர், சங்க காலத்திற்குப் பிறகும் அப்பர் - சம்பந்தர் காலத்திற்கு முன்பும் திருமுருகாற்றுப்படை இயற்றப்பட்டிருக்கலாம் என்று கூறுகிறார். இந்த ஊகம் பொருத்தமானது என்றே தோன்றுகிறது. ஆனால் தொல்காப்பியர் காலம் கி.மு. 300 என்று இவர் கூறுவதை ஒப்புக்கொள்ள முடியாது. களவியல் உரையை ஆதாரமாகக் கொண்டு தொல்காப்பியர் காலத்தை நிச்சயிப்பது சரியில்லை என்பது என் கருத்து.

மற்றபடி, ஐவகை நிலங்கள் குறித்தும் தொண்டை நாட்டு ஊர்கள், பாண்டிய நாட்டு ஊர்கள் குறித்தும் இவர் செய்துள்ள ஆராய்ச்சிகள் தனிச் சிறப்பு வாய்ந்தன. முருகனுக்கு உரிய தலங்கள் பற்றிய இவரது ஆராய்ச்சியும் குறிப்பிடத்தக்கது. ஆறுபடை வீடுகள் உண்டா? பழமுதிர்சோலை திருமாலிருஞ் சோலைதானா? இது திருமாலுக்கு உரிய தலமா, முருகனுக்கு உரிய தலமா? இவ்வினாக்களுக்குச் சரியான விடை கூற விரும்புவோர். "முருகனுக்கு உரிய இடங்கள்" என்ற இந்நூல் பகுதியைப் படித்துப் பார்க்க வேண்டும்.

கரிகாலனைப் பற்றிய ஆராய்ச்சியை இவர் திறமையாகச் செய்திருக்கிறார். திருமாவளவன், கரிகாலன்தான் என்று இவர் முடிவுகட்டியிருப்பது பொருத்தமே. மதுரைக் காஞ்சியில் குறிக்கப்பட்ட பாண்டிய மன்னர் முதலியோரைக் குறித்த ஆராய்ச்சியை இரண்டு அத்தியாயங்களில் விவரமாகச் செய்திருக்கிறார். இது தமிழர் வரலாறு எழுதுவோருக்கு ஓர் அருந்துணையாகும். அரசியல், தொழில்கள், வாணிபம் முதலியவை பற்றிய ஆராய்ச்சிகளும் விரிவாகச் செய்யப்பட்டுள்ளன. பொதுவாக இந்நூலின் பிற்பகுதி, முற்பகுதியைக் காட்டிலும் வரலாற்று மாணாக்கர்களோடு பொதுமக்களுக்கும் பயன்படுவது. 32ஆம் அத்தியாயத்தில் பிறமொழிச் சொற்களும் ஆராயப்படுகின்றன. இப்பகுதியில் திராவிடச்சொற்கள் மௌரியர் காலத்திற்கு முன்பே வடமொழியில் புகுந்துவிட்டன என்று பலருக்கும் தெரியாத உண்மையை இவர் வெளியிட்டிருக்கிறார். தமிழ், வடமொழியிலிருந்து கடன் பெற்றுத் தன் சொற் செல்வத்தைப் பெருக்கிக் கொண்டது. அப்படியே வடமொழியும் திராவிடச் சொற்களைக் கடனாகப் பெற்றிருக்கிறது. முற்காலத்திலேயே இந்த உண்மையை உணர்ந்து கொண்டால் மொழிவெறிச் சண்டைகளுக்கு இடமில்லை.

---

4. பி.ஸ்ரீ., தினமணி (நாளிதழ் - சுடர்), 16 - 9 - 1970

பத்துப்பாட்டு என்ற சங்க நூல்களைப் பற்றி இவ்வளவு முழுமையான, தெளிவான, ஆராய்ச்சி இதுவரை வெளிவந்ததில்லை. இது பொதுவாகத் தமிழ் வாசகர்களுக்கும் சிறப்பாக வரலாற்று மாணாக்கர்களுக்கும் இலக்கிய மாணாக்கர்களுக்கும் ஒரு சிறந்த வழி காட்டி. பண்டித படாடோபம் சிறிதும் இல்லாத எளிமையும் இனிமையும் வாய்ந்த இவரது தமிழ் நடையும் ஆராய்ச்சியாளர்களுக்கு ஒரு நல்ல வழிகாட்டி.

❖ ❖ ❖

பாராட்டுக் கடிதம்

மாந்தீவு
மட்டக்களப்பு
4-4-1964

செந்தமிழ்ச் செல்வமே,

நீடு வாழ்க. இறையருள் சிறக்க. உங்களுடைய பெரும் பாணாற்றுப்படை கூறும் வழிச் சிறப்பு (The Route described in Perum Panatru Padai) என்னும் ஆராய்ச்சிக் கட்டுரை பெற்று மகிழ்ந்தேன். படித்துப் படித்துக் களிபேருவகை கொண்டேன். இது மிகச் சிறந்த ஆராய்ச்சி. இக்கட்டுரை, என்போல்வாரைத் தண் பூங்காவிடையுலவச் செய்வது போலவும் தமிழ் மாணவரை இலக்கிய அரண்மனைக்கு ஏறிச்செல்ல வகுத்த படகு போலவும் விளங்குகிறது.

இடங்களின் பெயர்கள் காலவரையில் மாறுபட்டிருக்கும் விதத்தை விளக்கியிருப்பது போற்றற்குரியது. இத் தமிழ்த் தொண்டிற் காக எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்கள் தங்களுக்குரித்தாகுக.

அங்கயற்கண்ணி தங்களுக்கும் தங்கள் குடும்பத்தவர்களுக்கும் சகல நலங்களும் அருளுவாளாக.

தங்கள் அன்புக்குரிய,
ஆ. சபாபதி

❖ ❖ ❖



மணிமொழிகள்

நூல்கள்
கட்டுரைகள்
சொற்பொழிவுகளிலிருந்து
தொகுக்கப்பெற்றவை

ஒரு மொழி பேசும் மக்கள் தம் மொழியின் பழைமையையும் பெருமையையும் வளர்ச்சியையும் நன்கறிந்தால்தான், அம்மொழியினிடத்து ஆர்வமும் அதன் வளர்ச்சியில் கருத்தும் அம்மொழி பேசும் தம் இனத்தவர்மீது பற்றும் கொள்வர். இங்ஙனம் மொழி உணர்ச்சி கொள்ளும் மக்களிடையேதான் நாட்டுப்பற்றும் இனவுணர்ச்சியும் சிறந்து தோன்றும். ஆதலின், ஓர் இனத்தவர் இன ஒற்றமையோடு நல்வாழ்வு வாழ, மொழிநூல் அறிவு உயிர்நாடி போன்றதாகும். இம்மொழிநூல் அறிவு தற்காப்புக்காகவும் தம் வளர்ச்சிக்காகவும் வேண்டற்பாலது என்பதைத் தமிழ் மக்கள் அறிதல் நலமாகும்.

டாக்டர் மா. இராசமாணிக்கனார்
தமிழ்மொழிச் செல்வம்
1956 (முதற்பதிப்பு)
ப.3

தமிழ்

❖ தங்கள் தாய்மொழி இழந்த செல்வாக்கைத் தமிழர் புதுப்பித்து வரும் இக்காலத்தில், வேறொரு வடநாட்டு மொழியைத் தமிழர் கற்க வேண்டுமெனக் கூறுவதும், வற்புறுத்துவதும், தமிழ் மொழி வளர்ச்சிக்கு ஏற்றதன்று. ஒரு மொழி உண்டாக்கிய கேடுகளை நீக்கிக் கொண்டிருக்கும் பொழுது, வேறொரு புதிய மொழி அரசியல் செல்வாக்கோடு தமிழகத்தில் இடம் பெறுதல், தமிழ் மொழிக்குப் பெருங்கேடு பயப்பதாகும்.

❖ பிறமொழி நுழைவுக்கு வரவேற்புக் கூறுதல், தம் தாய்மொழியைத் தாமே கொலை செய்வதற்கு ஒப்பாகும்.

❖ இந்நாட்டில் தமிழை இழித்து வடமொழியையும் பிற மொழியையும் உயர்த்திப் பேசுவோரும் இருக்கின்றனர். இவர்களுடைய பேச்சுக்களும் தமிழ் உணர்ச்சிக்கு மாறான செயல்களும் தமிழ் மக்கள் உள்ளங்களைப் புண் படுத்துகின்றன. இவர்கள் சமயப் போர்வையைப் போர்த்திக் கொண்டு, ஏதுமறியாத தமிழ் மக்களையும் தந்நலவாதிகளையும் சமய வெறியர் களையும், கட்சிக் கடலில் ஆழ்ந்தவர்களையும் தமிழ்த் துரோகிகளாக மாற்றி வருகின்றனர். "இந்நாட்டு மொழி தமிழ்தானே; நாம் பேசுவதும் தமிழ்தானே; தமிழ் நாட்டில் தமிழ் வளர்ப்பதுதானே முறை" என்னும் உணர்ச்சியோடு இவர்கள் தமிழ் அறிஞர்களோடு மனமுவந்து ஒத்துழைப்பாராயின் சாதி வெறியை நீக்கப் பாடுபட்டிருப்பாராயின் சாதிக் குழப்பமும் மொழிக் குழப்பமும், ஒரு சிலரைப் பலர் வெறுக்கும் நிலைமையும் இந்நாட்டில் ஏற்பட்டிரா.

❖ தமிழ் வளர்ச்சிக்கோ அல்லது கேட்டிற்கோ பொதுமக்களே பொறுப்பாளிக ளாவர். தமிழ்க்கொலை புரிவோருக்குத் தக்க பாடங்கற்பித்தல் தமிழ்ப் பொதுமக்களின் கடமையாகும்.

❖ வடமொழியின் கூட்டுறவால் தமிழின் தூய்மை கெட்டது; கோவில்களில் தமிழ் இல்லை; திருமண நிகழ்ச்சியில் தமிழ் இல்லை; தமிழன் இறந்த பின் செய்யப் பெறும் இறுதி நிகழ்ச்சிகளிலும் தமிழ் இல்லை. தமிழன் பெயர்களிலும் தமிழ் இல்லை. அவன் பேச்சிலும் எழுத்திலும் பிறமொழிச் சொற்கள் மிகுந்து காணப்படுகின்றன. இக்குறைகள் படித்தவரால் உணரப்பெற்று இப்பொழுதுதான் படிப்படியாக நீக்கப் பெற்று வருகின்றன. இந்த நிலையில், வேறொரு மொழியான ஆங்கிலம் ஆட்சி மொழியாக இருந்து தமிழர் வாழ்வையே மாற்றிவிட்டது. அதனால் தமிழர் பேச்சு வழக்கே பாழ்ப்பட்டு விட்டது; உணர்ச்சியுடைய தமிழர் விழிப்புற்றுத் தமிழிலேயே எல்லாம் அமையப் பாடுபட வேண்டும்.

- ஒரு பொருளை உணர்த்த தமிழ்ச் சொல் இல்லாத பொழுதுதான் வேறொரு சொல்லைப் பயன்படுத்த வேண்டும் என்ற திடமான கொள்கை தமிழரிடம் இருத்தல் வேண்டும்.

- தமிழாசிரியர் சிலர் தம்மிடம் கற்கும் பிள்ளைகளுக்குத் தமிழ்ப்பற்றை ஊட்டுவதில்லை. "தமிழில் என்னடா இருக்கிறது? எல்லாம் பிறமொழிகளில் தான் இருக்கின்றன" என்று கூறுதலையே, தாம் பிறவியெடுத்ததின் பயனாகக் கருதுகின்றனர். இவர்கள் தமிழுக்குமட்டும் பகைவரல்லர்; தமிழினத்திற்கே பகைவராவர். இவர்கள் அறிவு பெறும் நாள் எப்பொழுது வரும்?

- தமிழறிவு இல்லாமல் ஆர்வம் மட்டும் இருப்பது போதாது. ஆர்வம் நாளடைவில் தணிந்து விடும். அறிவு தளராது. அறிவோடு கூடிய ஆர்வம் பொன்னால் செய்யப்பட்ட மலருக்கு மணம் இருப்பதுபோல இருக்கும்.

- பிறமொழிச் சொல் கலந்து எழுதுவது எளிய நடை என்று சிலர் கருதுகிறார்கள். அவர்களின் கருத்து தவறு. தமிழ் மொழியில் பிறமொழிச் சொல்லைக் கலப்பதே கடினநடைக்குக் காரணம். முற்றிலும் தமிழ்ச் சொற்களாலான நடை தமிழ் மக்களுக்குப் புரியும். பிறமொழிச் சொற்களைக் கலந்து எழுதும் போதுதான், பொருள் தெரியாமல் கடின நடை என்கிறார்கள். வேறு சிலர் இதே தமிழ்ச் சொற்களாலான நடையைத் தம் தமிழ் அறிவுக் குறைவால் கடின நடை என்கிறார்கள். இவர்களைத் திருப்தி செய்யப் பிறமொழிச் சொற்களைத் தமிழில் கலப்பது தமிழைக் கொலை செய்வது ஆகும்.

- பேச்சுத் தமிழே எழுத்துத் தமிழுக்கு அடிப்படை. ஆதலால் நமது பேச்சுத் தமிழ் பெரும்பாலும் தூய தமிழ்ச் சொற்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும். அப்பொழுதான் நாம் எழுதும் தமிழ் நல்ல தமிழ்நடையில் இருக்கமுடியும். இவ்வுண்மையைத் தமிழ் மக்கள் நன்கு நினைவிற்கொண்டு, தமது பேச்சுத் தமிழைத் திருத்திக் கொள்ளுதல் வேண்டும்.

- அடிப்படை இல்லாத கட்டடம் நீண்ட நாள் நிலைத்து இராது. அது போலவே தமிழறிவு இல்லாத தமிழ்ப்பற்று உள்ளத்தில் வேரூன்றி நில்லாது.

- தமிழ்மக்கள் முயன்று தாய்மொழியைக் கற்றுத் தமிழ்ப் பற்றுடைய தமிழராக வாழ்தல் வேண்டும். தாய்மொழிப் பற்றே தாய்நாட்டுப் பற்றுக்கு அடிப்படை யாகும்.

❖ ❖ ❖

தமிழர்

❖ ஒரு தமிழன் மற்றொரு தமிழனைக் காணுங்கால் தன் தாய்மொழியிலேயே பேசுதல் வேண்டுமென்ற உறுதிப்பாடு ஒவ்வொரு தமிழனுக்கும் இருத்தல் வேண்டும். ஆந்திரரிடமும், வங்காளியரிடமும் இவ்வுறுதிப்பாடு இருந்து வருகிறது. ஆயின், தமிழில் பேசுதல் சிறப்புத் தராது என்று கருதும் கீழ் மகனாக, ஆங்கிலம் கற்ற தமிழன் இருந்து வருகிறான். இந்த இழிநிலை நம்மிடமிருந்து மறைதல் வேண்டும்.

❖ தமிழகத்துத் தலைவர்கள் வாய்ச்சொல் வீரராக இருப்பதில் பயனில்லை. செயல் வீரர்களாக மாறவேண்டும். நாடு விடுதலை பெற்றுப் பல ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனால் சமுதாய வாழ்வு இன்றளவும் சிறப்புறவில்லை. தமிழ் நாட்டில் தமிழன் தன் உரிமை இழந்து நிற்கின்றான்; இலங்கையில் இருந்து விரட்டப்படுகின்றான். தமிழனுக்குத் தன்மான உணர்ச்சி ஆமைவேகத்தில் உண்டாகிறது. இந்த இழிநிலை மாறவேண்டும்.

❖ தமிழர், தமிழ்ப் பெயர்களைத் தங்கள் பிள்ளைகளுக்கு இட்டு வழங்கும் நாளே தமிழ் வளர்ச்சிக்குரிய நன்னாள் ஆகும்.

❖ தமிழர் அனைவரும் ஒருதாய் ஈன்ற மக்களாக எண்ணும் மனநிலை வளர வேண்டும். பாழான கட்சி வேறுபாடுகளால் தமிழ் இனம் அல்லல்படுகிறது. ஒருவரை ஒருவர் பொருத்தம் இன்றித் தாக்கிப் பேசுகின்றனர். இந்தச் சூழ்நிலை மாறவேண்டும். இவையனைத்தும் நீங்கி, தமிழகத்துப் பல கட்சித் தலைவர்களும் அடிக்கடி சந்தித்துத் தமிழ் உணர்ச்சியோடு பழகுதல் வேண்டும். கட்சி வாழ்வை விடத் தமிழ் வாழ்வே தமிழ் இனத்தை வளர்க்கும் அருமருந்தாகும். இந்த உண்மையைக் கட்சித் தலைவர்கள் உணரும் நாளே தமிழர் நல்வாழ்வு வாழும் நன்னாள் ஆகும்.

❖ ❖ ❖

இளைஞர்

- இளைஞர் எப் பாடத்தையும் தம் அறிவைக் கொண்டு ஆராய்ந்து தெளிதல் வேண்டும். ஆசிரியர் 'சரி' என்றால் 'சரி', 'இல்லை' என்றால் 'இல்லை' என்னும் முடிவுக்கு வரும் இளைஞன், தன் அறிவைத் தானே கொலை செய்பவன் ஆவான். எதையும் நன்கு ஆராய்ந்தும் வல்லார்வாய்க் கேட்டும் கொள்ளல் வேண்டும். ஆய்வு இன்றி எதனையும் கோடல் தவறு.

- அறிவு உயர்நிலை எய்தப் பெறின், அஃது ஆன்ம உணர்ச்சியாகிய மனச் சான்று என்னும் மாண்புறு பேரொளியின் அணைப்பிலேயே இருக்கும். அதனாற்றான் அறிவு பண்பட்ட அறிஞர் மனச்சான்றின் அறிவுரைப்படியே நடப்பர்; நமது மனச்சான்றுக்கு மாறுபட்ட ஒன்றை - இப் பரந்த உலகையே காலடியில் பரிசாக வைப்பதாயினும் ஒருபோதும் செய்யார்; பேசார். இத்தகைய உயர்நிலை இளைஞர்பால் கருக்கொள்ளல் வேண்டும்.

- விடாமுயற்சி என்னும் தற்காப்புக் கவசம் அணிந்து, துன்பம் நிறைந்த வாழ்க்கை என்னும் காட்டினுள் துணிச்சலோடு நுழைதல் வேண்டும். இங்ஙனம் நுழையும் இளைஞர் வாழ்வில் வெற்றி பெறுவர்; எத்தகைய துன்பத்தையும் எதிர்த்து நிற்கும் வன்மை எய்துவர்; துன்பமே தொடராத படியும் செய்வர்.

- இளைஞர் தமது செயலில் விடாமுயற்சியைக் காணல் வேண்டும். அஃதொன்றே எத்தகைய கடின வேலையையும் எளிதில் வெற்றிபெறச் செய்விப்பது. விடாமுயற்சியால் வெற்றி பெற்ற உலகப் பெரியார்களின் அற்புத வரலாறுகளை இளைஞர் வாசித்து உணர்தல் வேண்டும். அவர்களது வரலாற்றுப் பாதையில் அடிவைத்துப் பெயர்தல் வேண்டும்.

- இளைஞர் தம்மை ஆற்றல் உள்ளவராகச் செய்துகொள்ளல் எங்ஙனம்? அறிவு கொண்டும், வல்லவர்வாய்க் கேட்டுணர்ந்தும் தமக்குத் தகுதி எனப்பட்டவற்றைக் கடைப்பிடிப்பதில் 'உறுதியுள்ளமை'யே ஆற்றல் என்பது.

- படிக்க ஓய்வு இல்லாத இளைஞர்கள், வாரத்திற்கு ஒரு முறை அல்லது பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை தக்க தமிழாசிரியர்களை வைத்து மொழி - இலக்கியம் - இலக்கணம் பற்றிய சொற்பொழிவுகளை நடப்பித்து, அவற்றைக் கேட்டு அறிவு பெறுவது நல்லது.

❖ ❖ ❖

எழுத்தாளர்

- ❖ தமிழ் எழுத்தாளருக்குத் தங்கள் தாய்மொழி தமிழ்தான் என்பதில் நம்பிக்கை இருக்க வேண்டும். அதன் தூய்மையிலும் வளர்ச்சியிலும் கண்ணும் கருத்தும் இருக்க வேண்டும். உண்மையான தமிழ் மரபைச் சேர்ந்தவர்கள் - பொது மக்களுக்கென்றே எழுதுபவர்கள் - அப் பொதுமக்களுக்குப் புரியாத பிறமொழிச் சொற்களைத் தம் நூல்களில் எழுதுவது தவறு.

- ❖ மூடநம்பிக்கைகளை வளர்க்கும் விதத்தில் எழுதும் எழுத்தாளர்கள் சமூகத் துரோகிகளே யாவர்.

- ❖ தாழ்ந்துள்ள தமிழ்ச் சமுதாயத்தை உயர்த்தப் பயன்படும் நூல்களை எழுதுவதையே எழுத்தாளர்கள் தங்கள் சிறந்த கடமையாகக் கருத வேண்டும். சமுதாயத்தில் இன்றுள்ள தீண்டாமை, பெண்ணடிமை, மூட நம்பிக்கைகள், கண்மூடித்தனமான பழக்க வழக்கங்கள் முதலிய பிற்போக்குத் தன்மைகளை வன்மையாகக் கண்டிக்கும் நெஞ்சுறுதி எழுத்தாளர்க்கு இருத்தல் வேண்டும்.

- ❖ தமிழ் எழுத்தாளர்களுக்குச் சில குறிக்கோள்கள் இருத்தல் வேண்டும். அவர்கள் நூல்கள் பொதுமக்கள் ஒழுக்கத்தை வளர்க்கத் தக்கனவாய் இருத்தல் வேண்டும். அனைவரும் சமம், எல்லோரும் வாழப்பிறந்தவர், ஒவ்வொருவரும் மனிதப் பண்போடு நடந்துகொண்டால்தான் சமுதாயம் இன்புற்று வாழ முடியும் என்பன போன்ற அடிப்படைக் கருத்துக்களை மக்கள் உள்ளங்களில் ஆழமாகப் பதிய வைக்க வேண்டும்; நாட்டுப்பற்றையும் மொழிப்பற்றையும் இனப்பற்றையும் ஊட்டுவனவாக அமைதல் வேண்டும். கலை வளர்ச்சி, சமுதாயப் பணி இவற்றில் பொதுமக்களுக்கு நல்ல அறிவு, நல்ல ஒழுக்கம், நல்ல வாழ்க்கை இவற்றை வளர்க்கும் முறையில் எழுத்தாளர் படைப்புகள் இருத்தல் வேண்டும். இக்குறிக்கோள்களுடன் எழுதப்பெறும் நூல்கள் இந்நாட்டில் இறவாத புகழுடையனவாக விளங்குமென்பதில் ஐயமில்லை.

- ❖ தாமாக எண்ணும் ஆற்றல் உள்ளவரும் உண்மையான தமிழ்ப்பற்று உடையவருமே நல்ல எழுத்தாளர் என்று பெயர் பெறமுடியும். அத்தகைய எழுத்தாளர்கள் தமிழர் என்ற அடிப்படையில் ஒன்றுகூடுதல் வேண்டும்.

- ❖ தமிழ் எழுத்தாளர் தமிழ் இலக்கண இலக்கியங்களைப் படித்தவராக இருப்பது நல்லது. அப்பொழுதான் அவர்கள் தமிழ் மரபை அறிய முடியும்.

❖ ❖ ❖

மனிதன்

❖ மனிதன் தன்னைப்போலவே பிறரை நேசிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். அந்நிலையில் அவன் எந்த நாட்டையும் தன்னாடென்று மதிப்பான். மனிதன் எந்த நாட்டவனாயினும் எங்கும் சென்று வாழலாம் என்னும் மன அமைதி பெற்றிருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் அவன் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று மனம் மகிழப் பாடுவான். தான் உயர்வதும், தாழ்வதும் தன்னாலேதான் என்பதை உணரும் அறிவு மனிதனை வாழ்விக்கும். தோன்றுவது அழியும் என்ற உண்மை மனிதனுக்குச் சுயநலத்தை மிகுதியாக உண்டாக்காது. இவ்வுயரிய பண்புகள் மனிதனிடம் கருக்கொள்ளுமாயின், மனித வாழ்வு மாண்புடைய வாழ்வாகும்.

❖ கடவுளிடத்தில் உண்மையான நம்பிக்கை உடையவன் எப்படி வாழ்வான்? அவன் கடவுளால் படைக்கப்பட்ட எல்லோரையும் தன் உடன்பிறந்தாராகக் கருதுவான்; அவர்கள் தனக்குத் தீமையே செய்யினும் தான் மட்டும் நன்மையே செய்வான்; பொய், புறங்கூறுதல் முதலிய குற்றங்களிலிருந்து நீங்கியிருப்பான். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசான்; தன் மனச்சாட்சிக்கு மாறாக எதனையும் செய்யான்; எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும் என்ற ஒன்றையே நினைப்பான்; மனிதரால் ஆக்கப்பெற்ற சாதி வேறுபாடுகளையும் சமய வேறுபாடுகளையும் மதியான்; 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்ற கொள்கையில் வாழ்வான். இவனே ஆஸ்திகன்; இவனே மனிதருள் மாணிக்கம்; இவனே வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்; இவனே வாழ்க்கையில் வெற்றி பெற்றவன்;

❖ ❖ ❖

மனம்

- ❖ *மனச் சான்றின்படி நடப்பவனே ஆற்றல் உடையவன்; பிறர்க்கஞ்சாத வீரன்; பீடுநடையுடையவன்; கள்ளங்கபடமற்ற புன்முறுவலோடு தலை நிமிர்ந்து நடப்பவன்.*

- ❖ 'மனம் போல வாழ்வு' ஆதலால், ஒவ்வொரு மனிதனும் தன் மனத்தைக் களங்கம் சேர்ந்து கெடுத்து விடாதபடி எப்போதும் பாதுகாக்கவேண்டும். ஒருவன் ஆவதும் அழிவதும் தன்னாற்றான் என்னும் உண்மையை உணர்ந்து நடக்க வேண்டும். தன் மனத்தை எப்பொழுதும் தெளிந்த நிலையில் - ஊக்கம் உழைப்பு, விடாமுயற்சி, உயரிய நோக்கம் என்னும் இவற்றைத் தோற்று விக்கும் ஊற்று நிலையில் இருக்கச் செய்ய வேண்டும். இங்ஙனம் மனத்தைப் பழக்கும் மாண்புடையவனே வாழ்வில் இன்பநிலை எய்தப் பெற்றவன் ஆவான்.

❖ ❖ ❖

வழிபாடு

❖ உடலை வளர்க்க உணவு தேவைப்படுவதுபோல உயிரை வளப்படுத்த வழிபாடு தேவைப்படுகின்றது.

❖ ஆழ்ந்த வழிபாடு அற்றுவிட்ட காரணத்தால் மக்களுடைய உள்ளம் தீய பண்புகளிலிருந்து விடுதலை பெற முடியவில்லை. தீய செயல்களிலிருந்தும் மனிதன் விடுதலை பெற முடியாது தவித்தலைக் காண்கிறோம். இந்த இழிநிலை நீங்க வேண்டுமாயின், உள்ளத்தைத் தன் வயப்படுத்தும் வழிபாட்டு முறையை மக்கள் மேற்கொள்ளுதல் வேண்டும்.

❖ நல்லெண்ணம், நற்சொல், நற்செயல் இவற்றை உண்டாக்கும் மனத்திண்மை அளிக்கும்படி பரம்பொருளை வேண்டுவதே வழிபாடு.

❖ வழிபாடு, உயிரோடு ஒட்டத்தக்க இயல்புடைய கோபம், பேராசை, பொருள்களின் மேல் பற்று, கிழ்மை முதலிய அழுக்குகளை யகற்றி, உயிரைத் தன் உண்மைநிலையில் இருக்கச் செய்யும்; உள்ளத்தைத் தூய்மை ஆக்கும்; எண்ணம், சொல், செயல் என்னும் மூன்றையும் தூய்மையுறச் செய்யும்; உயர்ந்த எண்ணங்களையே எண்ணச் செய்யும்; உயர்ந்த சொற்களையே பேசச் செய்யும்; உயர்ந்த செயல்களையே செய்விக்கும்.

❖ நாடோறும் செய்யும் நற்செயல்களையும் தீச்செயல்களையும் நன்காராய்ந்து தீச்செயல்களுக்காக வருந்திப் பரம்பொருளிடம் முறையிடுவது வழிபாடாகும்.

❖ ❖ ❖

சமயம்

❖ மனிதனை மனிதன் மதித்து நடப்பதே சமய வாழ்வு.

❖ மனிதன் தன்னைப் போல் பிறரையும் நேசிக்க வேண்டும். அன்பு, அருள், நல்லொழுக்கம் இவற்றின் மலர்ச்சியே சமய வாழ்வு. பிறர்க்குத் தொண்டு செய்வதே சமய வாழ்விற்கு அடிப்படை.

❖ உண்மையாக இந்த நாட்டில் சமயம் வளர வேண்டுமாயின் மக்களுக்குச் செய்யும் தொண்டினால்தான் வளர முடியும். கற்பூரத்தால், தேங்காய் - பழத்தால், சுண்டலால், திருவிழாக்களால், சமயக் கட்டுக்கதைகளால் சமயம் வளராது.

❖ சமய நூல்கள் என்று சொல்லப்படுவனவற்றுள் இருக்கும் சமயக் கட்டுக் கதைகள் சமயச் சொற்பொழிவுகளிலிருந்து அகற்றப்படுதல் வேண்டும். அருவருக்கத்தக்க ஆபாசக் கதைகள், இயற்கை நிகழ்ச்சிக்கு மாறுபட்ட செய்திகள், இவற்றைப் பிரசாரம் செய்தல் கண்டிப்பாக நீக்கப்படுதல் வேண்டும். இந்தக் கற்பனைகளே சைவ சமயத்தைப் பாழ்ப்படுத்துவன; நம்மைத் தலைகுனியச் செய்வன; இன்றுள்ள சமய எதிர்ப்புக்கெல்லாம் காரணம் இக் கட்டுக்கதைகளே என்பதை நன்குணர்தல் வேண்டும்.

❖ சமயம் என்பது வாழ்க்கைக்குரிய கொள்கை; அது நாட்டு மக்களின் பண்பாட்டுக்கு ஏற்றமுறையில் அமையவேண்டும்.

❖ மனிதனது அறிவு, மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட வேறு ஆற்றலை எண்ணி எண்ணி, அத்துறையில் பக்குவப்படுதலே சமய அறிவு எனப்படும்.

❖ ❖ ❖

சாதி

- தமிழினத்தின் உயிர்நாடிக்கே உலைவைக்கும் சாதிவேறுபாடுகள் இயற்கையில் உண்டானவை அல்ல. செயற்கையில் உண்டான இவ்வேறுபாடுகள் செய்துள்ள தீமைகள் பல. ஆதலின், இவற்றை இன வாழ்விலிருந்து அகற்றுவதே தமிழர் நல்வாழ்விற்கு அடிப்படையாகும்.
- இச் சமுதாயம் உயரவேண்டுமானால், கட்டாயக் கலப்பு மணச் சட்டம் நிறைவேற்றப்பட்டு அமுலாக்கப்படுதல் வேண்டும். அது வராத வரையில் இச் சமுதாயம் உயராது. பிரசாரத்தாலோ, அன்புமொழியாலோ, பஜனை செய்வதாலோ, இச் சமுதாயத்திலுள்ள சாதி வேறுபாடுகள் ஒழியா.

❖ ❖ ❖

திருமணம்

- பெண்ணைத் தேர்ந்து எடுக்கும்போது, குணத்தையே முதலாகக் கொண்டு, அறிவை அடுத்து எண்ணி, பிறகு அழகை நினைக்கும் நிலை வளரவேண்டும்.
- திருமணச் செலவை மிகுதியாகக் குறைக்கவேண்டும். ஊரைக் கூட்டித் தேரிழுப்பது போல நூற்றுக்கணக்கானவர்களை வரவழைத்துத் திருமண விருந்து செய்து ஒட்டாண்டியாகத் தேவையில்லை. பதிவுத் திருமணம் பாராட்டத்தக்கது. திருமணம் நடந்தது என்பதை அஞ்சல் வாயிலாக உற்றார் உறவினர்க்கும் நண்பர்களுக்கும் அறிவித்தல் சாலும். பொருளற்ற சடங்குகளை விட்டொழிக்க வேண்டும்.

❖ ❖ ❖

குடும்பம்

- ஒரு குடும்பத்தில் தாய் தந்தை இருவரும் ஒன்றுபட்டு ஒரு செயலைச் செய்தால்தான் அக் குடும்பம் உருப்பெறும்.
- உள்ளத்தில் அன்பும் வெளியில் கண்டிப்பும் இருக்கிற குடும்பங்களில்தான் குழந்தைகள் நல்ல முறையில் வளர்கிறார்கள்.
- சமுதாயத்தில் ஆடவர் மட்டும் படித்திருப்பின் பயனில்லை. ஆடவர் பெண்டிர் ஆகிய இருதிறத்தாரும் சேர்ந்ததே சமுதாயம். இருவரும் கல்வியால் அறிவு விளக்கம் பெற்று நடத்தும் இல்வாழ்க்கையே நல்வாழ்க்கையாக விளக்கமுறும்.

❖ ❖ ❖

பொது

- ❖ உண்மை பேசுதல், உழைத்து வாழுதல், முயற்சியுடைமை, அறிவை வளர்த்தல், நேர்மையாக நடத்தல், பிறர்க்குத் தீங்கு செய்யாமை முதலியன நேரிய வாழ்க்கைக்குரிய கொள்கைகளாகும்.

- ❖ ஒருவன் செய்யும் பொதுத்தொண்டு பயன் அளிக்க வேண்டுமாயின் அவன் ஒழுக்கம் தவறாதவனாக இருக்க வேண்டும்.

- ❖ ஒற்றுமை உணர்ச்சி, சிக்கன வாழ்க்கை, அறிவையும் ஒழுக்கத்தையும் வளர்த்தல், இவற்றிலேயே வாழ்க்கை அமைதி அடங்கி இருக்கிறது.

- ❖ வருவாய்க்கு ஏற்ப வாழ்வதே வாழ்க்கை. மனத்தைக் கண்டவாறு அலைய விட்டுப் பணத்தைத் தேடிப் பேயாக அலைபவர்க்கு வாழ்க்கை இன்பம் அமைவதில்லை.

- ❖ ஆசிரியர்கள், பல கட்சிகளைச் சேர்ந்த பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு ஆசிரியர்கள். ஆகையால் அவர்கள் எத்தகைய கட்சி மனப்பான்மையும் இல்லாமல், பொதுத்தன்மை வாய்ந்த பெருமக்களாகத் தங்கள் ஆசிரியப் பணியைச் செய்ய வேண்டும்.

- ❖ இன்று சிறுவராக இருப்பவரே எதிர்காலச் சமுதாய மக்கள்; இந்நாட்டு மன்னர். ஆதலால், அவர்கள் நல்ல ஒழுக்கமுடைய நன்மக்களாக இருந்தால்தான் எதிர்காலச் சமுதாயம் சிறந்து விளங்கும். சமுதாயம் நல்ல நிலையில் இருந்தால்தான் நாட்டில் அமைதி நிலவும். மக்கள் மக்களாக வாழமுடியும். அரசியலும் பயனுடைய அரசியலாகும். இந்த உயிர்நாடியை நன்மக்களும் அரசாங்கமும் கவனித்து விரைவில் ஆவன செய்தல் வேண்டும்; சிறுவர் உலகம் சீரடையச் செய்தல் வேண்டும்.

- ❖ மாணவர்களுக்கும் அரசியலுக்கும் தொடர்பே இருக்கக் கூடாது. மாணவர்கள் ஒவ்வொரு அரசியல்கட்சி பற்றியும் அறிந்து கொள்வது தேவை யானதுதான். ஆனால், எந்தக் கட்சியிலும் உறுப்பினராகச் சேரலாகாது. தேர்தல்களிலும் உழைக்கலாகாது.

- ❖ தமிழ்ப் பற்றுக் கொண்டு, சாதிவெறி அகற்றி, "எல்லோரும் வாழவேண்டும்" என்னும் அறநெறியில் அனைவரும் பாடுபடுவராயின், தமிழகம் எல்லாத் துறைகளிலும் சிறப்படையும். இத்தகைய நன்னோக்கம், சாதி - கட்சி- மொழிவெறி இன்றி அனைவர் உள்ளங்களிலும் மலரவேண்டும்.

- ❖ தமிழ் நடிகர் தமிழகத்து வரலாற்றையும் இலக்கியத்தையும் நன்கு பயிலுதல் நல்லது: தூய எளிய தமிழ் நடையில் உரையாடல்களை அமைத்து நடித்தல் வரவேற்கத்தக்கது. பாடல்கள் சிலவாகவும் உரையாடல்கள் பலவாகவும்

அமைந்துள்ள நாடகங்களையே நடித்தல் ஏற்புடையது.பொருத்தமற்ற இடங்களிலெல்லாம் பாடுதல் வெறுப்பைத் தரும். இவை அனைத்திற்கும் மேலாக, நடிகரிடம் கட்டுப்பாடும் ஒழுக்கமும் மிகுந்திருத்தல் வேண்டும். வருங்காலத் தமிழகத்தில் பட்டம் பெற்ற இளைஞர்களும் இக்கலையில் பயிற்சி பெறுதல் நல்லது. கல்விமான்கள் நாடகத்தில் நடிப்பது வரவேற்கத் தக்கது. தமிழுணர்ச்சி வீறுகொண்ட இக்காலத்தில், தமிழ் நடிகர் நாடகக்கலை வளர்ச்சியில் ஊக்கம் கொள்ளுதல் நல்லது. நன்முறையில் அமையும் நாடகங்களைத் தமிழ் மக்கள் எப்பொழுதும் வரவேற்பர் என்பது திண்ணம்.

❖ உண்மையைக் கண்டறிய அவாவும் ஒருவனைத் தடுப்போன் மனிதவர்க்கத்தின் விரோதியே ஆவன். 'இதை நம்பு; உனக்கு மோட்சம் கிடைக்கும்' என்பவன், தன் போன்ற மக்கட் கூட்டத்தையே அழிக்கும் கொடியவனாவன்.

❖ செல்வம் படைத்தவர்க்குச் சமுதாயத்தில் மதிப்பு இருப்பது போலவே, சொத்துடைய சாமியார்களுக்குத்தான் நாட்டில் மதிப்பு ஏற்படுகிறது. ஒழுக்கத்தைப் பற்றி யார் கவலைப்படுகிறார்கள்?

❖ குழந்தைகள் வாழ்க்கையை வளப்படுத்தும் விளக்கங்கள்.

❖ சிலர் பட்டம் கிடைத்தாலே பதுங்கி விடுவர். சிலர் பணம் பெற்றால் பதுங்கி விடுவர். இவர்கள் மட்டும் ஒழுக்கமுடையவர்களா? ஒவ்வொருவனும் தன் மனச்சாட்சியின்படியா நடக்கிறான்?

❖ தமிழ் மொழியைப் பற்றியும் இலக்கியத்தைப் பற்றியும் பேசவும் எழுதவும் நாட்டில் சிலருண்டு ஆனால் தமிழர் வரலாற்றைப் பேசவோ எழுதவோ ஆட்கள் இல்லை. இந்நிலை மாற வேண்டும்.

❖ தமிழகத்து வரலாறு நன்கு அறியப்படல் வேண்டும். அதனை அறிந்தால்தான் மொழிவரலாறும். இலக்கிய வரலாறும் சமுதாய வரலாறும் சமய வரலாறும் நன்கு அறியப்படும். வரலாற்று அறிவோடுகூடிய தமிழ்ப் புலமையே வேண்டற்பாலது. புதைபொருள் ஆராய்ச்சியிலும் கல்வெட்டு ஆராய்ச்சியிலும் தமிழ்ப்புலவர்கள் பயிற்சிபெறுதல் வேண்டும். இத் துறைகளில் எல்லாத் தமிழரும் கவனம் செலுத்தினாற்றான், தமிழினம் பெருமையோடு வாழ முடியும்.

❖ ❖ ❖



நினைவு மலர்கள்

1

(அறிஞர் - நண்பர் - மாணவர்)

கால்டுவெல் முதல் பேராசிரியர் டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரை உள்ள ஆய்வறிஞர்களின் பட்டியல் மிக நீண்டதாகும். இந்த அறிஞர்கள் ஆய்ந்தறிந்து கூறிய உண்மைகள் திராவிட இயக்கத்திற்கு வலுவூட்டக் கூடியனவாக இன்றளவும் விளங்கி வருகின்றன.

ஆகவே, இத்தகைய பெருமக்களை நினைவுகூர்வதும் அவர்களைப் போற்றுவதும் ஆசான்மார்களாக ஏற்றுக்கொள்வதும் நமது பெருங்கடமை யாகும்.

க. திருநாவுக்கரசு
'ஆய்வறிஞர் மா. இராசமாணிக்கனாரின்
நூற்றாண்டு விழாக் கருத்தரங்கம்'
முரசொலி
9 - 1 - 2007

தமிழ்ச் சுடர்

ம.பொ. சிவஞானம்

டாக்டர் இராசமாணிக்கனாரை 1934 முதல் எனக்குத் தெரியும். வட சென்னையில் அந்நாளில், சாது நாராயண தேசிகர் மடம் என்று ஒன்று இருந்தது. சுவாமி அருணகிரிநாதர் என்பவர் அதை நடத்திக் கொண்டிருந்தார். ஆண்டுதோறும் அவர் நடத்தி வந்த குரு சாது நாராயண தேசிகர் பூசையில், இராசமாணிக்கனார் சொற்பொழிவுகள் நிகழ்த்துவது வழக்கம். ஒரு சமயம் அங்கு அவர்கள் பேச்சைக் கேட்கும் வாய்ப்பு எனக்கு அமைந்தது. அவருடைய அன்றைய சொற்பொழிவு சிலப்பதிகாரம் பற்றிய தாகும். சிலப்பதிகாரம் பற்றி நான் கேட்ட முதல் சொற்பொழிவு அதுதான்.

> **இராசமாணிக்கத்தின் உரைநடை எளிமையானது; ஆராய்ச்சிக்கு ஏற்றது. அதில் வெற்றுரையோ சொல்லடுக்கோ பொருளற்ற மொழியோ கிடையாது. புலவர் நடை அருமை என்று சொல்லப்படுவது வழக்கம். இராசமாணிக்கத்தின் நடை அவ்வாக்கைப் பொய்யாக்கி விட்டது.**
>
> **திரு.வி.க.**

வட சென்னையிலுள்ள இராயபுரம் பகுதியில் 'திருவள்ளுவர் வாசகசாலை' என்ற ஒன்றை, அந்நாளில் நானும் என் நண்பர்களும் சேர்ந்து நடத்தி வந்தோம். டாக்டர். உ.வே. சாமிநாதய்யர் அவர்களின் எண்பதாம் ஆண்டு நிறைவு விழாவைச் சென்னை நகரில் கொண்டாடும் பொறுப்பை டாக்டர் இராசமாணிக்கனார் ஏற்றிருந்தார். அந்நிகழ்ச்சியை எங்கள் வாசகசாலையின் சார்பிலும் நடத்தும்படி கேட்டார். நாங்களும் அதை விருப்பத்துடன் ஏற்றோம். அந்த விழாவில் நானும் பேசினேன். பின்னாளில் உ.வே. சாமி நாதய்யர் அவர்களுடன் எனக்கு ஏற்பட்ட உறவிற்கு அதுவே அடிப்படையாக அமைந்தது. டாக்டர் இராசமாணிக்கனார் நட்பின் காரணமாகவே, அறிஞர் உ.வே.சா.வை நான் சந்திக்கவும் அவர்களோடு பேசவும் பழகவும் முடிந்தது.

நாங்கள் வேறு வேறு இடங்களில் சந்தித்துப் பழகினோம். பெங்களூர் பல்கலைக்கழக அழைப்பின் பேரில், நானும் டாக்டரும் இருமுறை அங்குச் சென்று பேசினோம். அங்கு அப்பல்கலைக்கழகப் பேராசிரியர் ருத்ரபதி அவர்களின் விருந்தினராகவும் இருந்திருக் கின்றோம். பெங்களூரில் டாக்டர் அவர்களோடு நான் கழித்த நாட்கள் மிகவும் இனிமையானவை. அவரோடு பழகுவதென்பது ஒரு சுவையான அனுபவம். நட்பிற்குச் சிறந்த பெரியவர் அவர்.

தமக்கென்று சில கொள்கைகளைக் கொண்டிருந்தவர் இராசமாணிக்கனார். ஆழ்ந்த புலமையுடைய அவர்கள் புலமையைத் தொழிலாக எண்ணாமல், தொண்டாகக் கருதி வாழ்ந்தவர்கள். சமுதாயப் பிரச்சனைகளில் அவருக்கென்று சில

கொள்கைகள் உண்டு. அரசியலில் அவர்கள் எந்தக் கட்சியிலும் இருந்ததாக எனக்கு நினைவில்லை. இருந்தாலும் நாட்டின் உரிமைப் பிரச்சனைகளிலே, அவர் தெளிவான சிந்தனைகளும் கருத்துக்களும் கொண்டிருந்தார். இவையெல்லாம் அவரோடு பழகி நான் அறிந்தவை.

இராசமாணிக்கனார் அவர்களுடைய நூல்கள் பலவற்றை நான் படித்திருக்கிறேன். நான் தமிழில் புலமை பெறுவதற்கு அவையும் பயன்பட்டன.

ஏறக்குறைய இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு, எனக்கும் அவருக்கும் ஒரு கருத்துப் போர் நடைபெற்றது. அதைப் பற்றியும் இங்குக் கூற விரும்புகிறேன்.

"பண்டைக் காலத்தில் தமிழர்களிடையே திருமணத்தில் தாலி கட்டும் வழக்கம் இருந்ததில்லை" என்று பேராசிரியர் மா. இராசமாணிக்கனார் மதுரைத் திருவள்ளுவர் கழகத்தில் பேசியதாக 16 - 10 - 1954 தினத்தந்தி இதழில் வெளியாகி இருந்தது. இராசமாணிக்கனாரின் கருத்தை மறுத்து நான் எழுதிய ஒரு கட்டுரை 1954 'தினத்தந்தி' தீபாவளி மலரில் வெளியாகி இருந்தது. இதனால் இலக்கிய உலகில் கடுமையான வாதம் எழுந்தது.

இந்த வாதம் நீடித்தது. பெரும் புலவர்கள் பலர் இதில் பங்கு கொண்டனர். கல்லூரிகளில் முதுநிலைத் தமிழ் வகுப்புகளிலும் மாணவர்கள் தூண்டுதலால் பேராசிரியர் பலர் என்னை ஆதரித்தும் மறுத்தும் விளக்கங்கள் தந்தனர். பேராசிரியர் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் 4-11-54இல் சென்னைச் சட்டக் கல்லூரியில் அப்போது தமிழக முதல்வராக இருந்த திரு. கு. காமராசர் தலைமையில் நடந்த மாணவர் கூட்டம் ஒன்றில் என்னை ஆதரித்துப் பேசினார். அந்தப் பேச்சும் 'தினத்தந்தி'யில் வெளியானது. அப்போது தி.மு.கழகத்தில் மிகுந்த செல்வாக்குடன் இருந்த கவிஞர் கண்ணதாசன், தாம் நடத்தி வந்த 'தென்றல்' வார இதழிலே என்னைத் தாக்கியும், டாக்டர் மா.ரா.வைத் தாங்கியும் அடிக்கடி எழுதினார். எங்கள் இயக்க எழுத்தாளரான திரு. வே. கணபதி, 'ரசம்' ஆகியோர் 'செங்கோல்' வாயிலாக அவருக்குப் பதிலளித்தனர். திரு. என்.வி. நடராசன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த 'திராவிடன்' பத்திரிகையும் என்னைக் கண்டித்தது. என்னை ஆதரித்த புலவர்களில் சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் வித்துவான் வெ. சு. சுப்பிரமணிய ஆச்சாரியாரும் ஒருவராவர். அவர் திரு.நாரண துரைக்கண்ணன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு அப்போது வெளிவந்து கொண்டிருந்த 'பிரசண்ட விகடன்' இதழில், என் கருத்தை ஆதரித்துத் தொடர் கட்டுரை எழுதினார். பின்னர் அது நூல் வடிவம் பெற்றது.

டாக்டர் மா. இராசமாணிக்கனாரும் எங்களிடையில் எழுந்த வாதத்தின் விளைவாகத் 'தமிழர் திருமணத்தில் தாலி' என்னும் பெயரில் 114 பக்க அளவில் நூல் எழுதி வெளியிட்டார். அந்நூலுக்குப் பதிலளித்து அப்போது 'செங்கோ'லில் யான் எழுதிய விளக்கமானது, 'சிலப்பதிகாரத் திறனாய்வு' என்னும் நூலில் தனிப் பகுதியாகத் தரப்பட்டுள்ளது. இலக்கிய உலகில் தமிழர் திருமணத்தில் தாலியணிவது பற்றி, இது போன்ற ஒரு சர்ச்சை இதற்கு முன்பு எழுந்ததாக நினைவில்லை.

மூன்றாண்டுகளுக்கு முன்பு அமெரிக்காவிலிருந்து இந்தியா வந்த ஆராய்ச்சி மாணவி ஒருவர், தாலி பற்றித் தமிழகத்தில் நடந்த வாதத்தை எப்படியோ அறிந்து கொண்டு, அது பற்றி விவரமறிய என்னை அணுகினார். அவர், "உங்கள் செங்கோல் இதழில், இராசமாணிக்கனாருக்கும் கண்ணதாசனுக்கும் உங்களுக்கும் நடந்த கருத்துப்போர் பற்றித் தாங்கள் எழுதியவை வெளிவந்திருப்பதாக அறிகிறேன். அவற்றை நான் மைக்ரோ பிலிம் மூலம் படம் எடுத்து, என்னுடைய ஆராய்ச்சிக்குப் பயன்படுத்திக் கொள்ள விரும்புகிறேன்" என்று சொன்னார். அவருக்கு நான் அனுமதி அளித்தேன்.

தமிழரிடை நிலவும் தாலி அணியும் வழக்கம் பற்றி டாக்டர் பட்டத்திற்கு ஆய்வு நடத்தும் மாணவி அவர்.

டாக்டர் இராசமாணிக்கனார் இயற்கையெய்திய நாளிலே, நான் அவரது இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்டு, இடுகாட்டில் நடந்த இரங்கற் கூட்டத்திலும் பேசினேன். அன்று அவருக்கு இறுதி அஞ்சலி செலுத்திய ஒரே அரசியல்வாதி நான்தான். தாலி பற்றி நடந்த சர்ச்சையானது எங்களுடைய நட்பைப் பாதிக்கவில்லை.

டாக்டர் இராசமாணிக்கனார் வாழ்ந்த காலத்திலேயே அவருடைய அருமை மகனார் பேராசிரியர் இளங்கோவன், எனக்கு மிகவும் வேண்டியவராகிவிட்டார். அவரும் அவருடைய மனைவி புனிதவதியாரும் என் குடும்ப நண்பர்களாகிவிட்டனர்.

டாக்டர் இராசமாணிக்கனார் தம்முடைய குடும்பத்தையே தமிழ்க் குடும்பமாக்கி யிருக்கிறார். அதிலே அவருக்கு நிகரான தமிழ்ப் புலவர் இன்னொருவரில்லை. அவரை என்றென்றும் தமிழுலகம் மறவாது.

❖ ❖ ❖

நானறிந்த இராசமாணிக்கனார்

ஐராவதம் மகாதேவன்

'வரலாற்றின் வரலா'ற்றைப் படித்தேன்; பழைய நினைவு அலைகளில் மூழ்கினேன். வரலாற்று நாயகரான தமிழ் மூதறிஞர் இராசமாணிக்கனாருடன் எனக்கேற்பட்ட தொடர்பையும் அக்காலத்தில் நடந்த சில சுவையான நிகழ்ச்சிகளையும் பகிர்ந்து கொள்ள விழைகிறேன்.

நேரில் காணுமுன் ஆசான்

> மா. இராசமாணிக்கம் சோழர் சரித்திரத்தை நல்ல ஆராய்ச்சி முறையில் எளிய நடையில் யாவர்க்கும் பயன்படக்கூடிய வழியில் எழுதியிருக்கிறார்கள். நல்ல ஆராய்ச்சி நூல்களை அவர்கள் நன்கு கற்றறிந்திருப்பதோடு சுயமாகவும் ஆராய்ச்சித் துறையில் ஈடுபட்டவர்கள்.
>
> கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி

இராசமாணிக்கனாரை நான் நேரில் சந்திக்குமுன்னரே அவருடைய நூலொன்று என் பிற்கால ஆய்வுக்கு வழிவகுத்துத் தந்தது. 1943ஆம் ஆண்டு; எனக்கு வயது 13; திருச்சிராப்பள்ளி தூய ஜோசப் உயர்நிலைப் பள்ளியில் நாலாவது பாரம் (ஒன்பதாவது வகுப்பு) படித்துக் கொண்டிருந்தேன். பள்ளியாண்டின் இறுதியில் மாணவர்களுக்குத் தமிழிலும் ஆங்கிலத்திலும் கட்டுரைப் போட்டிகளும் பேச்சுப் போட்டிகளும் நடைபெறும். நான் அவற்றில் தவறாது கலந்து கொள்வேன்; பரிசுகளும் பெற்றிருக்கிறேன். அந்த ஆண்டு தமிழ்ப் பேச்சுப் போட்டியில் ஏதாவது ஒரு புது விஷயத்தை எடுத்துக்கொண்டு பேச வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. எதைப் பற்றிப் பேசலாம் என்று என் வரலாற்றுப் பாட ஆசிரியர் ரங்கசாமி அய்யங்காரிடம் யோசனை கேட்டேன். அவர்,

> மா. இராசமாணிக்கனார் என்பவர் அண்மையில் எழுதி வெளியிட்டுள்ள 'சிந்துவெளி நாகரிகம்' என்ற நூல் நமது நூலகத்தில் இருக்கிறது. அதில் நமது நாட்டின் பண்டைய வரலாற்றைப் பற்றிப் பல புதிய விஷயங்கள் அடங்கியுள்ளன. அந்த நூலிலிருந்து சுருக்கமாக ஒரு பேச்சைத் தயார் செய்துகொள்

என்று எனக்கு அறிவுரை வழங்கினார். அக்காலத்தில் சிந்துவெளி நாகரிகம் என்றால் என்னவென்றோ இராசமாணிக்கனார் யாரென்றோ எனக்குத் தெரிய வயதாகவில்லை. நூலகத்திலிருந்து அந்த நூலை எடுத்துப் படித்துப் பார்த்தேன். அதன் எளிய, தெளிவான தமிழ் நடையும் அதில் கண்டுள்ள புதிய வரலாற்றுச் செய்திகளும் என்னை மிகவும் கவர்ந்தன. நூலிலிருந்து குறிப்புகள் எடுத்து ஒரு சிற்றுரையைத் தயார் செய்து மனப்பாடம் செய்து பேச்சுப் போட்டியில் ஒப்புவித்துப் பரிசும் பெற்றேன். ஏறத்தாழ முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு சிந்துவெளி எழுத்துகளின் ஆய்வில் பல்லாண்டுகள் மூழ்கித்

திளைக்கவிருந்த எனக்கு 13ஆம் வயதிலேயே அதை அறிமுகம் செய்வித்த ஆசான் இராசமாணிக்கனார் ஆவார்.

விவேகானந்தர் கல்லூரியில்

நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு 1947 ஜூன் மாதம் நான் சென்னை விவேகானந்தர் கல்லூரியில் பி. எஸ்.ஸி (வேதியியல்) மாணவனாகச் சேர்ந்தேன். அதற்கடுத்த மாதமே இராசமாணிக்கனார் அக்கல்லூரியின் தமிழ் விரிவுரையாளராகப் பணியிலமர்ந்தார். ஒரு நாள் அவரை வணங்கி என்னை அறிமுகப்படுத்திக் கொண்டு, திருச்சியில் அவருடைய நூலைப் படித்துப் பேச்சுப் போட்டியில் பரிசு பெற்ற நிகழ்ச்சியைத் தெரிவித்தேன். "நீ சமஸ்கிருதத்தை மொழிப்பாடமாக எடுத்துப் படித்தும் தமிழில் இவ்வளவு ஆர்வம் காட்டுவது எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது" என்று கூறி எனக்கு ஆசி வழங்கினார். அக்காலத்தில் பி. எஸ்.ஸியில் மொழிப் பாடம் கிடையாது. இராசமாணிக்கனாரின் தமிழ் வகுப்புகளில் மாணவனாக இருக்கும் பேறு எனக்குக் கிடைக்கவில்லை. எனினும், அந்த இரு ஆண்டுகளில் கல்லூரியில் நடந்த பாரதி விழா போன்ற தமிழ் நிகழ்ச்சிகளில் தவறாது கலந்து கொண்டு அவருடைய உரைகளைக் கேட்டிருக்கிறேன். பிறகு நான் சட்டக் கல்லூரியில் மாணவனாகச் சேர்ந்தேன். அவர் மதுரை தியாகராசர் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றச் சென்றுவிட்டார். அதற்குப் பிறகு பல ஆண்டுகள் அவரைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டவில்லை.

சங்ககாலத் தமிழ்க் கல்வெட்டுகள்

1962 முதல் ஐந்து ஆண்டுகள் நான் சென்னையில் கைத்தறித்துறை இயக்குனராகப் பணியாற்றினேன். வரலாற்றுப் பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியாரின் அறிவுரைப்படி தமிழ் நாட்டுக் குகைக் கல்வெட்டுகளை நேரில் சென்று பார்த்து ஆய்வு நடத்தி வந்தேன். நான் செய்த தவப்பயனாக, 1965ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் தேதியன்று, கரூரையடுத்துள்ள புகளூரில் புகழிமலைக் குகைக் கல்வெட்டுகள் சங்க காலச் சேர இரும்பொறை மன்னர்களுடையவை என்றும் கி. பி. 2ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை என்றும் கண்டுபிடிக்கும் பேறு எனக்குக் கிட்டியது. அடுத்த மாதமே அக்கல்வெட்டுகளைப் பற்றிச் சுருக்கமான ஒரு கட்டுரையை 'ஹிந்து' நாளேட்டில் வெளியிட்டேன்.

1965ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 3ஆம் தேதியன்று மதுரைக்கு அருகில் மாங்குளத்திலுள்ள குகைக் கல்வெட்டுகள் சங்ககாலப் பாண்டிய மன்னனாகிய நெடுஞ்செழியனுடையவை என்றும், அவை கி. மு. 2ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை என்றும் கண்டுபிடித்தேன். சங்க கால மன்னர்களின் தமிழ்க் கல்வெட்டுக்கள் இன்னும் எஞ்சியுள்ளன என்ற புதிய, வியப்பான செய்தி தமிழகமெங்கும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. எனக்குப் பல வரலாற்றாசிரியர்களும் தமிழறிஞர்களும் அறிமுக மானார்கள்; அவர்களிடமிருந்து பாராட்டுகள் பெற்றேன்.

அக்காலகட்டத்தில் அ. சுப்பையா பிள்ளையவர்களின் முயற்சியால் சென்னையில் தமிழறிஞர்களின் கூட்டங்கள் மாதந்தோறும் அவரது இல்லத்திலோ, லயோலா கல்லூரியிலோ நடைபெறும். அப்பொழுது இராசமாணிக்கனார் சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறையின் துணைப் பேராசிரியராகப் பணிபுரிந்துவந்தார். அவரும் அக்கூட்டங்களில் கலந்துகொள்வார். அப்பொழுதுதான் அவருடன் மீண்டும் பழகும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

இக்கூட்டங்களில் நடந்த உரையாடல்களிலிருந்தும் நாளேட்டுச் செய்தி களிலிருந்தும் என் புதிய கண்டுபிடிப்புகளைப் பற்றி அறிந்துகொண்ட இராச மாணிக்கனார் என்னை வெகுவாகப் பாராட்டி ஆசிகளை வழங்கினார்.

கருத்து வேறுபாடுண்டு - மன வேறுபாடில்லை

ஆயினும் மௌரிய பிராமி எழுத்துகளிலிருந்தே தமிழ் பிராமி எழுத்துகள் உருவாயின என்ற என் கருத்தை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. அக் காலத்தில் இன்றுள்ளவை போன்று பல சான்றுகள் கிடைத்திருக்கவில்லை. ஜம்பையில் கிடைத்த அதியன் நெடுமான் அஞ்சியின் கல்வெட்டு, சங்க கால மன்னர்கள் தமிழ் பிராமி எழுத்துகள் பொறித்து வெளியிட்ட நாணயங்கள், தமிழ் பிராமியில் எழுதப்பட்ட நடுகற்கள், எல்லாவற்றிற்கும் மேலாக எங்கு அகழ்ந்தாலும் கிடைக்கும் தமிழ் பிராமி பொறித்த மண்பாண்டச் சில்லுகள் ஆகிய புதிய தரவுகள் மூலம் தமிழ் பிராமியே சங்ககாலத் தமிழ் எழுத்துகள் என ஐயத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது. இராசமாணிக்கனாரின் கருத்து அன்று அவருடைய காலத்தில் கிடைத்திருந்த தரவுகளின் அடிப்படையிலேயே அமைந்திருந்தது. ஆயினும் கருத்து வேறுபாடினால் மனவேறுபாடு கொள்ளாத பெருந்தகை அவர். அவர் அப்பொழுது வழங்கிய அறிவுரை இன்னும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது: "சங்ககாலத் தமிழ்க் கல்வெட்டுகளை நீ வாசித்தளித்திருப்பது பெரும் பணியாகும்; ஆனால், தமிழ் எழுத்துகளின் தோற்றத்தைப் பற்றி நீ மேலும் ஆழ்ந்து சிந்தித்து விரிவான ஆய்வை மேற்கொள்ள வேண்டும்". அப்பெருமகனாரின் அறிவுரையை இன்றுவரை பின்பற்றி ஆய்வுகள் நடத்திவருகிறேன்; எனக்கு உண்மை என்று தோன்றியவற்றை எடுத்துக் கூறி வருகிறேன்.

முதல் உலகத் தமிழ் மாநாடு

1966 ஏப்ரல் மாதம் மலேசியா நாட்டுத் தலைநகரான கோலாலம்பூரில் முதல் உலகத் தமிழ் மாநாடு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. தமிழகத்தின் தலைசிறந்த தமிழறிஞர்கள் அந்த மாநாட்டுக்கு அழைக்கப்பட்டனர். அவர்களில் இராச மாணிக்கனாரும் ஒருவர் எனக் கூறவும் வேண்டுமோ? சங்ககாலத் தமிழ்க் கல்வெட்டுகளைப் படித்தறிந்தவன் என்ற அடிப்படையில் இளைஞனான எனக்கும் அந்த மாநாட்டில் பங்கேற்க வாய்ப்பளிக்கப்பட்டது. மாநாட்டுக்குப் பயணமாகப் புறப்பட்ட தமிழறிஞர்கள் மீனம்பாக்கம் விமான நிலையத்தில் விமானத்துக்கு அருகே நின்று எடுத்துக்கொண்ட அரிய புகைப்படம் இங்கு முதன்முறையாக அச்சிடப்படுகிறது. அதில் இராசமாணிக்கனாரையும் அன்றையத் தமிழகத்தில் புகழ்பெற்ற பல தமிழறிஞர்களையும் காணலாம். அறிஞர் குழு முன்னால் தரையில் காணப்படும் நீண்ட காகிதச் சுருள் புகளூர்க் கல்வெட்டின் முதல் படியாகும்; மாநாட்டில் நடக்கவிருந்த கண்காட்சிக்காக நான் அதை எடுத்துச் சென்றிருந்தேன்.

விமானப் பயணத்தில் ஏற்பட்ட அதிர்ச்சி

விமானம் பறக்கத் தொடங்கிய சிறிது நேரம் கழித்து ஒல்லியான உருவம் படைத்த ஓர் இளைஞர் என் இருக்கைக்கு அருகில் வந்து தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார்: "என் பெயர் பன்னீர்செல்வம்; நான் முனைவர் வி. அய். சுப்பிரமணியத்தின் மாணவன்; நீங்கள் வாசித்தளித்த புகளூர்க் கல்வெட்டைப் பற்றி ஒரு மீளாய்வு செய்திருக்கிறேன். இக்கட்டுரையை மாநாட்டில் படிக்கப் போகிறேன்" என்று கூறி ஒரு பிரதியை என்னிடம் கொடுத்துவிட்டு அவருடைய இருக்கைக்குத் திரும்பிவிட்டார். ஒரு மாணவர் என்னுடைய கண்டுபிடிப்பைப் பற்றி என்ன சொல்லப்போகிறார் என்று அலட்சியமாக அக் கட்டுரையைப் புரட்டிப் பார்த்தேன். புகளூர்க் கல்வெட்டில் காணப்படும் மூன்று தலைமுறை மன்னர்கள், முறையே பதிற்றுப்பத்தின் 6ஆவது, 7ஆவது, 8ஆவது பாட்டுடைத் தலைவர்கள் என்று என்னுடைய 1965ஆம் ஆண்டுக் கட்டுரையில் கூறியிருந்ததை அவர் மறுத்து இம் மன்னர்கள் முறையே 7ஆவது, 8ஆவது, 9ஆவது பாட்டுடைத் தலைவர்கள் என்று தக்க காரணங்களைக் காட்டி விளக்கியிருந்தது எனக்குப் பெரும் அதிர்ச்சியை அளித்தது. அவர் கூறுவதே சரியென்று உணர்ந்த என் இறுமாப்பு

அகன்றது. விமானத்தை விட்டு, கோலாலம்பூரில் இறங்கும்போது அவரிடம் "உங்கள் கட்டுரையைப் பற்றி என் பேச்சில் குறிப்பிடுவேன்" என்று மட்டும் கூறினேன். அவரும் என்னை அச்சக் குறிப்புடன் பார்த்துவிட்டுப் பதிலொன்றும் கூறாமல் சென்றுவிட்டார்.

உலகத் தமிழ் மாநாட்டில் இராசமாணிக்கனாரின் பேருரை

மாநாட்டில் இராசமாணிக்கனார் 'சங்க காலத் தமிழர் சமுதாய வாழ்க்கையின் சில பகுதிகள்' என்ற பொருள் பற்றி ஒரு பேருரை நிகழ்த்தினார். அதை அந்த அரங்கில் அமர்ந்து கேட்கும் அரிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. வருகை தந்திருந்த உலகத் தமிழறிஞர்களால் பெரிதும் பாராட்டப்பட்ட கட்டுரைகளில் இதுவுமொன்றாகும்.

சங்ககாலக் கல்வெட்டுகள் பற்றிய இரு உரைகள்

மாநாட்டு நிரலின்படி முதலில் பன்னீர்செல்வத்தின் உரையும் மற்றொரு நாள் அமர்வில் என் உரையும் இடம் பெற்றிருந்தன. பன்னீர்செல்வத்தின் சுருக்கமான தெளிவான உரை அனைவரின் பாராட்டுகளையும் பெற்றது. அவருடைய உரை முடிந்தவுடன் நான் எழுந்து நின்று அவைத் தலைவரின் அனுமதி பெற்று "இக் கட்டுரையில் பன்னீர்செல்வம் கூறிய கருத்துகளை நான் ஏற்றுக் கொள்கிறேன்; அவற்றை யொட்டி என் கட்டுரையைத் திருத்தி வாசிப்பேன்" என்று கூறி அமர்ந்தேன்; அவையில் மண்டபம் அதிர கரவொலி எழும்பியது. இராசமாணிக்கனார் என்னிடம் கூறினார்: "உன் ஆய்வுகளைவிட, உன் பிழைகளை ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கு உனக்கு இங்கு நல்ல பெயரை வாங்கித் தந்துவிட்டது." அந்த அறிஞர்பிரானின் அறிவுரைப்படி இன்றுவரை என் பிழைகளை மற்றவர் சுட்டிக்காட்டினால் தயக்கமின்றி ஏற்றுக்கொண்டு வருகிறேன்.

மற்றோர் அமர்வில் 'சங்க காலத் தமிழ் பிராமி கல்வெட்டுகள்' என்ற தலைப்பில் என் உரையில் புகளூர்ச் சேரர் கல்வெட்டுக்கள், மாங்குளம் பாண்டியர் கல்வெட்டுகள் ஆகியவற்றின் விளம்பல் படிகளைத் திரையில் காட்டித் தமிழக வரலாற்றுக்கும் தமிழ்மொழி ஆய்வுக்கும் அவை எவ்வளவு முக்கியமானவை என்று எடுத்துரைத்தேன். முந்து பிராமி கல்வெட்டுகளில் காணப்படும் 'பட்டிப்ரோலு' முறைச் சொல் லமைப்புகளை வாசிப்பதில் ஏற்படும் சிக்கல்களை எவ்வாறு நீக்குவது என்றும், அப்படி நீக்கி வாசித்தால் தமிழ் பிராமி கல்வெட்டுகள் சங்க காலத் தமிழிலேயே எழுதப் பட்டுள்ளன என்று உணர்ந்து கொள்ளலாம் என்றும் கூறி என் உரையை முடிவு செய்தேன். இதுவே நான் கலந்து கொண்ட முதல் மாநாடாகும். உலகத் தமிழறிஞர்கள் முன்னிலையில் தமிழ் பிராமிக் கல்வெட்டுகளை அரங்கேற்றம் செய்யும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது என் நல்லூழின் பயனாகும்.

அன்றைய அமர்வில் இராசமாணிக்கனாரும் கலந்துகொண்டு என் உரையைக் கவனமாகக் கேட்டு எனக்கு ஆசிகளை வழங்கினார். முதல் உலகத் தமிழ் மாநாட்டுக் கட்டுரைத் தொகுப்புகளில் என் உரை இடம் பெறவில்லை. கட்டுரையைச் சுருக்கிக் குறிப்பிட்ட தேதிக்குள் அனுப்பவேண்டும் என்று மாநாட்டு அமைப்பாளர்கள் என் சென்னை முகவரிக்கு அனுப்பிய கடிதம் அப்பொழுது தில்லிக்கு மாற்றலாகிச் சென்று விட்ட எனக்குக் கிடைக்காமல்போனதே இதற்குக் காரணம். இக்குறையை ஓரளவு தீர்த்துக் கொள்ள அடுத்த சில மாதங்களிலேயே சென்னையில் எனக்கு ஒரு வாய்ப்புக் கிட்டியது.

கல்வெட்டுக் கருத்தரங்கு

1966ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 8, 9 தேதிகளில் தமிழ்நாடு தொல்லியல் துறை இயக்குநர் டாக்டர் இரா. நாகசாமி சென்னையில் ஒரு பெரும் கல்வெட்டுக் கருத்தரங்கைச் சிறப்பாக நடத்தினார். ராஜாஜி மண்டபத்தின் கீழ்ப்புறத் திண்ணையில் நடந்த இக்கருத்தரங்கை நாங்கள் 'திண்ணை மாநாடு' என்று செல்லமாகக்

குறிப்பிடுவதுண்டு. ஆயினும் இன்றளவும் தமிழ்நாட்டில் நடைபெற்ற தொல்லியல் கருத்தரங்குகளில் இதுவே மிகவும் புகழ்பெற்றதாக அமைந்தது. இதில் நீலகண்ட சாஸ்திரியார், கே. கே. பிள்ளை, டிவி. மகாலிங்கம் போன்ற மூத்த வரலாற்று அறிஞர்களும், தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், அ. ச. ஞானசம்பந்தன், இராசமாணிக்கனார் போன்ற மூத்த தமிழறிஞர்களும், நாகசாமி, கே. வி. ராமன், சம்பகலட்சுமி, எஸ். வி. சண்முகம், ஐராவதம் மகாதேவன், சம்பத் போன்ற (அக்காலத்தில்) இளம் ஆய்வாளர்களும் கலந்துகொண்டு பல அரிய கட்டுரைகளை வாசித்தளித்தார்கள்.

இக்கருத்தரங்கில் இராசமாணிக்கனார் Our Inscriptions என்ற தலைப்பில் ஓர் ஆய்வுத் தாளை ஆங்கிலத்தில் வாசித்தளித்தார். அக்கட்டுரையில் அவர் தமிழ் இலக்கியத்திற்கும் கல்வெட்டுகளுக்கும் இடையேயுள்ள தொடர்புகளைப் பல மேற்கோள்களுடன் விளக்கியுள்ளார்.

நான் கோலாலம்பூரில் ஆறு மாதங்களுக்கு முன்னர் அரங்கேற்றிய அதே கட்டுரையை Corpus of Tamil Brahmi Inscriptions என்ற தலைப்பில் மீண்டும் வாசித்தேன். 1968இல் இரா. நாகசாமியால் பதிப்பிக்கப்பட்ட Seminar on Inscriptions 1966 என்ற தொகுப்பு நூலில் இக்கட்டுரையும் சேர்க்கப்பட்டுள்ளது. தமிழ் பிராமி கல்வெட்டுகள் அனைத்தும் முதன்முறையாகத் தொகுக்கப்பட்டுள்ள இக்கட்டுரைக்கு அறிஞர் களிடையே நல்ல வரவேற்பு கிடைத்தது.

என் கல்லூரி ஆசிரியரான இராசமாணிக்கனாருடன் ஒரே ஆண்டில் இரு கருத்தரங்குகளில் பங்கேற்கும் வாய்ப்பு கிட்டியது எனக்குப் பெருமையாக இருந்தது. புகழ்பெற்ற இத் திண்ணை மாநாடே இராசமாணிக்கனார் பங்கேற்ற இறுதிப் பொது நிகழ்ச்சியாகும்.

மேலே கூறியவாறு எனக்கு வேலை மாற்றலாகி 1966ஆம் ஆண்டு நவம்பர் மாதம் புதுதில்லி சென்றுவிட்டேன். அடுத்த சில மாதங்களில் (1967 மே மாதம்) இராச மாணிக்கனார் அமரத்துவம் எய்தினார் என்ற செய்தி கேட்டு மிகவும் துயருற்றேன்.

1968 ஜனவரி மாதம் சென்னையில் கோலாகலமாக நடந்த இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் எனக்கு உரை நிகழ்த்த வாய்ப்பு கிடைத்தபோதும், சில ஆண்டுகளுக்குப் பிறகு 1977 ஜூலை மாதத்தில் ‘சிந்துவெளி எழுத்துகளின் அட்டவணை’ என்ற என்னுடைய ஆங்கில நூல் புதுதில்லி தேசிய அருங்காட்சியகத்தில் அரங்கேற்றப் பட்டபோதும் என் ஆசிரியர் இராசமாணிக்கனாரை நன்றியறிதலுடன் நினைவு கூர்ந்தேன்.

நானறிந்த இராசமாணிக்கனார்

இராசமாணிக்கனார் ஒரு தலைசிறந்த தமிழ் அறிஞர் என்பதை அவருடைய பல நூல்களையும் கட்டுரைகளையும் படித்தவர்கள் உணர்ந்திருப்பார்கள். அவருடன் நேரில் பழகும் வாய்ப்புப் பெற்றவர்களுக்கே புலமைக்கும் அப்பாற்பட்ட அவருடைய குணநலன்கள் தெரிந்திருக்கும். பண்பாளர்; நிதானப் போக்குப் படைத்தவர்; தணிந்த குரலில் மென்சொற்களில் அவருடைய பேச்சு இருக்கும். ஆழ்ந்த புலமை இருந்தது; ஆனால் அகந்தை இல்லை. மாணவர்களிடம் அவர் காட்டிய பரிவையும் மாணவர்களும் மற்ற ஆசிரியர்களும் அவர்மீது வைத்திருந்த பெருமதிப்பையும் நான் நேரில் அறிவேன். சமூக சீர்திருத்தங்களைப் பற்றிய அவரது கொள்கைகள் தீவிரமானவை; அவற்றைத் தம் வாழ்க்கையில் கடைப்பிடித்தார், ஆனால் பிறர் மீது திணிக்க முயலவில்லை. அவரது தமிழறிவும் சீரிய வாழ்வும் இராசமாணிக்கனாருக்கு அழியாப் புகழைத் தேடித் தந்துள்ளன.

❖ ❖ ❖

திசைகாட்டி

நெ.து. சுந்தரவடிவேலு

ஊழையும் உட்பக்கம் காண்பர்; எவர்? அயராது உழைப்பவர்; ஊக்கத்தோடு உழைப்பவர், வெல்வர்.

அதற்கு எடுத்துக்காட்டாக விளங்கிய, விளங்கும், விளங்கப் போகும் தமிழர்கள் பலராவர். அவர்களில் ஒருவர், என் உள்ளங் கவர்ந்த நண்பர், டாக்டர் மா. இராசமாணிக்கனார் ஆவர்.

அந்த அறிஞரை நான், அவ்வப்போது கண்டு, பழகி மகிழ்ந்திருக்கிறேன். 27-10-1940இல் என் திருமணப் பாராட்டு விழா, தந்தை பெரியார் தலைமையில், சென்னை கோகலே மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. அவையில் குழுமியிருந்த தமிழ் அறிஞர்களில் திரு. இராசமாணிக்கனாரும் விளங்கினார்.

ஓர் ஆராய்ச்சியாளர் கல்வெட்டுகளின் அடிப்படையில் தமது கருத்தைச் சொல்லும் பொழுது, அவரது கருத்து உறுதியானதாகவும் மறுக்க முடியாததாகவும் அமைந்துவிடுகிறது. வித்துவான் இராசமாணிக்கம் இந்த வழியைப் பின்பற்றித் தம் மதிப்பை மிகவும் உயர்த்திக் கொண்டுள்ளார்.

வேங்கட சுப்பையர்

தமிழ் பற்றிய பற்பல பொதுக்கூட்டங்களில் அவரைக் கண்டு அளவளாவியது உண்டு. அவர், மதுரை தியாகராசர் கலைக் கல்லூரியில் பணியாற்றியகாலை, அவரும் நானும் சின்னாளப்பட்டி தேவாங்கர் உயர்நிலைப் பள்ளி நிகழ்ச்சியில் பங்கு கொண்டோம். கோலாலம்பூரில் நடைபெற்ற முதல் உலகத் தமிழ் மாநாட்டில் கலந்து கொண்டோம்.

எங்களுக்கிடையே பழகுதல் அளவோடு இருக்க நேரினும், உணர்ச்சியால் அப்பெரியவரோடு நான் அதிகம் பிணைந்திருந்தேன். எங்களுக்கிடையே இருந்த பொது உணர்ச்சி என்ன?

தமிழர் மானத்தோடு வாழ வேண்டும்; வேறெந்தப் பிரிவின ருக்கும் தாழாதவர்களாக வாழ்தல் வேண்டும். தமிழ், வீட்டு மொழியாக முடங்கிவிடுதல் ஆகாது; ஆட்சி மொழியாதல் தேவை; வழிபாட்டு மொழியாதல் இன்றியமையாதது. அவற்றிற்கு வழியாக, பாடமொழியாதல் முறை.

சைவப் பற்றில் திளைத்திருந்த டாக்டர் இராசமாணிக் கனாரையும், தந்தை பெரியார் வழியில் நடைபோடும் என்னையும் தமிழ், தமிழர் எதிர்காலம் பற்றி நாங்கள் கொண்டிருந்த கருத்தொருமை, நல்ல நண்பர்களாக்கிற்று.

டாக்டர். மா. இராசமாணிக்கனார் இளைய தலைமுறைக்குத் தமிழ் உணர்வும், தமிழ்ப் பற்றும் ஊட்ட மட்டுமா உதவுகிறார்? இல்லை.

டாக்டர் மா. இராசமாணிக்கனார் வாழ்க்கை கற்பிக்கும் பாடங்கள் பலவாகும்.

'தன்னை மென்மேல் உயர்த்திடுவானும் தான்'. இஃது உறுதியான அறிவுரை. இதற்கு விளக்க உரையாக அமைந்தது அவருடைய வாழ்க்கை.

பள்ளியிறுதி வகுப்புத் தேர்வோடு, முறைசார்ந்த கல்வியை முடித்துக் கொள்ளும் நெருக்கடி, இளைஞர் இராசமாணிக்கனாருக்கு ஏற்பட்டது. எழுத்தராகும் நிலை நேரிடினும், கலங்காது கல்வியே நாட்டமாயிருந்தார். அதற்குத் துணைநிற்கும் ஆசிரியப் பணியினைப் பெற்றார். நல்லாசிரியராகச் செயல்பட்டார். மெய்யான நல்லாசிரியர் உண்மையான நன்மாணாக்கராகவும் விளங்க வேண்டும். இளைஞர் இராசமாணிக்கனார் வாழ்நாள் முழுவதும் தாமே கற்று வந்தார்.

தம் முயற்சியில் புலவர் பட்டம் பெற்றார். பி.ஓ.எல். பட்டம் பெற்றார். எல்.டி. பட்டம் பெற்றார்; எம்.ஓ.எல். பட்டம் பெற்றார் . இவற்றிற்கெல்லாம் மேலாக, 'டாக்டர்' பட்டமும் பெற்றார். இத்தனையும் ஆசிரியர் தொண்டை ஆற்றிக்கொண்டே பெற்றார். எங்கோ சிலரே, அரிதாக, டாக்டர் பட்டம் பெற்ற காலத்தில் இராசமாணிக்கனார் டாக்டரானார் என்பது குறிக்கத்தக்க செய்தியாகும். இஃது அவருடைய மதிநுட்பத்திற்கு, மடி அறியாத உழைப்பிற்கு, எண்ணிய எண்ணியாங்கு எய்தும் திண்மைக்கு எடுத்துக்காட்டு; அதே நேரத்தில், நம்மவர்களுக்குத் திசைகாட்டி.

தமிழ் உலகின் மூத்த மொழிகளில் ஒன்று; பண்டை இலக்கியங்கள் செறிந்த மொழி; வானமளந்ததனைத்தும் அளந்திடும் வன்மொழி.

இம்மொழிக்குரியோராகிய நாம் இதன் மறுமலர்ச்சிக்கு, புதுப்பொலிவிற்கு, உரிய மாண்பிற்குப் பாடுபடும் கடமை - தனிக்கடமை - பெற்றவர்கள் ஆவோம்.

டாக்டர் இராசமாணிக்கனார் இக்கடமையைத் திறம்பட ஆற்றினார். பயன்தரும் வகையில் ஆற்றினார்; நமக்குத் தடம் போட்டுத்தரும் முறையில் ஆற்றினார்.

தமிழர்தம் நீண்ட வரலாறு, பண்பாடு, கலை, இலக்கியம் ஆகியவை பெருமளவு மறைக்கப்பட்டுள்ளன; இல்லையேல் திரிக்கப்பட்டுள்ளன.

மன்னர்களின் மாளிகைகளைவிட மக்கள் குழுமும் கோவில்களே, நீண்ட அகவை பெறக்கூடுமென்பதை அறிந்த நம் முன்னோர்கள், அவற்றில், அவற்றோடு, நம் கலைகளைப் பிணைத்து வைத்தார்கள். கோவில்களிலும் பிற இடங்களிலும் இருக்கும் கல்வெட்டுகள், தமிழர் வரலாற்றுப் புள்ளிகளைக் காட்டும் சுடர்கள் ஆகும்.

டாக்டர் இராசமாணிக்கனார் கல்வெட்டு ஆய்வில், தனிநாட்டஞ் செலுத்தினார். தாம் பெற்ற அறிவு இன்பத்தை மற்றவர்களோடும் பங்கிட்டுக் கொண்டு மகிழ்ந்தார்.

நூற்றுக்கு மேற்பட்ட நூல்களை எழுதிய டாக்டர் இராசமாணிக்கனார் பல்லவர் வரலாறு, சோழர் வரலாறு, சிந்துவெளி நாகரிகம், தமிழ் மொழி இலக்கிய வரலாறு, பெரிய புராண ஆராய்ச்சி, சைவ சமய வளர்ச்சி, தமிழ் நாட்டு வட எல்லை, பத்துப்பாட்டு ஆராய்ச்சி போன்ற பல சிறந்த நூல்களை எழுதிச் சிறப்புப் பெற்றார்.

அறிஞர் இராசமாணிக்கனார், மடியறியாதவர்; அரை ஆள் ஊதியம் கொடுப்பினும் மூன்று ஆள் தொண்டை ஒருவராகவே, சுணங்காது, செய்து முடிக்கும் இயல்பினர். சென்னைப் பல்கலைக்கழகத்தில், அவர் சேர்ந்தபோது, அங்கே, பாடஞ் சொல்லும் பணியில்லை; ஆய்வாளர்கள் அரியர்; இவற்றைச் சாக்குகளாகக் கொண்டு, அவர், தமது தனிவாழ்வில் மூழ்கிவிடவில்லை.

உயர்ந்தவற்றை அள்ளி, அரியவற்றைச் செய்து முடிக்கும் இயல்பினரான டாக்டர் இராசமாணிக்கனார், 'பத்துப்பாட்டு ஆராய்ச்சி' செய்து, பல்கலைக்கழகத்திடம் ஒப்படைத்தார்.

வெளியீடுகளில் நாட்டமில்லாத அன்றைய சூழல், 'பத்துப்பாட்டு ஆராய்ச்சி' கையேட்டுப் படிவத்தைப் பூட்டி வைத்துவிட்டது. அதுவே எனக்கு அரிய வாய்ப்பாயிற்று.

சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தராகப் பொறுப்பேற்றதும் நான் பல புலங்களையும் நேரில் கண்டேன். அப்போது 'பத்துப்பாட்டு' ஆய்வு பற்றி எனக்குத் தெரிய நேரிட்டது. அந்நூலை - 800 பக்கங்களுக்கு மேற்பட்ட அரிய நூலை வெளியிட ஆணையிட்டேன். அது விரைந்து, அச்சாகி, வெளியாயிற்று.

டாக்டர் இராசமாணிக்கனாரின் 'பத்துப்பாட்டு' ஆய்வுநூல், ஆழ்ந்த புலமைக்கு நுண்மாண் நுழைபுலத்துக்கு, 'பகீரத' முயற்சிக்கு எடுத்துக்காட்டாக வெளிவந்தது. சால்புடைய தமிழ் அறிஞர் உலகம் அந்நூலை, அதன் ஆசிரியரைப் போற்றிப் பாராட்டியது. டாக்டர் உ.வே. சாமிநாத அய்யருக்குப் பிறகு, அய்யரின் உயர்தரத்திற் கொப்ப, பத்துப்பாட்டுக்கு ஆய்வுரை எழுதிப் பெருமை கொள்கிறார், டாக்டர் இராசமாணிக்கனார் என்று, 'இந்து' நாளிதழ் தனது மதிப்புரையில் பாராட்டியது. நேரத்தே வெளியிட்டிருந்தால், அறிஞர் இராசமாணிக்கனார் காது குளிரக் கேட்டு இன்புற்றிருப்பார்.

செய்வதைத் திருந்தச் செய்வதோடு, நேரத்தில் செய்யக் கற்றுக்கொள்ள வேண்டு மென்னும் பாடத்தை, இந்நிகழ்ச்சி கற்பிக்கிறது.

வாழ்நாள் முழுவதும் கற்றுக்கொண்டே வாழ்ந்த தமிழ் அறிஞராம் டாக்டர் இராசமாணிக்கனார், சமுதாயத் தொண்டை மறந்ததே இல்லை. விடுமுறை நாட்களை ஆய்வுக்கோ, சொற்பொழிவுகளுக்கோ செலவிட்டு, தமிழர்களின் செல்வமாக ஒளிவிட்டார்.

தம் வளர்ச்சியில் வெற்றி பெறுபவர்களில், சிலரே, குடும்பத்தின் வளர்ச்சியிலும் அதே அளவு வெற்றி பெறுகிறார்கள். டாக்டர் இராசமாணிக்கனார் அச்சிலரில், ஒருவர் ஆவார்.

நடுநிலைப் பள்ளி ஆசிரியராக வாழ்க்கையைத் தொடங்கிய இராசமாணிக்கனார், கல்வியின் கொடுமுடியை எட்டிப் பிடித்தார். பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை அறிஞராக உயர்ந்தார். அதேபோது, தமது வாழ்க்கைத் துணைவியாருக்கும் தமிழ் கற்றுத் தந்து அவரையும் புலவராக, ஆசிரியராக வளர்த்த பெருமை டாக்டர் இராச மாணிக்கனாருக்கு உரியதாகும்.

அதோடு, தமது எட்டுக் குழந்தைகளையும் - ஆண் பெண் வேற்றுமை பாராது - உயர் கல்வியில் தேர்ச்சி பெறச் செய்தார். அனைவரும் பட்டதாரிகள் என்பதை எண்ணி, உவகை கொள்ளும் தமிழர் எண்ணிலார். 'நல்ல குடும்பம் ஒரு பல்கலைக்கழகம்' என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் படம் பிடித்துக்காட்டியது மிகையல்ல என்று மெய்ப்பிக்கிறது இராசமாணிக்கனாரின் குடும்பம்.

ஆசிரியர், எவருடைய தொண்டர்? எல்லா மக்களுக்கும் தொண்டர்; எல்லாக் கட்சிகளுக்கும் பொதுவானவர்; எல்லாச் சமயத்தவரும் எல்லாச் சாதியினரும் எல்லாக் கொள்கையினரும் நம்பிக்கை வைக்குமாறு இயங்க வேண்டிய பொதுத்தொண்டர்.

அத்தகைய பொதுத் தொண்டர், இக்காலச் சூழலில், எப்படிச் செயல்பட வேண்டும்? இக்கேள்விக்கு டாக்டர் இராசமாணிக்கனார், தமது நடுநிலைமையான போக்கால், வழி காட்டினார்.

அவருக்கென்று சில தெளிவான, உறுதியான கொள்கைகள் உண்டு. ஆயினும், ஆசிரியர் தொழிலுக்குத் தேவையான கட்சி சார்பற்ற பொதுத்தொண்டராகச் செயல்பட்டு, நமக்கெல்லாம் பாடங் கற்பித்தார்.

டாக்டர் மா. இராசமாணிக்கனாரின் வாழ்வும் வளமும் தமிழருக்கு நம்பிக்கை ஊட்டுவன; வழிகாட்டுவன; ஊக்கப்படுத்துவன; பண்படுத்துவன.

டாக்டர் மா. இராசமாணிக்கனாரின் அறிவுப்பசி ஆயிரக்கணக்கான தமிழரைப் பற்றட்டும்; அவரது இடையறாத முயற்சி, தமிழர்களின் புதுப் போக்காகட்டும். அவரது தமிழ்த் தொண்டுள்ளம், பலரையும் ஆட்கொள்ளட்டும். அவரது வெற்றி, தமிழரின் தொடர் வெற்றிகளுக்கு வேராகட்டும்.

❖ ❖ ❖

இனிய தோழர்

கீ. இராமலிங்கனார்

எழிலும் எளிமையும் இணைந்த உருவினர்

முகத்தின் உறுப்புக்கள் தெறுப்பாக அமையப் பெற்றவர் டாக்டர் மா. இராசமாணிக்கனார். ஈர்க்கும் கண்கள் எழில் வாய்ந்தன. அடர்ந்த புருவங்கள் அழகு சேர்ப்பன. முகப்பில் நிற்பதால் 'மூக்கு' எனப் பெறுவது, முகத்தின் பொலிவை மிகுத்து நிற்பது. பற்கள் பளிச்சிடும் பாங்கின. இதழ்கள், பருத்திலவாயினும் இதஞ்சொல் புகலும் இனிய இயல்பின. வண்ணம். எண்ணத்திற்கு உகந்தது. உயரம் சிறிதே. பருமனும் பெரிதன்று. எனினும் கவரும் தோற்றம். கருத்துக்கு இசைந்த கவினார் உருவம்.

வித்துவான் இராசமாணிக்கம் அவர்கள் நன்கு ஆராய்ந்து ஒழுங்குபடுத்திச் சீரிய மணமுறை ஒன்றைத் தமிழர்கள் பின்பற்றுமாறு வகுத்துள்ள கட்டுரை கண்டு மகிழ்ந்தேன். இந்நாள் தமிழுலகுக்கு அவர் இதனால் பேருதவி புரிந்துள்ளார் என்று சொல்வேன்.

சி. கே. சுப்பிரமணிய முதலியார்

உடையில் எளியவர்; வெள்ளை வேட்டியர்; வெண்ணிறச் சட்டையர்; கரையில் சரிகை இடைமிடைந்த சலவை மேல் துண்டினர்; துப்புரவான கைக்குட்டையும் கொண்டவர். ஆடை அழுக்கேற என்றும் விடாதவர். அவரது உடைகளின் தூய்மை உள்ளத்தைப் பற்றும். எப்போதும் கையில் ஒரு நல்ல நூலை ஏந்தியே வருவார். முதலில் நான் அவரைக் கண்டது இந்த வடிவத்தில்தான். பின்பு எங்கு அவரைப் பார்த்தாலும் இதில் ஏதும் மாற்றம் கண்ட தில்லை. உலகத்தோடு ஒத்து இயங்க வாழ்க்கையின் பிற்பகுதியில் அவர் கால்சட்டை, மேல்சட்டை அணியலானார். ஆயினும் அவற்றிலும் எளிமையும் தூய்மையும் இடம் பெற்று விளங்கின. ஆரவாரம் சிறிதும் புகவிடவில்லை அவர்.

இவையாவும் தமிழ் ஆசிரியர் பலரினின்றும் அவரைப் பிரித்து எடுத்துக்காட்டும். சிறிய ஆசிரியராக வாழ்வைத் தொடங்கும் போதே அவர் இவ்வாறு இலங்கினார். இறுதிவரை இதில் இருந்து அவர் மாறியது இல்லை. ஆசிரியர்களின், அவர் களிலும் தமிழாசிரியர்களின் பெருமையைக் குறைத்து மதிப்பிடும் போக்கை அவர் உணர்ந்து அதைக் களைந்து எறியும் நோக்கத்துடன் முதலிலிருந்தே மிடுக்குடனே இருந்துவந்தார். இதனால் அவர் தமக்கு இயல்பாக இருந்த எளிமையைக் கைவிட வில்லை. தமிழ் ஆசிரியர்களில் பெரும்புலவர் கா. நமச்சிவாய முதலியார் அவர்களுக்குப் பிறகு எளிமையோடு இணைந்த பெருமிதத்தை இராசமாணிக்கனாரே கடைப்பிடித்தார் என்றால் அது மிகையாகாது.

அன்பும் பண்பும் அளைந்த பாங்கினர்

ஆசிரியப் பணியின் மேன்மையைக் காப்பதில் அவருக்கு இருந்த மிடுக்கினால், அவருடைய அன்பும் பண்பும் சிறிதும் குறைந்துவிடவில்லை. அன்பர்களிடத்தில் அவர் பழகும் பாங்கு, அகத்தினிக்கும் தன்மையாக இருந்தது. எவரிடமுமே அவர் அன்பைப் புறக்கணித்துவிட்டு உறவாடுவதும் இல்லை. அவரது அன்பான பேச்சு நயப்பானது. எவரையும் அவரிடத்தில் ஈடுபடுத்தும் பான்மையது. புதிதாகக் காண்பவர்களையும், அவரது உரையினால் உவப்பூட்டி அவர்கள் தம்பால் நேயம் கொள்ளவும் தாம் கோரியவாறு நடந்து கொள்ளவும் செய்துவிடுவார். வெளியூர் நிகழ்ச்சிகளுக்கு அவருடன் நானும் செல்ல வாய்த்தபோது இந்த உண்மையை இனிது கண்டிருக்கிறேன். எவ்வளவு புதியவர்களாயினும் அவர்களை எவ்வளவு எளிதில் தம் வயப்படுத்திக் கொள்கிறார் என்பதைப் பார்த்து நான் வியப்பும் விம்மிதமும் அடைந்திருக்கிறேன். அவரது இல்லத்திற்கு வருகிறவர்களுக்கு, அவர்கள் வந்து அமர்ந்து பேசத் தொடங்கும்போதே, குவளையில் பருகும் பானம் வந்துவிடும். அவர் சொல்லிவிடாமலேயே அவர்தம் வாழ்வரசியார் அனுப்பி வைத்துவிடுவார்கள். நான் நேரில் கண்டு மகிழ்ந்த காட்சி இது. அவரது அன்பு, பண்பின் அடிப்படையில் அமைந்தது. பண்பற்ற அன்பு பகட்டானதாகி, கேடு விளைவிக்கவும் சூழ்ச்சி செய்துவிடும். அதை 'அன்பு' என்று சொல்வதும் தகாது. ஆனால், அவரது பண்பு அளாவிய அன்பினால் எவரும் கேடு உறார். தமக்குத் தேவையான பலனை எளிதில் முற்றுவித்துக் கொள்ள அது பயன்படுமாயின், பிறரது நலனுக்கு ஒருபோதும் அது தடையாக இராது. அவரது அன்பின் பண்பினால் அவர் எத்தனையோ பேருக்கு, எவ்வளவோ நன்மையைக் கூட்டுவித்திருக்கிறார் என்பதை நான் நனி அறிவேன். உண்மையிலேயே அன்பிலும் பண்பிலும் இயல்பாகவே குறைந்தவர்களும் கூட அவரது அன்புப் பண்பின் அரும் பாங்கினை நுகரும் வாய்ப்புப் பெறுவாராயின், அன்பும் பண்பும் பூண்டவர்களாக மாறிவிடுவார்கள்.

தமக்கு நன்மை புரிபவர்களிடம் அவர் கொண்டிருந்த நன்றி உணர்வுப் பண்பை, நான் பெரிதும் போற்றுவேன்.

தனியே பயின்று தனிநிலை உற்றவர்

முதன்முதலில் நான் அவரைக் கண்டபோது, அவர் சென்னை வண்ணாரப்பேட்டை தியாகராய செட்டியார் உயர் தொடக்கப்பள்ளியில் ஆசிரியராக இருந்தார். தொடக்கப்பள்ளி ஆசிரியர் என்று அவரை யாரும் நினைக்க மாட்டார்கள். அவருடைய மிடுக்கான தோற்றமும் தெளிவும் துப்புரவும் அவரை ஒரு பேரறிஞர் என்றே எண்ணச் செய்யும். அவர் அரும்பெறல் தந்தையார் அலுவல் ஆற்றிய நகரமாகிய கர்நூலில் படித்தார். எனவே, அவருக்குத் தெலுங்கு மொழியில் இயல்பாகப் பேச முடிந்தது. திருச்சிராப்பள்ளி மூதறிஞர் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம், டி.லிட். அவர்கள் 1958இல் அமைத்துத் தமது ஈட்டம் கொண்டே இனிது புரந்துவரும் தமிழகப் புலவர் குழுவின் கூட்டம் ஒன்று, திருப்பதிப் பல்கலைக்கழக எல்லைக்குள் நடந்தபோது, அக்குழுவின் உறுப்பினர்களில் இருவராகிய அவரும் நானும் மட்டுமே தெலுங்கில் உரை நிகழ்த்த இயன்றது. தமிழை நன்கு புரிந்துகொள்ள முடியாத அப்பகுதியினர் பலர் கேட்டுப் போற்றினர்.

தஞ்சையில் தொடர்ந்து படித்து, புனித பீட்டர்சு பள்ளியில், பள்ளி நிறைவுத் தேர்வில் வெற்றி பெற்றார். கல்விக்கூடத்தில் சேர்ந்து பயின்று அவர் படித்த படிப்பு இவ்வளவே. வண்ணாரப்பேட்டையில் ஆசிரியராகச் சேர்ந்த பிறகு தனியே, தாமே, தமிழ் இலக்கிய இலக்கணம் பயிலத் தொடங்கினார். 1934ஆம் ஆண்டில் அவர் வித்துவான் முதல்நிலைத் தேர்வு எழுதினார். நான் அலுவல் முறையில் வெளியூருக்கு மாற்றப் பெற்றதால் அவரை அவ்வப்போது கண்டு உரையாடும் வாய்ப்பு இல்லாமல் போயிற்று.

வெளியூரில் இருந்தபடியே நானும் வித்துவான் முதனிலைத் தேர்வுக்குத் தனியே பயின்று வந்தேன். 1934இல் தேர்வு எழுதச் சென்னை, பச்சையப்பன் கல்லூரியின் பெருமண்டபத்தில் எனக்குரிய இடத்தில் அமர்ந்தேன். எனக்கு நேர்முன்பிருந்த இருக்கையில், என் தோழர் அமர வந்தார். அவர் 'இராச', நான் 'இராம' எனத் தொடங்கும் பெயரினர். எனவே, அவருக்கு அடுத்த இடம் என்னதாயிற்று. சிலகால இடைவெளிக்குப் பின்பு எதிர்பாராமல் தலைப்பட்டதால், நாங்கள் இருவரும் களிப்பால் துளும்பினோம். அதே மண்டபத்தில் தேர்வு எழுதிய எங்கள் நண்பர், பிற்காலத்தில் ஜெயின் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியராக இலங்கிய திரு. எசு.வி. வரதராச ஐயங்கார் எங்களுக்குப் பின்னால் கடைசி இருக்கையில் அமர்ந்திருந்தார்.

அத்தேர்வில் அவர்கள் இருவரும் தேறினர். நானும் தேறினேன். அடுத்து அவர்கள் வித்துவான் நிறைநிலைத் தேர்வில் தேறி, 'வித்துவான்' பட்டம் பெற்றனர். நான் நகராட்சி ஆணையர் பணிக்கு மாற்றப் பெற்றேன். புது அலுவலில் செறிந்து ஈடுபட வேண்டி இருந்ததால் நான் நிறைநிலைத் தேர்வுக்குப் பயில முடியாது சென்றது. வித்துவான் இராசமாணிக்கனார் முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியர் ஆனார். எனினும், அவர் மேற்கொண்டு படிப்பதை நிறுத்திவிடவில்லை. கீழ்த்திசைக் கலைப் பட்டப்படிப்பில் ஈடுபடலானார். கீழ்த்திசைக் கலை இளைஞர் (B.O.L. - Bachelor of Oriental Learning) என்னும் பட்டத்தை ஈட்டும் படிப்பு அது.

அந்தக் காலத்தில், அந்தப் பட்டத்தைப் பெறுவதற்கு, மூன்று வகைத் தேர்வுகள் எழுதி அவற்றில் வெற்றி பெற வேண்டி இருந்தது. இளங்கலைஞர் (சிறப்பு) (B.A Hons.) என்னும் பட்டத்திற்கு உரிய பாடங்களில் முதல்நிலைப் பாடமான ஆங்கிலப் பொதுப் பகுதியில் தேற வேண்டும். கவிதை, உரைநடை கொண்ட ஆங்கில இலக்கியப் பகுதி அது. தாமே படித்து அதில் தேறிவிட்டார் இராசமாணிக்கம். ' கீழ்த்திசைக் கலையில் வல்லமை' (Proficiency in Oriental Learning) என்னும் சான்றிதழைப் பெறப் பல பிரிவுகள் இருந்தன. அவற்றில் இரண்டு பிரிவுகளில் தேர்வு எழுதி வெற்றி பூண வேண்டும். முதலாண்டு ஒரு பிரிவில் வென்றார். உடனே, 'வித்துவான் இராசமாணிக்கம், பி.ஓ.எல்' (B.O.L) என்று தம் பெயரைக் குறிக்கலானார். அடுத்து இன்னொரு பிரிவில் வெற்றியடைந்ததும் பல்கலைக் கழகம், தானே 'பி.எல்' பட்டத்தை அளித்துவிட்டது.

'பி.ஓ.எல்'க்கு மேல் 'எம்.ஓ.எல்' என்னும் பட்டம் ஒன்று இருந்தது. அதற்குத் தனியே ஆராய்ச்சி செய்து ஓர் ஆய்வுரை எழுதி அனுப்ப வேண்டும். இராசமாணிக்கம் எழுதி அனுப்பிய ஆய்வுரையை ஏற்று, எம்.ஓ.எல். பட்டத்தை வழங்கியது சென்னைப் பல்கலைக் கழகம். இப்பட்டம் வருவதற்கு முன்பே, இடையிடையே பள்ளியில் விடுப்புப் பெற்று, சைதாப்பேட்டையிலுள்ள ஆசிரியர் பயிற்சிப் பட்டப்படிப்புக் கல்லூரியில் சேர்ந்து படித்து, 'எல்.டி.' (L.T.) பட்டம் பெற்றார். பிறகு, 'வித்துவான் இராசமாணிக்கம் , பி.ஓ.எல்., எல்.டி., எம்.ஓ.எல்.' என்று தம் பெயரை எழுதலானார். பி.ஓ.எல்., எம்.ஓ.எல். இரண்டையும் போட்டுக் கொள்ளலாமா என்று சிலர் ஐயம் கிளப்பினர். நான் குடந்தையில் நகராட்சி ஆணையராக இருந்தபோது, அங்கு அவர் சொற்பொழிவுக்கு ஏற்பாடு செய்தேன். அக்கூட்டத்தில் ஒருவர் எழுந்து, இதே கேள்வியைக் கேட்டார். அதற்கு விளக்கமாக இராசமாணிக்கம், "பி.ஓ.எல். பட்டம் தேர்வு எழுதிப் பெறுவது, ஆனால் எம்.ஓ.எல். பட்டம் ஆய்வுக் கட்டுரை வரைந்து அனுப்பிப் பெறுவது. பல்கலைக்கழக விதிகளிலேயே இரண்டு பட்டங்களையும் போட்டுக்கொள்ள இடமுண்டு" என்று கூறினார்.

இதோடு அமைதி கொள்ளவில்லை அவர். மூதறிஞர் (Doctor) பட்டமும் பெற்றுவிட முனைந்து ஆராய்ச்சி செய்தார். ஆசிரியர் அலுவலில் இருந்துகொண்டே ஆராய்ச்சியுரை எழுதி முடித்து அனுப்பினார். மூதறிஞர் (Doctor) பட்டமும் வந்துவிட்டது. அதற்குள், குறித்த ஓர் ஆண்டுக்கு முன்பு பி.ஓ.எல். பட்டம் பெற்றவர்கள் பல்கலைக்கழகத்துக்கு விண்ணப்பித்து பி.ஓ.எல். பட்டத்துக்கு மாறாக எம்.ஏ. பட்டம்

பெற்றுக்கொள்ளலாம் என்னும் விதி வந்தது. பிறகு அவர் பெயர் ‘டாக்டர் வித்துவான் இராசமாணிக்கம், எம்.ஏ., எல்.டி., எம்.ஓ.எல்., பிஎச்.டி.’ என்று ஆயிற்று. எம்.ஓ.எல். பட்டம் ‘பெரியபுராண ஆராய்ச்சி’க் கட்டுரைக்காகக் கிடைத்தது. பிஎச்.டி. பட்டம், ‘தென்னிந்தியாவில் சைவ சமய வளர்ச்சி’ என்னும் ஆராய்ச்சிக் கட்டுரைக்காகக் கிடைத்தது.

ஆராய்ச்சிப் புலமையில் அறிவுசால் வலவர்

கற்பது எதையும், அவர் அகழ்ந்து கற்பார். அதன் ஆழங்காணும் இயல்பினர். ஆராய்ந்து அறிந்த பொருள்களை அவர் கட்டுரைகளாகவும் நூல்களாகவும் எழுதி விடுவார். சிலர், தம் ஆராய்ச்சியில் அரிய பொருள்களைக் காணக்கூடும். ஆனால் அவற்றை எடுத்து உருவத்தில் வடித்து வைப்பதில்லை. நண்பர் இராசமாணிக்கனாரோ, தம் கருத்துக்களை வரைவு செய்து வைப்பதில் சளைப்பதில்லை. தமிழ் மகளிர் அணியும் மங்கல நாணாகிய தாலியைக்கூட, அவர் சும்மா விடவில்லையே! திரு. ம.பொ. சிவஞானம் அவர்களுடன் வேறுபட்டு, தொடர்ந்து ‘தமிழர் திருமணத்தில் தாலி’ என்னும் தலைப்பில், பலரும் படித்தறியும்படி நாளிதழிலேயே எழுதி வந்து, அதைப் பலர் வேண்டுகோளின்படி, ஒரு தனி நூலாகவும் வெளியிட்டார்.

அவர் வரைந்துதவிய சிறந்த நூல்களில் பல, ஆழ்ந்த ஆராய்ச்சிக்குப் பிறகே எழுதப்பெற்றவை. ‘கல்வெட்டு’, ‘தொல்பொருள்’ பற்றிய அவரது ஆராய்ச்சியின் பயனாக, பல கட்டுரைகள், தமிழ் இதழ்களில் அவ்வப்போது எழுதப் பெற்றன. அவற்றைத் திரட்டித் தனித்தனி நூல்களாக வெளியிட்டால், ஆராய்ச்சித் திறன் வளர்வதற்கு அவை பெருந்துணையாக அமையும். ‘சிந்துவெளி நாகரிகம்’ பற்றி அவர் எழுதியுள்ள ஆராய்ச்சி நூல் சுவையானது. 1940-41ஆம் ஆண்டில் நான் விழுப்புரம் நகராட்சி ஆணையராக இருந்தபோது, எனக்குப் புதுச்சேரிக் கல்விக்கழக ஆண்டு விழாவில் தலைமையேற்க வாய்த்தது. தென்னகத்திலுள்ள பல புலவர்கள் பேசினார்கள். என் அன்பின் தோழர் இராசமாணிக்கனாரும் நானும் ஒரே கட்டடத்தில் தங்கியிருந்தோம். அப்போது நாங்கள் அகமகிழ அளவளாவியதோடு, அண்மையிலிருந்த ‘அரிக்கமேடு’ என்னும் இடத்தில் அகழ்பொருள் ஆய்வு நடத்தவும் சென்றிருந்தோம். அதற்குத் தலைமையேற்றவர் என் தோழரே. அரிக்கமேட்டில் அகழ்ந்தெடுக்கப்பட்ட பல அரிய பொருள்களை, அவர் போற்றிய பாங்கைக் கண்டு வியந்தேன். சிந்துவெளியைக் கண்டது போலவே, அவர் விம்மிதமுற்றார்.

எம்.ஓ.எல். பட்டத்திற்கு அவர் செய்த பெரியபுராண ஆராய்ச்சி, அறிவியல் தன்மையுடையது. அதுவரை யாரும் செய்யாத முறையிலானது. பல ஊர்களுக்கு நேரே சென்று, பல கோயில் சிற்பங்களை ஆராய்ந்து, பல அறிஞர்களை நேரில் பார்த்து, பல நூல்களைப் படித்துணர்ந்து, பல உண்மைகளைக் கல்லியெடுத்து, தமது ஆராய்ச்சியை வலுப்படுத்தியிருக்கிறார். அவரது ‘பத்துப்பாட்டு ஆராய்ச்சி’ மிகவும் விரிவானது. சென்னைப் பல்கலைக்கழகத்தில் அவர் ஆற்றிய அரும் பணிக்கு அடையாளமாக, அதனை, அப்போது துணைவேந்தராக விளங்கிய திரு. நெ.து. சுந்தரவடிவேலு அவர்களே போற்றிப் பல்கலைக்கழக வெளியீடாக, அச்சேற்றுவித்தார்கள். அவரது ‘தமிழ்நாட்டு வட எல்லை’ என்னும் ஆய்வு நூல், அதுபற்றிப் போராட்டம் நடத்தி வெற்றி பெற்றதற்குப் பேருதவியாக இருந்தது.

எல்லா நிலைக்கும் ஏற்ற ஆசிரியர்

தொடக்கப் பள்ளி படிக்கும் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லும் ஆற்றல் பெற்றிருந்த அவர், படிப்படியாக உயர்நிலைப்பள்ளியிலும் கல்லூரிகளிலும் பல்கலைக் கழக நிலையிலும் பாடம் சொல்லும் திறல்மிக்க பேராசிரியராகவும் விளங்கினார்.

மாணவர்கள் அமைதியாக அமர்ந்து விரும்பிப் பாடம் கேட்கும் வகையில், பயிற்றும் சிறப்பு அவரது சிறப்பாகத் திகழ்ந்தது. மாணவர்களின் மனப்போக்கை நுணுகியறிந்து கொண்டு, அதற்கு ஏற்ற வண்ணம் தம் பேச்சை அமைத்து எப்படிப்பட்டவரையும், தம் வயப்படுத்திக் கொள்வார். அவரை எதிர்த்து எப்போதும் எவரும் போராட்டம் நடத்திய தில்லை. அவருக்கு வேறு எத்துணையோ பணிகள் இருந்தன. நூல்கள் எழுதிய படியே இருப்பார். கூட்டங்களில் பேசுவதற்குப் பல ஊர்களுக்குக் கிழமை தவறாது சென்றபடியே யிருப்பார். சமுதாயக் கடமைகளிலும் வழுவமாட்டார்.

இவை அத்தனைக்கும் இடையே, வகுப்பில் கற்பிக்கப் பெறவேண்டிய பாடங்களின் பொருளும் அதனைச் சொல்லும் முறையும், அவரது கையாட்சியில் இருக்கும். ஆயத்தம் இன்றி வந்துவிட்டாரே ஆசிரியர் என்று எவரும் எண்ணமாட்டார். மாணவர்களை ஈர்த்துப்பிடித்து வைத்துக்கொண்டிருப்பார். அவரது பாடஞ் சொல்லும் திறன் அவர்களை அவரிடம் அவ்வாறு ஈடுபடுத்தும். 'அவர்கள் படிப்பில் அக்கறைகொண்டு படிக்க வேண்டும்; அவர்களது பிற்கால வாழ்க்கைக்குத் துணையாவது படிப்பே' என்பதனை உணர வைப்பதற்காக, அவ்வப்போது தமது வயிற்றின் மீது வலக்கையை வைத்து வட்டமாகத் தடவுவது உண்டு. வயிறு ஒன்று இருக்கிறது என்பதை மறவாதேயுங்கள் என்பது குறிப்பு. இவ்வாறு செய்து, மாணவர்களைத் தம் பக்கம் ஈர்த்து, தாம் சொல்வதைக் கவனமாகக் கேட்குமாறு செய்துவிடுவார். இவ்வாறான செயல்களினால், ஆசிரியரின்மீது, மாணவர்களுக்குள்ள மதிப்பு உயர்ந்தது. விளையாட்டுப் பேச்சை விளைவிக்கவில்லை. வீட்டுக்கும் அவ்வப்போது மாணவர்கள் வந்து, அவர்களது அன்பின் மதிப்பை அறிவிக்கும் முறையில் அளவளாவி வணங்கிச் செல்வர். ஆசிரியப் பணிக்கே பிறவியெடுத்தவராக என் தோழர் மிளிர்ந்தார்.

தமிழ் படிப்பு எதற்கும் தகுநூல் வரைந்தவர்

இராசமாணிக்கனாரின் நூல்கள் எல்லா வகுப்புகளுக்கும் உண்டு. முதல் வகுப்பு முதல், தொடக்கப் பள்ளிகளுக்கும் உயர்நிலைப் பள்ளிகளுக்கும் பாடநூல்கள் எழுதியுள்ளார். கல்லூரி வகுப்புகளுக்கு, அவர் எழுதியிருந்த நூல்கள், பாடநூற் குழுக்களால், பாட நூல்களாக வைக்கப் பெற்றன.

வித்துவான் வகுப்புகளுக்குரிய நூல்களும் அவரால் எழுதப் பெற்றிருந்தன. அவருடைய நூல்களில் பல, பட்ட மேற்படிப்புக்கானவையாயும் ஆராய்ச்சிப் பட்டங்களுக்கு ஆனவையாயும் இருந்தன. பள்ளியிலோ, கல்லூரியிலோ படிக்காத பலருங்கூட அவருடைய நூல்களை விரும்பி வாங்கிப் படித்து, தம் அறிவை வளர்த்துக் கொள்வர். எந்த ஆசிரியரும் என் தோழரைப்போல், பல நிலையினரும் படித்துப் பயன் பெறுவதற்குரிய இத்தனை நூல்களை எழுதியதில்லை எனலாம். பணம் தேவைப்படாத ஆசிரியர் எவரும் இல்லை. நூல் வரையக்கூடிய ஆற்றலும் அந்த ஆசிரியரிடம் பொருந்தி யிருக்கலாம். ஆனால் முனைப்பும் முயற்சியும் வேண்டுமே. இவை, சிறப்பாக, என் தோழரிடம் இணைந்து இருந்தன. அவரது அறிவும் திறமையும் கூடி, எல்லா வகுப்பு களுக்கும் எல்லா நிலையினருக்கும் பயன்படும் நூற்றுக்கணக்கான நூல்களை உருவாக்கின. என்றும் நிலைத்து நின்று, அவரது புகழை நவின்று கொண்டு, தமிழ் இலக்கிய இலக்கண அறிவை ஆராய்ச்சிப் பாங்கில் வளர்த்து, தமிழையும் தமிழர் பண்பாட்டையும் உலகறிய விளம்பிக்கொண்டுவரும் நூல்கள் பல, நிலவி வரலாயின. மற்ற ஆசிரியர்களில் சிலராவது, அவரது முன்னெறியைப் பின்பற்றி முயலவும் வகை செய்தன. ஆனால் எவரும் அவர் எய்திய உயர்நிலையை அடைய முடியவில்லை.

கேட்பார் பிணிப்புறப் பேசும் திறத்தினர்

தமிழகத்தின் பல பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் கல்வியை வளமுறுத்தும் பேச்சுகள் பேச அவரை அழைப்பர். தமிழ்ச் சங்கங்களிலும் சமுதாயக் கழகங்களிலும்

அவர் பேசச் செல்வார். சமய நிறுவனங்களும் அவரை விரும்பி அழைக்கும். கல்விக்கூட நாள்களில் உள்ளூர் நிகழ்ச்சிகளுக்கு மட்டுமே செல்வது வழக்கம். ஒவ்வொரு கிழமையின் இறுதியிலும் சனி, ஞாயிறுகளில் வெளியூர் செல்வார். "வாரத்தின் ஐந்து நாள்களிலும், வேலை செறிவாக இருக்குமே, எப்படி அவர் ஓய்வெடுத்துக்கொள்ள விரும்பாமல், கூட்டங்களில் பேசச் செல்ல முடிகிறது?" என்று எல்லோரும் வியப்பர். அக்கூட்டங்களில் அவருடைய பேச்சினைக் கேட்க வாய்த்தவர்கள், "எப்படி அவரால், இவ்வளவு திறம் பெறவும் பொருள் பொலியவும் பேசுவதற்கு இயல்கிறது. இதற்கு, இத்துணைச் சிறப்பாக ஆயத்தம் செய்துகொள்வதற்கு இவருக்கு நேரம் ஏது? " என்றும் வாய் பிளப்பர்.

இவருடைய விரிவுரைகள் மனத்தில் பதியக் கூடிய முறையில் அமையும். கேட்போரைப் பிணிக்கும் நலம் சிவணியவாக விளங்கும். இயலுமானால், கரும்பலகை இடச்சொல்லி, அதில் செய்திகளை எழுதியும் காட்டி விளக்குவார் என் தோழர். உள்ளத்தில் ஊன்றும்படி, தேவையான இடங்களில் திரும்பத் திரும்பக் கூறிப் பதிய வைப்பார். இந்தக் காதில் கேட்டு அந்தக் காதில் விட்டுவிடும் போக்கினதாக அவர் பேச்சு இராது. வீட்டுக்குத் திரும்பும்போது, அவர் சொன்ன செய்திகளைக் கேட்டவர்கள் சிந்திப்பர்; அசைபோடுவர்; வெறும் மனதோடு செல்லமாட்டார்கள்.

அவருடன் நான் சில வெளியூர்க் கூட்டங்களுக்குச் சென்றிருக்கிறேன். எங்கள் பேச்சு மாலையில் இருக்கும். காலைப் பேச்சுக்களின்போது நாங்கள் கூட்டத்தின் வரிசையில் அமர்ந்து கேட்போம். என் தோழர், அங்கும் எப்படியோ, சில இளைஞர்களை வயப் படுத்தி வைத்துக்கொள்வார். நாங்கள் இருவரும் இருக்கும் இடத்திற்கு, 'இரண்டிரண்டு மலைப் பழங்களும் இரு குவளைப் பாலும்,' நாங்கள் தங்கியிருந்த இடத்திலிருந்து கேட்டு வாங்கிவரச் சொல்வார். விரைவில் வந்துவிடும். நாங்கள் பாலும் பழமும் உட்கொள்வோம். இப்படியே பல நிகழ்ச்சிகள். அவருடன் சென்றால், வசதிக்குக் குறைவேயிராது. எங்குச் சென்றாலும் நாங்கள் இருவரும் ஒருங்கே இருப்போம். படுக்கும்போதும் இருவரும் சேர்ந்தே படுப்போம். தோழமைக்கே உரிய பல செய்திகளைப் பேசுவோம். இடையிடையே சிரிப்போம். 'எதற்காக இவர்கள் சிரிக்கின்றார்கள்' என்று மற்றவர் நினைப்பர். மேடைப் பேச்சிலே மட்டும் அன்றி, தனி அளவளாவலிலும் அவரது உரையாடல் உவகையூட்டும்.

குடும்பத்தில் அனைவர்க்கும் பட்டப்படிப்பளித்தவர்

தாம் பள்ளி நிறைவுப் (School Final) படிப்பிலிருந்து, படிப்படியாக மூதறிஞர் (Doctor) படிப்புவரை படித்துப் புகழ் படைத்ததுடன், தம் மக்கள் அனைவரையும் பல்கலைக்கழகப் பட்டம் பெறுமாறு செய்த பெருமை பெரிதும் போற்றத்தக்கது. நேரம் கிடையாது, உடல்நலம் குறைவு, குடும்பத்தில் அனைவரும் அடிக்கடி மருத்துவரைக் காண வேண்டும். இந்த நிலையில் எல்லாக் குழந்தைகளையும் பட்டப் படிப்பு எய்துமாறு செய்துவிட்டார் தோழர். இதைக் காட்டிலும் வியப்பான செய்தி ஒன்று உண்டு. அதுவே, வீட்டு வேலைக்கே நேரம் போதாதிருந்த, தம் வாழ்வரசியாரையும் 'வித்துவான்' பட்டம் பெறுவதற்குத் தாமே பாடஞ் சொன்னதாகும். அந்த அம்மையார் மதுரையில் பாத்திமா கல்லூரியில் சில காலம் விரிவுரையாளராகத் திறமையோடு பணி புரிந்தார். நலக் குறைவால் தொடர்ந்து வேலை பார்க்க முடியாது போயிற்று.

"மேற்கொண்டு படியுங்கள்!", என்று பலரிடம் நான் சொல்வது உண்டு. ஆனால் அவர்கள், "வேலைமிகுதி என்பர்; நேரமில்லை என்பர்; உடல் நலமில்லை என்பர்; குடும்பம் பெரிது" என்பர். அவர்களுக்கு நான் என் தோழரின் அசைவிலாத ஊக்கம் பொலியும் வரலாற்றைத்தான் எடுத்துச் சொல்வேன். 'எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார் திண்ணியராகப் பெறின்' என்னும் குறளுக்கு இணையில்லாத எடுத்துக்காட்டாக விளங்கிய இராசமாணிக்கனாரை, அவர்கள் தெய்வமாக வணங்கி, அவர் நெறியைப் பின்பற்றினால் எதையும் படித்து எந்தப் பட்டமும் பெறலாம் என்பேன்.

‘ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா ஊக்கம் உடையான் உழை’ என்னும் வள்ளுவரின் இலக்கணத்துக்கு இலங்கும் இலக்கியமாகிய இராசமாணிக்கனாரைச் சிந்தையில் இருத்துங்கள் என்று சொல்வேன்.

இன உணர்வு அற அருஞ்செயல் புரிந்தவர்

ஔவைப் பிராட்டியார் வகுத்த ‘இட்டார் பெரியோர் இடாதோர் இழிகுலத்தோர்’ என்னும் நெறியில் நடக்க முயன்றார். அதில் திண்ணிய எண்ணம் பூண்டவர். எந்த இனத்தையும் தம் சொந்த இனமாகக் கொள்வார். இன ஒருமைப் பாட்டைப் போற்றுகிறவர்கள் அவருக்கு நண்பர்கள். இன வேறுபாடு பாராட்டி, எந்த இனத்தையாவது இழிவானதாகக் கருதுகிறவர்கள் அவருக்கு அயலார். பிறப்பால் உயர்வு தாழ்வு பேசுகிறவர்களை அவர் மனமாரப் புறக்கணிப்பார். அவரால் அத்தகைய வேறுபாட்டு நடத்தைகளைப் பொறுத்துக்கொள்ள முடிவதில்லை. ‘ஒன்றே குலம்’ என்பவர்களை அரவணைத்து அவர்களுக்குத் தம்மாலியன்ற உதவிகளைப் புரிய முனைவார். இன வேறுபாடற்ற சமுதாயம் அமைய வேண்டும் என்பதில் பெரிதும் வேட்கை கொண்டிருந்தார்.

தமிழ் தழுவி மணம் பிற செய்வார்

தமிழர் வீட்டு நிகழ்ச்சிகள் யாவும் அவர்களுக்குத் தெரிந்த தமிழ் மொழியிலேயே செய்யப் பெற வேண்டும் என்னும் திண்மை மனம் படைத்தவர். புரியாத பிற மொழிகளை, ‘மந்திரம்’ என்ற பெயராலோ, ‘தந்திரம்’ என்ற பெயராலோ தமிழர் நிகழ்ச்சிகளில் பயன்படுத்துவதற்கு அவர் ஒருக்காலும் ஒருப்படவேமாட்டார். ஆனால், அறியாமை யினால், பிறமொழிகளுக்குத் தம் வீட்டு நிகழ்ச்சிகளில் இடம் தருபவர்களைக் கண்டு, இரங்குவாரேயல்லாமல் அவர்களிடம் பகை கொள்ளமாட்டார். அவர்களது அறிவற்ற, தமிழ் உணர்ச்சியற்ற, அத்தகைய செயல்களில் அவர்கள் மேலும் ஈடுபடாமல் இருக்குமாறு அறிவுரை புகல்வார். கூட்டங்களில் அவர் பேசும் பேச்சுக்களில், அவரது மனத்தடர்ந்த உணர்வும் கொள்கையும் உறுத்து வெளிப்படும்.

அவர் மக்களின் திருமணங்கள் யாவும் தமிழ் முறையிலேயே நடைபெற்றன. என்னைக் கொண்டு அவற்றைச் செய்விப்பதில் பெருமகிழ்ச்சி கொள்வார். பிற நிகழ்ச்சிகளும் தமிழில் நடை பெற வேண்டும் என்பது அவரது கொள்கை. இத்துறையில் எங்கள் இருவருக்கும் உணர்வொத்த நிலையிருந்தது. அவரே பல நண்பர் வீட்டுத் திருமணங்களைச் சுருக்கமான தமிழ் முறையில் செய்து வைத்திருக்கிறார். தமிழகத்தில் அவர் சென்று திருமணம் செய்து வைத்திராத ஊர்கள் பலவாக இரா. அவரும் என்னைப்போல, திருமணங்கள் நடத்தி வைப்பதற்குக் கட்டணம் ஏதும் பெறுவதில்லை. தமிழ்ப் பணியாகவே செய்து வந்தார். தமிழரின் பண்டைய மரபினை மறந்துவிடக் கூடாது என்பது அவரது ஆவல். தமிழ் மக்கள், தம் இனத்தின் சிறப்பை விளக்கிக் கொண்டுள்ள முறைகளைப் போற்ற வேண்டும் என்பது அவரது விருப்பம். அவருக்கும் அவர்தம் துணைவியாருக்கும் செய்யவேண்டி வந்த ஈமக் கடன்களையும், ஆண்டு நினைவு நிகழ்ச்சிகளையும் என்னைக் கொண்டே, அவர்தம் மக்கள் செய்வித்தனர். ஈம நிகழ்ச்சியாகிய திருவடிப் பேற்றுப் பூசையை வீட்டிலேயே செய்வதுதான் பொருத்தம் என்பதே அவரது கருத்தும். ‘தீட்டு’ வீட்டுக்குப்போய், அரிசி, கறிகாய் முதலிய பெற்று வருவதைத் தவிர்க்க வேண்டும் என்னும் எண்ணத்தால், ‘புரோகிதர்கள்’, அந்நிகழ்ச்சியைக் குளக்கரையில் செய்யும்படி திட்டம் செய்திருந்தார்கள் என்னும் உண்மையை அவர் நன்கு உணர்ந்திருந்தார்.

உலகியலறிந்த உயர்நல மாண்பினர்

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.

என்னும் திருமறையின் அறிவுரையைப் பெரிதும் பின்பற்றி நடந்து வந்த அறிஞர் ஆவார் என் தோழர்.

அவருக்குப் 'பிடித்தவை', 'பிடிக்காதவை' என்று இல்லாமல் இல்லை. விருப்பு வெறுப்புக்களும் அவருக்கு உண்டு. பிறரைப் போல் அவரும் ஒரு மாந்தர்தாமே? ஆனால், அவை, மற்றவர்களோடு தாம் முட்டிக் கொள்வதற்கு இடமாயிருக்கும்படி விட்டுவிட மாட்டார். மனத்துக்குள்ளே அவருக்குப் போர் நடக்கத்தொடங்கும். அந்தப் போரையும் விரைவில் தடுத்து நிறுத்திவிட்டு, அமைதியோடு இருக்க முயல்வார். உலகியல் மரபு அறிந்து ஒழுக முனைவார். இவ்வாறு செய்ய எல்லாராலும் இயலாது. நிரம்பப் படித்தவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களும் திருக்குறளில் புலமை மிக்கவர்கள் என்று புகழப்படுபவர்களும் உலகத்தோடு ஒட்ட ஒழுக இயலாதவர்களாய், வாழ்க்கையில் இடர்ப்படுவதைப் பார்க்கிறோம். என் தோழர், எந்தச் சிக்கலான நிலையிலும், தளர்ந்து போகாமல், உலகியலை உணர்ந்து செயல்பட வல்லவராக விளங்கி வந்தார்.

அவர் அலுவல் பார்த்த நிறுவனங்களின் மேலவர்களின் கொள்கைக்கும், அவருடைய கொள்கைக்கும் எத்துணையோ வேறுபாடு இருந்தது உண்டு. அதனால், மேலவர்கள் பிணங்கும்படியோ அல்லது அவர் பிணங்கும்படியோ ஏற்பட்டதில்லை. 'பல கற்றார்' என்பதுடன், 'உலகத்தோடு ஒட்ட ஒழுகவும் கற்றிருந்தார்' என்பது அவருடைய சிறப்பாகும். திருவள்ளுவரின் குறளுக்கு எடுத்துக்காட்டாகக் கற்றோர் பலர் இருப்பதில்லை. அவர்கள் கற்ற கல்வியே அவர்களுக்கு முனைப்பையூட்டி, கட்டாயம் கற்றாக வேண்டிய கல்வியான உலகத்தோடு ஒட்ட ஒழுகும் கல்வியை அவர்கள் புறக்கணிக்கும்படி செய்துவிடுவதே இயல்பாக இருக்கிறது.

ஒருமுறை பெங்களூரில் நடந்த தமிழகப் புலவர் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட பிறகு, என் தோழரும் நானும் மட்டுமே 'சிரவணபௌகோளா' முதலிய இடங்களுக்குச் சென்றோம். மணல் புதையுண்ட கோயில்கள் ஓர் ஊரில் இருந்தன. அந்த ஊரின் பெயர் இப்போது எனக்கு நினைவில் இல்லை. மேற்பகுதியிலிருந்த மணலை மட்டும் அகழ்ந்து எடுத்துவிட்டு கோயில்களின் கோபுரங்களும் பிற உச்சிப் பகுதிகளும் கண்ணில் படும்படி செய்திருந்தனர். அவற்றைக் காண்பதிலும் ஆராயும் அவரது சிந்தையில் அவற்றைப் படம்பிடித்துக் கொள்வதிலும் என் தோழர் கண்ணும் கருத்துமாக இருந்தார். பொழுது போனதும் தெரியவில்லை. இருட்டியே போய்விட்டது. அது எங்களுக்கு அடியோடு புதிய ஊர். ஆனால் என் தோழரோ, 'இதற்கு ஏன் கவலை உங்களுக்கு? வசதியாகத் தங்கலாம் வாருங்கள்' என்று ஊருக்குள் அழைத்துச் சென்றார்.

அது சிறிய ஊர். சில ஐயங்கார்கள் வீடுகள் இருந்தன. அங்கேதான் தங்கும் வசதி கிடைக்கக்கூடும். ஒரு வீட்டுத் திண்ணையில் நாங்கள் இருவரும் படுத்துக்கொள்ள, அவரது உலகியல் ஞானமே, துணை செய்தது. அவரது அரவணைத்த பேச்சினால், எங்களுக்குப் படுக்க விரிப்பும் தலைக்கு அணையும் அந்த வீட்டுக்காரர் விரும்பித்தர முன்வரும்படிச் செய்தார் என் தோழர். எதிர்ப்புறத்திலே, தமிழ் நலம் போற்றும் ஓர் ஐயங்கார் வீட்டு முகப்பிலே சிலர் தமிழில் உரையாடிக் கொண்டிருந்தனர். அங்கு என்னையும் அழைத்துக் கொண்டு சென்றார். விரைவில் அங்கிருந்தவர்களில் முக்கிய மானவரின் கருத்தை ஈர்த்துவிட்டார். எங்களுக்குப் பால், பழம் முதலியவை வலியக் கிடைத்தன. பசியும் ஆறிற்று. நாள் முழுதும் அலைந்த அலுப்பினால் திண்ணைப் படுக்கை எங்களுக்கு இன்பமான, இடைமறிப்பில்லா உறக்கத்தை வழங்கியது. என் இனிய தோழரின் உலகியலறிவு உயர்பயன் நல்கியதை வியந்து பாராட்டினேன்.

இத்துணைச் சிறப்புக்களை ஈட்டிப் புகழ் படைத்திருந்த என் தோழர், இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்திருக்கலாம். சென்னைப்பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவராக விளங்கியிருப்பார். பல்கலைக்கழகத் துணைவேந்தராக மிளிரவல்ல

பாங்குடையார். அவரது முயற்சியும் முனைப்பும் அவர்தம் வாழ்நாளை நீட்டித்துக் கொள்ளப் பயன்படாமற் போயினவே!

"என்னால் பிறக்கவும் என்னால் இறக்கவும் இங்கு நான் ஆர்?" என்று அருணகிரியார் அருளியுள்ளதை அறியீரோ? என்று என் தோழர் நம்மை வினவுவார் போலும். வெளித் தோற்றத்துக்காக அல்லாமல், உள்ளமாரத் திருநீறு அணியும் சிறப்பினர் இராசமாணிக்கனார். சிவ நெறிக்கே, இரு தூண்கள் போன்று விளங்கும் 'பெரியபுராண ஆராய்ச்சி' என்னும் நூலையும் 'சைவ சமய வளர்ச்சி' என்னும் நூலையும் அவர் எழுதும்போது, அவரது சிந்தை எத்துணை ஆழமாக, இறைவனைச் சிவநெறி வழியாக உணர்ந்து ஈடுபட்டிருக்கும் என்பதை ஊகித்தறியலாம்.

வினைப் போகமே ஒரு தேகம் கண்டாய்! வினைதான் ஒழிந்தால்
நினைப் போதளவும் நில்லாது கண்டாய்! சிவன் பாதம் நினை
நினைப்போரை மேவு, நினையாரை நீங்கு, இந்நெறியில் நின்றால்
உனைப்போல் ஒருவர் உண்டோ? மனமே! எனக்கு உற்றவரே.'

என்னும் பட்டினத்தார் பாடலை, என் அன்பிற்கினிய தோழர் டாக்டர் மா. இராச மாணிக்கனார், எம்.ஏ., எல்.டி., எம்.ஓ.எல்., பிஎச். டி. அவர்கள் நாம் நினைக்குமாறு சொல்வதாகவும் அவர், இரண்டறக் கலந்து வீற்றிருக்கின்ற இறைவன் இணையடி மலர்களைப் போற்றி அமைதி கொள்ளுமாறு சொல்வதாகவும், எண்ணுகின்றது என் தோழமை மிக்க ஏழை நெஞ்சம்.

❖ ❖ ❖

நான் கண்ட மாணிக்கம்

கே. தியாகராசன்

டாக்டர் இராசமாணிக்கனார் அவர்களுக்கும் எனக்கும் ஏறக்குறைய நாற்பதாண்டுகளாக நெருங்கிய தொடர்பு உண்டு. மணமாவதற்கு முன்பே என் மனங் கவர்ந்தவர் 'டாக்டர்' அவர்கள். அவர் தமையனார் இராமகிருட்டிண பிள்ளையும் என் தந்தை யாரும் பழைய சென்னை மாகாணத்தைச் சார்ந்த இராமச்சந்திர புரத்தில் (தற்போது ஆந்திரத்தைச் சார்ந்தது) உள்ள நிலத்தீர்வை அலுவலகத்தில் ஒன்றாகப் பணியாற்றியவர்கள். பள்ளியிறுதி வகுப்புத் தேர்வைப் பாங்குற முடித்த இராசமாணிக்கனார் கோடை விடுமுறையில் தம் சகோதரருடன் தங்கியிருந்தபோது, நான் அவரிடம் கல்வி கற்கும் வாய்ப்பினைப் பெற்றேன். ஏறக்குறைய ஒரு திங்கள், நான் கற்பதற்கு உறுதுணையாயிருந்தவரை, என் ஆசிரியர் என்று கூறிக்கொள்வதில் பெருமையுறுகின்றேன்.

ஒருவர் வாழ்வில் வெற்றி பெற வேண்டுமென்றால் ஒழுக்கம் வேண்டும்; அந்த ஒழுக்க மேம்பாட்டில் நம்பிக்கை கொள்ள வேண்டும்; அந்த நம்பிக்கை வெற்றியடைய கடும் முயற்சி தேவை. அத்தகைய முயற்சிதான் ஒரு மனிதனை உயர்த்திப்பிடிக்கும் என்று சொன்னதோடு, அதன்படி வாழ்ந்து காட்டியவர் இராசமாணிக்கனார்.

இரா. நல்லகண்ணு

இனிமையும் எளிமையும் ஆடம்பரமற்ற தன்மையும் வாய்ந்தவர்: என்னை அவர் தன் கீழ்ப்படிந்த ஒருவனாக எண்ணாமல், தன்னுடைய நண்பனாகக் கருதி பழகிவந்தவர். அவருடைய கல்வி கற்பிக்கும் முறை சுவையானது. சுருங்கக் கூறின், இணையற்றது. கிரேக்கப் பேரறிஞர் சாக்ரடீசின் அறிவு விளக்க உரைக்கு ஒப்பானது எனின் மிகையன்று; அனுபவ வாயிலாகக் கூறும் உண்மையேயாகும். எனக்கு என்றும் 'வீட்டில் செய்யவேண்டியவை' என்ற சுமையைத் தந்ததில்லை. பள்ளிப் படிப்பொன்றையே கற்பிக்காமல், சிறந்த - சுவையான உலகியல் உண்மைகளையும் எடுத்துரைப்பார். இனியவை நோக்கலில் என்றும் பெருவிருப்பமுடைய இவர், அப்பண்பை இறுதிவரை கைக்கொண்டொழுகி வந்தார். கல்வி கற்பிப்பது முடிவுற்ற ஓய்வு வேளைகளில் உலாச் செல்வோம். தெரு ஓரங்களிலுள்ள நிழல் தரும் மரங்களின் கீழ் நின்று, பலவற்றைக் குறித்து உரையாடுவோம். அந்நினைவு இன்றும் நிழற்படமாய் என் இதயத்தில் நிற்கின்றது. இராசமாணிக்கனார் எப்பொழுதும் வேடிக்கையும் நகைச்சுவையும் கலந்து உரையாற்றும் பழக்கத்தினர். தற்காலக் குறைநிறைகளைக் குறித்துச் சுவைபடவும் ஏற்கத்தக்க வழியிலும் விளக்கும் விற்பன்னர். இயற்கை அழகுகளைக் குறித்தும் மனித இயல்புகள் பற்றியும் எடுத்துரைப்பதில் வித்தகராக - மலர்ந்து மணம் பரப்பவல்ல அறிவு மலராக அந்நாளிலேயே திகழ்ந்தார். நான் அவருடன் பழகிய அந்நாளில் எப்போதும் ஓர் ஆசிரியருடன் பழகுவதாக எண்ணியதே இல்லை. என் அறிவுப்பசிக்கு உணவளித்து உதவுகின்ற ஓர் ஒப்புயர்வற்ற அறிஞரிடம் பழகுவதாகத்தான் உணர்ந்திருந்தேன்.

புன்முறுவலும் இனிமையும் வாய்ந்த இயல்பினர். என்னுடைய அனுபவ உண்மையை, அவருடன் பழகிய அனைவரும் ஒப்பிச் சான்றுரைப்பர். அவருடைய இவ்வினிய பண்புகள்தாம் என்னைப் பெரிதுங் கவர்ந்தன. முதல் நினைப்பே நல்ல நினைப்பென்று உரைப்பர். நம் மாணிக்கனாரோ என்றும் நன் மதிப்புடையவராய் இலங்கினார். ஏனெனில் இனிய - இளமையும் புன்னகையும் பொருந்திய இராச மாணிக்கனாரை இன்றும் நான்கு தலைமுறையில் அவருற்ற புகழ்வளர் வாழ்க்கைக்குப் பின்னரும் நினைந்து இன்புறுகின்றேன்.

அடுத்து, நான் அவருடைய வகுப்புத் தோழனாக இருக்கும் பேற்றை, சைதை, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில், 1943 - 44இல் பெற்றேன், அறிவுசான்ற நல்லார்க்கு உள்ளுணர்வு ஒரு விழுக்காடென்றால். உழைப்பு தொண்ணூற்று ஒன்பது விழுக்காடு என்பர். இது, இராசமாணிக்கனாரைப் பொருத்தவரையில் பெரிதும் உண்மை. பள்ளியிறுதி வகுப்புத் தேர்வில் தேர்ச்சியுற்ற அவர், திண்மை - உண்மை - வெற்றியுறும் தன்மை ஆகியவையுற்ற சிறந்த மாணவராக, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் திகழ்ந்தா ரென்றால், அதற்கு அவருடைய ஈடு இணையற்ற உழைப்பே காரணம். அவர் எஞ் ஞான்றும் நுண்மாண் நுழைபுலன் கொண்டு அயராது உழைத்து அனைத்திலும் உயர் தேர்ச்சியுற்று இலங்கினார்.

காலச் சுழற்சிக்கு ஆட்பட்ட நான், சென்னை நெசவுத்துறை ஆணையாளர் அலுவலகத்தில் ஆற்றிவந்த பணியை விடுத்து, ஆசிரியனாகப் பணியாற்றும் வாய்ப்பை 1946-இல் பெற்றேன் அதுபோழ்து, சென்னை முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றிக் கொண்டிருந்த இராசமாணிக்கனார் அன்புடன் வற்புறுத்திய தற்கிணங்க, நானும் அப்பள்ளியின் ஆசிரியர் குழுவில் ஒருவனானேன். மீண்டும் நாங்கள் நெருங்கிப் பழகும் நண்பர்களானோம்.

என் ஆசிரியர் - என்னுடன் பயின்றவர் - என் நண்பர் - என் அன்பர் ஆகிய நான்கு கோணங்களில் நான் அவருடன் கொண்டிருந்த நெருக்கத்தையன்றி, அப்புகழார்ந்த தமிழ்ப் பேரறிஞரை வேறு கோணத்தில் விளக்கிக் காட்ட முயலவில்லை - முடியவு மில்லை. காவியமாக வடிக்கத்தக்க அவருடைய இலக்கியப் பெருமையை, இச்சிறு வரிகளில் சிறப்பித்துப் போற்றல் தேவையுமன்று - முடியாததொன்று. அவருடைய அரிய திறமைகளை விளக்க, வியந்து பாராட்ட, கோடிட்டுக் காட்ட எண்ணற்ற தமிழ்ச்சுடர்கள், தமிழ்க்கடல்கள் உளர். தமிழ் வளர்ச்சிக்காக அவர் நல்கிய உழைப்பு, உண்மையிலேயே உரைக்க இயலாத உணர்வுடையதென்ற ஒன்றைத்தான், நான் அவரிடம் நீண்டகால நெருங்கிய தொடர் புடையவன் என்ற உரிமையில் கூறமுடியும். அன்பும் - பண்பும், இனிமையும் - எளிமையும் கொண்டு, என்றும் காய்தலும் - சிதைதலும் இன்றி மறைந்த அப்பெருமானாரை நாம் எஞ்ஞான்றும் நினைத்திருப்போம்.

டென்னிசனை இங்கிலாந்து இழந்த போழ்து, கவிஞன் வாட்சன் கீழ்க் குறிப்பிட்ட எண்ணத்தைத் தம் ஆற்றாமைப் பாவில் குறிப்பிடுகின்றார்.

பருவங்கள் மாறும் - நேற்றைய
பயிர்கள் நாளையே சாயும்!
பறவைகள் மடியும் - நற்
சோலைகள் சீரழியும்
அரசுகள் மறையும் - இந்த
அவனியோர் மறைவர்!
பாக்கள் மறைந்து போகாது

அதுபோன்று டாக்டருடைய இலக்கியங்களிலுள்ள இன்னுயிர் என்றுமே மறைந்து போகாது. அழியாத் தன்மை வாய்ந்த அவருடைய இலக்கியப் பணிகள், சிறந்த நூலகங் களில் சீருடன் இலங்கும்; கோள்கள் உள்ளளவும் அவை குலையாமல் நிலைத்து நிற்கும்.

❖ ❖ ❖

நெஞ்சில் நிறைந்தவர்

சி. ஜகந்நாதாச்சாரியார்

டாக்டர் மா. இராசமாணிக்கனார் தமிழ்த்தாயின் தவப் புதல்வர்களில் தலைசிறந்த ஒருவராவர். இவருடைய மூச்சே தமிழ். தமிழிற்கென வாழ்ந்து, தமிழுக்காகவே உழைத்து, தமிழ்த் தாய்க்குப் பல அணிகலன்களை அணிவித்துச் சேவைசெய்த பெரியவர். இவர் எளிய வாழ்க்கையில் தொடங்கி, நடுநிலை வாழ்க்கையை உணர்ந்து, நல்ல பெருவாழ்வு வாழ்ந்த பெருந்தகை. இவர், முதன்முதலில் எளிய தமிழ் ஆசிரியராக நடுநிலைப் பள்ளியில் வேலையில் அமர்ந்து, பின்னர், முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் பல ஆண்டுகளாகத் தனிப்பெரும் பண்டிதராக விளங்கினார். இவருடைய இல்லம் தம்புச் செட்டித் தெருவில் இருந்தது. இவரால், அஃது ஒரு கலை இல்லமாகத் திகழ்ந்தது.

> டாக்டர் இராசமாணிக்கனாரைப் பல ஆண்டுகளாக நான் அறிவேன். அவர் பழுத்த சைவர்; ஆனால் சமய ஊழல்களைக் கண்டிக்கும் மனவுறுதி உடையவர். சைவ சமயக் கூட்டங்களிலேயே சமய ஊழல்களைக் கண்டிக்கும் மனவுரம் படைத்தவர்.
>
> குன்றக்குடி அடிகளார்

*1943-44*ஆம் ஆண்டு இவர், சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் முதன்முதலாக, எல்.டி. சேரும் ஆசிரியர் களுக்குத் தமிழைச் சிறப்புப் போதனா பயிற்சிப் பாடமாக வைத்த போது சேர்ந்தவர். இவரோடு சக மாணவராகச் சேர்ந்து, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயின்றவர், என் தம்பி சி. திருநாராயணன்.

*1946*ஆம் ஆண்டு மயிலாப்பூரில் விவேகானந்தர் கல்லூரி தொடங்கப்பட்டது. அதில் தமிழ்த்துறைத் தலைவனாக என்னை நியமித்தார்கள். கல்லூரி முதல்வராக இருந்தவர் பேராசிரியர் டி.எஸ். சர்மா அவர்கள். இவர் ஆங்கிலத் துறைத் தலைவராக மாநிலக் கல்லூரியிலும் முதல்வராகப் பச்சையப்பன் கல்லூரியிலும் இருந்து பெரும்புகழ் பெற்றவர். *1947*இல் ஒரு பண்டிட்டும் ஒரு பயிற்றுநரும் (Tutor) தமிழ்த்துறைக்குத் தேவைப்பட்டார்கள். அதற்கு எத்தனையோ தமிழ் அறிஞர்கள் விண்ணப்பம் செய்திருந் தார்கள். அவர்களில் மூன்று பேர்களை நேர்முகத் தேர்வுக்குத் தேர்ந்தெடுக்கும்படி நிருவாகத்தினர் என்னைப் பணித்தனர். நான் வீட்டில் விண்ணப்பத்தாள்களைப் பரிசீலனை செய்து கொண்டிருந்த போது, என் தம்பி திருநாராயணன், "என்ன பார்த்துக் கொண்டி ருக்கிறாய்?" என்று கேட்டார். நான், "பண்டிட்டுக்காக வந்துள்ள விண்ணப்பங்களைக் கொண்டு மூன்று பேரை நேர்முகத் தேர்வுக்குத் தேர்ந்தெடுக்கப்போகிறேன்" என்றேன். அவர் உடனே, "இராசமாணிக்கம் போட்டிருக்கிறாரா பார்" என்றார். நான், "போட்டிருக்கிறார்" என்றேன். அவர் உடனே என்னைப் பார்த்து, "போஸ்டை (Post) அவருக்குக் கொடுக்கச் சொல்; மிக்க தகுதி படைத்தவர்; என்னோடு எல்.டியில் படித்தவர்; பெருமதிப்புடன் ஒழுகுபவர்; தமிழ்த் தொண்டில் முதியவர்; பெரிய குடும்பத்தினர்;

தமிழிற்கே உழைப்பவர்; 40 வயதுக்கு மேற்பட்டவர்; அவரைக் காட்டிலும் சிறந்த ஒருவரைக் காணல் அரிது", என்றார். நானும் அவரைப் பார்த்திருக்கிறேன். ஆனால், என்னைப் பார்த்துப் பேசச் சற்று கூச்சம் கொள்வார். காரணம் எனக்குப் புரியாது.

நான் முதல்வருக்கு எழுதும்போது, "இராசமாணிக்கத்திற்கே பண்டிட் போஸ்டை அளித்து விடலாம். ஒருவேளை, அவர் 'வேண்டாம்' என்று ஒதுக்கிவிட்டால், நான் குறித்துள்ள மற்ற இருவரையும் அழைத்து, தேர்வு செய்து முடிவு செய்யலாம்," என்று எழுதிவிட்டேன். முதல்வர் சர்மா என்னைக் கூப்பிட்டு, "என்ன இப்படி எழுதியுள்ளாய்" என்று கேட்க, நான், "இராசமாணிக்கமே இப்பணிக்குத் தகுதியானவர் என்பது என் உறுதியான எண்ணம். எனக்கு அவரைப் பற்றி நன்கு தெரியும். ஆதலால் நான் அவருக்கு அளித்துவிடலாம் என்று எண்ணினேன்" என்றேன். முதல்வர் உடனே என் பேச்சின்படி, இராசமாணிக்கத்தைத் தேர்ந்தெடுத்துவிட்டார்.

பண்டிட்டிற்கு அப்போது சம்பள கிரேடு ஆரம்பம் 100 ரூபாய். நான், அவர் தகுதி நோக்கி மூன்று இன்கிரிமென்ட் போட்டு 115 ரூபாய் அவருக்கு ஆரம்பத்தில் கொடுக்கும்படி பரிந்துரை செய்திருந்தேன். என் பரிந்துரையின்படியே மேன்மையான நிருவாகத்தார் 115 ரூபாய் அவருக்கு ஆரம்பத்தில் கொடுத்தார்கள். அக்காலத்துக் கல்லூரிகளில் வேலை செய்த தமிழ்ப் பண்டிட்டுகளில் யாரும் தொடக்கத்தில் இந்தச் சம்பளம் வாங்கியதில்லை.

எங்கள் கல்லூரியில், ஆறு ஆண்டுகள் (1947-1953) பணியாற்றினார். அங்குப் பணியாற்றும்போது இவர் சம்பளத்தை ஓரிரு ஆண்டுகளில் 130 ரூபாயாக உயர்த்தினோம். இவர் டாக்டர் பட்டம் பெற்றவுடன் இவர் சம்பளம் அந்தக் கிரேடின் முடிவான 150 ரூபாயாக ஆக்கப்பட்டது. இப்படிச் சம்பளத்தில் *Meteoric rise* ஆன வேறொருவரை ஆசிரியர் துறையில் நான் கண்டதில்லை.

இனி, சில முக்கிய நிகழ்ச்சிகளைக் குறிப்பிட விரும்புகிறேன். எங்கள் கல்லூரியில் அக்கடமிக் கவுன்சிலுக்கும் காலேஜ் கவுன்சிலுக்கும் யாருக்கு அதிக ஆண்டுகள் ஆசிரியர் அனுபவம் உண்டோ, அதிலேயும் வயது யாருக்கு அதிகமோ அவர்களை அனுப்புவது மரபு. அதன்படி முதல்வர், இராசமாணிக்கத்தையும் அதே தமிழ்த் துறையில் என்னிடம் பயிற்றுனராகப் பணியாற்றிய எஸ்.வி.வரதராச ஐயங்காரையும் நியமித்துவிட்டார். இந்தப் பேரருங் குணம் வேறு எவரிடத்திலும் காணமுடியாது. தமிழ்த்துறைக்கு அவ்வளவு பெருமை தொடக்கத்தில் இவ்விரு முதுபெரும் புலவர்களாலும் ஏற்பட்டது. இந்த இருவரையும் என்னுடன் பணியாற்ற நான் தேர்ந்தெடுத்ததை எல்லோரும் பெரிதும் கொண்டாடினார்கள். ஆறாண்டுகளுக்குப் பின், இராசமாணிக்கம் அவர்கள் மதுரையில் கருமுத்து தியாகராசர் தொடங்கிய கல்லூரிக்குத் தமிழ்த்துறைத் தலைவராகவும் தலைமைப் பேராசிரியராகவும் அழைக்கப்பட்டார். அவர் எங்கள் கல்லூரியை விட்டுச் செல்வதற்கு முன் தமிழ்த்துறை மட்டுமின்றி எல்லாத் துறைகளும் சேர்ந்து ஏகமுகமாக ஒரு பெரும் பாராட்டினைப் பௌதிக ஆய்வுக் கூடத்தில் உண்டி உபசாரங்களுடன் கொடுத்தோம். அதில் எல்லாத் துறை ஆசிரியர்களும் பேசி அவரைச் சிறப்பித்தனர். அப்பொழுது இராசமாணிக்கம் ஏற்புரை வழங்கினார். அந்த உரையின் ஒரு பகுதி என் நெஞ்சைவிட்டு இன்னும் அகலவில்லை. அவர் கூறியது: "நான் மதுரைக்குப் பேராசிரியராகப் போகிறேன். மதுரை, தமிழ் வளர்ந்த இடம். சங்கத்துச் சான்றோர் தமிழ் வளர்த்த பதிக்குப் போகிறேன். என் மனத்தில் ஒரு பக்கம் மகிழ்ச்சி இருந்தாலும், எங்கேயோ உயர்நிலைப் பள்ளியில் 20 ஆண்டுகளுக்கு மேலாக ஊன்றி அழுந்திக் கிடந்த என்னை விவேகானந்தர் பெயர் தாங்கும் இப்பெருங் கல்லூரியில் வேலைக்கு அமர்த்தி, இப்பொழுது அனைவருமாகப் பாராட்டுவது என்னை நெகிழச் செய்கிறது. இத்தனைக்கும் என் குடும்பத்திற்கு விளக்கேற்றி வைத்தவர் நமது C.J." என்று சொன்னபோது அவர் கண்களில் நீர் நிறைந்தது. அதைக் கண்ட என் கண்களும் கலங்கின.

இராசமாணிக்கம் கல்லூரிக்கு வந்தால், "தாம் உண்டு தம் வேலை உண்டு" என்றிருப்பார். கடமைகளைத் தவறாமல், செவ்வனே செய்துவிடுவார். எல்லாவற்றிலும் ஒழுங்கு. வகுப்பிற்குச் சென்றால், மாணவர் முன்னரே வந்து காத்துக் கிடப்பர். நகைச்சுவை ததும்ப மாணவர் உள்ளம் கவரும்படி பாடங்களை நடத்துவதில் வல்லவர். எல்லோருடனும் மதிப்புடன் பழகுபவர். ஆசிரியர் அறையில் வீண் பேச்சுக்கு இடந்தராதவர். மெதுவாகப் பேசும் இயல்பினர். ஆனால், பேச்சிலேயே நகைச்சுவை ததும்பும்படி உட்கருத்து வைத்துப் பேசுவார். மாணவர் கூட்டங்களில் நான் தலைமை வகித்து அவர் பேசுவது உண்டு; அவர் தலைமை வகித்து நான் பேசுவதும் உண்டு. தமிழ்த்துறையில் அனைவரும் சமம்.

கல்லூரித் தமிழ் மன்றத்தில் பல்வேறு கூட்டங்களும் விழாக்களும் நடப்பதுண்டு. திரு.வி.க., சேதுப்பிள்ளை போன்ற பெரியவர்களை வரவழைப்பதுண்டு. திரு.வி.க. இரு முறை தமிழ் மன்றத்துக்கு வந்து சிறப்பித்துள்ளார். திரு.வி.க., இராசமாணிக்கத்திற்கு மிகவும் வேண்டியவர். இவருக்கும் அவரிடத்து அளவுகடந்த பக்தியும் மரியாதையும் உண்டு.

இராசமாணிக்கம் தமிழ்ப்பற்று மிக்கவர்; மிகுந்த சைவப் பற்றுடையவர்; சைவப் பெருந்தகை சேக்கிழாரைப் பற்றி ஆராய்ச்சி செய்து அதில் டாக்டர் பட்டம் பெற்றவர். அந்தச் சேக்கிழார் ஆராய்ச்சி, சைவத்தின் நுணுக்கங்களை அறிவதற்குப் பேருதவி ஆயிற்று. கல்வெட்டுத் துறையிலும் வரலாற்றுத் துறையிலும் ஆராய்ச்சி செய்து உண்மை காண்பதில் பேரார்வம் கொண்டவர். பல்லவர், சோழர் வரலாறுகளை எல்லாம் ஆராய்ந்து, தாம் கண்டறிந்த உண்மைகளை நூலாக வெளியிட்டவர். இவர் எழுதிய கட்டுரைகளும் பள்ளி மாணவர்களுக்கெனக் கொணர்ந்த எளிமையான நூல்களும் ஏராளம். சென்னைப் பல்கலைக்கழகத்திலும் பிற பல்கலைக்கழகங்களிலும் பல குழுக்களில் தலைவராகவும் உறுப்பினராகவும் இருந்து பணி புரிந்தவர்; பல சிறந்த இதழ்களில் கட்டுரைகள் எழுதியவர்.

இராசமாணிக்கம், என்னிடம் அடிக்கடி ஒன்று சொல்வதுண்டு: "என்றைக்காவது ஒரு நாள், சென்னைப் பல்கலைக்கழகத்தில், தமிழ்த்துறையில் சேர்ந்து பணியாற்ற வேண்டும். அதற்காக எவ்வளவோ முறை வாய்ப்பு வரும்போதெல்லாம் முயன்றேன். அதை நீயும் அறிவாய். ஆனால், ஒன்றும் பயனளிக்கவில்லை. இருந்தாலும், ஒரு நாள் நான் அந்தக் கட்டடத்தில் புகுந்து ஒரு நாற்காலியில் அமரப் போகிறேன்." என்பார். அப்பொழுதெல்லாம் நான், "இராசமாணிக்கம், உனக்கும் நற்காலம் வரும். நீயும் ஒருநாள் சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு வரத்தான் போகிறாய், கவலைப்படாதே" என்பேன்.

மதுரையில் பல ஆண்டுகள் பணியாற்றிய பின் இராசமாணிக்கம் சென்னைப் பல்கலைக்கழகத்தில், தமிழ்த்துறையில் டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளையின் தலைமையில் அவருக்கு அடுத்தபடியாக அமர்ந்து பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றார். எண்ணியதை எண்ணியவாறு எய்தும் ஆற்றல் இராசமாணிக்கத்தின் தனிச் சிறப்பு.

அறிஞர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் அவர்களின் அறுபதாம் ஆண்டு நிறைவுக்காக நிதி திரட்ட வேண்டி, ரசீது புத்தகத்தை வைத்துக்கொண்டு தம்மால் ஆனவரை வசூல் செய்துகொடுக்க வேண்டும் என்று பாடுபட்டார் இராசமாணிக்கம். ஆனால், நாட்டார் அவர்கள் அறுபதாண்டு நிறைவு எய்தும் முன்பே மறைந்தார். நாட்டாரின் மறைவு குறித்து, இராசமாணிக்கம் அடைந்த வேதனை பெரியது; மிகப் பெரியது.

இப்படித் தமிழ்ப்பற்று மிக்கு, தமிழுக்கே உழைத்து, தமிழ்த் தொண்டிலேயே பழுத்த என் கெழுதகை நண்பர் இராசமாணிக்கம் அறுபதாண்டு நிறைந்த சில மாதங்களிலேயே ஈசனடி அடைந்தார். அவர் மறைந்தாலும், தமிழுலகும் தமிழரும் அவரை மறக்க முடியாது. அவர் புகழ் என்றும் நின்று நிலவும் என்பது உறுதி.

❖ ❖ ❖

உணர்வுடையோர் மதிக்கின்ற மாணிக்கம்

வல்லை. பாலசுப்பிரமணியம்

மனிதர்களுள் சின்னாள், பல்பிணி என்னும் தவிர்க்க முடியாத இயல்புகளைத் தவிர, பிற அம்சங்களில் முழு நிறைவானவர்கள் அங்கொருவர் இங்கொருவராகத் தோன்றத்தான் செய்கிறார்கள். இவர்களைத் தெய்வாம்சம் உள்ளவர்கள் என்று உலகம் கூறும். புகழொடு தோன்றியவர்கள் என வள்ளுவர் இவர்களை வகைப் படுத்துகிறார். அறிவிலும் அன்பிலும் பரிவுணர்விலும் இவர்கள் தெய்வத்தையே ஒப்பவர்கள். இத்தகைய சிலரில் ஒருவர்தான், இன்று நமது கவனத்துக்குரிய பெரியவர், டாக்டர் இராச மாணிக்கனார் அவர்கள். மாணவராக - பள்ளி ஆசிரியராக - கல்லூரி விரிவுரையாளராக - பல்கலைக்கழகப் பேராசிரியராக - ஆராய்ச்சி வித்தகராக - சீர்திருத்தச் செம்மலாக - மக்களுக்கு நல்வழிகாட்டி நடத்திச் செல்லும் தலைவராக என்று இவ்வாறு எந்தக் கோணத் திலிருந்து பார்க்கினும் இராசமாணிக்கனார் அவர்கள் தம் பெயருக் கேற்ப அப்பழுக்கற்ற தலைசிறந்த மாணிக்கமாகக் காட்சி தருகிறார்கள்.

வித்துவான் இராசமாணிக்கம் அவர்கள் எது பேசினாலும் எது எழுதினாலும் அது ஆணித்தரமாகவும் அசைக்க முடியாததாகவும் இருக்கும் என்பது வெளிப்படை.

திருவிளக்கு (திங்களிதழ்) 1939

நம் டாக்டர் அவர்கள், பொறுமை - விடாமுயற்சி - தாளாண்மை - குறிக்கோளுடைமை - இன்னோரன்ன நற்பண்பு களுக்கெல்லாம் உறைவிடமாகத் திகழ்ந்தவர். இந்த வகையில் அவர் நம் நாட்டு இளைஞர்களுக்கெல்லாம் ஒரு தலைசிறந்த எடுத்துக் காட்டாக விளங்கியவர்.

முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப் பள்ளியின் மாதவம்

ஈரோட்டுத் தந்தை பெரியாரின் அறிவுரைகளால் கவர்ந் திழுக்கப்பட்ட இராசமாணிக்கனார், முதலில் ஒரு சுயமரியாதைப் புலவராகத்தான் தமிழ்நாட்டுக்கு அறிமுகமானார். இந்த நூற்றாண்டின் இருபதுகளில் அவர் அறிமுகமும் நட்பும் எனக்குக் கிடைக்கும் பேறு பெற்றேன். முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப் பள்ளியின் தலைமைத் தமிழாசிரியரான மணிமங்கலம் திருநாவுக்கரசு முதலியார் அப்போது ஆயலூர் முத்தையா முதலித் தெருவில் உள்ள ஒரு வீட்டில் வசித்து வந்தார். அவ்வீட்டில் புலவர்களும் நண்பர்களும் கூடுவது வழக்கம். அங்கு நான் போவேன். இராச மாணிக்கனாரும் அங்கு வருவார். பின்னர் இவரும் முத்தியாலுப் பேட்டைப் பள்ளியில் தமிழாசிரியர் ஆனார்.

இராசமாணிக்கனாரும் சென்னை மாணவர் மன்றமும்

1957இல் வெள்ளிவிழாக் கண்டு, பொன்விழாக் காண வீறுநடைபோட்டு முன்னேறும் மாணவர் மன்றம், 1931ஆம் ஆண்டில் சிறுவை மோகனசுந்தரம் மற்றும் அவரனைய தமிழ்த் துடிப்புள்ள மாணவர் சிலரால், பேசிப் பழகுவதற்கென்று தொடங்கப்பட்டது. இம்மன்றம் செயல்படத் தொடங்கிய சென்னை, பெத்துநாயக்கன் பேட்டையில் அப்போது வாழ்ந்த மயிலை. சிவ. முத்து அவர்களின் உதவியை அம் மாணவர்கள் நாடினார்கள். சிவ. முத்து அவர்களும் மகிழ்ச்சியோடு உதவிகள் பல செய்து, தமது ஓயா உழைப்பினாலும் - அன்னை தருமாம்பாள் அவர்கள் தந்த ஊக்கத்தினாலும் இப்போதுள்ள ஒரு மாபெரும் நிறுவனமாக அதனை வளர்த்தார்கள்.

புலவர் சிவ. முத்து அவர்களும் நம் டாக்டர் அவர்களும் ஒரே பள்ளியில் பணியாற்றியதனால், தொடக்க காலத்திலிருந்தே, இராசமாணிக்கனாருக்கு மன்றத்துடன் நெருங்கிய தொடர்பு இருந்துவந்தது.

டாக்டர் இராசமாணிக்கனாரின் பெருமுயற்சியினால், 10-4-1960இல் முத்தியாலுப் பேட்டை உயர்நிலைப் பள்ளியில் சென்னைப் பொதுமக்களின் கூட்டம் ஒன்று கூட்டப்பட்டது. அப்போது, சிவ. முத்து அவர்களுக்குத் 'தமிழ்நெறிக் காவலர்' என்னும் பட்டமும் தங்கப் பதக்கமும் வழங்கப்பட்டன.

மணவினை மன்னர்

டாக்டர் இராசமாணிக்கனார் அவர்கள் ஆயிரத்துக்கு மேற்பட்ட திருமணங்களை நடத்தி வைத்தார். தமது பொன்னான காலம் வீணாகக் கழிவதையும் பொருட் படுத்தாமல், தமிழார்வமும் சீர்திருத்த உணர்வும் பரவினால் போதுமென்று இவ்வாறு செய்து வந்தார். "என்னங்க டாக்டர், இந்தத் திருமணங்களுக்கெல்லாம் சென்று உங்கள் காலத்தை வீணடிக்கிறீர்களே" என்று ஒரு சமயம் அவரைக் கேட்டேன். "அப்படி யில்லைங்க, மணமக்கள் மகிழ்ச்சியாயிருக்கும்போது, தங்களை இணைத்துவிட்ட என்னை நினைத்துக்கொள்வார்கள் அல்லவா" என்று சொல்லிச் சிரித்தார்.

ஒரு சமயம் தம் மாணவர் ஒருவருடைய திருமணத்தை டாக்டர் அவர்கள் நடத்தி வைத்தார். மண வினைகள் எல்லாம் முடிந்த பின்னர், பரிசுகள் வழங்கும் நேரம் வந்தது. டாக்டர் என்ன செய்தாரென்று நினைக்கிறீர்கள்? தமது சட்டைப் பையிலிருந்து, ஒரு வங்கி சேமிப்புப் புத்தகத்தை எடுத்து மணமகனுக்கு அன்பளிப்பாகக் கொடுத்தார். அதில் மணமகன் பெயரில் சேமிப்புக் கணக்கில் (Savings Account) 25 ரூபாய் வரவு வைக்கப்பட்டிருந்தது.

> வந்ததையெல்லாம் வீணாகச் சிதறடித்துவிடாதீர்கள். இப்போது சேமித்து வைத்தால், பின்னர் நெருக்கடிக்கு உதவும். மணமகன் பின்னர் குவிக்கப் போகும் பெருஞ் செல்வத்துக்கு என் சிறு அன்பளிப்பு ஓர் அங்குரார்ப் பணமாக இருக்கட்டும்

என்று வாழ்த்தினார்கள். இதன் விளைவு என்னவென்று நினைக்கிறீர்கள்? அந்த மாணவ - மணமகன் கற்பனை வளம் மிக்கவன்.

> இன்று எனக்கு 1500 ரூபாய் ரொக்கப் பரிசாக வந்தது. இதனை நாளைக்கே என் ஆசிரியர் அன்புடன் ஆரம்பித்துக் கொடுத்த சேமிப்புக் கணக்கில் சேர்த்துவிடப்போகிறேன். வாமனன் உலகளந்த பெருமாளாக வளர்ந்தது போல், இன்றைய 25 ரூபாய், நாளை 1525 ரூபாய் ஆகிவிடும்.

என்று கூறி, மணமகளுடன் தானும் டாக்டரின் பொன்னடிகளைத் தொட்டு வணங்கினான். அதனைப் பார்த்தவர்களுக்கெல்லாம் மேனி சிலிர்த்தது.

ஆராய வந்தவர் அமிழ்ந்து போனார்

இராசமாணிக்கனார் தமது எம்.ஓ.எல்., டாக்டர் பட்டங்களுக்கான ஆய்வுக் கட்டுரைகளுக்குரிய பொருள்களாகத் தேர்ந்தெடுத்தவை 'பெரியபுராணம்', 'சைவ சமய வளர்ச்சி' என்பன ஆகும். அவற்றைச் சீரிய முறையில் ஆராய்ந்து, நூல்கள் எழுதிப் பட்டமும் பெற்றுவிட்டார். ஆனால், இதனை நான் பெரிதாகக் கருதவில்லை. அவர் எந்தப் பொருளை எடுத்துக்கொண்டிருந்தாலும் பட்டம் கிடைத்துவிடும். அத்துணை ஆழ்ந்தகன்ற படிப்பு உள்ளவர் அவர். பெரியபுராணத்தைத் தேர்ந்தெடுத்தது, அவர் செய்த புண்ணியமும் அக்காவியம் செய்த நற்பேறும் சைவ சமயம் செய்த தவமும் ஆகும்.

திருத்தொண்டர் புராண ஆராய்ச்சி அவர் வாழ்வில் ஒரு திருப்புமுனையாக அமைந்துவிட்டது. அதுவரையில் சுயமரியாதைப் புலவராயிருந்த அவர், சேக்கிழார் காப்பியத்தை ஆய்வு செய்து பட்டமும் பெற்று, அதனை விட்டு, வெளியே வந்து வேறு வேலைகளைக் கவனிக்கலாம் என்றுதான் இருந்தார். ஆனால், அக்காப்பியம் அவரைச் சிக்கெனப் பிடித்துக்கொண்டது. பத்திச் சுவை நனி சொட்டப் பாடும் சேக்கிழார் பெருமானின் கவிதையின்ப வாரிதியில் மூழ்கிப்போனார். சிவனடியார்களின் செயற்கரும் செயல்களில் தம் உள்ளத்தைப் பறிகொடுத்தார். அவ்வளவுதான் சுயமரியாதைப் புலவர், சைவப் புலவர் ஆனார். 'சைவ சமய வளர்ச்சி' என்னும் நூல் எழுதினார். சைவ சமய வரலாற்றுச் செய்திகளுக்கு ஓர் 'அத்தாரிட்டி'யாக விளங்கினார்.

சைவ சித்தாந்த மகாசமாஜம் தனது ஆண்டு விழாக்களில் நம் பேராசிரியருக்கு உரிய பங்கு அளித்தது. அக்காலத்தில் உலவி வந்த திருவிளக்கு, செந்தமிழ்ச் செல்வி, செந்தமிழ், சித்தாந்தம், சைவம், வெண்ணிலா, ஞானசம்பந்தம், பாரதி முதலிய பல இதழ்களில் கட்டுரைகள் எழுதினார்.

அவர் ஒரு சமயம் சென்னை, அண்ணாபிள்ளைத் தெருவிலுள்ள தென்னிந்திய பிரம்ம சமாஜக் கட்டட மண்டபத்தில் பெரியபுராணத்தைப் பற்றித் தொடர் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். நான்கு சொற்பொழிவுகளுக்குத் தமிழ்த் தென்றல் திரு. வி. கலியாணசுந்தரனார் தலைமை தாங்கினார். திரு.வி.க. தமது தலைமை உரையில், இராசமாணிக்கனாரைத் தலைசிறந்த புலவர் எனக் கொண்டாடினார். தாம் மகிழ்ச்சியின் எல்லைக்கே போய்விட்டதாகச் சொன்னார். தாம் அதுகாறும் கண்டும் கேட்டுமிராத நயங்களையும் நுட்பங்களையும் இராசமாணிக்கனார் எடுத்துக்காட்டியதாகக் கூறினார்.

அச் சொற்பொழிவுகளின்போது, தமிழ்நாட்டுப் படத்தை (Map) டாக்டர் அவர்கள் கரும்பலகையில் வரைந்து, நாயன்மார்கள் நடந்து சென்றதாகச் சேக்கிழார் காட்டும் வழித்தடங்கள் இன்றும் பொருந்துவதாகவும், தமிழ் நாட்டில் இருந்துகொண்டே, விந்திய மலையின் வடக்கிலுள்ள நகரங்களைப் பற்றிச் சேக்கிழார் பாடவில்லை என்பதையும் குறிப்பிட்டார். அது ஓர் அரிய ஆய்வுச் செய்தியாகும்.

அகராதித் தயாரிப்பில் அதிகார முத்திரையற்ற பங்கு

சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலம் - தமிழ் அகராதிப் பணி 1959 மார்ச்சிலிருந்து 1965 சூன் வரையில் நடந்தது. இதன் ஆலோசனைக் குழுவையோ, பதிப்பாசிரியப் பணியாளர்களையோ இராசமாணிக்கனார் சேர்ந்தவர் அல்லர். அவர் பல்கலைக்கழகத் துணைத் தமிழ்ப் பேராசிரியர் (Reader) எனினும் என் வாயிலாக அவரும் இதில் பங்கு கொள்ளும்படி நேர்ந்தது.

பல்கலைக் கழகத்தின் கடிகாரக் கோபுரத்தின் அடித்தளத்தில் ஒருசார், அகராதித் துறைக்கு இரண்டு அறைகள் (எண் 29, 30) விடப்பட்டிருந்தன. அவற்றிக்கு எதிர்ச்சாரியில் தமிழ்த்துறை அறைகள் கடலை நோக்கியவாறு வரிசையாக அமைந்திருந்தன. இவற்றில் ஒன்று இராசமாணிக்கனாரின் அறை.

இராசமாணிக்கனார் தமது ஆய்வுப் பணிகளுக்கிடையே சற்று ஓய்வு பெற வேண்டி, யாருடனாவது மனம் விட்டுக் கலகலப்பாகப் பேச வேண்டுமென்று நினைப்பார். அந்தச் சமயங்களில் அவர் தம் அறையை விட்டுத் தாழ்வாரத்துக்கு வந்து, எங்கள் அறையை நோக்கி, திரு. டி.ஏ.வி. நாதன் அவர்களையும் என்னையும் தம் அறைக்கு வரும்படி விரலசைத்துக் கூப்பிடுவார். திரு. நாதன் அவர்கள் எந்நேரமும் இராசமாணிக்கனார் அறையில்தான் இருப்பார். எங்கள் தலைமைப் பதிப்பாசிரியர் டாக்டர் அ. சிதம்பரநாத செட்டியார் இதனை விரும்பமாட்டார் என்று தெரிந்ததனால் நான் இராச மாணிக்கனார் பத்து முறை கூப்பிட்டால், மரியாதை கருதி ஒரு முறை போவேன். அவ்வாறு ஒரு முறை நான் போயிருந்தபோது, செட்டியார் அகராதித் தொடர்பாக என்னிடம் பேசுவதற்கு எங்கள் அறைக்கு வந்தார். ஆமாம், அவர் என்னைத் தம் அறைக்குக் கூப்பிடுவதில்லை. அப்படி ஒரு பெருந்தன்மைப் பணிவு! நான் என் இருக்கையில் இல்லாததைக் கண்டு, திரும்பித் தம் அறைக்குப் போய்விட்டார். சற்று நேரம் கழித்து நான் வந்திருப்பதை ஆள் மூலம் அறிந்து, மீண்டும் என் இருக்கைக்கு வந்தார். நான் எழுந்து வணக்கம் தெரிவித்தேன்.

"சற்று நேரத்துக்கு முன் உங்களிடம் பேசுவதற்காக வந்தேன். நீங்கள் இருக்கையில் இல்லை."

"ஆமாம் டாக்டர். இராசமாணிக்கனாரிடம் பேசுவதற்காகப் போயிருந்தேன்."

சில நொடிகள் பறந்தன.

'என்ன பேசினீர்கள்? அலுவலக நேரத்தில் அப்படி என்ன பேச்சு வேண்டியிருக்கிறது?' என்று அவர் வாய் திறந்து கேட்கவில்லை. ஆனால், அவருடைய வாய்த் துடிப்பும் புருவங்களின் நெரிப்பும் சிவப்பேறும் கண்களும் அக்கேள்விகளை உரக்கக் கேட்டன. இந்த இறுக்கமான நிலையை (Tension) முற்றவிடக் கூடாதென்று நான் கருதினேன்.

"ஒன்றுமில்லைங்க டாக்டர். BUD என்னும் சொல்லுக்கு அர்த்தங்கள் எழுதியாகி விட்டது. அதனையடுத்து, 'Nip in the bud' என்னும் தொடர் வருகிறது. இதற்கு, 'முளையிலேயே கிள்ளி எறி' என்னும் பழமொழியைச் சுலபமாக எழுதிவிடலாம். ஆனால் அதைவிடச் சிறந்த இலக்கியச் சொல்லாட்சி ஏதாகிலும் இருக்குமே. அதைக் கேட்டறிவதற்காகத்தான் இராசமாணிக்கனாரிடம் சென்றிருந்தேன்" என்றேன்.

இறுக்கம் சற்று தளர்ந்தது.

"அவர் என்ன சொன்னார்?"

> **இளைதாக முள்மரம் கொல்க; களையுநர்**
> **கைகொல்லும் காழ்த்த விடத்து.**

என்று திருக்குறள் இருக்கிறது. இதிலிருந்து, 'இளைதாகக் கொல்க' என்பதை எடுத்துக் கொள்ளலாமே" என்று சொன்னார்.

செட்டியார் முகம் மலர்ந்தது.

"அப்படியா சொன்னார்? நன்றாயிருக்கிறதே, அப்படியே போட்டுவிடுங்கள்". சில விநாடிகள் பறந்தன. "அது சரி மிஸ்டர் வல்லையார் இதுபோன்ற ஐயப்பாடுகளைத் தெளிவதற்கு நீங்கள் அடிக்கடி இராசமாணிக்கனாரிடம் போகலாம். நான் அதைப் பொருட்படுத்தமாட்டேன்" என்றார்.

ஏற்கனவே 6 அடி 2 அங்குலம் உயரமிருந்த திரு. செட்டியார் அவர்கள் அன்று என் மதிப்பில் 10 அடிக்கு உயர்ந்துவிட்டார். ஆம், ஏணி வைத்து ஏறினாலும் எட்ட முடியாத பண்பாட்டுச் சிகரம் அவர்; முன்கோபம் ஒன்றைத் தவிர.

இவ்வாறு செட்டியார் எனக்கு 'லைசென்ஸ்' கொடுத்துவிட்டதை இராசமாணிக்கனாரிடம் சொன்னேன். அவர் மகிழ்ச்சி அளவு கடந்தது. என்னை ஆரத் தழுவிக் கொண்டார். பின்னர் அடிக்கடி சந்தித்துக்கொண்டோம். இங்கே ஓர் இரகசியம். அப்படிச் சந்தித்தபோதெல்லாம் அகராதியைப் பற்றிப் பேசியது குறைவு. இலக்கிய - இலக்கண - கல்வெட்டுச் செய்திகளையும் நயங்களையும் சுவைகளையும் அவர் எனக்கு எடுத்துச் சொல்வார்.

GRUDGE என்பதற்கு 'உள்வேர்த்தல்', 'வெளிக்காட்டிக் கொள்ளாமல் மனத்துக்குள் வெறுப்புக் கொள்ளுதல்' என்று அர்த்தம் எழுதலாம். இதனையும் இராசமாணிக்கனாரிடம் கேட்டேன். அதற்கு அவர் சொன்ன பதில்.

> முருகப் பெருமானின் ஆறு திருமுகங்களின் செயல்பாடுகளைக் கூற வந்த நக்கீரர், 'ஒரு முகம், செறுநர்த் தேய்த்துச் செல் சமம் முருக்கிக் கறுவு கொள் நெஞ்சமொடு களம் வேட்டன்றே'(திருமுருகாற்றுப்படை) எனக் கூறியுள்ளார். இதில் 'கறுவுதல்' என்பதுதான் GRUDGE. இது பெயர்ச் சொல். இதனையே வினைச் சொல்லாகக் கொள்ளுமிடத்து 'கறுவு' என்றும் *Bear a grudge* என்னும் தொடருக்குக் 'கறுவுகொள்' என்றும் அர்த்தம் எழுதலாம்.

இவ்வாறு ஐம்பதுக்கும் குறையாத சொற்களுக்கும் தொடர்களுக்கும் அவரைக் கேட்டு நான் அர்த்தம் எழுதியிருக்கிறேன். இதுதான், அகராதித் தயாரிப்பில் அவருடைய அதிகார முத்திரையற்ற பங்கு.

இதுவரை எழுதியவைதான் நம் டாக்டர் பற்றிய முழு மதிப்பீடு என்று எடுத்துக் கொள்ளவேண்டா. நான் சொல்ல நினைத்ததை எல்லாம் எழுதி முடித்தபாடில்லை. அவரைப் பற்றி நினைக்கும்போது எழுந்த உதிரி எண்ணங்களே இவை. அவரை முழுமையாகப் படம் பிடித்துக் காட்டும் நூற்பா வடிவிலான ஒரு வரி சொல்லட்டுமா?

'சொல்' என்கிறீர்கள். இதோ:

டாக்டர் மா. இராசமாணிக்கனார், மதியால் வித்தகர்; மனத்தால் உத்தமர்.

❖ ❖ ❖

மாணிக்க இராசமாணிக்கர்

இரா. இளங்குமரன்

முனைவர் மா. இராசமாணிக்கனார் தனி ஒருவர் அல்லர்! அவர் ஓர் அருமையான இயக்கம்! இராசமாணிக்கர், இளம் பருவந் தொட்டே உலகத்து இயற்கையாம் 'ஊழின் வலிமை' அறிந்தவர். தம் வாழ்நாளெல்லாம் அவ்வியற்கை ஊழை வென்று வென்று நின்றதொடு பேராம் பெருநிலையாலும் இன்றும் வென்றுநிற்பவர்; நில்லாவற்றைக் கொண்டே நிலைபேற்றையுற்ற நீர்மை வடிவானவர்.

தடைகளை எல்லாம் உடைத்துத் தம் அறிவு, ஆற்றல், ஆய்வு, தொண்டு ஆகியவற்றில் ஓங்கி உயர்ந்து எவ்வாறு நின்றாரோ, அவ்வாறே தம் துணையும் தம் மக்களும் ஓங்கி உயர்ந்து திகழ வழிகாட்டியும் ஒளிகாட்டியும் ஆகி இருந்தவர்.

தம் குடும்ப நலப் பணிக்காகப் பொதுநலப் பணியைத் துறத்தலும், பொதுநலப் பணிக்காகக் குடும்பநலப் பணியைத் துறத்தலும் இல்லாராய், ஒருவர் சீரோடும் சிறப்போடும் வாழ முடியும் என்பதைத் தமிழுலகம் நன்கு அறியுமாறு வாழ்ந்து காட்டிய பெருமையர் அவர்.

ஒருவர் படிப்பாளியாகத் திகழ்வார்; அவர் படைப்பாளியாகத் திகழ்வது அரிது; அதிலும் அவர் பன்முகப் படைப்பாளியாகத் திகழ்வது அரிதினும் அரிது. அதனினும், அவர்தம் பன்முகப் படைப்புகளை மட்டுமே கற்றுப் பன்முகப் படைப்பாளியாக விளங்க முடியும் என்பதைக் கண்ணேரில் காணும் படைப்பாளர் தம்மாலேயே நிறுவவல்ல மாமணித் தோன்றல் இராசமாணிக்கர்!

மொழிப்புலமை வீறுடையார் பலர்க்கு மொழிப் பற்றுமையும் வாய்ப்பது இல்லை. அப்படி வாய்ப்பினும் இனப்பற்றும் நாட்டுப் பற்றும் இணைந்து நிற்றல் காணரிய காட்சி! இம் மும்மைப் பற்றும் முழுதுற வாய்த்துநின்ற சான்றோர் முனைவர் இராசமாணிக்கர்.

> டாக்டர் இராசமாணிக்கனார் தமிழ்ப் புலவர் மட்டும் அல்லர்; ஆராய்ச்சிப் புலவர் மட்டும் அல்லர்; எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு நல்ல பெருந்தமிழர்; தமிழ்ப் பண்பாட்டின் ஓர் உருவம்.
>
> பி. ஸ்ரீ.

மாந்த நேயமுடையவராகத் திகழ்பவர், நம்பா மதத்தராக இருப்பதும் உண்டு. நம்பும் மதத்தராக இருப்பவர், மாந்த நேயம் இல்லாராக இருப்பதும் உண்டு. ஆனால், இருவகை நேயமும் கொண்டு, இருவகை நேயத்தரும் ஒப்ப மதித்துப் போற்றும் பேறு பெறுதல் விரல்விட்டு எண்ணக்கூடிய சிலர்க்கே கைவரப்பெறும். அவ்வரப்பேறு பெற்று, நம்புவாரும் நம்பாரும் இருகூறு

படாமல் ஒருமையுறப் பாராட்டப் பெற்ற பேறு பெற்றவர் பெருந்தகை அண்ணல் இராசமாணிக்கர்.

மனிதரை மனிதராகப் பேசவைப்பதே அரிதாய் இருக்க, மண்ணையும் கல்லையும் மரத்தையும் மழையையும் தத்தம் வரலாற்றைத் தாமே வாய்விட்டுக் கூறும் பொருளாக வையகம் அறியச் செய்த உணர்வுமிக்க உயிர்ப்பிப்பாளர் இராசமாணிக்கர்!

இவை அவர்தம் பிறவிக் கொடைப் பிழிவு!

❖ ❖ ❖

நான் அறிந்த பேராசிரியர்

சிறுவை. நச்சினார்க்கினியன்

ஆராய்ச்சி இன்றியமையாதது. ஆனால் அது நன் முறையில் நடைபெற வேண்டும். ஆராய்ச்சிக்குப் பலதிறக் கண்கள் தேவை. இந்நாளில் வித்துவான் இராச மாணிக்கம், பி.ஓ.எல். ஆராய்ச்சி உலகில் இறங்கி இருள் போக்கி வருவது எனக்கு மகிழ்ச்சியூட்டுகிறது (திரு.வி.க.).

1942ஆம் ஆண்டில், சென்னை நக்கீரர் கழகக் கார்காலச் சொற்பொழிவில், நான்கு நாட்கள் தொடர்ந்து, 'பெரியபுராணம்' எனும் பொருள்பற்றிப் பேராசிரியர் பேச, திரு.வி.க. தலைமை ஏற்றார்கள். இச்செய்தியைத் திரு.வி.க. தம் வாழ்க்கைக் குறிப்பில் மேற்கண்டவாறு குறிப்பிட்டு மகிழ்கிறார்.

போதிக்கும் பாடத்திலும் எழுதும் எழுத்திலும் பேசும் பேச்சிலும் தமிழ் ஆர்வத்தைத் தூண்டும் உணர்வு, தமிழர்க்கே உரிய நாகரிகம், தன்மானம், சமூக மறுமலர்ச்சி, திருவள்ளுவரின் பொன்னுரைகள் ஆகியவை நிறைந்து வழியும் இலக்கியச்சுவையை நுகரலாம்.

மு. அன்பரசன்

என் தந்தை ரெயில்வே நிலையத்தில் 'குடிவாடா' எனும் தெலுங்கு நாட்டில் பணியாற்றியபோது, நான் என் பாட்டனார் வீட்டில், சென்னைத் தொண்டையார் பேட்டையில் தங்கி, 1929இல் சர். தியாகராயர் நடுநிலைப்பள்ளியில் 5ஆம் வகுப்பில் படிக்கும் போது தமிழ்ப்பாடம் எடுத்தவர்கள் பேராசிரியர் அவர்கள். சிவந்த மேனி, கத்தரித்துவிடப்பட்ட கருமையான மீசை, புன்சிரிப்பு, தூய வெள்ளாடை, அமைதியான நடை, அக்கால நிலையின் வழி கையில் பிரம்பும் அழகு செய்யும். பிரம்பு பயனற்று விளங்கும். நான் செய்த நற்றவம் என் கண்கள் அவரைக் காதலித்தது. அக்காதல் பிணைப்பு அவர் மறையும்வரை தொடர்ந்தது.

பின்னர் நான் தொண்டை மண்டலம் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தேன். அங்கு என் தமிழாசிரியர் திரு. பி.எஸ். செட்டியார் அவர்கள்; உயர்நிலைப் பள்ளியில் என் தமிழாசிரியர் திரு. எஸ்.எஸ். அருணகிரிநாதர். இவர்கள் பேராசிரியரின் நண்பர்கள். ஆகவே, சந்திப்பதிலும் சொல்லாடலில் கலந்து இனிப்பதிலும் - அறவுரை கேட்பதிலும் தொடர்பு தொடர்ந்தது. அக்காலம், ஆசிரியர் - மாணவர் தொடர்பு, ஒரு பொற்காலம். மாணவர்களை அவரவர் தகுதிக்கு ஏற்பத் தோழனாக, தம்பியாக, மகனாக அரவணைப்பது பண்பாக இருந்தது. என்னை, 'தம்பி' என்று அழைத்தார். பின்னர் எனக்கு வயதானபோது 'என்னப்பா' - 'இந்தாப்பா' என்று அழைப்பார். சர். தியாகராயர் நடுநிலைப் பள்ளியில் ஆசிரியராக இருந்தபோது, 'வித்துவான்' பட்டம் பெறவில்லை என்பது பல ஆண்டுகளுக்குப் பின்னர்தான் தெரியும்.

நான் தொண்டை மண்டலம் உயர்நிலைப் பள்ளி மாணவர் இலக்கிய மன்றச் செயலாளராக ஆனேன். அப்பொழுது என் ஆசிரியர் எஸ்.எஸ். அருணகிரிநாதர் ஆணைப்படி, பள்ளி இலக்கிய மன்றத்திற்குப் பேராசிரியரை இரண்டு முறை அழைத்துவந்தேன். பின்னர் 1931இல் எனது வீட்டில் ('தமிழகம்', கொண்டலையர் தெரு, சென்னை-1), **மாணவர் மன்றம்** என்ற அமைப்பினை என் சகமாணவர் உதவியுடன் அமைத்தேன். அப்பொழுதும் பேராசிரியர் எனது தொண்டுகளுக்கு உறுதுணை ஆனார். ஏதோ சொல்லத்தெரியாத ஒரு பாசம். அப்பொழுது வண்ணை வள்ளுவன் தெருவில் குடி இருந்தார்கள். அடிக்கடி அவர் வீட்டிற்குப் போவது வழக்கம். பேராசிரியரின் அருமை அன்னை தாயாரம்மாள், "வா தம்பி" என்று வரவேற்பார்கள். பேராசிரியர் தம் அன்னையைச் சிறப்புடன் போற்றிக் காத்து வந்தார்கள். தாயாரம்மாள் தம் மருமகள் கண்ணம்மாளுக்கு இயன்றவரை உதவியாய் இருப்பார்கள்.

ஒருமுறை அவர் இல்லம் சென்றபோது, பேராசிரியர் தம் மனைவிக்கு வெங்காயம் நறுக்கி உதவி செய்துகொண்டிருந்தார். மற்றொரு முறை சென்றபோது தமிழ்ப்பாடம் சொல்லிக் கொண்டிருந்தார். ஒத்த நலம் - ஒத்த பண்புநிலை பேராசிரியர் இல்லத்தில் மலர்ந்தது. அவர்கள் வீட்டரசி சென்னையில் தமிழாசிரியராக விளங்கினார்கள். 'வித்துவான்' பட்டம் பெற்று, பின்னர் மதுரை பாத்திமா கல்லூரியில் தமிழ்ப் புலமை நடத்தினார்கள். நான் கண்ட - பழகிய தமிழாசிரியர்கள் வீட்டில் இப்படி ஒரு தனிப் பண்பினைப் பெற்று விளங்கவில்லை அக்காலத்தில். முதலில் வீட்டைச் செம்மை செய்தார்கள் பேராசிரியர்.

மாணவர் மன்ற அமைப்பிற்காகப் பேராசிரியர் மேற்கொண்ட பணிகள் பல. 1931இல் தொடங்கிய மன்றத்திற்கு 9ஆம் ஆண்டுவரை எனது வீடு அலுவலகமாகத் திகழ்ந்தது. மன்றத்தின் நான்காம் ஆண்டில் அறிஞர் அண்ணா, டாக்டர் தருமாம்பாள், மயிலை. சிவ. முத்து காப்பாளர்களானார்கள். கட்டுரைப் போட்டி, மெய்ப்பாட்டுரை வளப் போட்டி, பேச்சுப் போட்டி ஆகியவைகளுக்கு திரு. பி.எஸ். செட்டியார், பேராசிரியர் அவர்கள், எஸ்.எஸ். அருணகிரிநாதர், டி.எஸ். ஸ்ரீபால் முதலியோர் உதவி செய்வர். எஸ்.எஸ். அருணகிரிநாதரும் பேராசிரியர் அவர்களும் கட்டுரைப் போட்டித் தாள்களைத் திருத்தம் செய்யப் பலரை ஆற்றுப்படுத்துவார்கள். மன்றப் போட்டிப் பரிசுகளுக்கு கே. பழநியாண்டி பிள்ளை என்ற புத்தக வணிகரிடம் புத்தகங்கள் அன்பளிப்பாகப் பெற்றுத் தருவார்கள். அந்தச் சமயத்திலேயே பேராசிரியர் அவர்களுக்குச் சுயமரியாதை இயக்கத்தில் பற்று உண்டு. அடிக்கடி தமிழர்கள் மேற்கொண்டு ஒழுகும் மூட நம்பிக்கைகளைக் கண்டித்துக் கடிந்துரைப்பார்கள். கொள்கை வீரராய் விளங்கியதைக் கண்டேன்.

வண்ணையம்பதியில் தனலட்சுமி தொடக்கப்பள்ளியில் பேராசிரியரின் தமிழ்த் தொண்டு தொடங்கியது. வகுப்புகள் நடத்துவார். சிறுசிறு கூட்டங்கள் நடத்துவார். அங்குச் சில அன்பர்கள் இவர்கள் பணிகளுக்குத் தொண்டர்களாய் விளங்கினார்கள். பணச் செலவு சொந்தப் பணம். அதே காலத்தில் இந்தி எதிர்ப்பு அறப் போராட்ட வீரர் சுவாமி அருணகிரிநாதர் அவர்கள், பேராசிரியரின் தமிழ் வளர்ச்சிப் பணிகளைப் பயன்படுத்திக் கொண்டார்கள். தமிழ் மாமுனிவர் குன்றக்குடி அடிகளார் போல் அக் காலத்தில் சுவாமி அருணகிரிநாதர் பணி தமிழகத்திற்கு அரண் செய்தது. அருணகிரி நாதர் ஆசிரியர் சாது நாராயண தேசிகர் மடத்தில், பேராசிரியர் பல முறை சமயச் சீர்திருத்தப் பேச்சுகள் நிகழ்த்தியுள்ளார்கள்.

பேராசிரியர் அவர்களிடம் குருபக்தி சிறந்து விளங்கிற்று. ஒருமுறை நாவலர் வேங்கடசாமி நாட்டார் ஐயா அவர்கள், தம் உறவினர் துணிக்கடை பழநியாண்டி

பிள்ளை அவர்கள் இல்லத்தில் தொண்டையார் பேட்டையில் தங்கி இருந்தனர். அவர்களைப் பார்க்கப் பேராசிரியர் சில பழங்களுடன் சென்றார்கள். நானும் உடன் சென்றேன். பேராசிரியர் அவர்கள் தஞ்சையில் படிக்கும்போது நாவலர் நாட்டாரையா அவர்களிடம் தமிழ் பயின்றவர்கள். பேராசிரியர் தம் ஆசிரியர் பெருந்தகையைக் காணும்போது அடைந்த கூச்சம் - அடக்கம் இப்பொழுதும் என் கண்முன் நிற்கின்றது. இப்பொழுதெல்லாம் குருவை வணங்கக் கூசி நிற்கின்றோம். பேராசிரியர் தம் ஆசிரியரிடம் காட்டியது பக்தி உணர்வு. அத் தனிப்பாங்கினை இப்பொழுது என்னால் விளக்க இயலாது.

பேராசிரியர் அவர்கள் சென்னை முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராய் இருந்தபோது, மாலையில் பள்ளிவிடும்போது நான் செல்வதுண்டு. எல்லாம் கழகப் பணிகள். அப்பொழுது பேராசிரியர் அவர்கள், திரு. மயிலை. சிவ. முத்து, பேராசிரியர் பாலூர் கண்ணப்பர் முதலியவர்களுடன் சிற்றுண்டிச்சாலைக்குச் செல்வதுண்டு. அங்கே ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொருவர் தலைமையில் சிற்றுண்டி உட்கொள்வர். தலைமை என்பது, தலைமை வகிப்பவர். அன்றைய சிற்றுண்டிச் செலவை ஏற்கவேண்டும். சிற்றுண்டி முடிந்த பிறகு நேரே பச்சையப்பன் விளையாட்டுத் திடலில் உட்காருவோம். உரையாடல் தொடங்கும். அங்கு மே.வீ.வே. அவர்களும் கா.ர.கோ. அவர்களும் வந்து சேர்ந்து கொள்வார்கள். உரையாடல் அனைத்தும் “மாணவர்களுக்குப் புத்தகங்கள் அமையும் விதம், மாணவர்கள் எதை எதிர்பார்க்கிறார்கள், அன்றைய தினம் தாங்கள் பாடம் நடத்திய முறை” இவற்றைப் பற்றியதாக இருக்கும். பல நாட்கள், பல நூல்களைக் கற்ற அறிவினைப் பெற முடியும் அவ்வுரையாடல்களில். அப்பொற்காலம் மீண்டும் வராது- வர முடியாது. இக்காட்சி அற்றைநாள் பேசா நிழற்படம்போல் என் கண்முன் தோன்றித்தோன்றி மறைவதுண்டு.

தமிழர் நல்வாழ்க்கைக் கழகம் என்ற அமைப்பின் வேண்டுதலுக்கு இணங்க, பேராசிரியர் 1939இல், ‘தமிழர் திருமண நூல்’ இயற்றினார்கள். அப்பொழுது இந்தி எதிர்ப்பு அறப்போர் ஒருவாறு தணிந்து தமிழகத்தைச் சங்க கால நெறிமுறைப்படி பண்படுத்த பலரும் ஆயத்தம் ஆன சமயம். ஆசிரியர் மறைமலையடிகளார் தலைமையில், ‘தமிழர் திருமண மாநாடு’ சென்னை கோக்கலே மன்றத்தில் கூடியது. அம்மாநாட்டை ஒட்டி, ‘தமிழர் திருமண நூல்’ வெளிவந்தது. இந்நூல் அமைப்புமுறையைச் சட்ட வல்லுனர்கள் திரு. அ. முத்தையா முதலியார், கா.சு. பிள்ளை, நாவலர் சோமசுந்தர பாரதியார் முதலியோர் பாராட்டினர். திருவிக., ந.. வேங்கடசாமி நாட்டார் போன்றவர்கள் பேராசிரியரின் ஆராய்ச்சி நெறியைப் புகழ்ந்து வாழ்த்தினர்.

1941இல் சென்னை **நக்கீரர் கழகம்** என்ற அமைப்பினைத் தொடங்கிய காலத்தும் பேராசிரியர் அவர்களின் அரவணைப்பும் தொண்டும் கழகத்திற்குக் கிடைத்துக் கழகம் வளர்ந்து சிறந்தது. 1942 இல் கார்காலச் சொற்பொழிவு வரிசையில் பேராசிரியர் அவர்கள் பெரியபுராணம் பற்றி ஆய்வுச் சொற்பொழிவுகள் நான்கு நாட்கள் நடத்தினார்கள். நான்கு நாட்களுக்கும் தமிழ்த் தென்றல் திரு.வி.க. தலைமை வகித்தார்கள். அப்பொழுது சென்னை பிரம்ம சமாஜ மண்டபம் மக்கள் கூட்டத்தைச் சமாளிக்க முடியவில்லை. சொற்பொழிவின் முடிவில் திரு.வி.க. அவர்கள் பேராசிரியரின் ஆராய்ச்சி நெறி முறைகளைப் புகழ்ந்து வாழ்த்தினார்கள். இச்செய்தி திருவி.க. வாழ்க்கைக் குறிப்பில் இடம் பெற்றுள்ளது. இவ்வாராய்ச்சி பின்னர் நூலாக மலர்ந்து மணம் பரப்பியது.

1946ஆம் ஆண்டில் நக்கிரர் கழகம் **திருவள்ளுவர்** என்ற திங்கள் ஏட்டினை நடத்தத் தொடங்கியபோது, பேராசிரியர் தம் கட்டுரைகளை வழங்கியதோடு அல்லாது, தாம் நட்பு பூண்டிருந்த தவத்திரு ஈராஸ் பாதிரியாரின் கட்டுரையையும் பெற்றுத்தந்து, இதழுக்குப் பெருமை சேர்த்தார்கள்.

1960இல் நக்கீரர் கழகம் மேற்கொண்ட புலவர்கள் - கவிஞர்கள் சுற்றுலாவில் பங்குகொண்டு, 'திருப்பாலைவனம் - பழவேற்காடு' சுற்றுலாவிற்கும் அடுத்து, 'திருவாலங் காடு - பழையனூர் - திருப்பாசூர் - திருவள்ளூர்' முதலிய இடங்களுக்கும் வருகை தந்து, தலைமை ஏற்று வழிநடத்தி அந்த ஊர் திருக்கோயில்களின் கல்வெட்டுகளின் சிறப்பினை எடுத்துரைத்தார்கள். சான்றுகளுடன் இக் கல்வெட்டு களின் சிறப்புகளைக் கண்ட தமிழக அரசு, அறநிலையத் துறைவழி திருப்பாலைவனம் - திருவாலங்காடு கோயில்களுக்கு ஒவ்வொன்றுக்கும் ரூ. 10,000/- வழங்கிக் கோயில் கட்டடங்களைச் செப்பம் செய்தார்கள். இக்கல்வெட்டுக் குறிப்புகள் சென்னைப் பல்கலைக்கழக ஆய்வு இதழில் இடம் பெற்றுள்ளன. சுற்றுலாவின் வழிநெடுகப் பேராசிரியரின் புகழ் பரப்பி, பல நிலையங்கள் வாழ்த்துரைகள் படித்தளித்தன.

பேராசிரியர் அவர்களின் மைத்துனர் புலவர் செல்வராசு அவர்கள், அன்னை டாக்டர் தருமாம்பாள் அவர்கள் வாயிலாக உற்ற அன்பர் ஆனார்கள். பத்திரிகைத் தொழிலில் இருந்த திரு. செல்வராசன் அவர்களை 'புலவர்' நிலைக்கு உயர்த்தி, தமிழ் ஆசிரியராக ஆக்கிய பெருமை பேராசிரியர் அவர்களையே சாரும்.

இங்ஙனம் பேராசிரியர் டாக்டர் இராசமாணிக்கனார் அவர்கள் அடியவனின் தமிழ்த் தொண்டிற்கு ஊக்கமும் உள்ளத்திற்கு உரமும் துவண்டபோது தட்டி எழுப்பி ஊட்ட உரைகள் அளித்தும் சிறப்பிப்பார்கள். இவ்வாறு, பொதுவாகத் தமிழ்ப் பணிக்கும் சிறப்பாக எனது புகழுக்கும் உற்ற துணையாய் இருந்தார்கள்.

❖ ❖ ❖

விழுமிய திறமைகள் கெழுமிய அறிஞர்

மா. இளஞ்செழியன்

வயதில் இளையவர் - புலமையில் முதியவர்

வந்த அன்பரை வாய்குளிர வரவேற்கும் அந்தக் குழைவு - உள்ளன்போடு பேசும் அந்தக் கனிவுமொழி- உற்றவிடத்து உதவும் ஒப்புரவு- பேச்சினிடையே மின்னலிடும் நாகரிக நகைச்சுவை - இளைஞர் இயக்கங்கள் முன்னேற வழிகாட்டும் சான்றாண்மை ஆகிய இராசமாணிக்கனாரின் பண்புகள் எல்லாம் என்றும் நம் உள்ளத்தே பசுமையோடிருக்கும்.

தணிகை உலகநாதன்

1936ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் சென்னை முத்தியாலுப் பேட்டை உயர்நிலைப் பள்ளியில் ஏழாம் வகுப்பில் ஒரு மாணவனாக நான் சேர்ந்து சில நாட்களே ஆகியிருந்த சமயம். அப்போது அந்த வகுப்பிற்குத் தமிழ்ப் பாடங்களை எடுப்பதற்கு உரிய ஆசிரியராக ஓர் இளம் புலவர் வந்தார். அப்போது அவருக்கு வயது 28 முடிந்து, 29தான் தொடங்கியிருந்தது. எங்களுடைய தமிழாசிரியர் இவ்வளவு இளம் வயதினரா என்று எண்ணி நான் வியப்படைந்த போது, மேலும் சில ஆச்சரியங்கள் என் உள்ளத்தை முற்றுகையிட்டன.

எங்கள் பள்ளிக்கு ஆசிரியராக வருவதற்கு முன்னரே, அந்த இளம் புலவர் சென்னை வண்ணாரப்பேட்டை சர். ப. தியாகராயர் நடுநிலைப் பள்ளியில் எட்டு ஆண்டுகள் தமிழாசிரியராக அரும் பணி புரிந்திருக்கிறார் என்பதும், அந்தப் பள்ளியில் அவர் ஆசிரியப் பணியில் சேர்ந்தபோது அவருக்கு வயது 21தான் என்பதும், அந்த இளம் வயதிலேயே நற்றமிழ் மொழியில் நனிசிறந்த புலமை படைத்தவராக அவர் விளங்கினார் என்பதும், ஆகவேதான் அந்தப் பள்ளி நிர்வாகிகள் அந்த இளம்வயதிலேயே அவருக்கு ஆசிரியப் பணியை அளித்தனர் என்பதுமே என் உள்ளத்தை முற்றுகையிட்ட ஆச்சரியங்கள்.

மாணவர்களைக் கவர்ந்த மாண்புமிகு ஆசிரியர்

அந்த இளம் புலவர் எங்கள் பள்ளிக்கு ஆசிரியராக வந்த காலம், தமிழாசிரியர்களை மாணவர்கள் கேலிக்கு உரியவர்களாகக் கருதிப் புறக்கணித்த காலம்; தமிழ் வகுப்புகளில் ஆர்வம் செலுத்தாமல் ஒதுங்கி இருந்த காலம். தமிழாசிரியர்களுக்கும் தமிழ் வகுப்புகளுக்கும் இருந்த இந்த வருந்தத்தக்க நிலையை மாற்றி, அவர்களுக்கும் அவர்களுடைய வகுப்புகளுக்கும் ஒரு தனிப்பெருஞ் சிறப்பை - செல்வாக்கை - புகழை ஏற்படுத்திக் கொடுத்த பெருமை, அந்த இளம் புலவருக்கே உரியது.

பல ஆண்டுகளுக்குப் பின்னர் டாக்டர் மா. இராச மாணிக்கனார், எம். ஏ., எல். டி., எம். ஓ. எல்., பிஎச். டி., என்று தமிழ் மக்களால் பாசத்தோடும் நேசத்தோடும் அழைக்கப்பட்ட

அப்பெருமகனார், 1936 இல் வித்துவான் மா. இராசமாணிக்கம் பிள்ளை என்றுதான் அழைக்கப்பட்டு வந்தார். அந்நாட்களில் அவர் 'வித்துவான்' என்னும் பட்டத்தை மட்டுமே பெற்றிருந்தார். அவருடைய பெயருக்குப் பின்னால் அணிவகுத்துநின்ற ஏனைய பட்டங்கள் யாவும் அவருடைய கடுமையான உழைப்பின் விளைவாகப் பிந்திய ஆண்டுகளில் அவரை நாடிவந்து அவரிடம் தஞ்சம் அடைந்தவை. அந்தக் காலத்தில் அந்த இளம் புலவர் என் வகுப்பிற்குத் தமிழ்ப் பாடங்களை எடுத்த செம்மையையும் சிறப்பையும் இன்றைக்கு எண்ணிப்பார்த்தாலும் என் உள்ளத்தில் அப்பெருந்தகையாளர்மீது மட்டற்ற மதிப்பு ஏற்படுகிறது.

மிகக் கடுமையான பாடங்களைக்கூட இளம் பிள்ளைகளாகிய மாணவர்களுக்கு எளிதில் விளங்குமாறு எடுத்து இயம்புவது, அவரிடம் காணப்பட்ட ஒரு தனிச்சிறப்பு. உரைநடை ஆயினும், செய்யுள் ஆயினும், அவற்றை நிதானமாகப் படித்துக் காட்டி, அரும்பத உரை முதலியவற்றைக்கூறி அவற்றின் உள்ளுறையை அவர், மாணவர்களின் உள்ளங்களில் பசுமரத்தாணிபோல் பதியவைத்துவிடுவார். வகுப்புகளில் அவர் நடத்தும் பாடங்களை அமைதியாக அமர்ந்து, கூர்மையாகக் கவனித்துக் கேட்டால் போதும், அவை மாணவர்களின் நெஞ்சத்திரையில் தெள்ளத்தெளிவாகப் பதிந்துவிடும். வீட்டிற்குச் சென்றபின் மீண்டும் அப்பாடங்களை அவர்கள் படிக்க வேண்டிய தேவையே இல்லாமல் அவை அவர்களுடைய நெஞ்சங்களில் தஞ்சம் அடைந்துவிடும்.

வேம்பென வெறுத்ததைக் கரும்பெனச் சுவைக்க வைத்தவர்

தமிழ் இலக்கணப் பாடங்களை மாணவர்கள் வேப்பங்காய் என எண்ணி வெறுத்த நாட்கள் அவை. ஆனால் இனிய புலவர் இராசமாணிக்கனார், வகுப்பை எடுக்கத் தொடங்கிய சில நாட்களுக்குள் மாணவர்களின் இந்த மனப்போக்கை அடியோடு மாற்றிவிட்டார்; இலக்கணப் பாடங்கள், வேம்பாகக் கசப்பவை அல்ல - கரும்பாக இனிப்பவை என்னும் எண்ணத்தை மாணவர்களின் உள்ளங்களில் விதைத்துவிட்டார். அவருக்கு முன்னர் இலக்கணப் பாடங்களை எடுத்த ஆசிரியர்களில் பலர், தற்காலத்தில் வழங்காத - சங்க காலம் முதலிய பண்டைக் காலத்தில் மட்டுமே வழங்கி வந்த - மாணவர்களுக்கு விளங்காத பெயர்களையே இலக்கண விதிகளுக்கு உரிய எடுத்துக் காட்டுகளாக அளித்துவந்தனர். பொருள் விளங்காத பெயர்களில் மாணவர்களுக்கு ஈடுபாடு இருக்க முடியாது அல்லவா? ஆனால் ஆசிரியர் இராசமாணிக்கனாரோ, மாணவர்களின் வீடுகளில் நாள்தோறும் பயன்படுத்தப்படும் பண்டங்களின் பெயர்களையே விதிகளுக்கும் விதிவிலக்குகளுக்கும் எடுத்துக்காட்டுகளாகத் தருவார். ஆகவே மாணவர்கள் அவ் விதிகளையும் விதிவிலக்குகளையும் மிக எளிதில் விளங்கிக்கொள்வர்.

இலக்கணப் பாடங்களை மட்டும் அல்லாமல் இலக்கியப் பாடங்களையும் நகைச்சுவையோடு கலந்து மாணவர்களுக்குப் பரிமாறுவது, இராசமாணிக்கனாரின் மற்றொரு தனித் திறமை. எந்தப் பொருளையும் நகைச்சுவையோடு கலந்து விளக்கினால், மாணவர்கள் அந்தப் பொருளைக் கேட்டு அறிவதற்கு ஆர்வத்துடன் முன்வருவது இயற்கை. இந்த உளவியல் கோட்பாட்டை நன்றாக அறிந்த இராசமாணிக்கனார், அதைத் திறமையாகக் கையாண்டு முழு வெற்றி பெற்றார். எளிமை, இனிமை, நகைச்சுவை ஆகிய மூன்றும் அந்த ஆசிரியப் பெருந்தகையின் சிறப்புப் பண்புகள்.

1936-37 என்னும் கல்வி ஆண்டில், ஏழாம் வகுப்பில் என் பன்னிரண்டாம் வயதில் அவரிடம் தமிழ்ப் பாடங்களைப் பயிலும் பெறற்கரிய பேற்றைப் பெற்றவன் நான். ஏறத்தாழ எழுபது ஆண்டுகள் ஓடி மறைந்துவிட்ட இன்றைய நிலையிலும் அவர் அந்தக் காலத்தில் வகுப்புகளை நடத்திய எழிலும் ஏற்றமும் என் நெஞ்சத்திரையில் நீங்காமல் நிலைத்து நின்று ஒளி வீசிக் கொண்டிருக்கின்றன.

மாட்சிமை மிகுந்த மதிப்பெண் புரட்சி

நான் ஏழாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த அந்தக் காலத்தில் மாதந்தோறும் வகுப்புத் தேர்வுகள் நடைபெறும். அவை இந்தக் காலப் பல்கலைக்கழகத் தேர்வுகள் போல, மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் ஆகிய அனைவராலும் பெரு மதிப்புடன் போற்றப்பட்டன. அந்தக் காலத்தில் ஆசிரியர்கள், மாணவர்களின் மிகச் சிறந்த விடைகளுக்குக் கூட 100க்கு 60 அல்லது 70 மதிப்பெண்களுக்கு மேல் அளிக்க மாட்டார்கள். கணக்குப் பாடம் ஒன்றில்தான் 100க்கு 100 மதிப்பெண்கள் தரலாம்; மற்ற பாடங்களில் - அதிலும் சிறப்பாகத் தமிழ், ஆங்கிலம் முதலிய மொழிப் பாடங்களில், 60 அல்லது 70 மதிப்பெண்களுக்குமேல் தரக்கூடாது என்பது, அந்தக் காலத்தில் ஆசிரியர்களால் அழுத்தந்திருத்தமாகப் பின்பற்றப்பட்டு வந்த ஒரு மரபு.

ஆனால் இளம்புலவர் இராசமாணிக்கனார் என் வகுப்பிற்கு நடத்திய முதலாவது மாதத் தேர்விலேயே, என் விடைத்தாளுக்கு, 20க்கு 19, அதாவது 100க்கு 95 மதிப்பெண்கள் அளித்திருந்தார். இதனைக் கேள்வியுற்ற முதிய ஆசிரியப் பெருமக்கள் கொதித்து எழுந்தனர்; கடுங்கோபம் கொண்டனர்; மொழிப் பாடத்தில் எப்படி 20க்கு 19 மதிப்பெண்கள் தரலாம் என்று ஆசிரியர் இராசமாணிக்கனார்மீது கேள்விக் கணை தொடுத்தனர். "ஒவ்வோர் எழுத்துப் பிழைக்கும் இலக்கணப் பிழைக்கும் கால் மதிப்பெண் குறைக்கப்பட வேண்டும் என்பதை நான் நன்றாக அறிவேன். இந்த விடைத்தாளில் ஒவ்வொரு கேள்விக்கும் முற்றிலும் பொருத்தமான விடை தரப்பட்டுள்ளது. எழுத்துப் பிழையோ, இலக்கணப் பிழையோ ஒன்றுகூட இல்லை. ஆகவே நியாயமாகப் பார்த்தால், இந்த விடைத்தாளுக்கு 20க்கு 20 மதிப்பெண்கள் கொடுத்திருக்க வேண்டும். ஆனால் நாம் அனைவரும் பின்பற்றிவருகிற மரபுக்குத் தலைவணங்கித்தான் நான் ஒரு மதிப்பெண்ணைக் குறைத்திருக்கிறேன்," என்று இராசமாணிக்கனார் விடை இறுத்தார்.

என் விடைத்தாளை வீட்டிலிருந்து கொண்டுவரச் சொல்லி மறுநாள் அதை என்னிடமிருந்து பெற்றுக்கொண்ட அந்த ஆசிரியப் பெருந்தகை, உணவு இடைவேளையின் போது அந்த விடைத்தாளை மூத்த ஆசிரியர்களிடம் கொடுத்து, "இதோ விடைத்தாள். எங்கேனும் தவறுகள் காணப்பட்டால், நீங்கள் அதற்கு ஏற்றவாறு மதிப்பெண்களைக் குறைத்துப் போடுங்கள்" என்று அறைகூவல் விடுத்தார். அவர்கள் அந்த விடைத்தாளைப் பலமுறை படித்துப் பார்த்தும், கால் மதிப்பெண்ணைக் கூடக் குறைக்க முடியாமல், இராசமாணிக்கனார் அளித்த மதிப்பெண்ணை அப்படியே ஏற்றுக் கொண்டனர். சுவையும் பயனும் மிக்க இந்த நிகழ்ச்சி, அந்தக் காலச் சூழ்நிலையில், தமிழாசிரியர் உலகில் மட்டுமல்ல, சென்னை மாவட்டக் கல்வி உலகிலும், வியக்கத்தக்க ஒரு புரட்சியாகக் கருதிப் பாராட்டப்பட்டது; ஆசிரியர் இராசமாணிக்கனாருக்கு ஒரு புதிய புகழையும் ஏற்படுத்திக் கொடுத்தது.

பைந்தமிழ்ப் புலமையுடன் இணைந்த பகுத்தறிவு ஆர்வம்

இளம் புலவர் இராசமாணிக்கனார், பெரியார் ஈ.வெ.ராவின் பகுத்தறிவுக் கொள்கைகளில் தன் உள்ளத்தைப் பறிகொடுத்தவர்; சுயமரியாதைப் புலவர் என்றே அந்தக் காலத்தில் அழைக்கப்பட்டவர்; தமிழர் சமுதாயத்தைப் பல்வேறு கூறுகளாகப் பிரித்து, சிதைத்துச் சீரழிக்கும் சாதி வேற்றுமைகளை அழித்தாக வேண்டும் என்பதில் தணியாத ஆர்வம் படைத்தவர்; கலை உரைத்த கற்பனையே நிலை எனக் கொண்டாடும் கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப் போகவேண்டும் என்னும் கொள்கையில் ஆழ்ந்த பற்று உடையவர்.

1907இல் பிறந்த புலவர் இராசமாணிக்கனார், 1928இல் அதாவது, தன் 21ஆவது வயதிலேயே வட சென்னை தியாகராயர் பள்ளியில் தமிழாசிரியராகப் பொறுப்பேற்றார்

என்பதை முன்னரே குறிப்பிட்டிருக்கிறேன். அவர் அவ்வாறு ஆசிரியப் பணியைத் தொடங்கிய நான்காம் ஆண்டிலேயே, 'பொற்கால வாசகம்' என்னும் பெயரில் ஆறாம் வகுப்பிற்குரிய தமிழ்ப் பாட நூல் ஒன்றை, மாணவர்களின் உள்ளங்களை அள்ளிக் கொள்ளத்தக்க வகையில் எழுதி வெளியிட்டார். அந்தப் புத்தகத்தில் 'உண்மை' என்னும் தலைப்பில் அவரால் எழுதப்பட்டிருந்த ஓர் அருமையான பாடத்தைப் படித்து மகிழும் பொன்னான வாய்ப்பு, 1936இல் முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப்பள்ளியில் நான் ஏழாவது வகுப்பில் பயின்றுகொண்டிருந்த போதே எனக்குக் கிடைத்தது. பழனியாண்டிப் பிள்ளை கம்பெனி என்னும் நிறுவனத்தால் 1938இல் வெளியிடப்பட்ட 'அறிவுச்சுடர்' என்னும் கட்டுரைத் தொகுதியிலும் அந்தப் பாடம் இணைக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் இராசமாணிக்கனாரின் இதயத்தை ஈர்த்த பகுத்தறிவு வேட்கையையும் சீர்திருத்த உணர்வையும் அந்தக் கட்டுரை அற்புதமான முறையில் படம்பிடித்துக் காட்டுகிறது.

இதோ அக்கட்டுரையின் ஒரு பகுதி:

வேத வார்த்தைகளாய் இருப்பினும், மனித வார்த்தைகளாய் இருப்பினும், மனிதன் தன் நிலையினின்றும் அவற்றை ஆராய்ந்து, உண்மை கண்டு, கொள்ள வேண்டுவனவற்றைக் கொண்டு, தள்ள வேண்டுவனவற்றைத் தள்ளலே முறை. அச்சம், சாபம், விருப்பு, வெறுப்பு என்பவை இன்றி, விஷயங்களை ஆராய்ந்து, உண்மை காண்பவனே உண்மை மனிதன். அவன் தனக்கு உண்மை எனப் படாதவற்றை உதறித் தள்ளிவிடுவான். அவை, தன் முன்னோர் அபிப்பிராயம் ஆயினும் சரி, அவன் பொருட்படுத்த மாட்டான்; அவனது மனசாட்சிக்கு உகந்தது அல்லாத எதனையும் ஒப்புக்கொள்ள மாட்டான். அவனே மனித வர்க்கத்தில் சிறந்தவன்.

அச்சம், தயை, தாட்சண்யம் இன்றி உண்மையை மட்டுமே பின்பற்றுவதுதான் உண்மையான மனிதனின் கடமை என்பதை இவ்வளவு தெளிவாக எடுத்துக்காட்டியுள்ள ஆசிரியர் இராசமாணிக்கனார், அந்தக் கருத்தை மேலும் சிறப்பாக விளக்கும் வகையில் ஓர் எடுத்துக்காட்டையும் தந்துள்ளார், அந்தக் கட்டுரையில்,

இதோ அந்த எடுத்துக்காட்டு:

ஓர் அசுரன் பூமியைப் பாயாகச் சுருட்டிக் கொண்டு கடலுள் ஒளிந்து கொண்டான் என்று கூறப்படுகின்ற கதையை நம் மூதாதையர் நம்பி இருந்தனர். அதனை இன்று நாம் நம்புகின்றோமோ? இல்லை! ஏன்? நாம் பூகோள சாத்திரம் வாசித்திருக்கிறோம்; பூமி உருண்டை வடிவம் உடையது என்பதை அறிந்திருக்கிறோம்; பூமி தட்டையாகவோ பாயாகவோ ஒரு காலத்திலும் இருந்திராது என்பதை அறிவோம். எனவே இஃது ஒரு பொய்க் கதை என்னும் எண்ணத்தைப் பெறுகிறோம். இங்ஙனம் ஒவ்வொன்றையும் நம் பகுத்தறிவைக் கொண்டு ஆராய்ந்து, உண்மையைக் கோடலே, கற்றதனால் ஆய பயன் என்க.

மாணவர்களிடம் மட்டற்ற பற்றும் பாசமும்

வகுப்பில் கட்டுப்பாட்டையும் ஒழுங்கு முறையையும் நிலைநாட்டுவதில் கண்டிப்பாக இருப்பார் இராசமாணிக்கனார். ஆனால் வகுப்பிற்கு வெளியே மாணவர்களிடம் அளவற்ற அன்புடன் பழகுவார். பயின்று கொண்டிருக்கும் மாணவர்களிடம் மட்டும் அல்லாமல், முந்திய ஆண்டுகளில் பயின்ற பழைய மாணவர்களிடமும் உள்ளம் கனிந்து அன்பைப் பொழிவார். எங்கேனும் அவர்களைச் சந்தித்தால் அவர்களுடைய தொழில், வருமானம், குடும்ப நலன், பெற்றோர் நலன் முதலிய செய்திகளைப் பற்றி அன்புடன் கேட்டறிவார்.

நான் கல்லூரிப் படிப்பை முடித்ததும் நானும் என் அருமைத் தந்தையார் உயர்திரு. காஞ்சி மணிமொழியார் அவர்களும் 1947இல் 'போர்வாள்' என்னும் வார இதழைத் தொடங்கி, இருவரும் அதன் இணை ஆசிரியர்களாக இருந்து நடத்தி வந்தோம். அக்காலத்தில் ஒரு நாள், சென்னை நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் சாலையில் அப் பெருமகனார் என்னைச் சந்திக்க நேர்ந்தது.

> உங்கள் 'போர்வாள்' இதழ், மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. அதில் நீங்கள் எழுதும் கட்டுரைகள் சுவையும் பயனும் மிகுந்தனவாக உள்ளன. கல்லூரியில் பயிலும் என் மாணவர்கள் பலர், அளவற்ற ஆர்வத்துடன் உங்கள் இதழைப் படிக்கிறார்கள். உங்கள் மாணவராமே அவர் என்று அவர்கள் என்னிடம் சொல்லிச் சொல்லிப் பெருமைப்படுகிறார்கள். அதைப் பார்த்து நான் பெருமைப்படுகிறேன்

என்று மட்டற்ற மகிழ்ச்சியுடன் அவர் அப்போது தெரிவித்தார். தம் பழைய மாணவர் களிடம் இருப்பதாக அவர் கருதிய சிறப்புகளை அடுக்கடுக்காக எடுத்துக்கூறி, மனமாரப் பாராட்டுவதில் அவருக்கு இருந்த ஆர்வத்தை, இந்த நிகழ்ச்சி நன்கினிது விளக்குகிறது.

பழைய மாணவர்களிடம் பேராசிரியர் இராசமாணிக்கனாருக்கு இருந்த அளவற்ற அன்பை மட்டுமல்ல, மட்டற்ற மதிப்பையும் எடுத்துக்காட்டவல்ல ஒரு நிகழ்ச்சியை இச்சமயத்தில் சுட்டிக்காட்டுவது, முற்றிலும் பொருத்தமாக இருக்கும்.

1961இல் பேராசிரியர் அவர்கள், சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையின் இணைப் பேராசிரியராகப் புகழ் மிக்க பணிபுரிந்து வந்தார். அதே ஆண்டில், சென்னை மாநகரில் சிறப்புடன் அமைந்து, இந்தியா எங்கணும் இருந்த தமிழ் எழுத்தாளர்களின் முன்னேற்றத்திற்காகச் சிறப்பு மிக்க பணிகளைப் புரிந்து வந்த தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் பொதுச்செயலாளராக நான் தொண்டாற்றி வந்தேன். தலைசிறந்த எழுத்து வேந்தர்களில் ஒருவராகிய கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்களால் தொடங்கப்பட்டு, இலக்கிய மேதை மீ.ப. சோமசுந்தரம், சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானம், குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா, பன்மொழிப் புலவர் க. அப்பாதுரை, பொதுவுடைமை எழுத்துச் சிற்பி ப. ஜீவானந்தம் முதலிய அறிஞர் பெருமக்களால் போற்றிப் பாராட்டி வளர்க்கப்பட்ட ஆற்றல் மிக்க அமைப்பு அது.

எழுத்தாளர் சங்கத்தின் பொதுச் செயலாளன் என்னும் முறையில் எழுத்தாளப் பெருமக்களின் இலக்கியப் பசிக்கு உணவு அளிப்பது என் கடமை அல்லவா? ஆகவே சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைக்குச் சென்று, பெரும்புலவர் இராச மாணிக்கனாரை நேரில் கண்டு, தமிழ் எழுத்தாளர் சங்கத்தில் ஓர் இலக்கியச் சொற் பொழிவை நிகழ்த்துமாறு வேண்டுகோள் விடுத்தேன். ஒரு வினாடி கூட முடியவில்லை. அப்பெருந்தகையாளர் என் வேண்டுகோளை உடனே ஏற்றுக் கொண்டுவிட்டார். "உடனே ஏற்றுக் கொண்டுவிட்டீர்களே, மிக்க நன்றி" என்றேன் நான். *"நன்றியா? எதற்கு? என் இதயத்தை ஈர்த்த இனிய மாணவன் அல்லவா நீ? நான் செய்ய வேண்டிய இலக்கியக் கடமையைச் செய்யத்தானே நீ அழைக்கிறாய்? இந்த அன்பழைப்பை எப்படி நான் மறுக்க முடியும்?"* இராசமாணிக்கனார் அளித்த இந்த மறுமொழி, பழைய மாணவர்கள் மீது அவர் எத்தகைய உயர்ந்த மதிப்பைக் கொண்டிருந்தார் என்பதை எழில்பட விளக்குகிறது.

சோதனைகளையும் வேதனைகளையும் சாதனைகளாக மாற்றிய வரலாறு

தொல்லைகளும் துயரங்களும் அணிஅணியாக அவருடைய வாழ்க்கையை முற்றுகையிட்டபோதிலும், உறுதிபடைத்த உள்ளத்துடன் அவற்றை எதிர்நிறுத்தித் தூள்தூளாக்கிய வல்லமை இராசமாணிக்கனாருடையது. தாசில்தார் எனப்படும் வட்டாட்

சியராகப் பணியாற்றிய புகழ்மிக்க தந்தையார், பத்தாவது வயதிலேயே இயற்கை எய்தியமை, அவருடைய வாழ்க்கையைத் தாக்கிய முதலாவது பேரிடி.

தந்தையார் மறைவிற்குப்பின் அவரை அன்புடன் ஆதரித்து வளர்த்து வந்த அவருடைய இனிய அண்ணன் இராமகிருட்டிணனாரும் அவருடைய அரசாங்க அலுவல் காரணமாக அடிக்கடி பல ஊர்களுக்கு மாற்றப்பட்ட காரணத்தால், தொடர்ந்து ஒரே ஊரில் ஒரே பள்ளியில் பயில்கிற வாய்ப்பு இராசமாணிக்கனாருக்குக் கிடைக்கவில்லை. தந்தையாரின் காலத்தைப் போலவே தமையனாரின் காலத்திலும் அவருடைய கல்விப் பயிற்சியில் இவ்வாறு அடிக்கடி தடைகள் ஏற்பட்டமை, அவருடைய வாழ்க்கையில் ஏற்பட்ட மற்றோர் இடையூறு.

அவருடைய தந்தையார், தமையனார் ஆகிய இருவருமே, சென்னை மாகாணத்தின் தெலுங்குப் பகுதிகளிலேயே பெரும்பாலும் பணியாற்றி வந்ததால், இராச மாணிக்கனாரின் தொடக்கக் கல்வி தெலுங்கு மொழியிலேயே அமைந்தது; தாய் மொழியாம் தமிழைப் பயிலும் வாய்ப்பு இராசமாணிக்கனாரின் இளமைப் பருவத்தில் அவருக்குக் கிடைக்காமல் போனமை, அவரால் தாண்ட வேண்டியிருந்த மற்றோர் இடையூறு.

அன்னையுடன் தங்கியே இராசமாணிக்கனார் தஞ்சையில் அமைந்த ஓர் உயர்நிலைப் பள்ளியில் (புனித பீட்டர் உயர்நிலைப் பள்ளி) ஆறாவது வகுப்பு முதல் எஸ்.எஸ்.எல்.சி. எனப்படும் பள்ளி இறுதி வகுப்பு வரை தொடர்ந்து படிக்க முடிந்தது. இப்படியெல்லாம் அவருடைய இளமைப் பருவத்தில் அவருடைய வாழ்க்கையைத் தாக்கிய வேதனைகளையும் சோதனைகளையும் மன உறுதியுடன் தாக்கித் தகர்த்த பின்னரே, அப்பெருமகனார் வடசென்னைத் தியாகராயர் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றத் தொடங்கினார். அதுமுதல் அவருடைய வாழ்க்கை, அனைவருக்கும் நலம் விளைக்கும் அரியதோர் ஆறுபோல எழிலோடும் ஏற்றத்தோடும் நடைபோடத் தொடங்கியது.

நல்லாசிரியப் பணியில் நாற்பது ஆண்டுகள்

1928இல் தன் 21ஆம் வயதில் வடசென்னைத் தியாகராயர் பள்ளியில் தன் ஆசிரியப் பணியைத் தொடங்கிய அருந்தமிழ் அண்ணல் இராசமாணிக்கனார், 1936 வரை அந்தக் கல்வி நிலையத்தில் தொடர்ந்து தொண்டாற்றினார்.

1936 முதல் 1947 வரை சென்னை முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் பெருமையும் புகழும் பொலிந்த தமிழாசிரியராகவும்,

1947 முதல் 1953 வரை சென்னை விவேகாநந்தர் கல்லூரியின் தமிழ்த்துறையில் பண்பும் பயனும் செறிந்த துணைப் பேராசிரியராகவும்,

1953 முதல் 1959 வரை மதுரைத் தியாகராசர் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவர் மற்றும் பேராசிரியராகவும்,

1959 முதல் 1967இல் இயற்கை எய்திய நாள் வரை, சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையில் இணைப் பேராசிரியர் என்னும் ஏற்றம் மிக்க பொறுப்பினராகவும் என் ஆசிரியப் பெருமகனார், நற்றமிழை நன்கினிது வளர்க்கும் நல்லாசிரியப் பணியை ஆற்றிவந்தார்.

இவ்வாறாக அறிஞர் பெருந்தகை இராசமாணிக்கனார், ஏறத்தாழ நாற்பது ஆண்டுகள், நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகம் முதலிய பலவகைப்பட்ட கல்வி நிறுவனங்களில் ஆசிரியராகத் திகழ்ந்து, ஆயிரக்கணக்கான

மாணவ மணிகளின் உள்ளங்களைக் கவர்ந்த உயர்பெருஞ் சிறப்புக்கு உரியவராக விளங்கினார். மாணவர்களின் முன்னேற்றத்திற்காக ஓயாமல் பாடுபட்டுவந்த அதே சமயத்தில், தன் ஓய்வு நேரத்தை முழுமையாகப் பயன்படுத்தி அரும்பாடுபட்டுப் படித்தும் ஆராய்ச்சிகள் செய்தும் வித்துவான், பி.ஓ.எல்., எம்.ஓ.எல்., எல்.டி., பிஎச். டி. முதலிய பல்வேறு பட்டங்களைத் தம் பெயரோடு இணைத்துக் கொண்டார்.

அசைவிலா ஊக்கம் - அயர்விலா உழைப்பு

ஆசிரியப் பணி புரிதல், பல்வேறு பட்டங்களைப் பெறுவதற்காக ஓய்வு ஒழிவின்றிப் படித்தல் ஆகிய இரு பணிகளுமே மாபெரும் பணிகள்; ஒருவருடைய அயராத உழைப்பை ஓயாமல் பயன்படுத்தக்கூடிய பணிகள். ஆனால் இடைவிடாத உழைப்பில் இணையில்லாத இன்பத்தைக் காணும் இயல்புடைய மாணிக்கப் பேராசிரியரோ, இந்த இருபெரும் பணிகளை ஆற்றிவந்த அதே நேரத்தில், முதல் வகுப்பு முதல் பதினோராம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்குப் பயன்படத்தக்க ஏராளமான பாட நூல்களை எழுதினார். பல்லவர் வரலாறு, சோழர் வரலாறு, தமிழக வரலாறு, தமிழ்நாட்டு வட எல்லை, இருபதாம் நூற்றாண்டில் தமிழ் உரைநடை வளர்ச்சி, பத்துப்பாட்டு ஆராய்ச்சி, பெரியபுராண ஆராய்ச்சி முதலிய ஆராய்ச்சி நூல்களை இயற்றி வெளியிட்டார். ஹர்ஷவர்த்தனன், பண்டித நேரு, மறைமலை அடிகள், சேக்கிழார், அயல்நாட்டு அறிஞர் அறுவர், துருக்கியின் தந்தை முதலிய வாழ்க்கை வரலாற்று நூல்களையும் அவருடைய எழுதுகோல் தமிழ்நாட்டிற்கு அளித்தது.

1941இல் இவரால் படைக்கப்பட்ட மொஹஞ்சொதரோ அல்லது சிந்துவெளி நாகரிகம் என்பது, அற்புதமான ஓர் ஆராய்ச்சி நூல்; தமிழர் நாகரிகத்தின் தொன்மையையும் வன்மையையும் எழிலுடன் விளக்கும் பயன் பொதிந்த நூல். தமிழரசி, நாட்டுக்கு நல்லவை முதலிய புதினங்களை மட்டுமல்ல; சிறுவர்களுக்குப் பயன்படத்தக்க ஏராளமான சிறுகதை நூல்களையும் சிறுவர் பாடல்கள், குழந்தைப் பாடல்கள் முதலிய எழுத்தோவியங்களையும் உருவாக்கியுள்ளார் அப்பெருமகனார்.

அருமையும் பெருமையும் வாய்ந்த பல்வேறு நூல்களை அடுத்தடுத்து எழுதி, தமிழ் மக்களின் சிந்தனைக்கு விருந்து படைத்ததோடு நிற்கவில்லை அந்தத் தமிழ் அறிஞர். ஓய்வு கிடைத்தபோதெல்லாம் அரிக்கமேடு என்று அழைக்கப்படும் அருகன்மேடு முதலிய அகழ்வாராய்ச்சி இடங்களுக்கு நேரில் சென்று உண்மைகளைக் கண்டறிதல், பல்வேறு ஊர்களில் விளங்கும் வரலாற்றுப் புகழ் மிக்க கோயில்களுக்குச் சென்று, அங்குள்ள கல்வெட்டுகளை ஆராய்ந்து, தமிழக வரலாற்றிற்கு ஒளி சேர்த்தல், பல ஊர்களில் உள்ள பல்வேறு மன்றங்களில் அவ்வப்போது இலக்கியச் சொற்பொழிவுகள் நிகழ்த்தல் முதலிய துறைகளிலும் அவருடைய தமிழ்த் தொண்டும் சமுதாயத் தொண்டும் விரிந்து படர்ந்தன.

பல துறைகளையும் பல வகைகளையும் கொண்ட இத்தனைப் பணிகளையும் இவர் ஒருவரால் எப்படி நடத்தி முடிக்க முடிந்தது என்பதை எண்ணிப்பார்த்தால், வியப்பும் திகைப்பும் நம் உள்ளங்களில் ஓங்கி உயர்வது இயற்கை.

பாவேந்தர் பாரதிதாசனின் பைந்தமிழ்ப் பொன்மொழி

பல ஆண்டுகளுக்கு முன்னர் பாவேந்தர் பாரதிதாசனால் இயற்றப்பட்ட 'குடும்ப விளக்கு' என்னும் ஆற்றல் மிக்க கவிதை நூல், முல்லைப் பதிப்பகம் என்னும் நிறுவனத்தால் வெளியிடப்பட்டபோது, பாரதிதாசனார் அந்நூலுக்கு ஒரு முன்னுரை எழுதியிருந்தார். அம் முன்னுரையில் அப்பாவலர் பெருமான், 'நல்ல குடும்பம் ஒரு பல்கலைக்கழகம்' என்னும் அமுத மொழியை அளித்திருந்தார். பாவேந்தரின் இந்தப் பொன்மொழிக்கு, நூற்றுக்கு நூறும் பொருத்தமான ஒரு குடும்பத்தை எடுத்துக்காட்ட வேண்டுமானால், அது பேராசிரியர் இராசமாணிக்கனாரின் குடும்பமாகத்தான் இருக்க முடியும்.

சில அறிஞர் பெருமக்கள், தலைசிறந்த சாதனைகளைச் செய்து, சமுதாயத்தில் மட்டற்ற பெருமையும் புகழும் பெற்று விளங்குவர். ஆனால் அவர்களுடைய குடும்ப உறுப்பினர்களிடையே பூசலும் பிணக்கும் பெருகி நிற்கும். அவர்களுடைய பிள்ளைகளும் பெண்களும், கல்வியில் சிறந்து விளங்கி, உயர்ந்த பட்டங்கள் பெற்றுப் பெருமையுடன் வாழாமல், அந்தோ பரிதாபம் என்று வேதனையுடன் சொல்லத்தக்க இழிந்த நிலையில் கிடந்து தவிப்பர். ஆனால் டாக்டர் இராசமாணிக்கனாரின் குடும்ப உறுப்பினர்களோ, அப்பெருமகனார் எந்த அளவுக்குக் கல்வியில் சிறந்து, பட்டங்களில் உயர்ந்து, வாழ்க்கையில் வெற்றி முரசு கொட்டிப் பெரும் புகழுடன் விளங்கினாரோ, அதே அளவு, கல்வியில் சிறந்து, உயர் பட்டங்களில் நிறைந்து, வெற்றிச் சிறப்புடன், செம்மையும் செழிப்பும் மிக்க வாழ்க்கையை நடத்திவந்தனர்; வருகின்றனர்.

அறிஞர் இராசமாணிக்கனார் ஈட்டிக் குவித்த ஏராளமான வெற்றிகளுக்குப் பின்புலமாகவும் அடித்தளமாகவும் அமைந்தவர், அவருடைய வாழ்க்கைத் துணைவியார் திருமதி கண்ணம்மாள் அவர்களே ஆவார். குடும்பப் பொறுப்பின் சுமை முழுவதையும் அவர் ஒருவரே தாங்கிக் கொண்டு, அதன் நிழல்கூட இராசமாணிக்கனார்மீது படாமல் பார்த்துக் கொண்டார். இவ்வாறு குடும்பப் பொறுப்பு முழுவதையும் தியாக உணர்வுடன் தம் அருமைத் துணைவியாரே ஏற்றுக்கொண்ட காரணத்தால்தான் இராச மாணிக்கனார், தம் கவனம் முழுவதையும் - ஆற்றல் அவ்வளவையும் தம் ஆசிரியப் பணி, ஆராய்ச்சிப் பணி, எழுத்துப் பணி, இலக்கியப் பணி ஆகியவற்றில் செலுத்தமுடிந்தது; செலுத்தியதால் வெற்றிமேல் வெற்றிகளை அணிஅணியாக ஈட்ட முடிந்தது. ஏராளமான வேலைகளுக்கு இடையே, இராசமாணிக்கனார், எவ்வாறோ சிறிது ஓய்வு நேரத்தை உருவாக்கிக்கொண்டு, தம் துணைவியாருக்குத் தமிழ் இலக்கியங்களில் பயிற்சி அளித்து, அன்னார் வித்துவான் பட்டம் பெறுவதற்கு உறுதுணை புரிந்திருக்கிறார். இது இராசமாணிக்கனாரின் வாழ்க்கை வரலாற்றில் சிறப்பிடம் பெறத்தக்க ஒரு செய்தி அல்லவா?

டாக்டர் இராசமாணிக்கனார் - வித்துவான் கண்ணம்மாள் தம்பதிகளுக்கு ஆண் மக்கள் நால்வரும் பெண் மக்கள் நால்வரும் வழித்தோன்றல்களாகப் பிறந்தனர். இந்த எட்டுப் பேருமே, கல்விச் சிறப்பிலும் பட்டங்களைப் பெறுவதிலும் செம்மையான வாழ்க்கையை அமைத்துக் கொள்வதிலும் போற்றிப் பாராட்டத்தக்க உயர்நிலையைப் பெற்று விளங்கினர்; விளங்குகின்றனர். ஆண் மக்களைப் போலவே பெண் மக்களும் உயர்நிலைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் ஆசிரியப் பெருமக்களாகவும் பேராசிரியர்களாகவும் துறைத் தலைவர்களாகவும் பணிபுரிந்து பெரும்புகழ் பெற்றனர். ‘ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வம் இந்த நாட்டிலே’ என்று வாயளவில் பாடிவிட்டு, நடைமுறையில் தங்கள் ஆண்பிள்ளைகளுக்கு மட்டும் உயர்கல்வி அளித்துவிட்டு, பெண் மக்களைப் புறக்கணிப்பவர் பலர் உண்டு. ஆனால் என் அருமை ஆசிரியர் இராசமாணிக்கனாரோ, சொல்வதையே செய்பவர்; செய்வதையே சொல்பவர். எனவே அவருடைய ஆண் பிள்ளைகளைப் போலவே பெண் மக்களும் தலைசிறந்த கல்வியாளர்களாக விளங்குமாறு அவர் செய்துள்ளார். இத்தகைய ஒரு குடும்பத்தை, பாவலர் பாரதிதாசனின் பொன்மொழியைப் பின்பற்றி, ஒரு சிறந்த பல்கலைக்கழகம் என்று பாராட்டி மகிழ்வது, நம் தலைசிறந்த கடமை அல்லவா?

வாழ்க்கைக்கு வழிவகுத்த வித்தகர்

1936 - 37 என்னும் கல்வி ஆண்டில் சென்னை முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் நான் பயின்று கொண்டிருந்தபோது என் வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டது. அந்த மறுமலர்ச்சியை உருவாக்கிய மாண்புடைய பணியில் பெரும்பங்கு, அந்த ஆண்டில் என் வகுப்பிற்குத் தமிழ் ஆசிரியராக விளங்கிய டாக்டர் இராசமாணிக்கனார் அவர்களையே சேரும்.

அந்த வகுப்பில் சேர்ந்து அந்த அருந்தமிழ் அண்ணலிடம் பயில்வதற்கு முன்னர், ‘பள்ளிக்கூடமே உலகம் - வகுப்பறையே வாழ்க்கை - பாடங்களைப் பயில்வது மட்டுமே புனிதமான தொண்டு - உயர்ந்த மதிப்பெண்களைப் பெறுவது மட்டுமே சிறந்த குறிக்கோள்’ என்று ஒரு குறுகிய வட்டத்திற்குள் என் வாழ்க்கைச் சக்கரத்தை ஓட்டி வந்தவன் நான்.

அப்பேராசிரியப் பெருந்தகையின் அருமையான வழிகாட்டுதல் எனக்குக் கிடைத்த பின்னர்தான், பள்ளிக்கூடத்தின் நான்கு சுவர்களுக்கு அப்பாலும் ஓர் உலகம் இருக்கிறது - அது மிகப் பெரிய உலகம் - தமிழர் சமுதாயம் என்னும் பெயர் படைத்த உலகம் - என்னும் உண்மைகளை நான் முதன்முதலாக அறிந்துகொண்டேன். அந்த உலகத்தில் காணப்படும் பல்வேறு சீர்கேடுகளை அகற்றி, அந்த உலகத்திற்குப் புதியதோர் வலிவையும் பொலிவையும் உருவாக்குவதற்கு என்னால் இயன்ற தொண்டுகளை ஆற்ற வேண்டியது என் தலையாய கடமை என்பதையும் புரிந்து கொண்டேன்.

பன்னிரண்டு வயது என்கிற சின்னஞ்சிறு பருவத்திற்கு உரியவனாக நான் இருந்த நாட்களில் என் வாழ்க்கையில் ஏற்பட்ட இந்த மாபெரும் மறுமலர்ச்சியே என் பிற்கால வாழ்க்கை முழுவதற்கும் உரிய அடிப்படையை அமைத்துக் கொடுத்தது. அத்தகைய இலட்சியப் பாதையில் நான் வீறுநடை போட்டு வெற்றிப் பயணம் செய்வதற்கு எனக்கு முதல் அடியை எடுத்துக் கொடுத்தவர், என் ஆசிரியப் பெருமகனார் டாக்டர் இராசமாணிக்கம் அவர்கள்தான். இந்த உண்மையை எண்ணும்போதெல்லாம் என் உள்ளத்தில் மட்டற்ற மகிழ்ச்சி பெருகுகிறது; அன்னார் மீது அளவற்ற மதிப்பு வளர்கிறது.

ஆசிரியர் இராசமாணிக்கனார் மட்டும் அல்லாமல் அவருடைய குடும்ப உறுப்பினர்கள் அனைவருமே என்னிடம் எல்லையற்ற பாசமும் நேசமும் கொண்டுள்ளனர். அது போலவே நானும் அவர்கள் அனைவரிடமும் நாளுக்கு நாள் வளர்ந்து பெருகும் அன்பும் மதிப்பும் கொண்டிருக்கிறேன். அவர்களை நானோ, என்னை அவர்களோ, என்றென்றும் மறக்க முடியாத ஓர் அன்புப் பிணைப்பு எங்களிடம் ஏற்பட்டு நிலைத்திருப்பது, என் வாழ்க்கையில் எனக்குக் கிடைத்துள்ள கிடைத்தற்கரிய பேறுகளில் ஒன்று.

வாழ்க டாக்டர் இராசமாணிக்கனாரின் திருப்பெயர்!வளர்க அவருடைய குடும்பத்தாரின் இனிய புகழ்!

❖ ❖ ❖

பேராசிரியர் மா. இராசமாணிக்கனார் சில நினைவுகள்

அ. பாண்டுரங்கன்

பேராசிரியர் மா. இராசமாணிக்கனாரைப் பற்றி உயர்நிலைப் பள்ளியில் பயிலும்போதே (1950 - 54) அறிந்திருந்தேன். நான் மதுரைக் கல்லூரியில் பயின்ற காலத்தில் (1954 - 1958), பேராசிரியர் அவர்கள் மதுரைத் தியாகராசர் கல்லூரியில் பேராசிரியராகப் பணி யாற்றினார். அப்போது அருள்மிகு மீனாட்சி அம்மன் ஆலயத்தில் வடக்கு ஆடி வீதியில் அமைந்திருந்த திருவள்ளுவர் கழகத்தில் ஒவ்வொரு வாரமும் திருக்குறள் சொற்பொழிவு நடைபெறும். வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம் பேராசிரியரின் பேச்சைக் கேட்டு மகிழ்ந்துள்ளேன்.

மா. இராசமாணிக்கனாரின் பேச்சு நடை, தெள்ளிய நீரோடை போல் இருக்கும். பல தமிழ்ப் பேராசிரியர்களைப் போன்று, அவர் எதுகை மோனைகளையும் அடுக்குத் தொடர்களையும் பயன்படுத்திப் பேசவில்லை. அவருடைய பேச்சு, அறிவுப்பூர்வமானதாக - காரண காரியத் தொடர்போடு அமைந்திருந்தது; கேட்போர் உள்ளத்தில் அப்படியே பதிந்துவிடும் பாங்கில் அவருடைய பேச்சு இருக்கும்.

இராசமாணிக்கம் எழுதிய நூல்கள் அனைத்தும் கல்வி வளர்ச்சிக்குப் பாடுபடும் சென்னைப் பகுதியிலுள்ள முன்னணித் தமிழ் நூலாசிரியர்களுள் அவருக்கு ஒரு நிலையான இடத்தைப் பெற்றுத் தந்துள்ளன.

ஹீராஸ் பாதிரியார்

சென்னை மாநிலக் கல்லூரியில் 1958 - 60இல் தமிழ் எம். ஏ. பயின்றேன். அக்காலத்தில் பேராசிரியருடைய அண்ணன் மகன் இராம. சண்முகம் எம். லிட். பட்டத்திற்காக மாநிலக் கல்லூரியில் ஆய்வு செய்து கொண்டிருந்தார். அவரோடு அறிமுகம் இருந்ததால், அவருடைய திருமணத்துக்கு அண்ணாமலைப் பல்கலைக்கழகம் சென்றேன். இராம. சண்முகம் பேராசிரியர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனாரின் மகளைத் திருமணம் செய்து கொண்டார். இத் திருமணத்துக்காக மாநிலக் கல்லூரித் தமிழ்த்துறை ஆசிரியர் களோடு ரயிலில் சென்னையிலிருந்து நான் பயணம் செய்தேன். அப்போது மணமகன் இல்லத்தார் சார்பாகப் பேராசிரியர் மா. இராச மாணிக்கனார் தம் குடும்பத்தோடு பயணம் செய்ததாக நினைவு. மணமகன் சார்பில் திருமணத்துக்கு வந்திருந்த அனைவருக்கும் பல்கலைக்கழக விடுதியில் அறைகள் ஒதுக்கப்பட்டன. திருமணம் தமிழ்த் திருமணமாக நடத்தப்பட்டது. தமிழ்த் திருமுறைகளிலிருந்து பாடல்கள் ஓதப்பட்டுத் தமிழ் மந்திரங்கள் முழங்கத் திருமணம் இனிதே நிகழ்ந்தது. பேராசிரியர் அவர்களின் தமிழ்ப் பற்றையும் சீர்திருத்தங்களைச் செயல்படுத்தும் மன உறுதிப்பாட்டையும் அப்போது நேரில் கண்டேன்.

1961ஆம் ஆண்டு புதுச்சேரி, தாகூர் கலைக்கல்லூரியில் பணியில் சேர்ந்தேன். அப்போது பேராசிரியர் அவர்கள் சென்னைப் பல்கலைக்கழகத்தில் இணைப் பேராசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். தமிழ்த்துறைத் தலைவராகப் பேராசிரியர் மு. வரதராசனார் அவர்கள் பணியாற்றினார்கள்.

பேராசிரியர் மா. இராசமாணிக்கனார் அவர்களுக்குப் புதுச்சேரியில் நல்ல அறிமுகம் இருந்தது. குறிப்பாக, பிரஞ்சு அரசாங்க நீதிமன்றத்தில் தலைமை மொழிபெயர்ப்பாளராகவும் பின்னர், புதுச்சேரி இந்தியாவுடன் இணைக்கப்பட்ட போது பிரஞ்சுக்காரர்களால் உருவாக்கப்பட்ட பிரஞ்சு ஆய்வு நிறுவனத்தில் தமிழ் மொழிப் பகுதியில் தலைமை ஆய்வாளராகவும் இருந்தவரும் பல நூல்களை எழுதியவருமான இரா. தேசிகம் பிள்ளையோடு பேராசிரியர் மா. இராசமாணிக்கனார் அவர்களுக்கு நெருங்கிய தொடர்பு இருந்தது.

பேராசிரியர் அவர்கள் பல்லவர் வரலாறு என்னும் ஆய்வு நூலை எழுதிக் கொண்டிருந்த காலத்தில், பல்லவர்களோடு தொடர்புடைய புதுவைப் பகுதிகளுக்குப் பேராசிரியரை இரா. தேசிகம் பிள்ளை அழைத்துச் சென்று சிற்பங்களையும் கல்வெட்டுகளையும் காணச் செய்து உதவினார் என்பது பல்லவர் வரலாறு என்னும் நூலில் பதிவாகியுள்ளது. நான் புதுவையில் பணியில் அமர்ந்த காலத்திலிருந்தே இரா. தேசிகம் பிள்ளையோடு எனக்குத் தொடர்பு இருந்ததால் தேசிகம் பிள்ளை எனக்கு இதனைத் தெரிவித்துள்ளார். ஓர் ஆராய்ச்சியாளன் எப்படி ஆராய வேண்டும் என்பதனைப் பேராசிரியர் நமக்கு உணர்த்துகின்றார். பல்லவர்களோடு தொடர்புடைய ஊர்களுக்குச் சென்று களப்பணி மேற்கொண்ட பிறகே, தம் ஆய்வு நூலை அவர் எழுதினார் என்பது இன்றைய நிலையில் எத்தனை பெரிய செயல்! எதனையும் போய்ப் பார்க்காமல் - மூல நூல்களைப் பயிலாமல் தனக்குக் கிடைக்கின்ற இரண்டாம் தரச் செய்திகளை வைத்துக்கொண்டே ஆராய்ச்சிப் பந்தல் போடுவோரிடமிருந்து பேராசிரியர் மா. இராசமாணிக்கனார் எவ்வளவு விலகி நின்றுள்ளார்; உண்மைகளைக் கண்டறிந்து காட்ட முயன்றுள்ளார்; எண்ணிப் பார்க்க வேண்டிய ஒன்று.

இரா. தேசிகம் பிள்ளையைத் தவிர, வேறு பல ஆசிரியர்களும் பேராசிரியர் இராசமாணிக்கனாரோடு நெருங்கிய தொடர்புவைத்துக் கொண்டிருந்தனர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் உப்புட்டூர் வேணுகோபாலச் செட்டியாரின் இரண்டாவது மகன் உ.வே. பாலு ஆவார். இவர் ஒரு பள்ளி ஆசிரியர்; பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கைகளில் ஈடுபட்டுப் பெரும் எதிர்ப்புக்கிடையில் கலப்புத் திருமணம் செய்து கொண்டவர். மேலும், இவர் பாவேந்தர் பாரதிதாசன் திரைப்படம் எடுப்பதற்குச் சென்னை சென்றபோது அப்படக் கம்பெனிக்குப் பண முதலீடு செய்தவர்களில் ஒருவர். பாரதிதாசனாருடன் அப்படக்கம்பெனி நின்றுவிட்டதுவரை உடனிருந்தவர். அவர் என்னுடைய நெருங்கிய நண்பர். அவரும் வேறு சில தமிழாசிரியர்களும் இணைந்து புதுவையில் 'தமிழாசிரியர் சங்கம்' என ஒரு சங்கத்தை நிறுவினர். மறைந்த தமிழ்ப் புலவர் சுந்தர சண்முகனார் அத்தமிழாசிரியர் சங்கத்தின் தலைவராக இருந்தார்.

புதுவைத் தமிழாசிரியர் சங்க நிகழ்ச்சிகளுக்காகவும் வேறு பல நிகழ்ச்சிகளுக் காகவும் பேராசிரியர் அவர்கள் புதுவைக்கு வரும்போதெல்லாம், ஆசிரிய நண்பர் உ. வே. பாலுவுக்குத் தெரிவித்துவிடுவார். பேராசிரியர் அவர்கள் புதுவையில் இறங்கியது முதல் அவர்கள் மீண்டும் சென்னை திரும்பும் வரை அவருடன் நண்பர் உ. வே. பாலுவும் நானும் இருப்போம். பல பொருள்கள் குறித்து அவர் பேசுவார். அவருடைய பேச்சில் பல சமயங்களில் வாய்விட்டுச் சிரிக்கும் அளவுக்கு நகைச்சுவை ஒளிரும். அக்காலகட்டத்தில் நான் அவரோடு நெருங்கிப் பழகினேன்.

இராசமாணிக்கனாருடைய நூல்களை விரும்பிப் படித்தேன்; தமிழ் இலக்கியம் பற்றிய அவருடைய வரலாற்றுச் சிந்தனைகள் என் அடிமனத்தில் ஆழமாகப் பதிந்தன. சிறப்பாகச் சொல்வதென்றால், 'சிறுபாணன் சென்ற பெருவழி' என்னும் ஆய்வுக் கட்டுரையினை, சேவியர் தனிநாயகம் நடத்திக் கொண்டிருந்த Tamil Culture என்னும் ஆய்விதழில் வெளியிட்டிருந்தார். அக்கட்டுரையைப் படித்ததும் எனக்கு ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டது. சிறுபாணன், தற்போது 'எடக்கா நாடு' என்று வழங்குகின்ற இடைக்கழி நாட்டிலுள்ள எயில் பட்டினத்தில் (தற்போது மரக்காணம்) தன் பயணத்தைத் தொடங்கி, வேலூர் (இன்று உப்பு வேலூர்), ஆமூர் (இன்று நல்லாமூர்) வழியாகப் பயணம் செய்து நல்லியக்கோடனின் தலைநகரான கிடங்கிலை (தற்போதுள்ள திண்டிவனத்தில் பழைய பேருந்து நிலையப் பகுதி) அடைகின்றான். பேராசிரியரின் இவ்வாராய்ச்சிக் கட்டுரை தென்னார்க்காடு மாவட்டப் பள்ளி ஆசிரியர்களிடையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. திண்டிவனத்தில் நல்லியக்கோடனுக்காக ஆண்டு தோறும் விழா எடுக்கப்பட்டு வருவது இக்கட்டுரையின் விளைவே ஆகும். மாணவர் களுக்கு நான் சிறுபாணாற்றுப்படையைப் பாடமாகக் கற்பித்தபோது எயில் பட்டி னத்துக்குச் சென்று அதன் உப்பு வளத்தையும் அதன் அருகிலுள்ள கழிமுகத்தையும் பார்த்து மகிழ்ந்தேன். இன்றும் மரக்காணம் - சூனாம்பேடு வழியாகச் சென்னைக்குப் பயணம் செய்யும்போது பேராசிரியர் அவர்களின் வரைபடம் என் நினைவில் நிழலாடும்.

அக்காலத்தில் புகுமுக வகுப்புக்கும் பட்ட வகுப்புக்கும் தமிழ்ப் பாடநூல்களைச் சென்னைப் பல்கலைக்கழகமே வெளியிட்டது. அப்பாடநூல்கள் தனியார்களுக்கு விற்கப்படவில்லை. ஒவ்வொரு கல்லூரியும் அக்கல்லூரிக்கு எத்தனை படிகள் வேண்டும் என்று கல்லூரி முதல்வர் மூலமாக ஒரு விண்ணப்பத்தைக் கொடுத்து, நூல்களுக்குரிய பணத்தை வங்கியில் செலுத்திவிட்டு விற்பனைப் பிரிவுக்குச் சென்றால் அவர்கள் நூலின் படிகளைக் கொடுப்பர். கட்டாகக் கட்டி எடுத்துச் செல்வதெல்லாம் வாங்குவோரின் கடமை. விற்பனைப் பிரிவு, நூல்களை வாங்குவோரிடம் ஒப்படைப்பதோடு சரி.

புதுவைத் தாகூர் கலைக் கல்லூரியில் தமிழ்ப் பயிற்சி ஆசிரியராகவும் துணை விரிவுரையாளராகவும் பணியாற்றிய என்னையே எங்கள் கல்லூரி முதல்வர் பேராசிரியர் T. பாலகிருஷ்ணன் நாயர் அனுப்பி வைப்பார். நான் மாநிலக் கல்லூரியில் தமிழ் எம். ஏ. பயின்றவன் என்பதாலும் எம். ஏ. தேர்வில் பல்கலைக் கழகத்தில் முதல் மாணவனாகத் தேர்ச்சி பெற்றுப் பொற்பதக்கங்கள் பெற்றவன் என்பதாலும் அவர் என்னையே, தாம் முதல்வராக இருந்தவரை (1965), சென்னைப் பல்கலைக்கழகத்துக்கு அனுப்பி வந்தார். அப்போது கற்றலிலும் கற்பித்தலிலும் பொழுது போக்கிய எனக்குப் பல்கலைக்கழகத்தின் விற்பனை நடைமுறைகள் பற்றி ஒன்றும் தெரியாது. எனவே, நான் கல்லூரிக்குப் பாடநூல் வாங்குவதற்காக முதன்முறையாகச் சென்னைக்குச் சென்றபொழுது, பேராசிரியரை முதன்முதலில் சந்தித்தேன். அவரைச் சந்திக்கும்படி இரா. தேசிகம் பிள்ளையும் ஆசிரிய நண்பர் உ. வே. பாலுவும் அறிவுறுத்தினர். அவர்கள் என்னிடம் அறிமுகக் கடிதம் ஏதேனும் கொடுத்தனுப்பினார்களா என்பது நினைவில் இல்லை.

இருந்தாலும், என்னைப் பற்றி அறிமுகம் செய்துகொண்டு சென்னை வந்ததன் நோக்கத்தை எடுத்துக் கூறினேன். பேராசிரியர் அவர்கள் அன்புடன் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்துவிட்டு, முதலில் கேட்ட கேள்வி, "சாப்பிட்டு விட்டாயா?" என்பதுதான். நான் சாப்பிடவில்லைதான். மாநிலக் கல்லூரியில் நான் பயின்றவன் ஆகையால், பல்கலைக்கழகத்தில் உணவு விடுதி ஒன்று உள்ளது என்பதனை அறிவேன். எனவே, "ஐயா! நான் சிற்றுண்டி விடுதிக்குச் சென்று சாப்பிட்டுக் கொள்கிறேன்" என்று பணிவுடனும் விநயத்துடனும் பதிலளித்தேன். ஆனால், பேராசிரியர் அவர்கள் என்னை உணவு விடுதிக்குச் செல்ல அனுமதிக்கவில்லை. துறையிலிருந்து அவருடைய பணியாளர் மூலம் சிற்றுண்டி வாங்கிவரச் செய்து சாப்பிடவைத்தார். பின்னர்த் தம் பணியாளரை

என்னுடன் வங்கிக்கும் விற்பனைப் பிரிவுக்கும் அனுப்பிப் பணம் கட்ட வைத்து நூல்களை வாங்கிக் கட்டாகக் கட்டித் தம் அறைக்கு எடுத்து வரச் செய்தார். மதிய உணவையும் அவரே வாங்கிக் கொடுத்தார். சாப்பிட்டு முடித்து ஓய்வெடுத்த பிறகு, பணியாளர் மூலம் வண்டியை (ரிக்ஷா) வரவழைத்து அதில் நூல்களை ஏற்றிவைக்கச் செய்து என்னை வழியனுப்பி வைத்தார். இப்படி ஓராண்டு அல்ல; ஐந்து ஆண்டுகள் தொடர்ந்து நடைபெற்றது. அப்போதெல்லாம் எனக்கு ஔவையாரின் "ஒரு நாட் செல்லலம்" எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலே நினைவுக்கு வரும். பல நாள் பழகிப் பலரோடு சென்றாலும் முதல் நாள் காட்டிய அதே அன்பை - ஆர்வத்தை - விருப்பத்தைப் பேராசிரியர் இறுதிவரை காட்டிவந்தார்.

புதுவைக்கு அவர் வரும்போதெல்லாம் அவருடன் பல பொருள்கள் பற்றி நாங்கள் பேசி மகிழ்வோம். கடைத் தெருக்களுக்கு அவருடன் செல்வோம். வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்கள் பற்றி அவர் எடுத்துரைப்பார். அவருடன் பேசும்போது அவருடைய பரந்துபட்ட அனுபவ அறிவை உணர்ந்து நாங்கள் வியந்துள்ளோம். நண்பர்களில் சிலர் அவ்வப்போது தம் அலுவலகங்களிலுள்ள கெடுபிடிகள் - தலைமை ஆசிரியர்களின் பொல்லாங்கு ஆகியவற்றை விண்டுவிண்டு உரைப்பர்; சினம்கொண்டு பேசுவர். பேராசிரியர், எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு, எல்லோருடனும் ஒத்துப் போகும்படி எங்களுக்கு அறிவுரை கூறுவார். அதுதான் உலக நடை, ஒப்புரவு என்பார்.

ஒருமுறை புதுவைத் தமிழாசிரியர் சங்கத்தில் கூட்டம் நடைபெற்றது. அக் கூட்டத்தில் தமிழாசிரியர்கள் ஓய்வு பெற்றவுடன் வறுமையில் வாடுவதும் அவர்கள் எதிர் பாராதவாறு ஓய்வு பெறுவதற்கு முன்பே இறந்துவிட்டால் அவர்கள் குடும்பம் நடுத் தெருவில் நிற்பதும் பற்றிய பேச்சுகள் எழுந்தன. பேராசிரியர் அதற்கு ஓர் அருமையான தீர்வைச் சொன்னார்.

தமிழ்நாட்டில் உள்ள தமிழாசிரியர்கள் அனைவரும் தம் மாத ஊதியத்திலிருந்து ஒரு ரூபாயை ஒதுக்கி ஓர் தலைமை அமைப்பு ஒன்றிடம் அதனை ஒப்புவித்து வந்தால், ஓர் ஆசிரியர் திடீரெனக் காலமாகிவிட்டாலோ அல்லது பணிமூப்பு எய்திவிட்டாலோ அந்த நிதியத்திலிருந்து உடனடியாக அக்குடும்பத்துக்கு உதவ முடியும் என்றார். ஆனால், தமிழாசிரியர்களிடையில் ஒற்றுமை இன்மையால் பேராசிரியரின் உயர்ந்த திட்டம் கனவாகவே போய்விட்டது.

பட்ட மேற்படிப்பை முடித்தவுடன் ஆய்வு செய்ய எண்ணினேன். அப்பொழுது வாய்ப்புகள் உருவாகவில்லை. பேராசிரியர் மு. வரதராசனார் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவராகப் பதவி ஏற்ற பிறகு எம். லிட், பிஎச். டி ஆய்வுகளுக்கு வழி திறக்கப்பட்டது. நான் அதனைப் பயன்படுத்தி ஆய்வு செய்ய விரும்பினேன். அதனை நான் பேராசிரியரிடம் தெரிவித்தபோது அவரும் என்னை ஊக்குவித்தார்.

1966ஆம் ஆண்டு முனைவர் பட்ட ஆய்வுக்குச் சென்னைப் பல்கலைக்கழகத்தில் பதிவு செய்துகொள்ள முடிவுசெய்து பேராசிரியருடன் தொடர்புகொண்டு பேசிவிட்டு நானும் இரா. தேசிகம் பிள்ளையும் சென்னைக்குச் சென்று பேராசிரியரை அவருடைய இல்லத்தில் சந்தித்தோம். தானே மேற்பார்வையாளராக இருந்து ஆய்வை வழி நடத்துவதாகவும் அவர் உறுதியளித்தார். எங்களைத் தம் இல்லத்திலேயே தங்கும்படியும் கூறினார். இரா. தேசிகம் பிள்ளையிடம் பேராசிரியர் அந்த அளவுக்கு விழுமிய நட்புக் கொண்டிருந்தார். இருந்தாலும் நாங்கள் முன்னதாக விடுதியில் அறை எடுத்துக் கொண்டு தங்கியதால், அவருடைய வீட்டில் தங்கவில்லை.

மறுநாள் காலையில் சென்னைப் பல்கலைக்கழகத்துக்குச் சென்று பேராசிரியரை அவருடைய துறையில் நாங்கள் சந்தித்தோம். முனைவர் பட்டத்திற்கான விண்ணப்பப்

படிவத்தை நிறைவுசெய்து பேராசிரியரிடம் கொடுத்தோம். பேராசிரியர் அதனை எடுத்துக் கொண்டு துறைத் தலைவர் பேராசிரியர் மு. வரதராசனாரிடம் சென்றார். அவருடன் ஆய்வுப் பற்றி விவாதித்துவிட்டுத் திரும்பி வந்தார்.

அவருடைய முகத்தில் வருத்தம் இருந்தது. பேராசிரியர் மு. வரதராசனார், நான் ஆய்வுப் பணியில் சேர்வதாக இருந்தால் உதவித் தொகை இல்லாமல் ஆய்வு செய்ய வேண்டும் என்று திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டாராம். அப்பொழுது நான் புதுவை அரசினர் தாகூர் கலைக் கல்லூரியில் ரூ. 450/- ஊதியமாகப் பெற்றுக் கொண்டிருந்தேன்.

அறைக்குத் திரும்பிய பேராசிரியர் எங்களைப் பார்த்து, "உதவித் தொகை இல்லாமல் ஆய்வு செய்ய வேண்டாம். வருவாயை இழந்துவிட்டுக் குடும்பத்தைக் காப்பாற்ற முடியாமல் திண்டாட வேண்டாம். போய் வேலையைப் பார்! டாக்டர் பட்டம் பெற்றுவிட்டால் தமிழ்நாடு உனக்கு என்ன மகுடமா சூட்டப் போகிறது?" என்றார். பேராசிரியரின் கருத்தை முழுமையாக ஏற்றுக்கொண்டு நாங்கள் அமைதியாகப் புதுவைக்குத் திரும்பினோம். பேராசிரியர் மேற்பார்வையில் ஆய்வு செய்ய இயலாமல் போயிற்றே என்னும் வருத்தம் என்னுள் இருந்தது. சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர் எனக்கு ஆய்வுக்கு உதவித்தொகை வழங்க மறுத்தது என் தீயூழ் போலும் என்று நான் என் மனத்தைத் தேற்றிக் கொண்டேன். எனினும், நான் ஆய்வு செய்வதற்காக மதுரைப் பல்கலைக்கழகத்திற்குச் சென்றபோதும் (1970) புதுவை அரசு எனக்கு ஆய்வுக்குரிய விடுப்பு வழங்காமல், ஊதியம் இன்றியே என்னைப் படிக்க அனுப்பியது. ஆனால், மதுரைப் பல்கலைக்கழகம் எனக்கு உதவித்தொகை வழங்கி ஆதரித்தது.

பேராசிரியர் அவர்கள், தம் இறுதிக் காலம் வரை (1967) அவ்வப்போது புதுவைக்கு வந்துகொண்டிருந்தார். அவர் வரும்போதெல்லாம் புத்துணர்ச்சி பெற்றவர்களில் நானும் ஒருவன். என்னுடைய ஆய்வுகள் அனைத்தும் வரலாற்றுப் பின்புலத்தில் அமைந்து விட்டமைக்குக் காரணம் பேராசிரியர் மா. இராசமாணிக்கனார் அவர்களின் தாக்கமே ஆகும்.

பேராசிரியரின் நூற்றாண்டில் அவரை எண்ணும்போது, அவர் ஓர் உண்மையான தமிழ்ப் பேராசிரியர் என்னும் சிறப்பே என்முன் நிற்கின்றது. அவர், **சொல்லும் செயலும் ஒன்றாக வாழ்ந்தவர்;** தன்னோடு பழகியவர்களிடம் பேரன்பு காட்டியவர்; ஆய்வுக்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர். அவர் காட்டிய வழியில் நடப்பதே நாம் அவருக்குச் செய்யும் அஞ்சலி ஆகும்.

❖ ❖ ❖

அருமை நண்பர்

வேதம் வேங்கடராய சாஸ்திரி

என் அருமை நண்பர் இராசமாணிக்கனாரை எண்ணும் போதெல்லாம், கடந்த காலத்து நிகழ்ச்சிகளெல்லாம் நினைவுக்கு வரும். ஏறக்குறைய முப்பது ஆண்டுகள் நாங்கள் இருவரும் நெருங்கிப் பழகி இருக்கிறோம். இராசமாணிக்கனார் சென்னை முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராக வந்து சேர்ந்த பிறகுதான் எனக்கு அவரைத் தெரியும். எங்கள் முதல் அறிமுகம் வெறும் பார்வை அறிமுகமே.

சென்னை லிங்கிச் செட்டித் தெருவில் இருக்கும் மல்லிகேசுவரர் கோயில் தெற்குச் சந்தில் இருக்கும் என் வீட்டு மொட்டை மாடியிலிருந்து மேற்கே பார்த்தால், தம்புச் செட்டித் தெருவில் காஞ்சி காமகோடி சங்கராச்சாரியார் மடத்திற்கு நான்கு வீடுகள் தெற்கேயுள்ள, அவர் வாழ்ந்து வந்த மாடியும் அதில் அவருடைய அறையும் நன்கு தெரியும். இவர் யாரோ தமிழாசிரியர்; காலத்தை வீணாக்காமல் எப்போதும் படித்துக்கொண்டும் எழுதிக் கொண்டும் இருக்கிறார் என்று எண்ணியவனாக நான் அவரைப் பார்த்துக் கொண்டிருப்பேன். ஏனென்றால், நானும் அவரைப் போலவே என் வீட்டு மாடியில் எழுதிக்கொண்டும் படித்துக்கொண்டும் இருப்பேன். எங்கள் பார்வைகள் அடிக்கடி சந்தித்துக் கொள்வது வழக்கம்.

> தமிழர் திருமண முறை பற்றி நண்பர் இராசமாணிக்கம் அவர்கள் தெளிவுபெறக் கூறியிருப்பது எவரும் ஏற்கத்தக்கதாகும்.
>
> எம். எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை

1940 இல் நான் சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி மாணவனாகப் பயின்றுகொண்டிருந்தபோது, நண்பர் ஒருவர் இராசமாணிக்கனாரை எனக்கு அறிமுகப்படுத்தினார். அதுவரை வெறும் பார்வை அளவிலேயே அறிமுகமாகியிருந்த நாங்கள், பேசிப்பழகும் வாய்ப்பு அமைந்தது. அன்று ஒன்றுசேர்ந்த எங்களை 1967ஆம் ஆண்டு விதிதான் பிரித்தது.

இராசமாணிக்கனார் தமிழாசிரியர் என்றாலும் வரலாற்று ஆராய்ச்சியில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்தார். நானும் வரலாற்று ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தது, நாங்கள் மிக நெருங்கிப் பழகுவதற்குக் காரணமாயிற்று. நேரம் கிடைத்த போதெல்லாம் மணிக்கணக்கில் உரையாடிக் கொண்டிருப்போம். நாங்கள் பயனில் சொற்களையோ, பொதுச் செய்திகளையோ பேசியதே கிடையாது. ஆராய்ச்சி சார்ந்த கருத்துகளையே பரிமாறிக் கொள்வோம். சேர, சோழ, பாண்டியர்கள், ஆந்திர சாதவாகனர்கள், இலக்கியம், பண்டை எழுத்துகள், கல்வெட்டுகள், பழைய நாணயங்கள், பழங்காலத்துப் பழக்க வழக்கங்கள் பற்றிய வாதங்களில் ஈடுபடுவோம்.

பொதுவாக, தமிழாசிரியர்கள் ஆராய்ச்சி பற்றி, குறிப்பாக நாட்டு வரலாறு, கல்வெட்டுகள் இவற்றைப் பற்றி நினையாமல் கதை, கவிதை இவற்றில் ஆர்வம் காட்டுவதுதான் வழக்கம். இதற்கு மாறாக இராசமாணிக்கனார் புதிய பாதையில் செல்லத்தொடங்கினார். இவர் மனம் சிந்துசமவெளி நாகரிகம் பற்றியும் பல்லவர், சோழர் வரலாறுகள் பற்றியும் சங்க இலக்கியம் பற்றியும் சமய நூலாராய்ச்சி பற்றியும் எண்ணியது.

விவேகானந்தர் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றியபோது பிஎச்.டி. பட்டத்திற்கு ஆராய்ச்சி செய்துகொண்டே, சோழர் வரலாற்றை ஆராய்ந்து நூலாக எழுதி வெளியிட்டார். அப்பொழுது சிறந்த வரலாற்று அறிஞரும் என் பேராசிரியருமான நீலகண்ட சாஸ்திரியார் அந்நூலை மிகவும் பாராட்டி முன்னுரை எழுதிக் கொடுத்தார். அதில் இப்படிச் சொல்லியுள்ளார்:

> .... பல காரணங்கள் பற்றிச் சோழ அரசர்களின் மேன்மையும் பெருமையும் எல்லோரும் போற்றும்படி விளங்கின. இந்த மேன்மை மிக்க நூற்றாண்டுகளின் சரித்திரத்தை விரிவாகத் தமிழில் எழுத வித்துவான் மா. இராசமாணிக்கம் முன்வந்திருப்பது ஒரு நல்ல காரியம். அவர்கள் தம் நூலை நல்ல ஆராய்ச்சி முறையில் எளிய நடையில் யாவருக்கும் பயன்படக் கூடிய வழியில் எழுதியிருக்கிறார்கள் என்பது சில பக்கங்களைப் படித்தாலே எளிதில் விளங்கும். நவீன ஆராய்ச்சி நூல்களை அவர்கள் நன்கு கற்றிருப்பதோடு சுயமாகவும் ஆராய்ச்சித் துறையில் ஈடுபட்டவர்கள் .... இந்தச் சோழர் சரித்திரத்தைப் பலர் படித்து நன்மை பெறுவார்கள் என்று நம்புகிறேன். *(14-3-1947)*

என் அருமை நண்பரைப் பற்றி நான் எவ்வளவு வேண்டுமானாலும் எழுதலாம். காலத்தை அவர் என்றும் வீணாக்கியதில்லை. இலட்சிய வாழ்க்கை அவருடையது. தமிழ் இலக்கியம் ஒரு கடல் போன்று ஆழ்ந்து, ஒரு பெட்டகம் போல் விலையிடமுடியாத கருத்துகளை உடையது. என் நண்பர் சோழர் வரலாறு வெளியிட்ட பிறகு, எத்தனையோ நூல்களை வெளியிட்டார். அவற்றில் குறிப்பிடத்தக்கவை, 'தமிழ்நாட்டு வடஎல்லை,' 'பெரியபுராண ஆராய்ச்சி', 'தமிழ்மொழி - இலக்கிய வரலாறு', 'பத்துப்பாட்டு ஆராய்ச்சி' முதலியன. தக்க சான்றுகளுடன், படிப்பவர் எளிதில் விளங்கிக் கொள்ள - ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் எழுதும் ஆற்றல் பெற்றவர் இராசமாணிக்கனார். தமிழ் மொழி, இலக்கியம், வரலாறு, கல்வெட்டு, புதைபொருள் ஆராய்ச்சி, சைவ சமயம், சமூகச் சீர்திருத்தம் - இவை தொடர்பாக அவர் சாதித்தவை மகத்தானவை. பலர் செய்ய வேண்டியதை அவர் ஒருவரே செய்திருப்பது வியப்புக்கும் பாராட்டுக்கும் உரியது.

டாக்டர் மா. இராசமாணிக்கனார் படிப்பே ஒரு தவமாக வாழ்ந்தவர். திரைப்படம், அரட்டை, வேடிக்கைப் பொழுதுபோக்குகள் இவையெல்லாம் அவர் வாழ்க்கையில் அரிதானவை. கோயில்களுக்கு வழிபாட்டிற்கென்று அதிகம் போகாதவர்; ஆனால் பக்தி இல்லாதவர் அல்லர்; எவரைப் பற்றியும் இழிவாகப் பேசும் வழக்கம் இல்லாதவர்; வெகு முன்னெச்சரிக்கை உடையவர்.

எவ்வளவு எச்சரிக்கையாக இருந்தும் என்ன! மனிதன் மனிதன்தான். இயற்கையை மீற முடியாது. தன் உடல் வாழ்வைக் காப்பாற்றிக் கொள்ள முடியாது. அவ்வளவு படிப்பும் அறிவும் மண்ணோடு மண்ணாகிவிட்டன. தாமே ஓர் இயக்கமாக இயங்கிக் கொண்டிருந்த ஒரு மகத்தான அறிஞர் வரலாறு ஆகிவிட்டார். நினைவு மட்டுமே எஞ்சியுள்ளது. ஒரு திடீர்ச் செய்தியாக என் அருமை நண்பர் 1967இல் மறைந்தது என்றும் மறக்க முடியாதது. என் வீட்டு வாசலுக்கு வந்து, 'சாஸ்திரியார்' என்று என்னைக் கூப்பிட்டுக் கொண்டிருந்த அவருடைய குரல் இன்றும் என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. மறக்கக் கூடியவரா அவர்?

❖ ❖ ❖

நல்லறிஞர்

ரம்போலா மாஸ்கரேனஸ்

ஏறத்தாழ முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த சம்பவம். டாக்டர் மா. இராசமாணிக்கனாரிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. தாம் ஒரு பாடநூலைத் தொகுத்துக் கொண்டிருப்பதாகவும் அதில் அமைத்துக்கொள்ள என்னுடைய கட்டுரை வேண்டும் என்பதாகவும் கடிதம் குறிப்பிட்டிருந்தது. அப்போதெல்லாம் நான் அவரை அறியேன். நண்பர்கள் வாயிலாகவும் கட்டுரைகள், நூல்கள் மூலமாகவும் பெயரளவில் தெரிந்திருந்தேன்.

இராசமாணிக்கனாரின் பேச்சு நடை தெள்ளிய நீரோடைபோன்றது. அவர் எதுகை மோனைகளையும் அடுக்குத் தொடர்களையும் பயன்படுத்தியதில்லை அவருடைய பேச்சு அறிவுப்பூர்வமானதாக காரண காரியத் தொடர்போடு அமைந்திருக்கும்; கேட்போர் உள்ளத்தில் அப்படியே பதிந்துவிடும்.

அ. பாண்டுரங்கன்

அறிஞர் ஒருவரின் அருள் நோக்கம் என்மீது சார்ந்திருக்கிறது என்ற ஊக்கம் என்னை உந்தியது; திரு.வி.க. பாணியில் சொல்ல வேண்டுமானால் பிடர் பிடித்து உந்தியது. திருஈங்கோய் மலை பற்றிய என் கட்டுரையை உடனே அனுப்பி வைத்தேன். மூன்று நாட்களில் அந்தக் கட்டுரை எனக்கே திரும்பி வந்தது. அச்சத்துடனும், ஐயத்துடனும் மேல் உறையைப் பிரித்துப் பார்த்தேன். கட்டுரையின் தலைப்பே மாறியிருந்தது. 'திருஈங்கோய் மலை', 'கபிலரின் கற்பனைத் திற'னாயிற்று. சில வாக்கியங்கள் அடிபட்டிருந்தன; சில திருத்தம் பெற்றிருந்தன; சில உருமாறியிருந்தன; வடிவப் பொலிவு பெற்றிருந்தன. புதிய ஆக்கம் பெற்றிருந்த அக் கட்டுரையுடன் இணைத்திருந்த கடிதத்தில், "தங்கள் கட்டுரையைச் செப்பம் செய்துள்ளபடி வெளியிட இசைகிறீர்களாயின் தெரிவியுங்கள்" என்ற செய்தி குறிப்பிட்டிருந்தது. என் முழுமன இசைவினைக் கூடுமான வேகத்தில் விரைவு அஞ்சலில் தெரிவித்தேன். பின்னர், சென்னையில் மேட்டுத் தெரு 15ஆம் எண் வீடு தேடிப் போய் அவருடைய தரிசனம் பெற்றேன். அண்ணலின் அன்பையும் ஆதரவையும் நட்பையும் நல்லெண்ணத்தையும் பெறுவதற்கு அடிகோலியது எங்கள் கடிதப் பரிவர்த்தனையே.

இதன் பிறகு நான் சென்னை செல்ல நேர்ந்தபோதெல்லாம் அவருடைய இல்லத்திற்கும் பாத யாத்திரை செய்வேன்; அவரைக் காண்பேன்; அவருடன் அளவளாவுவேன். அளவளாவுதல் என்பதே மனம் ஒத்துக் கலத்தல்தானே. நல்லறிஞரால் ஈர்க்கப்பெற்ற அந்நாள் முதலாகத் தொடர்ந்து மணிக்கணக்கில் அவருடன் உறைவதிலும் உரை நிகழ்த்துவதிலும் மகிழ்வு கொள்வேன்; எய்துதற்கரிய இனிய நட்பு பேற்றினைப் பெற்றேன். வாழ்க்கையில் மதிக்கத்தக்க பெரும்பேறும் உள்ள நிறைவும் ஒருசேர எய்தினேன். திருச்சிராப்பள்ளிக்கு வந்தால் அவர் பிரிட்டோ குடியிருப்பில் எங்களுடன் தங்கியிருப்பார். என் குடும்பத்தினருடன் சுமுகமாய்ப்

பழகுவார்; இங்கிதமாய்ப் பேசுவார். என் மகள் பெர்னி, அப்பொழுது பள்ளி மாணவி. அவர் உணவு உண்ணும் சுத்தபத்தமான நியமத்தை உற்றுக் கவனிப்பாள்; அதைப் பற்றிப் பெருமையாகப் பேசுவாள். என் மகன் பிரிட்டோ அவர்கட்கு வேண்டும் பணிவிடைகளை இதமுறச் செய்வான்.

இராசமாணிக்கனார் சிறிய உதவியையும் உள்ளத்தில் பதித்து வைத்துப் பெரிதாகப் போற்றும் இயல்பினர்.

உதவிவரைத் தன்று உதவி உதவிசெயப்
பட்டார் சால்பின் வரைத்து

என்ற குறளுக்கு இலக்கியமாக அமைந்தவர் அறிஞர் இராசமாணிக்கனார். ஒரு சமயம் 'இயேசு நாதர் அந்தாதி வெண்பா' என்னிடம் இருக்கிறது என்றேன். அது கிடைத்தற்கரிய பழைய நூல். அவர் அதனைப் பார்க்க விரும்பினார்; கொடுத்தேன். சில நாட்கள் அதனை வைத்திருந்தார். தாம் தொகுத்த பாடநூலில் ('நேஷனல் தமிழ் வாசகம்' என்று நினைக்கிறேன்), அவர் இயேசுநாதர் அந்தாதி வெண்பாவின் ஒரு பாடலைச் சேர்த்திருந்தார். அப்பாடலின்கீழ் ஒரு குறிப்பும் வெளியிட்டிருந்தார். நூலைக் குறிப்பிட்டு, 'இந்நூல் இப்பொழுது அச்சில் இல்லை. இதன் பழைய படியை எனக்கு உதவியவர், திருச்சிராப்பள்ளி ஆர்ச். சூசையப்பர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் ரம்போலா மாஸ்கரேனஸ் அவர்களாவார்' என்று மிகவும் கரிசனையுடன் வெளியிட்டிருந்தார். இராசமாணிக்கனார் விருப்பத்தின் வண்ணம், வெளியீட்டாளர் எனக்குப் பாடநூலின் ஒரு படியை அனுப்பினார். அதைப் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறேன். இராச மாணிக்கனாரின் பாடநூல் தொகுப்பு முறையின் சின்னமாகவும் பெரிய உள்ளத்தின் எதிரொலியாகவும் அது இருக்கிறது.

கடிதத்தின் இறுதியில் கையெழுத்திடுமுன் இராசமாணிக்கனார், 'தங்கள் நல்வாழ்வை விரும்பும்' என்ற வாழ்த்தினை ஒரு சீராக வழங்குவார். கடித வாசகம் முடியும் நிலையில் இன்னின்னார்க்கு என் விசாரிப்பு உரியது என்பார். அவர் வழுவின்றி மேற்கொண்ட ஒழுங்குமுறைகளில் இதுவும் குறிப்பிடத்தக்கது. சுமை குறைத்துப் பயணத்தை எளிதாக்கும் - இனிதாக்கும் இயல்பு அவருடன் இணைந்திருந்தது.

அவர் கண்ணும் கருத்துமாகப் பேணியது அவருடைய நூலகம். அதன் வரிசையின் அழகு கண்டுகளிக்கத் தக்கது. மறைமலை அடிகள் தமது பல்லாவர இல்லத்தில் வைத்திருந்த நூலகத்தைப் பின்பற்றி இதனை இவ்வாறு அமைத்துக் கொண்டார் என்று நினைக்கத்தோன்றும். இந்த அமைப்பு அவருடைய ஆழ்ந்தகன்ற படிப்பிற்கும் எழுத்தாண்மைக்கும் திட்பநுட்ப ஆய்வுக்கும் ஏற்றம் சேர்ப்பதாயிற்று.

அவர் தம் நம்பிக்கைக்குரியவர்களைச் சிற்சில பணிகளில் ஏவுதலிலும் அவற்றை அவர்களிடம் ஒப்படைப்பதிலும் ஒரு நியதி இருந்தது. சிறப்பாக எழுத்துத் துணைக்கு அழைப்பதில் ஓர் இனிமையைக் காணலாம். "இந்தப் பேனாவை நன்றாக உதறி, நான் சொல்லச் சொல்ல இதைச் சற்று நிதானமாக எழுதி உதவுங்கள்" என்பார்.

சூழ்ந்துள்ள தம் உறவினர்களும் நண்பர்களும் தம்மைச் சார்ந்த அன்பர்களுக்கும் உறவாக, நட்பாக ஒரு சேகரமாக இருக்க வேண்டும் என்று ஆசை கொண்டு ஆவன செய்வார் இராசமாணிக்கனார். திருவல்லிக்கேணியிலிருந்த தம் தமையனார் இராம கிருட்டிணனாரையும் அவர்தம் குடும்பத்தினரையும் எனக்கு அறிமுகப்படுத்திக் குடும்ப நண்பனாகப் பழகும் வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தார். தணிகைமணி வ.சு. செங்கல்வராய பிள்ளையைப் பற்றிய பேச்சு ஒரு நாள் வந்தது. எனக்கு அப்பெரியாரிடம் பெருமதிப்பு இருப்பதை அறிந்துகொண்டார். அவருடைய முகவரியைக் கொடுத்து, அவரை உடனே நான் காண வேண்டும் என்று கட்டளையிடுவது போல் கூறினார். நானும் அந்த

உத்தமரைக் கண்டேன்; அவர்தம் உறவையும் பெற்றேன். பேராசிரியர் எஸ்.வி. வரதராச அய்யங்காரின் அரிய நட்புரிமை நலம் எனக்கு அமைவதற்குத் துணையாயிருந்தவர் இராசமாணிக்கனார்.

சமுதாயத்தில் சிலர் அளவோடு தமிழாசிரியர்; இன்னுஞ் சிலர் அவர் அவரோடு தமிழாசிரியர். இராசமாணிக்கனாரோ வளமான தமிழாசிரியர். அலுவலக எழுத்தராகத் தொடங்கி, எழுத்தாளராகவும் ஆசிரியராகவும் பேராசிரியராகவும் வரலாற்று வித்தகராகவும் ஆராய்ச்சிக் கலைஞராகவும் சைவப் பேரறிஞராகவும் ஒளிர்ந்தார்.

அவருடைய தமிழறிவு அவரோடு மட்டும் அடங்கிவிடவில்லை. அவர் குடும்பத்தினரையும் ஆள்கிறது. சுருங்கக் கூறின், இராசமாணிக்கனாரின் நல்ல குடும்பம் உள்ளபடியே ஒரு பல்கலைக்கழகம். அண்ணலின் நேயர்கள் அவருடைய வாழ்க்கைத் துணைவியாரின் பண்பு மிக்க அன்புக்கு ஆளானவர்கள்; அவருடைய பிள்ளைகளுடனும் பெயரர்களுடனும் உறவுரிமை உடையவர்கள். காரணம், இராசமாணிக்கனார் தமிழ் வாழ வாழ்ந்தவர்; தமிழ் தழைக்கத் தழைத்தவர்; ஆலமரத்தை நிகர்த்த பேருள்ளம் படைத்தவர்.

❖ ❖ ❖

தமிழ்த்துறைத் தலைவர்

சுப. அண்ணாமலை

> இராசமாணிக்கனார் எங்கள் பள்ளிக்கு ஆசிரியராக வந்த காலம், தமிழாசிரியர்களை மாணவர்கள் புறக்கணித்த காலம்; தமிழ் வகுப்புகளில் ஆர்வம் செலுத்தாமல் ஒதுங்கி இருந்த காலம். இந்த வருந்தத்தக்க நிலையை மாற்றி, அவர்களுக்கும் அவர்களுடைய வகுப்புகளுக்கும் தனிப்பெருஞ் சிறப்பை - செல்வாக்கை - புகழை ஏற்படுத்திக் கொடுத்த பெருமை, எங்கள் ஆசிரியருக்கே உரியது.
>
> மா. இளஞ்செழியன்

மனிதருடைய ஆளுமைப் பண்புகள் உருவாகும் காலம் அவர்கள் கல்வி கற்கும் காலம். அவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களின் அறிவு நலத்தையும் பண்பாட்டையும் பொருத்தே அவர்களது ஆளுமைப் பண்பு உருவாகும். அப்பருவத்தில் இளைஞர்கள் ஊக்கமும் எழுச்சியும் உடையவராக என்றும் இருக்கச் செய்வது ஆசிரியர்களின் முதற் கடமையாகும். இவ்வுண்மையை நன்கு உணர்ந்து ஆசிரியப் பணி நடாத்தியவர் அமரர் டாக்டர் மா. இராசமாணிக்கனார்.

மதுரைத் தியாகராசர் கல்லூரியில் அவர் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றிய காலத்தில் நான் இதனை நேரில் கண்டிருக்கிறேன். மாணவர்களின் திறமையை அறிந்து பாராட்டுவார்; நகைச்சுவையோடு பேசி மகிழ்ச்சிப்படுத்துவார்; அவர்களுக்குள் பிணக்கு எழுமாயின், கருத்து வேறுபாடுகளைப் பொறுமையோடு கேட்டுச் சமரசப்படுத்துவார்.

1949ஆம் ஆண்டு ஆலை அரசர், கலைத்தந்தை, கருமுத்து தியாகராசர் செட்டியார் அவர்கள் மதுரையில் தியாகராசர் கல்லூரியை நிறுவி, ஒவ்வொரு துறைக்கும் சிறப்புத் தகுதி வாய்ந்த ஒருவரைத் தலைவராக அமர்த்தும் தமது வழக்கப்படி, தமிழ்த் துறைக்கு, அப்போது சென்னை விவேகானந்தர் கல்லூரியில் பணியாற்றிக் கொண்டிருந்த திரு. மா. இராசமாணிக்கனார் அவர்களைத் தலைவராக அமர்த்தினார்கள். அது நிகழ்ந்தது 1953ஆம் ஆண்டில். அதே ஆண்டில் நானும் தமிழ்த்துறையில் துணை ஆசிரியராக அலுவலில் சேர்ந்தேன்.

திரு. மா. இராசமாணிக்கனார் அவர்கள் பொறுப்பேற்றுத் துறைக்கு வந்த அன்று அவரது எளிமையும் கனிவாக எங்களிடம் பழகியமையும் கண்டு நாங்கள் அவரால் ஈர்க்கப்பட்டோம். அவர் வருகை தொடங்கித் தமிழ்த்துறையும் வளர்ந்து 15 ஆசிரியர்களைக் கொண்டதாக விரிந்தது. அவர் தம்முடைய அன்பான, கண்டிப்பான ஆட்சித் திறத்தால், தமக்கே உரிய அரவணைக்கும் தன்மையால் துறை ஆசிரியர்களிடையே மிக்க ஒத்திசைவு நிலவுமாறு நடத்தினார்.

டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்கள் உரையாடலில் வல்லவர்; அதில் மிகுதியும் விருப்பம் உடையவர்; துறையில்

தனித்திருக்க இசையார்; ஆதலின் தமக்கெனத் தனி ஓர் அறையை வேண்டவில்லை. தமிழாசிரியர்கள் அனைவரும் ஒரே அறையில் அவருடன் இருப்போம். அவர் இருக்கும் இடம் மகிழ்ச்சியும் ஆரவாரமும் நிறைந்ததாக எப்பொழுதும் இருக்கும். துறை வேலைகளில் தொய்வு உண்டாகிவிடாமல் கண்டிப்பாக மேற்பார்த்து வருவதோடு, அங்ஙனம் கண்டிப்பாக இருப்பது தெரியாத வண்ணம் சுவையோடு பேசுவார். சென்னையில் தமது அனுபவங்களைப் பற்றியெல்லாம் அவர் கூறக்கூற, ஒரு குறிப்பிட்ட காலத்தின் தமிழ், சைவ, பொது வாழ்க்கை - தொடர்பான வரலாற்றை நாங்கள் அறிந்து கொள்வோம்.

கடமையில் மா. இராசமாணிக்கனார் மிகவும் கருத்தானவர். கட்டுரை ஆக்கம் அவருக்குக் கைவந்த கலை. எந்நேரமும் ஆய்வில் - சிறப்பாக வரலாற்று ஆய்வில் ஈடுபடுவதிலும் ஆய்வு முடிவுகளைக் கட்டுரையாகவும் நூலாகவும் வெளியிடுவதிலும் காலம் அறிந்து செயல்படுபவர் அவர். கடமையில் அவர் ஈடுபட்டிருக்கும்போது உடனிருந்தால் காலம் எவ்வளவு பொன்னானது என்பது தெரியவரும்.

வரலாறு அவர் மிகவும் ஆர்வத்தோடு ஈடுபட்ட துறை. பி.டி. சீநிவாச ஐயங்கார், S. கிருஷ்ணசாமி ஐயங்கார், நீலகண்ட சாஸ்திரியார் முதலிய வரலாற்றுப் பேராசிரியர்கள் தென்னிந்திய வரலாற்றினை ஆங்கிலத்தில் எழுதியிருந்தனர். தமிழில் அவ்வரலாறுகள் வரவேண்டும் என்ற ஆர்வத்தோடு டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்கள் வரலாற்று ஆய்வைத் தமது சிறப்புத் துறையாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டார். பல்லவர் வரலாறு, சோழர் வரலாறு ஆகிய அவருடைய நூல்கள் அதிக இலக்கியச் சான்றுகளையும் கல்வெட்டுச் சான்றுகளையும் கொண்டவை. அவர் சைவ சமயத்திலும் ஈடுபாடு கொண்டு முதன் முதலாகச் சைவ சமய வரலாற்றைத் தமிழில் எழுதினார்.

மதுரையில் பணியாற்றியபோது, அவரது ஆய்வு ஆர்வத்தை நேரில் கண்டோம். எங்களில் சிலரையும் மாணவர்களில் சிலரையும் அழைத்துக் கொண்டு தஞ்சைவாணன் ஆண்ட மாறை நாடு, மதுரையைச் சூழ உள்ள சமணர் குகைகள், கொற்கை, மதுரையிலிருந்து மேற்குத் திசையாக வைகை நதி செல்லும் வழி, அதன் தொடக்க ஊற்று உள்ள இடம் ஆகிய இடங்களுக்கு ஆய்வுப் பயணம் மேற்கொண்டார்.

டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்கள் தம்முடைய அலுவல், பணி ஆகியவற்றில் மட்டும் கருத்தாக இருக்கவில்லை. உடன் பணியாற்றும் ஆசிரியரின் முன்னேற்றத்திலும் அக்கறை காட்டினார். அவர்களின் நாவாற்றலை வளர்க்கவும், மாணவர்கள் திறனை ஊக்குவிக்கவும் கல்லூரியில் தியாகராசர் இலக்கிய மன்றம் என்ற அமைப்பைத் தோற்றுவித்தார். அது போலவே பொதுமக்களுக்காக, மதுரை பெரிய கோயிலில் ஔவை மன்றத்தைத் தோற்றுவித்தார். தாம் சொற்பொழிவுக்குச் செல்லும் ஊர்களுக்குத் துறை ஆசிரியர்களையும் உடனழைத்துச்சென்று சொற்பொழிவாற்றச் செய்தார்.

“அருமையில் எளிய அழகே போற்றி” என்று மாணிக்கவாசகர் இறைவனைப் போற்றுவார். தமிழகத்தின் புகழ் வாய்ந்த பேராசிரியர் டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்கள் தியாகராசர் கல்லூரியில் எங்கள் துறைத்தலைவராக அமர்ந்து, எங்களுக்கும் அன்பாக வழிகாட்டி உதவியதை இன்றும் பெருமையாகக் கருதுகிறேன்.

❖ ❖ ❖

என் குருநாதர்

வீ. வீராசாமி

டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்களுடன் பழக நேர்ந்த அனைவரையும் உடனே அவர்பால் ஒரு தனி அன்பும் மதிப்பும் கொள்ளுமாறு செய்தது, வேறுபாடின்றி அனைவருடனும் பழகும் அவரது நல்லியல்புதான்.

கல்வி பயிலும்போது பல ஆசிரியர்கள் நம் வாழ்க்கையில் எதிர்ப்படுகிறார்கள். அவர்களுள் சிலரே நம் மனத்தில் நிலை பெற்று வாழ்கிறார்கள். சில ஆசிரியர்கள் மாணவர்களுக்கு ஒன்றுமே தெரியாது, தாங்கள்தாம் அறிவுக்களஞ்சியங்கள் என நினைத்துக் கொள்வார்கள். மாணவர்கள்தாம் சிந்தனைக் கருவூலங்கள்; அவர்களது சிந்தனையை நல்வழியில் கொண்டு செல்வதுதான் ஆசிரியர்களது கடமை என உணர்ந்து கற்றறிந்தோன் என்று சிறிதும் மமதையின்றி, அனைவரிடமும் மனம் திறந்து பேசும் எங்கள் மதிப்பிற்குரிய டாக்டர் அவர்களின் பண்பு எவரையும் அவர்பால் ஈர்த்துவிடும்.

> **இராசமாணிக்கம் கல்லூரியில் தம் கடமைகளைச் செவ்வனே செய்திடுவார். எல்லாவற்றிலும் ஒழுங்கிருக்கும். வகுப்பிற்குச் சென்றால், மாணவர் முன்னரே வந்து காத்துக்கிடப்பர். நகைச்சுவைத் ததும்ப, மாணவர் உள்ளம் கவரும்படிப் பாடங்களை நடத்துவதில் வல்லவர்.**
>
> **சி. ஜகந்நாதாச்சாரி**

கல்லூரியில் உடன் பணிபுரியும் இதர ஆசிரியர்கள், "நீங்கள் இவ்வளவு தூரம் மாணவர்களுடன் நெருங்கிப் பழகக் கூடாது" என்று இவரிடம் கூறுவர். இவரோ புன்முறுவலுடன், "நாமும் மாணவர்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டியன நிறைய இருக்கின்றன" என அவர்களுக்குப் பதிலிறுப்பார். ஒவ்வொரு மாலையும் மாணவர்களுடன் உலாவச் செல்வது இவரது வழக்கம்.

மற்றைய பாடங்களுக்கு எவ்வாறு 'டிமிக்கி' கொடுப்பது என்று மாணவர்கள் யோசித்துக் கொண்டிருப்பர். ஆனால், இவரது பாடமோ வாரத்தில் மூன்று நாட்கள்தானே வருகின்றது என மனம் வருந்துவர். அவ்வளவு தூரம் இவர் நடத்தும் பாடங்கள் சுவையுடனும் மனத்தில் பதியும் எடுத்துக்காட்டுகளுடனும் விளங்கும். உலக நடப்புகளை மிக்க நகைச்சுவையுடன் எடுத்துக்கூறுவதில் அவருக்கு நிகர் அவரேதான்.

தம்மால் முடிந்த அளவு எளியோருக்கு உதவ இவரது அன்புள்ளம் என்றும் தயங்கியதில்லை. வேலை தேடி அவதிப்பட்ட எத்தனை பேருக்கு இவர் தக்க ஆலோசனை கூறி இன்னின்ன இடங்களில் முயன்றால், இன்னின்ன வேலைகள் கிடைக்கும் எனக் கூறித் தாமே பரிந்துரைக் கடிதங்கள் எழுதிக் கொடுத்திருக்கிறார்! தாமே நேரில் சென்று அவர்களைப் பற்றிக் கூறியிருக்கிறார். ஏன், எனக்காக மாநில அரிசனநலத் துறை இயக்குநருக்கு இவர் எழுதிய

கடிதம் இன்னும் என் மனத்திரையில் பசுமையாக இருக்கிறது. "இந்த மாணவன் உதவிப் பணத்துக்கு விண்ணப்பம் செய்திருக்கிறான். தங்கள் ஆதரவுக்குரியவன்" என வெகு நளினமாகத் தம் மன விருப்பத்தை வெளியிடுவார்.

புதுமைக் கருத்துக்களை இவர் என்றும் போற்றி வாழ்ந்தவர். வெறும் பேச்சில் மட்டுமல்ல; செயலிலும் கூடத்தான். தமிழ்நாடு, தமிழ்மொழி இவை தம் பழம் பெருமைகளைப் பெற்றுத் தரணியில் சிறந்து விளங்க வேண்டும் என்பது இவரது மனத்தை விட்டு என்றும் நீங்காத அவா. தமிழ் நாட்டில் மக்கள் பெயர்கள், ஊர்ப்பெயர்கள் கூடத் தமிழில் இல்லையே என மிகவும் மனம் வருந்துவார். நாற்பது ஆண்டுகளுக்கு முன்னமேயே இவர், தம் குழந்தைகளுக்கு இனிய தமிழ்ப் பெயர்கள் வைத்தார் என்ற ஒன்றே போதும் இவரது தமிழ்ப்பற்றை எடுத்துக்காட்ட. இன்று அது நமக்கு அரிய செயலாகத் தோன்றாமல் இருக்கலாம். 'வணக்கம்' என்று கூறியவர்களைக் கிண்டல் செய்பவர்கள் நிறைந்திருந்த காலம் அது என நாம் நினைத்துப் பார்த்தால், இதன் அருமை தெரியும்.

டாக்டர் அவர்கள் உண்மையான தெய்வபக்தி வாய்ந்தவர். போலி நடிப்பு இவருக்குப் பிடிக்காது. தேங்காய், பழம், கற்பூரம் காட்டுதல் இவைதாம் பக்தி வழிபாடு என்பதை இவர் ஏற்றுக்கொள்ள மாட்டார். பெரிய பெரிய கோயில்களில் பக்தி என்னும் பெயரால் நடைபெறும் சில அநீதிகளைக் காணும்போது மனம் குமுறுவார்; அவர்களது கூட்டங்களிலேயே அவ்வழக்கங்களை அஞ்சாது சாடுவார். இதனாலேயே சிலர் இவர் நாத்திகரோ என ஐயுற்றதும் உண்டு. சாதி ஒழிப்பு மாநாடுகளில் இவர் கலந்து கொண்டது அவர்களது ஐயத்தை மேலும் அதிகரித்தது. சாதிபேதமற்ற ஓர் ஒன்றுபட்ட சமுதாயத்தை அமைக்கப் பாடுபட வேண்டும் என்ற இவரது முயற்சி, அறியாதோர் கண்களுக்கு இவரை நாத்திகராகக் காட்டியது.

ஆடம்பரத் திருமணச் செலவுகளை டாக்டர் அடியோடு வெறுப்பார். பண வசதி உள்ளவர்கள் எப்படியாவது நடத்திவிட்டுப் போகட்டும், ஏழைகளும் குலப் பெருமை பேசிக் கடன் வாங்கிச் செலவு செய்து சீர்குலைந்து போகிறார்களே என மிகவும் மனம் வருந்துவார். அழைப்பிதழில், "இன்னின்னாருக்கு இந்தத் தேதியில் இந்த நேரத்தில் திருமணம் நடைபெறவிருக்கிறது. தாங்கள் அப்போது இருந்த இடத்திலிருந்தே மணமக்களை வாழ்த்தியருளும்படி வேண்டுகிறேன்" என அச்சடிக்கப்பட வேண்டும் என்று கூறுவார். அதிலும், "இருந்த இடத்திலிருந்துகொண்டே என்பது அடிக்கோடிடப் பட்டிருக்க வேண்டும்" என்பார்.

நான் பட்டப்படிப்பு முடித்துவிட்டுச் சிறிது காலம் சும்மா இருக்க வேண்டி நேர்ந்தது. அப்போது அவர் என்னைத் தம் வீட்டில் தமக்கு உதவியாக வந்திருக்கும்படி கேட்டுக்கொண்டார். அதன்படி சில மாதங்கள் அவரது வீட்டிலேயே தங்கியிருந்தேன். ஒரு நாள் எனது ஊரிலிருந்து இரு நண்பர்கள் என்னைப் பார்க்க வந்திருந்தனர். அப்போது நேரம் இரவு ஒன்பது மணி. நான் வந்திருந்தவர்களை வீட்டுக்கு வெளியிலேயே வரவேற்று, அவர்கள் வந்திருந்த காரணத்தைக் கேட்டுக்கொண்டு சற்று நேரம் அவர்களுடன் பேசிக் கொண்டிருந்துவிட்டு, அவர்களை வழியனுப்பிவிட்டு வீட்டுக்குள் வந்தேன். டாக்டர் அவர்கள் யாரென்று விசாரித்தார். கூறினேன். "நல்ல ஆளப்பா நீ! இந்நேரம் வந்தவர்களைப் பேசி அனுப்பிவிட்டு வந்துவிட்டாயே. அவர்களைச் சாப்பிடச் சொல்லக் கூடாதா? இங்கே இரவு தங்கச் சொல்லக் கூடாதா? உனக்கு அந்த உரிமையில்லையா? நீ இந்தக் குடும்பத்தில் ஓர் உறுப்பினன். ஞாபகம் வைத்துக்கொள்" என்று டாக்டர் உரிமையுடன் என்னைக் கண்டித்தார். அவரது இச்செயல் என்னை மிகவும் மனம் நெகிழச் செய்துவிட்டது. இந்தப் பண்பு யாருக்கு வரும்?

தமக்குப் பிறர் செய்த உதவி மிகச் சிறியதானாலும் அதைப் பாராட்டி நன்றி தெரிவிக்க இவர் தயங்க மாட்டார். இவர் 'அருவிகள்' என்ற நூலை எழுதிக் கொண்டிருக்கும் நேரத்தில், நான் சிறிது உதவினேன். நான் எதிர்பார்க்காத முறையில் இவர் முகவுரையில் என்னைப் பற்றிக் குறிப்பிட்டு அந்த நூலை எழுதியதில் எனக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளதாக எழுதியிருந்தார்.

அவர் கேட்கும் ஒவ்வொரு சொல்லையும் பார்க்கும் ஒவ்வொரு செயலையும் அவரது மனம் ஆராய்ச்சி செய்துகொண்டே இருக்கும். ஒரு நாள் சற்று தாமதித்து அவர் வீட்டுக்குச் சென்றேன். காரணத்தைக் கேட்டார். "விடுதியில் உறங்கிவிட்டேன் ஐயா!", என்று கூறினேன். "என்ன? என்ன? மீண்டும் சொல்லு" என்று கூறினார். அதைத் திருப்பிக் கூறினேன். "பாண்டி நாட்டில்தான் நல்ல தமிழ்ச் சொற்கள் வழக்கிலுள்ளன. சென்னைப் பக்கம் 'உறக்கம்' என்ற சொல்லையே கேட்க முடியாது" என்று மகிழ்ச்சியுடன் கூறினார்.

சலியா உழைப்புதான் இவரது மூச்சு. இவரால் ஒரு வினாடிகூடச் சும்மா இருக்க முடியாது. இது இவரது இயற்கைக் குணம் (Inborn Nature). ஓர் எளிய தமிழ் வித்துவானாக இருந்த இவர் உயர்ந்த பட்டங்கள் பெற்று டாக்டர் ஆனது இவரது சலியா முயற்சிக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். **வாழ்க்கையில் ஓர் ஒழுங்குமுறை வேண்டும்** என இவர் எப்போதும் வற்புறுத்துவார்.

இச்சலியா உழைப்பே இவருக்குக் கூற்றுவனாயிற்று. வயது முதிர்ந்த காலத்தில் நண்பர்கள் பலர் "இனி, தாங்கள் ஓய்வெடுத்துக் கொள்ள வேண்டும்" என வற்புறுத்தினர். எப்போதும் ஏதேனும் செய்தே பழக்கப்பட்ட இவரது உடலும் மனமும் இதற்கு ஒப்புமோ? தொடர்ந்து, "உழைப்பே எனது உயிர்" என முழங்கிய இவரைக் காலன் நமது கண்கள் கலங்கும்படி கவர்ந்து சென்றான். ஆனால் இவரது புகழுடம்பைக் கவர்ந்துசெல்ல அவனுக்கு வலிமையேது? நமது உள்ளங்களில் அவர் ஆற்றிய தொண்டும் அவரது நினைவும் என்றும் பசுமையுடன் விளங்குமன்றோ!

❖ ❖ ❖

வரலாற்று நாயகர்*

இரா. நல்லகண்ணு

உரையாடல் தொடங்கும். மேவீ.வே.வும் கா.ர.கோ.வும் சேர்ந்து கொள்வார்கள். உரையாடல், "மாணவர்களுக்குப் புத்தகங்கள் அமையும்விதம், மாணவர்கள் எதை எதிர்பார்க்கிறார்கள், அன்றைய தினம் தாங்கள் பாடம் நடத்திய முறை" இவற்றைப் பற்றியதாக இருக்கும். அவ்வுரையாடல்களில் பல நாட்கள், பல நூல்களைக் கற்ற அறிவினைப் பெற முடியும்.

சிறுவை நச்சினார்க்கினியன்

பெருமகனார் டாக்டர் மா. இராசமாணிக்கனார் நூற்றாண்டு விழாக் கருத்தரங்கில் என்னைத் தலைமையேற்று உரையாற்ற அழைத்துள்ளார்கள். இங்கே கல்வியில் கரைகண்ட முப்பெரும் துணைவேந்தர்கள் அமர்ந்துள்ளனர்.

தமிழ் என்பது கடல். நான் தமிழ் என்கிற கடலின் கரை ஓரத்தில் நடமாடி இருக்கிறேனே தவிர, உள்ளே மூழ்கி முத்தெடுத்தவன் அல்ல. டாக்டர் மா. இராசமாணிக்கனார் என்கிற ஆளுமைத்திறன் மிக்க ஒரு சான்றோரைப் பற்றி என்னைப் போன்ற மேம்போக்குடைய ஒருவர் சில வார்த்தைகள் சொல்வது பொருத்தப்பாடு இல்லாத ஒன்று.

டாக்டர் மா. இராசமாணிக்கனாரைப் பற்றி இங்குள்ளவர்களுக்கு எவ்வளவோ தெரியும். நான் பெரிதாக எதையும் சொல்லி விடப் போவதில்லை. மூன்று முக்கிய விசயங்களை மாத்திரம் இங்கே குறிப்பிடுகிறேன்.

மா. இராசமாணிக்கனார் பல்வேறு பரிமாணங்களைக் கொண்ட, கொள்கைப் பிடிப்புள்ள தமிழ் அறிஞர். தமது 9ஆவது வயதில் தமிழ் கற்கத் தொடங்கிய அப்பேராசான் தமது 60 ஆண்டுக் கால வாழ்நாளில் 51 வருடங்களும் தமிழ் கற்றுக்கொண்டேயிருந்தார். தமிழ் என்பது உயிர் மூச்சு; தமிழ் என்பது தவம் என்று வாழ்ந்து காட்டியவர்.

ஒருவன் வாழ்வில் வெற்றி பெற வேண்டுமென்றால் ஒழுக்கம் வேண்டும். அந்த ஒழுக்க மேம்பாட்டில் நம்பிக்கை கொள்ள வேண்டும். அந்த நம்பிக்கை வெற்றியடைய கடும் முயற்சி தேவை. அத்தகைய முயற்சிதான் ஒரு மனிதனை உயர்த்திப் பிடிக்கும் என்று சொன்னதோடு, அதன்படி வாழ்ந்து காட்டியவர் இராச மாணிக்கனார்.

ஒரத்த நாட்டில் ஒரு சாதாரண எழுத்தராக இருந்து நடுநிலைப்பள்ளி ஆசிரியராகிக் கல்லூரி ஆசிரியராக வளர்ந்து,

*டாக்டர். மா. இராசமாணிக்கனார் நூற்றாண்டு விழா வானொலிக் கருத்தரங்கில் (08-09-06) தோழர் இரா. நல்லகண்ணு அவர்கள் ஆற்றிய உரை. (தாமரை, ஜன. - பிப். - 2007, பக். 6 - 8) இதழில் வெளிவந்த கட்டுரை.

பல்கலைக்கழகப் பேராசிரியராகத் தம்மை உயர்த்திக் கொண்ட முயற்சிகளின் எடுத்துக்காட்டு மா. இராசமாணிக்கனார்.

தமிழ்த்தென்றல் திரு. வி. க. அவர்கள் இராசமாணிக்கனாரைப் பற்றிச் சொல்லும் போது, விண்ணுக்கும் மண்ணுக்குமாக உழைத்தார் என்று மிகப் பெருமையாகக் குறிப்பிடுவார்.

ஒரு வரலாற்று ஆய்வாளன் வரலாறாகவே மாறிவிடுவதென்பது அத்தனை எளிதாக நடந்துவிடக் கூடியதல்ல. எத்தகைய உழைப்புத் தேவைப்பட்டிருக்க வேண்டும் அவரின் விண்முட்டும் சாதனைக்கு!

குழந்தை இலக்கியங்கள், நவீனங்கள் என்பதிலிருந்து, அதிகப்படியாகக் கல்வெட்டு, வரலாற்று ஆய்வுகளை மேற்கொண்டவர் மா. இராசமாணிக்கனார். அவரைப் போன்ற ஆய்வாளர்களுக்கு இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் மிகப்பெரிய சவாலாக இருந்துள்ளது. அவர், வசதிகள் குறைந்த காலத்தில் ஊர்ஊராகச் சென்று வரலாற்று ஆய்வுகளை மேற்கொண்டார்.

இந்த 21ஆம் நூற்றாண்டில் வீட்டில் இருந்தபடியே ஒருவர் தமது ஆய்வுப் பணிகளை முடித்துவிடலாம். அந்த அளவுக்கு வெப்சைட், இண்டர்நெட் எனத் தகவல் தொழில் நுட்பம் வளர்ச்சி அடைந்துள்ளது. நமக்கு என்ன தகவல் தேவை என்றாலும், பல வரலாற்றுச் சம்பவங்களைத் தெரிந்து கொள்வது என்றாலும் வீட்டிற்குள் இருந்து கொண்டே கண்டு - கேட்டு - புத்தகங்கள் எழுதிவிடலாம். அதைத்தான் பலர் இங்கே செய்து கொண்டுள்ளனர்.

ஆனால், டாக்டர் மா. இராசமாணிக்கனாரின் வரலாற்று ஆய்வுகளைப் புரட்டிப் பார்க்கும்போது, அவரின் பரந்துபட்ட பன்முகத் தேடல்கள், ஓய்வறியா உழைப்பு என்பதெல்லாம் தெரியவரும்போது விண்ணுக்கும் மண்ணுக்கும் உழைத்தார் என்று சொன்ன திரு.வி.க.வின் வார்த்தைகளை வழிமொழியத் தோன்றும். வரலாற்று ஆய்வுகளைச் சமூகப் பொறுப்புணர்ச்சியோடு செய்தவர் மா. இராசமாணிக்கனார்.

உணர்ச்சி வயப்பட்ட இலக்கியப் போக்குகள், உணர்ச்சிகளைப் புகுத்தி உருவாக்கப் பட்ட பழைய வரலாற்று ஆய்வுகளால் நாடு முழுக்கக் கலவரங்கள் நடந்ததை நாம் பார்த்தோம்.

உணர்ச்சிகளுக்கு அடிமைப்பட்டு, ஒரு சொல் சொல்லிவிட்டு அதைத் திரும்பப் பெற முடியாமல் திண்டாடிய எத்தனையோ ஆய்வாளர்களை நாம் கண்டுள்ளோம்.

இலக்கியச் சான்றுகளுடன், கல்வெட்டு ஆதாரங்களையும் அடையாளங்களாய் எடுத்துக்கொண்டு தமது ஆய்வுகளை நடத்தினார் இராசமாணிக்கனார்.

எதிலும் உண்மை காணவேண்டும்; கண்ட உண்மையை எடுத்துச்சொல்ல வேண்டும் என்கிற அடிப்படையில் வரலாற்று ஆய்வுகளில் தெளிந்த நோக்கங்கள் கொண்டிருந்தார். அவருடைய வரலாற்று ஆய்வுகளில் சமூக நலனுக்கான அக்கறை யிருந்தது.

வரலாறு என்பது அப்படியே சொல்லத்தக்கதல்ல. அதில் நல்ல நோக்கம், எதிர்கால சந்ததிகளுக்கான அறைகூவல் இருக்க வேண்டும். வரலாற்றை எப்படிப் பார்க்கிறோம் என்பது முக்கியம் என்று சொல்லும் மா. இராசமாணிக்கனார் தமது 45ஆவது வயதுக்குப் பிறகுதான் அதிகப்படியான ஆய்வுகளைச் செய்துள்ளார் என்பது குறிப்பிட வேண்டிய ஒன்று.

தம்மை வித்துவானாக உயர்த்திக்கொண்டதோடு நின்றுவிடாமல் தமது துணைவியாரையும் வித்துவானாக உருவாக்கியவர்.

அவர் எடுத்துக்கொண்ட பயிற்சி, இலட்சியம் ஈடேற உழைத்த உழைப்பு, சிறந்த கொள்கைப் பிடிப்போடு வாழ்க்கையை நடத்திச் சென்ற போக்கு எல்லாமே, டாக்டர் இராசமாணிக்கனாரை நாம் பிரமிப்போடு பார்க்க வைத்துள்ளன.

பாரதி, பாரதிதாசன், திரு.வி.க.போன்ற தமிழ் ஆசிரியர்களின் வரிசையில் டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்களும் மனித சமுதாயத்துக்குத் தமது ஈடுயிணையற்ற பணிகளின் மூலம் நல்லதோர் வழிகாட்டியாகத் திகழ்பவர்.

இன்றுள்ள ஆசிரியப் பெருமக்கள் எதிர்காலச் சந்ததியர் நலனுக்காகவேனும் இராசமாணிக்கனார் போன்ற உன்னதமானவர்களைப் பின்பற்றி நடக்க வேண்டியது அவசியம்.

சாதியற்ற சமுதாயத்தைக் காண விரும்பியவர் மா. இராசமாணிக்கனார். கட்டாயக் கலப்புத் திருமணச் சட்டம் இயற்ற வேண்டும் என்று சொன்னவர். சாதி என்பது இயற்கையாக உண்டானதல்ல. தமிழ்ச் சமுதாயத்திலிருந்து சாதி என்கிற சொல் அகற்றப்பட வேண்டும் எனத் துடியாய்த் துடித்தவர்.

உலகம் இன்று சுருங்கிவிட்டது. ஒருவர் எந்த நாட்டில் வேண்டுமானாலும் குடியேறலாம். வேலை தேடிக் கொள்ளலாம் என்கிற நிலை உள்ளது. ஆனால், தமிழருக்கு, தமிழ்ச் சமுதாயத்துக்கு எந்தவித அடையாளமும் இல்லை.

தமிழன், சாதி சமயங்களுக்கு அப்பாற்பட்டவன் என்கிற நிலையைச் சட்டங்களால் மட்டுமே நிறைவேற்றிட முடியாது. எல்லோரும் அர்ச்சகர்கள் ஆகலாம் என்று சட்டம் போட்டார்கள். இந்தக் காலத்தில்கூட சிதம்பரம் கோயிலில் தேவாரம் பாட முடியாத நிலை உள்ளது.

சாதியற்ற சமுதாயம் காண விரும்பிய டாக்டர் மா. இராசமாணிக்கனார் நூற்றாண்டு விழாவில், நாம் அவருக்குச் செய்ய வேண்டிய கைமாறு ஒன்று உண்டு. அவரின் கொள்கை வழி நடந்து, அவரைப் போன்ற சான்றோர்களைப் பின்பற்றி நடப்பதே வரலாறு ஆன ஒரு வரலாற்றுப் பேராசானுக்கு ஆற்றும் உண்மையான தொண்டாக அமையும்.

❖ ❖ ❖

ஆய்வறிஞர் மா. இராசமாணிக்கனாரின் நூற்றாண்டு விழாக் கருத்தரங்கம்

க. திருநாவுக்கரசு

நமது இயக்கத்தின் பொங்கல் மலர்களில் தவறாமல் சில ஆய்வறிஞர்களின் கட்டுரைகள் இடம் பெற்ற காலம் ஒன்று உண்டு. அ. கி. பரந்தாமனார், டாக்டர் மா. இராசமாணிக்கனார், டாக்டர் மு. வரதராசனார், புலவர் அன்பு கணபதி, ஞா. தேவநேயப் பாவாணர், மயிலை சீனி. வேங்கடசாமி போன்ற பெருமக்களின் ஆய்வுக்கட்டுரைகளை ஏதாவது ஒரு பொருள் பற்றி நமது இயக்க ஏடுகளின் பொங்கல் மலர்களில் அந்நாள்களில் காணமுடியும்.

தமிழ்ப் பேராசிரியர்களின் கருத்துகள், ஆய்வுகள் பெரிதும் நமது இயக்கத்திற்கு வலுவூட்டுவனவாகவே இருக்கும். மேற் சொன்ன வரிசையில் ஆய்வறிஞர் இராசமாணிக்கனார்க்கு நூற்றாண்டு விழா வருகிற மார்ச்சில் நிறைவடைகிறது.

தமிழர் திருமண மாநாட்டை நடத்தப் பெரும்பங்கு எடுத்துக்கொண்டு, தன்னலம் அறுத்து இராப்பகலாய் உழைத்துவரும் வித்துவான் மா. இராசமாணிக்கம் அவர்களை வாழ்த்துகிறோம்.

திருவிளக்கு (திங்களிதழ்) 1939

ஆய்வறிஞர் டாக்டர் மா. இராசமாணிக்கனாரின் நூற்றாண்டு விழாக் கருத்தரங்கு கடந்த ஜனவரி 5ஆம் தேதி சென்னைப் பல்கலைக்கழகப் பவளவிழா கலையரங்கத்தில் காலை 10.30 மணிக்குத் தொடங்கி மாலை 6.30 மணிக்கு நிறைவடைந்தது.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறைத் தலைவர் பேராசிரியர் முனைவர் வீ. அரசு அனைவரையும் வரவேற்றார்.

கருத்தரங்கைத் தொடங்கி வைத்து அவ்வை நடராசன், டாக்டர் மா. இராசமாணிக்கனாரின் அருமை, பெருமைகளை யெல்லாம் எடுத்துரைத்தார். அவ்வை எப்போதுமே தமது பேச்சை ஒரு தேர்ந்த இசை மேதை இராக ஆலாபனையை மிக அநாயசமாகச் செய்வதைப் போலப் பேசக்கூடியவர். அவரது தொடக்கவுரையும் அவ்வாறே இருந்தது.

தொடக்கவுரை முடிந்தவுடன்தான் நமக்குத் தெரிந்தது, அரங்கம் முழுவதுமாக நிரம்பிவிட்டது என்று! இருக்கைகள் வருவோர்க்காகக் கூடுதலாகப் போடப்பட்டன. ஓர் ஆய்வுக் கருத்தரங்கிற்கு இவ்வளவுபேர் திரண்டிருந்ததைப் பார்க்க நமக்குப்

முரசொலி நாளிதழில் திருமிகு க. திருநாவுக்கரசு எழுதியதன் சுருக்கம்.

நன்றி : முரசொலி; நாள்: 8 - 1 - 2007, 9 - 1 - 2007.

பெருமிதமாக இருந்தது. பேராசிரியர்கள், ஆய்வறிஞர்கள், மாணாக்கர்கள், பத்திரிகையாளர்கள் என்று பலரும் ஆய்வுக் கூட்டத்திற்கு வருகை தந்திருந்தனர்.

சாகித்திய அகாதெமியினர், 'இந்திய இலக்கியச் சிற்பிகள்' வரிசையில் டாக்டர் மா. இராசமாணிக்கனாரின் வாழ்க்கை வரலாற்றை இரா. கலைக்கோவன் எழுத, தயாரித்து இருந்தனர். அவ்வையின் தொடக்கவுரைக்குப் பிறகு அந்நூலை இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் தோழர் நல்லகண்ணு வெளியிட்டார். முதல்படியை அவ்வையும், இரண்டாவது படியைச் சாகித்திய அகாதெமியின் அலுவலர் இளங்கோவனும் பெற்றுக்கொண்டனர். நூல் வெளியீட்டு நிகழ்வுக்குப் பிறகு தோழர் நல்லகண்ணு 37 நிமிடங்கள் சிறப்புரையாற்றினார்.

நல்லகண்ணுவின் சிறப்புரைக்குப் பிறகு முதல் அமர்வில் இரண்டு பேராசிரியர்கள் பங்கேற்றனர். முதலில் உரையாற்றிய பேராசிரியர் இரா. குமரவேலன் இராச மாணிக்கனாரின் **கால ஆய்வுகள்** பற்றி உரை நிகழ்த்தினார். மிகச் சுருக்கமாக 45 நிமிடங்களில் அவர் பேசியது மிகக் கச்சிதமாக இருந்தது.

கால ஆராய்ச்சி எவ்வளவு முக்கியமானது என்பதையும் அதனை எப்படிக் கண்டறிந்து மா. இராசமாணிக்கனார் நிலைநாட்டினார் என்கிற கருத்தையும் பேராசிரியர் குமரவேலன் எடுத்துவைத்த விதம் வகுப்பு எடுப்பதுபோல இருந்தது.

பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை எடுத்துவைத்த கால ஆய்வுகளுக்கு மறுப்புரை களாகவே இராசமாணிக்கனாரின் ஆய்வுரைகள் வெளியாகி உள்ளன என்பதை எடுத்துரைத்தார் குமரவேலன்.

ஆய்வறிஞர் இராசமாணிக்கனார் போன்றவர்கள் கால ஆராய்ச்சி மேற்கொண்டு நிறுவிக்காட்டியது என்பது, நமக்கு - இயக்கத்திற்கு மேலும் வலுவூட்டி நின்றது. நமது இயக்கத்திற்கு வலுசேர்ப்பதற்காகத்தான் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார் இல்லை. அவர்களின் ஆய்வுகள் இயல்பாகவே நமக்குப் பொருந்திவந்தன என்பதுதான் நமது இயக்கத்தின் வெற்றிக்குப் பெரும் அடிப்படையாகும்.

டாக்டர் மா. இராசமாணிக்கனாரின் தனிச்சிறப்பு நமது பண்டை இலக்கியங் களுக்கும் மன்னர்களுக்கும் இலக்கியப் படைப்பாளிகளுக்கும் கால ஆய்வினை மேற்கொண்டு 'அவர்கள்' இன்னின்ன நூற்றாண்டுகளில் வாழ்ந்தனர் என்பதை வெளிப்படுத்தியதுதான்! இப்படி இந்த ஆய்வறிஞர்கள் வெளிப்படுத்தியதால்தான் இன்று எளிதாக நாம் அவற்றை எடுத்து ஆளுகின்றோம்.

அடுத்து பேராசிரியர் மு. சுதந்தரமுத்து 45 நிமிடங்கள் உரையாற்றினார். இவர், **பத்துப்பாட்டு ஆராய்ச்சி** எனும் நூல் குறித்துப் பேசினார். வரலாற்று ஆசிரியர்கள், இலக்கியங்களைச் சான்றாக ஏற்றுக்கொள்வதில்லை; அவற்றைப் பொய் என்று ஒதுக்கிவிட்டனர். ஆய்வறிஞர் மா. இராசமாணிக்கனார் இலக்கியத்தையும் வரலாற்றுக்கு ஓர் அடிப்படையாகக் கொண்டு நிறுவிக்காட்டியதைச் சுதந்தரமுத்து எடுத்துக் காட்டியது மிகச் சிறப்பாக இருந்தது.

கருத்தரங்கு சரியாகப் பிற்பகல் 2.00 மணிக்கு உணவுக்காகக் கலைந்தது. கருத்தரங்கை ஏற்பாடு செய்தவர்கள் சிறப்பான உணவுகளை வழங்கினர். மீண்டும் கருத்தரங்கு 25 நிமிட இடைவெளிக்குப் பிறகு கூடியது.

இரண்டாவது அமர்வுக்குத் தாமரை ஏட்டின் ஆசிரியரும் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தமிழ் மாநிலத் துணைச் செயலாளருமான தோழர் சி. மகேந்திரன் தலைமை தாங்கினார்.

முதலில் சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ் இலக்கியத் துறையின் தலைவர் பேராசிரியர் வீ. அரசு **தமிழியல் ஆய்வு வரலாற்றில் இராசமாணிக்கனாரின் இடம்** என்னும் தலைப்பில் பேசினார்.

தமிழர்களின் அடையாளங்கள் மறைக்கப்பட்டுவிட்டன; ஒரு கட்டத்தில் மறக்கப் பட்டுவிட்டன. சமஸ்கிருதமும் அது சார்ந்த மதமும் மட்டுமே நம் எல்லோர்க்கும் அடையாளம் ஆக்கப்பட்டுவிட்டன. அய்ரோப்பியரின் வருகை நமக்கு ஒரு வெளிச்சத்தை அளித்தது. நமது அடையாளம் பிறரால் நமக்கு உணர்த்தப்பட்டது. இதனால் மொழி, மொழி சார்ந்த தேசிய உணர்வுகள் அடையாளங்களாகத் தெரிந்தன. இதனால் சமஸ் கிருதத்திற்கும் தமிழுக்கும் நெருக்கடிகள் - கருத்தியல் போராட்டங்கள் உருவாயின. 20ஆம் நூற்றாண்டின் தொடக்கம் எல்லாவற்றிற்கும் ஒரு வடிகாலை ஏற்படுத்தித் தந்தது. நமது அடையாளம் தாய் மொழியின் மூலம் உணர்த்தப்பட்டது.

மொழி என்று வந்தால் ஒரு நாடு இருந்தாக வேண்டும். அதன்பின்னே இனம் என்று இருக்கும். அதற்கு என்று ஒரு பழைமை இருந்தாக வேண்டும். இந்தப் பழைமையைத் தோண்டி எடுத்து உணர்த்தியவர்களுள் ஒருவர்தான் இராசமாணிக்கனார். இதுதான் தமிழியல் ஆய்வு வரலாற்றில் இராசமாணிக்கனாரின் இடம் என்று எடுத்துரைத்தார் வீ. அரசு!

ஓர் ஆய்வின் வெளிப்பாட்டின்போது திராவிட இயக்கத்தாரின் கவனத்தைப் பெரிதும் கவர்ந்தார் மா. இராசமாணிக்கனார். அடுத்து உரையாற்ற வந்த இரா. கலைக்கோவன் 32 நிமிடங்கள் பேசினார். அவருக்கு வழங்கப்பட்ட தலைப்பு, **ஆய்வுத் துறைகளும் அணுகுமுறைகளும்** என்பதாகும். வளரும் சமுதாயத்தில் காலப்போக்கில் பல மாற்றங்கள் ஏற்படுதல் இயல்பு என்பதைக் கூறுமிடத்து, சங்ககாலம் முதல் பத்தாம் நூற்றாண்டு வரையில் தமிழர் திருமணத்தில் தாலி கட்டும் வழக்கம் இருந்தமைக்குச் சான்றில்லை என்று 1954இல் சொற்பொழிவு ஒன்றில் குறிப்பிட்டார் இராசமாணிக்கனார். இச்செய்தி தினத்தந்தியில் வெளிவந்தது. இது இலக்கிய உலகில் மாபெரும் சர்ச்சையை உண்டாக்கியது. சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அதை மறுத்து எழுதினார்.

அப்போது மா. இராசமாணிக்கனார் மதுரைத் தியாகராசர் கல்லூரியில் பணியாற்றிவந்தார். கருமுத்து தியாகராசர் நடத்திவந்த தமிழ்நாடு ஏட்டில், 'தமிழர் திருமணத்தில் தாலி' என்பது குறித்த, தொடர் ஆய்வுக் கட்டுரைகளை அவர் எழுதினார். கண்ணதாசனின் தென்றல் ஏடும் இந்த விவாதத்தில் பங்கேற்றது. கி. பி. 10ஆம் நூற்றாண்டு வரை தமிழர்களுக்குத் தாலி அணிவிக்கும் பழக்கம் இல்லை என்பதை மா. இராச மாணிக்கனார் நிறுவிக்காட்டினார். இதுகுறித்துப் பல சிறு நூல்களும் வெளிவந்தன. பின்னர் எப்படியோ தமிழரிடையே தாலி கட்டும் பழக்கம் புகுந்துவிட்டது என்பதை விளக்கிக் கலைக்கோவன் உரையாற்றினார்.

இரா. கலைக்கோவனுக்கு அடுத்து மா. ரா. அரசு, இராசமாணிக்கனார் எழுதிய **இளைஞர் நூல்கள்** எனும் தலைப்பில் 40 நிமிடங்கள் உரையாற்றினார். நாற்பெரும் வள்ளல்கள் (1930), ஹர்ஷவர்த்தனன் (1930), சிவாஜி (1946) போன்ற நூல்களை எழுதி இளைஞர்களை - மாணவர்களை எவ்வாறு அவர் ஊக்கப்படுத்தினார் என்பதை விளக்கிப் பேசினார்.

நிறைவுரை மாலை 4.30 மணியிலிருந்து 6.20 மணிவரை நடைபெற்றது. முனைவர் மே. து. இராசுகுமார் தலைமையில் பேராசிரியர் இரா. இளவரசு கருத்தரங்கை நிறைவு செய்து உரை நிகழ்த்தினார். தலைமையேற்ற மே. து. இராசுகுமார் தமது தலைமை உரையில், "டாக்டர் மா. இராசமாணிக்கனார் மாணவர்களுக்கு நூல் எழுத வேண்டும்

என்று கருதினார். அன்றைய தமிழியல் ஆய்வுகளை மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் எளிய நடையில் கொண்டு சேர்க்க வேண்டும் என்று விரும்பி எழுதியவர் பேராசிரியர் மா. இராசமாணிக்கனார்.

மேலும், "பேராசிரியர் ஆய்வு நூல்களை எழுதத்தொடங்கிய 1940களில், பார்ப்பன வரலாற்று ஆசிரியர்கள் தமிழக வரலாற்றையும் பண்பாட்டையும் தமிழின் தொன்மையையும் மிகத் தாழ்வான நிலையில் சித்திரித்து எழுதினர். அவர்களின் நூல்களைத்தான் வெளிநாட்டு ஆய்வாளர்கள் மேற்கோள்களாக எடுத்துப் பயன்படுத்தினர். இந்த நிலையில் அவற்றை மறுக்க வேண்டிய கட்டாயமும் தேவையும் தமிழ் ஆய்வாளர்களுக்கு உண்டாயிற்று. இப்படி மறுத்து எழுதிய ஆய்வாளர்களுள் டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்கள் முதல்நிலையில் வைத்துப் போற்றப்பட வேண்டியவர்", என்று உரையாற்றினார்.

அடுத்து, சிறப்புரையாற்றிய பேராசிரியர் இளவரசு 45 நிமிடங்களுக்கு மேல் பேசி, பல அரிய செய்திகளைக் குறிப்பிட்டார். அவர் ஆற்றிய உரையின் சிறப்புப் பகுதியாகக் கீழ்க்காணும் உரையைத் தந்திருக்கின்றோம்.

பேராசிரியர் மா. இராசமாணிக்கனார் குடும்பம் செழுந்தமிழ்க் குடும்பம். நல்ல தமிழ்ப் பெயர்களைப் பிள்ளைகளுக்குச் சூட்டியதோடு, பிள்ளைகளைத் தமிழ்க்கல்வி பெறச்செய்து, தமிழ்ப்பற்றுள்ளவர்களாக வளர்த்தெடுத்து, தமிழ் ஆய்வில் ஈடுபடச் செய்தவர் அவர். சிலம்புச்செல்வர் ம.பொ.சி. "டாக்டர் இராசமாணிக்கனார் தம்முடைய குடும்பத்தையே தமிழ்க்குடும்பம் ஆக்கியிருக்கிறார்; அதிலே அவருக்கு நிகரான தமிழ்ப்புலவர் இன்னொருவர் இல்லை" என்று பாராட்டி இருப்பது உண்மை, வெறும் புகழ்ச்சி இல்லை.

அமைதியின் வடிவமாக விளங்கிய இராசமாணிக்கனார் மற்றவர்களுக்குத் தன்னாலாகிய உதவிகளை வெளியே தெரியாமல் செய்வதில் வல்லவர். மொழிஞாயிறு பாவாணர், பன்மொழிப்புலவர் அப்பாத்துரை முதலிய அறிஞர் பெருமக்களுக்கு அவர் உதவியுள்ளார். திராவிட இயக்க இதழ்கள், குறிப்பாகப் பொங்கல்மலர் முதலிய சிறப்பு வெளியீடுகளில் அவர் ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதியுள்ளார். அந்த வெளியீடுகளின் மூலமாகத்தான் அவர்மேல் எனக்கு ஈடுபாடு ஏற்பட்டது என்றார்.

தமிழ்நாட்டைப் பொருத்தவரை ஒரு வரலாற்று ஆசிரியர் இலக்கியம், கல்வெட்டு, செப்பேடு, களஆய்வு, பகுத்தறிவு ஆகியவற்றைக் கணக்கிலெடுத்துக் கொண்டு வரலாற்றை ஆய்ந்து எழுத வேண்டியவராக இருக்கின்றார். அந்த வகையில் ஆய்வறிஞர் டாக்டர் மா. இராசமாணிக்கனார் சிறந்து விளங்குகிறார். 104 நூல்கள் எழுதிய இவரை ஆய்வுலகம் இன்றும் போற்றுகின்றது; பாராட்டுகின்றது. 1907ஆம் ஆண்டு பிறந்த இவர் 1967இல் இயற்கை எய்தினார். பேராசிரியர் மா. இராசமாணிக்கனார் அவர்கள் 12.3.1907இல் பிறந்தார். அடுத்த மாதம் இவரது நூற்றாண்டு நிறைவடைகிறது.

கால்டுவெல் முதல் பேராசிரியர் டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரை உள்ள ஆய்வறிஞர்களின் பட்டியல் மிக நீண்டதாகும்.

இந்த அறிஞர்கள் எல்லாம் ஆய்ந்தறிந்து கூறிய உண்மைகள் திராவிட இயக்கத்திற்கு வலுவூட்டக் கூடியனவாக இன்றளவும் விளங்கிவருகின்றன. ஆகவே, இத்தகைய பெருமக்களை நினைவுகூர்வதும் அவர்களைப் போற்றுவதும் ஆசான்மார்களாக ஏற்றுக்கொள்வதும் நமது பெருங் கடமையாகும்.

❖ ❖ ❖



நினைவு மலர்கள்

உ

(உறவும் சுற்றமும்)

அறிஞர் இராசமாணிக்கனார் ஈட்டிக் குவித்த ஏராளமான வெற்றிகளுக்குப் பின்புலமாகவும் அடித்தளமாகவும் அமைந்தவர், அவருடைய வாழ்க்கைத் துணைவியார் திருமதி கண்ணம்மாள் அவர்களே ஆவார். குடும்பப் பொறுப்பின் சுமை முழுவதையும் அவர் ஒருவரே தாங்கிக்கொண்டு, அதன் நிழல்கூட இராச மாணிக்கனார்மீது படாமல் பார்த்துக்கொண்டார். இவ்வாறு குடும்பப்பொறுப்பு முழுவதையும் தியாக உணர்வுடன் தம் அருமைத் துணைவியாரே ஏற்றுக்கொண்ட காரணத்தால்தான் இராசமாணிக்கனார், தம் கவனம் முழுவதையும் - ஆற்றல் அவ்வளவையும் தம் ஆசிரியப் பணி, ஆராய்ச்சிப் பணி, எழுத்துப் பணி, இலக்கியப் பணி ஆகியவற்றில் செலுத்தமுடிந்தது.

மா. இளஞ்செழியன்
'விழுமிய திறமைகள் கெழுமிய அறிஞர்'
நூற்றாண்டு மாணிக்கம்
ப. 149

என் கணவர்*

திருமதி கண்ணம்மாள் இராசமாணிக்கனார்

1930ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்களில் எனக்குத் திருமணம் ஆகியது. அப்போது எனக்கு வயது 14. என் கணவர் இராச மாணிக்கனார் வயது 23. அவர் சென்னை வண்ணாரப் பேட்டை - சர். பி. டி. தியாகராயர் நடுநிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றி வந்தார். திருமணத்திற்கு முன் நான் எட்டாம் வகுப்புவரை படித்திருந்தேன். திருமணத்திற்குப்பின் என் கணவர் எனக்கு ஆங்கிலப் பாடமும் தமிழ்ப் பாடமும் கற்பித்து வந்தார்; பாடம் கற்பிக்கும் நேரத்தில் பள்ளி ஆசிரியராகவே காணப் பட்டார்; விடை கூறத் தவறும்போது பிரம்படி கொடுப்பார்.

என் கணவர் 1935இல் வித்துவான் பட்டம் பெற்றார். அவர் பள்ளியில் ஆசிரியர் வேலை பார்த்துக்கொண்டும் அதே சமயத்தில் பள்ளிப் பாடநூல்கள் எழுதிக்கொண்டும் வித்துவான் தேர்வுக்கு இரவுபகலாகப் படித்துவந்தார்; இரவு 11 மணிக்குப் படுப்பார்; வைகறையில் 4 மணிக்கு எழுந்து மீண்டும் படிக்கத் தொடங்குவார். அவருடைய ஊக்கமும் உழைப்பும் எனக்கு ஊக்கத்தை உண்டாக்கின. தம்மையும் உயர்த்திக்கொண்டு என்னையும் உயர்த்த அவர் பாடுபட்டார். ஒரு கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றும் அளவு நான் முன்னேறியதற்கு அவர் அளித்த ஊக்கமே காரண மாகும்.

என் கணவரைப் பற்றிய எல்லா விவரங்களையும் நான் அறிந்திருக்க வேண்டும் என்பது அவர் எண்ணம். அவருக்கு வரும் வருவாய் எல்லாம் என்னிடம்தான் இருக்கும் எனக்குத் தெரியாமல் ஒரு சல்லியும் செலவழியார்.

என் கணவர் எனக்கு மட்டும் ஆசிரியரல்லர். என் தமையனார் வித்துவான் பு. செல்வராசுக்கும் அவரே ஆசிரியராவர். அவர் இன்று சென்னை அப்துல் அக்கீம் உயர்நிலைப் பள்ளியில் தலைமைத் தமிழாசிரியராக இருக்கின்றார்.

என் கணவர் ஓய்வின்றிப் பல தேர்வுகளுக்குச் சென்று இறுதியில் 1939இல் B. O. L. பட்டம் பெற்றார். எங்கள் வீட்டில் எவர் துணையுமில்லை. நாங்கள் இருவரே எல்லா வேலைகளையும் செய்து கொண்டோம்.

ஒவ்வொரு பெண்ணும் தன்னைக் காத்துக்கொள்ளும் வகையில் கல்வி கற்றுப் பொருளீட்ட வேண்டும் என்பது என் கணவர் கருத்து. அவர் இதனை எல்லோரிடமும் கூறுவது வழக்கம். சொற்பொழிவு களிலும் எடுத்துச்சொல்லுவது வழக்கம். ஒவ்வோர் ஆண்மகனைப் போலவே பெண்களும் தன்னைத் தான் காத்துக்

*கலை (திங்களிதழ்), சூன் 1960, பக். 82 - 83.

கொள்ளும் தகுதிபெற வேண்டும் என்பது அவர் அறிவுரை; அதனால் அவர் என்னைப் பெண்கள் பள்ளியில் தமிழாசிரியராக அமர்த்தினார்; பின்பு அவர் மதுரைக்குச் சென்றபொழுது பாத்திமாக் கல்லூரியில் என்னைத் தமிழாசிரியராக அமர்த்தினார். நான் அக்கல்லூரியில் இரண்டாண்டுகள் பணியாற்றினேன்; என் முதல் மகன் இளங்கோவன் M. A. பட்டம் பெற்றதும் நான் வேலையினின்றும் விலகினேன். சமையல், பிள்ளை வளர்ப்பு, குடும்பவேலை இவற்றுக் கிடையே ஆசிரியர் வேலையும் செய்ய என்னால் இயலவில்லை. இப்பொழுது அமைதியாகக் குடும்ப வேலைகளைக் கவனித்து வருகிறேன்.

கணவர் - துணைவர்

என் கணவர் விடுமுறை நாட்களில், ஓய்வு நேரங்களில் குடும்ப முன்னேற்றம் பற்றிப் பேசுவார்; திருக்குறளைப் படிக்கும்படி அடிக்கடி வற்புறுத்துவார். குடும்ப வரவு செலவில் மிகவும் கருத்துள்ளவர்; ஒவ்வொரு மாதமும் வரவு செலவுக் கணக்கை நான் எழுதிக் காட்டுவேன். அவரைப் பற்றிய எல்லா விவரங்களையும் அவர் துணைவியாகிய நான் அறிந்திருக்கவேண்டும் என்பது அவர் எண்ணம். அதனால் எந்த எந்தக் கம்பெனியில் அவரது நூல்கள் அச்சாகியுள்ளன - அவற்றின் வருவாய் எவ்வளவு என்பன போன்ற விவரங்களையெல்லாம் எனக்குக் கூறுவது வழக்கம். நான் இப்பொழுது அவற்றை யெல்லாம் அறிந்திருக்கிறேன். என் கணவருக்கு வரும் வருவாய் எல்லாம் என்னிடம்தான் இருக்கும். நான்தான் கணக்கு வைத்திருக்கிறேன். அவர் எனக்குத் தெரிவியாமல் ஒரு சல்லியும் செலவழியார். நானும் அப்படித்தான் இருந்து வருகிறேன். "செலவுக்கு ஏற்றபடி வருமானத்தைப் பெருக்க வேண்டும்; அல்லது வரவுக்கு ஏற்றபடி செலவு செய்ய வேண்டும்" என்று அடிக்கடி கூறுவார்; கூறுகிறபடி நடப்பார்.

எங்கள் குடும்பத்தில் இப்பொழுது ஐந்து பிள்ளைகள் படிக்கிறார்கள். மூன்று பெண்கள் கல்லூரிகளிலும் கடைசி இரண்டு ஆண் பிள்ளைகள் உயர்நிலைப் பள்ளிகளிலும் படிக்கின்றனர். இவர்களையும் ஒருவழிப்படுத்த வேண்டும் என்னும் கவலையே அவரை வாட்டுகிறது. இங்ஙனம் எனது முன்னேற்றத்திற்கும் குடும்ப முன்னேற்றத்திற்கும் அவர் இப்பொழுது ஓய்வின்றி உழைத்து வருகிறார்.

"எல்லோரிடமும் அன்புடன் நடந்துகொள்ள வேண்டும்; பிறர் மதிக்கும்படி வாழ வேண்டும்; உழைத்துச் சம்பாதிக்க வேண்டும்: உழைப்பே உயர்வளிக்கும்" என்று அடிக்கடி எனக்கும் பிள்ளைகளுக்கும் கூறுவார்; தாமும் அப்படியே நடப்பார். சொல்லும் செயலும் அவரது வாழ்க்கையில் ஒன்றிவிட்டன. தூய்மையான உள்ளம் கொண்ட அவர் விரும்புவதும் வெண்ணிறமான ஆடையேயாகும்.

டாக்டர் இராசமாணிக்கனாரைத் தமிழுலகம் நன்கு அறிந்துள்ளது. சமயம் - சமூக சீர்திருத்தம் - மொழி பற்றிய மாநாடுகளிலும் கூட்டங்களிலும் அவர் பங்கு கொள்வார்; அரசியலில் சேர மாட்டார். எல்லாக் கட்சிகளிலுமுள்ள நல்லவற்றைப் பாராட்டுவார். அதனால் எல்லோரும் அவருக்கு நண்பர்கள். அவர்கள் அனைவரும் எங்கள் வீட்டிற்கு வருவதுண்டு. 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற கொள்கையை உறுதியாகக் கடைப்பிடிப்பவர். எங்கும் இனிய தமிழ் மணம் கமழ வேண்டும் என்பதே அவர் ஆவல். சிறந்த ஆராய்ச்சி நூல்களை அரிதின் முயன்று எழுதித் தமிழ்நாட்டின் ஒளிவிளக்காய்த் திகழும் இவரை என் கணவராக அடைந்தது குறித்து நான் பெருமகிழ்வு எய்துகிறேன். இந்த வாழ்வளித்த இறைவனுக்கு என் வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

❖ ❖ ❖

அன்புடைய மாமி

திருமதி புனிதவதி இளங்கோவன்

"என் தாயார் அன்பானவர். உன்னைத் தன் பெண் போல் போற்றுவார்கள். அவர்களின் அன்பைப் பெற்று நீ விளங்குவா யானால் நான் மகிழ்வேன்". இவை என் கணவர் என்னிடம் முதல் நாள், முதலில் பேசிய வார்த்தைகள். எனக்குச் சற்று வியப்பாக இருந்தது. அன்பானவரின் அன்பைப் பெறுவது மிகப் பெரிய கடினமான விஷயமா என்ன? பின்புதான் புரிந்தது, அவர்கள் அழுத்தமானவர்; யாரிடமும் எளிதில் பழகும் குணம் உடையவர் இல்லை என்பது. அது மட்டுமல்லாது மிகுந்த கூச்ச சுபாவமும் கொண்டவர் என்பதும் விளங்கியது.

நான் எல்லோரிடமும் எளிதில் பழகும் குணம் கொண்டவள். ஆதலால் மற்றவர்களும் அவ்வாறே இருக்க வேண்டும் என விரும்பினேன். ஆரம்பத்தில் என் மாமியார் என்னிடம் அதிகம் பேசியதில்லை. என்னிடம் மட்டுமல்ல; எல்லோரிடமும்தான். திருமணம் ஆன புதிதில் நாங்கள் மதுரையில் இருந்தோம். என் மாமனார் டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்கள் மதுரை தியாகராசர் கல்லூரியிலும் என் கணவர் செந்தமிழ்க் கல்லூரியிலும் பணிபுரிந்தார்கள். என் மாமியார் திருமதி கண்ணம்மாள் அவர்களும் மதுரை பாத்திமா கல்லூரியில் பணிபுரிந்தார்கள்.

பின்னாளில் நாங்கள் இருவரும் நல்ல நண்பர்களானோம். அவர்கள் மனம்விட்டுப் பேசுவார்கள்; நானும் பேசுவேன். பல நேரங்களில் அவர்கள் எனக்கு ஆசானாகவும் இருந்திருக்கிறார்கள்.

என் மாமியாரிடம் நான் கண்டு வியந்த குணங்கள் பல. நானும் விடாமுயற்சியோடு அவர்களை மனம்விட்டுப் பேசவைத்து வெற்றி கண்டேன். அதனால் அவர்களை நான் நன்கு உணரமுடிந்தது. அவர்களின் தோற்றமே பார்ப்பவரை மதிக்க வைக்கும். நல்ல நிறம். வட்ட முகம். நெற்றியில் எப்பொழுதும் இருக்கும் குங்குமம். காலையில் எழுந்து பல் துலக்கியபின் குளிக்கப் போகும் அந்த இடைவெளியில் கூட நெற்றியில் குங்குமம் பளிச்சிடும்.

"தெய்வம் தொழாள், கொழுநன் தொழுதெழுவாள்" என்ற இலக்கணத்துக்கு உரிய அவர்களின் பதிபக்தி என்னை வியக்க வைத்தது. இலக்கியம் காட்டும் மகளிரை விட வியக்கத்தக்கவர். நான் அறிந்தவரை என் மாமியார், மாமனார் எதிரில் அமர்ந்து பேசியதைப் பார்த்ததில்லை. நாற்காலியில் மாமனார் அமர்ந்து சொல்ல மேசை விளிம்பைப் பிடித்தவாறு நின்றுகொண்டேதான் பதில் அளிப்பார். 'உட்கார்' என்று சொன்னாலும் உட்கார்ந்ததில்லை. நான் காரணம் கேட்டேன். "அப்படியே பழகிவிட்டது" என்பதுதான் பதிலாக வந்தது.

கணவன் மனைவிக்குள் கருத்து வேற்றுமை வந்ததேயில்லையா என்ற ஐயம் எழலாம். வந்ததுண்டு; ஆனால் நாங்கள் எப்போது அதை உணர்வோம் என்றால், மூன்றாம் தங்கை இருவருக்கும் தூது போகின்றபோதுதான். அதுவும் ஓரிரு நாட்களே. அந்த நாட்களில் கூட கணவருக்குத் தேவையானவற்றைத் தானேதான் செய்வார்கள். வெளியில் இருந்து வரும் கணவரிடமிருந்து குடையை வாங்கி மாட்டுவது முதல் உணவு பரிமாறுவது வரை அவர்களேதான் செய்வார்கள். சில நேரம் நான் கேலிகூட செய்ததுண்டு. சிறிய புன்னகையோடு "அவர்களுக்கு யார் இதையெல்லாம் செய்வார்கள், என்னைத் தவிர ..." என்பதே பதிலாக வரும். கோபத்தில் கூட கணவர்மீது மாறாத பாசம் கொண்டவராகத் திகழ்ந்தார். அப்படிப்பட்டவர்தான், என் மாமனார் மறைந்த செய்தி கேட்டதும், அதிர்ந்து கீழே அமர்ந்து "ஐயோ, எனக்கு அப்பா மாதிரி இருந்தார்களே" எனக் கூறி மயக்க மடைந்தார். அந்தத் தம்பதியின் இடையே இருந்த அன்பின் ஆழம், பாசத்தின் அழுத்தம், உறவுகளின் உயர்வு ஆகியவை எவ்வளவு உன்னதமானவை என்பதை என்னால் உணர முடிந்தது.

மதுரையில் அவர்களின் பெண்களோடு என்னையும் தன் பெண்ணாகவே நடத்தியதை எப்படி என்னால் மறக்க இயலும். ஆரம்பத்தில் நான் என் கணவர் வருகைக்காகக் காத்திருந்து உணவு கொள்வேன். "இங்கே பார். அவன் வர நேரமாகும். சில நேரம் வெளியில்கூட நண்பர்களோடு சாப்பிட்டு வருவான். நீ காத்திருக்க வேண்டாம். இவர்களோடு உட்கார்ந்து சாப்பிடு" என அன்புக் கட்டளையிட்டார். ஏனெனில் திருமணத்திற்குப் பின்னால்தான் மதுரை லேடிடோக் கல்லூரியில் சேர்ந்து நான் பட்டப்படிப்புப் படித்தேன். காலையில் எழுந்து, முடிந்த வேலைகளைச் செய்துவிட்டு அவர்களின் பெண்களுடனே நானும் கல்லூரிக்குச் சென்றுவிடுவேன். ஆகையால் என் பிறந்த வீட்டிற்கும் புகுந்த வீட்டிற்கும் வேறுபாடு இல்லாத நிலையில் நான் வாழ்ந்தேன்.

மூத்த மருமகள் என்ற நிலையில் எனக்குப் பல கடமைகள் இருந்தன. என் மாமனார் மறைவுக்குப் பின், எங்கள் இருவரையும் கலந்துபேசியே எல்லா முடிவுகளையும் எடுத்தார்கள். காலம் யாருக்காகவும் காத்திருப்பதில்லை. பின்னாளில் நாங்கள் இருவரும் நல்ல நண்பர்களானோம். அவர்கள் மனம்விட்டுப் பேசுவார்கள்; நானும் பேசுவேன். சில நேரங்களில் நான் அவர்களுக்கு ஆறுதலாகவும் பல நேரங்களில் அவர்கள் எனக்கு ஆசானாகவும் இருந்திருக்கிறோம்.

நான் பெண் விடுதலை பற்றிப் பேசுவேன். அமைதியாகக் கேட்டபின் "என்ன செய்வது? காலம் காலமாக அப்படித்தானே வாழ்கிறோம். நீங்களாவது உங்கள் உரிமைக்குக் குரல் கொடுங்கள்" என்பார்கள். நான் என் கணவரோடு கருத்து வேறுபட்டு சண்டையிட்டால் அமைதியாக என்னை அழைத்து, "நீ ஏன் எதிர்த்துப் பேசுகிறாய்? வெளியிலிருந்து வரும் ஆண்களுக்கு ஆயிரம் சிக்கல்கள். நாம்தான் பொறுமையாக நடந்துகொள்ள வேண்டும்", என்பார்கள். "நீங்கள்தானே குரல் கொடுக்கச் சொன்னீர்கள்" என்றால், புன்சிரிப்போடு, "என்ன செய்வது? குழந்தைகள், குடும்பம் என்றான பின்பு நம்மைப் பற்றி எங்கே நினைப்பது?" என்பார்கள்.

என் மாமியின் உடன் பிறந்தவர்கள் ஓர் அண்ணன், ஓர் அக்கா, ஒரு தம்பி, ஒரு தங்கை. 1957இல் எங்கள் திருமணம் நடந்தது. அன்று முதல் நான் அறிந்தவரை தன் சுற்றம் பேணிக் காத்து, எல்லோருடைய வாழ்விலும் முன்னேற்றம் காண உழைத்தவர்கள் என் மாமியார். வீட்டில் எப்பொழுதும் சுற்றம் சூழ்ந்திருக்கும். என் மாமனார், மாமியாரின் சுற்றத்தாரைத் தம் சுற்றமாகக் கருதி உதவினார். அதற்கு உறுதுணையாக விளங்கியவர் மாமியார். தம் பிறந்த வீட்டு மனிதர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று சண்டையிடும் பெண்களைக் காணலாம். ஆனால் இங்கு, "அளவுக்கு அதிகமாகச் செய்கிறோம் என்று எனக்குப்படுகிறது. நமக்குப் பெண் குழந்தைகள் இருக்கிறார்கள். பார்த்துச் செய்யுங்கள்" என்று சில நேரம் என் மாமியாரே தம் கணவரைக் கட்டுப்படுத்துவதுண்டு.

நாங்கள் அவ்வப்போது குடும்பத்தோடு எல்லோரும் ஒன்று கூடுவதுண்டு. அப்பொழுதெல்லாம் பேரக்குழந்தைகளோடு குழந்தையாகிக் குதூகலிப்பார்கள். என் இரண்டாவது மகன் குமணன் கதை சொல்வதில் வல்லவன். அவன் திரைப்படம் பார்த்து விட்டு வந்து பாட்டியின் படுக்கைக்குப் பக்கத்தில் அமர்ந்து அழகாகக் கதைசொல்வான். ஒரு குழந்தையின் மலர்ச்சியோடு அதனைக் கேட்டு மகிழ்வார்கள். தம் உடல்நிலை சரியில்லையென்றாலும் பேரக்குழந்தைகள் என்ன கேட்டாலும் உடனே செய்து கொடுப்பார்கள்.

எங்கள் குடும்ப மருத்துவர் டாக்டர் குமாரசாமி அவர்கள். முப்பது ஆண்டுகளுக்கு மேலாக அவர்தாம் எங்கள் எல்லோருக்கும் மருத்துவர். அடுத்து டாக்டர் கோவிந்த ராஜன் அவர்கள். இருவருமே தங்கள் சொந்தத் தாயைக் கவனிப்பது போன்றுதான் என் மாமியைக் கவனித்தனர். இதய நோயால் அவதியுற்றபோது இருவரும் அன்போடு மருத்துவம் அளித்தனர். அந்த அளவில் அவர்களின் அன்பைப் பெற்றவர் என் மாமியார். இருவரையும் தம் மகன்களைப் போலவே எண்ணி எப்போதும் நலம் விசாரிப்பார்கள்.

நல்ல சுவையோடு சமைப்பதில் வல்லவர்கள். தம் குழந்தைகள் ஒவ்வொருவருக்கும் என்ன பிடிக்கும் எனப் பார்த்துப் பக்குவமாகச் செய்து அவரவர் வரும் நேரம் காத்திருந்து பரிமாறுவார்கள். வீட்டிற்கு வந்த மருமகள்களுக்கும் அவ்வாறே, அவர்கள் சுவை அறிந்து சமைத்து மகிழ்வித்தார்கள். எப்படி இவர்களால் இவ்வளவு பொறுமையாகச் செய்ய முடிகிறது என நான் வியந்ததுண்டு. அப்பொழுதெல்லாம் பாரதிதாசனாரின் ‘குடும்ப விளக்கு’ நூலில் வரும் கதை நாயகிதான் என் நினைவுக்கு வருவாள்.

அவர்கள் இருந்தவரை, எல்லோரும் ஒற்றுமையாக ஒருவருக்கு ஒருவர் உதவியாக வாழ வேண்டும் என விரும்பினார்கள். பிள்ளைகள் எல்லோருமே தாயின் விருப்பத்திற் கேற்ப இன்றளவும் நடந்து வருகின்றனர்.

நல்ல மகளாக, சகோதரியாக, வாழ்க்கைத் துணையாக, இல்லத்தரசியாக, தாயாக, மாமியாக மட்டுமல்லாது எல்லோரும் போற்றும் நல்ல மனித நேயம் உள்ளவராக வாழ்ந்த என் மாமியார் திருமதி கண்ணம்மாள் அவர்களைப் பற்றி எண்ணும்போது,

அப்பன் நீ அம்மை நீ அன்புடைய
மாமனும் மாமியும் நீ . . . .

என்ற நாவுக்கரசரின் திருத்தாண்டக வரிகளே என் நினைவுக்கு வரும். என் அன்புடைய மாமியின் நினைவைப் போற்றி வணங்குகிறேன்.

❖ ❖ ❖

நினைத்துப் பார்க்கிறேன்

மா.இரா. வஞ்சிக்கோவன்

உறங்குவதும் விழிப்பதுமான கால ஓட்டத்தில் கடந்துபோன வாழ்க்கையின் நடந்து முடிந்த சம்பவங்களை நினைத்துப் பார்க்கிறேன். இதயத்தின் ஒரு மூலையில் உறங்கிக்கொண்டிருந்த நினைவு மலர்கள் பூத்து உதிர்கின்றன.

எப்போதும் படிப்பு - எழுத்து - சிந்தனை - இவர்தான் எங்கள் அப்பா. ஓயா உழைப்பின் - சலியா உழைப்பின் முழு வடிவம் அவர்கள். நாங்கள் உறங்கப்போகும்போதும் படித்துக் கொண்டிருப்பார்கள். எப்போது படுப்பார்கள்? எப்போது எழுவார்கள்? அது, நாங்கள் அறியாத ஒன்று.

நாங்கள் எந்த வகையிலும் சிறிதும் துன்பப்படக்கூடாது என்பதில் அப்பா அதிக அக்கறை காட்டினார்கள். ஆரம்ப நாட்களில் நாங்கள் வாடகை வீடுகளில்தான் இருந்தோம். வாடகை வீடுகள் என்றாலும், பிற குடித்தனங்கள் இல்லாத தனி வீடுகளைத்தான் விரும்புவார்கள். எந்தவிதத்திலும் தம் குழந்தைகளுக்கு வசதிக் குறைவுகள் இருக்கக்கூடாது என்று கருதினார்கள்.

தொடக்க காலத்தில் நாங்கள் வசித்த வீட்டில் மின்விளக்கு கிடையாது. அரிக்கேன் விளக்குதான். அரிக்கேன் விளக்கை ஏற்றி வைத்துக்கொண்டு, மணிக்கணக்காக மேசைமுன் அமர்ந்து, அவர்கள் படித்துக் கொண்டும், எழுதிக் கொண்டும் இருந்த காட்சிகளெல்லாம் நினைவிற்கு வருகின்றன. டாக்டர் பட்டம் உட்பட, அவர்களுடைய தொடக்க காலச் சாதனைகளெல்லாம் அரிக்கேன் விளக்கிலேயே நடந்தன. அப்பா பயன்படுத்தும் விளக்கைத் துடைத்து வைப்பது, அதற்கு எண்ணெய் இடுவது - இவையெல்லாம் என்னுடைய பணிகள்.

காலையில் பள்ளிக்குச் செல்லுதல், பள்ளிவிட்டதும் நேரே "நேஷனல் பப்ளிஷிங் ஹவுஸ்" (அந்நாளில் அப்பாவின் நூல்களை அதிகம் வெளியிட்டவர்கள்) என்னும் நூல் வெளியீட்டகத்துக்குச் சென்று, நெடுநேரம் பதிப்புப் பணிகள் தொடர்பாகக் கலந்துரையாடுதல், இரவு ஒன்பது மணிக்குமேல் வீடு திரும்புதல், பத்து மணிக்குமேல் படிப்பும் எழுத்தும். இவைதாம், எங்கள் தந்தையாரின் அன்றாடக் கடமைகள். பெரும்பாலும் இவற்றில் மாறுதல் ஏதும் இராது. ஏறக்குறைய ஒவ்வொரு வார இறுதியிலும் சனி, ஞாயிறுகளில் ஆராய்ச்சிக்காக வெளியூர் செல்வது வழக்கம். மொத்தத்தில், அவர்கள் வீட்டில் இருப்பது அபூர்வம். சில சமயங்கள், நானும் அவர்களுடன் செல்லும் வாய்ப்புகள் அமைந்ததுண்டு. கோவில்கள், கல்வெட்டுகள், சிலைகள் இவற்றை ஒளிப்படம் எடுக்க என்னையும் அழைத்துச் சென்றதுண்டு.

எங்களுக்கு எப்போதுமே அப்பாவிடம் பயம் கலந்த மரியாதை உண்டு. நெருங்கி, உரிமையோடு பழகும் வாய்ப்புகள் அதிகம் அமைந்ததில்லை. பல்வேறு ஆய்வுப் பணிகளுக்கிடையில்

அதற்கெல்லாம் அவர்களுக்கு நேரம் அமைவது அரிதாக இருந்தது. எங்கள் நெருக்கம், பழக்கம் எல்லாம் அம்மாவோடுதான் அதிகம்.

எங்கள் வளர்ச்சியில் அதிக அக்கறையும் ஆர்வமும் உடையவர்கள் எங்கள் தந்தையார். படிப்பில் - விளையாட்டில் எங்களில் யாராவது முதலாவதாக வந்தால், அவர்களைப் பாராட்டி, பரிசுகள் தந்து ஊக்கப்படுத்துவார்கள். பள்ளியில் சுற்றுலாக்கள் செல்வது என்றால், விருப்பத்தோடும் மகிழ்வோடும் அனுப்பி வைப்பார்கள். பயணங்கள் தரும் அனுபவங்கள் வாழ்க்கையை வளப்படுத்தும் என்ற கண்ணோட்டம் உள்ளவர்கள் அவர்கள். நாங்கள் எந்த வகையிலும் ஒரு சிறிதும் துன்பப்படக்கூடாது என்பதில் அதிக அக்கறை காட்டினார்கள். ஆரம்ப நாட்களில் நாங்கள் வாடகை வீடுகளில்தான் இருந்தோம். வாடகை வீடுகள் என்றாலும், பிற குடித்தனங்கள் இல்லாத தனி வீடுகளைத்தான் அப்பா விரும்புவார்கள். எந்த விதத்திலும் தம் குழந்தைகளுக்கு வசதிக் குறைவுகள் இருக்கக் கூடாது என்று கருதினார்கள்.

சமுதாய சீர்திருத்தங்களில் ஆழ்ந்த விருப்பம் உள்ளவர்கள் அப்பா. தமிழர்தம் திருமண முறைகள் பற்றி அவர்களுக்கென்று சில கொள்கைகள் உண்டு. "சாதி வேறு பாடற்ற சமுதாயம்" அவர்களுடைய இலட்சியக் கனவுகளில் ஒன்று. இச்சமுதாய மாற்றத்திற்குக் கலப்பு மணம் அவசியம் என்பது அவர்கள் கருத்து. இதை, தம் எழுத்திலும் பேச்சிலும் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்கள். வெறும் வாய்ச்சொல் வீரராக மட்டும் இருந்துவிடாமல், செயல் வீரராகவும் திகழ்ந்தது அவர்களுடைய தனிச்சிறப்பு.

அப்பா முன்னின்று விருப்பத்தோடு நடத்திவைத்த எங்கள் வீட்டுத் திருமணங் களையே இதற்குச் சான்றாகக் கொள்ளலாம். என்னுடைய திருமணம் பற்றி இங்குக் குறிப்பிட விரும்புகிறேன். என் திருமணம் காதல் திருமணம். வேறு இனத்துப் பெண்ணை விரும்பி மணந்தவன் நான். எங்கள் காதலை வரவேற்று, பல எதிர்ப்புகளுக்கிடையே என் திருமணத்தை நடத்தி வைத்தார்கள். பொதுவாக, காதல் திருமணம் செய்பவர்கள் வெளியேறுவார்கள் அல்லது வெளியேற்றப்படுவார்கள். இந்த நடைமுறைக்கு முற்றிலும் மாறாக, என் குடும்பத்தைத் தம்முடனே இருக்கச்செய்து, நெறிப்படுத்தி, ஆளாக்கி விட்டார்கள். எங்கள் நாட்கள் நிறைவோடும் மகிழ்வோடும் கழிந்து கொண்டிருக்கின்றன. என்னுடைய வாழ்வின் வளர்ச்சி நிலைகளுக்கெல்லாம் எங்கள் தந்தையார் அவர்களின் அந்தப் பேருள்ளமும் பெருந்தன்மையுமே அடிப்படை. நிறைந்த மனத்தோடும் நன்றி யுணர்வோடும் இன்று அதை நினைத்துப் பார்க்கிறேன்.

விருந்தோம்பலில் மிகச் சிறந்தவர்கள். "ஏன் அரிசி மூட்டை தீராமல் இருக்கிறது?" என்றுதான் கேட்பார்களே அல்லாமல், "எப்படித் தீர்ந்தது?" என்று கேட்டு அறியாதவர்கள். ஒல்லும் வகையெல்லாம் பிறருக்கு உதவுவதை இனிய கடமையாகக் கருதியவர்கள் அப்பா. அவர்களால் வாழ்வு பெற்றவர்கள் மிகப் பலர். இன்னார் இனியார், அறிந்தார் அறியாதார் என்று வேறுபாடு இல்லாமல், முடிந்தவரையில் முடிந்தவர் களுக்கெல்லாம் உதவியவர்கள். பகைவர்க்கும் அருளும் நெஞ்சம் அவர்தம் தனிச்சிறப்பு. தாம் செய்யும் உதவிகளுக்கு விளம்பரம் தேடாதவர்கள். ஏழை - பணக்காரர், படித்தவர் - படிக்காதவர் என்ற வேறுபாடு இல்லாமல், எல்லோரிடமும் ஒரே மாதிரியான அன்போடும், ஆர்வத்தோடும் அவரவர் நலன்களில் அக்கறையோடும் பழகுவார்கள். பேச்சிலும் எழுத்திலும் எளிமை வேண்டும் என்னும் கொள்கை உடையவர்கள். எளிமையும் இனிமையும் அப்பாவின் உடைமைகள்.

அப்பா, பெரியபுராணத்தில் ஆழ்ந்த ஈடுபாடு உடையவர்கள் என்பது அனைவரும் அறிந்த உண்மை. நாங்களும் பெரியபுராணம் படிக்க வேண்டும் என்று விரும்பினார்கள். பள்ளி நாட்களில் நாளும் மாலை நேரத்தில் அம்மா சொல்லித்தர, நாங்கள் பெரிய புராணப் பாடல்களைப் பாடுவது வழக்கம்.

அப்பாவின் வெற்றிகளுக்கெல்லாம் பின்னணியாக இருந்தவர்கள் அம்மா. குடும்பப் பொறுப்பு முழுவதும் அம்மாவுடையதே. குடும்பம் சார்ந்த அனைத்தையுமே தாமே கவனித்துக்கொண்டு, அப்பாவை முழுமையாகப் படிப்பிற்கே தந்து விட்டார்கள். வீட்டுப் பொறுப்பு, எங்களைக் கவனிக்கும் பொறுப்பு, இவற்றோடு அப்பாவிற்கு உரிய எல்லா வற்றையும் கவனிக்கும் பொறுப்பு - இவை அனைத்தையும் தளராது செய்துவந்த எங்கள் அம்மாவின் ஆற்றலையும் பொறுமையையும் எண்ணும்போதெல்லாம் வியந்து நிற்போம்.

தந்தையார் வாழ்ந்த வீட்டிலேயே (14, மேட்டுத் தெரு, சென்னை - 1), அவர்கள் பெயரால் ஒரு குழந்தைகள் பள்ளி நடத்தும் வாய்ப்பு எனக்கு அமைந்துள்ளதைப் பெரும் பேறாக எண்ணுகிறேன்.

பெரும்பகுதி முகமதிய குழந்தைகளும் தாழ்த்தப்பட்டவர்களாகக் கருதப்படும் இனத்தைச் சேர்ந்த குழந்தைகளும் எங்கள் பள்ளியில் பயிலுகின்றனர். சாதி, மத வேறுபாடுகளைக் கடந்த எங்கள் தந்தையாரின் பெயரால் நடத்தப்படும் எங்கள் பள்ளியில் வெவ்வேறு சமயத்துக் குழந்தைகள் - பல்வேறு மொழி பேசும் குழந்தைகள் - இவர்களுக்கெல்லாம் தமிழ்ப் பயிற்றுவிக்கும் பேறு - அரிய வாய்ப்பு அமைந்துள்ளது. இதை என் தந்தைக்காற்றும் நன்றியாக எண்ணி நிறைவடைகிறேன்.

விவரம் தெரியாத வயதில் மரியாதையோடும் பயத்தோடும் அவர்களுடன் பழகி னோமே தவிர, அவர்களுடைய பெருமையை முற்றும் உணர்ந்து, அவர்களுடைய அருங் குணங்களையும் சிறப்பியல்புகளையும் அறிந்து உணரக்கூடிய வயதில் அவர்களை இழந்து விட்டு நிற்கிறோம். பிறவி உண்டு என்பது உண்மையென்றால், எத்தனை பிறவிகள் எடுத்தாலும் இவர்களுக்கே மக்களாகப் பிறக்க வேண்டும் என்பதே எங்கள் விருப்பம்.

❖ ❖ ❖

இன்னொரு தாய்

திருமதி இராதா வஞ்சிக்கோவன்

அண்ணன்கள், அக்கா, தங்கை என மிகப் பெரிய குடும்பத்தில் பிறந்தவள் நான். அதே போன்று பெரிய குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர்தான் என் கணவரும். இருவரும் மனம் ஒருமித்துத் திருமணம் செய்ய முடிவு செய்தபோது எழுந்த சிக்கல்கள் பல. அவற்றையெல்லாம் எதிர்கொண்டு மணம் செய்வதில் உறுதியாக இருந்த எங்களை மனமுவந்து ஏற்றுக் கொண்டவர் என் மாமியார். எப்பொழுதும் ஒரு குடும்பத்தில் இத்தகைய நிகழ்ச்சிகளுக்கு எதிர்ப்பு என்பது பெண்களிடமிருந்துதான் வரும். ஆனால் மாமனார், மாமியார் இருவருமே எங்களை வாழ்த்தினார்கள்.

முதல் குழந்தை பிறந்தபோதும் அடுத்தடுத்த மகப்பேறுகளின் போதும் எனக்கு உற்ற துணையாக இருந்து தாயினும் பரிவு மிகக் காட்டி உதவியவர் என் மாமியார். நானும் என் கணவரும் ஆசிரியப் பணியில் இருந்ததனால், இருவரும் காலையில் புறப்பட்டுச் சென்றால் மாலைதான் திரும்புவோம். எங்கள் மகன் இராசராசன் மிகவும் துறுதுறுப்பானவன். ஓரிடத்தில் நிற்காமல் அங்குமிங்கும் ஓடுவான்; குறும்புகள் செய்வான். உடல் நலம் குன்றியிருந்தபோதும் என் மகனின் குறும்புத்தனங்களைப் பொறுத்துக்கொண்டு அவனைக் கண்ணின் இமைபோல் காத்தவர் அன்பிற்குரிய என் மாமியார்.

பிள்ளைகள் பெண்கள் மருமகன்கள் மருமகள்கள் எனப் பிரித்துப் பார்க்காமல் எல்லோரிடமும் அன்பும் பாசமும் கொண்டு, பண்போடும் பரிவோடும் நடந்துகொண்ட என் மாமியாரின் பெருந்தன்மையை நான் பலமுறை எண்ணியெண்ணி வியந்ததுண்டு.

வீட்டிலிருந்த எல்லோரும் படிப்புக்காகவும் பணிக்காகவும் வெளியே செல்ல வேண்டிய நிலையில் இருந்தனர். பகல் நேரத்தில் மாமியார் மட்டுமே வீட்டில் இருப்பார்கள். விடியற் காலை யிலேயே சமையல் அறை சுறுசுறுப்பாக இயங்கும். என் மாமியார் தான் உணவு தயாரிப்பார்கள். எல்லோருக்கும் மதிய உணவு கட்டித் தருவார்கள். காலையில் எட்டு மணிக்கெல்லாம் உணவு தயாராகி விடும். மாமியார் பெரிய பாத்திரத்தில் சாம்பார் சாதம் கலந்து அனைவரையும் வட்டமாக உட்காரச் செய்து சாதத்தை உருட்டிக் கையிலே கொடுப்பார்கள். எல்லோரும் அவசர அவசரமாக உண்பார்கள். குடும்பத்தில் இருந்த அனைவரும் ஒற்றுமையுடன் இருக்கின்றனர் என்பதை அந்தச் செயலின் வழியாக உணர முடியும். இன்றைக்கும் அந்தக் காட்சியை நினைத்துப் பார்த்தால் எனக்குப் பெருமையாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கும்.

எனக்கும் என் கணவருக்கும் கருத்து வேற்றுமை ஏற்பட்டு, பிணக்கு வந்தால் நான் நேரே என் மாமியாரிடம் சென்று முறையிடுவேன். எனக்கு ஆதரவாகவும் அதே சமயம் தம் மகனை

விட்டுக் கொடுக்காமலும் பேசி என்னைச் சமாதானப்படுத்தி அனுப்பிவிட்டு என் கணவரின் அண்ணியிடம் அதுபற்றிப் பேசி மனம் வருந்துவார்கள் என்பதை அறிந்த பொழுது என் மனம் நெகிழ்ந்ததுண்டு.

பிள்ளைகள் - பெண்கள் - மருமகன்கள் - மருமகள்கள் எனப் பிரித்துப் பார்க்காமல் எல்லோரிடமும் அன்பும் பாசமும் கொண்டு, பண்போடும் பரிவோடும் நடந்துகொண்ட என் மாமியாரின் பெருந்தன்மையை நான் பலமுறை எண்ணியெண்ணி வியந்ததுண்டு. அவர்கள், யாரையும் கடிந்து சுடுசொற்கள் கூறியதை நான் கேட்டதில்லை. அவர்களோடு வாழ்ந்த காலத்தில் அவரின் அருமை பெருமைகளை அதிகமாக உணர முடியவில்லை. இல்லாதபோது அவர்களைப் பல நேரங்களில் நான் நினைக்கின்றேன். எத்தனையோ சந்தர்ப்பங்களில் அவர்கள் எனக்கு இன்னொரு தாயாக இருந்து பாதுகாத்தார்கள். அதை எல்லாம் எண்ணும்போது அவர்கள் நினைவுகள் மனத்தில் நிறைந்து கண்கள் பனிக்கும். இன்றும் நன்றியோடும் அன்போடும் அவர்களை நினைத்துப் போற்றுகின்றேன். அவர்கள் என்றும் என்னுள் இருப்பார்கள்.

❖ ❖ ❖

சோர்விலா எங்கள் அன்னை

திருமதி தமிழரசி வேலுச்சாமி

தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்

என்னும் குறட்பாவிற்கு ஏற்றதொரு நற்சான்றாக எங்கள் அம்மா வாழ்ந்தார்கள். எங்கள் அம்மாவின் பெயர் கண்ணம்மாள். எங்கள் அனைவர்க்கும் கண் போன்றவர்கள். அவர்களை எப்போது நினைத்தாலும், தன் நற்பண்புகளால் சிறந்து விளங்கி, தன் கணவர்க்குப் பல்லாற்றானும் உறுதுணையாகத் திகழ்ந்து, அனைவரிடமும் கனிவான பேச்சினால் நட்புடன் பழகி, வாழ் நாளெல்லாம் குடும்பத்தின் முன்னேற்றத்திற்கென்று ஓயாது ஒழியாது உழைத்த உழைப்பே என் கண்முன் தோன்றுகின்றது.

எங்கள்அம்மா நல்ல சிவந்த நிற மேனியுடையவர்கள். வட்ட வடிவமான முகம். அதில் எப்போதும் தெரியும் கனிவு நிறைந்த புன்னகை. அதே சமயம், தான் சொன்னதைக் கேட்டுப் பிள்ளைகள் நடக்கவில்லையென்றால் அவர்களைக் கண்டித்துத் திருத்தும் குணம். அம்மாவிற்குக் கோபமும் வரும். ஆனால் அதிக நேரம் நீடிக்காது. அவர்கள் உடை எப்போதும் எளிமையாகவே இருக்கும். பிள்ளைகளும் அவர்கள் வழியிலேயே எளிமையாக வளர்ந்தார்கள்.

அம்மா எங்கள் தந்தையாரை மணம் செய்தபோது எட்டாவது வரைதான் படித்திருந்தார்கள். அக்கால வழக்கப்படி பாட்டு, தையல் ஆகியவற்றில் தேர்ச்சி பெற்றிருந்தார்கள். திருமணத்திற்குப் பின்னர், மூன்று குழந்தைகளுக்குத் தாயான பிறகே அப்பாவின் விருப்பத்திற்கிணங்கி வித்துவான் பட்டம் பெற முனைந்தார்கள். எங்கள் தந்தையார், பெண்களும் கல்வியிற் சிறந்து விளங்கி, தம்மையும் குழந்தைகளையும் கவனித்துக்கொள்ளும் மன உறுதியும் துணிவும் பெற வேண்டும் என்பதை வலியுறுத்துவார்கள். அக்கொள்கைப்படி, எங்கள் அம்மாவைப் படிக்குமாறு தூண்டி னார்கள். அம்மாவும் கணவர் கருத்திற்கு மறுப்புக் கூறாது குழந்தை களையும் குடும்பப் பொறுப்புகளையும் கவனித்துக்கொண்டு படித்துத் தேர்வெழுதி வெற்றி பெற்றார்கள். அம்மா வித்துவான் தேர்வு எழுதியபோது நான் அம்மாவின் வயிற்றில் இருந்தேனாம். அதனால்தான் நான் நன்றாகப் படிக்கிறேன் என்று அந்நாளில் எங்கள் அம்மா அடிக்கடி கூறுவார்கள்.

மனிதநேயமே இறைவழிபாடு என்ற கருத்தை எங்கள் அனைவர் மனங்களிலும் அம்மா, தம்செயல்களால் பதிய வைத்தார்கள்.

எங்கள் பள்ளிப் பருவத்திலேயே அம்மா எனக்கு நல்ல கர்நாடக சங்கீதம் கற்றுத் தந்துள்ளார்கள். அவற்றுள் சில பாடல்கள் இன்றும் என் நினைவில் உள்ளன. அம்மா பயன்படுத்திய சுருதிப் பெட்டியைக்கூட என்னிடம் கொடுத்து, "பாடுவதை விட்டு

விடாதே. இச்சுருதிப்பெட்டி உன் குழந்தைகளுக்கும் பயன்படும்," என்று கூறினார்கள். அவர்களுக்குப் பாட்டில் இருந்த ஆர்வத்தையும் அந்த ஆர்வம் தன் பேத்திகளுக்கும் தொடரவேண்டும் என்ற விருப்பத்தையும் இன்றும் என்னால் மறக்க முடியவில்லை.

நான் எட்டாவது படித்துக் கொண்டிருந்தபோது எங்கள் பள்ளியின் தலைமை ஆசிரியை ஒரு நாள் எங்கள் வகுப்பிற்கு வந்து, "உங்களில் யாருடைய அம்மாவாவது படித்துவிட்டு வேலைக்குச் செல்லாமல் வீட்டில் இருக்கிறார்களா?" என்று வினவினார். நான் உடனே எழுந்து நின்று, "எங்கள் அம்மா தமிழ் வித்துவான் படித்தவர்கள். ஆனால், வேலைக்குச் செல்லவில்லை" என்றேன். ஆசிரியர்கள் கேள்விக்கு அஞ்சாமல் விடை சொல்லும் துணிவை எங்கள் அம்மா எங்களுக்குக் கற்றுத் தந்திருந்தார்கள்.

அடுத்த நாளே எங்கள் தலைமை ஆசிரியை வீட்டுக்கு வந்து எங்கள் தந்தையிடம் பேசி, அவருடைய ஒப்புதலோடு அம்மாவை எங்கள் பள்ளியில் தமிழாசிரியையாக நியமித்துவிட்டார். நான் ஓராண்டு எங்கள் அம்மாவிடம் தமிழ் கற்கும் பேறு பெற்றவளானேன். அம்மா எங்கள் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றிய போது, தம் கல்வித் திறனை நன்கு கற்பிப்பதன் மூலம் வெளிப்படுத்தினார்கள். அம்மா நன்றாகப் படிக்கும் மாணவிகளை மேலும் நன்கு படிக்க ஊக்கப்படுத்துவார்கள்; பாராட்டுவார்கள், தமிழைச் சரியாகப் படிக்க இயலாதவர்களைத் தனியே அழைத்துக் கற்பித்து நல்ல மதிப்பெண்கள் பெற உதவுவார்கள்.

பின்னர், சில ஆண்டுகள் கழித்து அம்மா கல்லூரியிலும் பணிசெய்யும் வாய்ப்பு ஏற்பட்டது. எங்கள் தந்தையார் மதுரைத் தியாகராசர் கல்லூரியில் பணியாற்றியபோது, எங்கள் அம்மா மதுரைப் பாத்திமா கல்லூரியில் தமிழ்த்துறையில் பணியாற்றினார். கல்லூரியிலும் நான் இரு ஆண்டுகள் அம்மாவிடம் பயின்று, அவர்கள் கற்பிக்கும் திறமையைச் சக மாணவிகள் பாராட்டும்போது கேட்டு மகிழ்ந்ததுண்டு. நீண்ட நாட்கள் நான் அவர்களின் மகள் என்பதே என்னுடன் பயின்ற மாணவிகளுக்குத் தெரியாது. இவ்வாறு பள்ளியிலும் கல்லூரியிலும் எங்கள் அம்மா மாணவிகள் விரும்பும் ஆசிரியை யாகத் திகழ்ந்தார். இன்றுகூட அம்மாவிடம் படித்தவர் யாரையாவது எங்கேயாவது பார்க்க நேர்ந்தால் "கண்ணம்மா டீச்சர் நன்றாகக் கற்பிக்கும் ஆசிரியை; மாணவிகளை அன்புடன் அணுகுவார்கள்; அவர்களை மறக்கவே முடியாது" என்று கூறுவதைக் கேட்கும்போது நான் மிகுந்த மகிழ்ச்சி அடைவதுண்டு. அந்த நாளில் நல்லாசிரியர் என்ற விருதினை மாணவிகளிடமிருந்து பெற்ற ஆசிரியை எங்கள் அம்மா. பிற்காலத்தில் நாங்கள் அனைவரும், ஒரு தம்பி தவிர, ஆசிரியத் தொழிலுக்கு வந்ததற்குக் காரணம் எங்கள் பெற்றோர் இருவரும் நல்லாசிரியர்களாகத் திகழ்ந்தமையேயாகும்.

எங்கள் அம்மா இறைப்பற்று மிகுந்தவர்கள். பல பக்திப் பாடல்களை எங்களுக்குக் கற்பித்தார்கள். அவற்றை இன்றுவரை நான் மறக்கவில்லை. அதுமட்டுமன்றி, மனித நேயமே இறைவழிபாடு என்ற கருத்தையும் எங்கள் அனைவர் மனங்களிலும் தம் செயல்களால் பதிய வைத்தார்கள். அப்பாவும் அம்மாவும் எங்கள் உறவினர்களுக்கும் தெரிந்தவர்களுக்கும் உதவிநாடி வந்தவர்களுக்கும் தங்களால் இயன்ற உதவிகளைத் தயங்காமல் செய்தனர். "அனைவர்க்கும் நன்மை செய்ய வேண்டும்; எல்லோரிடத்தும் அன்புடனும் மரியாதையுடனும் பழக வேண்டும்; பெரியவர்களை மதிக்க வேண்டும்; உறவினர்களைப் பேண வேண்டும்; பிறர்க்கு நல்லது செய்தால் நன்மை விளையும்; தீமை செய்தால் துன்பம் உண்டாகும்", என்பன போன்ற நல்ல கருத்துகளைச் சிறு வயதிலேயே எங்கள் மனத்தில் பதியுமாறு சிறுசிறு கதைகள் மூலமும் தங்களின் நற்செயல்கள் வாயிலாகவும் விளக்கியுள்ளார்கள். இவ்வாறு எங்கள் பெற்றோரே, இறைப்பற்றுடன் நற்பண்புகளைப் பெற்று நன்மக்களாக நாங்கள் வாழ வழிகாட்டினர். அவர்களே அப்படி வாழ்ந்து எங்கள் அனைவர்க்கும் வழிகாட்டியாகத் திகழ்ந்தார்கள்.

அம்மா, பிறர் துன்பம் போக்கும் இளகிய மனமுடையவர்கள். எங்கள் வீட்டுக்கு எதிர் வீட்டிலிருந்த ஒரு பையனுக்குத் தினமும் காலையில் எங்கள் வீட்டில்தான் உணவு.

அவர்கள் சற்று வசதி குறைந்த குடும்பம். அதனால், அவன் பள்ளிக்குப் புறப்படுவதற்கு முன்பு தினமும் காலையில் இங்குதான் உணவருந்துவான். துடைப்பம் விற்கும் அம்மா, காய்கறி விற்கும் அம்மா ஆகியோர்க்கும் பெரும்பாலும் எங்கள் வீட்டில் மதிய உணவு கிடைத்துவிடும். துடைப்பம் விற்கும் பெண்மணி தினமும் எங்கள் வீட்டுக்குமுன் வந்து, "துடைப்பம் வேண்டுமா அம்மா?" என்று கேட்க, "தினமும் துடைப்பம் யாராவது வாங்குவார்களா? போய்வா அம்மா," என்று எங்களில் ஒருவர் கூறினாலும் உடனே எங்கள் அம்மா, "அவளை விரட்டாதே. அவள் துடைப்பம் விற்க வரவில்லை. ஏதேனும் சாப்பிடக் கிடைக்குமா என்றுதான் வருகிறாள். இருக்கச் சொல். நான் கொண்டு வருகிறேன்", என்று கூறி அந்தம்மாவிற்கு உணவு கொடுப்பார்கள். ஏழைகளுக்கு இரங்கும் உள்ளம் அவர்களுக்கு.

அம்மா எங்கள் தந்தையார் முன்னேற்றத்திற்குப் பெரிதும் உறுதுணையாக இருந்தார்கள். காலையில் எழுந்ததிலிருந்து இரவு படுக்கப்போகும் வரை ஓயாத உழைப்புதான். எங்களையும் தந்தையையும் நன்கு கவனித்து, உணவு படைத்து, பள்ளிக்கும் கல்லூரிக்கும் அனுப்புவது வரை எல்லாம் அம்மாதான். எங்கள் தந்தையார் ஆசிரியர் பணி மட்டுமன்றிப் பிற துறைகளிலும் தம்மை வளர்த்துக் கொள்வதற்கு, திறம்படச் செயலாற்றுவதற்கு அம்மா உறுதுணையாக இருந்தார்கள்.

அவர்களுக்குத் திருமணம் ஆனபோது, அப்பா பள்ளி இறுதித் தேர்வை மட்டுமே முடித்து இடைநிலைப் பள்ளி ஒன்றில் ஆசிரியராக இருந்தார். அம்மா, மனைவியாக வந்தபிறகே பல பட்டங்களைப் பெற்று இறுதியாக முனைவர் பட்டமும் பெற்றார்கள்; பல்கலைக்கழகப் பேராசிரியராகவும் உயர்ந்தார்கள். இல்லறத்தை இனிது நடத்தி பிள்ளைகள் படிப்பு, உடல்நலம், வீட்டுப் பொறுப்பு ஆகியவற்றைத் தாமே கவனித்துக் கொண்டு அப்பா, வாழ்வின் உயர்ந்த நிலையை அடையவும் காரணமாக விளங்கினார்கள். அவ்வாறு பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளும் நிருவாகத் திறன் கொண்டிருந்தார்கள். கணவர் குறிப்பறிந்து, அவருடைய மனம் கோணாதபடி நடந்தவர் அம்மா.

பிள்ளைகளுடைய கல்வியினை அப்பா முடிவு செய்வார். அம்மா அதனை ஏற்றுக் கொள்வார்கள். அப்பா தமிழறிஞராக இருந்தமையால் நாங்கள் அனைவரும் தமிழையே விருப்பப் பாடமாகப் பயில வேண்டும் என்று விரும்பினார்கள். இந்நிலையில் எங்கள் தம்பியருள் ஒருவன் - கலைக்கோவன் படிப்பில் படுசுட்டியாக இருந்தான். அவன் நான்காம் வகுப்புப் படிக்கும்போதே இரட்டைத் தேர்ச்சி பெற்று ஆறாம் வகுப்பிற்கு அனுப்பப்பட்டான். அந்த மகனைப் பற்றி அம்மாவுக்குப் பெருமை உண்டு. அவனையும் தமிழ் பட்டப்படிப்பு படிக்க அனுப்பவேண்டும் என்று அப்பா சொன்னபோது முதன் முறையாக அம்மா தம் கணவர் கருத்தை மறுத்தார்கள். மதிநுட்பம் உடைய அவன் மருத்துவம் படிக்க வேண்டும் என்று அம்மா விரும்பினார்கள். அதனை அப்பாவிடமும் வற்புறுத்தினார்கள். அப்பாவும் அம்மாவின் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் அவனை மருத்துவப் படிப்பில் சேர்த்தார்கள். அவர் இன்று சிறந்த கண் மருத்துவராகத் திருச்சிராப்பள்ளியில் பணியாற்றி வருகிறார். அத்துடன், தமிழிலும் முனைவர் பட்டம் பெற்றுத் தந்தையின் பெருமையை நிலைநாட்டும் வகையில் கல்வெட்டு ஆய்வாளராகவும் புகழுடன் விளங்குகிறார். எங்கள் குடும்பத்தில் ஆடவர் இருவரும் மகளிர் இருவரும் முனைவர் பட்டம் பெற்றுள்ளோம். இவற்றுக்கெல்லாம் அடிப்படையாய் அமைந்தது, எங்கள் அம்மா எங்கள் கல்வியில் காட்டிய ஆர்வமும் அவர்கள் எங்களுக்களித்த ஊக்கமுமேயாகும்.

எங்கள் அம்மா அருமையாகச் சமைப்பார்கள். அவர்கள் வாழ்வின் இறுதிக் காலத்தில் எரிவாயு அடுப்பு வந்தபோதும் அதனை ஏற்காது. மண் அடுப்பில் விறகு வைத்துதான் சமையல் செய்தார்கள். குழம்பு, ரசம் வைக்க மண்பாண்டங்களைப் பயன்படுத்தினார்கள். இந்தக் காலத்தில் மண்பாண்ட சமையல் உடலுக்கு நல்லது என்று கூறுவதை அம்மா அப்போதே அறிந்திருந்தார்கள். உறவினர்களும் அப்பாவின்

நண்பர்களும் நேரங்கடந்து வந்தாலும் அடிக்கடி வந்தாலும் அலுத்துக் கொள்ளாமல் உணவு படைத்து உபசரிப்பார்கள். அம்மா வைக்கும் ரசம் மிகவும் அருமையாக இருக்கும்.

எங்கள் பெற்றோர் மகன் - மகள் என்று எந்த வேறுபாடும் காட்டியதில்லை. உணவு, உடை, கல்வி எல்லாவற்றிலும் அனைவரும் சமம்தான். பெண்கள் என்று ஏற்றத்தாழ்வு காட்டியது இல்லை. அதனால்தான் நாங்கள் அந்தக் காலத்திலேயே கல்லூரிகளில் கல்வி பயில முடிந்தது. சுயமாகச் சிந்தித்துச் செயல்படவும் தன்னம்பிக்கையுடன் வாழ்க்கையை நன்முறையில் நடத்திவெற்றி பெறவும் முடிந்தது. எங்கள் திருமணத்தின் பின்னர் உறவான மருமகன்கள், மருமகள்களையும் அம்மா தம் பிள்ளைகளாகவே கருதி அன்புடன் நடந்துகொண்டார்கள். உணவு வேளையின்போது பெண்கள், மருமகள்கள் ஆகிய அனைவரையும் ஒன்றாக அமரச்செய்து உணவு படைப்பார்கள். அனைவரும் உண்ட பிறகே அவர்கள் உண்பார்கள். எங்கள் வீட்டில் திருமணங்கள், வளைகாப்பு, பேரப் பிள்ளைகளுக்குப் பெயர் சூட்டல் என்று அம்மா செய்த மங்கலங்கள் பலவாகும்.

பேரக்குழந்தைகள் அனைவரும் பாட்டியிடம் பாசமாக இருந்தார்கள். பொங்கல், தீபாவளி என்றால் அத்தனைப் பிள்ளைகளும் பேரக்குழந்தைகளும் ஒன்றுசேரும் இடமாகப் பாட்டி வீடு விளங்கியது. அனைவரையும் ஒருசேரப் பார்ப்பதில் அம்மா மிகுந்த மகிழ்ச்சி அடைவார்கள். கோடை விடுமுறைக் காலங்களில் பேரக் குழந்தைகளுக்குப் பேரின்பம் தந்த இடம் பாட்டிவீடுதான். அவர்களுக்குப் பாட்டியின் அன்பும் கண்டிப்பும் பிடிக்கும்; பாட்டியின் சமையலும் பிடிக்கும்.

குழந்தைகள் தாங்கள் விரும்பியதை வாங்கித் தருமாறு பாட்டியைக் கேட்டால், அது தேவைதானா என்று பார்த்துத்தான் வாங்குவார்கள். பேரக்குழந்தைகள் அனைவரும் இன்றளவும் ஒருவருக்கொருவர் அன்புடன் பழகுவதற்கும் நல்ல உறவுடன் இருப்பதற்கும், அவர்களுக்குப் பாட்டி கற்றுக்கொடுத்த, விட்டுக்கொடுத்து அனுசரித்துப் போகும் மனப்பான்மையும் ஒற்றுமை உணர்வுமே காரணமெனலாம்.

எங்கள் அம்மாவிடத்தில் எனக்குப் பாசம் அதிகம். ஒருமுறை பணியின் காரணமாக நான் இடமாற்றம் பெற்று வெளியூருக்குச் சென்றுவிட்ட நிலையில் அம்மாவைச் சில மாதங்களாகச் சென்று காண இயலவில்லை. நான் பாரதி மகளிர் கல்லூரியில் இருந்தபோது எங்கள் அம்மா வீடு, அக்கல்லூரிக்கருகில் இருந்ததால் அம்மா வீட்டிற்குத் தினமும் மாலையில் சென்று அம்மாவுடன் சிறிது நேரம் இருந்துவிட்டு அதன் பின்னரே எங்கள் வீட்டுக்குச் செல்வேன்.

தினமும் அம்மாவைப் பார்த்துப் பேசும் நிலைமாறி, சில மாதங்கள் அவர்களைப் பார்க்காமல் இருந்ததை என்னால் தாங்க முடியவில்லை. அதனால் ஊரிலிருந்து வந்த அன்று மாலையே அம்மாவைக் காணப் புறப்பட்டுவிட்டேன். அம்மா மட்டும் வீட்டில் இருந்தார்கள். அம்மாவைப் பார்த்தவுடன் எனக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. "அம்மா, நலமாக இருக்கிறீர்களா?" என்று கேட்டுவிட்டு அம்மாவை அப்படியே கட்டி அணைத்துக்கொண்டேன். அம்மாவும் என் வரவால் மகிழ்ச்சியடைந்து கண் கலங்கினார்கள்.

எங்கள் அம்மா தம் பெற்றோர்க்குப் பிரியமான மகள்; உடன்பிறந்தவர்களுக்கு உதவும் சகோதரி; எங்கள் தந்தையின் உயர்வுக்கெல்லாம் உறுதுணையாக விளங்கிய அன்பு மனைவி; எங்கள் அனைவரின் நல்வாழ்வுக்கும் காரணமான நல்ல தாய்; எங்கள் வீட்டு மருமகள்கள், மருமகன்கள் மதிக்கக்கூடிய கனிவுடைய மாமியார்; பேரக் குழந்தைகளின் பாசமிகுந்த பாட்டி; தாம் வாழ்ந்த காலமெல்லாம் சோர்விலாது உழைத்த இல்லத்தரசி.

இத்தகைய பெருமைமிகு அம்மாவிற்குப் பிள்ளைகளாகப் பிறந்த எங்களின் பெறலரும் பேற்றினையும் இறையருளையும் எண்ணியெண்ணி நாங்கள் இன்றளவும் பெரிதும் மகிழ்கின்றோம்.

❖ ❖ ❖

உள்ளங்கவர் பேராசிரியர்

ச. வேலுச்சாமி

என் பேராசிரியரும் மாமனாருமாகிய டாக்டர் மா. இராச மாணிக்கனார் அவர்களின் நூற்றாண்டு மலரில் என் கருத்துகள் சிலவற்றை எழுதுவதற்கு வாய்ப்பு கிடைத்ததைப் பெரும்பேறாகக் கருதுகின்றேன்.

பேராசிரியரைச் சந்திப்பதற்கும் அதன் பின் அவரோடும் அவர் குடும்பத்தினரோடும் பழகுவதற்கும் அரிய வாய்ப்புகளை எனக்கு வழங்கிய இறைவன் திருவருளை நன்றியோடு நினைத்துப் பார்க்கிறேன்.

1953ஆம் ஆண்டு மதுரைத் தியாகராசர் கல்லூரியில் நான் பி. ஏ. முதலாம் ஆண்டு படிக்கும் பொழுது டாக்டர் மா. இராச மாணிக்கனார் தமிழ்ப் பேராசிரியராக அக்கல்லூரிக்கு வந்தார்கள்.

முதன்முதலாக எங்கள் வகுப்புக்கு வந்தபோது தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டு "நான் கண்டிப்பான ஆசிரியர்; வகுப்பில் நடக்கும் பாடங்களைக் கவனமாகக் கேட்க வேண்டும்; நன்றாகப் படிக்க வேண்டும்; வார இறுதியில் தேர்வுகள் நடக்கும்; ஒவ்வொரு மாணவனும் எடுக்கும் மதிப்பெண்கள் பதிவு செய்யப் பட்டு அவை தேர்வின் முடிவில் பேசும்", என்று கூறினார்கள். நாங்கள் பயந்துவிட்டோம். ஆனால், உண்மையில் மாணவர்களுடன் அன்பாகப் பழகுவார்கள்; வேடிக்கையாகப் பேசுவார்கள்; தம்மால் இயன்ற நிலைகளில் எல்லாம் மாணவர் களுக்கு உறுதுணையாக இருப்பார்கள்.

எங்கள் பேராசிரியர் மாணவர்களை ஊக்கப்படுத்துவதிலும் தன்னம்பிக்கை ஊட்டுவதிலும் வருங்காலத்தைத் திட்டமிடத் தூண்டுவதிலும் எப்பொழுதும் முனைப்பாக இருப்பார்கள்.

முதல் நாள் வகுப்பு முடிந்தபிறகு நண்பகல் உணவுக்குப்பின் நானும் நண்பர்களும் விடுதி அறையில் இருந்த பொழுது, தமிழ்த்துறையில் உதவியாளராக இருந்த திரு. மாரியப்பன் என்னிடம் வந்து, "தமிழ்ப் பேராசிரியர் இராசமாணிக்கனார் உங்களைக் கூப்பிடுகின்றார்கள்" என்றார். எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. என்னை ஏன் அழைக்கின்றார் என்று பயத்துடன் போனேன். மிகுந்த தயக்கத்தோடு பேராசிரியரைச் சந்தித்தேன். "உன் பெயரென்ன? நீ எந்த அறையில் தங்கியிருக்கிறாய்?" என்று கேட்டார். "என் பெயர் வேலுச்சாமி. சிவா விடுதியில் மூன்றாம் எண் அறையில் இருக்கிறேன்," என்று கூறினேன். "நான் நான்காம் எண் அறையில் தங்கப் போகிறேன். அதை ஒழுங்குபடுத்த மாரியப்பனுக்கு உதவி செய்" என்றார் பேராசிரியர். அப்பொழுது பேராசிரியர் அவர்களின் குடும்பம் குழந்தைகளின் படிப்புக்காகச்

சென்னையில் இருந்ததால் பேராசிரியர் கல்லூரி விடுதியில் தங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

பேராசிரியரின் வகுப்புகள் எப்போதும் கலகலப்பாக இருக்கும். பாடம் நடத்தும் பொழுது நகைச்சுவை இழையோடும். நாங்கள் மகிழ்ச்சியோடு கவனிப்போம்; பாடங்களும் மனத்தில் பதியும். அதனால் பேராசிரியரின் வகுப்புகளை மாணவர்கள் எப்போதும் விரும்புவார்கள்.

எங்கள் பேராசிரியர் மாணவர்களை ஊக்கப்படுத்துவதிலும் தன்னம்பிக்கை ஊட்டுவதிலும் வருங்காலத்தைத் திட்டமிடத் தூண்டுவதிலும் எப்பொழுதும் முனைப்பாக இருப்பார்கள். "நன்றாகப் படிக்க வேண்டும்; படிப்பதற்கு வயது கிடையாது. திருமணம் செய்து கொண்டும் வேலைக்குப் போன பின்பும் படிக்கலாம்; நல்ல முயற்சியும் கடுமையான உழைப்பும்தான் தேவை," என்று கூறுவார்கள். அப்படிக் கூறும்பொழுது தம் வாழ்க்கை அனுபவங்களை எங்களிடம் பகிர்ந்துகொள்வார்கள்.

"நான் பள்ளி இறுதி வகுப்பு வரைதான் படித்தேன்; சிறிது காலம் எழுத்தராகப் பணியாற்றினேன்; பின்னர் இடைநிலை ஆசிரியர் பணியில் சேர்ந்தேன்; பணியில் சேர்ந்த பிறகும் திருமணத்துக்குப் பிறகும் என் படிப்பு தொடர்ந்தது. முயன்று உழைத்துப் பல பட்டங்கள் பெற்றேன். அது போல் நீங்களும் படிக்க வேண்டும்; கடுமையாக உழைக்க வேண்டும்" என்று கூறுவார்கள்.

பேராசிரியர் தம் கடும் உழைப்பால் வித்துவானில் தொடங்கி பி. ஓ. எல்., எல். டி., எம். ஓ. எல்., பிஎச். டி. என்று பல பட்டங்கள் பெற்றார். எல்., டி. படிக்கும் பொழுது ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்து படிக்க வேண்டியிருந்ததால் சம்பள இழப்பு ஏற்பட்டது. படிப்புக்கு இடையே கிடைத்த ஓய்வு நேரங்களைப் பயன்படுத்தி நூல்கள் எழுதியும் மெய்ப்புத் திருத்தியும் அதன் மூலம் கிடைத்த வருவாயைக் கொண்டு குடும்பச் செலவுகளைச் சமாளித்ததாகக் கூறுவார்கள்.

பேராசிரியரின் கடுமையான உழைப்பும் அந்த உழைப்பிற்குரிய பரிசாக அமைந்த உயர்பதவியும் எனக்கும் என் நண்பர்களுக்கும் வாழ்க்கையைப் புரியவைத்தன. கிராமத்து இளைஞர்களாகிய எங்கள் மனங்களில் உழைப்பார்வத்தையும் தன்னம்பிக்கையையும் வளர்த்தன.

வகுப்பு முடிந்து மாலை அறைக்கு வந்ததும் என்னையும் என்னுடன் தங்கியிருந்த அறை நண்பர்களான வீராசாமி, வீரராகவன். வேங்கடாசலம், வாசு ஆகியோரையும் தன் அறைக்கு அழைத்து, "வேலு, அந்த டப்பாவில் உள்ள சோமாசை எல்லோருக்கும் கொடு" என்று கூறி எங்களையெல்லாம் தம் குழந்தைகள் போல பாவித்து அன்பாகப் பழகினார்கள். மாலையில் உலாவச் செல்லும்போது எங்களையும் உடன் அழைத்துச் செல்வார்கள். வேடிக்கையாகப் பேசி நல்ல பல அறிவுரைகள் கூறுவார்கள்.

பேராசிரியர் அவர்கள் கல்லூரி விடுதியில் தங்கியிருந்த பொழுது எனக்கும் நண்பர் வீராசாமிக்கும் அவர்களோடு ஏற்பட்ட பழக்கம், மதுரையில் மஞ்சனக்காரத் தெரு, 36ஆம் எண் வீட்டில் குடும்பத்துடன் பேராசிரியர் குடியிருந்த போதும் தொடர்ந்தது. நானும் நண்பர் வீராசாமியும் அடிக்கடி அங்குச் செல்வோம். மதுரையைச் சுற்றியுள்ள திருப்பரங்குன்றம், அழகர் கோயில், தெப்பக்குளம் முதலிய இடங்களைப் பார்க்க நாங்கள் அவர்களை அழைத்துச் செல்வோம்.

திருமணங்களை எளிமையாக நடத்த வேண்டும் என்ற கருத்துடையவர் எங்கள் பேராசிரியர். மதுரையில் பேராசிரியராகப் பணியாற்றியபோது அதைச் சுற்றிலுமுள்ள பல ஊர்களுக்குச் சொற்பொழிவுக்காகச் சென்றுள்ளார்கள்; அங்கெல்லாம்

இக்கருத்துகளை வலியுறுத்திப் பேசியுள்ளார்கள். மிகுந்த பொருட் செலவில் திருமணங்கள் செய்யும் வழக்கத்தை முற்றிலுமாக ஒழிக்க வேண்டும். திருமணக் கடன்களால் சிதைந்து போகும் குடும்பங்களின் நிலைமையை எண்ணிப் பார்க்க வேண்டும். இளைய தலைமுறையினர் எளிமையான சீர்திருத்தத் திருமணங்களில் நாட்டம் கொள்ள வேண்டும் என்றெல்லாம் கூறுவார்கள்.

பேராசிரியர் அவர்கள் நடத்தி வைத்த அவருடைய மூத்தமகன் பேராசிரியர் மா. ரா. இளங்கோவன், இரண்டாம் மகன் புலவர் மா. ரா. வஞ்சிக்கோவன் திருமணங்களும் அவருடைய மூத்த மகளான தமிழரசிக்கும் எனக்கும் நடந்த திருமணமும் எளிய முறையில்தான் நடந்தன. எங்கள் திருமணம் சென்னையிலுள்ள மாணவர் மன்றத்தின் பழைய கட்டடத்தின் மாடியில் இருந்த ஒரு சிறு அரங்கில் நடந்தது. மன்றத் தலைவர் தமிழ்நெறிக் காவலர் மயிலை. சிவ. முத்து அவர்கள் தலைமையில் நடந்த திருமணத்தில் அறிஞர் பலர் கலந்து கொண்டு வாழ்த்தினர். நூறு அல்லது நூற்றைம்பது பேர் மட்டுமே கலந்து கொண்ட எளிய திருமணம் அது. எங்கள் பேராசிரியர், சொல்லிலும் செயலிலும் ஒன்றாகவே இருந்தார்கள்.

வருங்காலத்தில் திருமணங்கள் எப்படி நடக்க வேண்டும் என்பது பற்றிப் பேராசிரியர் அவர்களுக்குத் தனித்த கருத்து இருந்தது. "இந்த மணமகனுக்கும் இந்த மணமகளுக்கும் இந்த நேரத்தில் இந்த இடத்தில் திருமணம் நடக்க இருக்கிறது. நீங்கள் அனைவரும் இருந்த இடத்திலிருந்தே மணமக்களை வாழ்த்தியருள வேண்டுகிறேன்," என்று அழைப்பிதழில் மறவாமல் அச்சடிக்க வேண்டும் என்று வற்புறுத்துவார்கள்.

பேராசிரியர் சிறந்த பகுத்தறிவாளர். சாதிகள் அற்ற சமுதாயம் உருவாக வேண்டும் என்று விரும்பியவர். கலப்பு மணங்கள் பெருக வேண்டும்; அது சாதிகளற்ற சமுதாயம் உருவாக வழிவகுக்கும் என்னும் கருத்துடையவர். நடைமுறையிலும் அதைச் செயல் படுத்தியவர். அதனால்தான், தம் மூத்த மகளான தமிழரசியை வேறு சாதிப்பிரிவைச் சார்ந்தவனான எனக்குத் திருமணம் செய்து கொடுக்க அவரால் முடிந்தது.

திருமணத்துக்கு முன்பும் அதன் பின்பும் பேராசிரியரின் மறைவுக்குப் பிறகும் அவர் குடும்பத்தின் அனைத்து நிகழ்ச்சிகளிலும் என்னால் இயன்ற நிலைகளில் எல்லாம் துணையாக இருந்திருக்கின்றேன். திருமணத்தால் உறவாகிய பேராசிரியரின் குடும்பத்தினரும் என்னிடம் மிகுந்த அன்புடனும் பாசத்துடனும் பழகுவர்.

மாணவனாகவும் மருமகனாகவும் என் பேராசிரியப் பெருந்தகையை என்னால் என்றுமே மறக்க இயலாது. அவர்களோடு பழகிய நாள்களும் அந்தக் காலத்து இனிய நினைவுகளும் என்றென்றும் என் உள்ளத்தே நிலைத்திருக்கும்.

❖ ❖ ❖

உயிருக்கு நேர்

திருமதி மங்கையர்க்கரசி கணேஷ்

எங்கள் அம்மாவுக்கு நாங்கள் நான்கு பெண்பிள்ளைகள். நான்கு பேர் இருப்பினும் எந்தவிதமான வேறுபாடுமின்றி எல்லோரிடமும் அன்பாகவே நடந்து கொள்வார்கள். எங்கள் ஒவ்வொருவருக்கும் என்ன தேவை என்பது அவர்களுக்கு மட்டுமே தெரியும். பார்த்துப் பார்த்து மிகுந்த அன்போடு எங்களை வளர்த்தார்கள்.

குடும்பத்திற்காகத் தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டவர். எங்கள் நலன் ஒன்றே எண்ணமாக இருந்ததால், தன்னலம் மறந்தவர்; தமக்கென வாழாதவர். எங்கள் பெரிய குடும்பத்தின் உருவாக்கத்தில் அம்மாவின் பங்கு மகத்தானது; மறக்க முடியாதது.

அம்மா பள்ளி ஆசிரியராகப் பணி புரிந்தவர்கள். அப்போது நானும் அக்கா தமிழரசியும் அவர்களிடம் படித்தோம். அம்மா எங்களை மாணவிகளாகவே பார்த்தார்கள். தமிழ் ஆசிரியர் வகுப்பு எப்போது வரும் என்று பிள்ளைகள் ஆவலுடன் பார்த்திருப்பார்கள். எல்லோரையும் கவரும்படி பாடம் எடுப்பார்கள். எங்களையும் கேள்விகள் கேட்பார்கள். சரியாகச் சொல்லவில்லையென்றால் தண்டனையும் கொடுப்பார்கள்.

மூன்று பிள்ளைகளுக்குத் திருமணம் முடித்தபின் எங்கள் தந்தையார் காலமானார்கள். அம்மாவின் அன்பான அரவணைப்பில் தான் நாங்கள் வளர்ந்தோம். அம்மாவுக்குக் கடமைகள் இன்னும் அதிகமாயின. குழந்தைகளின் வேலைவாய்ப்பு, திருமணம் என்பவை அவர்களை நெருக்கின. எங்களின் மூத்த அண்ணன் மா. ரா. இளங்கோவனின் துணையோடு எல்லாவற்றையும் நிறைவாக முடித்தார்கள்.

ஆண்டு பலவாக ஓய்வின்றி உழைத்துக் களைத்த அம்மா, எங்கள் தம்பி மா. ரா. அரசுவின் திருமணத்தின்போது உடல்நலக் குறைவால் மிகவும் தளர்ந்து போனார்கள். நாங்கள் அனைவரும் இரவு பகலாக உடனிருந்து கவனித்துக் கொண்டோம். அவர்கள் நலம்பெற இறைவனிடம் வேண்டினோம். கடைசி மகனான தம்பி அரசுவின் திருமணத்தை முன்னின்று முடித்ததும் தம் கடமைகள் அனைத்தையும் முழுமையாக நிறைவேற்றிய நிறைவு அம்மாவிற்கு ஏற்பட்டிருக்கும் போல் தோன்றுகிறது. அதன்பின் நீண்டகாலம் அவர்களோடு இருக்கும் பேறு எங்களுக்கு வாய்க்கவில்லை.

குடும்பத்திற்காகத் தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டவர்.எங்கள் நலன் ஒன்றே எண்ணமாக இருந்ததால், தன்னலம் மறந்தவர்; தமக்கென வாழாதவர். எங்கள் பெரிய குடும்பத்தின் உருவாக்கத்தில் அம்மாவின் பங்கு மகத்தானது; மறக்க முடியாதது.

உழைத்து உழைத்து ஓய்ந்த அவர்கள் உடல் நிரந்தர ஓய்வைப் பெற விரும்பியது போலும்; 1980 மார்ச்சுத் திங்கள் பதினோராம் நாள் தம்முடைய 64ஆம் வயதில் எங்களையெல்லாம் மீளாத் துயரத்தில் ஆழ்த்திவிட்டு இறைவனடி சேர்ந்தார்கள்.

கால ஓட்டத்தில் எங்கள் வாழ்க்கை வளர்ந்தது. அம்மாவின் அருளுரைப்படி நாங்கள் எங்கள் பிள்ளைகளை வளர்த்தோம். இப்போது அவர்கள், எல்லோரும் பாராட்டும்படி உயர்ந்த நிலையில் இருக்கின்றனர். எனக்கு மகனும் மகளுமாக இரண்டு குழந்தைகள். மகன் இராசபாண்டியன் அமெரிக்காவில் கணினி பொறியாளராக இருக்கிறான். அவன் பணிபுரியும் நிறுவனத்தில் தலைமைப் பொறுப்பில் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறான். மகள் கற்பகம் அமெரிக்காவில் பெரிய மருத்துவமனை ஒன்றில் பணிபுரிகிறாள். அம்மா இன்று இருந்தால் பெருமகிழ்ச்சி அடைந்திருப்பார்கள்.

நானும் என் கணவரும் தற்போது அமெரிக்காவில் எங்கள் பிள்ளையோடு இருக்கின்றோம். பேரப்பிள்ளைகளோடு எங்கள் காலம் இனிதே கழிகின்றது. எங்கள் பெற்றோரின் அன்பான வாழ்த்துகளால் நாங்கள் நிறைவாகவும் மகிழ்வாகவும் வாழுகின்றோம். எங்கள் இன்றைய மேன்மையான வாழ்க்கைக்கு அடிப்படையாக இருந்து ஒவ்வொரு கட்டத்திலும் உறுதுணையாகி, நெறிப்படுத்தி, வாழ்க்கையைப் புரிய வைத்து, வளர்த்து ஆளாக்கிய பெற்றோரை, குறிப்பாக அம்மாவை ஆழ்ந்த நன்றி உணர்வோடு நினைவுகூர்வதில் மனம் நெகிழ்கிறது.

❖ ❖ ❖

மாமி புகழ் பாடுவேன்!*

மு. முத்துக்காளத்தி

செம்பருத்திப் பூப்போலச் சிவந்தமேனி
செங்கரும்புச் சுவைபோல இனிய சொற்கள்
சிரிப்பொழுகும் இதழ்க்கடையில் எப்போதும்
செழிப்பான கருங்கூந்தல் அங்கும் இங்கும்
சிறிதேதான் நரைத்திருக்கும் என்ன நேர்த்தி
காந்தம்போல் கண்கள், பரிவும் அன்பும்
பொங்கிவரும் கடல்கள்; அவற்றில் மூழ்கி
நாங்கள் தத்தளித்தோம், பாசத்தில் மிதந்தோம்
குண்டு முகம், பரந்த நெற்றி, படுத்த மூக்கில்
சுடர்விடும் ஒற்றைக்கல் மூக்குத்தி
சுத்தமே பேணும் தன்மை; சுறுசுறுப்போடு எங்கும்
சத்தமே இலாது போய் செய்திடும் செயல்கள் பலவாம்
நித்தமும் போற்றத்தக்க நேர்மையே, உன் பெயர்தான்
சத்தியத்தின் உருவேயான என்றன் மாமி என்பேன்!

எட்டு பெற்று வளர விட்டு, நன்றாய்ப் பேசவைத்து
மல்லுக்கு நின்று
குட்டுப்பட்டு நிமிர்ந்த போதும் கல்யாணம் செய்து வைத்து
பேரர்களை, பேத்திகளை அருகிருந்து வளர்த்த போதும்
ஒரு வார்த்தை அலுத்துப் போய் சொன்னதில்லையே மாமி

வீரத்தை நாட்டி
நீயோ, விழுந்த
குடும்பம் காத்தாய்
விவேகத்தில்,
சமர்த்தில், பூமியின்
பொறுமை தன்னில்
நிகர்த்தோர் யார்
உனக்கு

அன்போடு நீவரித்த மாப்பிள்ளை நால்வர் நாங்கள்
என்றுமே எதையுமே கேட்டோம் இல்லை
நன்றாக நீவளர்த்துத் தந்த பெண்கள்
ஒன்றே போதும் என்றிருந்தோம்; உனது ஆசி
மட்டுமே வேண்டி நின்றோம்; மட்டற்ற மகிழ்ச்சி
கொண்டோம்
மாணிக்கங்கள் மருமகன்கள் என்று சொன்னால்
முத்துக்கள் ஆகும் நீபார்த்த மருமகள்கள்!

* மேடை மின்னல், 1982, பக். 43 - 47

யாரேனும் ஒரு வார்த்தை எதிர்த்துப் பேசி
கதைக்கேனும் ஒரு சமயம் சண்டைபோட்டு
ஒருநாளும் கண்டதில்லை மாமி! உலகில்
சொன்னாலும் நம்பமாட்டார் உண்மை இதுதான்!
மாமியார் - மருமகன் பிணக்கென்றும்
மாமியார் - மருமகள் கொடுமையென்றும்
தாள்களில் பார்த்ததுண்டு பலர் சொல்லக் கேட்டதுண்டு
அனுபவித்து அறியோமே அற்புதப் பிறவிநீ!

ஒவ்வொரு மருமகனுக்கும் இன்னது பிடிக்குமென்று
அறிந்தறிந்து அமுதுசெய்த அன்புத் தெய்வம் நீ!

நாட்டுக்கே உழைத்து, நம் மொழியை மேன்மை செய்ய
வீட்டை மறந்து, மாமா வினாடி துறக்காமல்
ஏட்டில் அரசாட்சி செய்திட்ட அந்நாளில்
கூட்டுப் பறவையெனக் குஞ்சுகளைக் காத்துநின்றாய்
முற்றும் முடிக்காமல் முழுவதும் செய்யாமல்
சற்றும் நினைக்காத நெருக்கடி நேரத்தில்
பாரத்தைப் போட்டு, மாமா பரமனடி சேர்ந்தார்
வீரத்தை நாட்டி நீயோ, விழுந்த குடும்பம் காத்தாய்
விவேகத்தில், சமர்த்தில், பூமியின் பொறுமை தன்னில்
நிகர்த்தோர் யார் உனக்கு! எங்கள் நெஞ்சில்
முகிழ்த்த முழுநிலவே, முற்றும் ஆட்கொண்ட
தெய்வத் திருவுருவே, தினம் தினம் வழிநடத்தித்
தோன்றாத் துணையாய் என்றும் காப்பாய்
இறைஞ்சினேன் உன்னை எளியேன் மாமி
எங்களுக்கு இனிமேல் நீதான் சாமி!

❖ ❖ ❖

சுமைதாங்கி

திருமதி இசையரசி பாலமுத்துசாமி

எங்கள் அன்னை திருமதி கண்ணம்மாள் இராசமாணிக்கனார், அம்மா என்ற சொல்லின் முழுமையான பொருளை எங்களுக்கு உணர்த்தியவர். ரங்கூனிலிருந்து மகப்பேற்றுக்காகச் சென்னைக்கு எங்கள் பாட்டி வந்தபோது நடுக்கடலில் 'எல்லோரா' என்ற கப்பலில் பிறந்தவர்; பெற்றோரின் செல்வ மகளாய், அன்பு அண்ணன் புலவர் பு. செல்வராசுவின் அருமைத் தங்கையாய் வளர்ந்தவர்; பதினான்காம் வயதில் மண வாழ்க்கையைத் தொடங்கியவர்; வாழ்நாள் முழுவதும் தம் அன்பு கணவருக்காவும் அருமைக் குழந்தைகளின் நலனுக்காவும் தம்மையே அர்ப்பணித்துக்கொண்டவர்.

எங்கள் அம்மா, அப்பாவிடம் கொண்டிருந்த அளப்பரிய அன்பு பக்திமயமானது. காலை ஐந்து மணிக்கு எழுந்து எங்கள் தந்தைக்கு வேண்டிய பணிவிடைகள் செய்து உரிய நேரத்தில் அவருக்கு வேண்டிய உணவு வகைகளைச் சுவை சிறிதும் குறையாமல் - விதம்விதமாகத் தயாரித்துத் தருவதில் முழுமையாகத் தம்மை ஈடுபடுத்திக்கொள்வார். அப்பாவை விட்டு அம்மா எங்குமே சென்று தங்கியதை நாங்கள் பார்த்ததேயில்லை. எக்காரணத்தாலும் அவர்களிடையே பிரிவு என்பது ஏற்பட்டதே இல்லை. அவர்க ளிடையே காணப்பட்ட அன்புப் பிணைப்பு அத்துணை வலிமை யானது.

> அம்மாவுக்குக் கோபமும் வரும். கோபம் வந்தால் திட்டுவதோ, அடிப்பதோ கிடையாது; பேசமாட்டார்கள். அவர்களது மௌனமே எங்களைக் கொன்றுவிடும். தம் மௌனத்தால் தவறுகளை நாங்களே உணரும்படிச் செய்துவிடுவார்கள்.

எங்கள் அம்மா அதிகாலையில் எழுந்து சமையலறையில் நுழைந்தால் வேலை - வேலை - வேலைதான். காலைச் சிற்றுண்டி, பிறகு அனைவரும் எடுத்துச் செல்வதற்கான பகல் உணவு என்று அடுக்கடுக்காக வேலைகள். எப்படி அம்மாவால் இத்தனை வேலைகளைச் செய்ய முடிகிறது? அதுவும் அலுப்பின்றி, சலிப்பின்றி இனிய முகத்துடன் என்று நான் பலமுறை எண்ணி வியந்ததுண்டு. 'குழந்தைகள் படிக்கின்றனர்; நன்றாகப் படிக்கட்டும்; தொந்தரவு செய்யக்கூடாது என்ற எண்ணத்துடன் நாங்கள் நன்றாகப் படிக்க ஊக்கம் அளித்து உற்சாகப்படுத்தியவர். அதற்காக எங்களை ஒரு வேலையும் செய்யவிடாமல், தாமே எல்லாப் பொறுப்புகளையும் சுமந்தவர் எங்கள் அம்மா.

அம்மாவுக்கு எதையுமே குறைவாகச் செய்யும் பழக்கம் கிடையாது. அவர்கள் எப்போதும் நிறைய நிறைய செய்துதான் நாங்கள் பார்த் திருக்கிறோம். எங்கள் வீட்டுக்கு வரும் காய்கறி விற்கும் அம்மா, வாசல் பெருக்கும் பாட்டி, வீட்டு வேலை செய்யும்

லட்சுமி, தகப்பனை இழந்த எதிர் வீட்டுப் பிள்ளைகள் என்று அம்மாவின் கருணைப்பட்டியல் நீண்டுகொண்டே போகும். எங்கள் வீட்டில் எப்போதும் உணவு இருந்துகொண்டே இருக்கும். 'சமைப்பது கூடுதலாக இருந்தால் நல்லது; குறைவாக மட்டும் இருக்கவே கூடாது' என்பதில் அம்மா மிகவும் கவனமாக இருப்பார்கள்.

அம்மாவுக்கு எளிமையாக இருப்பதுதான் பிடிக்கும். பகட்டும் போலித்தனமும் வீண் ஆரவாரமும் அவர்களுக்கு என்றுமே பிடித்ததில்லை. எனக்குத் தெரிந்து எங்கள் அம்மா தனக்காக எதுவுமே வாங்கிக் கொண்டதாகவோ செய்து கொண்டதாகவோ நினைவில்லை.

அம்மாவின் அருள் உள்ளத்தில் இன்னார் இனியவர் என்ற பாகுபாடே இருந்ததில்லை. அவர்களுக்கு அனைவருமே நல்லவர்கள்தாம்; பகைவருக்கும் அருளும் மாண்பும் இன்னா செய்தவருக்கும் இனியவே செய்யும் சால்பும் மிக்கவர் அவர்.

அம்மாவுக்குக் கோபமும் வரும். கோபம் வந்தால் திட்டுவதோ அடிப்பதோ கிடையாது. யாரிடம் கோபித்துக் கொண்டார்களோ அவர்களிடம் பேசமாட்டார்கள். அவர்களது மௌனமே எங்களைக் கொன்றுவிடும். எப்படியாவது அம்மாவைப் பேச வைத்துவிடவேண்டும் என்ற தவிப்புடன் அவர்களையே சுற்றிச்சுற்றி வருவோம். கடைசியில் மனமிரங்கி, பேசிவிடுவார்கள். தம் மௌனத்தால் எங்கள் தவறுகளை நாங்களே உணரும்படிச் செய்துவிடுவார்கள்.

என் தமக்கையரெல்லாம் மணம் புரிந்துகொண்டு அவரவர் வீட்டுக்குச் சென்றபிறகு நானும் தம்பிகளும் மட்டும் அம்மாவுடன் இருந்தோம். அப்போது நான் ஆசிரியராகப் பணி புரிந்துவந்தேன். காலையில் சாப்பிட சோம்பல்பட்டுப் பள்ளிக்குக் கிளம்பும்போது தட்டில் சிற்றுண்டி எடுத்துக் கொண்டுவந்து, "சாப்பிட்டுப் போம்மா. பசியோடு போகாதே. மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்க உடலில் தெம்பு வேண்டாமா?" என்று வற்புறுத்தி ஊட்டிவிடுவார்கள். அந்த அன்பையும் பரிவையும் இன்று நினைத்தாலும் என் விழிகள் பனிக்கின்றன.

சிறுவயதிலிருந்தே சிறுகதைகள், கவிதைகள் எழுதுவதும் ஓவியங்கள் வரைந்து பரிசாக அளிப்பதும் எனக்குப் பிடித்தமான பொழுதுபோக்குகள். நான் எழுதும் கதைகளையும் கவிதைகளையும் முதலில் அம்மாவிடம்தான் காட்டுவேன். என்னுடைய முதல் ரசிகையும் விமர்சகரும் அம்மாதான். அம்மா நன்றாக விமர்சனம் செய்வார்கள். அம்மாவிடம் ஒப்புதல் வாங்கிய பிறகுதான் என் படைப்புகளை இதழ்களுக்கு அனுப்புவேன். அம்மா, கப்பலில் பிறந்த நிகழ்ச்சியைக் கூட 1961ஆம் ஆண்டு வெளிவந்த 'குமுதம்' இதழுக்குக் 'கப்பல் அனுபவம்' என்ற தலைப்பில் ஒருசிறு கட்டுரையாக எழுதி அனுப்பினேன். பரிசு பெற்ற கட்டுரையாக வெளிவந்த அக்கட்டுரையைப் படித்து அம்மா என்னைப் பாராட்டியது மறக்க முடியாததொரு நிகழ்ச்சியாகும்.

நான் பணியாற்றிய சென்னை முத்தியாலுப்பேட்டை மேல்நிலைப் பள்ளியில் ஏறத்தாழப் பத்து ஆண்டுகளுக்கு முன்பு இடைநிலை ஆசிரியர்களுக்கான ஒரு பயிலரங்கு நடத்தப்பட்டது. அதில் பயிற்சியளிக்கும் ஓர் ஆசிரியராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நான். நடத்தவேண்டிய பாடங்களை நடத்தி முடித்தபின், வயது முதிர்ந்த ஆசிரியர் சிலர் என்னை அணுகி, "மேடம், நீங்க கண்ணம்மா டீச்சரின் மகளா?" என்று கேட்டனர். அது, என்னுள் வியப்பை ஏற்படுத்தியது. என் அம்மா சிவந்த நிறம் உடையவர்கள்; நான் மாநிறம் தான். எப்படி இவர்கள் கண்டுபிடித்தனர் என்று அறியும் ஆவலில், அவர்களிடமே அதைக் கேட்டேன். "மேடம், உங்கள் கண்கள், நீங்கள் பாடம் கற்றுத் தரும் முறை இவை இரண்டும் அப்படியே எங்கள் கண்ணம்மா டீச்சருடையவை. அதனால்தான் கேட்டோம்" என்று அவர்கள் கூறினார்கள்.

ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு பள்ளிப் பருவத்தில் பாடம் நடத்திய ஆசிரியரைத் தம் முதுமைப் பருவத்தில் நினைவில் வைத்துப் போற்றுவதும், முன்பின் அறிந்திராத அந்த ஆசிரியரின் மகளை, அவர் பாடம் நடத்தும் முறையில் இருந்தும் தோற்றத்தில் இருந்தும் அறிவதும் மிகவும் அபூர்வமான நிகழ்வுகள். அந்த ஆசிரியர் எந்த அளவிற்குத் தம் வகுப்பெடுக்கும் ஆற்றலாலும் அன்பான அணுகுமுறையாலும் பள்ளியில் பயின்ற காலத்தில் அவர்களை ஈர்த்திருப்பார் என்பதை எண்ணும்போதெல்லாம் என்னுள் பெருமிதம் ஊற்றெடுக்கும். அந்த நிகழ்ச்சி, ஓர் ஆசிரியராக எங்கள் அம்மா பெற்ற வெற்றியை என்றும் நினைவுபடுத்திக் கொண்டேயிருக்கும்.

எங்கள் அன்புத் தந்தையாரின் மறைவுக்குப்பின் பதின்மூன்று ஆண்டுகள் எங்களுக்கு உற்ற துணையாக இருந்தவர்; சிறந்த இடங்களில் சிறப்பாக மணம் முடித்துக் கொடுத்து, நாங்கள் நல்வாழ்வு பெற்று இனிது வாழக் காரணமாக இருந்தவர்; நல்லதொரு ஆசானாகவும் கண்டிப்பும் கனிவும் மிக்க தந்தையாகவும் சிறந்ததொரு வழிகாட்டியாகவும் விளங்கியவர்; என்றென்றும் எங்கள் நெஞ்சங்களில் தெய்வமாக வீற்றிருப்பவர் - எங்கள் அம்மா.

❖ ❖ ❖

அப்பா - அம்மா

இரா. கலைக்கோவன்

அப்பா

அறுபது வயதாகிறது எனக்கு! அப்பாவை இழந்தபோது பதினெட்டு வயது இளைஞன். அந்தப் பதினெட்டு ஆண்டுகளில் அப்பாவை மட்டுமே பார்த்திருக்கிறேன்; இராசமாணிக்கனாரை எனக்கு அடையாளம் தெரியவில்லை. என் 'அப்பா' எப்படிப் பட்டவர்?

அப்பாவுக்கு நேரத்தை வீணாக்குவது அறவே பிடிக்காது. விளையாடுவதைக்கூட நேரத்தை வீணாக்கும் செயலாகவே கருதியவர். அதனால், அவர் பேச்சு, ஆய்வு என ஊருக்குச் செல்லும் வார இறுதிநாட்கள் எங்களுக்கு விழா நாட்கள் போல! விளையாட்டும் வேடிக்கையுமாய்ப் பொழுதுகளைப் போக்குவோம். வார நாட்களில் படித்திருந்தமையால் சனி, ஞாயிறு விளையாட்டுகள் எங்கள் படிப்பைக் கெடுத்ததில்லை. ஒருவேளை அப்பா விளையாட்டை ஆதரித்திருந்தால், நாங்கள் படிப்பில் குறைந்திருப் போமோ? தெரியவில்தலை! என்றாலும், என்ன காரணத்தாலோ இதை நான் என் பிள்ளைகளிடம் நடைமுறைப் படுத்தவில்லை. விளையாடுவது அவர்கள் உரிமை, படிப்பது அவர்கள் கடமை எனக் கருதியிருந்தேன். என் சிந்தனை பிழையென்பதையும் என் தந்தையின் முறையே சரி என்பதையும் காலம் எனக்குக் கற்றுத்தந்தது.

நாளும் திருநீற்றை எடுத்துப் பூசிக்கொண்டால் தீர்ந்துவிடும் என்று கருதியதால் உள்ளம் தளர்வுறும் காலங்களிலும் முதன்மையான நிகழ்வுகளின்போதும் அந்தத் திருநீற்றைப் பயன்படுத்தினேன். அம்மா எனக்களித்த அந்தப் பரிசு வெறும் சம்புடம் அல்ல, என் தந்தையே என்பதை நான் வரலாறு எழுதத் தொடங்கிய நாட்களில் உணர்ந்தேன்.

அப்பாவுடன் கடைக்குச் சென்ற அநுபவங்கள் சில உண்டு என்றாலும், இரண்டு நிகழ்வுகள் என்னால் மறக்கமுடியாதவை. மதுரையில் இருந்தபோது நகைக்கடை ஒன்றுக்குச் சென்றோம். யாருக்கு நகை வாங்கினோம் என்பது நினைவில் இல்லை. ஆனால், என் விரலுக்கு மோதிரம் கேட்டு வாங்கியது நினைவுள்ளது. தாமரையும் ஞாயிறும் நிலவிய இனாமல் பதித்த தங்க மோதிரம், எனக்கும், என் கேட்பால் தம்பிக்கும் கிடைத்தமையை எப்படி மறக்கமுடியும். அப்பா நகைகள் அணியும் பழக்கம் அற்றவர். அம்மாவும் அணிகளில் அதிக ஆர்வமற்றவர். இருந்தபோதும், அந்த இளம் வயதில் நான் ஏன் மோதிரம் தேடினேன்? இப்போது நினைத்தால் வியப்பாக இருக்கிறது. இளைஞனான பிறகு அப்பாவைப் போலவே எனக்கும் 'நகைவெறுப்பு' ஏற்பட்டது. என் திருமணத்திற்கு அணிவித்த விரலணியைக்கூட நிகழ்விற்குப் பிறகு திருப்பியளித்து விட்டேன். ஆனால், அந்தத் தாமரையும் ஞாயிறும் நிலவிய அழகு மோதிரம், கேட்டதும் அப்பா வாங்கி அணிவித்த அந்தச் சிறிய மோதிரம், என் சின்னஞ்சிறு விரலில் நான்

அணிவித்துப் பார்த்துப்பார்த்து மகிழ்ந்த தங்க மோதிரம் நெடுநாள் என்னிடம் இருந்தது. அது நானறிந்து அப்பாவால் எனக்கென்று வாங்கப்பெற்ற முதல் பொருள்.

புகுமுக வகுப்பிற்காக இலயோலாவில் சேர்ந்ததும், பாரிமுனையிலிருந்த பின்னி துணிக்கடைக்கு அழைத்துச் சென்று, ஆறு பேண்ட்டுகள், ஆறு சட்டைகள் எடுத்துத் தந்தார். ஓராண்டுப் படிப்பிற்கு அவை போதும் என அவர் கருதினார். நன்கு உழைக்கும் துணியாக இருக்கவேண்டும் என்று கூறியவர், வண்ணம், டிசைன் இரண்டையும் என் பொறுப்பில் விட்டார். அந்த உரிமை எனக்குப் பிடித்தது. விருப்பம் போல் தேர்ந் தெடுத்தேன். அவர் பார்த்துக் கொண்டிருந்தார். தலையிடவே இல்லை.

பிறகு குரோம்லெதர் மிதியடிக் கடைக்குச் சென்றோம். அங்கு, அவரே மிதியடி தேர்ந்தார். என் விருப்பம் கேட்கவே இல்லை. அவர் அணிந்திருந்தாற் போன்றே வாங்கினார். நான் மறுப்புத் தெரிவிக்குமாறு போல அவரை நிமிர்ந்து பார்த்தேன். 'செருப்பு உழைக்கவேண்டும், என் மிதியடியைப் பார். இரண்டாண்டுகளாக நன்கு உழைக்கிறது. மிதியடிக்காகப் பெரும் பொருள் செலவழித்தல் கூடாது. நல்ல செருப்பாக எளிய விலையுள்ளதாக வாங்குவதே அறிவுடைமை' என்றார். மறுப்பாக ஏதும் என்னால் கூறமுடியவில்லை. 'நண்பர்கள் எல்லாம் விதவிதமாக அணிந்து வருவர், நான் மட்டும் கட்டைச் செருப்பா?' என் உள்ளம் வலித்தது. அதற்குள் மிதியடி கட்டப்பட்டு, பணம் செலுத்திப் பெறப்பட்டது.

வீட்டிற்கு வந்தால், உடன்பிறந்தார் அனைவரும் அம்மிதியடி குறித்து என்னைக் கிண்டல் செய்தனர். 'வீட்டிலேயே அப்பாவின் மிதியடி போல மிதியடி பெற்றவன் நான் ஒருவனே; அதுவும் அவரே எனக்கு வாங்கித் தந்தார்' என பெருமை பேசி அந்தக் கிண்டல்களை எதிர்கொண்டேன், உள்ளம் தொடர்ந்து வலித்தபோதும். இன்று, நினைத்துப் பார்க்கிறேன், எத்தனை பொருத்தமாக அந்த மிதியடி அமைந்துவிட்டது. தமிழிலிருந்து வரலாற்றுக்குப் போனவரின் மிதியடி என்னை மருத்துவத்திலிருந்து வரலாற்றுக்கு இழுத்திருக்கிறது. இந்த மிதியடிப் பொருத்தம் நல்ல பொருத்தம்தானே!

அப்பாவின் எதிரில் பேசியும் நடித்தும் இருப்பது என் 'வீரச்செயல்களுள்' குறிப்பிடத்தக்கது. அப்பாவிடம் நேரிடையாக நின்று பேசும் துணிவு எங்களில் யாருக்கும் கிடையாது. எங்களுக்கு வேண்டுவன எல்லாம் அம்மா வழிதான் கிடைக்கும். அம்மாவை மீறிய சில விஷயங்களில் மட்டும், மிகுந்த தயக்கத்துடன், அவர் பின்னால் நின்றபடி, திக்கித் திணறிக் கேட்டு, வேண்டுவன பெற்றதுண்டு. இந்தத் தயக்கத்திற்கு அச்சம் மட்டும் காரணமன்று; பத்திமையும் இருந்தது. 'சின்ன விஷயத்திற்கெல்லாம் அப்பாவைத் தொல்லை செய்யமுடியாது' என்று அம்மா அடிக்கடி சொல்வார்கள் என்பதால், 'பெரிய விஷயங்களை மட்டுமே கேட்பவர் - செய்பவர்' என்ற பத்திமை நிறைந்த மரியாதை இருந்தது. அதில் அச்சப் பூச்சும் வேண்டுமளவு இருந்தது என்பதும் உண்மைதான்.

அப்படிப்பட்டவர் முன்னிலையில் நான் பேசி, நடித்தது வீரச் செயல்தானே! முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் நான் ஒன்பதாவது படித்துக் கொண்டிருந்தேன், விடுதலை நாள் விழாவில், 'ஜீலம் நதி ஜாலம்' நாடகம் நடத்த முடிவுசெய்த என் மூன்றாம் படிவ வரலாற்றாசிரியர் திரு. டி.என். செங்கல்வராயன் அலெக்சாந்தராக என்னை நடிக்கச் செய்தார். நாடக ஒத்திகையின் போதெல்லாம், விடுதலை நாள் விழா நிகழ்ச்சிக்குத் தலைமையேற்று அப்பா வரப்போகிறார் என்பது எனக்குத் தெரியாது. விழா நாளன்று காலைதான், ஒப்பனையில் இருக்கும் போதுதான் அந்தச் செய்தி எனக்குத் தெரியவந்தது. 'மாவீரன் அலெக்சாந்தர்' நடுநடுங்கிப் போனார்! செங்கல்வராயன் தேற்றினார். இதுநாள்வரை ஏறத்தாழ ஐம்பது நாடகங்கள் நடித் திருக்கிறேன். முதல் நாடகம் உட்பட ஒரு நாடகத்தில்கூடத் தொய்வு ஏற்பட்டதில்லை. ஆனால், 'ஜீலம் நதி ஜாலம்' நாடக வாழ்க்கையில் மறக்கமுடியாதபடி அமைந்துவிட்டது.

திரை திறந்ததும் முதல் காட்சியில் அலெக்சாந்தர் அரியணையில் இருப்பார்; புருஷோத்தமனைச் சங்கிலியால் கட்டி இழுத்து வருவர். பத்து நிமிடங்கள் எங்களுக்குள் வீர உரைகள் நிகழ வேண்டும். பின் காட்சி தொடரும். ஒத்திகைகள் சரியாகவே அமைந்தபோதும், அப்பாவின்முன் அரங்கேறியபோது முதல் காட்சியே ஆட்டம் கண்டது. என்ன காரணத்தாலோ, புருஷோத்தமனாக நடித்தவர் உரையாடல்களை மறந்துபோனார். காட்சியைத் தொடங்கி வைத்து நான் பேசியதற்கு அவர் மறுமொழி கூறாமை மேடையிலிருந்த அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது. மறைவிலிருந்த செங்கல்வராயன் தலையில் கைவைத்துக் கொண்டு அமர்ந்துவிட்டார். திரை மறைவில் இருந்து உரையாடல் சரிபார்ப்பவர் புருஷோத்தமனுக்கு உரையாடல்களை எடுத்துக் கொடுத்தார். அவரால் பின்பற்ற முடியவில்லை. ஒரு நிமிடம் பொறுத்தேன். திடீரென எழுந்தேன். இராஜநடை நடந்து புருஷோத்தமன் அருகே சென்று மெல்ல அவர் செவிக்குக் கேட்குமாறு அவர் பேசவேண்டிய உரையாடலை எடுத்துத் தந்தேன். அவரால் அதையும் வாங்கிக்கொள்ளக்கூடவில்லை. பேயறைந்தது போல இருந்தார். எல்லாம் ஒரு நிமிடம்தான். செங்கல்வராயனைப் பார்த்தேன். அவர் குனிந்த தலை நிமிரவில்லை. மேடைக்கு முன்னிருந்த கூட்டத்தைப் பார்த்தேன். அப்பா மட்டுமே தெரிந்தார். அவர் முன் அந்த நாடகம் தொய்வதை என்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. எனக்குள் ஏதோ ஒன்று எதையோ ஒன்றை எப்படியோ தூண்டிவிட்டது.

என் வாழ்க்கையில் அதுநாள்வரை நடவாதன நடந்தன. ஆம்! அந்தக் காட்சியைக் காப்பாற்றச் சொந்த உரையாடல்களை விருப்பம் போல் பேசினேன். எனக்கே தெரியாது எப்படி அவற்றையெல்லாம் பேசினேன், எங்கிருந்து அவை வந்தன என்பதெல்லாம். பலத்த கைதட்டல் கிடைத்தது. செங்கல்வராயன் கண்களில் நீரைக் கண்டேன். அவர் கைகளைக் கூப்பியபடி மேலே பார்த்தார். என் உரையாடல்களிலேயே காட்சியை நடத்தித் திரையிறங்கச் செய்தேன். செங்கல்வராயன் ஓடிவந்து கட்டிக் கொண்டார். 'டேய் எப்படிடா? எப்படிடா?' என்ற அவரின் மகிழ்வுக் குரல் இன்னமும் என் செவிகளில் ஒலித்துக் கொண்டுள்ளது.

'அப்பா' முன்னால் என் நாடகம் விழுந்துவிடக்கூடாது என்ற உத்வேகமே அந்தக் காட்சியை நடத்தவைத்தது. 'அப்பா'தான் மறைமுகக் கயிறிழுப்பவராய் இருந்து என்னை இயக்கினார். அன்றைய தினம் எனக்குப் பெருமை பிடிபடவில்லை. அப்பா தம் உரையில் என் நடிப்பையும் மற்றவர் நடிப்பையும் பாராட்டிப் பேசினார், 'இவன் இப்படியெல்லாம் நடிப்பான் என்று நான் அறிந்திருக்கவில்லை' என்று அவர் புன்னகையோடு கூறியபோது, என்னுள் விளைந்த களிப்பும் கர்வமும் துள்ளவைத்தன. அம்மாவிடமும், அக்காக்களிடமும் மகிழ்வைப் பகிர்ந்து கொண்டேன். கர்வத்தை என் அன்பு நண்பர் சீனிவாசனிடம் காட்டினேன்.

புகுமுக வகுப்பில் எனக்கு வாய்த்த வரலாற்று ஆசிரியர் கிளாரன்சு மோத்தா அப்பாவின் கவலையை வளர்த்தார். என்னை மருத்துவக் கல்லூரியில் சேர்க்கவேண்டும் என்பது பெற்றோர் விருப்பம். நானும் அதற்காகத்தான் அறிவியல் பாடங்களை எடுத்திருந்தேன். உடன் பாடமாக வரலாறு அமைந்துவிட்டது. கிளாரன்சு மோத்தாவின் வகுப்பறைப் பொழிவுகளால் பெரிதும் ஈர்க்கப்பட்டு வரலாற்றைக் காதலித்தேன். அப்பாவின் நூலகத்திலிருந்து கனமான புத்தகங்களை எல்லாம் எடுத்துப் படித்தேன். அப்பா ஒருமுறை கவலையோடு எச்சரித்தார். 'வரலாறு படி, ஆனால் அறிவியல் பாடங்களில் நீ எடுக்கும் மதிப்பெண்கள் மட்டுமே உன்னை மருத்துவக் கல்லூரியில் சேர்க்க உதவும். அதனால், அவற்றையும் இதே கவனத்துடன் படி'. நான் அந்த அறிவுரையை உள்ளத்தில் இருத்தினேன், ஒரே ஒரு மாறுதலுடன். அறிவியல் பாடங்களை மருத்துவக் கல்லூரிக் கனவுகளுடன் படித்தேன். ஆனால், வரலாற்றைக் காதலித்துப் படித்தேன். தேர்வு முடிவுகள் வந்தபோது வரலாற்றில் Distinction எடுத்திருந்தேன்.

அறிவியல் பாடங்களில் A+ தான். ஆனால், அந்த A+களே என்னை மருத்துவக் கல்லூரியில் கொண்டு சேர்த்தன.

என் மருத்துவக் கல்லூரி வாழ்க்கையின் முதலிரண்டு ஆண்டுகளே அப்பா என்னுடன் இருந்தார். படிப்பு முடியும் வரை அவர் எரியூட்டப்பட்ட இடம்தான் எனக்குக் கோயிலாக இருந்தது. பயிற்சி மருத்துவனாய்ப் பணி தொடங்கிய நாளில் கல்லறை சென்று வணங்கி வந்தேன். உள்ளிருப்பு மருத்துவனாய்ப் பொது மருத்துவமனையில் பணி தொடங்கியபோதும் அவரிடம் போய் வாழ்த்துப் பெற்றேன். கண் மருத்துவனாய்ச் சிறப்புத் தகுதி பெற்றதும் அவருக்குத் தெரிவித்தேன். வரலாறு என்னை வளைத்துக் கொண்டபோது அவர் நின்று புன்னகைப்பதை என்னால் பார்க்கமுடிந்தது. இப்போதும் அவர் பாதையில்தான், 'கோவில்களை முற்றப் பரிசோதித்துச் சோழர் காலச் சிற்ப - ஓவிய - கட்டடக்கலைகளின் வளர்ச்சியைச் சிறந்த முறையில் ஆராய்ந்து நூல் எழுதினோர் எவரும் இல்லை' (சோழர் வரலாறு, ப.12) எனும் அவர் ஏக்கத்தை நீக்கிய பெருமையுடன், அவர் கனவுகளை நிறைவேற்றிய வண்ணம் அவரிட்ட இந்தப் பிச்சை பயணம் செய்துகொண்டிருக்கிறது.

அம்மா

அம்மாவை உழைப்பாளியாகவே பார்த்துச் சலித்த கண்கள், அவரை இப்போதுகூட ஒரு பேராசிரியராகக் காண மறுக்கின்றன. அன்பைத் தவிர அவர்களுக்கு வேறொன்றும் தெரியாது. அம்மாவிடம் நிறைய சண்டை போட்டிருக்கிறேன். இப்போது நினைத்தால் கண்ணீர் வருகிறது. ஆனால், அந்தச் சண்டைகள் எல்லாம் நொடி நேரக் கோபங்களே. அம்மாவின் சமையலை ருசித்துச் சாப்பிட்டவர்களில் நான் முதன்மை யானவன். அம்மாவுக்கு என்னைப் பிடிக்கும். எனக்குப் படிக்கப் பிடிக்கும். கண்ணன், கல்கண்டு, அம்புலிமாமா எனப் புத்தகங்கள் வாங்க அம்மாவை நச்சரிப்பேன். எப்படியோ வீட்டுச் செலவில் சரிக்கட்டி என் படிப்பார்வத்தை அம்மா வளர்த்தார்கள்.

மருத்துவக் கல்லூரியில் இரண்டாமாண்டு சேர்ந்தபோது காலையில் 8.30-க் கெல்லாம் கல்லூரியில் இருக்கவேண்டும் என்பதால் 7.30-க்கே புறப்பட்டுவிடுவேன். அந்தக் காலை நேரத்திலும் 'பசி தாங்காத பையன்' என்று தயிர் ஊற்றிய பழையதும் சுடச்சுடச் சுண்டக்கறியும் பரிவோடு தந்துவிடுவார்கள். ஒருநாள்கூட உணவருந்தாமல் நான் கல்லூரிக்குச் சென்றதில்லை. பள்ளிக்கூடக் காலங்களிலிருந்தே அம்மா என் நண்பர்களை அன்போடு நடத்துவார்கள். வீட்டுப் பிள்ளைகள் போலவே கவனிப்பார்கள். என்னிடம் ஏதாவது குறை கண்டால் என் நண்பர்களிடம் சொல்லிச் சரிசெய்யச் சொல்வார்கள்.

நான் காதலித்த பெண்ணை அப்பாவும் அம்மாவும் அப்போதே மருமகளாக ஏற்றுக் கொண்டது அவர்கள் பெருந்தன்மை! என் பேறு! அப்பா இது குறித்து என்னிடம் ஏதும் பேசியதில்லை. ஆனால் அம்மா நிறைய பேசினார்கள். அவர்களுக்கு என் தோழியின் நிறம் பற்றி மட்டும் வருத்தம் இருந்தது. மருமகள் தம்மைப் போல் சிவப்பாக இல்லையே என்ற அந்த வருத்தம், மருமகளுடன் பழகப்பழக அகன்றது. காதலித்த பெண்ணை வீட்டுக்கு அழைத்து வருவது - அப்பெண், வீட்டார் அனைவருடனும் சரளமாய்ப் பழகுவது - காதலனின் தாய் அந்தப் பெண்ணுக்கு உணவிடுவது - இவையெல்லாம் 1966களில் அவ்வளவு எளிதான செயல்கள் அன்று. ஆனால், என் வீட்டில் நடந்தன. காரணம் அம்மாதான். அந்த அன்புள்ளம் என் உணர்வுகளை மதித்தது. நான் தேர்ந்தெடுத்த பெண் சரியானவளே என்ற முடிவுடன் துணை நின்றது. என் தோழியும் அடக்கமானவர்; அன்பானவர். அதனால் அம்மாவிடம் அவரால் நெருங்கமுடிந்தது.

நான் மருத்துவனாய்ப் பட்டம்பெற்ற நாள் அம்மாவின் மகிழ்வான நாள். திருவடிகளை வணங்கி அவர்கள் கனவை நிறைவேற்றியதாகக் கூறி நானும் நிறைந்தேன்.

கண் மருத்துவப் படிப்புப் படித்தபோது விடுதி சரி வராமையின் இரண்டாம் ஆண்டு முழுவதும் அம்மாவுடன்தான் இருந்தேன். இரத்த உயர் அழுத்தம் காரணமாக அம்மா ஓய்வில் இருந்தார்கள். அதனால் என் உணவைப் பயிற்சி மருத்துவர் விடுதியில் வைத்துக்கொண்டேன். சில நாட்களில் இரவு உணவு வீட்டில் அமைந்தது. அம்மாவோ அரசுவோ செய்வார்கள். நானும் சில போதுகளில் உடனிருந்து உதவுவேன். அரசுவுடன் இலக்கிய உரையாடல்கள் நிகழ்த்த அந்தக் காலத்தில்தான் நிறைய வாய்ப்பேற்பட்டது.

அப்பா பயன்படுத்திய பொருட்களை எல்லாம் எங்களுக்குப் பிரித்துத்தர அம்மா கருதியிருந்தார் என்பது ஒரு பொங்கல் நாளில் தெரியவந்தது. அப்பாவின் மூக்குக் கண்ணாடி, அவருடைய பேனா என்று அவர் பயன்படுத்திய அனைத்துப் பொருட்களும் வழங்கப்பட்டன. என் முறை வந்தபோது, அப்பாவின் திருநீற்றுச் சம்புடத்தை என்னிடம் தந்தார்கள். அருமையான வேலைப்பாடு அமைந்த வெள்ளிச் சம்புடம் அது. எனக்குத் திருநீறு இட்டுக் கொள்ளும் பழக்கம் கிடையாது. அக்காக்களைப் போல் பத்திமையும் கிடையாது. இருந்தபோதும் அம்மாவின் அன்பு மனம் எது கருதியோ அதை என் கைகளில் ஒப்புவித்தது. நாளும் குளித்து வந்ததும் அந்தச் சம்புடத்திற்குள் இருந்த திருநீற்றில்தான் அப்பா, எழுத்தாண்ட தம் விரல்களை நனைத்து நெற்றியில் இட்டுக்கொள்வார்கள். அவர் விரல்களால் அந்தச் சம்புடமும் அதற்குள் இருந்த திருநீறும் விலைமதிப்பற்ற பொருள்களாகி இருந்தன. நாளும் அதிலுள்ள திருநீற்றை எடுத்துப் பூசிக்கொண்டால் தீர்ந்துவிடும் என்று கருதியதால் உள்ளம் தளர்வுறும் காலங்களிலும் முதன்மையான நிகழ்வுகளின்போதும் அந்தத் திருநீற்றைப் பயன்படுத்தினேன். அம்மா எனக்களித்த அந்தப் பரிசு வெறும் சம்புடம் அல்ல, என் தந்தையே என்பதை நான் வரலாறு எழுதத் தொடங்கிய நாட்களில் உணர்ந்தேன்.

என் முதல் சம்பளம் நான் ஓராண்டுப் பணிசெய்த பிறகே வந்தது. அதைக் கையில் வாங்கியதும் நான் செய்த முதல் செயல், அம்மாவுக்கும் அவர்களுக்கு இணையாக நான் நேசித்த பெரியம்மாவுக்கும் புடவைகள் வாங்கி அனுப்பி வைத்தமைதான். அந்த ஆண்டிலிருந்து அம்மா மறைந்த 1980 வரை ஆண்டு தோறும் தீபாவளிக்கும் பொங்கலுக்கும் அம்மாவிற்குப் புடவைகள் அனுப்புவதைக் கடமையாகக் கொண்டிருந்தேன்.

அம்மாவின் கண்களில் விழியாடி வெளுப்பு ஏற்பட்டிருந்தது. அதை அகற்ற அவர்களைச் சிராப்பள்ளிக்கு அழைத்துவந்தேன் அம்மாவுக்குத் துணையாக என் இரண்டாம் தமக்கை மங்கையர்க்கரசியும் பெரியம்மாவும் வந்திருந்தனர். என் மாமனாரும் சிராப்பள்ளியின் புகழ்வாய்ந்த கண்மருத்துவ மேதையுமான டாக்டர் தி. வ. அரங்கநாதன் அம்மாவுக்கு வீட்டில் வைத்தே அறுவை செய்தார். அவருக்குத் துணையாக நானும் என் வாழ்வரசியும் இருந்தோம். அம்மாவுடன் பேசிக்கொண்டே ஒரு சிறிதும் வலி தெரியாதவாறு அந்த அறுவையைச் செய்து முடித்தோம். அறுவை முடிந்துவிட்டது என்றபோது அம்மா வியந்தார்கள். அவர்களுக்குக் கண்ணாடி தந்த நாள் வாழ்வில் மறக்கமுடியாத திருநாளாகும்.

தாம் இருந்த இல்லத்தைத் தம்பிக்குத் தர அம்மா விரும்பினார்கள். அது குறித்துப் பேச என்னையும் அழைத்திருந்தார்கள். நானும் என் வாழ்வரசியும் பிள்ளைகளுடன் சென்றிருந்தோம். நாங்கள் சென்றபோது அம்மா மிகவும் நலக்குறைவாக இருந்தார்கள். உடன் இராயப்பேட்டை மருத்துவமனையில் அநுமதித்தோம். உயர் இரத்த அழுத்தத்தால் ஏற்பட்ட மயக்க நிலை இறுதிவரை மாறாமலேயே அம்மாவின் உயிர் பிரிந்தது. அவர்களுடைய இறுதி நாட்களில் உடனிருக்க வேண்டுமெனக் கருதியோ என்னவோ இறைவன் என்னையும் என் வாழ்வரசியையும் அந்தப்போதில் அங்கிருக்கச் செய்தான். ஐந்து நாட்கள் அம்மாவுடன் நானும் செல்வியும் இரவு முழுவதும் தங்கியிருந்தோம்.

குழந்தைகளான என் மகளும் மகனும் திருமுறைகளை இசை நிறைத்துப் பாடுவதில் அம்மா மகிழ்ந்தார்கள். அது என் மாமனாரின் ஏற்பாடு. அவருக்குத் திருமுறைகளில் ஈடுபாடு மிகுதி. நாங்கள் எப்போது சென்னை சென்றாலும், அவர்களைப் பாடவைத்துக் கேட்பார்கள். அம்மாவுக்காகவே என் பிள்ளைகளும் ஒவ்வொரு முறையும் புதிய பதிகங்களுடன் பயணிக்கும். பாட்டியின் செல்லத்தையும் அன்பையும் உள்ளம் குளிரக் குளிர என் பிள்ளைகள் அநுபவிக்கமுடியாதவாறு அம்மா 1980 மார்ச்சு 11இல் தந்தையாருடன் இணைந்தார்கள்.

அப்பா, அம்மா இருவரைப் பற்றியும் என் நினைவுப் பதிவுகளில் உள்ளவற்றை இராமாயணம் போல பல காண்டங்களாக எழுத விரும்புகிறேன். ஆனால், அவ்வளவு வாழ்நாள் எனக்குக் கிடைக்குமா என்பது தெரியவில்லை. இருவருமே அன்பானவர்கள்; அருமையானவர்கள்; கிடைத்தற்கரியவர்கள், இவர்களின் உறவு எனக்குக் கிடைத்ததில் நான் பெருமைப்படுகிறேன். என் பணிகளும் வாழ்வும் இந்த இருவருக்கும் பெருமை தருவதாக அமையுமானால் அதுவே இந்த அன்புள்ளங்களுக்கு நான் ஆற்றக்கூடிய வாழ்நாள் கடமையாகும்.

❖ ❖ ❖

அன்பின் இணையர்

அவ்வை கலைக்கோவன்

திருமணத்துக்குமுன் கணவரின் தாய், தந்தையைச் சந்திப்பதும் அவர்களுடன் பழகுவதும் எல்லோருக்கும் கிடைக்க கூடிய வாய்ப்பு அல்ல. ஆனால், எனக்கு அந்த வாய்ப்புக் கிடைத்தது என் வாழ்வில் மறக்கமுடியாத ஒன்று. என் மாமனாரைச் சந்தித்தது சென்னைப் பொதுமருத்துவமனையின் ஏ வகுப்பு அறையில்தான். இதய நோய்க்காக மருத்துவமனையில் சேர்ந்தபின் என் கணவர் என்னை அழைத்துச்சென்று அறிமுகப்படுத்தினார். அவரைப் பார்த்ததுமே அவர்மேல் எனக்கு மிகுந்த மதிப்பு ஏற்பட்டது. அதற்குப்பின் மூன்று இரவுகள் மருத்துவமனையில் தங்கியிருந்து தேவையான உதவிகளைச் செய்தேன்.மாமியாரிடம் அளவாகப் பேசினேன்.

நான் மூன்றாம் வருடம் படித்துக்கொண்டிருந்தேன். ஆனால், என் கணவர் இரண்டாம் வருடம் முடிக்கவில்லை. அதற்கு அவர் நீ மட்டும் மூன்றாம் வருடம் வந்துவிட்டாயே என் மகனையும் நன்றாகப் படிக்கச் சொல்லியிருக்கலாமே என்று வருத்தத்துடன் கூறினார். நான் திருச்சிராப்பள்ளிக்கு அடிக்கடி செல்வேன். அடுத்த முறை செல்லும்போது அவசியம் உன் வீட்டிற்குப்போய் உன் பெற்றோரைப் பார்க்கிறேன் என்றார். ஆனால், அது நடக்காமல் போய்விட்டது. மருத்துவமனையில் இருந்த நாட்களில் வகுப்பு தவிர அங்கேயே இருந்து ஏதாவது உதவி செய்வேன். என்னிடம் மிகவும் அன்பாகப் பேசுவார். அவருடைய அன்பு அதற்கு மேல் எனக்குக் கிடைக்காமல் போனது என் துரதிஷ்டம். சில நாட்களாவது அவருக்குத் தொண்டு செய்யும் வாய்ப்புக் கிடைத்ததற்கு இறைவனுக்கு நன்றி சொல்வேன்.

என் மாமியாரைப் பற்றி ஒரு சிறு புத்தகம் எழுதும் அளவுக்கு என்னிடம் செய்திகள் உள்ளன. ஆனால், அவற்றில் சிலவற்றை மட்டும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

பயிற்சி மருத்துவக் காலத்தில் திருவல்லிக்கேணி கோஷா மருத்துவமனையில் மூன்று மாதம் பயிற்சியில் இருந்தபோது தினமும் மதிய உணவு ஆள் மூலம் கொடுத்தனுப்புவார்கள். எங்கள் குடும்பத்தில் எந்த மருமகளுக்கும் கிடைக்காத இந்தப் பேறு எனக்குக் கிடைத்தது இறைவன் அருள்தான். அதற்குக் காரணம் என் கணவர்தான் என்றாலும் அதற்கு ஒப்புதலளித்து தினமும் சளைக்காமல் எனக்குச் சுவையான, விதவிதமான உணவு அனுப்பியது அவர்களுடைய பெரிய மனத்தையும் அன்பையும் எடுத்துக் காட்டுகிறது.

கோஷா மருத்துவமனையில் மூன்று மாதம் பயிற்சியில் இருந்தபோது தினமும் மதிய உணவு கொடுத்தனுப்புவார்கள். எங்கள் குடும்பத்தில் எந்த மருமகளுக்கும் கிடைக்காத இந்தப் பேறு எனக்குக் கிடைத்தது இறைவன் அருள்தான். தினமும் சளைக்காமல் எனக்குச் சுவையான, விதவிதமான உணவு அனுப்பியது அவர்களுடைய பெரிய மனத்தையும் அன்பையும் எடுத்துக் காட்டுகிறது.

எங்கள் திருமணம் முடிந்ததும் என் கணவர் வீட்டிலேயே மாடியில் இருந்தோம். அப்போது எனக்குச் சமையல் தெரியாது. அதனால் அவர்கள் சமையல் செய்யும்போது கீழே சென்று உதவி செய்ய எனக்குத் தயக்கமாக இருக்கும். மதியமும் இரவும் கீழே சென்று சாப்பிடுவோம். மதிய உணவு பெரும்பாலும் நான் தனியாகத்தான் சாப்பிடுவேன். ஏனெனில் என் கணவர் பொதுமருத்துவமனையில் உள்ளிருப்பு மருத்துவராக இருந்தார். சில சமயங்களில் வழக்கத்திற்கு மாறாக ஏதாவது செய்திருந்தால் அதை எனக்குச் சொல்லி எடுத்துச் சாப்பிடச் சொல்வார்கள். எப்போதுமே அவர்களுடைய சமையல் எனக்குப் பிடிக்கும். இருந்தாலும் பயந்துகொண்டே அவசரம் அவசரமாகச் சாப்பிட்டுவிட்டு மாடிக்குச் சென்றுவிடுவேன்.

நாங்கள் திருச்சிராப்பள்ளி வந்தபிறகு ஒவ்வொரு வருடமும் உறையூர்ப் புடவை இரண்டு எடுத்து அனுப்புவோம். நாங்கள் எடுத்துக்கொடுத்த புடவைகள் அனைத்துமே அவர்களுக்கு மிகவும் பிடிக்கும். ஒவ்வொரு வருடமும் பொங்கலுக்குக் குழந்தைகளுடன் சென்னை செல்வோம். என் கணவருக்குப் பிடித்த உணவு வகைகளைச் சமைத்து அன்போடு பரிமாறுவார்கள். அவர்களுக்கு உடல்நலம் குன்றியபிறகு திருமதி சரோஜா சமைத்துக் கொண்டிருந்தார்கள். நாங்கள் போகும்போது படுத்துக்கொண்டே பக்குவம் சொல்லிச் சமைக்கச் சொல்வார்கள்.

பொங்கல் விடுமுறைக்கு நாங்கள் சென்னை சென்றால் காணும் பொங்கலன்று மற்ற பேரக்குழந்தைகளுக்குக் கொடுப்பதைவிட எங்கள் குழந்தைகளுக்கு அதிகப் பணம் கொடுப்பார்கள். வருடத்திற்கு ஓரிருமுறைதான் அவர்களைப் பார்க்கமுடிகிறது என்பதால் அவர்கள் இருவரையும் மிகவும் நேசித்தார்கள்.

கண் அறுவை மருத்துவத்திற்காகத் திருச்சிராப்பள்ளி வந்து தங்கியிருந்த போதுதான் அவர்களுக்குப் பணிவிடைசெய்யும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. என் சமையலை மிகவும் பாராட்டினார்கள். அதற்குப் பிறகு எல்லோரிடமும் செல்வி (அவ்வை) மிகவும் திறமைசாலி, நன்றாகச் சமைக்கிறாள் என்று என்னைப் பற்றிப் பெருமையாகச் சொல்ல ஆரம்பித்தார்கள்.

திருமணமான புதிதில் இருந்த பய்ம், தயக்கம் ஒரு வருடத்தில் சரியாகிவிட்டது. அதற்குப் பிறகு சிறிது சிறிதாக அவர்களுக்கும் என்மேல் பிரியம் ஏற்பட்டது. ஒரு காலகட்டத்தில் செல்வி திறமைசாலி, நல்ல பெண் என்று எல்லோரிடமும் சொல்லும் அளவுக்கு மாற்றம் ஏற்பட்டது. அது என் பாக்கியம் என்றுதான் சொல்லவேண்டும். நாங்கள் தொலைவில் இருந்ததால் வருடத்துக்கு இரண்டு அல்லது மூன்று முறைதான் அவர்களுடன் இருக்கும் வாய்ப்புக் கிடைக்கும். இப்போது இருப்பது போல் தொலைபேசி வசதி அப்போது இல்லை. இருந்திருந்தால் எங்கள் தொடர்பு இன்னும் நெருக்கமாக இருந்திருக்கும்.

இறுதியாக அவர்களைச் சந்தித்தபோது மிகவும் நலக்குறைவாக இருந்தார்கள். உடனடியாக மருத்துவமனையில் சேர்த்தோம். சிலநாட்கள் கூட இருந்து பணிவிடை செய்தோம். ஆனால், அவர்களுடைய இறுதி நாளன்று உடனிருக்கும் பாக்கியம் எங்களுக்குக் கிட்டவில்லை. அவர்களுக்கும் எனக்கும் இடையே இருந்த உறவு ஆழமானது. எனக்கு அவர்கள்மீது மிகுந்த மரியாதை உண்டு; அவர்களும் என்னை நேசித்தார்கள்.

இப்படிப்பட்ட ஒரு தம்பதியருக்கு மருமகளாகும் வாய்ப்பினை எனக்குக் கொடுத்த, அதுவும் திருமணத்திற்கு முன்பே கொடுத்த இறைவனுக்கு என் நன்றி.

❖ ❖ ❖

பாட்டியே பேத்தியாக . . .!

இளங்கோ குமணன்

தலைமுறை இடைவெளியைக் குறைத்த தூதுவர்; என் கலையார்வத்தின் முதல் ரசிகர்; அறுசுவை உணவிற்குத் தனியொரு அடையாளம்; என் தந்தையின் தாய்க்கு, என் பாசமிகு பாட்டிக்கு. இப்படிப் பல முகங்கள் உண்டு.

பாட்டியுடன் என் அனுபவங்கள் ஆயிரம் உண்டு. சிலவற்றை நினைத்துப் பார்க்கின்றேன். உடல்நலக் குறைவின் காரணமாய்க் கடைசி ஓராண்டு எங்கள் இல்லத்தில் பாட்டி இருந்தபோதுதான், பாட்டி என்ற உறவின் உன்னதம் புரிந்தது எனக்கு. தான் எடுத்துக் கொடுக்கும் சட்டைத் துணியும் நிறமும் பிடிக்கவில்லை என மறுத்து முதல்முறையாக எனக்குப் பிடித்த சட்டையை நான் எடுத்தபோது என் தகப்பனார் சற்றே அதிர்ந்துபோனார். அப்போது தன் பிள்ளையிடம் பேசி சமாதானம் செய்தார் என் பாட்டி. கண்ணாடி முன்பு அரை மணி நேரம் நிற்கின்றானே என்று என்னைப் பற்றி என் தந்தை வருந்தியபோது, தன் பிள்ளைக்காகப் பேரனிடம் பேசியவரும் அவர்தான். என் தந்தை, என்னைப் பற்றி அவநம்பிக்கைக் கொண்ட போதெல்லாம், அவருக்கு நம்பிக்கையூட்டி, எனக்கு உற்சாகமூட்டி இரு தலைமுறையை முறையாகக் கையாண்ட மூத்த தலைமுறை களையும் முழுமை என் பாட்டி.

என் தந்தை, அவநம்பிக்கை கொண்ட போதெல்லாம் அவருக்கு நம்பிக்கையூட்டி, எனக்கு உற்சாகமூட்டி, இரு தலைமுறை களையும் முறையாகக் கையாண்ட மூத்த தலைமுறையின் முழுமை என் பாட்டி.

என் பாட்டி ஒரு சிறந்த ரசிகை. நான் மனத்திற்குள் பல கதாநாயகர்களை உள்ளிருத்திக் கொண்ட கலைஞன். எழுபதுகளின் இடையில் வந்த திரைப்படங்களை எல்லாம் என் பாட்டி படுக்கையில் படுத்தபடி காதால் கண்டார்கள். நான் படம் பார்த்து விட்டு வந்து பெயர்ப் பட்டியல் தொடங்கி, வணக்கும் வரை இரண்டு மணிநேரம் தொடர்ந்து அவர்களுக்குக் கதை சொல்வேன். என் உடன் பிறந்தவர்கள் மற்ற ரசிகர்கள். குறிப்பாக 'அந்த ஏழு நாட்கள்' படம். கதை முடிந்தவுடன் அதன் தொடர்பான விவாதமும் நடைபெறும். எதிலும் என் நடத்தை கண்டு பயந்துகொண்டே இருந்த என் தகப்பனாருக்கு இந்த ஒரு விஷயத்தில் மட்டும் முழு நிறைவு. மகிழ்ச்சியடைவது அவரின் அம்மாவாயிற்றே.

அந்த நாட்களில் என் அப்பா, வீட்டிற்கு எத்தனை மணிக்குத் திரும்பினாலும், என் பாட்டி இருக்கும் அறைக்கு வந்து பார்த்து, "என்னம்மா, சாப்பிட்டாயா?", என்று கேட்கத் தவறியதே இல்லை. "உங்கப்பா வந்திட்டானா?", என்று கேட்கப் பாட்டியும் தவறியதே யில்லை. அந்த ஒருவரிக் கேள்விக்குள் பொதிந்திருந்த பாசத்தைப் புரிந்து கொள்ளும் வயதும் அறிவும் அப்போது எனக்கில்லை.

காலம்தானே பல பாடங்களுக்கு ஆசான். இப்போது நான் வீடு திரும்பியவுடன் "எங்கே அம்மா?", என்று கேட்கையில் என் அப்பாவின் கேள்விக்கு விடை கிடைக்கின்றது.

மாமியார் என்ற உறவைப் பதவியாய் என் பாட்டி கருதிய சில நேரங்களில் நான்தான் என் தாய்க்கு வக்கீல். அப்பொழுதெல்லாம் அனல்பறக்க நான் பேசுவேன். பாட்டியும் விடாமல் என்னுடன் விவாதிப்பார்கள். பிறகுதான் தெரிந்தது உரிமைச் சண்டை பத்து விழுக்காடு என்றால் மீதமெல்லாம் என்னைப் பேச வைக்கத்தான் என்று. "அவன் எப்படி பேசுகிறான் பார்" என்று மருமகளிடம் என்னை வியந்து பேசியிருக்கின்றாராம்.

இந்தப் பாட்டிகளின் இலக்கணம் புதிரானது; ஆனால் இனிதானது. பிள்ளை செய்தால் தவறு; அதுவே பேரன் செய்தால் சரி.

நான் புத்திசாலியாக இல்லையோ என்ற சந்தேகம் என் தந்தைக்கு. நான் அறிவாளி என்ற நம்பிக்கை எனக்கு. கணிதப் பாடத்திற்கு வீட்டிற்கு வந்து பயிற்சி கொடுத்தார் ஒரு ஆசிரியர். அவரிடம் கணிதம் பயில்வது எனக்கு மிகவும் சம்மதம். காரணம் அவர் என் தந்தையின் மாணவர். ஆசிரியரிடம் காட்டும் அதே பக்தியை அவர் மகனிடமும் காட்டினார். திடீரென்று அவரிடம் ஒரு மாற்றம். பயிற்சி தொடங்கும் முன் நோட்டுப் புத்தகம் எடுத்து வைப்பதற்குப் பதிலாகப் பிரம்பை எடுத்துவைக்கத் தொடங்கினார். இரண்டும் இரண்டும் நான்கு என்று சொல்லாவிட்டால் தலையில் இரண்டு கொட்டு, கையில் இரண்டு அடி, சொல்லிவிட்டாலும் தலையில் இரண்டு கொட்டு, கையில் இரண்டு அடி, ஏன் உடனே சொல்லவில்லையென்று. இந்த மாற்றத்திற்குப் பின்னால் இருந்த சதியை இரண்டு நாட்களில் நான் கண்டுபிடித்தேன். ஆசிரியர் சொல் தட்ட முடியாத நிலையில் அவர் மாணவரான என் ஆசிரியர் தன் மாணவரை விடாமல் தட்டுகின்றார் என்றறிந்தபோது என்னைக் காப்பாற்றியவர் என் பாட்டி. "அவன் படிக்காமலேயே இருந்தாலும் பரவாயில்லை. இந்த ஆசிரியர் இனிமே இங்க வரக்கூடாது. எப்படி அவர் என் பேரனை அடிக்கலாம்", என்று கேட்டவர், ஒரு தமிழறிஞரின் துணைவி; பல தமிழ்ப் பேராசிரியர்களின் தாய்; தானே ஒரு தமிழ் ஆசிரியர். ஆனால் ஆசிரியர் என்ற நிலையைவிட, பாட்டி என்ற உறவு உயர்ந்த நிலையை அடைந்த தருணமது. அன்று முதல் என் தலையும் தப்பித்தது. என்னிடமிருந்து கணக்கும் தப்பித்தது. என் பாட்டிக்கும் எனக்கும் நெருக்கம் அதிகரித்தது.

ஒருமுறை ஏதோ ஒரு பண்டிகைக்குத் துணி எடுக்கப் போனபோது என் பாட்டிக்கு நான் தேர்ந்தெடுத்தேன். "இந்த கலர் உங்க பாட்டி கட்டமாட்டாங்க", என்றார் என் அம்மா. "இது பாட்டிக்கு நல்லா இருக்கும் வாங்குங்க", என்றேன். வீட்டிற்குப் போனவுடன் அம்மா சொன்னது போலவே பாட்டி, "இது எனக்குப் பிடிக்காதே", என்றார். "உங்க பேரன் உங்களுக்காக எடுத்தது", இது அம்மா. "அப்படியா, அப்ப சரி குடு", என்று வாங்கிக் கொண்டார் பாட்டி. பிறகு என் அம்மா சொல்லக்கேட்டேன். எந்தப் புதுப்புடவையாக இருந்தாலும் தன் மகள், மருமகள் என யாரேனும் கட்டியபின்தான் கட்டிக் கொள்ளும் பாட்டி இந்தப் புடவையை மட்டும் அவர்களே முதலில் கட்டிக் கொண்டார்களாம்.

பட்டாசு, அதிரசம், நோன்புக்கயிறு இவற்றுடன் பாட்டி வீடு. இந்தப் பட்டியல்தான் எப்போதும் எனக்குத் தீபாவளி. எட்டுப் பிள்ளைகள், அவர்கள் வழிப் பேரன் பேத்திகள் என்று பாட்டி வீடு முழுவதும் தீபாவளியன்று மகிழ்ச்சி நிறைந்திருக்கும். அவரவர் வாங்கி வந்த பட்டாசுகள் எல்லாம் குவியலாக இருக்க, என் அப்பா அக்குவியலின் முன் உட்கார்ந்திருக்க, மூத்த பேரன் தொடங்கி கடைசி பேரன் வரை வரிசையில் நிற்க, எல்லோருக்கும் பட்டாசு விநியோகம் நடக்கும்; விதவிதமான தின்பண்டங்கள் கிடைக்கும். ஜார்ஜ்டவுன் இப்ராகிம் சாகிபு தெருவின் அந்த மாடியை அந்தத் தெரு முழுவதுமே பார்த்து வியந்து கொண்டிருக்கும்.

மறுநாள், பாட்டி பூசை யறையில் அமர்ந்திருக்க, அவர்கள் தரும் நோன்புக் கயிற்றையும் அன்பளிப்பையும் வாங்க மீண்டும் எங்கள் வரிசை நிற்கும். பிறகு சுவையான உணவு. இப்போதும் பட்டாசு, அதிரசம், நோன்புக் கயிறு எல்லாம் இருக்கின்றன. ஆனால் பாட்டி இல்லை. எனவே, தீபாவளியும் இல்லை.

பாட்டியின் இறுதிக்காலம் பெரும்பாலும் இராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் கழிந்தது. என் தந்தையார் மருத்துவமனை வராண்டாவில் அமர்ந்து தனது முனைவர் பட்டத்துக்கு எழுதிக் கொண்டிருப்பார். என் தாய் பகலில் வானொலி நிலையம், இரவு மருத்துவமனை எனச் சுழன்று கொண்டிருந்தார். நான் பாட்டியைப் பார்த்துக் கொள்கிறேன் பேர்வழி என்று பள்ளியையே அவ்வப்போதுதான் பார்த்துக் கொண்டிருந்தேன். ஒரு நாள் என் பாட்டியின் கால்களை எடுத்து என் மடியில் வைத்துக் கொண்டு, நகங்களை வெட்டிக் கொண்டிருந்தேன். அப்போது அறைக்குள் நுழைந்த எங்கள் மரியாதைக்குரிய குடும்ப நண்பர் மருத்துவர் இரா. கோவிந்தராசன் அவர்கள், “ஆகா, என்ன அருமையான காட்சி. இந்தக் காலத்தில் எந்தப் பேரன் இப்படி பாட்டிக்கு நகம் வெட்டிவிடுவான்”, என்று வியப்படைந்தார். என் பாட்டி, “பேரன் எனக்குச் செய்கிறான். இதுல என்ன ஆச்சரியம் இருக்கு”, என்றார்கள். மறைக்க முடியாத பெருமை அவர்கள் முகத்தில் இருந்தது. அப்படி ஒரு பாட்டி இருந்தால் எந்தப் பேரனும் செய்வான் என்பது அப்போது எனக்குப் புரியவில்லை. இப்போது புரிகின்றது.

இதய நோய் என்ற பெயரில் காலம் என் பாட்டியின் வாழ்வை நிறைவு செய்தது. நாங்கள் பாட்டியின் வீட்டிற்குச் சென்றோம். எங்களுக்கு முன்பாகச் சென்றுவிட்ட அப்பா தெருமுனையில் நின்றிருந்தார். “உனக்கு நல்லது சொல்லிக் கொண்டிருந்த பாட்டி போயிட்டாங்க போய்ப் பாரு. இனிமேலாவது ஒழுங்கா நடந்துக்கோ”, என்றார். இருக்கும்போது புரியாதது, இல்லாதபோது புரிந்தது. வாழ்க்கை நியதியும் அதுதானே. இன்று, பாட்டி இல்லாது இருந்தும் எனக்குள் இருக்கிறார்கள்.

என் பாட்டி நம்பிய, என் தந்தை நடக்குமா என்று சந்தேகித்துக் கொண்டிருந்த என் நல்வாழ்வைக் காண இன்று இருவருமே இல்லை. இப்போது எனக்கு இரண்டு மகன்கள். நான் காத்திருக்கிறேன், மீண்டும் பாட்டியைக் காண ..... என் பேத்தியாக .....!

❖ ❖ ❖

இனிக்கும் நினைவுகள்

திருமதி அன்புச்செல்வி பாரி, திருமதி கலைச்செல்வி சுந்தர்

அன்பு நிறைந்த எங்கள் பாட்டியை எப்போது நினைத்தாலும் உள்ளத்தில் மகிழ்ச்சி பெருகும். எங்கள் பாட்டி, தம்முடைய பேரக்குழந்தைகள் அனைவரும் ஒற்றுமையுடனும் பாசத்துடனும் வளர வழிகாட்டியவர்கள். நாங்கள் அனைவரும் நல்ல பழக்கவழக்கங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று விரும்பி எங்களை நெறிப்படுத்தியவர். கூட்டுக் குடும்ப அமைப்பின் நன்மைகளை யெல்லாம் நாங்கள் பாட்டியின் வீட்டில் அனுபவித்தோம்.

பாட்டி வீட்டு மாடியில் நாங்கள் அனைவரும் மாலையில் விளையாடுவோம். அப்போது ஏற்படும் சண்டைகளுடன் அவர்கள் முன்போய் நின்றால், இரு தரப்பினரின் வாதங்களையும் பொறுமையாகக் கேட்டுக் கொள்வார்கள். பிறகு யார் மனமும் வருந்தாதவகையில் பிணக்குகளைத் தீர்த்து வைப்பார்கள். எங்கள் அனைவரையும் நன்றாகப் படிக்கவேண்டும் என்று அன்பாகக் கூறித் தேர்வுகளில் சிறந்த மதிப்பெண் வாங்குபவர்களுக்குப் பரிசுகள் அளித்து ஊக்கப்படுத்துவார்கள். அனைவரையும் உட்கார வைத்து அருமையாக உணவு படைப்பார்கள். அப்போது, நன்றாக மென்று சாப்பிட வேண்டும், நிறைய காய்கறிகளைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்றெல்லாம் அறிவுறுத்துவார்கள். இயன்றவரை பாட்டிக்கு உதவுவது எங்களுக்குப் பிடிக்கும். பாத்திரம் விளக்குவது, பெருக்குவது போன்ற வேலைகளை அவ்வப்போது செய்வோம். எங்கள் பாட்டி எங்களுக்குகச் செல்லம் கொடுத்து, அன்புகாட்டி, அரவணைத்தது போலவே நாங்கள் தவறிழைத்தபோது கண்டிக்கவும் தவறியதில்லை.

உறவுகளின் தேவையையும் வலிமையையும் இணக்கமாகப் பழகும் வாழ்நெறியையும் கற்றுக் கொடுத்தவர் எங்கள் பாட்டி.

தீபாவளி, பொங்கல் என்றாலே பாட்டி வீடுதான். உறவினர் அனைவரும் ஒன்றுகூடும் காலம் அது. எங்களுக்கு மூன்று சித்திகள். நான்கு மாமாக்கள். அவர்களுள் இரண்டு மாமாக்களுக்குத் திருமணம் ஆகியிருந்தது. அனைவருமே அவரவர் குழந்தைகளுடன் வருவார்கள். எல்லோரும் ஒன்றாகச் சேரும்போது பாட்டி வீடே 'கலகல' வென்று மகிழ்ச்சியாக இருக்கும். எங்கள் அம்மா, சித்திகள், மாமிகள் அனைவரும் ஒற்றுமையுடன் சமையல் முதலானவற்றைக் கவனித்துக் கொள்வார்கள். அன்பும் அரவணைப்பும் பாசமும் நேசமும் நிறைந்த எங்கள் பாட்டியோடு அந்த நாட்கள் மகிழ்ச்சியாகக் கழியும்.

பொங்கலன்று காலையில் கரும்பு, மஞ்சள் கொத்து, பொங்கல், வடை, பாயசம் முதலானவற்றை எடுத்துக்கொண்டு மாடிக்குச் சென்று கதிரவனுக்குப் படைத்து அனைவருடனும் இனிமையாகப் பொங்கலைக் கொண்டாடுவோம். பாட்டி வீட்டு மாடிதான் எங்கள் மகிழ்ச்சிக்குக் காரணமாக விளங்கிய எழிலார் விளையாட்டுப் பூங்கா, எங்கள் தாத்தாவும் பாட்டியும் வாழ்ந்ததும் எங்கள் இளம் பருவத்து வாழ்க்கையின் சுகமான நினைவுகளைச் சுமந்ததுமான பாட்டியின் அந்த வீடு எங்கள் நெஞ்சங்களில் என்றென்றும் அழிக்க முடியாத இடத்தைப் பெற்றுள்ளது.

தீபாவளியின் போது பாட்டி செய்யும் அதிரசம் போல் அவ்வளவு சுவையான அதிரசத்தை நாங்கள் இன்றுவரை எங்குமே சாப்பிட்டதில்லை. நோன்பன்று காலை யிலிருந்து மாலை இறைவனுக்குப் படைக்கும் வரை பாட்டியும் பெரிய மாமியும் விரதம் இருப்பார்கள். இறை வழிபாட்டுக்குப் பிறகு, பாட்டியை வணங்கி, அவர்கள் ஆசி கூறித் தரும் புத்தாடையை வாங்கி உடுத்திக் கொண்டு நாங்கள் மாடிக்குச் சென்று தீபாவளிக் காக வாங்கிய பட்டாசுகளை வெடித்துக் கொண்டாடி மகிழ்வோம்.

பண்டிகை நாட்களில் பாட்டி வீட்டில் ஒன்று கூடும்போது, பாட்டி அனைவரையும் உட்கார வைத்து அவரவர் வயதுக்கேற்ப உணவினை உருண்டையாக உருட்டி, கையில் கொடுப்பார்கள். அவ்வாறு சாப்பிடும்போது அரட்டைகளுக்கு நடுவில் எங்களையும் அறியாமல் அளவுக்கு மீறிச் சாப்பிட்டு விடுவோம். எவ்வளவு அருமையான நாட்கள் அவை! இன்று எங்கள் குழந்தைகள் பெறமுடியாத - நினைத்துக்கூடப் பார்க்க முடியாத அருமையான செய்தியாகிவிட்டதே இது என்பதை நினைத்துப் பார்க்கும் போது வருத்தமாகத்தான் உள்ளது.

உறவுகளின் தேவையையும் வலிமையையும் இணக்கமாகப் பழகும் வாழ்நெறியையும் கற்றுக் கொடுத்தவர் எங்கள் பாட்டி. அதனால்தான், இன்றும்கூட அவர்களுடைய பேரன் பேத்திகளாகிய நாங்கள் திருமணமாகிப் பல்வேறு நாடுகளில் இருந்தாலும் சென்னைக்கு வரும்போதெல்லாம் அனைவரையும் பார்க்கவேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்களாய் இருக்கின்றோம்.

எங்களைப் பேரன்பு காட்டி, அரவணைத்து அருமையாக வளர்த்த எங்கள் பாட்டி, இன்று தம்முடைய அனைத்துப் பேரன் பேத்திகளும் மணமாகி நல்ல நிலைமையில் சிறப்பாக வாழ்வதைக் கண்டு மகிழ எங்களுடன் இல்லையே என்ற வருத்தம் அனைவருக்கும் உண்டு. பாட்டியின் பேரன்பில் மூழ்கித் திளைத்த நாங்கள் அவர்களை ஒருபோதும் மறவோம்.

❖ ❖ ❖



நினைவு மலர்கள்
3

இளங்கோவன் - 75
1932 - 1981

மறைந்துபோன - மக்கள் மறந்தேவிட்ட - பழைய இதழ்களையெல்லாம் தேடியெடுக்க மா.ரா. இளங்கோவன் அரும்பாடுபட்டு உழைத்திருக்கிறார். அவற்றை ஆராய்ச்சி ரீதியில் மக்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது என்பது அவ்வளவு எளிதான பணியல்ல. இந்த உழைப்புக்குத் தமிழினம் என்ன கைமாறு செய்யுமோ?

தமிழ்மொழியின் வளத்தைக் காட்ட இது போன்ற நூல்கள் தேவைப் படுகின்றன. ஆராய்ச்சியிலேயும் இது ஒரு புதிய முறை. இத்துறையில் நண்பர் இளங்கோவன் தனித்திறமை பெற்று விளங்குகிறார்.

ம. பொ. சி.
'அணிந்துரை'
இதழியல் நோக்கு,
பக். 9 - 10

அன்பின் ஊற்றாம் அண்ணன்

இரா. கலைக்கோவன்

பெரிய அண்ணன் இளங்கோவனை நினைத்தாலே அவருடைய அன்புள்ளம்தான் நினைவில் வலம் வரும். இளம் வயதில், 'பரிசுகள்' என்று உடன்பிறந்தாரிடமிருந்து பெற்றது அவரிடமிருந்து மட்டும்தான். நாங்கள் மதுரையில் இருந்தபோது, சென்னையில் தங்கிப் படித்துக் கொண்டிருந்த அவர் எனக்கு வாங்கி வந்து தந்ததாய் என் நினைவில் இன்றும் நிறைந்திருக்கும் முதல் அன்பளிப்பு அழகான ஒரு பொம்மை. அதை நான் நெடுங் காலம் வைத்திருந்தேன். மீன் வளர்க்க கண்ணாடித் தொட்டி, பிறந்தநாளுக்குச் சட்டை, படிக்க அருமையான நியுசெஞ்சுரி புத்தக நிலைய நூல்கள் என அவர் வாங்கித் தந்த அன்பளிப்புகள் கணக்கிலடங்கா. என் படிக்கும் ஆர்வத்தை வளர்த்தவர்களுள் அவரும் அம்மாவும் குறிப்பிடத்தக்கவர்கள். எதுவும் படிக்க அநுமதிப்பார்.

மதுரையில் தமிழ்நாடு நாளிதழில் அவர் பணியாற்றிய காலத்தில் மதிப்புரைக்காகப் பல நூல்கள் அவருக்கு வரும். அவற்றை எல்லாம் நான் எடுத்துப் பார்ப்பேன்; படிப்பேன். எமர்சன், ரூசோ, இங்கர்சால், பிளேட்டோ எனப் பல அறிஞர்களை எனக்கு அறிமுகப்படுத்தியவர் அவர்தான். 'எடுத்துப்படி' என்று சொல்ல மாட்டார். ஆனால், படிக்க எடுத்தால் அது எந்தப் புத்தகமாக இருந்தாலும் தடுக்கமாட்டார்.

அண்ணனிடம் எனக்குப் பிடித்த பண்புகள் பல. உற்சாகப்படுத்துவதும் ஊக்கப்படுத்துவதும் அவருடன் பிறந்தவை. எதையுமே தடுக்கமாட்டார். ஆக்கப் பூர்வமான அனைத்துச் செயல்களையும் வளர்ப்பார்.

நான் எப்போது எழுதத் தொடங்கினேன் என்று எனக்கு நினைவில்லை. ஆனால், எட்டாம் வகுப்புப் படிக்கும் போது நன்கு எழுதவும் பேசவும் வாய்த்திருந்தது. திரைப்பாடல்களின் இசையில் என் பாடல்கள் தோன்றிய காலம் அது. விளையாட்டாக நான் எழுதிவைத்திருந்த ஒன்றிரண்டு பாடல்கள் அவர் பார்வையில் பட்டன. படித்தவர், 'உனக்குப் பாட்டெழுத வருகிறதே. நீ ஏன் தொடர்ந்து முயற்சிக்கக்கூடாது. நிறைய எழுது' என்று ஊக்கப் படுத்தினார். என் பள்ளி நண்பர்களுக்கு நிறைய எழுதிக் கொடுத்தேன். ஒரு பாடலுக்கு இருபது காசுகள் வாங்கினேன். அந்தத் தொகை மாலை உணவுக்கும் புத்தகங்கள் வாங்கவும் பயன்பட்டது.

அண்ணன் வாங்கித் தந்த சிறு சிறு ஆங்கிலக் கதைப் புத்தகங்களும், ஆங்கில உரைநடை, பாடல் படிப்பது எப்படி என்று புகுமுக வகுப்புக் காலத்தில் அப்பா காட்டிய வழிமுறைகளும் என் ஆங்கில அறிவை வளர்த்துக் கொள்ள உதவின. எப்போது அவர்

அலுவலகத்துக்குச் சென்றாலும், அது உணவு நேரமாக இருந்துவிட்டால், அருகிலுள்ள சிற்றுண்டி விடுதிக்கு அழைத்துச் சென்று உணவு வாங்கித் தருவார். அவருடன் வெளியில் செல்வது மகிழ்வூட்டும் செயலாகவே எப்போதும் இருந்தது. அவருடன் சென்று உணவுகொள்ளாமல் நாங்கள் திரும்பியதேயில்லை. சாப்பிடவைத்துப் பார்ப்பதில் அவருக்கு இணை அவர்தான்.

அண்ணி, இளநிலை ஆசிரியப் பயிற்சி மேற்கொண்டிருந்த காலத்தில் நானும் என் அக்கா இசையரசியும் பத்து நாட்கள் அவர் வீட்டில் தங்கி அண்ணிக்கு உதவியாக இருந்தோம். அந்த நாட்களில் இரவுப் போதுகளிலும் வார இறுதி நாட்களின் மதியப் போதுகளிலும் அவர் இருந்து பரிமாற நாங்கள் சாப்பிட்டோம். அன்பு காரணமாக மிகை உணவு கொள்ளச் செய்துவிடுவார். ஏதாவது ஒன்று நன்றாக இருக்கிறது என்று கூறிவிட்டால், 'அள்ளி' வைத்துவிடுவார். நமக்குச் சாப்பிட்டு மாளாது. நாம் சாப்பிடும் அழகை இரசிப்பார். எனக்குத் தெரிந்து இந்த அறுபதாண்டுக் காலத்தில் அவரைப் போல் பரிமாறி, அவர் போலவே அடுத்தவர் உண்ண இரசித்த மற்றொரு மனிதர் என் தம்பி அரசுதான். இந்த விஷயத்தில் அவர் அண்ணனை வாங்கி வந்திருக்கிறார். எந்தக் காலத்திலும் என்னால் அவர்கள் இருவரைப் போல் பரிமாறவும் முடியாது. பார்த்துப் பார்த்துச் செய்யவும் முடியாது.

அண்ணனிடம் எனக்குப் பிடித்த பண்புகள் பல. உற்சாகப்படுத்துவதும் ஊக்கப்படுத்துவதும் அவருடன் பிறந்தவை. எதையுமே தடுக்கமாட்டார். ஆக்கப் பூர்வமான அனைத்துச் செயல்களையும் வளர்ப்பார். காதல் காலத்தில் என் வாழ்வரசியுடன் பலமுறை அவர் வீட்டுக்குச் சென்று உணவு கொண்டுள்ளேன். அண்ணியும் அன்பானவர். எங்களைப் பிள்ளைகளினும் அன்புடன் நடத்துவார்.

அப்பாவை இழந்த என் படிப்புக் காலத்தில் இல்லம் வரும்போதெல்லாம் பணம் வேண்டுமா என்று கேட்பார். தேவையிருந்தால்கூட அவரிடம் கேட்பதை விரும்பா திருந்தேன். காரணம் அவர் குடும்பம் நான்கு பிள்ளைகளுடன் இருந்தது. அவர் ஒருவரே அப்போது சம்பாதித்துக் கொண்டிருந்தார். இருந்தாலும், போகும்போது என் கையில் ஐந்து ரூபாயோ பத்து ரூபாயோ தந்துவிட்டுச் செல்வார். அந்த நேரங்களில் அவருடைய கண்களைச் சந்திப்பதில் எனக்குப் பேரார்வம் வரும். அந்தக் கண்கள் என் அப்பாவின் கண்கள். அன்பை அள்ளித்தரும் வசீகரக் கண்கள்.

அண்ணனின் பேச்சு கவர்ச்சிகரமாக இருக்கும். அவரைப் போல் பேசுபவர் இன்னொருவர் நான் கண்டதில்லை. அவர் மட்டும் மேடைக்கு வந்திருந்தால், மிகச் சிறந்த பொழிவுகளை இந்த நாடு கேட்டிருக்கும். அவருக்கு ஏனோ, மேடைகளில் ஆர்வம் இருந்ததில்லை. வீட்டுப் பேச்சுகளில் அவர் காட்டிய ஆர்வம், எங்களை மகிழ்விக்க அவர் நிகழ்த்திய உரைகள் என்றென்றும் நினைத்து மகிழத்தக்கவை. சிரிக்கச் சிரிக்கப் பேசுவார். நாங்கள் அனைவரும் கூடியிருந்து கேட்போம். நேரம் போவதே தெரியாமல் அவர் பேச்சைக் கேட்டிருக்கிறோம்.

பேச்சைப் போலவே அவர் எழுத்தும் நன்றாக இருக்கும். புதிய சிந்தனைகளை உட்கொண்ட எழுத்துரைகளை அவர் படைக்க நான் கண்டிருக்கிறேன். அந்த எழுத்தையும் பேச்சையும் அவர் சரியாகக் கையாண்டிருந்தால் தமிழ்மொழி பெருமைக்குரிய ஒரு பேராசிரியரைப் பெற்றிருக்கும். தமிழ்நாடு பல வளமான நூல்களைக் கொண்டிருக்கும். இதழியலின் பிதாமகன் என்று அவரைக் குறிப்பிடலாம். 'இதழியல் இளங்கோவன்' என்றே அறிஞர்களால் அழைக்கப்பட்ட அண்ணன், இதழியல் இமயமாக உயரமுடியாதபடி காலம் விரைந்து அவர் வரலாற்றை முடித்தது.

பயிற்சி மருத்துவனாகப் பணியேற்ற முதல் நாள் அம்மாவை அடுத்து அவர் திருவடிகளில் விழுந்து வணங்கியே புறப்பட்டேன். என்னைத் தூக்கி நிறுத்தியபோது அவர் கண்கள் கலங்கியிருந்தன. என் கண்களும்தான். அவருடைய மென்மையான உள்ளம் அப்போது என்னென்ன நினைத்ததோ நான் அறியேன். சட்டைப் பைக்குள் கைவிட்டுக் கையில் கிடைத்த நோட்டுகளை எடுத்து என் கையில் வைத்தார். நான் அவர் கண்களையே பார்த்துக் கொண்டிருந்தேன். எத்தனை அன்பு மனம் இந்த மனிதருக்கு என்று பூரித்துப்போனேன். அந்தப் பணத்தைப் பல நாட்கள் நான் செலவழிக்கவில்லை. அவர் கைப்பட்டு என் கைக்கு வந்த அன்பு மணம் கமழ்ந்த கடைசி நோட்டுகள் அவை.

என்னோடு பேருந்து நிறுத்தம் வரை அன்றைக்கு வந்தார். வழக்கமாக அவரோடுதான் நாங்கள் பேருந்து நிறுத்தம் செல்வோம். அன்று ஒரு மாற்றமாக அவர் வந்தார். அப்பா, அம்மாவின் கனவை நான் நிறைவேற்றியது குறித்து மகிழ்ச்சி தெரிவித்தார். நல்ல மருத்துவனாக உயரவேண்டும் என்று வாழ்த்தினார். நான் மௌனமாகவே அவருடன் நடந்தேன். என்னால் பேச முடியவில்லை. பேசியிருந்தால் கதறி அழுதிருப்பேன். அவருடைய ஒவ்வொரு சொல்லிலும் அன்பிருந்தது; அக்கறை இருந்தது. எல்லாவற்றிற்கும் மேலாகத் தாய்மை இருந்தது. அந்த உணர்வே என் உள்ளத்தை அழுகையால் குளிப்பாட்டிக்கொண்டிருந்தது.

அவருக்கும் எனக்கும் எந்தக் காலத்திலும் கருத்து வேறுபாடுகள் வந்தது கிடையாது. அவர் என்னை ஒருபோதும் அடித்தது கிடையாது. ஆனால் பலமுறை ஊமைக் கோபம் கொண்டுள்ளார். அந்தச் சினம் என்னை வருத்தியதே இல்லை. அவர் கோபத்தின் வாழ்க்கை எனக்குத் தெரியும். அது நொடி நேர மின்னலைப் போல. என் படிப்புக் காலத்தில் நான் பொருளீட்ட உதவியாக என் சிறுகதைகளைச் சுதேச மித்திரனில் தொடர்ந்து வெளியிட்டார். முப்பதுக்கும் மேற்பட்ட சிறுகதைகளை நான் எழுத அவரே காரணர். கதை நன்றாக இருந்தால் உடனே வெளியிடுவார். சுமாராக இருந்தால் சரிசெய்துதரச் சொல்வார். அப்படி அவர் சரிசெய்து தரச்சொன்ன கதைகளை நான் சரிசெய்ததாக நினைவில்லை. அவருக்கு நிறைவளிக்காத எதுவும் வெளியாகக் கூடாது என்பதில் நான் உறுதியாக இருந்தமையே அதற்குக் காரணம். அப்போதெல்லாம் அவருடைய ஊமைக் கோபத்திற்கு நான் ஆட்பட்டிருக்கிறேன்.

மிகுந்த திறமைசாலியும் ஆற்றலாளருமான என் அண்ணன் இலக்கிய உலகில் தாம் அடைந்திருக்க வேண்டிய இடத்தை அடைய முடியாமல் போனமை தமிழ்நாட்டின் இழப்பாகும்.

❖ ❖ ❖

இளங்கோவனின் இதழியல் நூல்கள் - அறிமுகம்*

மா.ரா. அரசு

ஐம்பதுகளில் தமிழ்நாடு நாளிதழில் பணியாற்றியபோதும் அறுபதுகளில் சுதேசமித்திரன் வார இதழில் பணியாற்றியபோதும் பெற்ற அனுபவங்களும் பயிற்சிகளும் வளர்த்த இதழியல் உணர்வுகளால் உந்தப்பட்டு இதழியல் ஆய்வாளர் ஆனவர் பேராசிரியர் மா.ரா. இளங்கோவன்.

இவருடைய முதல் இதழியல் நூல், 'முற்காலத் தமிழ் இதழ்கள் - ஓர் அறிமுகம்' (1979) என்பதாகும். 'அறிமுகம்', 'பொதுநோக்கு', 'மொழித்தொண்டு' என்னும் மூன்று பகுதிகளாக அமைந்துள்ள இந்நூல், 1848 முதல் 1909 வரையில் வெளிவந்த இதழ்களில் தெரிந்தெடுத்த சிலவற்றின் வரலாறு, போக்கு, பணிகள் பற்றிய ஆய்வாக அமைந்துள்ளது.

நீண்ட காலமாக எழுதப்படாமலிருந்த திராவிடன், தேசபக்தன் ஆகிய இதழ்களின் வரலாற்றை ஆய்வு நோக்கில் முதன்முதலாக எழுதித் தமிழ் இதழியல் வரலாற்றில் ஒரு புதிய தொடக்கத்திற்குக் காரணமாக அமைந்தவர் இளங்கோவன்.

நற்போதகம், கலாவர்த்தினி, சித்தாந்த சங்கிரகம், மாதாந்த சட்டப் பத்திரிகை, விவேக திவாகரன், விஜயத்துவஜம், விநோத விசித்திரப் பத்திரிகை, ஜனப்பிரியன் முதலான இருபத்தாறு இதழ்களின் வரலாற்றை 'அறிமுகம்' பகுதியில் தந்துள்ளார்.

'பெண்கள் இதழ்கள்', 'சமய இதழ்கள்', 'சட்ட இயல் இதழ்கள்', 'தலையங்கங்கள்', 'இதழ்வழி அறிவு', 'போட்டி உணர்வு' முதலிய பல தலைப்புகளில் அக்கால இதழ்களின் நோக்கும் போக்கும் பற்றிய செய்திகள் 'பொதுநோக்கு' என்ற பகுதியில் இடம் பெற்றுள்ளன.

மொழிபெயர்ப்பில் அக்கால இதழ்களுக்கு இருந்த ஆர்வம், தமிழ் வளர்ச்சி பற்றி அவ்விதழ்கள் கொண்டிருந்த கருத்து, அக்கால இதழ்களின் தமிழ்நடை போன்றவை 'மொழித்தொண்டு' என்னும் தலைப்பில் ஆராயப்பட்டுள்ளன. முற்காலத் தமிழ் இதழ்களைப் பற்றிய பல்வேறு தகவல்களை உள்ளடக்கியதாக இந்நூல் அமைந்துள்ளது.

இதழின் தலையாய உறுப்பாகிய தலையங்கம் பற்றி - ஓர் இதழாசிரியரின் தலையங் கங்கள் பற்றித் தனியே ஒரு நூலைப் படைத்துள்ளார் பேராசிரியர் மா.ரா. இளங்கோவன். 'சிலம்புச் செல்வரின் தலையங்க இலக்கியங்கள்' (1980) என்னும் இந்நூல்

* தமிழ் ஆராய்ச்சி வரலாறு (முதல் தொகுதி), 1998, பக். 327 - 331

தலையங்கம் பற்றிய தனித்த வகையில் தமிழ் இதழியல் ஆராய்ச்சி வரலாற்றில் முதல் நூலாகும்.

1936 முதல் 1955 வரையில் கிராமணி குலம், தமிழ் முரசு, தமிழன் குரல் ஆகிய இதழ்களில் ம. பொ. சி. எழுதிய தலையங்கங்களில் குறிப்பிட்ட சிலவற்றைத் தெரிந் தெடுத்து ஆய்வு செய்துள்ளார். ஆறு இயல்களாக அமைத்துக்கொண்டு (கிராமணி குலம், தமிழ் முரசு - மாதம் ஒரு புத்தகம், தமிழ் முரசு - மாதம் இருமுறை இதழ், தமிழ் முரசு - வார இதழ், தமிழ் முரசு - மாத இதழ், தமிழன் குரல்). ஒவ்வொரு இயலையும் 'கண்ணோட்டம்', 'தலையங்கம்' என்று பகுத்துக்கொண்டு விரிவான ஆராய்ச்சியை மேற்கொண்டுள்ளார்.

'கண்ணோட்டம்' என்ற தலைப்பில் இதழின் வரலாறு தரப்பட்டுள்ளது. இப்பகுதியில் இதழின் தோற்றம், நோக்கம், வளர்ச்சி பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதழில் வெளிவந்துள்ள கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள், கடிதங்கள், செய்திகள், மதிப்புரைகள், திரைப்படத் திறனாய்வுகள் பற்றிய விவரங்கள் உள்ளன. அவற்றைப் படைத்தவர்களின் பெயர்களும் தரப்பட்டுள்ளன. ம. பொ. சி. எழுதிய கட்டுரைகள் பட்டியலிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

'தலையங்கங்கள்' என்னும் பகுதியில் ஒவ்வோர் இதழிலும் வெளிவந்துள்ள தலையங்கங்களின் தலைப்புகள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. 1936ஆம் ஆண்டு முதல் 1955ஆம் ஆண்டு வரையில் அவர் எழுதிய தலையங்கங்களில் இருபத்து நான்கும் துணைத் தலையங்கங்கள் மூன்றும் இந்நூலில் தரப்பட்டுள்ளன. தலையங்கப் பட்டியல், அவை பற்றிய குறிப்பு என்னும் இவ்விரண்டுக்கும் பிறகு தலையங்கங்கள் தொடருகின்றன.

இதழாசிரியர் ஒருவர் எழுதிய தலையங்கங்களை மட்டும் எடுத்துக்கொண்டு, அவற்றின் பின்னணியில் இதழையும் இதழாசிரியரையும் அறிந்துகொள்ளும் வகையில் நூல் உருவாக்கப்பட்டுள்ளமை சிறப்பாகக் குறிக்கத்தக்கதாகும்.

மா.ரா. இளங்கோவனின் 'இந்திய இதழ்கள்' (1981) அடுத்துக் குறிப்பிடவேண்டிய நூலாகும். தமிழ் இதழியல் ஆராய்ச்சி வரலாற்றில், இந்திய இதழ்களைப் பற்றிய விரிவான முதல் நூல் என்னும் பெருமை இதற்கு உண்டு. இந்நூல் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சிக் காலத்தில் வெளிவந்த இதழ்கள் பற்றிக் கூறுவதாகும்.

'செய்திகளின் செய்திகள்', 'கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சிக் காலத்தில் வெளிவந்த இதழ்கள்', 'இந்தியாவின் முதல் இதழ்', 'ஹிக்கி - கிழக்கிந்தியக் கம்பெனியின் அச்சாளர்', 'இந்திய இதழ்கள் - 1 (1780 - 1799)', 'இருபதாண்டுகளில் இதழ்கள் - பருந்துப் பார்வை', 'இந்திய இதழ்கள் - 2 (1800 - 1858)', 'இந்திய மொழி இதழ்கள்' என்னும் எட்டு இயல்களில் மிகப் பல வரலாற்றுக் குறிப்புகளையும் இந்திய இதழ்கள் பற்றிய அரிய தகவல்களையும் கொண்டு விரிவாகவும் செறிவாகவும் அமைந்துள்ள இந்நூல் தமிழ் இதழியல் ஆராய்ச்சியில் ஒரு மைல் கல்லாகும்.

நீண்ட காலமாக எழுதப்படாமலிருந்த 'திராவிடன்', 'தேசபக்தன்' ஆகிய நாளிதழ்களின் வரலாற்றை ஆய்வு நோக்கில் முதன்முதலாக எழுதித் தமிழ் இதழியல் வரலாற்றில் ஒரு புதிய தொடக்கத்திற்குக் காரணமாக அமைந்தவர் மா.ரா. இளங்கோவன். இவருடைய, 'முதல் நாளிதழ்கள் மூன்று' (1982) என்னும் நூலே திராவிடன், தேசபக்தன் ஆகியன பற்றிப் பலரும் விரிவாக அறிதற்குக் காரணமாக அமைந்தது.

சுதேசமித்திரன் பலராலும் அறியப்பட்ட இதழ் என்பதால் இந்நூலில் உள்ள அவ்விதழ் பற்றிய செய்திகள் தவிர்க்கப்படுகின்றன. திராவிடன் ஜூன் 1917இல் தொடங்கப்பட்ட இதழ். என்றாலும், நூலாசிரியர் தம் பார்வைக்குக் கிடைத்த 1923, 1927,

1928, 1929 ஆகிய ஆண்டுகளின் இதழ்களைக் கொண்டே இந்நூலில் இடம்பெற்றுள்ள கட்டுரையை அமைத்துள்ளார். அதனால், இதழ் தொடங்கிய ஆண்டை இவரால் முறையாகக் கணிக்க இயலாமல் போனது; 1916 என்று குறித்துள்ளார். பிந்திய ஆண்டுகளில் திராவிடனின் ஆசிரியராக விளங்கிய சனக சங்கர கண்ணப்பரையே முதலாசிரியராகக் கருதியுள்ளார். திராவிடனின் முதல் ஆசிரியர் T. பக்தவத்சலம் என்பவராவார்.

> திராவிடன் பற்றிய குறிப்பு, இந்திய அரசாங்க வெளியீடான 'இந்திய இதழியலின் வரலாறு' (History of Indian Journalism) என்னும் நூலிலும் திரு.எஸ்பி.தியாகராசன் எழுதியுள்ள 'இந்திய இதழியலின் வரலாறு' (History of Indian Journalism) என்ற நூலிலும் புனாவில் உள்ள தேசியச் செய்தி நிறுவனத்தாரின் வெளியீடான 'Guide to Indian periodical' என்னும் நூலிலும், திரு. ஏ.என். சிவராமன் எழுதிய 'The Vernacular Language News papers' என்னும் கட்டுரையிலும் தமிழ்க் கலைக்களஞ்சியத்தின் இதழ்கள் பற்றிய விளக்கப் பகுதியிலும் இல்லாதது வியப்பாக உள்ளது.

என்று மா.ரா. இளங்கோவன் குறித்துள்ளது (ப. 31) கவனிக்கத்தக்கது. தொடக்க கால இதழ்கள் பார்வைக்குக் கிடைக்காமையாலும் இதழியல் பற்றிய அந்நாளைய ஆய்வுகளில் திராவிடன் பற்றிய செய்திகள் இன்மையாலும் திரு.வி.க. தம்முடைய வாழ்க்கைக் குறிப்புகளில் தந்துள்ள தகவல்களையே முதன்மையாகக்கொண்டு திராவிடன் இதழ்களைத் தேடமுயன்று, அம்முயற்சியில் தமக்குக் கிடைத்த இதழ்த் தொகுதிகளைக் கொண்டே வரலாற்றைத் தொகுக்கவேண்டிய சூழல் நூலாசிரியருக்கு அமைந்தது. அச்சூழலே திராவிடன் தொடங்கப்பட்ட ஆண்டையும் அவ்விதழின் முதல் ஆசிரியர் பெயரையும் இவர் மாற்றிக் கூறியிருப்பதற்கான காரணம் என்பதை அறியமுடிகிறது. ஓர் இதழின் வரலாற்றை ஆராய முற்படும்போது நேரிடும் இன்னல்களையும் இடர்ப் பாடுகளையும் இது உணர்த்துகிறது.

'முதல் நாளிதழ்கள் மூன்று', 'முப்பெரும் நாளிதழ்களின் நோக்கும் போக்கும்', 'இதழுலகில் திரு.வி.க. காலம்' என்னும் மூன்று இயல்களாக நூல் அமைந்துள்ளது. சுதேசமித்திரனின் நோக்கும் போக்கும் இருபத்து இரண்டு பக்கங்களிலும் திராவிடன் பற்றிய செய்திகள் ஐம்பது பக்கங்களிலும் தேசபக்தன் பற்றிய செய்திகள் எழுபது பக்கங்களிலும் இடம் பெற்றுள்ளன.

மா.ரா. இளங்கோவன் திரு.வி.க. விடம் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். திரு.வி.க. பற்றி விரிவான ஆய்வு செய்ய விரும்பியவர். இதழியல் நோக்கில் திரு.வி. க. பற்றியும் அவருடைய தேசபக்தன், நவசக்தி பற்றியும் மிகுதியான செய்திகளை உழைத்துச் சேர்த்தவர். 'இதழாளர் திரு.வி. க.' என்ற தலைப்பில் ஆய்வு நூலை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த அவருக்கு அதை முடித்திடும் வாய்ப்பைக் காலம் தரவில்லை.

திரு.வி.க.வின் தேசபக்தன் இதழ்களை மிகுந்த அளவில் படித்தவர், பயன் படுத்தியவர் என்ற வகையில் இளங்கோவன் முதன்மையானவர். திரு.வி. க. வின் தேசபக்தனில் தோய்ந்தவரான இவர் இயன்ற வழிகளில் எல்லாம் தேசபக்தன் பற்றிய தம்முடைய ஆய்வுச் சிந்தனைகளைப் பதிவு செய்துள்ளார். முதல் நாளிதழ்கள் மூன்று என்னும் நூலில் எழுபது பக்கங்களில் தேசபக்தனை ஆராய்ந்தவர், 'திரு.வி. க.வின் நயத்தகு நடை' என்ற தலைப்பில் விரிவான கட்டுரை ஒன்றையும் எழுதியுள்ளார். அது, இவருடைய மறைவிற்குப்பின் 1985இல் நூலாக வெளிவந்தது. இவர் மறைவிற்குப்பின் வெளிவந்த இன்னொரு நூலான, 'இதழியல் நோக்கு' (1981) என்னும் கட்டுரைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள 'தேசபக்தன் உருவ அமைப்பு' (பக். 81 - 86) என்னும் தலைப்பிலான கட்டுரையும் குறிக்கத்தக்கது.

'இதுதான் இதழியல் மரபு' என்று வரையறுத்துக் கூறும் இலக்கணம் இல்லாத காலத்திலேயே, தமக்கு முன்பும் தம் காலத்திலும் விளங்கிய இதழ்களின் அமைப்பு முறைகளை உள்ளத்தில் கொண்டு புதுமை முறையைத் தமக்குரியதாக்கிக் கொண்டு பின்னாளில் தோன்றிய இதழியல் மரபுக்கு முன்னோடியாக விளங்கிய பெருமைக்குரியவர் (முதல் நாளிதழ்கள் மூன்று, பக். 21-22)

என்று திரு.வி.க. என்னும் இதழாளரை மதிப்பீடு செய்கிறார் மா.ரா. இளங்கோவன். இவருடைய கணிப்பு சரியானதே என்பதை, இவரே எடுத்துக்காட்டியுள்ள தந்தை பெரியாரின் கூற்று உறுதிப்படுத்துகிறது.

திரு.வி.க. அவர்களின் தேசபக்தன் பத்திரிகைக்குப் பிறகே தமிழ், அரசியல் மேடைகளைக் கைப்பற்றிற்று என்று சொல்லுவேன். அரசியல் தலைவர்களையும் தமிழ் அடிமை கொண்டதற்குக் காரணம் திரு.வி.க. அவர்களது பத்திரிகைகளேயாகும். அப்பத்திரிகைகள் என்னைவிட மோசமானவர்களையும் தமிழ்மொழியை உணரவும் தமிழில் பேசவும் செய்துவிட்டதால், 'தமிழ்மொழியைக் காதால் கேட்டால் தோஷம்' என்று கருதும் சாதியாரும் தமிழை ஒப்புக்காவது மதிக்கச் செய்துவிட்டது (முதல் நாளிதழ்கள் மூன்று, பக். 176 - 177).

தமிழ் இதழியல் ஆராய்ச்சியில் பல ஆண்டுகளைச்செலவிட்டவர் பேராசிரியர் மா. ரா. இளங்கோவன். தமிழ் இதழியல் ஆராய்ச்சி வரலாற்றில் இவருடைய பணிகளுக்குத் தனித்த இடம் உண்டு.

❖ ❖ ❖

செய்திகளின் செய்திகள்*

மா.ரா. இளங்கோவன்

மனிதன் தகவல் தொடர்புச் சாதனங்களைப் பற்றி அறியாத காலமொன்று இருந்தது. காலச் சூழல், தன்னைத் தவிரப் பிறர் பற்றியும் அறியும் ஆர்வத்தை அவனுள் வளர்த்தது. இவ்வாறு தோன்றிய தனிமனித விருப்பமும், சமுதாயத் தேவைகளும்தான் இதழ்களின் பிறப்புகளுக்குக் காரணமாயமைந்தன.

செய்தி எழுத்தாளர்

தொடக்கத்தில் வாய்மொழிகளால் செய்திகளைப் பரப்பிக் கொண்டிருந்த மனிதன், பின்னர் அறிக்கைகள் வழியாகச் செய்திகளைத் தெரிவிக்கலானான். அந்த அறிக்கைகள் பொதுவிடங்களில் ஒட்டப்பட்டன.

ரோமானியர்கள் காலத்தில், ரோமாபுரியின் பொதுவிடங்களில் Acta Diruna எனப்பட்ட செய்தி அறிக்கைகள் ஒட்டப்பட்டன. இந்த அறிக்கைகளை எழுதுவோர் 'செய்தி எழுத்தாளர்' (News Writers) எனப்பட்டனர்.

இந்தச் செய்தி எழுத்தாளர்கள் எலிசபெத் பேரரசியின் ஆட்சிக் காலத்தில் *(1558 - 1603)* பெருஞ்சிறப்புப் பெற்றிருந்தனர். சமுதாயத்தில் செல்வாக்குள்ளவர்கள் இவர்களைப் பயன்படுத்திச் செய்திகளை அறிந்தனர். இவர்கள் முறையாக இத்துறையில் பயின்றவர்களில்லையென்றாலும் அனுபவ அறிவு இவர்களுக்குத் துணை நின்றது.

மூவகைப் பிரிவினர்

செய்தி அறியும் ஆர்வம் யாருக்குத்தான் இல்லை? மொகலாய மன்னர்களும் இந்தத் துறையில் பேரார்வம் கொண்டிருந்தனர். அவர்கள் காலத்தில் செய்திகளைச் சேகரிக்கும் செய்தியாளர்கள் "வாக்யா நாவிஸ்" (wakiah navis) எனப்பட்டனர். இவர்கள் அவ்வப் பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் பற்றிச் செய்திகளைச் சேகரித்து எழுதி அனுப்புவர். இவர்கள் அனுப்பும் செய்திகளை ஒட்டி, அரசு தேவையான முடிவுகளை எடுக்கும்.

அரசு முடிவுகளை மக்களுக்குத் தெரிவிக்கும் செய்தியாளர் "சவானிக் நாவிஸ்" (Savanik navis) எனப்பட்டனர். அரசின் ரகசிய செய்தி எழுத்தாளர் "கோஃபியா நாவிஸ்" (Cofia navis) என்று அழைக்கப்பட்டார்.

செய்திகளின் தரம்

இச்செய்தியாளர் அனுப்பும் செய்திகள் எல்லாமே நடந்தவை அல்லது உண்மையானவை என்று கூறுவதற்கில்லை. அரசரின்மீது கொண்ட கோபத்தால் சில வேளைகளில் இவர்கள் தவறான செய்திகளையும் அனுப்பினர். அதனால் இழப்புகள் அரசருக்கு நேர்ந்ததும் உண்டு. இத்தகைய செய்தியாளர்கள் பற்றிச் சிலர் எழுதியுள்ள செய்திகளை அறிவோம்.

---

* *இந்திய இதழ்கள், 1981 (முதற் பதிப்பு), பக். 19 - 32*

ஃப்ராங்கோஸ் பெர்னியர்

பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த டாக்டர் ஃப்ராங்கோஸ் பெர்னியர் (Francois Bernier) என்பவர் 1656 - 1668 வரை ஷாஜகான், அவுரங்கசீப் ஆகியோரின் அரண்மனை மருத்துவராகப் பணியாற்றியவர். இவர் இந்தச் செய்தியாளர் பற்றிக் கூறுவதைக் காண்போம்:

> மொகலாயப் பேரரசர் தமது ஆளுகைக்குட்பட்ட பகுதிகளுக்கு 'வாக்யா நாவிஸ்'களை அனுப்பிவைப்பார். அவர்கள் அப்பகுதிகளில் நடைபெறும் நிகழ்ச்சிகளை அவருக்கு எழுதி அனுப்ப வேண்டும் என்பது விதி. அவ்வப் பகுதிகளைப் பேரரசரின் சார்பாளராக ஆண்டு கொண்டிருப்பவர்களின் கொடுமை தாளாமல் மக்கள் மனம் குமுறிக் கொண்டிருப்பர். அதுபற்றி ஆளுவோர் கவலைப்படுவதில்லை. மக்களின் மனக் குமுறல் பேரரசர்க்கு எட்ட வாய்ப்பில்லை என்பதை அறிந்தவர்கள் அவர்கள். அவர்களுக்கு அஞ்சி, அதுபோன்ற நிகழ்ச்சிகளைத் தங்கள் குறிப்புகளில் 'வாக்யா நாவிஸ்'கள் சேர்ப்பதில்லை![1]

ஜான் ஃப்ரையர்

இந்தியாவில் அவுரங்கசீப் ஆட்சிக் காலத்தில் 1672ஆம் ஆண்டு முதல் 1681ஆம் ஆண்டு வரை டாக்டராகப் பணியாற்றிய ஜான் ஃப்ரையர் (John Fryer) என்பவர், தக்காணப் படையெடுப்பில் அவுரங்கசீப்பின் தோல்விக்குக் காரணம், செய்திக் கடிதம் எழுதியவர்கள் தந்த தவறான தகவல்களேயாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.[2]

சர் வில்லியம் ஸ்லீமன்

நூற்றைம்பது ஆண்டுகட்குப் பின்னர் இவர்கள் பற்றிய குறிப்பொன்றினை நாம் காண முடிகிறது. இதனை எழுதியவர் மேஜர் ஜெனரல் சர். வில்லியம் ஸ்லீமன் (Sir William Sleeman) என்பவர். இவர் அயோத்தி அரசு பற்றியும் குலாம் உசேன் என்பவன் பற்றியும் எழுதியுள்ளார்.

> குலாம் உசேன், தன்னைப் பிறர் தடிகொண்டு தாக்கியது குறித்துப் பெரிதும் அவமானமுற்றிருந்தான்; தன்னைப் பற்றிய இந்தச் செய்தி அரசருக்கு எட்டுதல் கூடாது என்று அவன் எண்ணினான். அதனால் அவன் செய்தி எழுத்தாளர்களை அணுகினான். இருபது கல் தொலைவு வரை பணியாற்றிய செய்தியாளர்களை அழைத்து, அவர்களுக்குக் கையூட்டளித்து, தன்னைப் பற்றிய செய்தியினை அரசவை அறியாதவாறு செய்யுமாறு வேண்டினான். அவர்களும் அதுபற்றி எவரிடமும் பேசவில்லை[3]

இக்குறிப்பால், செய்தி சேகரிப்பவர்கள் கையூட்டினைப் பெற்றுக்கொண்டு, தங்கள் கடமையிலிருந்து வழுவி உள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

வில்லியம் ஸ்லீமன், தம்முடைய மற்றொரு நூலில் இவர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது நிருபர்களாகவே இவர்களைக் குறிப்பிடுகின்றார். இவர்களைக் குறிப்பிடப் பயன்பட்டு வந்த சொற்களை ஸ்லீமன் பயன்படுத்தவில்லை. அயோத்தி மன்னர் 660 செய்தி எழுத்தாளர்களை அமர்த்தியிருந்ததாகவும், அவர்களுக்குத் திங்களொன்றுக்கு நான்கு அல்லது ஐந்து ரூபாய் ஊதியமாகத் தரப்பட்டது என்றும் அவர் குறித்துள்ளார். நாள்தோறும் அவர்கள் செய்ய வேண்டும் பணி பற்றிய விளக்கங்கள் அரசராலும் அமைச்சர்களாலும் தரப்பட்டன என்றும் அவர் கூறுகின்றார்.[4]

நிக்கோலா மெனுசி

வெனிஸ் நாட்டுப் பயணியரான நிக்கோலா மெனுசி (Nicola Manucci) என்பவர், அவுரங்கசீப்பின் அரண்மனையில் சிறிது காலம் தங்கியிருந்தவர். இவர், இந்த இதழாளர்களின் செய்திக் கடிதங்கள் பற்றிக் கூறுவதாவது:

> அரசைச் சேர்ந்த 'வாக்யா நாவிஸ்', 'கோஃபியா நாவிஸ்' ஆகியோர் வாரத்திற்கு ஒருமுறை நாட்டில் நடைபெறும் நிகழ்ச்சிகளைப் பற்றிய குறிப்புகளைத் தெரிவித்தாக வேண்டும் என்பது நிலையான விதியாக மொகலாயர் ஆட்சிக் காலத்தில் இருந்தது. இது முக்கியமான நிகழ்ச்சிகளைப் பதிவு செய்யும் 'கெசட்' போன்ற முறையை ஒட்டியதாகும்.
> இந்தச் செய்திக் கடிதங்கள் அரண்மனையில் அரசன் முன்னிலையில், அரண்மனையைச் சேர்ந்த பெண்களால் படிக்கப்படும். இரவு ஒன்பது மணியளவில்தான் இப்படிப் படிப்பது தொடங்கும்.
> இவை தவிர ஒற்றர்கள் அனுப்பும் செய்திகளும் படிக்கப்படும். அரசன் நள்ளிரவு வரையிலும் அமர்ந்து செய்திகளைக் கேட்பான்.
> இதனால் தன் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் நடைபெறும் செய்திகளை மன்னன் அறிந்துகொள்ள முடிந்தது.[5]

செய்திக் கடிதங்கள் பற்றி

இத்தகைய செய்திக் கடிதங்களைத் தொகுத்து கர்னல் ஜேம்ஸ் டாட் என்பவர் லண்டனில் உள்ள ராயல் ஏஷியாட்டிக் சொசைட்டிக்கு 1828ஆம் ஆண்டில் அனுப்பி வைத்தார். அவை பற்றி "ஜர்னல் ஆஃப் தி ராயல் ஏஷியாட்டிக் சொசைட்டி" என்னும் இதழில் எச். பீவரிட்ஜ் எழுதியுள்ள குறிப்பின் துணை கொண்டு, இச்செய்திக் கடிதங்கள் எட்டு அங்குல நீளமும் நாலரை அங்குல அகலமும் கொண்டவை என்று அறியமுடிகிறது.

இவை பலரால் எழுதப்பட்டவை ஆதலால் எழுத்தில் வேறுபாடு உள்ளது. இக்கடிதங்கள் பெர்ஷியன் அல்லது உருது மொழியில் எழுதப்பட்டுள்ளன.

இவற்றுள் பதவி உயர்வு பற்றிய செய்திகள், அரசர் சென்று கண்ட மசூதிகள், அவர் கலந்து கொண்ட நிகழ்ச்சிகள், அவருடைய வேட்டை அனுபவங்கள், அவர் பரிசளித்துப் போற்றிய நிகழ்ச்சிகள் பற்றிய குறிப்புகள் பல காணப்படுகின்றன என்பன போன்ற செய்திகளும் பீவரிட்ஜ் கட்டுரையால் அறியமுடிகிறது.[6]

வக்கீல் ராமச்சந்திரா

கிழக்கிந்தியக் கம்பெனியார், மொகலாய மன்னர்கள் கையாண்ட இம்முறையைப் பெரிதும் விரும்பினர். அவர்களும் இத்தகைய 'செய்தியாளர்'களை அமர்த்திக் கொண்டனர்.

1704ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 27ஆம் நாளன்று அவர்கள், ராமச்சந்திரா என்பவரை ஹூக்ளிக்கு அனுப்பினர். "நாங்கள் அவரை ஹூக்ளியில் ஆங்கிலேயர் தொடர்பான வக்கீலாகப் (Vacqueel) பணியாற்ற நியமித்துள்ளோம்" என்னும் குறிப்புடன் அவர் அனுப்பி வைக்கப்பட்டார். அங்கு வாழும் ஆங்கில மக்கள் தொடர்பான செய்திகளை அவ்வப்போது தெரிவிக்க வேண்டுவதுதான் அவர் பணி. செய்திகளை அவர் தமது தாய்மொழியிலேயே எழுதலாம் என்றும் அவருக்குத் தெரிவிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியால் செய்திக் கடிதங்களில் கிழக்கிந்தியக் கம்பெனியாருக்கிருந்த ஆர்வம் புலப்படுகின்றது. கம்பெனியின் பிரதிநிதிகளைப் பற்றிய குறிப்புகளையும்

அக்கடிதங்கள் கொண்டிருக்கும். அதனால் உடனுக்குடன் நடவடிக்கைகள் எடுத்துக் குறைகள் நீக்க முடிந்தது.

விடுபட்ட குறை

மொகலாய மன்னர்கள் தகவலறிந்து செயல்பட்டதைக் கண்டு, செய்திகளின் வலிமையை உணர்ந்து செய்தியாளர்களை அமர்த்திக் கொண்ட ஆங்கில ஆட்சியினர், மொகலாய அரசவைகளில் சில வேளைகளில் அக்கடிதங்கள் பற்றிய விவாதங்கள் நடந்ததைப் பின்பற்றத் தவறிவிட்டனர். அவ்வாறு நடைபெற்ற விவாதங்களால் கருத்துத் தெளிவு ஏற்பட வாய்ப்பிருந்தது. ஆனால், ஏனோ அவர்களை அடுத்து ஆட்சிக்கு வந்த ஆங்கிலேயர்கள் அம்முறையைத் தொடரவில்லை என்கிறார் மர்காரிதா பர்ன்ஸ்.

கருத்து - செய்தி

மக்கள் எண்ணங்களே செய்திகளாக உருவாகின்றன. சங்கப் புலவர்கள் மன்னர்களுக்கு வழங்கிய அறிவுரைகளின் பின்னணியாக மக்களின் எண்ணங்கள் இருப்பதை அறியலாம். தனிப்பட்ட ஒருவராலோ அல்லது பலராலோ மன்னனைக் கண்டு கூறமுடியாத செய்திகளை அவனோடு பழகும் வாய்ப்பும் உரிமையும் கொண்ட புலவர்களால் கூறமுடிந்தது. மக்கள் கருத்தை மன்னன் அறிய அவர்கள் துணையாயினர்.

இந்நிலையில் சங்கப் புலவர்களைச் செய்தியாளர்கள் என்றும் கொள்ளலாம். நாடெங்கும் நடைபெறும் நிகழ்ச்சிகளை அறிந்து உரியவர்களுக்குத் தக்க வகையில் எடுத்துக் கூறும் ஆற்றல் கொண்ட அவர்களை 'நிருபர்கள்' என்றும் கூறலாம். சங்க இலக்கியங்களில் காணப்படும் முரசு, ஓலை, தூதுவர் உரை, வம்பளப்பு (அலர்) முதலியவற்றைச் செய்திச் சாதனங்களாகக் கொள்ளலாம். எனவே, இதழியலின் கரு ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னரே உருவாகிவிட்டது என்னலாம்.

செய்திக்கு அடிப்படையாக உள்ள மக்கள் கருத்தினை Public opinion என்று கூறும் வழக்கம் பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில்தான் ஏற்பட்டது. ஆயினும் இக்காலத்திற்கும் முன்னரே இதற்குச் சமமான சொற்கள் இதனை விளக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

கிரேக்க மொழியில், கிரேக்கர்கள் 'Ossa, Pheme or nomos' என்னும் சொற்களையும் ரோமானியர்கள் 'fama. fama popularis, rumore, Vox populi', என்னும் சொற்களையும் பொதுமக்கள் கருத்தைக் குறிக்கப் பயன்படுத்தினர்.

பதினேழாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் நடைபெற்ற உள்நாட்டுப் போராட்டம்தான் இன்று நாம் வழங்கும் பொருளில், மக்கள் கருத்து அல்லது Public opinion என்பதைப் பயன்படுத்தக் காரணமாயிற்று. இந்தப் பழக்கம் பிரெஞ்சுப் புரட்சியின்போது, பிரான்சில் 'Opinion Publique' என்னும் சொல்லை உருவாக்கித் தந்தது. நாளடைவில் இச்சொல் உலகெங்கும் பரவலாயிற்று என்கிறார் எட்வின் R.A. செலிக்மான் என்பவர்.[7]

'நாலுபேர்' கருத்து

செய்தி அல்லது பொதுமக்கள் கருத்து என்பது எப்படி உருவாகின்றது என்பதைக் காண்போம்.

தனி ஒரு மனிதருக்கு அவர் விரும்பாத ஒன்று அல்லது அவர் எதிர்பாராத ஒன்று அவர்மீது சுமத்தப்படும்போது அவர் சினந்தெழுவது இயல்பாகும். தமது குறையினைப் போக்கிக்கொள்ள அவர் உரியவர்களை நாடுவார். அப்போதும் அவர்க்கு அவர் எண்ணியது போன்று நிறைவு தோன்றவில்லையென்றால், அவர் எண்ணியது

பொருந்தாததாக இருந்தாலும் கூட, முன்கொண்ட சின நிலையிலிருந்து சற்றும் விடுபடாமல், தனக்கு அநீதி இழைக்கப்பட்டு விட்டதாகத் தம் மனைவியிடமும், உறவினர்களிடமும் புலம்பித் தீர்ப்பது மனச்சுமையின் குறைவைக் காண வடிகால் போக்காகும். இந்த உரத்தப் பேச்சு அடுத்த பகுதிகளில் வாழ்பவரின் கருத்தை ஈர்க்கும்.

பிறரைப் பற்றிய செய்திகள் என்றாலே பெருஞ் சுவை உணர்வு தோன்றுவது வியப்புக்குரிய, கேவல இயல்பாக அல்லவா பெரும்பாலோரிடையே வளர்ந்துள்ளது. இந்த இயல்பின் அழுத்தத்தால் அவர்கள், தாங்கள் கேட்டதைப் பரிவு உணர்வோடு அல்லது 'அந்த மனிதனுக்கு வேண்டும் தான் இது' என்ற மகிழ்வு உணர்வோடு, கருத்தாக மற்றவர்க்குத் தவறாமல் சொல்லுவர்.

தனி ஒருவருடைய மனக்குறை, இப்போது அடுத்தவர்க்குரிய அவலாகி மற்றொருவர்க்கும் பரவியதைக் கண்டோம். இந்தச் செய்திப் பரப்பில் உரியவர் மறைந்துவிட, சொன்னவரும் கேட்டவரும் கூடிப் பேசுகிறார்கள். பலவகையான கருத்துகள் பரிமாற்றம் பெறுகின்றன. முதலாமவரின் குறை, இந்த வேண்டாத பேச்சில் கலந்துகொண்ட யாருக்கேனும் இருக்குமானால், அவர் மட்டும் முதலாமவருக்காகப் பரிந்துகொண்டு, தொடர்புடையவர்களைப் பழிக்கின்றார். இப்போது நிலைமையில் ஒரு புது வழி பிறந்துவிடுகின்றது. அதில் சிலர் சொல்நடை இடுகின்றனர். தங்களுக்கும் இதுபோன்ற நிலை இன்றில்லாவிட்டாலும் நாளை வந்து சேருமோ என்று நினைக்கும் 'தீர்க்கதரிசிகள்' சிலர், புது வழி கண்டவர்களொடு சேர்ந்து கொள்கின்றனர்.

இந்நிலையில், இந்தப் பேச்சுக்கே காரணமானவர் முற்றுமாக மறைந்துவிடுகிறார். பிரச்சினை மட்டும் உயிர் பெற்றுவிடுகிறது. எப்படியும் இந்த அநீதியை அம்பலமாக்க வேண்டும் என்ற உணர்வு அந்தக் கூட்டத்தில் - அம்பலத்தில் பிறக்கிறது. அவர்கள், பலர்க்கு அநீதி விவரத்தைச் சொல்கிறார்கள். இப்படி ஒருவரிடம் தொடங்கி, இன்னொருவரிடம் சேர்ந்து, பின்னர் பலரால் பேசப்பட்டு, தொடர்ந்து பலரிடம் கூறப்படும்போது, ஆரம்பச் செய்தி புதிய வடிவமே பெற்றுவிடுகிறது. இப்போது முதலாமவரின் பிரச்சினை பொதுப் பிரச்சினையாகிவிடுகிறது. கருத்து, ஒரு குரல் வடிவெடுக்கிறது. அது பெருத்த முயற்சியின் பின், தக்கார் வாயிலாக வெளிப்படுத்தப் படுகிறது. இந்த வெளிப்பாட்டு நிலையின்போதுதான் அது 'நாலு பேர் கருத்தாக', 'மக்கள் கருத்தாக'ப் பெயர்கொண்டு செல்வாக்குடையதாகிவிடுகிறது. இப்படித்தான் 'பொது மக்கள் கருத்து' அல்லது 'பப்ளிக் ஒப்பினியன்' உருவாகிறது.

சங்கிலி முறை

தனி ஒருவருடைய கருத்து எவ்வளவுதான் சிறந்ததாக இருந்தாலும் பலருடைய ஆதரவுக் குரலால்தான் அதற்கு வலிமை சேர்கிறது - பயன் உண்டாகின்றது.

பொதுமக்கள் கருத்து உருவாகும் முறை பற்றிய தமது கட்டுரையில், பிலிப்ஸ் டேவிஸன் என்பவர் கூறுவதைக் காண்போம்.

> ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு ஒரு கருத்து சொல்லப்படும் போதுதான் அது வலிமை பெறுகிறது - பிரச்சினை ஆகிறது. அந்த இன்னொருவர் அதைப் பலர்க்கும் பொதுவாக்குகிறார். அப்போது அவருடைய கூற்றில் அவருடைய சொந்தக் கருத்துகளும் கலந்து விடுகின்றன. சில வேளைகளில் முக்கியமான பல பிரச்சினைகள் ஒருவரிடமே உருவாகி வெளிப்பாடு பெறாமையால், நல்வடிவு கொள்ளாமல் மறைந்து விடுவதுமுண்டு. ஏதேனும் ஒருவகையில் தாம் எண்ணியது செயல்படும்போது, 'நான் அப்போதே நினைத்தேன்' என்று சொல்லி நிறைவு பெறுவதோடு அந்த ஒருவர்

அமைதியடைந்து விடுகிறார். ஆனால், பலருடைய பேச்சுத்தொடர் என்னும் சங்கிலி முறையால், பல சிறு புள்ளிகள் பெரு வடிவெடுத்துச் சாதனைகளை உருவாக்கி விடுவதையும் காணமுடிகிறது. இந்தச் சாதனைகள் 'பொது மக்கள் கருத்து' என்னும் வலுவான அரணுள் இடம் பெற்றதன் விளைவுகளே.[8]

எத்தனை எத்தனை வழிகள்!

'பொது மக்கள் கருத்து' வெளிப்படும் வாயில்கள் பலவாகும். அவற்றை ஒழுங்கமைதி உடையவை (Organized), ஒழுங்கமைதி அற்றவை (Un Organized) என்னும் இரு பிரிவுகளில் வகைப்படுத்தலாம்.

ஒழுங்கமைதியுடையவற்றை வெளிப்படுத்தும் வாயில்களை, 'ஆக்க அமைவு சார்ந்தவை' (Constitutional), 'ஆக்க அமைவு சாராதவை' (Unconstitutional) என்று இருவகைப்படுத்தாலம்.

ஒழுங்கமைதியுடைய வெளிப்பாட்டு வாயில், சட்ட திட்டங்களுக்கு உட்பட்ட முறைகளுக்குரியதாகும்.

ஆனால் 'பொது மக்கள் கருத்து' பெரும்பாலும் இந்த ஒழுங்குமுறைக்குட்பட்டு வெளிப்படுவதில்லை. பல வேளைகளில் எண்ணங்கள் பரவலாக அலசப்படும்போது, எந்த வரம்பு முறைகளையும் பற்றி எண்ணாமல், சூழ்நிலையையும் எண்ணங்களின் வேகத்தையும் பொறுத்து உடனடியாகக் கருத்து வெளிப்பாடு நேர்வதுமுண்டு. அது ஆக்க அமைவு சாராததாக இருந்தாலும் அதனைப் புறக்கணிப்பதில்லை.

இவை பொதுமக்கள் கருத்து வெளிப்பாடு பற்றிய விதிமுறைகள் தாமே தவிர, நடைமுறையில் இவற்றைப் பின்பற்றுவது கடினம்தான்.

தனிப்பட்ட ஒருவர் அதிகாரிகளைக் கண்டு குறைகளை வெளிப்படுத்துதல், பொதுக்கூட்டங்கள், சங்கங்கள், ஊர்வலங்கள், இதழ்கள், நூல்கள், அறிக்கைகள், விண்ணப்பங்கள், சட்டமன்றங்கள், பஞ்சாயத்து அமைப்புகள், தொழிற் சங்கங்கள் ஆகிய இவை யாவும் பொதுமக்கள் கருத்தை வெளிப்படுத்துதற்குரிய 'ஆக்க அமைவு சார்ந்த' வாயில்களாகும். அரசியல் காரணமாகச் செய்யப்படும் கொலைகள், ரகசியச் செய்திகளை அனுப்புதல், வதந்திகளைப் பரப்புதல், அவதூறு செய்திகளை வெளியிடுதல், உண்ணா விரதம் என்பன பொதுமக்கள் கருத்தை வெளிப்படுத்தப் பயன்படுத்தப்படும் 'ஆக்க அமைவு சாராத' வாயில்களாகும். இவற்றால் பொதுமக்களிடையே வன்முறைச் செயல்கள் தோன்றவும் வாய்ப்புண்டு.

பொதுக்கூட்டங்கள்

பொதுக்கூட்டங்கள், சங்கங்கள் போன்று வலுவான அல்லது உறுதியான நன்மையை விளைவிப்பவை என்று சொல்வதற்கில்லை. திரண்டிருக்கும் மக்கள் மனநிலைக்குச் சற்றும் மதிப்பளிக்காமல் தங்கள் பெருமைகளையே பட்டியலிட்டுக் காட்டிவிடும் சிலரும், தாமதமாக வந்து சுருக்கமாகப் பேசி விடைபெறும் சிலரும், நீண்ட விரிவுரையை முன்னுரையாக்கிவிட்டு, தேவையானதைப் பேச நேரமில்லாமல் எஞ்சியதைப் பிறர் சொல்வார் என்று சொல்லுவோரும், சுவரொட்டி விளம்பரம் போதும் என்ற நிறைவோடு கூட்டத்திற்கு வராமலேயே இருக்கும் பலரும் மக்கள் கருத்தை வெளிப்படுத்தியவர்களாகிவிட முடியுமா? வேண்டுமானால் சில தீர்மானங்களின் மூலம் மக்கள் கருத்தை வெளிப்படுத்திவிடலாம்.

ஊர்வலங்கள்

ஊர்வலங்கள் ஆர்ப்பாட்டப் போக்குக்குச் சரியானவையாகுமே தவிர, 'பலம்' காட்ட உதவுமே தவிர, பெரும்பயன் தந்துவிட முடியும் என்று கூறுவதற்கில்லை. சில பிரிவினரின் தலைவர்கள் தங்களுக்கு விளம்பரம் வேண்டும் என்று எண்ணும்போது, நடத்தப்படும் ஊர்வலங்களில் அவர் நினைப்பது நடக்குமேயொழிய, மக்கள் கருத்துக்கு அதனால் போதிய ஆக்கம் கிடைத்துவிட முடியும் என்று கூறுவதற்கில்லை.

இதழ்கள்

இதழ்களின் நிலை இவற்றினின்றும் வேறுபட்டதாகின்றது. எந்தப் பிரிவினரைச் சார்ந்த இதழானாலும், அந்தப் பிரிவினர்க்காக உழைக்க வேண்டுவது அதன் அவசியமாகின்றது. அந்தப் பிரிவினரின் சார்பாக வாதாட வேண்டுவது அதன் கடமையாகிவிடுகின்றது. குறிப்பிட்ட அவர்கள் மட்டுமல்லாமல் பலரும் படிப்பது என்பதால், குறிப்பிட்ட இதழின் கருத்து பலராலும் உணர முடிகின்றது. எனவே ஒரு சாராரின் குறைகள், தேவைகள் எல்லோர்க்கும் தெரிகின்றது. நியாயங்கள் பற்றிய பேச்சு இதழ் தோன்றுகின்றன. தேவையேற்பட்டால் பிற இதழ்களும் துணை சேர்கின்றன.

பொதுமக்கள் கருத்தினை வெளிப்படுத்துவதில் இதழ்கள் ஆற்றல் மிக்க வாயில்கள் என்பதால், அதிகாரிகளும் ஆளுவோரும் அதுபற்றி எண்ணுவர். அப்போது நன்மைகள் விளையக் காணமுடிகிறது.

பொதுமக்கள் கருத்துக்கு மாறாக நடைபோடும் இதழ்கள் சுருங்கிய கால அளவே வாழ முடியும் என்ற உண்மையைக் காலம் நமக்கு உணர்த்துகின்றது. உரிமைப் போராட்டத்தின்போது, சுய ஆட்சி உணர்வைப் பரப்பி, நாட்டு மக்களைக் கவர்ந்த இதழ் 'நியூ இந்தியா' (1914) என்பது. வசந்த அம்மையார் என்று திரு. வி. கலியாணசுந்தரனாரால் போற்றப்பட்ட டாக்டர் அன்னிபெசண்ட் அவ்விதழின் ஆசிரியர். மக்களின் பேராதரவைப் பெற்ற இதழாக 'நியூ இந்தியா' விளங்கியது. ஆனால் மக்கள் உள்ளங்களைப் பெருமளவில் கவர்ந்திருந்த காங்கிரஸ் பேரியக்கத்தின் கொள்கைகளை 'நியூ இந்தியா' சாடிய போது - அவற்றுக்கு முரண்பட்ட கருத்துகளைத் தெரிவித்த போது, படிப்படியான வீழ்ச்சியை அவ்விதழ் பெற்று அழிந்தது.

எனவே, பொதுமக்கள் கருத்தை வெளிப்படுத்தும் வாயில்கள் பலவற்றுள் ஒன்று ஆனதும், சிறந்தது ஆனதுமான இதழியல், இந்தியாவில் கிழக்கிந்தியக் கம்பெனியார் ஆட்சிக் காலத்தில் (1757 - 1858) தோன்றி வளர்ந்த வரலாற்றை இனி அறிவோம்.

குறிப்புகள்

1. Constable and Smith (Ed.) Travels in the Mogul Empire, p. 231.
2. Margarita Barns, The Indian Press, p. 4.
3. Sir William Sleeman, Rambles and Recollections, p. 249.
4. Sir William Sleeman, Journey through the Kingdom of Oude, Vol I. pp. 67 - 69.
5. Margarita Barns, The Indian Press, p. 4.
6. October issue, 1908.
7. Dr. D. Sadasivam, The Growth of Public opinion in the Madras Presidency, p.4.
8. W. Philips Davison, The American Review, January 1961, p.7.

❖ ❖ ❖

பாராட்டுரை

ம.பொ. சிவஞானம்

தமிழ்ப்பேராசிரியர் மா.ரா. இளங்கோவன் அவர்கள் என்பால் தமக்குள்ள அன்பின் காரணமாகவும், தமிழ்ப் பற்றின் காரணமாகவும், யான் நடத்தி வந்துள்ள பத்திரிகைகளில் என்னால் எழுதப்பட்டுள்ள தலையங்கங்களையெல்லாம் இலக்கியங்களாகக் காண்கிறார். அவ்வகையில் அவற்றில் தாம் கண்ட சிறப்புக்களை யெல்லாம் தொகுத்து நூல் வடிவில் வெளிக்கொணர முயற்சி எடுத்துள்ளார். அதன் விளைவே 'சிலம்புச் செல்வரின் தலையங்க இலக்கியம்' என்னும் இந்நூல்.

நான் நடத்திய 'தமிழ்முரசு' மாதமிருமுறை இதழ்களோடு என்னை வந்து கண்டு இந்நூல் பற்றிய தம் விருப்பத்தைத் தெரிவித்த திரு. இளங்கோவன், நான் நடத்திய பிற இதழ்களையும் பார்வையிட வேண்டுமென்றார். என்னிடமிருந்த இதழ்களையெல்லாம் கொடுத்தேன். அவற்றைப் பார்வையிட்ட பின்பு தேவையான தகவல்களை அறிந்து கொள்ள என்னை நாடிப் பல விவரங்களைப் பெற்றார்.

என்னால் நடத்தப்பட்ட 'தமிழ்முரசு', 'தமிழன் குரல்', 'செங்கோல்' ஆகிய பத்திரிகைகளெல்லாம் தமிழரசு இயக்கத்தின் 'கெஜட்'களாகவே வெளியிடப்பட்டன. ஆகையால், சந்தையில் விலைபோவதற்குத் தேவைப்படும் கவர்ச்சிகளை அவற்றில் காண முடியாது. ஆயினும், இன்று நாம் காணும் புதிய தமிழகத்தினைப் படைப்பதற்கு அந்த ஏடுகள் பெரிதும் பயன்பட்டன. இந்த உண்மையை நண்பர் இளங்கோவன் அவர்கள் மக்களுக்கு உணர்த்த தமது நூலின் மூலம் முயன்றிருக்கிறார்; அதற்காகப் பெரிதும் உழைத்திருக்கிறார். அவருக்கு எனது பாராட்டு!

திரு. வெள்ளையாம்பட்டு சுந்தரம் அவர்களின் 'சேகர் பதிப்பகம்' இந்நூலைச் சிறந்த முறையில் வெளியிட்டிருக்கிறது. பதிப்பக உரிமையாளர் நீண்ட நெடுங்காலமாக என்பால் அன்பு செலுத்தி வருபவர்; ஆம், என்னை அணுகாமலேயே! இந்த நூலுக் காகத்தான் அவர் என்னைக் காணுகிறார்.

இந்நூல் பதிப்புத் துறையிலே ஒரு புதிய முயற்சி என்றே எண்ணுகிறேன். இன்னும் பல எழுத்தாளர்களையும் தழுவி இது விரிவடைய வேண்டும். சேகர் பதிப்பகத்தின் உரிமையாளர் திரு. வெள்ளையாம்பட்டு சுந்தரம் அவர்களுக்கு எனது பாராட்டு.

இந்நூலில் எடுத்துக் காட்டப்பட்டுள்ள என்னுடைய தலையங்கங்களில் மறைந்து விட்ட அரசியல் தலைவர்களைப் பற்றியோ, இன்று நம்மோடு வாழ்கின்ற அரசியல் பிரமுகர்களைப் பற்றியோ யான் கடுமையாக விமர்சித்திருக்கலாம். அது அன்றைய சூழ்நிலையின் விளைவு. ஆராய்ச்சி ரீதியில்தான் அவை இந்நூலில் எடுத்துக் காட்டப் பட்டுள்ளன; பிரசார வகையிலல்ல.

சிலம்புச்செல்வரின் தலையங்க இலக்கியம், 1980 (முதற்பதிப்பு) பக். 11 - 12

நூலின் சிறப்புப் பற்றி எவ்வளவோ சொல்ல வேண்டும். ஆயினும் என்னைப் பற்றிய நூலாக இருப்பதால் நாணம் தடை செய்கிறது. பத்திரிகை நடத்துவதிலே யான் அடைந்த தொல்லைகள் சொல்லுந்தரமன்று! அதற்கெல்லாம் பரிகாரம் தருவதாக இந்நூல் அமைந்திருக்கிறது.

இந்நூலாசிரியரின் - பதிப்பாசிரியரின் இந்த முதல் முயற்சிக்குத் தமிழ் மக்கள் ஆதரவு தந்து, இன்னும் இதுபோன்ற நூல்கள் பல வெளிவருவதற்கு அவர்களுக்கு உற்சாகமூட்ட வேண்டுகிறேன்.

❖ ❖ ❖

முன்னுரை

மா. ரா. இளங்கோவன்

பச்சையப்பன் கல்லூரி மாணவனாயிருந்தபோதே நான் எழுதிய சிறுகதைகளையும் கட்டுரைகளையும் வெளியிட்டு, எழுதத் தூண்டியவர் திருமிகு நாரண துரைக்கண்ணன் அவர்கள். சிலம்புச் செல்வர் அவர்களின் செங்கோல் இதழில் 'சிலம்பும் கனவும்' என்னும் தலைப்பில் நான்கு வாரங்கள் தொடர்ந்து எழுதும் வாய்ப்பு 1954இல் கிடைத்தது.

1955ஆம் ஆண்டில் மதுரை தமிழ்நாடு நாளிதழில் பணியாற்றியபோது இதழியல் துறையில் எனக்குப் பேரார்வத்தை உண்டாக்கி, மதிப்புரை எழுதும் கலையைக் கற்பித்து, ஆற்றலை வளர்த்து உதவினார் அப்போது தமிழ்நாடு நாளிதழின் ஆசிரியராக இருந்த ராவ்சாஹேப் டி. ஏ. வி. நாதன் பி. ஏ., பி.எல்., அவர்கள். பல அரசியல் அறிஞர்களுக்கு இதழியல் துறையில் வழிகாட்டியாக விளங்கிய அப்பெருமகனாரிடம் பயிற்சி பெறும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததைப் பற்றிப் பெருமை கொள்கிறேன்.

1960 முதல் 1968 வரை சுதேசமித்திரன் வாரப் பதிப்பில் துணையாசிரியனாகப் பணியாற்றிய போது 1900 ஆண்டுகளில் வெளிவந்த நாளிதழ்களைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. அவற்றிலிருந்து சிறு சிறு பகுதிகளைத் தேர்ந்தெடுத்து வாரப் பதிப்பின் சில பக்கங்களிலும், ஞாயிறு மலரின் சில பக்கங்களிலும் வெளியிடுவது ஒரு முறையாகக் கொள்ளப்பட்டிருந்தது. அந்தக் காலத்தில்தான் உலகம் சுற்றிய தமிழரும், குமரிமலர் என்னும் திங்களிதழின் ஆசிரியருமான திரு. ஏ. கே. செட்டியார் அவர்கள் சுதேச மித்திரனின் பழைய, நாளிதழ்களில் வெளிவந்த தலையங்கம், நிருபர் கடிதம், செய்திகள் பற்றிய ஆய்வு செய்து கொண்டிருந்தார். பின்னர், அவற்றைத் தொகுத்துப் "புண்ணியவான் காந்தி" என்னும் பெயரில் நூலாக்கிச் சுதேசமித்திரன் வாயிலாகவே வெளியிட்டார். அப்போதிலிருந்தே இதழியல் துறையில் ஆய்வு செய்யவேண்டும் என்னும் ஆர்வம் எழுந்தது.

சென்ற ஆண்டு 'முற்காலத் தமிழ் இதழ்கள்,' 'சிலம்புச் செல்வரின் தலையங்க இலக்கியம்' என்னும் இருநூல்களைச் சேகர் பதிப்பக வாயிலாக வெளியிட்டேன். நண்பர் வெள்ளையாம்பட்டு சுந்தரம் அவர்களின் தூண்டுதலால் கடந்த நான்காண்டுகளாக அவ்வப்போது குறித்து வைத்திருந்த குறிப்புகளின் துணைகொண்டு, 'இந்திய இதழ்கள்' என்னும் இந்நூலினை உருவாக்கினேன்.

இந்திய இதழியலின் இருநூறாவதாண்டு நிறைவைப் போற்றும் வகையில் வெளிவரும் இந்திய இதழ்கள் என்னும் பெயர்கொண்ட இந்நூல், கிழக்கிந்தியக் கம்பெனியாரின் ஆட்சிக் காலத்தில் வெளிவந்த இதழ்கள் பற்றிக் கூறுவதாகும்.

1757ஆம் ஆண்டு முதல் கிழக்கிந்தியக் கம்பெனி நாடாளத் தொடங்கியது. ஆனால் இருபத்து மூன்றாண்டுகளுக்குப் பின்னரே இதழ் வெளி வந்தது. கம்பெனி ஆட்சி 1858இல் முடிவடைந்தது. இந்த எழுபத்தொன்பது ஆண்டுகளில் ஆங்கிலம் (71), வங்காளி (17), பெர்சியன் (19), உருது (13), மராத்தி (15), குஜராத்தி (12), இந்தி (2), தமிழ் (9), தெலுங்கு (3),

* இந்திய இதழ்கள், 1981 (முதற் பதிப்பு), பக். 7 - 12

பஞ்சாபி (1), மலையாளம் (1) ஆகிய மொழிகளில் 205 இதழ்கள் வந்துள்ளன. இன்ன மொழியில் வெளிவந்த இதழ் என்னும் குறிப்பினை அறிய முடியாத நிலையில் பல இதழ்களின் பெயர்கள் மட்டுமே அவை வெளிவந்த காலத்துடன் அறிய முடிந்தது. அவற்றை அப்படியே தந்துள்ளேன்.

'செய்திகளின் செய்திகள்' என்னும் முதல் பிரிவில் Public opinion என்னும் சொல் வளர்ந்த வகையும், செய்தியாளர்களின் தோற்றம் பற்றியும் மொகலாய மன்னர்கள் செய்தியாளர்களைக் கொண்டிருந்தமையும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

'கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சிக் காலத்தில் வெளிவந்த இதழ்கள்' என்னும் இரண்டாவது பிரிவில், 79 ஆண்டுகளில் வெளிவந்த இதழ்கள் பற்றிய பட்டியல் தரப்பட்டுள்ளது. இப்பட்டியலைத் தயாரிக்கும்போது பல வகையான ஐயங்கள் விளைந்தன. இதழாளர்கள், இதழ்கள் தோன்றிய காலம், இடம் ஆகியவற்றில் இருவேறு கருத்துகள் உள்ளன. சில இதழாசிரியர்களின் பெயர்களும் வேறுபடுகின்றன. அத்தகைய நிலையில் அவர்கள் குறிக்கும் பெயர்களையும் சேர்த்துள்ளேன். ஒரு விவரமும் தெரியாத நிலையில் அந்தக் கட்டத்தை நிரப்பாமல் வெற்றிடமாகவே விட்டுள்ளேன்.

இந்தியாவைக் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சியில் நீடிக்கச் செய்யக்கூடாது. பேரரசியின் நேராட்சியில் இருப்பதுதான் பொருத்தம் என்று இந்தியாவில் வாழ்ந்து கம்பெனியாரின் ஆட்சி முறையைக் கண்டவர்கள் பாராளுமன்றத்தில் பலமுறை சொன்னபோதும், காலம் நோக்கியிருந்தனர் செயலாற்ற வேண்டியவர்கள். இந்தியாவில் ஆங்காங்கே அவ்வப்போது ஆட்சியை எதிர்த்துக் கிளர்ச்சிகள் நடந்தவண்ணமிருந்தன. எங்கோ ஓரிடத்தில் கிளர்ச்சி என்பதால் அடக்கிவிடுவது படைபலம் கொண்டவர்க்கு எளிதாயிற்று.

1857ஆம் ஆண்டில் மீரட்டில் நடந்த பெருங்கிளர்ச்சிதான் கம்பெனி ஆட்சிக்கு முடிவைத் தந்தது. காலம் கனிந்த சாட்சியாக அது அமைந்தது. அந்தப் பெருங் கிளர்ச்சியை வரலாற்றாசிரியர்கள் இந்தியாவின் முதல் சுதந்திரப் போர் என்றும், சிப்பாய்க் கலகம் என்றும் கூறுகின்றனர். அது பற்றிய பலருடைய கருத்துகள் 'இந்திய மொழி இதழ்கள்' என்னும் பகுதியில் தரப்பட்டுள்ளன. அந்தப் பொங்கெழுச்சிக்குக் காரணமான பல நிகழ்ச்சிகளைக் கால வரிசைப்படுத்தித் தந்துள்ளேன்.

'இந்தியாவின் முதல் இதழ்' என்னும் மூன்றாவது பகுதியில் கிழக்கிந்தியக் கம்பெனியின் வரலாறு, இதழியல் பிறந்த வரலாறு, இந்த உணர்வுக்கு வித்திட்ட வில்லியம் போல்ட்ஸ் பற்றிய விவரங்கள், இந்தியாவின் முதல் இதழை வெளியிட்ட ஜேம்ஸ் ஹிக்கி பற்றிய செய்திகள், அவரைப் பற்றிய பிறருடைய கருத்துகள், அவர் நடத்திய பெங்கால் கெசட் அல்லது கல்கத்தா அட்வர்டைசர் என்னும் இதழ் பற்றிய செய்திகள், இதழாசிரியர் என்னும் நிலையில் அவர் அடைந்த துன்பங்கள் மிகத் தெளிவாகத் தரப்பட்டுள்ளன.

'ஹிக்கி - கிழக்கிந்தியக் கம்பெனியின் அச்சாளர்' என்னும் நான்காவது பிரிவு, ஹிக்கியின் வாழ்க்கை வரலாற்றைக் கூறுவதாகும். மக்களால் விரும்பப்பட்ட இதழாசிரியர், ஆட்சியாளரால் எத்தகைய கொடுமைகளுக்கெல்லாம் ஆளானார் என்பது முழுமையாகத் தரப்பட்டுள்ளது.

'இந்திய இதழ்கள் I (1780 - 1799)' என்னும் ஐந்தாவது பகுதியில், 1780 முதல் இருப தாண்டுகளில் வெளிவந்த இதழ்கள் பற்றிய விவரங்கள் உள்ளன. அப்பகுதி கல்கத்தா, சென்னை, பம்பாய் ஆகிய பகுதிகளில் வெளிவந்த இதழ்கள் பற்றி விளக்கும் வகையில் மூன்று சிறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

'இருபதாண்டுகளில் இதழ்கள் - பருந்துப் பார்வை' என்னும் ஆறாவது பகுதியில், அதுகாறும் அறிந்த இதழ்களின் பொதுநோக்கு ஆராயப்பட்டுள்ளது. அதுமட்டு

மல்லாமல் நாடுகடத்துதல் போன்ற கடுமையான தண்டனைகளுக்குள்ளான இதழாசிரியர்கள், இதழாசிரியர்களுக்குத் தோன்றிய பலவகையான தடைகள், அவர்களுக்காக இரங்காத மனம் கொண்ட ஆட்சியாளர்கள் கல்மனம் பற்றியெல்லாம் சொல்லப்படுகின்றன.

'இந்திய இதழ்கள் II *(1800 - 1858)*' என்னும் ஏழாவது பகுதியில் கல்கத்தா, பம்பாய், சென்னைப் பகுதிகளிலிருந்து வெளியான ஆங்கில இதழ்களைப் பற்றிய செய்திகளே உள்ளன. மிகச் சிறந்த இதழாசிரியரான ஜேம்ஸ் சில்க் பக்கிங்ஹாமின் வரலாறு கற்பார்க்குப் பயன்தருவதாகும்.

'இந்திய மொழி இதழ்கள்' என்னும் இறுதிப்பகுதி, இந்திய மொழிகளில் வெளிவந்த இதழ்களைப் பற்றியதாகும். இந்த மொழிகளில் இதழ்கள் தொடங்க வேண்டிய நிலை ஏற்பட்டது என்பன போன்ற செய்திகள் நன்றாக வெளிப்படுத்தப் பட்டுள்ளன.

பழைமை இதழ்கள் சிலவற்றின் குறிப்புகளும் தரப்பட்டுள்ளன. வங்காள மொழியிலும், பெர்சியன் மொழியிலும்தான் இதழ்கள் ஆங்கிலத்துக்கு அடுத்தபடியாக மிகுதியாக வெளிவந்துள்ளன.

இதழியல், வளர்ந்து வரும் துறை. தமிழில் போதிய அளவுக்கு நூல்கள் இல்லாத குறை. முதுகலைப் பாடத்திட்டத்தில் இதழியலையும் ஒரு பகுதியாக்கி, கல்வி உலகில் பாடத்திட்டத்தில் 'தேய்ந்த பாட்டை' முறையை மாற்றியுள்ள போக்கினை இன்று காண முடிகிறது. இதழியல் கற்க வேண்டும் என்ற ஆர்வத்தினை இளைஞர் உலகில் காண முடிகிறது.

அவர்களுக்குத் துணையாகும் வகையில் மூல நூல்களை அவர்கள் காணவேண்டும் என்னும் ஆர்வத்தால் எனக்குக் கிடைத்த குறிப்புகளில் தரப்பட்டிருந்த அடிக்குறிப்பு களையே நான் ஓரளவுக்குப் பயன்படுத்தியுள்ளேன். பொது நூலகங்களில் அப் பழைமைப் பதிப்புகள் இருக்குமாதலால், பறவை நோக்கில் சொல்லிச் செல்லும் பகுதிகளை முழுமையாகக் கற்பது பயன்தரும் என்னும் நோக்கமே அதற்குக் காரணமாகும்.

இதழின் ஒவ்வொரு பகுதியும் ஆய்விற்குரியதுதான்.

> "அமெரிக்காவில் நியூஜெர்சியில் உள்ள சார்லஸ் ஹுயூஸ் என்பவர், டாக்டர் பட்டத்திற்காக ஒரு ஆராய்ச்சியை மேற்கொண்டுள்ளார்.
> பொருள் : 'பத்திரிகை ஆசிரியருக்கு எழுதப்படும் கடிதங்கள்'
>
> சிகாகோவைச் சேர்ந்த ஒரு வாசகரின் 1800 கடிதங்கள் 'ஆசிரியர்க்குக் கடிதம்' பகுதியில் பல்வேறு வார, மாத இதழ்களில் பிரசுரம் ஆகியிருந்ததை இவர் கண்டு, கணக்கெடுத்து, தன் ஆராய்ச்சிக்குப் பயன்படுத்திக் கொண்டுள்ளார்."

இச்செய்தி பி. நாராயணன் என்பவரால் எழுதப்பட்டுள்ளது. 'குங்குமம்' வார இதழில் *(4 - 1 -81)* வெளிவந்துள்ளது.

*1818*இல் வெளிவந்த 'கல்கத்தா ஜர்னல்' என்னும் வாரம் இருமுறை இதழின் ஆசிரியர் ஜேம்ஸ் சில்க் பக்கிங்ஹாம், தமது இதழில் 'ஆசிரியருக்குக் கடிதம்' என்னும் தனிப்பகுதியை ஒதுக்கியிருந்தார் என்பதை அறியும்போது, குங்குமத்தில் வந்துள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ள 'ஆசிரியர்க்குக் கடிதம்' என்னும் பகுதியின் வளர்ச்சி நிலையை ஒப்பிட்டுக் காண ஆய்வாளர்க்குத் தூண்டுதலாகுமல்லவா?

இதழியல் துறைக்கு என்னுடைய இம்மூன்றாம் படைப்பை உரிமையாக்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

❖ ❖ ❖

மா. ரா. இளங்கோவன் நூல்கள்

காலவரிசை

1	கலையும் வாழ்வும்	1957
2	பேரறிஞர் ரூசோ	1958
3	தமிழகத்தின் தலைநகரங்கள்	1958
4	தமிழகத்தின் துறைமுகங்கள்	1960
5	வைரமாலை	1961
6	தமிழ்ப் புலவர்	1965
7	தவச்செல்வி	1965
8	இலக்கிய விருந்து	1966
9	செந்தமிழ்ச் சிந்தாமணி	1966
10	ஐம்பெருங் காப்பியக் கதைகள்	1966
11	பாவைப் பரிசு	1966
12	இலக்கியச் செல்வம் I	1967
13	இலக்கியச் செல்வம் II	1967
14	முற்காலத் தமிழ் இதழ்கள் - அறிமுகம்	1979
15	சிலம்புச் செல்வரின் தலையங்க இலக்கியம்	1980
16	சிலம்புச் செல்வரின் வைகுந்தம் திறந்தது (தொகுப்பு)	1980
17	இந்திய இதழ்கள் (கிழக்கிந்தியக் கம்பெனி காலம்)	1981
18	அறிவுலகின் குருதேவர் (தொகுப்பு)	1981
19	கல்விமொழி தமிழா, ஆங்கிலமா (தொகுப்பு)	1981
20	இதழியல் நோக்கு	1981
21	முதல் நாளிதழ்கள் மூன்று	1982
22	திரு. வி.க.வின் நயத்தகு நடை	1985

பதிப்பு ஆண்டு அறியப்படாத நூல்கள்

23 பொற்காலப் பேரூர்கள்

24 குறிஞ்சிப்பாவை

25 பேரறிஞர் டாக்டர் ராதாகிருஷ்ணன்

26 பேரறிஞர் எமர்சன்

27 பிரிவுக்கோடு

28 காலம் போற்றும் காரிகையர்

❖ ❖ ❖



ஆய்வு மலர்கள்

வரலாற்று நூல்களையும் செய்திகளையும் பயன்படுத்திக்கொள்வதில் இராசமாணிக்கனார் தனித்தன்மையைக் காட்டியுள்ளார். அறிஞர்கள் மாறுபட்ட கருத்துகளைக் கொண்டிருக்கும் வரலாற்று நிகழ்ச்சிகள் தொடர்பாக, யார் சொல்வதையும் அப்படியே ஏற்றுக்கொள்ளாமல் புதிதாக ஆராய்ந்து நுணுக்கமாகச் சீர்தூக்கிப் பார்த்து, தம்முடைய சொந்த முடிவுக்கு வருவது இராசமாணிக்கனாரின் இயல்பு.

வரலாற்று ஆராய்ச்சியில் இராசமாணிக்கனாருடைய சாதனை மிகவும் போற்றத்தக்கதாகும். சேக்கிழாரைப் பற்றிய அவரது வரலாற்றுச் சித்திரம், அவரது புலமைக்கும் ஆராய்ச்சித்திறனுக்கும் தென்னிந்திய வரலாற்றிலும் கல்வெட்டுத்துறையிலும் அவருக்கு இருந்த விரிந்த அறிவுக்கும் சிறந்த சான்றாக விளங்குகின்றது.

தமிழில் ஆழ்ந்த புலமையும் தென்னிந்திய வரலாற்றில் அகன்ற அறிவும் ஆராய்ச்சித் திறனும் கொண்ட அறிஞர்கள் ஒரு சிலரே. அவர்களுள் திரு. இராசமாணிக்கம் ஒருவர் என்பது என் கருத்து.

பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை
டாக்டர் மா. இராசமாணிக்கனாருக்கு
வழங்கிய பாராட்டுக் கடிதத்தின் ஒரு பகுதி
1947

காலவெளியில் ஒரு ஞானநடை

இரா. கலைக்கோவன்

மா. இராசமாணிக்கனாரின் நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களுள் என்னை வியக்க வைத்தவை ஆறு. மொஹெஞ்சொ - தரோ அல்லது சிந்துவெளி நாகரிகம், பல்லவர் வரலாறு, சோழர் வரலாறு, பெரியபுராண ஆராய்ச்சி, சைவ சமய வளர்ச்சி, பத்துப்பாட்டு ஆராய்ச்சி இவை அனைத்துமே ஒரு நடுநிலைப் பள்ளித் தமிழாசிரியர் வரலாற்றறிஞராக உயர்ந்த பாங்கு காட்டுபவை. இந்தப் படிநிலைகளை உணரவும் தெளியவும் இந்த நூல்களுக்குள்ளும் இவற்றின் பின்னமைந்த இராசமாணிக்கனாரின் உழைப்பிற்குள்ளும் ஒரு குறும் பயணம் இன்றியமையாதது.

நடுநிலையில்
நெடுநாள் ஆய்ந்து
சான்றோர் நூல்கள்
கல்வெட்டுகள்
செப்பேடுகள்
அனைத்தும் துருவி,
தற்கால
ஆராய்ச்சியாளர்
கருத்துகளை அலசி
நேர்மை வழுவாத
நன்முடிவுகளை
வெளியிட்டுள்ள
தங்கள்
சோழர் வரலாறு
சிறப்பிடம்
பெறுவதில்
ஐயமில்லை

சோமசுந்தர
பாரதியார்

1927இல் பள்ளியிறுதித் தேர்வில் வெற்றி. 1928இல் சென்னை வண்ணையம்பதியில் இருந்த தியாகராயர் நடுநிலைப்பள்ளியில் ஆசிரியராக அமர்வு. 1935இல் வித்துவான் பட்டம். 1936வரை தியாகராயரில் பணியாற்றியவர், அதே ஆண்டு ஜூலையில் சென்னை முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியரானார். 1947வரை அங்கிருந்து பணியாற்றிய காலத்தில்தான் அவருடைய மூன்று ஆய்வு நூல்கள் ஒன்றன் பின் ஒன்றாக வெளியாயின. 1941இல் மொஹெஞ்சொ - தரோ அல்லது சிந்துவெளி நாகரிகம் வெளியிடப்பட்டது.

இந்த நூல் வெளிவருதற்கு முன் இராசமாணிக்கனார் 12 சிறு நூல்களை எழுதி வெளியிட்டிருந்தார். அவற்றுள் பதினொரு நூல்கள் வரலாறும் இலக்கியமும் ஒன்றையொன்று தழுவி நின்ற அமைப்பின. 'தமிழர் திருமண நூல்' மட்டுமே ஆய்வுக் கண்ணோட்டத்தில் அமைந்த முதல் நூல். இதில், தமிழர் திருமண முறை பற்றிய காலநிரலான ஆய்வைக் காணமுடிகிறது. இராசமாணிக்கனாரிடமிருந்த ஆய்வுத்திறனின் முதல் துளியாக வெளியிடப்பட்ட இந்த நூலைத் தொடர்ந்து வெளியானதே, 'மொஹெஞ்சொ - தரோ' எனும் 291 பக்க ஆய்வு நூல்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தால் வெளியிடப்பட்ட இந்நூல் இதுவரை ஏழு பதிப்புகளைக் கண்டுள்ளது. பதினேழு தலைப்புகளில் இந்நூலை அமைக்க, நூலாசிரியர் பயின்ற நூல்களின் எண்ணிக்கை 64. இவை அனைத்துமே ஆங்கில நூல்கள். ஜான் மார்ஷல், மக்கே, வாட், தீக்ஷித், ஹன்டர், மஜும்தார், ஹீராஸ் இவர்தம் களஆய்வு, வரலாற்றாய்வு நூல்களை ஆழக் கற்றபிறகே, மொஹெஞ்சொ - தரோ எழுதப்பட்டுள்ளது என்பதை இந்நூலைப்

படிப்பவர் அறிவர். இந்நூலிற்காக அவர் மேற்கொண்ட உழைப்பையும் அறிவியல் அடிப்படையில் அமைந்த அவரது வரலாற்று வரைவியல் போக்கையும் நூலின் ஒவ்வோர் இயலிலும் கண்டு மகிழ முடிகிறது.

வரலாற்றாய்விற்கான அணுகுமுறைகளைப் பேசும் ஒரு நூல், 'The authorities are there; they must be there, for without them there can be no History; but there must also be the Historian with a trained historical mind at work on them, or there is no History' என்று சான்றுகளையும் அவற்றை ஆராயும் வரலாற்றாய்வாளனையும் வரலாற்றோடு பொருத்திப் பார்ப்பதை இங்கு நினைவுகூராமல் இருக்கமுடியவில்லை. 'மொஹஞ்சொ - தரோ' வெளியானபோது இராசமாணிக்கனார் பன்னிரண்டாண்டுப் பள்ளி அனுபவம் மட்டுமே பெற்ற ஒரு தமிழாசிரியர். பயிற்சி பெற்ற வரலாற்று நோக்கோ, அதற்கான வாய்ப்புகளோ அற்றவர். வரலாற்று வரைவியல் நூல்களைப் பற்றிய அறிமுகம்கூடப் பெறாதவர். ஆனால், ஆழ, அகலப் படித்தவர். அந்தப் படிப்பறிவும், அதில் அவர் பெற்ற கருத்துக் குவியலும் அதன் பலனாய் அவரிடம் விளைந்த சிந்தனைப் பெருக்கமும்தான் அவருடைய முதல் நூலையே ஒரு தேர்ந்த வரலாற்றாய்வாளரின் நூல் போல ஒழுங்கு செய்துள்ளன.

ஒரு தேர்ந்த ஆய்வாளரின் முதல் தகுதியே அவரது படிப்பாற்றல்தான். அதனால்தான், 'கற்றனைத்தூறும் அறிவு' என்றார் வள்ளுவர். சிந்துவெளி நாகரிகம் பற்றித் தமிழில் எழுத, சர். ஜான் மார்ஷலின், 'Mohenjo - Daro and the Indus Civilization' என்ற ஆய்வு நூலின் மூன்று தொகுதிகளைப் படித்திருந்தாலே போதுமானது. ஆனால், இராசமாணிக்கனார் சிந்துவெளி பற்றிய அத்தனை வெளியீடுகளையும் படித்துள்ளார். இந்த உண்மையைத் தம்முடைய நூலில் அவர் அள்ளித் தெளித்திருக்கும் இடமறிந்த மேற்கோள்கள் தெள்ளத்தெளிவாக நிறுவுகின்றன.

ஓர் அகழாய்வு பற்றிய நூலைத் தரும்போது, அதைப் படிப்பாருக்கு 'அகழாய்வுச் சிந்தனைகள்' அமைதல் வேண்டும் என்று கருதியவர், இராசமாணிக்கனார். அதனால்தான் தம்முடைய நூலின் முதல் மூன்று இயல்களைப் 'புதைபொருள் ஆராய்ச்சி', 'சிந்துவெளியில் புதையுண்ட நகரங்கள்', 'பிற மண்டிலங்களின் புதை பொருட்கள்' எனும் பொதுத்தலைப்புகளில் அமைத்தார். இம்மூன்று இயல்களை அமைக்க அவர் பயின்ற நூல்களின் எண்ணிக்கை இருபதைத் தாண்டுகிறது. சிந்துவெளி நாகரிகத்தை உலக நாகரிகங்களோடு ஒப்பிட்டுத் தெளிய அவர் பயின்ற நூல்கள் பன்னிரண்டு.

மொஹெஞ்சொ - தரோ இராசமாணிக்கனாரின் மொழிபெயர்ப்பு நூல் அன்று. சிந்துவெளி நாகரிகத்தை வெளிப்படுத்திய தேர்ந்த ஆய்வாளர்களின் கண்டு பிடிப்புகளையும் அவை குறித்த அவர்தம் கருத்துக்களையும் உள்வாங்கி, அவற்றைத் தமிழ் மக்கள் புரிந்துக்கொள்ளுமாறு பல்வேறு தலைப்புகளின் கீழ் எளிமைப்படுத்தி, அதனால் உண்மைத் தன்மைக்கு எவ்வித ஊறும் நேர்ந்துவிடா வண்ணம் ஓர் அரிய படைப்பாகத் தம் நூலை உருவாக்கியிருக்கும் இராசமாணிக்கனாரின் இந்தப் பொறுப்புணர்ச்சிதான், ஓர் ஆய்வாளரின் இன்றியமையாத அடையாளம். இதைத்தான், 'The best Historian is he who holds himself closest to the texts, who interprets them with the utmost justice, who writes and even thinks only is accordance with them' என்று வரலாற்று வரைவியலாளர்கள் போற்றுகின்றனர். இந்த அடையாளம்தான் அவரைப் படிப்படியாக உயர்த்திப் பத்துப்பாட்டு ஆராய்ச்சியில் பேரறிவாளராக மலரவைத்தது.

மொஹெஞ்சொ - தரோ நூலில் இராசமாணிக்கனாரின் எதிர்கால மலர்வை இனங்காட்டும் பல பகுதிகள் இருந்தபோதும், பிராமி எழுத்துக்களின் மொழி பற்றிய அவருடைய கருத்து வெளிப்பாடே அந்நூலின் மகுடம் எனலாம். வரலாற்றாய்

வாளர்களில் இருவகை உண்டு. முதல் வகையினர் ஒரு கருத்தை உருவாக்கிக் கொண்டு சான்றுகளுக்காக ஆராய்பவர்கள். மற்றொரு வகையினர் சான்றுகளை ஆராய்ந்து கருத்துக்களை உருவாக்குபவர்கள். இந்த இரண்டாம் வகை ஆராய்ச்சியாளர்களையே வரலாற்று மீட்பாளர்களாக வரைவியல் நூல்கள் போற்றுகின்றன. 'History consists, like all science, in facing facts, in analysing them, in putting them together and making their connections. It may be, no doubt, that a certain philosophy emerges from this scientific History. But it should emerge naturally, of itself, almost outside the mind of the Historian.'

1941க்கு முற்பட்ட காலம், பிராமி கல்வெட்டுகள் ஒன்றன்பின் ஒன்றாகக் கண்டுபிடிக்கப்பட்டுக் கொண்டிருந்த காலம்! இந்தக் கல்வெட்டுகளைப் படித்து அவற்றின் சரியான மொழிவுகளை அறிவதுகூடப் பெருமுயற்சியாக இருந்த காலம்! பி.என். சுப்பிரமணிய ஐயர், கே.வி. சுப்பிரமணிய ஐயர் இவர்கள் பிராமி எழுத்துக்கள் குறித்துச் சில கருத்துக்களை வெளிப்படுத்தித் தமிழின் தொன்மையை உணர்த்தத் தொடங்கியிருந்த காலம். இந்தக் காலகட்டத்தில், எல்லாமே கருதுகோள்களாக உருவாக்கம் பெற்றுக்கொண்டிருந்த நேரத்தில், இராசமாணிக்கனார் ஒருவரே, 'சிந்துவெளி எழுத்துக்கள்' என்னும் தலைப்பின்கீழ்த் தம் நூலில் சில உறுதியான முடிவுகளை முன்வைக்கிறார். அவற்றுள் குறிப்பிடத்தக்கது, 'பிராமி எழுத்துக்கள் தமிழ் மொழிக்கென்றே அமைக்கப்பட்டுப் பின்னர் வடமொழிக்கும் பயன்படும்படி புதிய குறிகள் உண்டாக்கப்பட்டன' என்னும் கருத்தாகும்.

இம்முடிவு கடந்த அறுபது ஆண்டுகளாகப் பல்வேறு அறிஞர் குழுக்களால், பல்வேறு தளங்களில் விவாதிக்கப்பட்டு, ஆராயப்பட்டு, இன்று முற்றிலும் சரியான முடிவே என்று கொள்ளப்பட்டுள்ளது. இக்கருத்தை உறுதிப்படுத்தும் எழுத்துச் சான்றுகள் கொடுமணல் அகழாய்விலும் புலிமான்கோம்பை அகழாய்விலும் பெறப்பட்டுள்ளன. இராசமாணிக்கனார் இம்முடிவை முன்வைத்தபோது அவர் ஓர் எழுத்தியல் ஆய்வாளர் அல்லர். ஆனால், சிந்தனை வளமும் ஆய்வு உளப்பாங்குமே பல்லோர் மொழிந்த கருத்துக் குவியல்களில் இருந்து அவரை இம்முடிவு முத்தினைத் தேர்ந்துகொள்ள வைத்தன எனலாம்.

'The Historian has to have a mind which is free from preoccupation, which is free from theories and is ready to take in all the bits of evidence and appraise each such bit at its proper worth' என்ற வரைவியல் கோட்பாடு மொஹெஞ்சொ - தரோ எழுதிய காலத்தில் அவருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. என்றாலும், அந்தக் கோட்பாட்டை உள்வாங்கியவராகவே அவர் அந்நூல் முழுவதும் காட்சியளிக்கிறார். சுருக்கமாகச் சொன்னால் மொஹெஞ்சொ - தரோ நூல் பலர் கருதுமாறுபோல வெறும் மொழி பெயர்ப்பு நூல் அன்று. அது சிந்துவெளியில் நிகழ்ந்த அகழாய்வின் வெளிப்பாடுகளை ஒரு வரலாற்றாய்வாளர் தம் பார்வையில் மக்களுக்குத் தந்திருக்கும் வரலாற்று நூல்.

இராசமாணிக்கனாரின் 'பார்வை' தனித்துவமானது. அது அறிவியல் பார்வை. பொதுவாகக் கலைப்பாட ஆசிரியர்களுக்கு இல்லாத இந்தப் பார்வைதான் இராசமாணிக்கனாரைப் பலரிடமிருந்து வேறுபடுத்தியது. இந்தப் பார்வையை அவர் எப்படிப் பெற்றார், எங்கிருந்து, யாரிடமிருந்து பெற்றார், எப்படி வளர்த்துக்கொண்டார் என்பதற்கெல்லாம் அவர் வாழ்க்கை வரலாற்றில் தடயங்கள் கிடைக்காமல் இல்லை. 'இதுதான் அறிவியல் பார்வை' என்று யாரும் எந்தக் காலத்தும் அவருக்குக் கற்றுத் தரவில்லை. ஆனால், இளமையில் அவருக்கு வழிகாட்டியாக இருந்தவர்கள் அவர்களை அறியாமலேயே அந்த இளம் உள்ளத்தில் அறிவியல் பார்வையை விதைத்தார்கள்.

திண்டுக்கல் உடற்பயிற்சி ஆசிரியர், மௌனசாமி மடத்து இளந்துறவி இவர்கள் இருவரும் இராசமாணிக்கனாருக்குள் இயல்பாகவே இருந்த ஆய்வு நோக்கைக்

கூர்மைப்படுத்தினர். எங்குச் சென்றாலும் குறிப்பெடுத்துக் கொள்ளவேண்டும். குறிப்புகளைப் பற்றி விரிவாகச் சிந்தனை செய்யவேண்டும்; ஆராயாமல் எதையும் ஏற்றுக்கொள்ளக்கூடாது என்பனவெல்லாம் அவருக்குள் இளமையில் விழுந்த விதைகள். அந்த விதைகள் அவர் பயின்ற நூல்களாலும் பழகிய சான்றோர்களாலும் உயிர்ப்புடன் வளர்ந்தன. அதன் பலனைத்தான் மொஹெஞ்சொ - தரோ வழித் தமிழ் மக்கள் பெற்று மகிழ்ந்தனர். இன்றளவும் அந்த நூலுக்கு இணையாகவோ அதைவிடச் சிறப்பாகவோ மற்றொரு தமிழ் நூல் சிந்துவெளி நாகரிகம் பற்றிப் பேச வெளிவராமையே இராசமாணிக்கனாரின் உழைப்பிற்கும் பார்வைக்கும் கிடைத்த பாராட்டுப் பரிசெனலாம்.

1944இல் வெளிவந்த பல்லவர் வரலாறு கணக்கற்ற பதிப்புகளைக் கண்ட நூல். இதன் அண்மைப் பதிப்பு 2000இல் வந்துள்ளது. இந்நூல் இராசமாணிக்கனாரின் ஆய்வு வாழ்க்கையில் இரண்டாம் படிக்கல்லாக அமைந்தது. நூல்களை மட்டுமே படித்து, சிந்தனைச் சரங்களைக் கோத்து, தமக்கே உரிய பார்வையில் தரவுகளைத் தந்த சிந்துவெளி இராசமாணிக்கம், முதல்முறையாகக் களஆய்வுகள் மேற்கொண்டு கருத்துக்களை ஆராய்ந்த தகைமையைப் பல்லவர் வரலாறு படம்பிடிக்கிறது. இந்நூலுக்கு அணிந்துரை எழுதியுள்ள கோவை கிழார், 'படிப்பு அறைக்குள் உட்கார்ந்துகொண்டு பல ஏடுகளைப் பிரித்து வைத்துக்கொண்டு ஒரு கட்டுரை நூல் எழுதி வெளியிடுவார் போல் அல்லாது, பல இடங்களுக்கும் நேரிற் சென்று ஆராய்ந்த பொருள்களை விடாது ஒழுங்கு படுத்தியிருப்பதே இந்நூலுக்கு ஓர் அரிய மதிப்பு ஆகும்' என்று குறிப்பிடுவது முற்றிலும் சரியே.

25 இயல்களில் 331 பக்கங்களில் அமைந்துள்ள இந்நூலின் முகவுரையில், 'பல்லவரைப் பற்றிய ஆராய்ச்சி நூல்கள் பலவும் கட்டுரைகள் பலவும் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளன. ஆயின், அவற்றில் காணப்பெறும் செய்திகள் அனைத்தும் நன்கு ஆராய்ந்து தமிழில் இதுகாறும் செம்மையுற எழுதப்படவில்லை' என்று குறிப்பிடும் இராசமாணிக்கனார், இந்த நூலை ஓர் ஆய்வு நூலாகவே திட்டமிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. வித்துவான் தேர்விற்குப் பாடமாக வைக்கப்பட்டிருந்த திரு. பி. டி. சீனிவாச ஐயங்காரின் பல்லவர் வரலாறு நூல் கிடைக்காமல் போனமையால் மாணவர்கள் அனுபவித்த துன்பம் கண்டு வருந்தியும் அம் முந்து நூல் வெளிவந்த காலத்திற்குப்பின் (1924) பல்லவர் வரலாறு குறித்துப் பல புதிய ஆய்வுநூல்களும் கட்டுரைகளும் கல்வெட்டுகளும் வெளிப்போந்த நிலை கண்டு, அவற்றை மாணவர்களுக்கு அளிக்கவேண்டும் என்ற எண்ணத்தால் உந்தப்பட்டுமே தாம் இந்த நூலை செய்ததாக அவர் கூறியுள்ளார்.

வித்துவான் மாணவர்களுக்காக ஒரு பாடநூல் படைத்தால் போதும் என்று மட்டும் அவர் எண்ணியிருப்பாராயின், பத்துப்பாட்டு ஆராய்ச்சியை நாம் பெற்றிருக்க முடியாது. மாணவர்களுக்கு ஒரு நூல் வேண்டும் என்று கருதிய அதே நேரத்தில், முந்து நூல் வெளிவந்து இருபது ஆண்டுகள் முடிந்தமையையும் அந்த இருபதாண்டுக் காலத்தில் ஆராய்ச்சி நூல்கள், சிறந்த கட்டுரைகள், புதிய கல்வெட்டுகள் எனப் பல்லவர் வரலாறு புதிய பரிமாணங்களில் பயணப்படத் தொடங்கியதையும் அவர் உணர்ந்திருந்தார். இப்புதிய வரவுகளின் தரவுகளையும் தாம் எழுதவிருந்த பல்லவர் வரலாறு பெறல் வேண்டும் என்பதே அவர் கருத்தாக இருந்தது.

'அந்த நொடி வரை கிடைத்திருக்கும் அனைத்து உண்மைகளையும் உள்ளடக்கி ஆராய்வதே உண்மையான ஆய்வு' என்று வரலாற்று வரைவியலாளர்கள் அடிக் கோடிடும் அமைப்பிலேயே இராசமாணிக்கனாரின், 'பல்லவர் வரலாறு' உருவாகத் தொடங்கியது. 'பல்லவர் காலத்து இலக்கியங்களும் ஏறத்தாழப் பல்லவர் காலத்தை

நன்முறையில் படம்பிடித்துக் காட்டும் பெரியபுராணமும் தமிழ்க் கருவி நூல்களாகக் கொள்ளப்பெற்றன' என்று பல்லவர் வரலாற்றில், தம் பங்களிப்பை நிறுவும் இராசமாணிக்கனார், 'இந்நூலின்கண் புதிய வரலாற்று முடிவுகள் பல குறிக்கப்பெற்றுள. அவை ஆராய்ச்சியாளர் நடுவுநிலைமை வழாத ஆராய்ச்சிக்கு உரியவாகும். அவற்றுள் இடைக்காலப் பல்லவர் போர்கள், நெடுமாறன் - முதல் விக்கிரமாதித்தன் போர், கந்தசிஷ்யன் மீட்ட கடிகை, இராசசிம்மன் காலத்துப் போர்கள் என்பன குறிக்கத்தக்கன' என்றும் எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஒரு பாடநூலாக அமைதல் வேண்டும் என்ற கருத்துடன் தொடங்கப் பட்டதெனினும், 'பல்லவர் வரலாறு' அந்த எல்லையைத் தாண்டி, ஓர் ஆய்வுநூலாகவே உருவானது. அதனால்தான் கிடைத்த தரவுகளையும் தாம் ஆய்ந்து பெற்ற தரவுகளையும் ஒருங்கிணைத்து உற்று நோக்கிப் புதியன கண்டறிய இராசமாணிக்கனாரால் முடிந்தது. எங்குத் தேடல் தொடங்குகிறதோ அங்குப் பார்வைகள் விரிகின்றன; பயணங்கள் தொடர்கின்றன; பலன்களும் பெருகுகின்றன. 'பல்லவர் வரலாறு' இராச மாணிக்கனாரின் பரந்துபட்ட பார்வைக்கும் விரிந்து விளங்கிய அவரது ஆய்வுப் புலமைக்கும் தக்கதொரு சான்றாக மலர்ந்துள்ளது.

'பல்லவர் வரலாறு' இராசமாணிக்கனாரின் ஆய்வு வாழ்க்கையில் ஒரு மைல் கல். நூல்களும் கட்டுரைகளும் கல்வெட்டுகளும் கலந்தாய்வுகளுமே கருவிகளாகக் கொண்டு தொடங்கிய அவருடைய ஆய்வுப் பாதை,'களஆய்வு' எனும் திருப்புமுனையைக் கண்டது இந்தக் காலத்தில்தான். 'களஆய்வு' எனும் சொல்லாட்சி இன்றைய நிலையில் மிக எளிதாகப் பல ஆய்வாளர்களால் முன்வைக்கப்படும் கருவியாக இருந்தபோதும், பயணவசதிகளும் அறிவியல் முறைகளும் பல்கிப் பெருகியுள்ள இன்றைய நிலையிலும் கூட, அக்கருவியை முழுமையாகவும் நிறைவாகவும் பயன்படுத்திப் பலன் பெற்றுத் தருபவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவானதாகவே இருக்கிறது.

முதன்மைச் சான்றுகளை ஆராயாமல், அவை இருக்குமிடம்கூடத் தெரியாமல், இரண்டாம் நிலைச் சான்றுகளையே விதந்து போற்றி, அவற்றையே முதன்மை நூல்களாகக் கொண்டு வெளியிடப்படும் நூற்றுக்கணக்கான ஆய்வேடுகளும் கட்டுரைகளும் இன்றைய ஆய்வுத்துறைகளையும் கருத்தரங்குகளையும் மயக்கிக் கொண்டிருப்பதை யாரே மறுக்கமுடியும்?

பயண வசதிகள் மிகக் குறைவாகவும் தொலைத் தொடர்புகள் அஞ்சல் வழியில் மட்டுமெனவும் இருந்த ஒரு காலத்தில், பல்லவர் ஆட்சியின் எச்சங்களைத் தேடிச் சென்னையிலிருந்து சிராப்பள்ளிவரை அத்தனை வட தமிழ்நாட்டு மாவட்டங்களிலிருந்த முக்கியமான ஊர்களுக்கும் ஓர் ஆய்வாளர் கருத்துத் திரட்டப் பயணப்பட்டார் என்பு தொன்றே, அந்த ஆய்வாளரின் ஆய்வுநேர்மையையும் 'களஆய்வு' எனும் தத்துவத்தில் அந்த மனிதருக்கிருந்த நம்பிக்கையையும் ஒருசேரப் புலப்படுத்துதல் காண்க.

இந்த ஆய்வுகளின்போது பல்லவர்களால் உருவாக்கப்பட்ட பல கலைக் கோயில்களை அவர் நேரில் கண்டிருக்கிறார். பாகூர், காஞ்சிபுரம், மாமல்லபுரம், வல்லம், மண்டகப்பட்டு, திருச்சிராப்பள்ளி ஆகிய ஊர்களில் அமைந்துள்ள குடைவரைக் கோயில்களையும் ஒற்றைக்கல் தளிகளையும் கற்றளிகளையும் ஆராய்ந்து தகவல் சேகரித்துள்ளார். கோயில்களை நேயத்துடன் நெருங்குவது அவருக்குப் பழக்கமான செயல்தான்.

நன்னிலத்தில் இருந்து பள்ளிப்படிப்புப் படித்த காலத்திலேயே, மாணவ நண்பர்களுடன் நன்னிலத்தைச் சுற்றியிருந்த திருவாஞ்சியம், திருப்புகலூர், திருச்செங் கட்டாங்குடி, திருக்கண்ணபுரம், திருமருகல் முதலிய திருத்தலங்களுக்குச் செல்வதை

வழக்கமாகக் கொண்டிருந்தவர் அவர். தஞ்சாவூரில் இருந்தபோது திருவையாற்றை மையமாகக் கொண்டு ஆண்டுதோறும் நடைபெற்ற ஏழூர் விழாவில் இராசமாணிக்கனார் நண்பர்களுடன் கலந்துகொள்வது இயல்பு. தஞ்சாவூரைச் சேர்ந்த தேவாரக் குழுவி னருடனும் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தாருடனும் சேர்ந்து திருவையாறு, திருச்சோற்றுத் துறை, திருக்கண்டியூர், திருநெய்த்தானம், திருப்பூந்துருத்தி, திருப்பழனம், திருவேதிகுடி எனும் ஏழு ஊர்களுக்கும் தேவாரம் பாடிக்கொண்டு கால்நடையாகச் செல்வதும் வழக்கம்.

இளமைக் காலத்திலேயே கோயில்களுடன் இருந்த இந்த இணக்கமான உறவுதான் ஆய்வுக்காகவும் கோயில்களை நாடவைத்தது. ஒரு கோயில் அது எழுந்த, வளர்ந்த, வாழும் காலத்தின் பண்பாட்டுப் பூச்சுக்களைக் கொண்டிருக்கும் வரலாற்றுக் களமாகும். வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்யக் கருதும் எவருக்கும், 'கோயில்கள்', பிற முதன்மைச் சான்றுகளைப் போலவே உறுதுணையானவை; உற்றுழி உதவுபவை.

தஞ்சாவூர் இராஜராஜீசுவரத்தைப் பார்க்காமல் முதல் இராஜராஜரின் ஆளுமையை, ஆற்றலை, பண்பு நலன்களை, சமயச் சார்பை, வாழ்க்கையை எந்த ஆய்வாளராவது முழுமையுற எழுதிடல் கூடுமா? காஞ்சிபுரத்து இராஜசிம்மேசுவரத்தை ஒதுக்கிவிட்டு இராஜசிம்மரின் புத்தமைப்புக் காணும் பேரவாவை யாரேனும் விளக்கிடக் கூடுமா? ஒவ்வொரு கோயிலும் சமுதாயத்தின் அத்தனை பக்கங்களையும் பிரதிபலித்தவாறுதான் எழுகின்றன; வாழ்கின்றன. தேடுவார் தேடலுக்கேற்ப அவை வழங்கும் தரவுகள்தான் இன்றளவும் வரலாற்றைப் பெருமைப்படுத்துவனவாக விளங்குகின்றன.

இந்த உண்மைகளையெல்லாம் உணர்ந்தவராக இருந்தமையால்தான், பல்லவர் வரலாறு படைத்த காலத்தே, அவர்களால் உருவாக்கப்பட்ட பெரும்பாலான திருக்கோயில்களை இராசமாணிக்கனார் நேரிடையாகச் சென்று ஆராய்ந்தார். அந்த ஆய்வு அவருக்களித்த புதையல்களை நூல் முழுவதும் எடுத்தாண்டிருந்தபோதும், கலைக்கழகங்கள், சமயநிலை, இசையும் நடனமும், ஓவியமும் சிற்பமும், பல்லவர் காலத்துக் கோயில்கள் என ஐந்து தனிப்பெரும் இயல்களை அவை கொண்டே அவர் எழுதியுள்ளமை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

கோயில்களின் மீதிருந்த நம்பிக்கையால் அவற்றை வரலாற்றுக் களங்களாகக் கண்ட இராசமாணிக்கனார், பல்லவர் வரலாற்றின் மீட்டுருவாக்கலில் அவை வழங்கிய கொடையில் உளமிழந்தே, தம்முடைய 'சோழர் வரலாறு' நூலில் 'சோழர் வரலாற்றை உள்ளவாறு உணரப் பேருதவி செய்வன - வரலாற்று மூலமாக அமைந்துள்ள கோயில்களே ஆகும்' என்று கூறிப் போந்தார். நீலகண்ட சாஸ்திரியாரைத் தவிர, இராசமாணிக்கனாருக்கு முற்பட்ட அல்லது சமகாலத்தைச் சேர்ந்த வேறெந்த வரலாற்று அறிஞரும் கோயில்களை இந்தப் பார்வையுடன் அணுகவில்லை என்பது வரலாற்று உண்மையாகும். நீலகண்ட சாஸ்திரியாரும் வரலாற்றை உருவாக்க உதவும் சான்றுகளுள் ஒன்றாகக் கோயில்களைச் சுட்டியுள்ளாரே தவிர, வரலாற்றை உள்ளவாறு உணரப் பேருதவி செய்வனவாக அவற்றைக் கருதவில்லை.

'வரலாற்றை உள்ளவாறு உணர' என்ற இராசமாணிக்கனாரின் தொடர், சிந்தனை வளமும் உண்மைத் தன்மையும் நிரம்பித் தளும்பும் தொடராகும். சமகாலச் சான்றுகளான இலக்கியம், கல்வெட்டு, செப்பேடு இவற்றினும் கோயில்கள் தனிமனித ஆளுமையையும் ஒரு சமுதாயத்தின் பெற்றியையும் நன்கு வெளிப்படுத்துவனவாய் அமைகின்றன. பல்லவர்கள் என்றாலே மாமல்லபுரமும் காஞ்சிபுரமும் சோழர்கள் என்றாலே தஞ்சாவூர் இராஜராஜீசுவரமும் கங்கைகொண்ட சோழபுரத்துச் சோழீச்சுவரமும் கண்முன் பேருருக் கொள்வது எதனால்? அந்தக் கோயில்கள் எந்தச் சமுதாயத்தால் உருவாயினவோ அவர்தம் பண்பாட்டு அடையாளங்களாய், ஆளுமையின்

வெளிப்பாடுகளாய் விளங்குவதால்தானே உலகளாவிய பார்வையைப் பெற்றுத் தமிழர் பெருமையைப் பன்னாட்டளவில் உயர்த்தியுள்ளன.

'வரலாற்றை உள்ளவாறு உணர' என்ற தொடரில் உள்ள ஒவ்வொரு சொல்லுக்கும் ஆழமான பின்புலம் இருக்கிறது. உணர்தல் என்பது அறிதல், தெரிதல், புரிதல், தெளிதல் இவற்றின் முத்தாய்ப்பு. கல்வெட்டு, செப்பேடு, இலக்கியம் முதலான முதன்மைச் சான்றுகள் வரலாற்றை அறிந்துகொள்ளவும் புரிந்துகொள்ளவும் பின் தெளிவடையவும் உதவுகின்றன. இச்சான்றுகளைப் பொருத்தட்டில் உணர்தல் இறுதியான அநுபவம். ஆனால், கோயில்கள் ஓர் ஆய்வாளன் அணுகிய அளவிலேயே அவனுக்கு வரலாற்றை உள்ளவாறு உணர்த்தக் காத்திருக்கின்றன. ஆய்வாளனின் அணுகுமுறைதான் அந்த உணர்தலுக்கு அடித்தளம்.

வரலாற்றுக்கும் கோயில்களுக்கும் இருந்த இந்த நேயமான உறவை அறிந்து கொள்ள இளமைப் பயணங்களைவிட, பல்லவர் வரலாற்றிற்காக இராசமாணிக்கனார் நிகழ்த்திய களப் பயணங்களே பெருமளவில் உதவின. 'The South India Temples must be put at the centre of the studies' என்ற வரலாற்றறிஞர்களின் கூற்றுக்கேற்பவே அவர் கருத்தும் இருந்தமையால், 'பல்லவர் வரலாறு' பயனடைந்தது. 1947இல் அவரால் எழுதி வெளியிடப்பட்ட, 'சோழர் வரலாறு' அதனினும் பெரும் பயனை அடைந்ததுடன், 'சைவ சமய வளர்ச்சி' எனும் ஒப்பற்ற ஆய்வு நூல் தோன்றவும் வழிவகுத்தது.

10. 1. 1943இல் கோயில் கண்காணிப்பாளராக இருந்த திரு. சி. குமரகாளத்தி முதலியாரின் துணையுடன் காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயிலை இராசமாணிக்கனார் விளக்கமாகக் கண்டிருக்கிறார். இதன் விளைவாக ஆறு பக்கங்கள் இக்கோயிலைப் பற்றிய தரவுகளுடன் நூலில் இடம்பெற்றுள்ளன. கோயில் கட்டடக்கலை, சிற்பக்கலை இவற்றில் விரிவான புலமையுடைய தரவுகளாக அவை அமையவில்லையெனினும், ஒரு கோயிலின் வரிவடிவமும் அதன் சிறப்புக்குரிய அமைப்புகளும் அவற்றின்வழிப் பல்லவச் சமுதாயத்தின் பண்பாட்டுப் படப்பிடிப்பும் கிடைப்பதை யாரும் மறுக்கமுடியாது.

பல்லவர் பகுதியில் அவர் நடத்திய களஆய்வுகள்தான் அவருடைய ஆய்வு வாழ்க்கையின் முதற் களஆய்வுகள் என்பதை நினைவுகொண்டால்தான், பல்லவர் கோயில்களைப் பற்றி அவர் தெரிவித்திருக்கும் கருத்துக்களைச் சரியான தளங்களில் மதிப்பீடு செய்யமுடியும். மேலும் அவர் ஆய்வின் நோக்கம் பல்லவர் வரலாறே தவிர, பல்லவர் காலக் கலைவரலாறு அன்று. பல்லவர்களால் உருவாக்கப்பட்ட கோயில்களைப் பார்த்து, அவற்றைப் பற்றிய தம்முடைய நேரிடை அனுபவங்களையும் நூலில் எழுதிடல் வேண்டுமென்ற எண்ணத்துடன்தான் அவர் காஞ்சிபுரம் சென்றுள்ளார். இதை அவருடைய குறிப்புகளே தெளிவு செய்கின்றன.

கோயில் கட்டடக்கலை, சிற்பக்கலை பற்றி எந்தவிதமான அடிப்படைப் பின்புலமும் இன்றிச் சென்ற நிலையிலேயே, காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயிலின் விமான அமைப்பை அவரால் ஓரளவிற்கு விளங்கிக்கொள்ள முடிந்திருப்பது வியப்புத் தருகிறது. காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயில் இராஜசிம்மர் காலச் சிற்பிகளின் சாதனைக் களம். பல புத்தமைப்புகளை முதன்முறையாக முயன்று பார்த்தும், சில பழைய அமைப்புகளை விரிவுபடுத்தியும் அந்தக் கோயிலைத் தமிழ்நாட்டுக் கட்டடக்கலையின் உச்சங்களுள் ஒன்றாக அவர்கள் வடிவமைத்துத் தந்துள்ளனர்.

விமானச் சுவர்களில் அமையும் சாலைப்பத்திகளை மட்டும் வெளியிழுத்து, அவற்றைத் தனித் திருமுன்களாகப் பல்லவச் சிற்பிகள் படைத்துக்காட்டிய இடம் பனைமலை ஈசுவரம். அதில் வெற்றி கண்ட உவப்பில், கர்ணபத்திகளையும் வெளியிழுத்து அவற்றையும் தனித் திருமுன்களாக்கி அவர்கள் வெற்றி கண்ட இடம் கயிலாசநாதர்

கோயில். இதனால், விமானத்தின் ஒவ்வொரு பகுதியும் ஒரு திருமுன்னாய் மலர்ந்ததுடன் முதன்மை விமானத்தை ஒட்டிப் பிறந்த அங்காலயங்களாகவும் அவை அமைந்தன.

விமானச் சுவர்களுக்கிடையில் நடைவெளி காட்டிய உத்தி, 'சாந்தாரம்' எனப்படும். இது முற்றிலும் புதிய முயற்சியாய்க் காஞ்சிபுரத்தில்தான் முதன்முறையாகத் தோன்றியது. இத்தகு கட்டடக்கலை நுணுக்கங்களை எல்லாம் அறிந்திராத நிலையிலும், கட்டமைப்பை உள்வாங்கிக் கொண்டு கயிலாசநாதர் விமானத்தை அவர் வண்ணித்திருக்கும் விதம் வியக்கவைக்கிறது.

'இறையிடத்துச் சுற்றிலும், சுவரில் சிறு கோவில் அமைப்புப் பல இடங்களில் உள்ளது. இறையிடத்தைச் சுற்றிவரும் திருச்சுற்று ஏறத்தாழ இரண்டடி அகலம் உடையது' என்ற வரிகள் அவரது கூர்த்த பார்வையையும் கட்டுமானத்தை ஓரளவிற்கு விளங்கிக்கொண்ட தெளிவையும் புலப்படுத்துகின்றன. கயிலாசநாதர் கோயிலைப் பற்றி எழுதியிருக்கும் பல வரலாற்று அறிஞர்கள்கூடக் குறிப்பிடாத இந்தக் கட்டமைப்பு விளக்கத்தை, கட்டடக்கலையில் அரிச்சுவடிகூட அறியாத ஓர் ஆய்வாளர் எழுதி யிருப்பதுதான் அவரது முயற்சிக்குச் சான்று.

பல்லவர் வரலாற்றின் முழுமைத் தன்மைக்காக இராசமாணிக்கனார் மேற்கொண்ட கோயில் களஆய்வுப் பயணம் அவருக்குள் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியது. கோயில், சிற்பம், கல்வெட்டு இவற்றின்வழிப் பெறக்கூடிய வரலாற்றுப் பெருக்கம் அவரை அதிசயிக்கவைத்தது. அதுநாள்வரை நூல்கள் வாயிலாக மட்டுமே அவர் அறிந்திருந்த கல்வெட்டுகளும் அவரை ஈர்த்தன. 'கோயில்' சமயத் தலம் மட்டுமன்று; உண்மையில் அது ஒரு நிகரற்ற வரலாற்றுக் களம் என்பதை அவர் நன்கு உணர்ந்தார். அதன் விளைவு, தாம் அடுத்து எழுதிய, 'சோழர் வரலாறு' நூலுக்கான முதன்மைச் சான்றுகளுள் ஒன்றாக அவர் கோயில்களைத் தேர்ந்தமை. அந்தத் தேர்வுதான், அவரைப் பெரியபுராண ஆராய்ச்சிக்குள்ளும் சைவ சமய வளர்ச்சி குறித்த ஆய்விற்குள்ளும் நுழைய வைத்தது.

தம்முடைய சோழர் வரலாறு நூலின் முகவுரையில், 'கோயில்கள்' என்ற தலைப்பின் கீழ், 'பிற்காலச் சோழர் வானளாவிய விமானம் கொண்ட கோயில்களைக் கட்டினர். இக்கற்கோயில் சுவர்களிலும் தூண்களிலும் ஏராளமான கல்வெட்டுகள் வெட்டப்பட்டன. கல்வெட்டுள்ள கோயில்கள் புதுப்பிக்கப்படுங்கால், அக் கல்வெட்டுகளைப் பிரதி செய்துகொண்டு புதிதாக அமைத்த கோவிலில் பொறித்தல் அக்கால மரபாக இருந்தது. சுதை, செங்கல் முதலியவற்றால் ஆகிய கோவில்களிலும் கல்வெட்டுகள் இருந்தன.

கோவில்களில் உள்ள பலவகைச் சிற்பங்களைக் கொண்டு சோழர் சிற்பக்கலை உணர்வை அறியலாம்! ஓவியங்களைக் கொண்டு, சோழர் கால ஓவியக்கலை வளர்ச்சியை அறியலாம்; மக்களுடைய நடை, உடை, பாவனை, அணிகள் முதலியன அறியலாம். கோவில் கட்டட அமைப்பைக் கூர்ந்து நோக்கிப் பல்லவர் காலக் கட்டடக்கலை சோழர் காலத்தில் எங்ஙனம் தொடர்புற்று வளர்ந்து வந்தது என்பதை உணரலாம்.

எண்ணிறந்த பாடல் பெற்ற கோவில்கள் சோழர்களால் கற்கோயில்களாக மாற்றப்பட்டன. பெருஞ்சிறப்பும் பெற்றன. இக்கோவில்களை முற்றப் பரிசோதித்துச் சோழர் காலச் சிற்ப-ஓவிய-கட்டடக் கலைகளின் வளர்ச்சியைச் சிறந்த முறையில் ஆராய்ந்து நூல் எழுதினோர் எவரும் இல்லை என்பது வருந்தத்தக்க செய்தியாகும். சுருங்கக்கூறின், இன்று சோழர் வரலாற்றை உள்ளவாறு உணரப் பேருதவி செய்வன - வரலாற்றுக்கு மூலமாக அமைந்துள்ளன - கோவில்களே ஆகும்' என்று இராச மாணிக்கனார் எழுதியுள்ளமை இங்கு எண்ணத்தக்கது.

பல்லவர் வரலாற்றுக்கான களஆய்வுகள்வழிக் கோயில்களின் வரலாற்று வளமையை அவர் உணரத் தலைப்பட்டமையால்தான், அதே முயற்சிக்காகத் தாம் படித்த இன்னோரன்ன கோயில் சார்ந்த நூல்களின் முழுமையற்ற தன்மையை அவரால் புரிந்துகொள்ள முடிந்தது. மண்ணின் வேர்களை அறிந்துகொள்ளாமல், பண்பாட்டுத் தொடர்புகளை விளங்கிக்கொள்ளாமல் சில ஆங்கில அறிஞர்கள் எழுதி வெளியிட்டிருந்த கோயிற்கலை நூல்கள் அவருக்கு நிறைவளிக்கவில்லை. தமிழிலோ அதுபோன்ற முயற்சிகளே தொடங்கப்படாத நிலை. அதனால்தான், 'இக்கோயில்களை முற்றப் பரிசோதித்துச் சோழர் காலச் சிற்ப - ஓவிய - கட்டடக் கலைகளின் வளர்ச்சியைச் சிறந்த முறையில் ஆராய்ந்து நூல் எழுதினோர் எவரும் இல்லை என்பது வருந்தத்தக்கது' என்று கவலை தெரிவித்தார்.

இராசமாணிக்கனாரின் கோயில் களஆய்வுப் பணி விரிவான அளவில் தொடங்கியது 1943இல்தான் என்றாலும், அதற்கும் நான்காண்டுகள் முன்னரே, 1939 செப்டம்பர் இருபத்து நான்காம் நாள், அவர் தஞ்சாவூர் இராஜராஜீசுவரத்தைப் பார்வையிட்டிருக்கிறார். இந்தப் பயணத்தின்போது சோழர் கால ஓவியங்களைக் கோயில் நிருவாக அலுவலரின் துணையுடன் அவர் பார்க்கமுடிந்திருக்கிறது. இராஜராஜீசுவரத்தின் எழுச்சியும், இராஜராஜர் கால ஓவியங்களும், அக்கோயில் தாங்குதளத்தில் முத்துக்களைக் கோத்தது போல் ஒழுங்குடன் எழுதப்பட்டிருக்கும் கல்வெட்டுத் தொடர்களும் அவரை ஆட்கொண்டிருக்கவேண்டும். அதன் பின்னணியில் தான் பல்லவர் கலைக்கோயில்கள் அனைத்தையும் விரிவாகப் பார்க்கும் எண்ணம் உருவாகியிருக்கவேண்டும்.

பல்லவர் வரலாறு உருவான காலத்திலேயே சோழர் வரலாற்றுச் சிந்தனைகளும் அவருள் கிளைத்ததாகக் கருதலாம். அதனால்தான், பெரிய புராணத்தோடு தொடர்புடைய இரண்டாம் குலோத்துங்கரைப் பற்றி ஒரு நூலும் (1945), சோழ மரபின் தலைநாயகரான முதல் இராஜேந்திரரைப் பற்றி ஒரு நூலும் (1946) அவரால் எழுதி வெளியிடப்பட்டன. இவ்விரண்டு நூல்களுமே துணைப்பாட நூல் தகுதியினதான் என்றாலும், இவற்றில் இடம்பெற்றிருக்கும் இரண்டு வரைபடங்களும் இராசமாணிக்கனாரிடம் இயல்பாகவே ஒன்றியிருந்த வரலாற்றுக் கோட்பாடுகளைத் தெள்ளிதின் விளக்குகின்றன.

பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரி, சதாசிவ பண்டாரத்தார், மா. இராசமாணிக்கனார் இவர்கள் மூவர் மட்டுமே, 'சோழர் வரலாறு' குறித்த முழுமையான நூல்களை வெளியிட்டுள்ளனர். இவற்றுள் சாஸ்திரியாரின் நூல் இரண்டு தொகுதிகளாக 1935, 1937-களில் வெளிவந்தது. இராசமாணிக்கனாரின் சோழர் வரலாறு மூன்று தனி நூல்களாக வெளிவந்தது. 1946இல் இரு தொகுதிகளும் 1947இல் ஒரு தொகுதியும் வந்தன. மூன்றும் இணைந்த தனி நூலாகவும் சோழர் வரலாறு 1947இல் வெளியிடப்பட்டது. திரு. பண்டாரத்தாரின் நூல் 1949இல் முதல் தொகுதியும், தொடர்ந்து இரண்டாம் தொகுதியும் கண்டது. அதன் முழுமையான அமைப்பு 1974இல் முதற்பதிப்பாக வெளிவந்துள்ளது. வரலாற்றுப் பேறறிஞரான சாஸ்திரியாரின் நூலே இராசமாணிக்கனாருக்கும் பண்டாரத்தாருக்கும் முதல் நூலாக அமைந்திருக்கவேண்டும் என்பதில் யாதொரு ஐயமும் இருக்கமுடியாது.

மூலநூலைத் தழுவியே வழிநூலார் எழுதும் வழக்கத்தினின்று மாறுபட்டுப் பண்டாரத்தாரும் இராசமாணிக்கனாரும் தத்தம் ஆய்வுப் புலமையைப் பயன்படுத்திப் பல இடங்களில் சாஸ்திரியாரிடமிருந்து கருத்து மாறுபட்டு எழுதியுள்ளனர். இவ்விருவருக்குமே கல்வெட்டுப் பயிற்சி இருந்தமை, இக்கருத்து மாறுபாடுகளுக்குத் துணையானதாகக் கொள்ளலாம். இவ்விரு பெருமக்களின், 'சோழர் வரலாறு' நூல்களைப் படித்தவர்கள், ஓர் உண்மையை எளிதில் உணர்வர். தம் நூல்களில்

சோழர் காலக் கோயில்களைப் பற்றி இருவருமே குறிப்பிட்டிருந்தபோதும், விரிவான அளவில் கோயில்களைப் பற்றி எழுதியிருப்பதுடன் அவற்றை நேரிடை ஆய்வுசெய்த தகவலையும் தருபவர் இராசமாணிக்கனார் ஒருவர்தான்.

பல்லவர், சோழர் வரலாறுகளை உருவாக்கிய காலத்தில், அதாவது 1939-க்கும் 1947-க்கும் இடைப்பட்ட அந்த ஒன்பதாண்டுகளில் இராசமாணிக்கனார் பார்த்த கோயில்கள் தமிழ்நாட்டுக் கலைவரலாற்றுப் புதையல்களாக அமைந்தவை. அக் கோயில்களில் அவர் பார்க்க நேர்ந்த சிற்பங்களும் படிக்க முடிந்த கல்வெட்டுகளும் அறியநேர்ந்த கட்டடக்கலைக் கூறுகளும் இலக்கியத்திற்கும் வரலாற்றிற்கும் உள்ள தொடர்பிழைகளை அவருக்குப் புலப்படுத்தின. பல்லவர் வரலாற்றிலும் சோழர் வரலாற்றிலும் இந்த இழைகளை அவர் தொட்டுக்காட்டியுள்ளார். அதன் விளைவாகவே, இலக்கியப் புலவர்கள் ஆராய்ச்சியாளர்களாக இருந்திருத்தல் கூடும் என்ற எண்ணம் அவருள் விளைந்தது. அதன் வெளிப்பாடாகவே 1945இல் 'சேக்கிழார்' என்னும் ஆராய்ச்சி நூலை அவர் வெளியிட்டார்.

பழந்தமிழ்ப் புலவர்களுள் ஒருவரை வரலாற்று அறிஞராகப் படம்பிடித்த முதல் நூல் சேக்கிழார்தான். கற்பனையாகவோ, ஒன்றிரண்டு சான்றுகளுடனோ இந்த நூலை இராசமாணிக்கனார் வெளியிடவில்லை. நூல் முழுவதுமே சான்றுகளால் நிரப்பப் பட்டிருப்பதைச் 'சேக்கிழார்' படித்தவர்கள் உணர்வர். ஓர் அருஞ் செயலைச் செய்வதற்கு முன் அதற்கான குறிப்பை வெளியிட்டு, நாட்டார் கருத்தறிதல் அறிவு வல்லார் செயலாகும். இராசமாணிக்கனாரும் இந்த முறையைப் பின்பற்றியுள்ளார்.

சோழர் வரலாறு வெளியாவதற்குமுன் சிறு சிறு நூல்களை வெளியிட்டு அவை மீதான மக்கள் உணர்வுகளைப் படித்தறிந்தார். பின்னரே சோழர் வரலாறு வெளியானது. அது போலவே, 'பெரியபுராண ஆராய்ச்சி' எனும் அவருடைய நிகரற்ற ஆய்வு நூல் வெளியாவதற்குமுன், 'சேக்கிழார்' வெளியிடப்பட்டது. இந்த நூலைப் படித்தவர்கள், ஒரு கவிஞர் வரலாற்று ஆய்வாளராகக் காட்டப்பட்டிருப்பது கண்டு வியந்தனர். நூலின் அடிக்குறிப்புகளும் துணைநூல் பட்டியலும் கல்வெட்டுச் சான்றுகளும் அந்த வியப்பை மகிழ்ச்சிப் பெருக்காக மாற்றின.

'பெரியபுராண ஆராய்ச்சி' 1948இல் வெளியானது. அதன் முன்னுரையில், 'சேக்கிழார் சிறந்த வரலாற்று உணர்ச்சியுடன் தக்க சான்றுகளைக் கொண்டே, சிறப்பாக, நாயன்மார் கால நிலையை உளங்கொண்டே தமது நூலைப் பாடியுள்ளார் என்பதும், பெரியபுராணம் வரலாறு, இலக்கியம், இலக்கணம், சமய சாத்திரங்கள் இவற்றை அடிப்படையாகக் கொண்டு செய்யப்பட்ட பெருங் காவியம் என்பதும் சாதாரண தமிழ் மக்களும் அறிதல் வேண்டும் என்பது எனது விருப்பம்' என்று இராசமாணிக்கனார் குறிப்பிட்டிருப்பது அவர் ஆய்வுகள் சமுதாயப் பயன்பாடு கருதியவையாகவே இருந்தமையை உணர்த்தவல்லன.

'Evidence by itself is not history; it does not become history till criticism, has authenticated it and the mind of the historian has assessed it' எனும் வரைவியல் சிந்தனையை முற்றிலும் உணர்ந்தவராய், தாம் அறிந்து வைத்திருந்த செய்திகளை நூலாக்குவதற்கு முன், திரு. சி. கே. சுப்பிரமணிய முதலியார், திரு. வி. கலியாணசுந்தரனார், திரு. ரா. பி. சேதுப் பிள்ளை, திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை, மறைத்திரு மறைமலையடிகள், திரு. டி. எம். நாராயணசாமிப் பிள்ளை எனும் பேரறிஞர்கள் முன் அரங்கேற்றியவர் இராச மாணிக்கனார். தமிழ்நாட்டு நூலாக்க வரலாற்றில், தம் ஆய்வுத் தொகுப்புகளை, அவ்வாய்வு சார்ந்த அறிஞர் பேரவையில், பலர் முன்னிலையில் உரசிப் பார்த்து உண்மைகளை நூலாக்கி வெளியிட்டவர்கள் இராசமாணிக்கனாருக்கு முன்னும் சரி பின்னும் சரி வேறொருவர் இருப்பதாக அறியக்கூடவில்லை.

'சேக்கிழார் வரலாற்று ஆய்வாளரே' எனும் முடிவிற்குத் தாம் வரக் காரணமாக அமைந்தவை யாவை என்பதைப் பெரிய புராண ஆராய்ச்சி நூலின் முதற்பதிப்பு முகவுரையில் இராசமாணிக்கனார் தெளிவாகவே காட்டியுள்ளார். 'நான் பல்லவர் வரலாறு எழுத விரும்பி அதற்குரிய ஆராய்ச்சி நூல்களையும் பல்லவர் காலப் பட்டயங்களையும் கல்வெட்டுகளையும் இலக்கியங்களையும் படித்துவந்தபொழுது, மூவர் திருமுறைகளில் வரும் சில குறிப்புகளும் பெரியபுராணத்தில் வரும் பல குறிப்புகளும் கல்வெட்டு பட்டயக் குறிப்புகளுடன் ஒன்றுபடுதலைக் கண்டு வியந்து ஆராயத் தொடங்கினேன்; அவ்வாராய்ச்சியின் பயனாக, பெரியபுராணத்திற் காணப்படும் போர்கள் - பஞ்சங்கள் - ஊராட்சிமுறை - நாணயமுறை - சமுதாய வாழ்க்கை - சமயநிலை முதலியன பல்லவர் கால உண்மை வரலாற்றை அடிப்படையாகக் கொண்டவை என்பதை அறிந்தேன்.

பெரியபுராணத்துக்கு மூல நூல்களாகக் கூறப்படும் பதினொரு திருமுறைகட்கும் பெரிய புராணத்திற்கும் பல இடங்களில் வேறுபாடுகள் உண்டு; பின்னவற்றிற் காணப்பெறாத பல செய்திகளைச் சேக்கிழார் விரிவாகக் கூறலும், பின்னவற்றிற் குறிப்பாகக் கூறப்பட்டவற்றைச் சேக்கிழார் பல விவரங்களுடன் கூறலும் கவனிக்க, சேக்கிழார் கூற்றுக்குத் தக்க சான்றுகள் அவர் காலத்தில் இருந்திருத்தல் வேண்டும் என்ற எண்ணம் உண்டாயது. அவ்வெண்ணம் சோழர் வரலாறு எழுத விரும்பி ஆராய்ச்சி நிகழ்த்திய பொழுது உறுதிப்பட்டது.

விஜயாலயன் மரபினரான சோழப் பேரரசர் காலத்தில் சைவ சமய வளர்ச்சி உச்சநிலையை அடைந்தது; பாடல் பெற்ற கோவில்கள் கற்றளிகளாக மாறின; நாயன்மார்க்குக் கோவில்களிற் பூசையும் விழாவும் நடத்த ஏற்பாடுகள் நடைபெற்றன; நாயன்மார் வரலாற்று நிகழ்ச்சிகள் ஓவிய - சிற்பங்களிற் காட்டப்பட்டன. அக்கால மக்கள் நாயன்மார் பெயர்களைத் தங்கள் பிள்ளைகட்கு இட்டு வழங்கினர். இத்தகைய பல விவரங்கள் சோழர் காலத்துக் கல்வெட்டுகளிலிருந்து தெரிந்தன; மேலும் பெரிய புராணத்திற் கூறப்பட்ட சிற்றரசர் மரபினர் சேக்கிழார் காலத்தில் சிற்றரசர்களாகவே இருந்து வந்தனர் என்பதையும் கல்வெட்டுகள் மெய்ப்பிக்கின்றன. இத்தகைய பல விவரங்களைக் கொண்டும், சோழப் பெருநாட்டின் முதல் அமைச்சராக இருந்து தாம் பல வழிகளில் அறிந்த பிற செய்திகளைக் கொண்டுமே சேக்கிழார் வரலாற்றுப் பகுதிகளைத் தமது பெருநூலிற் பாடினார் என்பது விளக்கமாயிற்று'.

ஒரு விதை செடியாகுமாறு போலப் பல்லாண்டுகளாக உள்ளிருந்து வளரத் தொடங்கிய சிந்தனை 1948 இல் நூலாக்கம் பெற்றது. 'History is no longer a chronicle of kings and wars. It is atleast as much interested in the life and doings of common men and the scope of modern historical writing has broadened so as to include all aspects of social life' என்ற வரலாற்று வரைவியலாளர்களின் புதிய கீற்று, சேக்கிழார் காலத்திலேயே வழக்கிற்கு வந்துவிட்ட உண்மையை இராசமாணிக்கனாரின் பெரியபுராண ஆராய்ச்சி சான்றுகளுடன் நிறுவியமை இங்கு எண்ணி மகிழத்தக்கது.

சமயம் சார்ந்த நூலென்றாலும், பெரியபுராணம் மக்களைத் தழுவிய வரலாற்று நூல்தான் என்பதை எண்ணற்ற சான்றுகளுடன் எழுதி மெய்ப்பித்திருக்கும் இராச மாணிக்கனார், இந்த நூலில் கையாண்டுள்ள தரவுத் தொகுப்புமுறை அதுநாள்வரை தமிழறிஞர்களோ, வரலாற்றறிஞர்களோ முயன்று பார்க்காத முற்றிலும் புதிய முறையாகும். ஏதேனும் ஒரு கருத்தை அல்லது கருதுகோளை முன் நிறுத்தி அதை உறுதிப்படுத்தவோ, மறுக்கவோ தரவுத் தேடல் நிகழ்த்துதல் இயல்பே. ஆனால், ஒரு பழம்பெரும் நூலையே ஆய்வுப்பார்வைக்கு முன் நிறுத்தி, அந்த நூலின் நாயகர்கள் அனைவரும் வரலாற்று மாந்தர்களே என்பதைக் கல்வெட்டுகளாலும், இலக்கியச் சான்றுகளாலும் சிற்பப் பின்னணியாலும் நிறுவி, எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பு

யாக்கப்பட்ட அந்த நூலை எழுதியவரும் ஒரு வரலாற்று ஆய்வாளரே என்று உறுதிப் படுத்தியிருக்கும் ஆய்வுமுறை விதந்து பின்பற்றத்தக்கதாய் விளங்குகிறது.

சேக்கிழாரின் உண்மைத் தன்மையை வெளிப்படுத்த, அவர் சென்ற அந்தச் சுவட்டிலேயே ஆய்வாளரான இராசமாணிக்கனாரும் பயணப்பட்டிருப்பது ஆய்வு நெறிகளில் புதிய போக்காகும். வழித்தடங்கள் மிகக் குறைவாக இருந்த அந்த நாட்களில், பேருந்து இல்லாத இடங்களுக்குச் சைக்கிளிலும் குதிரை வண்டியிலும் எந்த ஊர்தியும் கிடைக்காத இடங்களில் கால்நடையாகவும் சென்று, துணையோடும் துணையின்றியும் ஆய்வுகள் நிகழ்த்தி, தாம் புலமை பெற்றிராத துறைகளையும் நூல்கள், களக்கல்வி வழி அறிந்து, கிடைத்த தரவுகளையெல்லாம் காய்தல், உவத்தலின்றி ஆராய்ந்து, பல்வேறு தலைப்புகளின் கீழ் வகைப்படுத்தி, அறிவுசான்ற பேரவைகளில் அவற்றை முன்னிறுத்திக் கலந்துரையாடித் திரண்ட உண்மைகளையே நூலாக்கியுள்ள இந்த ஆய்வுப் பாங்கு, 'Subjectivity, objectivity, internal and external criticisms' எனும் வரைவியல் கோட்பாடுகள் அவருள் இயல்பாகவே இருந்தமையைத் தெளிவாக்குகிறது.

பல்லவர், சோழர் வரலாற்றாய்வின் பயனாகவும் பெரியபுராண ஆராய்ச்சியின் மலர்வாகவும் நிகழ்ந்த உடன் விளைவே, 'சைவ சமய வளர்ச்சி'. தேடிப் போகாமல் நாடிவந்த புதையல்தான் அது என்றாலும், கிடைத்த தரவுகளோடு இராசமாணிக்கனார் நிறைவடைந்துவிடவில்லை. பல கள ஆய்வுகளை மேற்கொண்டார். தம்முடைய ஆய்வுநூல்களுக்காக மிகுதியான அளவில், அவர் களஆய்வுகள் மேற்கொண்டது பத்துப்பாட்டு ஆராய்ச்சிக்காகத்தான் என்றாலும், சைவ சமய வளர்ச்சியும் அவரைத் தமிழ்நாட்டின் நான்கு திசைகளிலும் பயணப்படவைத்தது. கல்வெட்டுகளை மிகுதியான அளவில் அவர் பயன்படுத்திக்கொண்டதும் இந்த ஆய்விற்காகத்தான்.

இந்திய கல்வெட்டு ஆண்டறிக்கைகள், தென்னிந்திய கல்வெட்டுகளின் தொகுதிகள், எபிகிராபியா இண்டிகா தொகுதிகள் இவற்றைத் தம் ஆய்விற்காகப் பரந்துபட்ட அளவில் பயன்படுத்திக்கொண்டுள்ள இராசமாணிக்கனார், கல்வெட்டு நூல்களின் வழித் தாம் அறிந்த சமயத் தரவுகளைக் காலநிரல்படி தொகுத்துள்ளார். அவர் காலத்திலும் சரி, அவரது நூற்றாண்டு அமையும் இந்தக் காலத்திலும் சரி எந்த ஒரு சமயம் குறித்து வெளிவந்திருக்கும் தமிழாய்வு நூலிலும் இத்தனை கல்வெட்டுகள் இடம் பெற்றிருக்குமா என்பது ஐயம்தான். சைவசமய வளர்ச்சி நூலின் ஒவ்வோர் இயலின் பின்னும் இடம்பெற்றிருக்கும் அடிக்குறிப்புகளைக் காணநேரும்போதுதான் உண்மைகளைத் தேட எத்தனை உழைப்புத் தேவைப்படுகிறது என்பதை உணரமுடிகிறது.

'சைவ சமய வளர்ச்சி' இன்றளவும் தரமான ஓர் ஆய்வு நூலாக மதிக்கப்படுவதற்கு முக்கியமான காரணங்கள் சில உண்டு. அக்காரணங்களுள் தலையாயது, முன்வைக்கப் பட்டிருக்கும் தரவுகளின் காலநிரல் ஒழுங்கு. இராசமாணிக்கனார் தொழிலால் வரலாற்றாசிரியராக விளங்காத போதும், காலத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்திருந்தார். அதனாற்றான், கால ஆராய்ச்சியில் அவர் கண்ணும்கருத்துமாக இருந்தார். சங்க இலக்கியங்களின் காலத்தையும் புலவர் பலர் காலத்தையும் பல்வேறு சான்றுகளின் அடிப்படையில் நிறுவிப் பழகியிருந்தமை, சைவ சமய வளர்ச்சியின் உருவாக்கத்தில் அவருக்குக் கைகொடுத்தது. கிடைத்த தரவுகளை எல்லாம் பல்லவருக்கு முற்பட்ட காலம், பல்லவர் காலம், சோழர் காலம் என்று மூன்று பெரும் பிரிவுகளில் அடக்கினார்.

பல்லவருக்கு முற்பட்ட காலச் சைவம் பேச, இலக்கியங்களே முதன்மைச் சான்றுகளாக அவருக்கு உதவின. பல்லவர் காலச் சைவத் திறம் சுட்ட, இலக்கியங்களோடு கல்வெட்டுகளும் செப்பேடுகளும் கோயில்களும் துணைநின்றன. சோழர் காலச் சைவம் காட்டவோ கல்வெட்டுகளும் கோயில்களுமே முதன்மைச் சான்றுகளாக மாறி இலக்கியங்களைப் பின்னுக்குத் தள்ளுவதைக் காணமுடிகிறது. தமிழ்நாட்டை ஆண்ட

இருபெரும் பேரரசுகளைப் பற்றியும் அவர் ஏற்கனவே ஆராய்ந்திருந்தமை இந்தக் கால நிரல் ஒழுங்கிற்குத் துணையானது. பெரியபுராண ஆராய்ச்சியோ சைவ சமய வளர்ச்சியின் வேர்களை வெளிப்படுத்த உதவியது.

'சைவ சமய வளர்ச்சி'யின் நிகரற்ற தன்மைக்கு அதன் காலநிரலான சான்றுகள் போலவே, இலக்கியங்களையும் கல்வெட்டுகளையும் சிற்பச் சான்றுகளையும் ஒற்றோடொன்று இணைத்துப் பார்த்துத் தம் கருத்துக்களை உண்மைப்படுத்தியிருக்கும் அவரது ஆய்வுமுறையும் முதன்மையான காரணமாகிறது. பெரும்பாலான சமய வரலாற்று ஆய்வுநூல்களில் காணப்பெறாத இந்தப் போக்கு, சைவ சமய வளர்ச்சியில் பரவலாகக் காணப்படுவது இராசமாணிக்கனாரின் களப்பணி முதிர்வையும் கோயிற் கலையில் அவர் தொடர்ந்து பெற்றுவந்த அனுபவங்களையும் படம்பிடிப்பதாகக் கொள்ளலாம்.

'சைவ சமய வளர்ச்சி'யின் மற்றொரு பெருஞ்சிறப்பாகச் சமுதாயத்தின் பல தளங்களின் ஊடே ஒரு சமயம் எப்படிப் பரவிக் கிளைத்துப் படர்ந்திருந்தது என்பதை அசைக்கமுடியாத சான்றுகளோடு அவர் நிலைநிறுத்தியிருக்கும் விதத்தைக் கூறலாம். இதற்கு அவருடைய கல்வெட்டறிவும் கோயிலாய்வுமே துணைநின்றுள்ளன. சமய குரவர்களைப் போற்றிய வழிபாட்டு நிலைகள், அவர்தம் சிற்ப நிறுவல்கள், சைவஞ் சார்ந்த மக்கள் பெயர்கள், விழாக்கள், திருமடங்கள், குகைகள், சைவ சமயப் பாடல்கள் பாடப்பட்ட, எழுதப்பட்ட, போற்றப்பட்ட முறைகள், அப்பாடல்களுக்கு ஆடியவர்கள், அந்த ஆடல்களின் தன்மை எனப் பல்லவர், சோழர் காலக் கல்வெட்டுகளையும் சிற்பங்களையும் நுணுகி ஆராய்ந்து இராசமாணிக்கனார் தொகுத்துத் தந்திருக்கும் சமயத் தரவுகள் அவர் முயற்சியின், உழைப்பின் பெருமையாக விளைந்தவை.

'சைவ சமய வளர்ச்சி' நூலின் ஒரே குறைபாடாகத் தென்படுவது, பல்லவர்களின் சமகால அரசர்களான பாண்டியர்களின் ஆட்சிப்பகுதியில் அக்காலத்தே சைவம் பெற்றிருந்த செல்வாக்கை இராசமாணிக்கனார் தொட்டுக்காட்டுவதுடன் நிறுத்திக் கொண்டமைதான். பல்லவ, சோழப் பேரரசுக் காலத் தரவுகளுக்கொப்ப, பாண்டிய நாட்டில் சமகாலக் கல்வெட்டுகளின் எண்ணிக்கை மிகுதியாக இல்லையென்றாலும், குடவரைக் கோயில்கள் எண்ணற்றனவாக உள்ளன. இவற்றுள் எண்பது விழுக்காட்டின சைவக் கோயில்களே. இக்கோயில்களைப் பற்றிய அறிமுக நூல்கள்கூட இராச மாணிக்கனார் காலத்தில் வெளியாகவில்லை என்பது உண்மைதான் என்றாலும், தமிழ்நாடெங்கிலும் பயணப்பட்டுக் களஆய்வுகள் மேற்கொண்ட அப்பெருந்தகை, சைவத்திற்குப் பாண்டியர் அளித்த பங்களிப்பையும் தம்முடைய இணையற்ற இந்த சமய வரலாற்று நூலில் இணைத்திருந்தார் எனில், இதற்கிணையான சமய வரலாற்று நூலே தமிழில் இல்லை எனும் பெருமையை இந்நூல் பெற்றிருக்க முடியும்.

'பத்துப்பாட்டு ஆராய்ச்சி' சென்னைப் பல்கலையில் பணியமர்ந்த பிறகு இராசமாணிக்கனார் மேற்கொண்ட ஆய்வுப்பணியாகும். 1959இன் இறுதியில் தொடங்கப்பட்டு 1964இல் முடிந்த இந்த ஐந்தாண்டுத் திட்ட ஆய்வுப் பணி அவரது மறைவிற்குப் பின் 1970இல்தான் வெளியிடப்பட்டது. எட்டுத்தொகை நூல்களுக்கும் இப்படியொரு ஆய்வுநூல் கிடைத்திருந்தால் எத்தனை பயனுடையதாய் இருந்திருக்கும் என்று எண்ணுமாறு தரவுக் திரட்டலாய், சங்கப் புலமையின் வரலாற்றுப் பார்வைக்கான தெளிவான விளக்கமாய், இலக்கியங்களின் மெலிதான கற்பனைப் பூச்சுகளை அகற்றத் தெரிந்தவர்களுக்கு, அவை அவ்வக்கால சமுதாயங்களின் ஆழமான படப்பிடிப்பே எனும் உண்மையை உயர்த்தி நிறுத்தும் ஆய்வேடாய், களஆய்வும் கல்வெட்டறிவும் கையிணைந்தால் காலம் இழக்க வைத்தவைகளைக்கூட எளிதில் மீட்டுருவாக்கம் செய்திடல் முடியும் என்ற நம்பிக்கையின் நந்தாவிளக்காய் உருவான பெருமைக்குரிய படைப்பு இராசமாணிக்கனாரின் பத்துப்பாட்டு ஆராய்ச்சி.

ஒரு நடுநிலைப் பள்ளி ஆசிரியர், வரலாற்றறிஞராக உயர்ந்த வகைமையை இராசமாணிக்கனார் கடந்து வந்த பல படிநிலைகள் விளக்கினாலும், அந்தப் பரிணாமத்தின் முழுவீச்சையும் உள்ளடக்கி, உழைப்பின் உன்னதத்தை வெளிக்காட்டி, நெறியான சிந்தனைகளும் முறையான பயிற்சிகளும் நிரலான களப்பணிகளுமே ஆய்வுலகில் வெற்றிபெற இன்றியமையாதவை என்பதை உலகுக்கு உணர்த்தி எழுந்த பத்துப்பாட்டு ஆராய்ச்சிதான் அவருடைய வளர்ச்சியின் சரியான அடையாளம் என்றால் அது மிகையாகாது.

'பத்துப்பாட்டு ஆராய்ச்சி' 35 இயல்களைக் கொண்ட 781 பக்க நூல். எளிமையாகவும் தொடரொழுங்காகவும் எழுதப்பட்டிருக்கும் இந்நூலில் இராசமாணிக்கனாரின் அனுபவ முதிர்வு அழுத்தமாகப் பதிவாகியுள்ளது. தமிழறிஞர் என்பதால், வரலாற்றை வடித்தெடுக்கும் முயற்சியில் இலக்கிய ஒப்பாய்வுகள் எத்தகு பெரும் பயன் அளிக்க முடியும் என்பதைப் பல எடுத்துக்காட்டுகளுடன் அவரால் எளிதாக நிறுவ முடிந்துள்ளது. 'பழமுதிர் சோலை' முருகனுக்கு உரியது அன்று என்பதை அவர் விளக்கும் இடத்தையும் கரிகாலன் பற்றிய கருத்துருக்களைப் பாடலடிகளின் அடிப்படையில் அவர் வடிவமைக்கும் இடத்தையும் சான்றுகளாகக் கூறலாம்.

இலக்கிய ஆளுமையுடன், பல ஆண்டுகளாகக் கோயிற்களங்களில் பெற்ற கல்வெட்டுப் பயிற்சியும் இந்நூல் உருவாக்கத்தில் அவருக்குத் துணை நின்றுள்ளது. கூத்துக்கலையை ஆராயுமிடத்தில், பத்துப்பாட்டுத் தரவுகளுடன் பிற சங்க இலக்கியச் செய்திகளையும் இணைத்துத் தருவதுடன், கூத்துத்தொடர்பான சில கல்வெட்டுகளையும் தொட்டுக் காட்டியிருக்கிறார். ஊர்ப்பெயர் ஆய்வுகளில் அவருக்கிருந்த புலமை, கூத்தரை நினைவூட்டும் ஊர்ப்பெயர்களாக இப்பகுதியில் அவர் தந்திருக்கும் பல மாவட்டங்களைச் சேர்ந்த 58 ஊர்ப்பெயர்களின் தொகுப்பில் மின்னுகிறது.

ஆற்றுப்படை நூல்களில் கூறப்பட்டுள்ள பயண வழிகளின் உண்மைத் தன்மையைக் கண்டறியவும் அவ்விலக்கியங்கள் சுட்டும் ஊர்களை அடையாளப்படுத்தி, அவற்றின் இன்றைய நிலை ஆராயவும் அவர் மேற்கொண்ட களஆய்வுகளே பத்துப்பாட்டு ஆராய்ச்சி எனும் நூலின் பெருமையை உயர்த்தியுள்ளன. கல்வெட்டுகள், கலந்துரைகள், வழக்குச் சொற்கள், பிற இலக்கியச் சுட்டல்கள் என இவற்றையும் கள ஆய்வுடன் இணைத்துப் பார்த்து உண்மைகளை அறிய அவர் மேற்கொண்ட முயற்சிகளே, ஓர் இலக்கிய அறிவியலாளராக அவரை முன் நிறுத்துகின்றன.

'தொண்டை நாட்டுப் பொய்கைகளில் சாதிலிங்கம் போன்ற இதழையுடைய குவளையோடு நீலப்பூக்களும் வளர்ந்து ஒன்றற்கொன்று நிறம் மாறுபடுதலையுடைய பிற பூக்களும் மலர்ந்திருந்தன' எனும் பெரும்பாணாற்றுப்படையின் அடிகளைக்கூட, பாலாற்றின் தென்கரையில் பரமேசுவரமங்கலத்தில் தாம் களஆய்வின்போது கண்ட நீண்ட பொய்கை ஒன்றுடன் தொடர்புபடுத்தி ஆராய்ந்திருப்பதுடன், அந்தப் பொய்கையின் நீர்வரத்து, பாய்ச்சல் இவை பற்றிய தரவுகளையும் தொகுத்துத் தந்து, இன்றைய வளம் அன்றைக்குக் கூடுதலாகவே இருந்திருக்கலாம் என்று நிறுவும் நிலை இராச மாணிக்கனாரின் வரலாற்றுப் புவியியல் ஈடுபாட்டையும் காட்டுவதாக அமைந்துள்ளது.

சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால், பத்துப்பாட்டு ஆராய்ச்சி இராச மாணிக்கனாரின் 37 ஆண்டுக் கால அனுபவத்தின் விளைச்சல். இளஞ்சிறார்களின் ஆசிரியராகத் தம் வாழ்க்கையைத் தொடங்கி, அந்தச் சிறுவர்களுக்காகவே நூல்களை எழுதும் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட இளைஞர் இராசமாணிக்கத்தை, அவர் கற்ற தமிழும் தேடிவந்து அவரிடம் அடைக்கலமான வரலாறும் பல புதிய பாதைகளில்

பயணப்படவைத்தன. எதை நோக்கிச் செல்கிறோம் என்பதே தெரியாமல் சிந்துவெளியில் தொடங்கிய அந்தப் பயணம் பல்லவ, சோழ வரலாறுகளில் முத்துக் குளித்து, பெரிய புராண ஆராய்ச்சி, சைவ சமய வளர்ச்சி எனச் சமய ஆய்வுகளில் திசைதிரும்பி, பத்துப்பாட்டு ஆராய்ச்சி எனும் தொடமுடியாத உயரத்தில் முடிந்தது.

வரலாற்றறிஞர்களுக்கு ஆழமான இலக்கியப் பயிற்சி இருப்பதில்லை. தமிழறிஞர்களோ வரலாற்றுப் பார்வை கொள்வதில்லை. இந்த இரண்டும் சரியான அளவுகளில் கலந்திருந்த இராசமாணிக்கனாரை இனங்கண்ட நிலையிலேயே, வரலாறு அவரைச் சூழ இருந்து ஆட்கொண்டது. அவர் தமிழாசிரியர்தான். ஆனால், வரலாற்றை ஆராதித்த அறிவியல் பார்வையர். அவர் வாழ்ந்த காலகட்டத்தில் தமிழர்களுக்கு அவர்களை யார் என்று அடையாளம் காட்டவேண்டிய தேவையிருந்தது. அந்தத் தேவையை முற்றிலுமாய்ப் புரிந்துகொண்ட நிலையில்தான், 'இதை, இவர் கொண்டு, இப்படிச் செய்திடல் வேண்டும்' என்ற கருத்துடன் காலம் அவரைக் கைப்பிடித்தது. எந்தத் துகளில் இருந்தும் இமயம் உருவாகலாம் என்பது போல் அந்தக் கையிணைப்பு, தமிழர் துயில் கலைக்க, அவர்தம் வேர்களைப் புலப்படுத்த இராசமாணிக்கனாரை ஒரு வரலாற்றறிஞராக உருமாற்றியது.

அறிவும் அன்பும் சரியான அளவுகளில் கலந்த கவர்ச்சிக் கண்களும் பரந்த நெற்றியும் இலேசாய் நெகிழ்ந்த இதழ்களில் இளநகையும் எவரையும் எளிதாய்ச் சென்றடைந்த நகைச்சுவை இழையோடும் அவருடைய அகல உரைகளும் அந்த மனிதரை, 'மக்களின் மைந்தராக' வாழவைத்தன. நாடெங்கிலும் இருந்த நற்றமிழர் நெஞ்சங்களில் நீங்காமல் நிறைந்த அந்த அற்புத வாழ்க்கையின் அடையாளம்தான் அவருடைய பத்துப்பாட்டு ஆராய்ச்சி. அது அவருடைய வாழ்நாள் சாதனை; காலம் ஒரு மனிதரைக் கொண்டு தன்னில் ஒரு துளியை முழுமையாகப் பதிவுசெய்து கொண்ட வரலாற்றின் வரலாறு.

பார்வை நூல்கள்

Carr, E. H., What is History? Penguin Books, 1990.

Collingwood, R. G., The Idea of History, Oxford University Press, New Delhi, 1988.

Karashima, No7boru, South Indian History and Society, Oxford University Press, New Delhi, 1984.

Manickam, V., On History and Historiography, Cilo Publications, Madurai, 2003.

Nilakanta Sastri, K.A., Historical Method in Relation to Problems of South Indian History, University of Madras, 1941.

Sheik Ali, B., History: Its Theory and Method, Macmillan India Ltd., Chennai, 1993.

Subramanian, N., Tamilian Historiography, Ennes Publications, Madurai, 1988.

Venugopalan, T. R., (Ed.) History and Theory, Thrissur, 1997.

❖ ❖ ❖

தமிழ் தந்த தவலருஞ் செல்வர்

அ. சங்கரவள்ளிநாயகம்

"தமிழுக்குத் தொண்டு செய்வோர் சாவதில்லை; தமிழ்த் தொண்டன் பாரதிதான் செத்ததுண்டோ?" எனப் பாடிய பாரதிதாசனின் கூற்று, கற்றுத்துறைபோகித் தமிழை வாழ்விக்க வந்த புலமை வள்ளல் முனைவர் இராசமாணிக்கனார்க்கு முற்றும் பொருந்துவதாகும். தமிழால் இராசமாணிக்கனார் தகுதி பெற்றதையும், இராச மாணிக்கனாரால் தமிழ் தகுதி பெற்றதையும் என் கூறி வியப்பது? தமிழர், நிலைதாழ்ந்து தமிழுக்குத் தகுதி அளிக்கும் தலைவனை எண்ணித் தமிழகம் தவம் ஆற்றியதால் இலகு புலவர் பலர் வாடிய தமிழ்ப் பயிர்க்கு வாய்த்த வான் மழையாய்ப் புலமையைச் சொரிந்து வாட்டம் போக்கி ஊட்டம் சேர்த்தனர். அத்தகு புலவர்களில் தலையாயவர்களுள் இராசமாணிக்கனாரும் ஒருவர் எனக் கூறின் மிகையாகாது.

வித்துவான் இராசமாணிக்கம் தமது பெரியபுராணம் பற்றிய நூலில் நில ஆய்வாளரின் வரலாற்றுக் கண்ணோட்டத்தை வலியுறுத்திச் சேக்கிழாரை முற்றிலும் புதியதொரு கோணத்தில் காட்டியுள்ளார்.

வேங்கடசுப்பையர்

வடமொழிக்கு வாய்த்த வடவைக் கனல்

வடமொழியின் தாக்கத்தையும், அத்தாக்குதலால் தமிழ் மொழி பெற்ற உருமாற்றத்தையும் உருச்சிதைவையும் இவர் சுட்டு மிடங்களில் எல்லாம், உணர்விலாத் தமிழர்கட்கு உளச் சூட்டினை வழங்கத் தவறியதில்லை. வடவர்தம் சேர்க்கையாலும், வடமொழி இலக்கண, இலக்கியங்களாலும், தமிழ் இலக்கியத்தில் வடமொழிக் கலப்பு ஏற்படத் தொடங்கிச் சமயப் போர்வையில் வடமொழியின் செல்வாக்குப் பெருகியதை விளக்கமாகவும், விரிவாகவும், தமிழ் மொழித் தொடர்பான கட்டுரைகளில் காட்டி யமைக்கிறார்.

சங்கப் புலவர் பெருமக்களுள் காசிபன், கபிலன், உலோச்சன், தேவன், நிகண்டன், கௌசிகன், தத்தன், பராயன், பிரமசாரி எனப் பெயர் தாங்கிய வடமொழியாளர்களை நமக்கு அடையாளம் காட்டுகிறார். வடவர் சேர்க்கையால் சங்கப் பாடல்களில் இடம் பெற்றுள்ள வட சொற்களை முடிந்த அளவில் அகரவரிசையில் பட்டியல் வடிவில் தருகிறார். அவை அசுரர், அஞ்சனம், அந்தி, அமிழ்தம், ஆகுதி, ஈமம், கரகம், கலாபம், குமரி, கௌரியர், சடை, சாபம், சாமரம், சிகரம், சித்திரம், தருப்பை, நேமி, பிண்டம், பூதம், மாயம், முண்டகம் போல்வனவாம். சமயத் துறையில் இவ்வட மொழியாளர் நிகழ்த்திய சித்து விளையாட்டினையும், இரசவாதத் தினையும் படிப்போர் மனத்தில் பதியுமாறு படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

வடநாட்டுத் தெய்வங்கள் சில இந்நாட்டில் வழிபாடு பெறலாயின. முல்லை நிலக் கடவுளாகிய மாயோனுக்கு விஷ்ணுவின் அம்சங்கள் ஏற்றப்பட்டன. சிவன் உருத்திரன் ஆக்கப்பட்டான். இந்திர வணக்கம் தோன்றியது. பாலை நிலத் தேவதையான 'கொற்றவை' துர்க்கையாக மாற்றப்பட்டாள். குறிஞ்சி நிலக் கடவுளான முருகன் ஆறு தலைகளைக்கொண்ட கடவுளாக மாற்றப் பட்டான்.[1]

தேவார காலத்தில் 'திருமுதுகுன்றம்' என வழங்கப்பட்ட ஊர், பிற்காலத்தில் 'விருத்தாசலம்' எனவும், 'மறைக்காடு' என்பது 'வேதாரண்யம்' எனவும், 'வெண்காடு' என்பது 'சுவேதாரண்யம்' எனவும் மாறி வழங்கலாயின. இவ்வாறே சுவாமி பெயர்களும், அம்மன் பெயர்களும் வடமொழியில் ஆக்கப்பட்டன. 'ஐயாறனார்' என்பது திருவையாற்றுச் சிவன் பெயர். இப்பெயர் 'பஞ்சநதீஸ்வரர்' எனவும் மதுரை 'அங்கயற்கண்ணி' என்பது, 'மீனாட்சி' எனவும், 'சொக்கர்' என்பது. 'சுந்தரேசுவரர்' எனவும் மாறின. ஐயாறப்பனது அம்மன் பெயர் 'அறம் வளர்த்த நாயகி' என்பது 'தர்மசம் வர்தனீ' என மாற்றப்பட்டது. இவ்வாறு ஒவ்வொரு தலத்திலுமுள்ள சுவாமி - அம்மன் பெயர்கள் தமிழ் மக்களுக்குப் புரியாத வடமொழிப் பெயர்களினால் வழங்கப்பட்டன.[2]

பிறமொழிக் கலப்பினால்தான், ஒரு மொழியின் வாழ்வும் வளமும் அமைந்துள்ளது என அடம் பிடிக்கும் மொழித்தடப் பிறழ்ச்சியாளர்க்கு, அக்கலப்புடன் கைகோத்து வரும் கேடுகளை அங்கைக் கனியென எடுத்துக்காட்டுகிறார்.

மகிழ்ச்சி என்பது தமிழ்ச் சொல். தமிழன் அதைச் சொல்வதற்குப் பதிலாகச் 'சந்தோஷம்' என்ற வடசொல்லைப் பயன்படுத்துகிறான். இச்சொல்லையே தொடர்ந்து அவன் பயன்படுத்துவானாயின், நாளடைவில் 'மகிழ்ச்சி' என்னும் தமிழ்ச்சொல் வழக்கொழிந்துவிடும் அல்லவா? இவ்வாறு வழக் கொழிந்த தமிழ்ச் சொற்கள் பலவாகும். நம் நாட்டிற் செய்யப்படும் ஆடைகளைப் பயன்படுத்தாமல், பிறநாட்டு ஆடைகளைப் பயன்படுத்தினால், நம் நாட்டு நெசவுத் தொழில் நாளடைவில் நசிந்துவிடும். அதுபோலவே, நமது தாய்மொழிச் சொற்களை விட்டுவிட்டுப் பிறமொழிச் சொற்களை நாம் வழங்கி வருவோமாயின், தமிழ்ச் சொற்கள் நாளடைவில் வழக்கொழிந்து விடும். அதனால், தமிழ்மொழி வலிமை குன்றும்.[3]

தமிழ்ப் பாதுகாப்புப் படையின் தலைமைத் தளபதி

தொல்காப்பியர் தொட்ட தமிழ், வள்ளுவர் வளர்த்த தமிழ், சங்கப் புலவர்கள் சமைத்த தமிழ், இளங்கோ இயம்பி இசைகொண்ட தமிழ், வசைபெறாது வலுவினையும், பொலிவினையும் பெற, இவர் உணர்த்தி நிற்கும் வழிவகைகளைக் காத்து நிற்பது நம்மவரின் கடமையாகும்.

1. ஒரு பொருளை உணர்த்தத் தமிழில் சொல் இல்லாத பொழுதுதான் வேறொரு சொல்லைப் பயன்படுத்த வேண்டும் என்ற திடமான கொள்கை தமிழரிடம் இருத்தல் வேண்டும்.
2. தமிழ் மக்கள் தமிழ்ப் பெயர்களையே தங்கள் குழந்தைகளுக்கு இட்டு வழங்குதல் வேண்டும்.

3. புதிய தெருக்களுக்கும், புதிய நகரங்களுக்கும், தமிழ்ப் பெயர்கள் வழங்கப் பெறுதல் வேண்டும்.

4. கடைகளை உணர்த்தும் விளம்பரப் பலகைகள் தமிழ்ச் சொற்களைத் தாங்கியிருத்தல் வேண்டும்.

5. போக்குவரவு சாதனங்களான புகைவண்டி முதலியவற்றில் காணப்படும் அறிவிப்புகளும், புகைவண்டி நிலையங்களில் உள்ள அறிவிப்புகளும் பிழையற்ற தமிழில் எழுதப்படல் வேண்டும்.

6. புகைவண்டி நிலையங்களிலுள்ள மக்கள் ஒதுங்குமிடங்களில் 'ஸ்திரீகள்', 'புருஷர்கள்' என்று எழுதப்பட்டிருத்தல், 'பெண்கள்', 'ஆண்கள்' என்று மாற்றப்படல் வேண்டும்.

7. படக்காட்சி தயாரிக்குமிடங்களில் தமிழறிந்த புலவர்கள் அமர்த்தப் பெற்றுக் கதையும், உரைநடையும், பாடல்களும் பிழையற்ற, எளிய தமிழில் ஆக்கப்படல் வேண்டும்.

8. ஒவ்வோர் அச்சகத்திலும் தமிழ்ப் புலவரிருந்து எளிய தமிழ் நடையில் விளம்பரத் தாள்கள், நூல்கள் முதலியன அச்சிட்டு வெளிவரும்படி, கவனித்துக்கொள்ள ஏற்பாடு செய்யப்பெறுதல் வேண்டும்.

9. செய்தித்தாள்கள் எளிய - இனிய - தூய தமிழ் நடையில் வெளியிடப்படுதல் வரவேற்கத்தக்கது.

சமயத் துறையிலும் சங்கத் தமிழே முழங்குதல் வேண்டும் என்ற வேணவாவினராய் விளங்கினார் மா. இராச மாணிக்கனார். மணவினை முதல், வாழ்வில் நடைபெறும் எல்லா நிகழ்ச்சிகளிலும் தமிழே ஆட்சி புரிதல் வேண்டும் என்பதே இவரின் உள்ளக் கிடக்கையாகும். சுருங்கக்கூறின், 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ் எப்போதும் தமிழ்' என்ற கோட்பாடே அவரின் எண்ணத் தையும், எழுத்தையும் ஆட்கொண்டிருந்தது.

பல்துறையில் பைந்தமிழ்த் தொண்டு

பொதுவாகப் புலமை பொதிந்தோர் குறிப்பிட்ட யாதானும் ஒரு துறையில் நாட்டங் காட்டி, அறிவுத் தேட்டம் கூட்டிப் பெருமை சேர்த்திடுவர். முனைவர் இராச மாணிக்கனார் இப்பொதுவிதிக்கு விலக்கானவர். இவர் ஆற்றிய தமிழ்த் தொண்டு அளவால் அகன்றது; கருத்துச் செறிவால் ஆழமுடையது. இராசமாணிக்கனார் தமிழ் வளர்ச்சிக்குரிய துறைகளுள் எதுவும் தொடாததில்லை. இவர் நூல்களில் கருத்துக்கள் இல்லாதது எதுவுமில்லை; எதுவும் பொல்லாததில்லை. நம்மை இலக்கிய வீதியில் அழைத்துச் செல்லாததும் இல்லை. அவரின் எழுத்துக்களில் - வரலாறால் வளர்ந்தவை பல; கல்வெட்டாய்க் கிளர்ந்தவை பல; இலக்கியத் திறனாய்வாக மலர்ந்தவை பல; சொல்லாய்வாகச் சுடர்விட்டவை சில; சமயக் கருத்துக்களாகப் படர்ந்தவை பல; காலத்திற்கேற்ற கருத்துக்களாகக் கனிந்தவை சில.

வரலாற்றுத் துறையில் வரலாறு படைத்தவர்

இலக்கியமும் வரலாறும் நோக்காலும், போக்காலும் வேறுபட்டவை. வரலாறு எழுதுவோர்க்குக் கூர்த்த மதியும், குறைவில்லாத தெளிவும், பன்னூற் பயிற்சியும், ஆங்கிலம் போன்ற பிறமொழித் தேர்ச்சியும் மிகத் தேவையாகும். இத்திறன்களோடு - இலக்கியச் சுவையுணர்வும் இணையுமாயின், எழும் வரலாற்று நூல்களெல்லாம்

பயனுடையவாய் அமையும். இராசமாணிக்கனார் வரலாற்றாசிரியர் ஒருவருக்கு இருக்க வேண்டிய இயல்பூற்றமும் ஊக்கமும் உடையவராவார். வரலாற்றில் புனைந்துரைக்கோ, பொய்யுரைக்கோ இடமில்லையாதலால் வாய்மை வழுவாது செய்திகளைத் தருவதிலும், மறுக்க வேண்டியவற்றைத் தக்க சான்றுகளுடன் மறுத்துத் தம் கருத்தை வலியுறுத்து வதிலும், கால ஆய்வினைக் கணக்கற்ற மேற்கோள்களுடன் நிகழ்த்துவதிலும், இடையிடையே இலக்கிய நெறியில் செய்திகளுக்கு விளக்கம் வழங்குவதிலும் தேவைப்படு மிடங்களில் வரைபடங்களைப் பயன்படுத்துவதிலும் அவருக்கு நிகர் அவரே ஆவார்.

எச்செய்தியினையும் நுணுகி ஆராய்ந்து தெளிவாக வரையறுத்துச் சொல்வதில் அவர் வல்லவராய்த் திகழ்ந்தார். சான்று: "திருக்குறள் ஒழிந்த பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் பல்லவர் காலத்தில் செய்யப்பட்டனவே". 'சமுத்திரம்' என்னும் பெயருடன் இன்றுள்ள ஊர்களில் காணப்படும் குளங்கள் அல்லது ஏரிகள் விசயநகர வேந்தர் காலத்தவை எனலாம்.[4]

கற்றார் போற்றும் கல்வெட்டாய்வாளர்

கல்வெட்டுக்கள் காணப்பட்ட இடங்களுக்கு நேரே சென்று, கல்வெட்டுக்களைக் கண்டும் அவ்விடங்களில் உறைந்த தமிழ்ப் பெருமக்களுடன் கலந்துரையாடியும், கல்வெட்டிற் காணப்படும் செய்திகளை மிகைபடாமல் - தொகைப்படுத்தியும் - வகைப்படுத்தியும் வழங்கிய தமிழறிஞர்களின் வரிசையில் வைத்தெண்ணப்படும் தகுதி வாய்ந்தவராவார். இவரின் கல்வெட்டாய்வின் காரணமாகக் காஞ்சி கயிலாசநாதர் கோவில், காஞ்சி ஏகாம்பரர் திருக்கோவில், தமிழகத்து வட எல்லை போன்றவை பற்றிய அரிய செய்திகளைத் தமிழகம் அறிய முடிந்தது. 'குந்தவ்வை' என்னும் பெயர்க் காரணம் பெரிதும் தெரியலாயிற்று, 'சௌராஷ்டிரர்' இன வரலாறு சரியாகப் புரியலாயிற்று.

'இந்தியாவில் புதைபொருள் ஆராய்ச்சி' என்ற தலைப்பில் அமைந்த இவரின் நெடிய கட்டுரை, புதைபொருள் ஆராய்ச்சித் துறையில் இவருக்கு இருந்த பேரவாவினைப் புலப்படுத்தி நிற்கின்றது. இத்துறையில் இவர் காட்டிய ஆர்வம்தான் 'அரிக்க மேடு' என்ற புதையுண்ட நகரத்தின் பழைமை, வளமை, நாகரிகச் சிறப்பினையெல்லாம் கட்டுரை வாயிலாக வடித்துத் தர, இவருக்குப் பெருந்துணையாக நின்றது. 'இந்தியாவில் புதைபொருளாராய்ச்சி' எனும் கட்டுரையில், இறுதியாக நம்மவர்க்கு வேண்டுகோளாக இவர் விடுக்கும் செய்திகள் நினைவில் நிற்கத்தக்கன:

> இத்தகைய ஆராய்ச்சி மிக்க பயனுடையது. ஆயின், நம் நாட்டுச் செல்வர் இத்துறைகளில் ஊக்கம் காட்டுவதில்லை. மேலைநாட்டுச் செல்வர் இத்துறைகட்குப் பெரும் பொருள் உதவுகின்றனர். அம்மேனாட்டாரைப் போல நம் நாட்டுச் செல்வரும், அறிஞரும் இத்தகைய ஆராய்ச்சித் துறைகளில் ஆர்வம் காட்டிப் பொருளுதவி செய்து உழைப்பின், இயல்பாகப் பழம் பெருமைகொண்ட நம்நாடு, பலவகையான அற்புத விவரங்களை உலகத் தார்க்கு அறிவிக்கும் என்பதில் ஐயமில்லை அல்லவா?[5]

இராசமாணிக்கனாரின் இனிய இயல்புகள்

இராசமாணிக்கனார் ஆற்றிய தொண்டுகள் விரிக்கிற் பெருகும்; சுருக்கின் எஞ்சும். பேராசிரியர் ந.மு. வேங்கடசாமி நாட்டார்க்கு இராசமாணிக்கனார் வழங்கிய பாராட்டுரையை அவர் வரிகளிலேயே இவர்க்கும் படையலாக்கிப் பெருமையுறுவோம்.

இப்பெரியார் சிரிய ஒழுக்கமுடையவர்; ஒழுக்கத்தின் அவதாரம் எனக் கூறலாம்; உழைப்பாலுயர்ந்த பெரியவர்; தம்மீது பொறாமைப்பட்டாரையும் அன்பினால் அணைத்த உத்தமர்; புறங்கூறல் இவர்பால் கண்டதில்லை. இவர் எளிய செந்தமிழ் நடையிற் பேசும் வன்மை படைத்தவர்; சைவ சமயத்தில் அழுத்தமான பற்றுடையவர். தமிழர் - தமிழ் - தமிழ்நாடு இம் மூன்றின் நலத்திலும் கண்ணும் கருத்துமாய் இருந்தவர். இப்பெருமானுடைய நற்பண்புகளைப் பின்பற்றி வாழ்தலே உண்மைத் தமிழர்கள் கடமையாகும். இப்பேராசிரியர் புகழ் தமிழ் உள்ளவரை நின்றுநிலவும் என்பது உறுதி. இவரது நினைவு நாளை ஒவ்வொரு மாவட்டத்திலும் கொண்டாடுதல் நல்லது.[6]

அவர் எழுதிய புகழ் வரிகளையே ஆரமாக்கி அவருக்கு அணிவிப்போமாக! அவர் காட்டியமைந்த தமிழ்நெறியில் நிலைப்போமாக! தமிழன்னையின் பெருமை சிறக்கப் பணியாற்றத் துறைதோறும் துறைதோறும் துடித்தெழுவோமாக!

குறிப்புகள்

1. *தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும், 1964 (முதற்பதிப்பு), ப.58*
2. *தமிழ்மொழிச் செல்வம் (தமிழ் வளர்ச்சி), 1956 (முதற் பதிப்பு), பக்.105 - 106*
3. *மேலது, பக்.107 - 108*
4. *தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும், பக்.69, 79, 133*
5. *தமிழகப் புதையல், 1959 (முதற்பதிப்பு), ப.30*
6. *தமிழ் அமுதம் (நாட்டார் நற்பண்புகள்), 1962 (இரண்டாம் பதிப்பு), பக்.19 - 20*

❖ ❖ ❖

அறிஞர் மா. இராசமாணிக்கனாரின் ஆழ்வார்கள் கால ஆய்வு மாண்பு

இரா. குமரவேலன்

கால ஆய்வு

தமிழாய்ந்த அறிஞர் பெருமக்களுள் மிகவும் குறிப்பிடத் தக்கவர் முனைவர் மா. இராசமாணிக்கனார் ஆவார். பிறரெல்லாம் பண்டைத் தமிழ் நூல்களின் பாடல்களுக்கும் இலக்கண நூற்பாக் களுக்கும் விளக்கங்களைத் தருவதில் ஈடுபாடு காட்டினர். சிலர் உரை வரைந்தனர். இன்னும் சிலர் அவற்றின் வாயிலாகத் தமிழரின் பண்பாட்டின் சிறப்புகளை எடுத்துரைத்தனர். அகம், புறம் ஆகிய ஒழுக்கங்களின் மாண்புகளை விளக்கிக் காட்டினர். வேறு சிலர் தமிழரின் பண்டைப் பெருமைகளைத் தெருவெங்கும் முழங்கினர். அறிஞர் மா. இராசமாணிக்கனார் உள்ளிட்ட மிகச் சிலரே கால ஆய்வில் ஈடுபட்டுப் புதிய தடம் கண்டனர். அதன் விளைவாக ஏறத்தாழ ஐம்பதாண்டுகளாகத் தமிழார்வலர் தெளிவு பெற்று, அந்நூல்களின் காலப் பின்னணியோடு கற்று மகிழ்ந்தனர்.

இராசமாணிக்கத்தின் சொற்பொழிவுகள் மனத்தில் பதியக்கூடிய முறையில் இருக்கும். உள்ளத்தில் ஊன்றும்படி தேவையான இடங்களில் மீண்டும் மீண்டும் சொல்லிப் பதிய வைப்பார். அவர் சொன்ன செய்திகளைக் கேட்பவர்கள் சிந்திப்பர் அசைபோடுவர் வெறும் மனத்தோடு செல்லமாட்டார்கள்.

கீ. இராமலிங்கனார்

கெடுமதியினர்

தமிழின் பழம்பெருமைகளை உணர்ந்து தலைநிமிர்ந்து செம்மாந்து நிற்கும் நிலையைக் கண்ட கெடுமதியினர் சிலர் தமிழ் நூல்களின் கால வரையறைகளைத் தாம் கருதியவாறு மாற்றிக் கூற முனைந்தனர். வடமொழிப் பெருமையில் திளைத்த அவர்கள் தமிழ் நூல்களுள் பல அம்மொழி நூல்களிலிருந்தே வந்திருத்தல் வேண்டும் என்னும் கருத்தினை அடிப்படையாகக்கொண்டே அவற்றின் காலத்தையும் பொருளையும் விரித்துரைத்தனர். தமிழர்களுள் பலரும் அவர்தம் கூற்றை ஆராயாது உண்மையென நம்பினர். திருக்குறளின் மூன்று பகுதிகளும் வடமொழி மனுநீதி, அருத்த சாத்திரம், காம சாத்திரம் ஆகியவற்றிலிருந்த கருத்துகளை அடிப்படையாகக் கொண்டவை என்று பொய் கூறினர். இவ்வாறே ஒவ்வொரு நூல் பற்றியும் கூறி, அவற்றின் காலத்தையும் கருத்தையும் பின்னுக்குத் தள்ளினர். அக்கெடுமதியாளர்களின் கருத்துகளை நன்கு ஆராய்ந்து ஒவ்வொன்றற்கும் சான்றுகளோடு மறுப்புக் கூறித் தமிழர்க்குத் தெளிவுதந்தவர்கள் மிகச் சிலர். அவர்களுள் தலையாயவர் அறிஞர் மா. இராசமாணிக்கனார்.

ஆய்வின் தேவை

ஒரு நூலைக் கற்றுத் தேர்ச்சி பெற அது தோன்றிய காலம் பற்றியும் அதன் ஆசிரியர் பற்றியும், சூழல்கள் பற்றியும், ஒருவர்

அறிந்து கொள்வது இன்றியமையாதது ஆகும். இளங்கோவின் காலச் சூழலும், கம்பனின் காலச் சூழலும் வேறுபட்டவை. இவர்கள் படைத்த காலச் சூழலின் பின்னணியில் சிலம்பையும் இராமாயணத்தையும் ஆராய்ந்தால் தான் தெளிவு பிறக்கும். வான்மீகி இராமனை மனிதருள் ஒருவனாகக் கருதியபோது கம்பன் அவனைத் தெய்வமாகக் கருதித் தன் நூலைப் படைத்ததற்குக் கம்பன் ஆழ்வார்களுக்குப் பின்வந்ததுதானே காரணம். இந்த உண்மையை உணராவிட்டால் நூலின் தன்மையை உணர்ந்து மகிழ்தல் இயலுமா? எனவே தொல்காப்பியம் ஆனாலும், சங்கப் பாடல் ஆனாலும், பிற்காலத்துத் தனிப்பாடலே ஆனாலும் காலப் பின்னணியையும் அவை தோன்றிய சூழலையும் அறிந்துகொள்ளுதல் இன்றியமையாததாகும்.

இராசமாணிக்கனார் ஆய்வுகள்

அறிஞர் இராசமாணிக்கனார் அவர்கள் கால ஆய்வின் தேவையை நன்கு உணர்ந்தவர். எனவே தமிழ்நூல்களின் காலத்தையும், புலவர்களின் காலத்தையும் தெளிவாக ஆராய்ந்து வெளியிட்டுள்ளார். அவற்றை யாவரும் உணர்தற் பொருட்டு ஒரே நூலாகத் தொகுத்து 'கால ஆராய்ச்சி' என்னும் தலைப்பில் வெளியிட்டுள்ளார். இந் நூலில் புறநானூறு, தொல்காப்பியம், திருக்குறள், பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், கலித்தொகை, பரிபாடல் ஆகிய நூல்களின் காலத்தையும், சுந்தரர், சம்பந்தர், திருநாவுக் கரசர், மாணிக்கவாசகர், சேக்கிழார், கம்பர் ஆகியோரின் காலத்தையும் இனிது ஆராய்ந்து தெளிவுபடுத்தியுள்ளார் இராசமாணிக்கனார். அனைவரும் ஏற்கும் வகையில் ஐயம் திரிபறத் தம் முடிவுகளை ஆய்ந்து நிறுவியிருக்கிறார் அவர்.

ஆழ்வார் காலம்

இராசமாணிக்கனார் அவர்களின் கால ஆராய்ச்சி நூலில் இடம்பெறாதது, நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் பாடிய ஆழ்வார்களின் காலம் பற்றிய ஆய்வு. இதனை அவர் மறக்கவில்லை. மயிலை மாதவதாசன் 1950ஆம் ஆண்டில் வெளியிட்ட 'நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்' தொகுப்பில் 'ஆழ்வார்கள் காலம்' என்னும் தலைப்பில் அறிஞர் மா. ரா., அவர்களின் காலத்தை ஆராய்ந்து நிறுவியுள்ளார். மிகச் சுருக்கமாகவும், மிகத் தெளிவாகவும் இந்த ஆராய்ச்சி அமைந்துள்ளது.

ஆழ்வார்கள் பன்னிருவர்

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தை அருளியவர்கள் ஆழ்வார்கள் பன்னிருவர் ஆவர். ஆண்டாள் உள்ளிட்ட இப்பன்னிருவரின் அருளிச் செயல்கள் படித்துப் படித்து மகிழத் தக்கவை. மனத்திற்கு மகிழ்ச்சியையும், கருத்திற்குச் சுவையையும் அளிப்பவை. படிக்குந்தோறும், படிக்கப் பக்கம் நின்று கேட்குந்தோறும் இனிமை தருபவை. சைவர்க்கு உரிய திருமுறைகளைப் போல வைணவர்க்கு உரிய அருள்நூலாகப் பிரபந்தம் விளங்குகிறது.

பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார், தொண்டரடிப்பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார் ஆகிய ஆழ்வார்கள் பதின்மரோடு, மதுரகவி யாழ்வார், ஆண்டாள் ஆகியோரைச் சேர்த்துப் பன்னிருவராகக் கருதுவது மரபு.

ஆதாரங்கள்

ஆழ்வார்களைப் பற்றி அறிதற்குத் துணைநிற்கும் நூல்கள் சில.

1. ஆழ்வார் பாடல் அகச் சான்றுகள்

2. கருடவாகன பண்டிதரின் வடமொழி நூல் 'திவ்விய சூரி சரிதம்'

3. பின்பழகராம் பெருமாள் ஜீயர் அருளிய ஆறாயிரப்படி 'குருபரம்பரா பிரபாவம்'

4. மணவாள மாமுனிகளின் 'உபதேச ரத்ன மாலை'

5. வேதாந்த தேசிகரின் 'தேசிகப் பிரபந்தம்'

6. பிரம்ம தந்திர சுதந்திர ஜீயர் மூவாயிரப்படி 'குருபரம்பரா பிரபாவம்'

7. கல்வெட்டுகள்

8. பிற வரலாற்று ஆதாரங்கள்

முதலியன. இவற்றுள் பல நம்புதற்குரிய ஆதாரங்களாக அமையவில்லை. எனவே, அறிஞர்கள் சிலர் ஆய்ந்து எழுதியுள்ள நூல்கள் நமக்குத் துணைநிற்கின்றன.

குருபரம்பரா பிரபாவம்

ஆழ்வார்கள் வாழ்ந்த காலம் பற்றி மூவாயிரப்படி குருபரம்பரை கூறும் கருத்துகள் நம்புதற்கு உரியன அல்ல. ஆழ்வார்களுள் முதலாழ்வார்கள் மூவரும், திருமழிசை யாழ்வாரும், மதுரகவி யாழ்வாரும் துவாபர யுகம் சார்ந்தவர்களாகவும், ஏனையோர் கலி யுகம் சார்ந்தவர்களாகவும் குறிப்பிடுகிறது. அந்நூலின் கருத்துப்படி,

முதலாழ்வார்கள், திருமழிசையாழ்வார்	- கி. மு. 4202
மதுரகவியாழ்வார்	- கி. மு. 3224
நம்மாழ்வார்	- கி. மு. 3102
குலசேகராழ்வார்	- கி. மு. 3075
பெரியாழ்வார்	- கி. மு. 3056
ஆண்டாள்	- கி. மு. 3005
தொண்டரடிப்பொடியாழ்வார்	- கி. மு. 2814
திருப்பாணாழ்வார்	- கி. மு. 2760
திருமங்கையாழ்வார்	- கி. மு. 2714

ஆகியன இவ்வாழ்வார்களின் பிறந்த ஆண்டுகள் ஆகும். சமய வரலாற்றின்படியும், சமுதாய வரலாற்றின்படியும், இலக்கிய வரலாற்றின்படியும் இந்தக் காலக் கணிப்புகள் ஏற்கத்தக்கனவல்ல என்பது வெளிப்படை. எனவே, பின்வந்த எந்த ஆராய்ச்சியாளரும் இதன் அடிப்படையில் கால ஆராய்ச்சியினை மேற்கொள்ளவில்லை. குருபரம்பரையின் படி மதுரகவியாரும் நம்மாழ்வாரும் காலத்தால் முந்தியவராகவும், திருமங்கையாழ்வார் முதலானோர் மிகப் பிந்தியவராகவும் காணப்படுகின்றனர்.

முறை வைப்பு

ஆழ்வார்களை வரிசைப்படுத்துவதிலும் ஓர் ஒழுங்கான வரைமுறையில்லை. அனைத்து நூல்களும் பொய்கையார், பூதத்தார், பேயார் ஆகிய முதலாழ்வார்கள் மூவரையும் முதலில் வைத்துப் பேசுகின்றன. ஆயின் ஏனையோரை மாற்றி மாற்றிக் குறிக்கின்றன.

உபதேச ரத்தின மாலை பொய்கையார், பூதத்தார், பேயார், திருமழிசையார், நம்மாழ்வார், குலசேகரர், பெரியாழ்வார், தொண்டரடிப்பொடியார், பாணாழ்வார், திருமங்கையார் என வரிசைப்படுத்துகிறது.

இராமாநுச நூற்றந்தாதி பொய்கையார், பூதத்தார், பேயார், பாணாழ்வார், திருமழிசையார், தொண்டரடிப் பொடியார், குலசேகரர், பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கையார், நம்மாழ்வார், மதுரகவியார் என வரிசைப்படுத்துகிறது.

திவ்விய சூரி சரிதம் அனைவரையும் சமகாலத்தவர் என்று கூறுகிறது.

இராசமாணிக்கனார் பொய்கையார், பேயார், பூதத்தார், திருமழிசையார், திருமங்கையாழ்வார், தொண்டரடிப்பொடியார், திருப்பாணாழ்வார், குலசேகரர், பெரியாழ்வார், ஆண்டாள், நம்மாழ்வார், மதுரகவியார் எனக் காலத்தின் அடிப்படையில் முறைசெய்துள்ளார்.

ஆழ்வார் கால ஆய்வு

ஆழ்வார் காலத்தை அறிஞர் பலர் ஆய்ந்துள்ளனர். பி. டி. சீனிவாச ஐயங்கார், டி. ஏ. கோபிநாத ராவ், எஸ். கிருட்டிணசாமி ஐயங்கார் முதலானவர்கள் அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள். அவர்களையடுத்து, மு. இராகவையங்கார் 'ஆழ்வார்கள் கால நிலை' என்னும் ஆய்வு நூலை இயற்றி அவர்கள் காலத்தை ஒருவாறு உறுதிசெய்தார்.

பின்னர், கால ஆய்வில் ஒப்பாரும் மிக்காரும் இன்றிச் சிறந்து விளங்கும் இராச மாணிக்கனாரின் ஆய்வுக் கட்டுரை ஆழ்வார்களின் காலத்தை உறுதி செய்து நிலைநாட்டுகிறது.

அனைத்து ஆசிரியர்களும் ஆழ்வார்களின் கால எல்லையைக் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து பத்தாம் நூற்றாண்டுக்குள் வரையறை செய்கின்றனர்.

நாதமுனிகள்

ஆழ்வார்கள் கால ஆய்விற்கு முன் அவர்கள் அருளிச் செயல்களைத் தொகுத்த நாதமுனிகளின் காலத்தைத் தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டும். சைவத்திற்கு ஒரு நம்பியாண்டார் நம்பி போல வைணவத்திற்கு நாதமுனிகள் விளங்கினார்.

நாதமுனிகள் கங்கை கொண்ட சோழபுரத்தில் காலமானார் என்பது வரலாற்றுக் குறிப்பு. கங்கை கொண்ட சோழபுரமோ முதலாம் இராசேந்திரனால் கி. பி. 1024ஆம் ஆண்டிற்குப் பிறகு கட்டப்பட்டது. நாதமுனிகளின் பெயரர் ஆளவந்தார். அவரது முதுமைக் காலத்தில் இராமாநுசர் இளைஞராக இருந்தார். அவர் திருநாடு அலங்கரித்த காலம் கி. பி. 1137. எனவே நாதமுனிகள் வாழ்ந்த காலம் கி. பி. பத்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியும் பதினோராம் நூற்றாண்டின் முற்பகுதியும் ஆகும் என்பது மா. இராச மாணிக்கனார் அவர்களின் முடிவு.

ஆனால் மு. இராகவையங்கார் நாதமுனிகள் கி.பி. 823இல் தோன்றி 918இல் மறைந்ததாகக் குறிப்பிடுவர் (ஆழ்வார்கள் கால நிலை, ப. 20).

மா. இராசமாணிக்கனார் இதில் உள்ள பிழையைச் சுட்டிக்காட்டுகிறார். ஆழ்வார் களுக்குப் பின்னர் நெடுங்காலம் கழித்து, மதுரகவியாழ்வார் பரம்பரையில் திருக்குருகூரில் பராங்குசதாசர் என்பவர் இருந்தார். அவர் காலத்தில் வீரநாராயணபுரத்தில் வாழ்ந்தவர் நாத முனிகள். வீரநாராயணன் என்பது முதற்பராந்தக சோழன் பெயர்களுள் ஒன்று. அவன் காலம் 907 - 953. எனவே அவனது காலத்திலேயோ, அவனுக்குப் பின்னரோதான் நாதமுனிகள் வாழ்ந்திருக்க வேண்டும். எனவே, அவர் காலம் மு. இராகவையங்கார் அவர்கள் கருத்துப்படி ஒன்பதாம் நூற்றாண்டு அன்று. 10 - 11ஆம் நூற்றாண்டு என்பதே பொருத்தம்.

'அப்பேரறிஞரே கலைக்களஞ்சியத்தில் (தொகுதி 6, ப. 293) நாதமுனிகள் கி.பி. பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்று எழுதியுள்ளார்' என்று குறிப்பிடுவதோடு, 'ஆராய்ச்சி மிக மிக, இங்ஙனம் புதிய உண்மைகள் வெளிப்படல் இயல்பு என்பதற்கு இஃது ஏற்ற சான்றாகும்' என்றும் தெளிவுபடுத்துகிறார்.

இதன் மூலம் ஆழ்வார்களின் காலம் நாதமுனிகளின் காலத்திற்கு, அதாவது ஒன்பதாம் நூற்றாண்டிற்கு முந்தியது என்பதற்கு மாறாக, பத்தாம் நூற்றாண்டிற்கு முந்தியது என்னும் உண்மை புலப்படுகிறது.

முதலாழ்வார்கள்

பொய்கையார், பூதத்தார், பேயார் ஆகிய மூவரும் முதலாழ்வார்கள் ஆவர். இவர்கள் மற்றவர்களை விடக் காலத்தால் முற்பட்டவர்கள். இவர்களுள் பூதத்தாழ்வார் மாமல்லையில் பிறந்ததாக அறிகிறோம்.

மாமல்ல கோவல் மதிட்குடந்தை என்பரே
ஏவல்ல எந்தைக் கிடம் (2-70)

என்கிறார் பூதத்தார் தம் பாடல் ஒன்றில். இதில் காணப்படும் மாமல்லை என்பது 'மாமல்லபுரம்' என்பதன் மரூஉ. மகாமல்லபுரம், மாமல்லபுரம், மாமல்லை, கடல்மல்லை, மல்லை என இவ்வூர் வழங்கப்படுவதுண்டு.

மாமல்லை என்னும் பெயர் சங்க காலத்தில் இல்லை. அதன் பின்னரும் பல்லவர் ஆட்சிக் காலம் வரை அப்பெயர் வழங்கப்படவில்லை. கி. பி. 630 - 668 வரை வாழ்ந்த முதலாம் நரசிம்மவர்மனது காலத்தில் அம்மன்னன் சாளுக்கியனான இரண்டாம் புலிகேசியை வென்றதால் 'மகாமல்லன்' அல்லது 'மாமல்லன்' எனப்பட்டான். அவன் மல்லை நகரைப் புதுப்பித்துத் தன்பெயரால் மாமல்லபுரம் என வழங்கினான்.

மாமல்லபுரத்து ஆதிவராகர் கோயிலில் சிம்ம விஷ்ணு (575 - 600), மகேந்திரன் (600 - 630) ஆகியோரின் சிலைகள் உள்ளன. பூதத்தார் இக்கோயிலையே பாடியுள்ளார். எனவே அவர் காலம் ஏறத்தாழ 575 - 600 என்பது பொருத்தமாகிறது. ஆயினும், மாமல்லன் என்பது முதலாம் நரசிம்மன் பெயர் ஆதலானும், அவனுக்குப் பின்னரே அந்நகர் 'மாமல்லை' எனப்பட்டது என்பதாலும் முதலாழ்வார்கள் மூவரும் மகேந்திரன் காலத்திற்குப் பின் பல்லவ நாட்டை ஆண்ட நரசிம்மன் (630 - 668) காலத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர் என்னும் கருத்து உறுதியாகிறது. இந்த முடிவிற்கு வரும் மா. இராச மாணிக்கனார் 'மாமல்லை என்பதைக் குறிப்பிட்ட பூதத்தாழ்வார் மகாமல்லன் காலத்திற்குப் பின்பே வாழ்ந்திருத்தல் வேண்டும்' என்னும் டி.ஏ. கோபிநாத ராயர் கருத்தைச் சுட்டுகிறார்.

மா.இராசமாணிக்கனார் இவ்வாறு முதலாழ்வார்கள் மூவரையும் ஏழாம் நூற்றாண்டினர் என்று அறுதியிட்டுக் கூறுகிறார். ஆனால், மு. இராகவையங்கார் இவர்களை ஐந்து அல்லது ஆறாம் நூற்றாண்டினர் என்பர். சங்க காலத்திலிருந்தே மல்லை இருந்தது என்பதும், சிறுபாணாற்றுப்படை இந்நகரையே பேசுகிறது என்றும், ஆதிவராகர் கோயிலில் சிம்ம விஷ்ணு, மகேந்திரவர்மன் சிலைகள் இருப்பதால் மல்லை பழைய நகரம் ஆகும் என்றும், அந்நகரைப் புதுப்பித்தவனாகிய மாமல்லன் என்னும் நரசிம்மன் பெயரைக் கொண்டது என்று கொள்வது தவறு என்றும், மல்லல் - வளம் என்னும் பொருளாலேயே இந்நகர் மல்லை எனப் பெயர்பெற்றது என்றும் கூறிப் பூதத் தாழ்வார் நரசிம்மனுக்கு முந்தியவர் என்று கருதுவர் மு. இராகவையங்கார்.

இதனை மேற்கண்டவாறு மா. இராசமாணிக்கனார் மறுத்திருக்கிறார்.

பொய்கையார்

யாப்பருங்கல விருத்தியில் மேற்கோளாகக் காட்டப்பெறும் 'பொய்கை வாக்கு' ஆகிய இரண்டு வெண்பாக்களும் பொய்கையாழ்வாரால் பாடப்பெற்றன என்று கருதுவர் மு. இராகவையங்கார். இவை ஆரிடச் செய்யுள்கள், ஆழ்வாரது முதல் திருவந்தாதியில் உள்ளன. எனவே, இருடியாகிய அப்பொய்கையாரும் ஆழ்வாராகிய பொய்கையாரும் ஒருவரே என்பது அவர் கருத்து. அது மட்டுமன்றி, களவழி நாற்பது பாடிய பொய்கையாரும் இவரே என்றும் கூறுகிறார்.

போரிற் பிடிக்கப்பட்ட சேரனைச் சிறை நீக்கி உய்விப்பதற்காகச் சோழன் கோச்செங்கணானைக் களவழி நாற்பது என்ற நூலாற் புகழ்ந்த பொய்கையார்

> மேற்கூறிய தமிழ் முனிவரான பொய்கையாழ்வாராகவே இருத்தல் கூடும் என்பது என் கருத்து (ப. 27)

என்பர் மு. இராகவையங்கார். பாடல்கள் அனைத்தும் வெண்பா யாப்பில் அமைந்தவை என்பது மட்டுமே ஒற்றுமை. மற்றபடி இவர் கருத்து முழுவதும் தள்ளத்தக்கது என்று கருதி, மா. இராசமாணிக்கனார் அவர்கள் மறுப்புரை எழுதாமல் விட்டார். பின்வரும் அடிக்குறிப்பு மட்டுமே தருகிறார்.

> முதலாழ்வார் மூவரும் 1. வெண்பா யாப்பிற் பாடினர் 2. பிற சமயக் கண்டனம் பேசிலர். இதனால், சமயப் போராட்டம் நிகழ்ந்த கி. பி. ஏழாம் நூற்றாண்டுக்கு முற்பட்டவராயிருத்தல் வேண்டும் என்று அறிஞர் கூறுவர்.
>
> 1. கி. பி. 9ஆம் நூற்றாண்டில் பாரதம் வெண்பாவால் பாடப்பட்டது. கி. பி. 13ஆம் நூற்றாண்டில் நளன் வரலாறு புகழேந்தியால் வெண்பாவால் பாடப்பட்டது. எனவே, வெண்பா யாப்பு காலத்தைக் குறிப்பதன்று.
>
> 2. பெரியாழ்வார் பாக்களில் பிற சமயக் கண்டனம் இல்லையே. ஆதலால் அவரும் முதலாழ்வார் காலத்தவர் என்று கூறலாமா? எனவே, இவை கொண்டு காலத்தைக் கணக்கிடல் பொருத்தமாகாது

என்பது மா. இராசமாணிக்கனாரின் கருத்து.

திருமழிசையாழ்வார்

அடுத்தவர் திருமழிசையாழ்வார். இவர் முதலாழ்வார்கள் மூவரையும் திருவல்லிக் கேணியில் சந்தித்துப் பேசியதாக வரலாறு கூறுகிறது. ஆனால், ஏனைய மூவரின் பாடல்களில் இல்லாத பிற சமயக் கண்டனம் திருமழிசையாரின் பாடலில் இடம் பெற்றுள்ளது. அது மட்டுமல்லாமல் இவர் நீண்ட நாள் வாழ்ந்தவர் என்பதனால் அம்மூவருக்குப் பின்னரும் இவர் வாழ்ந்திருத்தல் வேண்டும்.

முதலாம் மகேந்திரவர்மன்	-	கி. பி. 600 - 630
முதலாம் நரசிம்மவர்மன்	-	கி. பி. 630 - 668
இரண்டாம் மகேந்திரவர்மன்	-	கி. பி. 668 - 670
முதலாம் பரமேசுவரன்	-	கி. பி. 670 - 680
இராசசிம்மன்	-	கி. பி. 680 - 730

இந்தப் பல்லவ மன்னர்களுள் இறுதி மூவரும் சிறந்த சிவனடியார்களாய் விளங்கினர்.

முதலாம் நரசிம்மன் காலத்தில் 642இல் சாளுக்கியரின் தலைநகராகிய வாதாபிமீது படையெடுப்பு நிகழ்ந்தது. அடுத்து முதலாம் பரமேசுவரன் காலத்தில் 672ஆம் ஆண்டில் மீண்டும் ஒரு படையெடுப்பு நடந்தது.

திருஞானசம்பந்தர் காலத்தைச் சேர்ந்தவரான சிறுத்தொண்டர் முதலில் பரஞ்சோதி என்னும் பெயரில் பல்லவர் படைத்தளபதியாக விளங்கியவர். இவர் வாதாபி போரில் பங்கெடுத்துக் கொண்டவர். முதற் படையெடுப்பில் இரண்டாம் புலிகேசி தோல்வி அடைந்தான். பின்னர் முதலாம் விக்கிரமாதித்தன் பல்லவரை வென்று உறையூரில் தங்கியிருந்தான்.அவனை விரட்டுவதற்காக இரண்டாம் படையெடுப்பு நடைபெற்றது. சேக்கிழார் இதனையே குறித்திருக்க வேண்டும் என்று கருதும் மா. இராச மாணிக்கனார் அக்காலத்து மன்னன் முதலாம் பரமேசுவரன் என்னும் சிவனடியார் ஆவான். இத்தகைய சைவ அரசனிடமே சைவ அடியாரான சிறுத்தொண்டர் படைத் தலைவராய் இருந்திருக்கவேண்டும் என்று கூறுகிறார்.

திருஞானசம்பந்தர் சமண, பௌத்தரோடு வாதம் புரிந்து வென்றவர். திருமழிசை யாழ்வாரும் புறச் சமயங்களை வன்மையாகக் கண்டித்தவர். காஞ்சியிலிருந்து கணி கண்ணரை வெளியேற்றிய காலம் வைணவனாகிய முதலாம் நரசிம்மன் காலத்தில் நடந்திருக்க வாய்ப்பில்லை. சைவ மன்னன் முதலாம் பரமேசுவரன் காலத்தில் நடந்திருக்கலாம்.

எனவே, முதலாழ்வார்கள் மூவரும் முதலாம்நரசிம்மன் காலத்திலும், திருமழிசை யாழ்வார் நரசிம்மன் காலத்திலும், அவனுக்குப் பின்னரும் வாழ்ந்திருக்க வேண்டும், என்பர் மா. இராசமாணிக்கனார்.

ஆனால், மு. இராகவையங்கார் திருமழிசையார் முதலாம் மகேந்திரன் காலத்தவன் என்பர் (618 - 642). முதலாழ்வார் மூவரும் சமய வாதம் செய்யாதவர்கள். திருமழிசையாரோ,

> அறியார் சமணர் அயர்த்தார் பவுத்தர்
> சிறியார் சிவப்பட்டார் செப்பின் - வெறியாய
> மாயவனை மாலவனை மாதவனை ஏத்தாதார்
> ஈனவரே ஆதலால் இன்று

என்று நான்முகன் திருவந்தாதியில் (6) பாடுவர். மகேந்திரன் திருநாவுக்கரசரால் சைவம் சார்ந்தவன். ஆயினும் பிற மதங்களை வெறுத்தவன் அல்லன். இவன் தந்தையும் இவன் மகனும் பரம வைணவர்கள் ஆவர். மகேந்திரன் ஆட்சிபுரிந்த ஏழாம் நூற்றாண்டின் தொடக்கம் திருமழிசையாரது வாழ்நாளின் பிற்பகுதி ஆகலாம் என்று மு. இராக வையங்கார் கூறுவர்.

பல்லவர் காலம் சமயம் தழைத்தோங்கிய காலம். சைவமும் வைணவமும் மக்கள் இடையே செல்வாக்குப் பெற்றிருந்தன. சமணமும் பௌத்தமும் தமிழகத்தில் வளராத வாறு இவை தடையாயிருந்தன. பல்லவ மன்னர்களுள் சிலர் சைவம் சார்ந்தவராகவும் சிலர் வைணவம் சார்ந்தவராகவும் இருந்தனர். சமயச் சான்றோர்களும் ஓரளவு ஒற்றுமையுடன் இருந்தனர். அப்பரும் சம்பந்தரும் ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த பெருமக்கள். திருமழிசை யாழ்வாரும் இந்தக் காலத்தவரே என்பது அவர் வரலாற்றால் அறியப்படுகிறது.

திருமழிசையாரின் நான்காம் திருவந்தாதியில் 'கொடுத்தளித்த கோனே குண பரனே' என்னும் தொடர் வருகிறது. இதில் வரும் குணபரன் என்னும் பெயர் முதல் மகேந்திரவர்மனுக்கு உரியது. எனவே, இவ்வாழ்வார் அவனது ஆட்சிக் காலத்தில் (618 - 642) வாழ்ந்தவர் என்பது உறுதியாகிறது. இது ஆழ்வார் வாழ்நாளின் பிற்பகுதி என்பது மு. இராகவையங்கார் கருத்து. மகேந்திரன் தந்தையும் மகனும் திருமால் அடியார்கள் என்பது தெளிவு. ஆனால் மகேந்திரன் சிவநெறி சார்ந்தவன். இருப்பினும் பிற வைதிக சமயங்களை வெறுத்தவன் அல்லன். மகேந்திரவாடியில் திருமால் கோயிலொன்றைக் கட்டியவன் இவன். மல்லையின் ஆதிவராகர் சந்நிதியில் இவனது உருவச் சிலை உள்ளது. எனவே, இவன் காலத்தில் ஆழ்வார் இருந்தனர் என்பது ஏற்கத் தக்கது. இதன் அடிப்படையில் மு. இராகவையங்கார் அவர்கள் 'அதனால் இப்பெரியார் 6, 7ஆம் நூற்றாண்டுகளின் பின்முன் பகுதிகளிலும், இவர்க்கு மூத்தவர்களும் முக்காலமும் உணர்ந்த இருடிகளுமான முதலாழ்வார் மூவரும் 5, 6ஆம் நூற்றாண்டுகளின் பின்முன் பகுதிகளிலும் எழுந்தருளியிருந்தவர்கள்' என்று கூறுகிறார். இதனை மா. இராச மாணிக்கனார் அவர்கள் ஏற்கவில்லை.

திருஞானசம்பந்தரைப் போலச் சமண, பௌத்த சமயங்களைச் சாடியவர் திருமழிசையார். இருவரும் சம காலத்தவர். சம்பந்தர் காலத்தில் சிறுத்தொண்டர்

வாழ்ந்தார். திருச்செங்கட்டாங்குடியில் சம்பந்தர் அவரைச் சந்தித்தார் என்று பெரிய புராணம் சுட்டுகிறது. சிறுத்தொண்டரின் இன்னொரு பெயர் பரஞ்சோதி. இவர் வாதாபி மீது பல்லவன் படையெடுத்தபோது தலைமை தாங்கியவர். முதலாம் நரசிம்மவர்மன் காலத்தில் 642இல் வாதாபிமீது ஒரு படையெடுப்பு நிகழ்ந்தது. பின்னர் முதலாம் பரமேசுவரவர்மன் காலத்தில் 672இல் வாதாபிமீது இரண்டாம் முறை படையெடுப்பு நடந்தது. பரஞ்சோதியார் முதற்படையெடுப்பில் கலந்துகொண்டிருக்கலாம் என்று கோபாலன், சத்தியநாதய்யர் முதலான அறிஞர்களும் இரண்டாம் படையெடுப்பில் கலந்துகொண்டிருக்கலாம் என்று மு. இராகவையங்காரும் கருதுகின்றனர். மா. இராசமாணிக்கனார் அவர்கள் பரஞ்சோதியார் முதலாம் பரமேசுவரவர்மன் படையெடுப்பில் கலந்துகொண்டிருக்கவேண்டும் என்று வரலாறு, பட்டயம், கல்வெட்டு ஆகியவற்றின் துணையோடு முடிவு காண்கிறார். எனவே, சம்பந்தர் பரஞ்சோதியார் திருமழிசையார் காலம் இம்மன்னனுடைய காலம் என்பது அவர் கருத்து. நீண்ட காலம் வாழ்ந்தவர் திருமழிசையார் ஆதலின் அவர் முதலாம் பரமேசுவரன் காலத்தில் மட்டுமன்றி அவனுக்குப் பின்வந்த இராசசிம்மன் காலத்திலும் வாழ்ந்திருத்தல் வேண்டும் என்கிறார் மா. இராசமாணிக்கனார்.

மு. இராகவையங்கார் அவர்கள் யாப்பருங்கல விருத்திகாரர் குறிப்பிட்டுள்ள குடமூக்கிற்பகவர் இவரே என்றும், அவர் இயற்றியதாகச் சொல்லப்படும் 'வாசுதேவனார் சித்தமே' திருமழிசையாரின் திருச்சந்த விருத்தம் என்றும் கருதுகிறார். குடமூக்கு என்பது கும்பகோணம். திருமழிசையார் கும்பகோணத்துத் திருமாலைப் போற்றிப் பாடிய சில பாடல்கள் திருச்சந்த விருத்தத்தில் (56 - 61) இடம்பெற்றுள்ளன. இதனால் இருவரும் ஒருவரே என்னும் முடிவுக்கு அவர் வருகிறார். மா. இராசமாணிக்கனார் அவர்கள். இதனை முற்றிலுமாகப் புறக்கணித்துவிடுகிறார். யாரோ ஒரு யோகி ஏதோ ஒரு பெயரில் எழுதிய ஆரிட நூலை ஆழ்வார் பெயரில் சார்த்திச் சொல்வது பொருந்தாது என்பது அவர் கருத்து.

திருமங்கையாழ்வார்

'பல்லவன் பணிந்த பரமேச்சுர விண்ணகரம்' என்றும், 'மன்னவன் தொண்டையர் கோன்வணங்கும் நீண்முடி மாலைவயிர மேகன் தன்வலி தன்புகழ் சூழ்ந்த கஞ்சி அட்டபுயகரத்து' என்றும் திருமங்கையாழ்வார் தம் பாடல்களில் இரண்டு மன்னர்களைக் குறிப்பிடுகிறார். முதலாவது 'பரமேச்சுவரன்' என்பவன்; மற்றொருவன் வயிரமேகன் என்பவன்.

இதில் பரமேச்சுரன் என்னும் பல்லவ மன்னனுக்கு நந்திவர்மன் என்ற பெயரும், வேறொரு பாடலில் 'நந்தி பணி செய்த நகர் நந்திபுர விண்ணகரம்' என்று இவர் பாடியுள்ளார். இவனே காஞ்சியில் பரமேச்சுர விண்ணகரம் எனப்படும் வைகுந்தப் பெருமாள் கோயிலை உருவாக்கினவன்.

தந்தி துர்க்கன் (752 - 756) என்னும் இராட்டிரகூட மன்னன் தன் மகள் ரேவா என்பாளை இவனுக்கு மணம் செய்வித்தான். அவளுக்குப் பிறந்தவனே தந்திவர்மன் (795 - 845). தந்தி துர்க்கனுக்கு வயிரமேகன் என்னும் பெயருமுண்டு. இந்த இராட்டிரகூடன் சாளுக்கியனை ஒழிப்பதற்காகப் பல்லவர் துணைவேண்டித் தன் மகளைக் கொடுத்து உறவு கொண்டான். இவனை நேரிற்கண்டு மகிழ்ந்த ஆழ்வார் தம் பாடலில் 'வயிரமேகன்' என்னும் இவன் பெயரைப் பொறித்துள்ளார். கோபிநாத ராவ் கூறுவது போல வயிரமேகன் என்னும் பெயர் தந்திவர்ம பல்லவனைக் குறிக்காது. தந்தி துர்க்கன் காஞ்சி வந்த ஆண்டு 753 - 754 ஆக இருக்கலாம். ஆழ்வார் மேற்கண்ட பதிகத்தைப் பாடிய ஆண்டு 754 என்பதே பொருத்தம். எனவே, பரமேசுவரன் என்னும் தந்திவர்மன் காலத்தை (731 - 795) ஒட்டி வாழ்ந்தவர் திருமங்கையாழ்வார் எனலாம் என்று கருதுவர் மா. இராசமாணிக்கனார்.

திருமங்கையாழ்வார் காலத்தை இவ்வாறு எளிதாக முடிவு செய்கிறார் அறிஞர் மா. இராசமாணிக்கனார். ஆயின், மு. இராகவையங்கார் ஏறத்தாழ 70 பக்கங்களில் இவரது கால ஆய்வினை நிகழ்த்துகிறார். இதில், 1) சம்பந்தர் வாழ்ந்த ஏழாம் நூற்றாண்டின் பிற்பகுதியும் பெரியாழ்வார் வாழ்ந்த எட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியும் திருமங்கை மன்னன் காலம் என்றும், 2) பரமேச்சுரன் என்னும் பிள்ளைத் திருநாமம் கொண்ட பல்லவ மல்லன் என்னும் நந்திவர்மன், தன் முதற்பெயரால் பரமேச்சுர விண்ணகரத்தைக் கட்டிப் பிரதிட்டித்தான் என்றும், 3) இராட்டிரகூட மன்னன் தந்தி துர்க்கனுக்கு (753 - 754) வயிரமேகன் என்னும் பெயருண்டு என்றும், அவன் காலத்துப் பல்லவன் நந்திவர்மன் (715 - 780) என்றும், அவன் காலத்தில் ஆழ்வார் (754) அட்டபுயகரப் பதிகத்தை அருளினார் என்றும், 4) திருநாவுக்கரசர் (600 - 681), திருஞானசம்பந்தர் (670 - 686) காலமாகிய ஏழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் திருமங்கையாழ்வார் வாழ்ந்தார் என்றும், (5) நெல்வேலி வென்ற நெடுமாறன் என்னும் பாண்டியன், கோச்செங்கணான் என்னும் சோழன், பெரும்பிடுகு என்னும் முத்தரையன், பல்லவர்க்குச் சிற்றரசர்களாய் இருந்து செயல்பட்ட மலையமான் ஆகியோரின் வரலாற்றுக் குறிப்புகள் ஆழ்வாரின் பாசுரங்களில் குறிக்கப்பட்டிருக்கிறது என்றும், 6) ஆழ்வார் தம்மைப் 'பப்பவப்பர்' என்று முதுமை காரணமாகப் பாசுரத்தில் குறித்துக் கொண்டார் என்றும், 7) சுந்தரர் குறிக்கும் காடவர்கோன் என்பவன் இரண்டாம் நரசிம்மவர்மனே என்றும், அவனால் நிறுவப்பட்ட ஆலயமே தலசயனப் பெருமாள் திருக்கோயில் என்றும், 8) சாசனங்கள் பல இவரது காலத்தை உறுதிசெய்யத் துணைநிற்கிறது என்றும் பல செய்திகளை விரிவாகக் கூறி, இறுதியில் 'திருமங்கையாழ்வார் 7ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அவதரித்து, 8ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் திருநாடு அலங்கரித்தவர்' என்று விளக்குகிறார்.

தொண்டரடிப்பொடி, திருப்பாணர், குலசேகரர்

திருமங்கையாழ்வார் திருவரங்கத்தில் கோயிலைக் கட்டித் தொண்டு செய்தகாலை உடனிருந்தவர் தொண்டரடிப்பொடியாழ்வார் என்கிறது குருபரம்பரை.

'நுமர்களைப் பழிப்பா ராகில் அவர்கடாம் புலையர் போலும்' என்று தொண டரடிப் பொடியார் பாடுவதால், அவர் குறித்தது திருப்பாணாழ்வாரையே என்பதனை உட்கொண்டு இருவரும் ஒரு காலத்தவர் என்னும் முடிவுக்கு வரலாம்.

குலசேகராழ்வார் தம் பெருமாள் திருமொழிப் பாடல் ஒன்றில் 'ஆடிப் பாடி யரங்கவோ என்று அழைக்கும் தொண்டர் அடிப்பொடி' என்கிறார்.

இவை அனைத்தையும் இணைத்துப் பார்த்தால், 'திவ்விய சூரி சரிதம்' கூறுவது போலத் திருமங்கை யாழ்வார், தொண்டரடிப்பொடியாழ்வார், குலசேகர ஆழ்வார், திருப்பாணாழ்வார் ஆகியோர் சமகாலத்தவர் என்பது புலப்படும். இவர்கள் அனைவரும் எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சேர்ந்தவர்கள் ஆவர் என்பது இராச மாணிக்கனார் கருத்து.

மு. இராகவையங்கார் இவ்வாழ்வார்கள் பல்லவ மல்லன் காலத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், நால்வரும் சம காலத்தவர்களே என்றும் கருதுவர்.

பெரியாழ்வார்

திருவில்லிப்புத்தூரின்கண் வேயர் குலத்தில் தோன்றியவர் விட்டுணு சித்தர். திருமாலுக்குப் பல்லாண்டு பாடிப் பெரியாழ்வார் என்னும் பெயர் பெற்றவர் இவர். புறச் சமயங்களைச் சாடாமல் அரசவையில் வாதம் செய்து பாண்டியனது பொற்கிழியைப் பெற்றுச் சிறந்தவர் பெரியாழ்வார். இவர் காலத்துப் பாண்டிய மன்னன் வல்லப தேவன் என்று குருபரம்பரை கூறும். ஆனால், ஆழ்வார் தம் திருமொழியில்,

மன்னர் மறுக மைத்துனன் மார்க்கொரு தேரின்மேல்
முன்னங்கு நின்று மோழை யெழுவித் தவன்மலை
கொன்னவில் கூர்வேல் கோன்நெடு மாறன் தென்கூடற்கோன்
தென்னன் கொண்டாடும் தென்திரு மாலிருஞ் சோலையே (344)

என்று பாடுகிறார். இங்குப் பாண்டியன் கோன் நெடுமாறன் சுட்டப் பெறுகிறான். பாண்டிய மன்னர் வரிசையில் சீமாறன் சீவல்லபன் என்பானது பெயரும், நெடுமாறன் என்பானது பெயரும் காணப்படுகின்றன. நெடுமாறன் என்னும் பெயரில் மூவர் இருந்துள்ளனர். முதலாமவன் திருமழிசையார் காலத்தவன். திருஞானசம்பந்தர் காலத்தில் இருந்தவன் நின்றசீர் நெடுமாறன் என்பவன். சிவன் அடியாராகிய இவனைத் திருத்திப் பணி கொண்டவர் பெரியாழ்வார் என்பதும் பொருந்தாது. எனவே, மூன்றாவதாக உள்ள மாறன் கி. பி. 740 - 767இல் ஆட்சி புரிந்தவன். பல்லவ மல்லன் முதலானாரோடு போர் புரிந்த பெருவீரன் இவன். இவனை மாறவர்மன் என்றும், இராசசிம்மன் என்றும் வழங்குவர். இவன் மகன் பராந்தகன் நெடுஞ்சடையன் ஏறத்தாழ 767இல் பட்டம் ஏற்றவன். இவனைப் 'பரம வைணவன்' என்கிறது சீவரமங்கலச் செப்பேடு. இவனை அடுத்து ஆட்சிக்கு வந்தவன் சீமாறன் சீவல்லபன். இவன் 862க்கு முன் வாழ்ந்தவன். நாதமுனிகள் காலத்தவன். எனவே, இவன் காலமே பெரியாழ்வார் காலம் என்னும் டி.ஏ. கோபிநாத ராவ் கருத்துப் பொருந்தாது என்பர் மு. இராகவையங்கார்.

ஆனால், மா. இராசமாணிக்கனார் வேள்விக்குடிப் பட்டயத்தில் உள்ள பட்டியலிற் காணப்பெறும் மன்னருள் நெடுஞ்சடையன் பராந்தகன் (765 - 790) ஒருவனே சிறந்த வைணவனாய் விளங்கினான் என்றும், அவனையே செப்பேடு 'பரம வைணவன்' என்று குறிக்கிறது என்றும், பெரியாழ்வாரிடத்தில் பெரிதும் ஈடுபட்டு அவன் வைணவனாகி இருக்கக்கூடும் என்றும் தெரிவிக்கும் மு. இராகவையங்காரின் கருத்துக்கு இரண்டு தடைகளை எழுப்புகிறார்.

முதலாவது, பெரியாழ்வார் காலத்துப் பாண்டியன் சீவல்லப தேவன் என்று குருபரம்பரை நூல்கள் கூறுவது.

இரண்டாவது, 'மாறன் கொண்டாடும் தென்திருமா லிருஞ்சோலை' என்று பெரியாழ்வார் குறிப்பது. மாறன் என்னும் இப்பெயரும் குருபரம்பரை கூறும் சீவல்லபன் என்னும் பெயரும் சேர்ந்து 'சீமாறன் சீவல்லபன்' ஆகியது. செப்பேடுகள் இப்பெயரைக் குறிக்கின்றன.

ஏனெனில் பாண்டியர் மரபில் மாறவர்மன், சடையவர்மன் என்னும் பட்டங்கள் மாறி மாறி இடம்பெறும். பராந்தகன் சடையவர்மன் எனில் அவனுக்குப் பின்வந்த இரண்டாம் இராசசிம்மன் மாறவர்மன் ஆவான். அவனை அடுத்து ஆட்சிக்கு வந்தவன் வரகுணன் (சிவ பக்தன்). இவன் சடையவர்மன். இவனை அடுத்து வந்தவன் குருபரம்பரை சொல்லும் சீவல்லபன். இவன் மாறவர்மன் ஆனதால் 'சீமாறன் சீவல்லபன்' எனப்பட்டான்.

எனவே, பெரியாழ்வார் நெடுஞ்சடையன் பராந்தகன் காலத்தவர் என்று கூறுவதை விடச் சீமாறன் சீவல்லபன் காலத்தவர் என்று கூறுவதே பொருத்தமாகும் என்கிறார் இராசமாணிக்கனார். ஆழ்வார் 85 ஆண்டுகள் வாழ்ந்தவர் ஆதலின் அவர் ஒன்பதாம் நூற்றாண்டின் இடைப் பகுதியிலும், பிற்பகுதியிலும் வாழ்ந்தவராகக் கொள்ளலாம் என்பது அவர் திண்ணிய கருத்து. இதுவே கோபிநாத ராவ், கே. ஏ. நீலகண்ட சாத்திரியார் ஆகியோரின் கருத்துமாகும்.

இராசமாணிக்கனார் பெரியாழ்வாரின் காலத்தை எளிதாகவும், செம்மையாகவும் கணித்துச் சொல்லியிருக்கும் திறத்தை ஈண்டுக் காண்கிறோம்.

ஆண்டாள்

பெரியாழ்வார் எடுத்து வளர்த்த திருமகள் ஆதலின் ஆண்டாள் அவர் காலத்தவரே என்பதில் எந்த ஐயமுமில்லை.

இருப்பினும், ஆண்டாளின் திருப்பாவை, 'வெள்ளி எழுந்து வியாழம் உறங்கிற்று' (13) என்று ஒரு பாடலில் குறிக்கிறது.

அறிஞர் பலர் வானிலை ஆய்வு செய்து 'வெள்ளி எழுந்து வியாழம் உறங்கிய' மார்கழி நாள் 7-11-600, 18-12-731, 25-11-885, 14-12-886 ஆகிய நாள்களைக் குறித்துத் தந்துள்ளனர். இவற்றுள் ஒன்பதாம் நூற்றாண்டை ஒட்டியவை இறுதியில் உள்ள இரண்டு. இதில் 885ஆவது ஆண்டில் குறிப்பிட்ட நாளே வைகறை நீராடலுக்கு உரியதாகலாம் என்று கருதும் மா. இராசமாணிக்கனார் அவர்கள் 'ஆண்டாள் திருப்பாவை பாடிய ஆண்டு கி. பி. 885 எனலாம்' என்கிறார். பெரியாழ்வார் காலத்தோடு (ஒன்பதாம் நூற். இடைப்பகுதியும் பிற்பகுதியும்) இஃது ஒத்துப் போகிறது.

மு. இராகவையங்கார் தம் ஆய்வில் கி. பி. 600 முதலாழ்வார்கள் காலம் என்பதால் அதனைத் தள்ளிவிடுகிறார். 885, 886 ஆகிய ஆண்டுகள் நாதமுனிகள் காலமாதலால் அதுவும் பொருந்தாது என்று ஒதுக்கிவிடுகிறார். பின், 731ஆம் ஆண்டே ஆண்டாள் பாவை பாடிய காலம் என்னும் முடிவுக்கு வருகிறார். இங்கு அவர் அறிஞர் எல். டி. சாமிக் கண்ணுப் பிள்ளையின் காலக் கணிப்பை ஏற்கிறார். அவ்வறிஞர் குரு பரம்பரை கூறும் (நள ஆண்டு, ஆடி மாதம், சுக்கில சதுர்த்தசி, பூரம்) என்னும் ஆண்டாளின் பிறந்த பொழுதை அடிப்படையாக வைத்து, அந்தக் காலம் 776ஆம் ஆண்டு ஜூன் 25ஆம் நாள் என்று கணிக்கின்றார். எனவே, ஆண்டாள் 716இல் தோன்றி 731இல் பாவை பாடியிருத்தல் வேண்டும் என்னும் முடிவுக்கு வருகிறார் மு. இராகவையங்கார்.

இவர் கருத்துப்படி ஆண்டாள் திருப்பாவை பாடிய ஆண்டு கி. பி. 731. மா. இராசமாணிக்கனார் கருத்துப்படி அது கி. பி. 885. சோதிட அடிப்படையிலும் வரலாற்று அடிப்படையிலும் மா. இராசமாணிக்கனார் கருத்தே பெரியாழ்வார் காலத்திற்கும் ஆண்டாள் காலத்திற்கும் பொருத்தமாயிருத்தலை அறிஞர் பெருமக்கள் நன்குணரலாம்.

நம்மாழ்வார்

நம்மாழ்வார் காலத்தை ஆய்தற்குத் துணை நிற்பன மூன்று தொடர்கள். அவை காரி மாறன், சீவரமங்கலம், வரகுண மங்கை என்பன.

பராந்தகன் நெடுஞ்சடையன் (765 - 790) காலத்து அமைச்சர் ஒருவரின் பெயர் மாறன் காரி என்பது. இந்த அமைச்சர் மதுரையை அடுத்த ஆனைமலையில் நரசிங்கப் பெருமாளுக்கு ஒரு குடைவரை கோயிலை அமைத்தார் என்கிறது ஆனைமலைக் கல்வெட்டு. அப்பணியை நிறைவு செய்தவன் அவர் தம்பி மாறன் எயினன் என்பவன். மன்னன் வைணவன் ஆதலால் அவன் அமைச்சரும் அவரது தம்பியும் இப்பணியில் ஈடுபட்டனர் எனலாம்.

அமைச்சர் மாறன் காரி என்பார் மாறன் என்பாரின் மகன். காரி மாறன் என்பது நம்மாழ்வாரின் பெயர். இவர் காரி என்பாரின் மகன் ஆவர். இவரை மாறன் என்றே வழங்குதலும் உண்டு.

பராங்குச மாறவர்மன், பராந்தகன் நெடுஞ்சடையனின் தந்தை. கி. பி. 908இல் வெட்டப்பெற்ற திருக்கண்ணபுரம் கல்வெட்டு 'சடகோபன்' என்னும் பெயரைக் குறிக்கிறது.

இவற்றில் குறிக்கப்பெறும் மாறன், பராங்குசன், சடகோபன் என்பன நம்மாழ்வாரைக் குறிக்கும் பெயர்கள் ஆகும். எனவே, நம்மாழ்வார் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டைச் சார்ந்தவர் என்பது தெளிவாகும்.

765 - 790 ஆண்டுகளில் ஆண்ட பாண்டியன் பராந்தகன் நெடுஞ்சடையன். இவனது விருதுப் பெயர்களுள் ஒன்று 'சீவரன்' என்பது. நம்மாழ்வார் சீவரமங்கலத்துப் பெருமாள் மீது பதினொரு பாடல்களைப் (3183 - 3193) பாடியுள்ளார். சீவரன் பெயரால் வழங்கப் பெற்ற இவ்வூரின் பழைய பெயர் வேலங்குடி. இன்றைய பெயர் நாங்குநேரி. நம்மாழ்வார் இம்மன்னனுக்குச் சற்று பிந்தியவர் என்பது இதனால் தெளிவாகிறது.

மற்றோர் ஆதாரம், பாண்டியர் வரிசையில் இடம்பெறும் ஒருவன் வரகுணன் (792 - 835). இவன் பெயரால் தோன்றிய ஊர் 'வரகுண மங்கை'. இதனை நம்மாழ்வார் ஒரு பாடலில் (3571) குறித்துள்ளார். இவ்வூர் நம்மாழ்வார் பிறந்த திருக்குருகூர்க்கு அருகில் உள்ளது.

இவற்றால் நம்மாழ்வார் காலம் கி. பி. 8ஆம் நூற்றாண்டின் இறுதியும் 9ஆம் நூற்றாண்டின் முற்பகுதியும் (கி. பி. 760 - 835) என்று கூறுவது பொருத்தமாகும் என்பது மா. இராசமாணிக்கனாரின் முடிபாகும்.

மதுரகவியாழ்வார்

நம்மாழ்வாரின் சீடர் மதுரகவியாழ்வார். இது குருபரம்பரை தரும் செய்தி. எனவே, மதுரகவியாழ்வாரின் காலமும் நம்மாழ்வார் காலமும் ஒன்றேயாம்.

இராமானுசர் காலத்தவரான திருவரங்கத்தமுதனார் முறை வைப்பில் நம்மாழ்வாரை இறுதியில் வைக்கிறார்.

கே.ஏ. நீலகண்ட சாத்திரியார் முதலான வரலாற்றறிஞர்கள் நம்மாழ்வாரையும் மதுரகவியாழ்வாரையும் கி. பி. 9ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கடைசி ஆழ்வார்களாகக் குறிக்கின்றனர். அறிஞர் மா. இராசமாணிக்கனாரும் இதே கருத்தினைக் கொண்டவர் ஆவார்.

இதுகாறும் கூறியவற்றால் அறிஞர் மா. இராசமாணிக்கனாரின் ஆழ்வார் கால ஆய்வுத் திறன் தெளிவாகும்.

ஆய்வு மாண்பு

இராசமாணிக்கனாரின் ஆழ்வார் கால ஆய்வு நெறி நினைத்து மகிழக் கூடியதாகும். மிகுந்த அக்கறையுடனும் தெளிவுடனும் கால ஆய்வினை அணுகியுள்ளார் அவர். மு. இராகவையங்காரின் கருத்துகளை மிக நன்றாக ஆராய்ந்து பார்த்து, மற்றவர்களின் கருத்துகளையும் இடையிடையே ஒப்பிட்டு நோக்கித் தம் முடிவுகளை அறிவித்துள்ளார் மா. இராசமாணிக்கனார். காலத்தை முந்திக் கூறுவதாலோ, அன்றிப் பின்னர்த் தள்ளிக் கூறுவதாலோ எந்த நன்மையும் இல்லை. இதனை நன்குணர்ந்த இவர் மற்ற கால ஆய்வுகளைப் போலவே ஆழ்வார் கால ஆய்வினையும் செம்மையாகச் செய்துள்ளார். வரலாற்று நூல்களின் அடிப்படையில் மன்னர்களின் காலங்களை நன்கு அமைத்துக் கொண்டு ஆழ்வார்களின் கால ஆய்வினை நிகழ்த்தியுள்ளார் இராசமாணிக்கனார்

அகச் சான்றுகளாக ஆழ்வார்களின் பாடல்களை முதன்மைப்படுத்தியுள்ள இராசமாணிக்கனாரின் ஆய்வில் மற்றொன்று விரித்தலோ, கூறியது கூறலோ தேவையற்ற செய்திகளைத் தருவதோ அறவே இல்லை.

தொடக்கத்திலேயே நாதமுனிகள் காலத்தை ஆய்ந்து முடிவு செய்து, அதனை மேலெல்லையாக வகுத்துக் கொண்டு ஆய்ந்துள்ள திறம் பாராட்டுதற்கு உரியது. இவரது கால எல்லையை வகுப்பதில் ஏற்பட்ட வேறுபாடே, ஆழ்வார் கால எல்லையை வகுப்பதிலும் வேறுபாட்டை உணர்த்துவதாக அமைந்தது எனலாம்.

முன்னைய ஆய்வாளர்களின் கருத்தில் மாறுபடும் எந்த இடத்திலும் இவர் வரையறை கடந்து எழுதவில்லை என்பது இங்கு நினைவிற்கொள்ள வேண்டிய ஒன்று. மு. இராகவையங்காரின் ஆய்வு பற்றி எழுதும்போதெல்லாம் மிக நாகரிகமாகவே எழுதிச் செல்கிறார்.

'பெரியாழ்வார் பாக்களில் பிற சமயக் கண்டனம் இல்லையே. ஆதலால் அவரும் முதலாழ்வார் காலத்தவர் என்று கூறலாமா?' என்று மு. இராகவையங்காரையும், 'வயிர மேகன் என்று ஆழ்வார் குறித்தது தந்திவர்ம பல்லவனை என்று அறிஞர் கோபிநாத ராவ் அவர்கள் கருதுதல் இவ்விடத்திற்குப் பொருத்தமற்றதாகும். பாடல் அடிகள் இப்பொருள் தரவில்லை' என்று கோபிநாத ராவையும் மறுப்பதுடன், 'திருஞானசம்பந்தரும் திருமங்கையாழ்வாரும் சந்தித்து அளவளாவினர் என்று குருபரம்பரை நூல்கள் கூறுதல் வரலாற்று முறைக்கு ஒத்துவரவில்லை' என்றும் மறுப்புரை கூறிச் செல்லுதல் அறிஞர் மா. இராசமாணிக்கனார் ஆய்வு மாண்பிற்குச் சான்றுகள்.

❖ ❖ ❖

தமிழ் ஆய்வுலகம் கண்ட ஓர் இலக்கிய விவாதம்

பெ.சு. மணி

*1954*இல் தமிழ் ஆய்வுலகில் பண்டைத் தமிழர் திருமணத்தில் தாலியணிதல் பற்றிய கடுமையான வாதம் நிகழ்ந்தது. "இலக்கிய உலகில் தமிழர் திருமணத்தில் தாலியணிவது பற்றி, இது போன்ற ஒரு சர்ச்சை இதற்கு முன்பு எழுந்ததாக நினைவில்லை" என்று சிலம்புச் செல்வர் குறிப்பிட்டுள்ளார்.

பண்டைத் தமிழர் திருமணத்தில் தாலியணிதல் இல்லை எனும் கருத்தை டாக்டர் மா. இராசமாணிக்கனார் வலியுறுத்தினார். இந்தக் கருத்தைச் சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானம் ஏற்க மறுத்து வாதிட்டார்.

இந்த இலக்கிய விவாதத்தை அறிவதற்கு முன்பாக இருவரின் அடிப்படையான அணுகுமுறையைக் கருத்தில் நிறுத்த வேண்டும்.

தமிழர் திருமணத்தில் தாலியை மறுத்தும் எதிர்த்தும் சிலரால் மிகத் தீவிரமாக ஒருகாலத்தில் நடத்தப் பெற்ற பிரசாரத்திற்கும் குறிப்பிட்ட இலக்கிய விவாதத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை.

டாக்டர் இராசமாணிக்கனாரும், சிலம்புச் செல்வர் ம.பொ. சிவ ஞானமும் மிகத் தெளிவாகத் தங்கள் விவாத அடிப்படையைச் சுட்டிக் காட்டியுள்ளனர்.

'தமிழர் திருமணத்தில் தாலி' எனும் நூலில் (முதற்பதிப்பு *1955*), பேராசிரியர் மா. இராசமாணிக்கனார் தமது ஆய்வின் அடிப்படையைப் பின்வருமாறு கூறியுள்ளார்.

> பண்டை இலக்கியங்களில் மங்கல நாணோ, தாலியோ தமிழர் திருமணத்தின்போது கட்டப்பட்டதாகத் தெரிய வில்லை. ஆதலால், இப்போது கட்டவேண்டா என்று யான் கூறவில்லை; இதுகாறும் கட்டிவந்தது தவ றென்றும் சொல்லவில்லை.

7.11.1954 'செங்கோல்' வார இதழில், 'தாலியை மறுக்கும் போலி வாதம்' எனும் கட்டுரையில் குறிப்பிட்டுள்ள பின்வரும் அணுகு முறையும் கவனத்திற்குரியது.

இராசமாணிக்கனார் பல்வேறு பரிமாணங்களைக் கொண்ட கொள்கைப் பிடிப்புள்ள தமிழறிஞர். தமிழ் என்பது உயிர்மூச்சு தமிழ் என்பது தவம் என்று வாழ்ந்துகாட்டியவர்.

இரா. நல்லகண்ணு

விவாதத்தில் உள்ள விஷயம் தாலி கட்டும் வழக்கம் இன்றைக்கு வேண்டுமா, வேண்டாமா என்பதல்ல. முற்காலத்தில் அப்பழக்கம் இருந்ததா இல்லையா என்பதுதான். ஆகவே, இதைக் கட்சிக் கண்ணோக்குடன் ஆராய்வதோ, தனிப்பட்டோர் மீதுள்ள விருப்பு - வெறுப்பு, சாதிப் பகைமை ஆகியவற்றை மனதில்கொண்டு ஆராய்வதோ கூடாது.

விவாதங்களில் தனிப்பட்ட முறையில் விருப்பு - வெறுப்பு ஊடுருவாமல் பண்பாட்டைக் காத்து நின்றதில் பேராசிரியர் இராசமாணிக்கனாரும் ம. பொ. சி. யும் விழிப்புடன் இருந்தனர்.

டாக்டர் மா. இராசமாணிக்கனார் 75ஆவது பிறந்த நாள் விழா மலரில் (1981), தமக்கும் இராசமாணிக்கனாருக்குமிடையே மலர்ந்த இலக்கிய நட்புறவின் அறிமுகத்தைப் பின்வருமாறு கூறியுள்ளார் ம. பொ. சி.

டாக்டர் இராசமாணிக்கனார் அவர்களை 1934 முதல் எனக்குத் தெரியும். வட சென்னையில் அந்நாளில் சாது நாராயண தேசிகர் மடம் என்று ஒன்று இருந்தது. சுவாமி அருணகிரி நாதர் என்பவர் அதை நடத்திக்கொண்டிருந்தார். ஆண்டு தோறும் அவர் நடத்தி வந்த குரு சாது நாராயண தேசிகர் பூசையில், இராசமாணிக்கனார் அவர்கள் சொற்பொழிவு நிகழ்த்துவது வழக்கம். ஒரு சமயம் அங்கு அவர்கள் பேச்சைக் கேட்கும் வாய்ப்பு எனக்கு அமைந்தது. அவருடைய அன்றைய சொற்பொழிவு, சிலப்பதிகாரம் பற்றியதாகும். சிலப்பதிகாரம் பற்றி நான் கேட்ட முதல் சொற்பொழிவு அதுதான் .... அவரோடு பழகுவதென்பது ஒரு சுவையான அனுபவம். நட்பிற்குச் சிறந்த பெரியவர் அவர் .... இராசமாணிக்கனார் அவர்களுடைய நூல்கள் பலவற்றை நான் படித்திருக்கிறேன். நான் தமிழில் புலமை பெறுவதற்கு அவையும் பயன்பட்டன.

முறையாகத் தமிழ் பயின்று, பேராசிரியராகப் பணியாற்றித் தமிழ் ஆய்வுலகில் புகழ் பூத்தவரோடு, மூன்றாம் வகுப்பைக் கூட, கொடிய வறுமையின் காரணமாக, எட்டிப் பார்க்க வாய்ப்பின்றி முறைசாராத கல்விப் பயிற்சியில் முன்னேறிப் புலமை பெற்ற ம. பொ. சி., இலக்கிய விவாதம் நடத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

விவாதத்தின் தோற்றுவாய்

தாலி பற்றிய விவாதத்தின் தோற்றுவாய் குறித்து ம.பொ.சி. எழுதியதாவது:

பண்டைக் காலத் தமிழர்களிடையே திருமணத்தில் தாலி கட்டும் வழக்கம் இருந்ததில்லை" என்று பேராசிரியர் மா. இராசமாணிக்கனார் மதுரை இலக்கியக் கூட்டம் ஒன்றில் பேசியதாகத் 'தினத்தந்தி' பத்திரிகையில் பிரசுரமாகியிருந்தது. அப்பேராசிரியர் கருத்தை மறுத்து, 'தினத்தந்தி' தீபாவளி மலரில் நான் ஒரு கட்டுரை எழுதியிருந்தேன். அதைத் தொடர்ந்து தாலியைப்பற்றி விவாதம் நடந்து வருகிறது (தாலியை மறுக்கும் போலிவாதம், ம. பொ. சிவஞானம் கட்டுரை - செங்கோல் 7. 11. 1954).

இந்தத் தோற்றுவாயைக் குறித்து, பேராசிரியரும் பின்வருமாறு விளக்கியுள்ளார்.

யான் 1954ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் மதுரைத் திருவள்ளுவர் கழகத்தில் 'தென்னிந்திய வரலாறும் தமிழிலக்கியமும்' என்ற பொருள் பற்றி ஆறு சொற்பொழிவுகள் செய்தேன். அப்போது, வளரும் சமுதாயத்தில் காலப்போக்கில் பல மாற்றங்கள் ஏற்படுதல் இயல்பு என்பதைக் கூறுமிடத்து, "சங்க காலம் முதல் கி. பி. 10ஆம் நூற்றாண்டு வரையில் தமிழர் திருமணத்தில் தாலி கட்டும்

வழக்கம் இருந்தமைக்குச் சான்றில்லை என்றும், பின்னரே மங்கல நாணும், தாலியும் வந்தன என்றும் கருதத்தக்க நிலையில் இலக்கியச் சான்றுகள் உண்டு" என்பதைக் குறிப்பிட்டேன். இச்செய்தி 'தினத்தந்தி' யில் வெளி வந்தது. தமிழரசுக் கட்சித் தலைவரும் என் மதிப்பிற்குரிய நண்பருமாகிய உயர்திருவாளர் ம.பொ. சிவஞான கிராமணியார் அவர்கள் யான் கூறிய செய்தி 'உண்மைக்கு மாறானது' என்று 'தினத்தந்தி' தீபாவளி மலரில் ஒரு கட்டுரை எழுதினார்கள்.

விவாதத்திற்கான சொற்றொடர்கள் - பொருள் விளக்கங்கள்

'ஈகை அரிய இழையணி' (புறம். 127); 'பின்னமை நெடுவீழ்' (நெடுநல்வாடை 136-137); 'மங்கல அணி' (சிலப்பதிகாரம்) முதலான சொற்றொடர்களுக்குப் பொருள் காண்பதில் தோன்றிய மாறுபடும் கருத்துகள் தாலி குறித்த விவாதத்தை நடத்திச் சென்றன.

புறநானூற்றில் வரும், 'ஈகை அரிய இழையணி' எனும் சொற்றொடருக்குப் பேராசிரியர் கொண்ட பொருள் விளக்கம், பின்வருமாறு:

புறநானூறு 127ஆம் பாடலில் ஆய் வள்ளல் தான் கொடுக்கத் தகுந்த எல்லாப் பொருள்களையும் பரிசிலர்க்குக் கொடுத்தும், பின் தன் மனைவியர்பாலுள்ள கொடைக்குரிய பொருள்களை எல்லாம் கொடுத்தும் வறியவன் ஆனான்; இந்நிலையில் அவன் மனைவியரிடம் "ஈகை அரிய இழை மட்டும் எஞ்சி நின்றது" என்று காணப்படுகிறது. இச்செய்யுள் வரிக்கு 'கொடுத்தற்கரிய நகை' என்பது நேரான பொருள். ஆனால் புறநானூற்று உரையாசிரியர் 'கொடுத்தற்கரிய மாங்கல்ய சூத்திரம்' என்று பொருள் கூறினார். 'இழை' என்னும் சொல்லுக்கு, 'மாங்கல்ய சூத்திரம்' என்னும் பொருள் கூறிய இவ்வுரையாசிரியரே, மற்றொரு பாடலில் இது போன்ற இடத்திலேயே அங்ஙனம் கூறாமை நோக்கத்தக்கது. புறநானூறு 224ஆம் பாடலில், சோழன் கரிகாலன்,

> **இறந்தோன் தானே அளித்திவ் வுலகம்**
> **.......... ....**
> **மெல்லியல் மகளிரும் இழைகளைந் தனரே (புறம். 224)**

இங்குக் 'கரிகாலன் இறந்தான்; அதனால் அவன் மகளிர் இழை களைந்தனர்' என்பது நேரான பொருள். இங்கு வந்துள்ள 'இழை' என்பதற்கு அருங்கல அணி முதலாகிய அணிகள் என்று அதே உரையாசிரியர் பொருள் தந்துள்ளார். புறம். 127ஆம் பாடலில், 'இழை - மாங்கலிய சூத்திரம்' என்று பொருள் கூறிய உரையாசிரியர் புறம். 224இல், 'இழை - அருங்கல அணி முதலாகிய அணிகள்' என்று கூறியது ஏன்? இங்ஙனம் உரையாசிரியர்களின் தடுமாற்ற உரைகளைக் கண்டு ஆராய்ச்சியாளர் ஊக்கங் கொண்டு உண்மை காண்பதே உறுபயன் விளைப்பதாகும்.

ம. பொ. சி., முற்கூறிய வாதத்திற்குப் பின்வருமாறு பதிலளித்துள்ளார்:

புறநானூற்றுப் பாடல் 127இல் "ஈகையரிய இழையணி மகளிரோடு என வரும் சொற்றொடர்க்குப் "பிறிதோர் அணிகளுமின்றிக் கொடுத்தற்கரிய மாங்கலிய சூத்திரத்தை அணிந்த மகளிர்" என்று பொருள் கூறுகின்றார் உரையாசிரியர் ஆம்; ஆய் அண்டிரன் என்ற வள்ளலின் மனைவியர் தங்கள் கழுத்தில் அணிந் திருந்த தாலியைத் தவிர மற்றைய அணிகலன்களை யெல்லாம் பரிசிலர்க்கு வழங்கி விட்டனராம்.

மேற்சொன்ன புறநானூற்று வரிக்கு, "எந்த நகையைக் கழற்றி வைத்தாலும் மங்கல நாணாகிய தாலியை மட்டும் மங்கையர் கழற்றும் வழக்கம் இல்லை. அதனாலேயே ஈகை

யரிய இழையணி மகளிர் என்ற தொடர் எழுந்தது" என்பதாகத் திரு. துடிசைக்கிழார் அ. சிதம்பரனார் பொருள் கூறியுள்ளார்.

இழை என்பதற்கு நூல் என்று ஒரு பொருள் உண்டு. 'மங்கல அணி' என்னும் திருமணச் சின்னம் நூலில் கோர்க்கப்பட்டு மணமகள் கழுத்தில் அணியப்பட்டதால் இழை என்று குறிப்பிட்டார்.

'இழை' என்பதற்கு 'நகை' என்று பொருள் கூறி, அது திருமணச் சின்னமன்று என்று வழக்காடுகின்றார் டாக்டர் மா. இராச மாணிக்கனார். 'இழை' என்பதற்கு 'நகை' என்றே பொருள் கொண்டாலும் அது தாலியல்லாத வேறு ஒரு நகை ஆகிவிடாது. பொன்னால் செய்த தாலியும் ஒரு நகைதானே!

'ஈகையரிய' என்னும் சொற்றொடர்க்குக் 'கொடுத்தற்கரிய' - 'விலையுயர்ந்த' என்று பொருள் கூறுகின்றார் மா. இராசமாணிக்கனார். ஆம்; விலையுயர்ந்த பொருளானதால் ஆயும் அவன் மனைவியரும் அதனைப் பரிசிலர்க்கு வழங்கவில்லை என்கிறார். இப்படி பொருள் கூறுவது ஆய் மன்னனது வள்ளன்மையையே அவமதிப்பதாகும்! (சிலப்பதிகாரத் திறனாய்வு - ம. பொ. சிவஞானம் - மூன்றாம் பதிப்பு, 1999, பக். 386 - 387)

'பின்னமை நெடுவீழ்'

சங்க இலக்கியத்தில் தாலி பற்றிய குறிப்பு நெடுநல்வாடையில் 'வீழ்' எனும் சொல்வழியே கூறப்பெற்றுள்ளது என்று சிலம்புச் செல்வர் வாதிட்டார். இது குறித்து அவர் கூறியதாவது:

"பாண்டியன் நெடுஞ்செழியன் போருக்குச் சென்றிருந்தபோது பிரிவாற்றாமையால் கோப்பெருந்தேவி,

> **ஆரம் தாங்கிய அல்முலை ஆகத்துப்**
>
> **பின்னமை நெடுவீழ் தாழத் துணைதுறந்து**

வருந்தினாள் என்று மதுரைக் கணக்காயனார் மகன் நக்கீரனார் பாடுகின்றார். இதற்கு உரை இயற்றிய நச்சினார்க்கினியர்,

'பின்னமை நெடுவீழ் = குத்துதல் அமைந்த நெடிய தாலி' என்று கூறியுள்ளார்.

"முன் முத்தாற் செய்த கச்சுச் சுமந்த பருத்த முலையினை உடைய மார்பிடத்தே இப்பொழுது குத்தலால் அமைந்த நெடிய தாலி நாண் ஒன்றுமே தூங்க" எனக் குறிப் பிட்டுள்ளார்.

மற்றும், பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையின் பின்வரும் கருத்தையும் தமது வாதத்திற்கு ஆதரவாக எடுத்துக்காட்டியுள்ளார் சிலம்புச் செல்வர்.

> முத்தாரங்களைச் சுமந்து அழகு பெற்றுத் தோன்றிய அவள் மார்பிடத்தே திருமாங்கல்யம் மட்டுமே தாழ்ந்து அசைந்து கிடப்பதையன்றி வேறோ ரணியும் காணக்கூட வில்லை. (இலக்கிய தீபம், ப. 55)

'வீழ்' எனும் சொல் தாலி நாணைக் குறிப்பதாகும் என்று சிலம்புச் செல்வர் சாற்றினார்.

'வீழ்' என்பது தாலியைக் குறிப்பதன்று எனப் பேராசிரியர் பின்வருமாறு வழக்காடி யுள்ளார்:

இதற்கு உரை கூறப்புகுந்த நச்சினார்க்கினியர், 'பின்னமை நெடு வீழ் - குத்துதல் அமைந்த நெடிய தாலி' என்று பொருள் கூறியுள்ளார்; இங்ஙனம் கூறி, பின்னுதல் அமைந்த மயிர் என்பாருமுளர் என்று கூறி முடித்தார். இக்கூற்றிலிருந்து நச்சினார்க்கினியர் காலத்திலேயே 'வீழ்' என்பது 'தாலி'யைக் குறியாது என்று கருதிய அறிஞரும் இருந்தனர் என்பது தெளிவாகத் தெரிகின்றது அன்றோ? முதுகின்மேல் (பின்புறம்) இருக்கத்தக்க பின்னுதல் அமைந்த நீண்ட சடை, தலைவன் இல்லாமையால் மார்பின் மீது (முன்புறம்) தாழ்ந்து கிடந்தது. அஃதாவது கணவன் பிரிவால் கலங்கிய காரிகை, அச்சடை இருக்க வேண்டிய இடத்தில் இல்லையே என்று கவலைப் படவில்லை. முத்தாரம் கிடந்த மார்பில் அச்சடை கிடந்தது என்பதே இங்கு உரிய பொருள்.

உரையாசிரியரின் 'என்பாருமுளர்' எனும் குறிப்பைப் பயன்படுத்திக் கொண்டு, அவருடைய கருத்தை ஏற்காது பேராசிரியர் வாதிட்டுள்ளார். சிலம்புச் செல்வர் 'என்பாருமுளர்' என்பதைப் பொருட்படுத்தாது உரையாசிரியரின் கருத்தை ஏற்றுக் கொண்டார்.

மங்கல அணி

தாலி பற்றிய விவாதத்தில் 'மங்கல அணி' எனும் சொற்றொடர் விரிவாக இடம் பெற்றது. சிலப்பதிகாரம் மங்கல வாழ்த்துப் பாடல், மனையறம்படுத்த காதை, அந்தி மாலைச் சிறப்புச்செய் காதையில் மங்கல அணி குறிப்பிடப்பெற்றுள்ளது.

பேராசிரியர் பார்வையில் 'மங்கல அணி'யின் பொருள் பின்வருமாறு விளக்க முறுகின்றது.

> கண்ணகியின் திருமணச் சடங்குகளுக்கு முன்பு "அகலுன் மங்கல அணி எழுந்தது" என்று ஒரு வரி இளங்கோ அடிகள் பாடியுள்ளார். இதனில் வரும் மங்கல அணி என்பதற்குச் சிலப்பதிகார அரும்பதவுரையாசிரியர், மாங்கலிய சூத்திரம் என்று பொருள் கூறியுள்ளார். ஆனால் சிலப்பதிகாரத்திற்கு விளக்கமான உரை எழுதப் புகுந்த அடியார்க்கு நல்லார், 'மங்கல அணி - மங்கல அணி' என்றே பொருள் கூறினார். அரும்பதவுரையாசிரியர் கருத்துப்படி மாங்கலிய சூத்திரம் இருந்திருக்குமாயின் அது திருமணச் சடங்கில் கூறப் படாமைக்குக் காரணம் யாது? என்ற கேள்வி எழுமன்றோ?
>
> 'மங்கல அணி ஊரெங்கும் எழுந்தது' என்பதற்குத் திருமணத்திற்கு முன் மாங்கல்ய சூத்திரம் ஊரில் வலம் வருதல் என்பது இலக்கியம் காணாத ஒன்று

என்று பேராசிரியர் வழக்காடினார். மங்கலச் செய்தியைக் கூறுவோர் ஒருவர் பின் ஒருவராக முறையாகச் (அணியாக) சென்று மீள்தலை, "அகலுள் மங்கல அணி எழுந்தது" என்று அழகிய தொடரால் இளங்கோவடிகள் குறித்தனர் என்று கூறல் மிகவும் பொருந்தும் என்றார் பேராசிரியர்.

மேற்கண்டவாறு மங்கல வாழ்த்துப் பாடலில் வரும் மங்கல அணிக்கு, 'மாங்கல்ய சூத்திரம்' எனும் பொருள் ஏற்கத்தக்கது அன்று என்று விளக்கியப் பேராசிரியர், 'மனையறம் படுத்த காதை'யில் கூறப் பெற்றுள்ள 'மங்கல அணி'க்கு - இயற்கை அழகு என்று பொருள் கோடலே பொருத்தமாகும் என்று பின்வருமாறு விளக்கியுள்ளார்.

> மனையறம் படுத்த காதையில் கண்ணகியின் நலத்தைப் பாராட்டத் தொடங்கிய கோவலன்,

மறுவின் மங்கல அணியே அன்றியும்
பிறிதணி யணியப் பெற்றதை எவன்கொல்

என்று கண்ணகியை நோக்கிக் கேட்பதாக இளங்கோவடிகள் கூறியுள்ளார். இதில் வரும் 'மங்கல அணி' என்பதற்கு அதே அரும்பத உரையாசிரியர் 'இயற்கை அழகு' என்று பொருள் கூறியுள்ளார். இவ்வடிகளின் பொருள், 'குற்றமற்ற நினது புனையாத அழகன்றியும் வேறு சில அணிகளை அணிந்ததினால் பெற்ற உதவி யாது? என்று அடியார்க்குநல்லார் கூறியுள்ளார். இங்ஙனம் அவர், 'மங்கல அணி புனையாத அழகு' என்று கூறி மேலும் மங்கல அணி - மாங்கலியம் என்பாரும் உளர் என்று கூறிமுடித்தார். எனவே மங்கல அணி - மாங்கலிய சூத்திரமன்று என்பது அடியார்க்கு நல்லார் கருத்தாதல் தெளியலாம். அரும்பத உரையாசிரியரும் இவ்விடத்தில் 'இயற்கை அழகு' என்றே கொண்டார்."

இவ்விளக்கத்தைத் தொடர்ந்து, 'அந்திமாலைச் சிறப்புச்செய் காதை'யில் இடம் பெற்றுள்ள 'மங்கல அணி'க்கும் இயற்கை அழகு என்பதே பொருந்தும் என்று பின் வருமாறு வழக்காடியுள்ளார் பேராசிரியர்:

> இனி, அந்திமாலைச் சிறப்புச்செய் காதையிற் கோவலன் பிரிவால் வருந்திய கண்ணகி,
>
> 'மங்கல அணியிற் பிறிதணி மகிழாள்' (அடி 50) என்று இளங்கோவடிகள் குறித்துள்ளார். இங்கும் அதே அரும்பத உரையாசிரியர், 'மங்கல அணி - இயற்கை அழகு' என்றே பொருள் கூறினர். அடியார்க்கு நல்லார், 'மங்கல அணியிற் பிறிதணி - மங்கல அணியின் வேறான அணி' என்று பொருள் கூறியுள்ளார். கணவன் பிரிவால் வாடிய கண்ணகி எவ்வித நகையும் இல்லாமல் இயற்கை அழகோடு இருந்தாள் என்பதே இவ்வரியின் பொருள்
>
> சிலம்புச் செல்வர் முற்கூறிய வாதங்களுக்குப் பின்வருமாறு பதிலளித்தார்:

அடியார்க்கு நல்லார், அரும்பத உரையாசிரியர் இருவரின் உரைவிளக்கங்களில் 'என்பாரும் உளர்' எனும் கூற்றுகொண்டு தம்தம் கருத்துகளுக்கு ஆதரவு தேடியுள்ளனர், பேராசிரியரும் சிலம்புச் செல்வரும். பேராசிரியர் வாதங்களுக்குச் சிலம்புச் செல்வர் பின்வருமாறு எதிர்வாதமிட்டுள்ளார்.

> அகலுண் மங்கல அணி எழுந்தது என்கிறார் இளங்கோ. இங்கே 'எழுந்தது' என்பதற்கும் புறப்பட்டது என்றே பொருள். பெருஞ்செல்வர் வீட்டுத் திருமண மாதலால் மாங்கலியம் நகரில் உள்ள எல்லோரும் கண்டு வாழ்த்தும் பொருட்டு பவனி வந்தது. 'திருமணத்திற்கு முன்பு மாங்கலிய சூத்திரம் ஊரில் வலம் வருதல் இலக்கியம் காணாத ஒன்று என்கின்றனர் 'தாலி'யை மறுக்கும் தமிழறிஞர்கள். பிற இலக்கியங்களில் காணப்படாத எத்தனையோ புதுமைகளை, புரட்சிகரமான நிகழ்ச்சிகளைச் சிலப்பதிகாரத்தில் காண்கின்றோம். அழகிய இளம் பெண்கள் யானை மீதமர்ந்து ஊரார்க்குத் திருமணச் செய்தியை அறிவிப்பதும் சிலப்பதிகாரத்தில் மட்டுமே நிகழும் புதுமைதானே!'

மாமுது பார்ப்பான் மறைவழிப்படித் திருமணம் நடப்பதும் சிலப்பதிகாரம் கூறும் புதிய செய்திதானே! திருமணத்திற்குப்பின் மணமக்களைப் பள்ளியறையில் விட்டு,

இப்பா லிமயத்து இருத்திய வாள்வேங்கை
உப்பாலைப் பொற்கோட்டு உழையதா எப்பாலும்
செருமிகு சினவேற் செம்பியன்
ஒருதனி ஆழி உருட்டுவோ னெனவே

எனக் கூறி, இளம் பெண்கள் மணமக்களை வாழ்த்துவதையும் முதன்முதலாகச் சிலப்பதிகாரத்தில்தானே பார்க்கிறோம் - கேட்கிறோம்!

அடியார்க்குநல்லார், அரும்பதவுரையாசிரியர் இருவரிடையே மாறுபடும் விளக்கங்கள் குறித்தும் சிலம்புச் செல்வர் பின்வருமாறு வாதிட்டுள்ளார்:

> அடியார்க்குநல்லாரினும் காலத்தால் முற்பட்டவர் அரும்பதவுரைகாரர். அவர் 'மங்கல அணி' என்பதற்கு 'மாங்கலிய சூத்திரம்' என்று விளக்கம் தந்து விட்டதால், மூலத்தில் உள்ளபடி 'மங்கல அணி' என்று கூறி விளக்கம் தராமல் விட்டுவிட்டார் அடியார்க்குநல்லார். அவர் காலத்தில் விளக்கம் தேவையில்லாமலே 'மங்கல அணி'யை மாங்கலிய சூத்திரமாகவே மக்கள் கருதியிருத்தல் வேண்டும்
>
> வேறு பல இடங்களில் அரும்பதவுரையாசிரியர் கருத்துக்கள் சிலவற்றை வெளிப்படையாகவே மறுத்தும் பொருள் கூறியிருக்கிறார் அடியார்க்கு நல்லார். அது போல, 'மங்கல அணி' என்பதற்கு, மாங்கலிய சூத்திரம் என்று அரும்பதவுரைகாரர் கொண்ட பொருள் பிழையுடையதென்று அடியார்க்கு நல்லார் கருதியிருப்பின், அதனை வெளிப்படையாகவே மறுத்திருப்பார். அப்படி மறுக்காததால், அரும்பதவுரைகாரர் கொண்ட பொருள் அவருக்கும் உடன்பாடென்பது புலப்படும். (சிலப்பதிகராத் திறனாய்வு, ப. 381)

திருமணச் சடங்குகளைப் பற்றி, சிலப்பதிகாரம் வருணிக்குமிடத்தில் 'தாலி கட்டுதல்' பற்றிக் கூறப்படாததேன்? எனும் கேள்விக்கு ம.பொ.சி.யின் பதில், பின்வருவது:

> பொதுவாக, சங்க காலத் தமிழர்களின் திருமணத்தில் சாத்திரப்படியும் சட்டப்படியும் முக்கியத்துவம் பெற்றது சப்தபதிச் சடங்கேயாகும். மணமக்கள் மணவறையிலே ஏழடி வைத்துத் தீயை வலம் வரும் சடங்கு நிகழ்ந்தால் மட்டுமே திருமணம் சாத்திரப்படியும் சட்டப்படியும் செல்லு படியாகும். அதனாற்றான், சிலப்பதிகாரத்திலும் அதற்குப்பின் வந்த தமிழ் இலக்கியங்களிலேயும் சப்தபதிச் சடங்கு - அதாவது மணமக்கள் தீயை வலம் வரும் நிகழ்ச்சி மட்டும் குறிப்பிடப்பட்டு, தாலி அணிவிக்கும் சடங்கு கூறாமல் விடப்பட்டுள்ளது.

கண்ணகியின் கையைப் பிடித்துக்கொண்டு கோவலன் மணவறையில் தீவலம் வந்த காட்சியை இளங்கோவடிகள் குறிப்பிட்டுள்ளதனை இங்கு நினைவில் கொள்ள வேண்டும். இராமாயணத்தில் எண்ணற்ற இடங்களிலே 'மங்கல நாண்' அல்லது 'தாலி' பற்றிக் குறிப்பு தரும் கவியரசர் கம்பரும் சீதை - இராமன் திருமணத்தின் போது தாலி அணிவிக்கும் சடங்கு நிகழ்ந்தது பற்றிக் கூறவில்லை என்பதும் இங்கு நினைவிற் கொள்ளத் தக்கதாகும்.

மங்கல அணியிற் பிறிதணி மகிழாள் எனும் தொடர் குறித்தும் சிலம்புச் செல்வர் பின்வருமாறு விளக்க மளித்துள்ளார்:

> கழுத்தில் இயற்கை யழகின்றிச் செயற்கை யழகில்லை" என்று பொருள் சொல்கின்றார் நம் புலவர். இயற்கை யழகு கழுத்தைத்தானா கட்டிப் பிடித்துக் கொள்ள வேண்டும்? ஒருகால், உடல் முழுவதுமே பொருந்தக் கூறினார் என்று கொள்வோமானால், சீறடி, தொடை, இடை, கூந்தல் ஆகிய அங்கங்கள் கிடத்தலை முறைப்படிக் கூறி முடித்த பிறகே, 'மங்கல அணியிற் பிறிதணி மகிழாள்' என்று கூறியிருத்தல் வேண்டும். அப்படி இன்றி, மார்புக்கும் முகத்திற்கும் இடையில் கழுத்திற்குப் பொருத்தமாகக் குறிப்பிட் டுள்ளதால் அந்த மங்கல அணி மாங்கல்யம் என்றே கொள்ளப்பட வேண்டும்.

'அந்திமாலைச் சிறப்புச்செய் காதை'யில் கண்ணகியின் தோற்றத்தை வருணிக்குமிடத்து, அடி முதல் முடிவரை முறையே கூறி, கழுத்தண்டை வரும் போது மங்கல அணியைக் குறிப்பிட்டது தற்செயலாகக் கூறியதன்று.

கண்ணகி கணவனை இழந்த பிறகு தன் கைவளையல்களை உடைத்தாளே யொழிய தாலியைக் கழற்றியதாகக் கூறப்படவில்லையே என்று வினா தொடுத்தார்க்கு, ம. பொ.சி.யின் விடை பின் வருவது:

> சிலப்பதிகாரத்திலே கண்ணகியின் வாழ்வு விதவைக் கோலத்தில் முடியவில்லை என்பதை இவர்கள் மறந்துவிட்டனர் போலும்! கொற்றவைக் கோயிலில் கைவளையல்களை உடைக்கு முன்னர்,
>
> **கருத்துறு கணவன் கண்டபின் அல்லது**
> **இருத்தலும் இல்லேன் நிற்றலும் இலன்**
>
> என்று கண்ணகி கூறுகின்றாள். இதனால் கணவனைத் திரும்பவும் கூட முடியாதபடி விதவையாகிவிட்ட நினைப்பு அவளுக்கு இல்லை என்பது உறுதிப்படுகின்றது. ஆகவே, கண்ணகி தன் கைவளையல்களை உடைத்தது, சினத்தால்தான்; வாழ்வு அமங்கலமாக முடிந்துவிட்டதென்ற அவல நினைப்பால் அன்று.

தமது இந்தக் கருத்தை வேறொரு இடத்திலும் (செங்கோல் 7. 11. 1954) சிலம்புச் செல்வர் பின்வருமாறு சாற்றியுள்ளார்:

> கோவலன் இறந்த பிறகு கண்ணகி விதவைக் கோலம் பூண்டு வீட்டில் இருந்திருந்தால் அவனது மரணத்தை ஒட்டி, தாலி கழற்றுவது உட்பட எல்லாச் சடங்குகளும் கூறப்பட்டிருக்கலாம். கண்ணகி அந்த நிலையில் இல்லை. துர்க்கைக் கோயில் முன்பு அவள் வளையலை உடைத்தது ஆத்திரத்தை வெளிப்படுத்தும் செய்கையே. மற்றும் மண்ணுலகில் கணவனை இழந்தாலும் எப்படியும் விண்ணுலகில் அவனைக் காணமுடியுமென்று நம்புகிறாள். இதை ஊர்சூழ் வரியில்,
>
> **காய்சினந் தணிந்தன்றிக் கணவனைக் கைகூடேன்**
>
> என்று கூறுவதால் அறிகின்றோம் ஆம்; கொடுங்கோல் அரசை அழித்த பிறகு அமர வடிவில் கணவனைக் கூட முடியும் என்று அவள் நம்பினாள். அந்த நம்பிக்கை நிறைவேறியதாக இளங்கோவடிகளும் கூறுகின்றாரல்லவா?

முடிவுரை

தாலி பற்றிய இந்த இலக்கிய விவாதத்தில் இருவருமே நனிநாகரிகமாகக் கனியிருக்கக் காய் கவர்ந்தற்று முறையில் கருத்தாடல்களை நிகழ்த்தியுள்ளனர்.

தமிழ் இலக்கியத் துறைப் புலவர்களிடையேயும், பேராசிரியர்களிடையேயும் மாணவர்களிடையேயும் அணிவகுத்து, கருத்துப் போர் நிகழ்ந்தது, இலக்கியத் திறனாய்வு வளத்திற்கு வலிமை சேர்த்தது.

'தென்றல்' இலக்கிய இதழில் கவிஞர் கண்ணதாசன் இந்த இலக்கிய விவாதம் தொடர்பாகப் பேராசிரியருக்கு ஆதரவாக எழுதியது அவருடைய இலக்கிய விவாத ஆர்வத்தை வெளிப்படுத்துவதாய் அமைந்தது.

❖ ❖ ❖

குழந்தை எழுத்தாளர்

சிவஅரசி முத்துக்காளத்தி

டாக்டர் மா. இராசமாணிக்கனார் என்ற பெயரைக் கேட்கும் போது அவர் எழுதிய வரலாற்று நூல்களும் ஆராய்ச்சி நூல்களும் தான் நினைவுக்கு வரும். அவர் குழந்தை எழுத்தாளராகவும் திகழ்ந்தார் என்பதைப் பலர் அறியமாட்டார்கள். சமயம், இலக்கியம், கல்வெட்டு, வரலாறு போன்ற துறைகளில் எங்ஙனம் சிறந்து விளங்கினாரோ, அதேபோன்று குழந்தை இலக்கியத்திலும் சிறந் தொளிர்ந்தார். தாம் எழுதிய சிறுகதை நூல்களைப் பள்ளி மாணவர்க்குப் பயன்படும் வகையில் பாங்குற இனிய எளிய நடையில் எழுதியுள்ளார். நடந்தவை - நாடறிந்தவை ஒன்றிரண்டு; ஏனையவை அனைத்தும் சொந்தப் படைப்புகளே. குழந்தைகளுக்கு என அவர் எழுதிய கதை நூல்கள்.

வித்துவான் இராசமாணிக்கம் அவர்கள் எழுதியுள்ள தமிழர் திருமணம் என்னும் நூலானது தமிழ் மக்களுக்குப் பொருளாதார முறையிலும் அறிவுத்துறையிலும் ஆக்கம் உண்டாக்குவதாயும் பொருத்தமற்ற சடங்குகளைப் போக்குவதாயும் பண்டைய இயற்கை முறையில் ஊக்குவதாயும் உள்ளது.

சுவாமி முக்தானந்தா

(1) கதை மலர் மாலை (முதற் புத்தகம்)

(2) தமிழகக் கதைகள்

(3) சிறுகதைக் களஞ்சியம் (மூன்று பகுதிகள்)

(4) இராஜன் - சிறுவர்க்குரிய கதைகள்

கதை மலர் மாலை (முதற் புத்தகம்)[1]

'கதை மலர் மாலை' என்பது ஐந்தாம் வகுப்பு மாணவர்க்கு உரியதொரு நூல்; மாணவர் மனனம் செய்து மனத்தில் தங்க வைத்துக்கொள்ள வேண்டியதொரு நூலாகும். 40 கதைகளைக் கொண்ட இதனுள், குரங்கு, நாய், பாம்பு, கழுதை, கரடி, எலிக் குஞ்சுகள் முதலான விலங்குகளும், கிளியும் பங்கு பெறுகின்றன. உயிர்க்காட்சிச்சாலை குறிப்பிடப்படுகிறது. வீடுகளில் வளரும் பிராணிகளிடம் குழந்தைகள் எப்படிப் பழக வேண்டும், அவற்றை எப்படிக் காக்கவேண்டும், அவை எங்ஙனம் நன்றியுடனும் அன்புடனும் விளங்குகின்றன என்பன போன்ற செய்திகளைக் கொண்ட கதைகள் உண்டு. ஆங்கிலேயருக்கும் செருமானியருக்கும் இடையே நடந்த போர் மிக எளிய முறையில் சின்னஞ்சிறு கதைகள் மூலம் பேசப்படுகின்றது. பெற்றோர்கள் வீட்டில் இல்லாதபோது குழந்தைகள் செய்யும் தவறு சுட்டப்படுகிறது. 'வெறி கொண்ட நாய்' என்னும் கதை, தன்னலமற்ற தியாக நெஞ்சுடைய ஓர் ஏழைச் சிறுவனைப் பற்றியது. தியாக உணர்வும் கடமையுணர்வும் பல கதைகள்வழி கற்றுத் தரப்படுகின்றன இக் 'கதை மலர் மாலை'யில்.

தமிழகக் கதைகள்[2]

பண்டைக் காலத்து அரசர் வாழ்க்கை, புலவர் நெறி, அரசர் - புலவர் உறவு இவை பற்றிய இலக்கியச் செய்திகளைக் கதை வடிவில் ஆக்கி இளம் நெஞ்சங்களில் பதிய வைக்கும் முயற்சியே 'தமிழகக் கதைகள்' என்னும் கதை நூலாகும். ஔவையாரைப் பற்றிய செய்தி இதனுள் இடம்பெறுகின்றது. 'உள்ளம் ஒன்றுபட்ட நண்பர்கள்' என்ற கதை, கோப்பெருஞ் சோழனையும் பிசிராந்தையாரையும் பற்றியது. 'பெண் கொலை புரிந்த நன்னன்' புலவர்க்கு வாயிலை அடைத்தவன். எனவே, புலவரால் பாடப்படா தொழிந்தான். தன் ஒரே மகனை ஆழியில் இட்டு மடித்தோனாகிய நீதி தவறாத பெருமன்னன் மநு நீதிச் சோழன் கதை இதில் இடம் பெற்றுள்ளது. வறுமையால் வாடிய பெரும் புலவர் ஒருவருக்காகத் தன் தலையையே வழங்கி மங்காப் புகழ்பெற்ற குமண வள்ளலை இக்கதையுள் காணலாம். 'புலவர் உதவி'யில் இளந்தத்தன் என்னும் புலவரை ஒற்றர் என நினைந்து மன்னன் கொல்ல எண்ணியபோது கோவூர்க்கிழார் அவனைத் தடுத்து அறிவுறுத்திய திறம் பேசப்படுகிறது. மகளிர் வீரம் -'மூதின் முல்லை'த் திணை குறிக்கப்பட்டுள்ளது. அண்ணனுக்காக அரசு துறந்த இளங்கோவைத் தமிழறிந்த எவரும் மறக்க முடியாது. இச்சங்க இலக்கியச் செய்திகளையெல்லாம் குழந்தை உள்ளங்களில் எளிதாகப் பதியும்படியாகத் தமக்கே உரிய இனிய எளியநடையில் விளங்க வைத்துள்ளார் டாக்டர் மா. இராசமாணிக்கனார்.

சிறுகதைக் களஞ்சியம்[3]

'சிறுகதைக் களஞ்சியம்' என்னும் தலைப்பில் பகுதி - I, பகுதி - II, பகுதி - III என மூன்று புத்தகங்கள் எழுதியுள்ளார் மா. இராசமாணிக்கனார். ஏழைகட்கு உதவுதல், தன் வேலையைத் தானே செய்தல், நன்றி மறந்த யானை, வீட்டைக் காத்த பூனை, நன்றியுள்ள நாய், போர்க்களத்தில் (சங்கேத ஒலி) கொம்பு ஊதித் தன் நாடு காத்து உயிர் நீத்த வீரன், காகங்கள் , நாய் - பூனை ஒற்றுமை, கொத்தர் கற்றுத்தந்த பாடம் என்பன போன்ற கருத்துடைய கதைகளை முதற் புத்தகத்தில் காணலாம்.

நன்றி மறவாத யானை, குதிரைகளின் மீது சவாரி செய்த குரங்கு, கிளியின் எச்சரிக்கை, உதவிக்கு உதவி, பூனையும் புறாக்களும் போன்ற 22 கதைகளையுடைய நூல் சிறுகதைக் களஞ்சியம் பகுதி II. குரங்கும் வெள்ளாடும், கிளியும் கண்ணாடியும் முதலான கதைகள் படிக்கும் குழந்தைகட்கு நகையூட்டுவனவாக அமைந்துள்ளன.

சிறுகதைக் களஞ்சியம் மூன்றாம் பகுதியில் 29 கதைகள் இடம்பெற்றுள்ளன. ஓடிப்போன பூனை, குரங்குகள் முயற்சி, புதிய நோயாளி, கிளியும் பூனைக்குட்டிகளும் என்பன போன்ற கதைகள், படிக்கும் இளம் நெஞ்சங்களுக்கு மகிழ்வூட்டுவனவாகும். 'பொறுமையுள்ள விமான ஓட்டி' மூலம் பொறுப்புள்ள அதிகாரிகள் நிச்சயமாகப் பொறுமை என்னும் அணி அணிந்து விளங்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார். குழந்தை உள்ளத்திலேயே பிறர் நலம் பேணும் பெற்றி அமைதல் வேண்டும் என்ற அருங்கருத்து பல இடங்களில் வலியுறுத்தப்படுகிறது. 'பிசாசு! பிசாசு!' என்னும் சிறுகதை இரவில் வீட்டில் பெற்றோருக்குத் தெரியாமல் திருடித் தின்னமுயலும் சின்னஞ் சிறார்க்கு அறிவுரை கூறும் வகையில் அமைந்துள்ளது. 'நாய்விலை அரையணா' என்பது வாயில்லாப் பிராணிகளிடம் மக்கள் பேரன்பு கொள்ளல் வேண்டும் என்ற கருத்தைத் தெளிவுபடுத்துகின்றது.

இராஜன் சிறுவர்க்குரிய கதைகள்[4]

இதனுள் புண்டரீகர், நாய் காட்டிய வீரச் செயல், நம்பிக்கைத் துரோகம், உத்தம சகோதரன், குமண வள்ளல், அடக்கமுள்ள அரசன், நல்லவர் நேசத்தால் நற்கதி பெறலாம்,

திருமலை நாயக்கர், சொல்லாமற் செய்வர் பெரியார், கடமையே சிறந்தது, அன்னதானமே அனைத்திலும் சிறந்தது போன்ற பதினைந்து சிறுகதைகள் இடம் பெற்றுள்ளன.

ஒரு வியாபாரியின் மூன்று மகன்களும் அவர்களின் அரிய செயல்களும் குறிக்கப் படுகின்றன, 'ஓர் அரிய செயல்' என்னும் கதையினுள். நியாயமான - மனச் சான்றுள்ள மனிதன் செய்யும் செயலைச் செய்தான் மூத்த மகன். ஏரியில் விழுந்த பையனைக் காத்துக் கரைசேர்க்கும் புகழ்மிகு செயல் செய்கிறான் இரண்டாம் மகன் . மூன்றாம் மகன், தன் பகையாளியின் உயிரைக் காப்பாற்றிய அருஞ்செயல் செய்து புகழ்பெற்றான். இவனது செயலே 'அரிய செயல்' என்று பாராட்டப்படுகின்றது கதையில்.

இளமையில் துறவு பூண்ட இளங்கோ அடிகளின் கதையே 'உத்தம சகோதரன்' என்பது. கடமையின் உயர்வினை எடுத்துக் காட்டும் கதையே 'கடமையே சிறந்தது' என்பதாகும். 'மங்கயைர்க்கரசியார்' என்னும் கதை, அவர் கணவரான கூன் பாண்டியன் கதையை விளக்குவதாகும் 'கொள்வதைவிடக் கொடுப்பதே நன்று' என்பது மாணவர்க்கு ஏற்ற கதை.

'கடினமானவை' என்று சொல்லப்படும் கல்வெட்டு, வரலாறு, சமயம் போன்ற துறைகளில் மிகக் கடுமையாக உழைத்து, உழைப்பின் பயனையும் பெற்றுயர்ந்த மா. இராச மாணிக்கனார், 'குழந்தை இலக்கிய'த்தையும் விட்டு வைக்கவில்லை. குழந்தைகள் உலகம் என்பது அவர் மறவாத ஒன்று என்பது மட்டுமன்று; சிறுவர் உலகும் அவரை மறவாது. இளஞ்சிறார்க்குப் பற்பல பாடநூல்களை எழுதி அறிவுபுகட்டிய டாக்டர், சிறுகதைகளின் வாயிலாகவும் குழந்தை உலகிற்குத் தொண்டு புரிந்துள்ளமை அறியத் தகும்.

கவிதை

அவர், 'குழந்தைப் பாடல்கள்',[5] 'சிறுவர் பாடல்கள்' என்ற இரு கவிதை நூல்களைப் படைத்துள்ளார். சிறுவர் பாடல்கள் என்னும் நூல் கிடைக்கப் பெறவில்லை. குழந்தைப் பாடல்கள் என்னும் நூலில் எங்கள் விருப்பம், விளையாட்டுக்கள் I, விளையாட்டுக்கள் II, விளையாட்டுகள் III, ரயில் வண்டி ஆட்டம், கயிறு இழுத்தல், காகிதக் கப்பல், படிப்பும் விளையாட்டும், தாலாட்டு-I, தாலாட்டு-II, தாலாட்டு-III, வெண்ணிலா, பூப்பாட்டு, சின்ன மாமா, பொம்மைக் கடை, நரியும் ஆடும், அண்ணன் நல்ல பையன், மேற்கு மலைத்தொடர், எங்கள் தமிழகம் என்பன போன்ற தலைப்புக்களில் இளஞ்சிறார்களுக்கு ஏற்ப, தெள்ளுதமிழ் நடையில் பாடல்களை இயற்றியுள்ளார். அவற்றுள், பூப்பாட்டு என்ற தலைப்பிற்குரிய பாடலில் சில வரிகளைக் காணலாம்.

....
    ....
தோட்டத்தில் இருப்பது தாழம்பூ
    தொடுத்து முடிப்பது மல்லிகைப்பூ
இன்பம் தருவது இருவாட்சி
    எனக்கு விருப்பம் செந்தாமரை
அழகில் சிறந்தது செந்தாமரை
    மணத்தில் சிறந்தது மல்லிகைப்பூ
தமிழரசி தாழம்பூ
    மங்கையர்க்கரசி மல்லிகைப்பூ
இசையரசி இருவாட்சி
    சிவ அரசி செந்தாமரை
....
    ....

இப்பாடலில் தம் குழந்தைகளை மலர்களோடு ஒப்பிட்டுப் பாடிப் பரவசப்படுகிறார் இராசமாணிக்கனார்.

பாட நூல்களிலும் தம்முடைய கவிதைகளைச் சேர்த்ததன் மூலம் குழந்தை இலக்கியத்தில் தமக்குள்ள ஆர்வத்தை வெளிப்படுத்திக்கொண்டார் எனலாம். 'தமிழ்நாடு' என்ற தலைப்பில் 'நேஷனல் தமிழ் வாசகம்'[6] என்னும் நூலில் உள்ள மா. இராச மாணிக்கனாரின் பாடலைச் சான்று காட்டலாம். இது அவரின் கவிதைகளுள் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

வயல்வளத்தில் மிகச்சிறந்தே வளம்பெறும் நன்னாடு
வள்ளல்களும் புலவர்களும் வாழ்ந்திருந்த நாடு

என்று தொடங்கும் அந்தப் பாடல் படித்து மகிழத்தக்கது. தாம் எழுதிய, பதிப்பித்த பாடநூல்களில் இவர் எழுதி இன்னும் தொகுக்கப்படாமல் இருக்கும் கவிதைகள் பல.

டாக்டர் அவர்களின் இலக்கிய வாழ்க்கையின் ஆரம்பம் சிறுவர்க்கான பாட நூல்களையும் கதைகளையும் எழுதுவதிலேயே தொடங்கியது என்பதை அவருடைய இலக்கியப் பணிகளை அணுகிப் பார்ப்பவர் புரிந்துகொள்ள முடியும். பின்னர் அவருடைய உள்ளம் கல்வெட்டு, வரலாறு, சமயம் பற்றிய ஆராய்ச்சியில் முழுமையாக ஈடுபட்டதனால், 'குழந்தை இலக்கியத்' துறையில் இருந்து தம்மை விடுவித்துக்கொள்ள வேண்டியவரானார்.

குழந்தை இலக்கியத்தைத் தொடர்ந்து எழுதுவதிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டாலும் முழுமையாக அதனை மறந்துவிடவில்லை என்பதைத் தம் இறுதிக் காலம்வரை அவர் பாடநூல்களையும் துணைப்பாட நூல்களையும் எழுதியதிலிருந்து உணரலாம். அத்துறையில் அவரால் நிறைய நூல்கள் எழுதப்படவில்லை என்றாலும் அவருடைய பணிகள் எளிதில் ஒதுக்க முடியாதவை.

குறிப்புகள்

1. கதை மலர் மாலை - முதற் புத்தகம், 1948 (முதற்பதிப்பு)
2. தமிழகக் கதைகள் (சங்க காலம்), 1961 (நான்காம் பதிப்பு)
3. சிறுகதைக் களஞ்சியம்:

   புத்தகம் I, 1949 (முதற்பதிப்பு)

   புத்தகம் II, 1949 (முதற்பதிப்பு)

   புத்தகம் III, 1949 (முதற்பதிப்பு).

   இம்மூன்று பகுதிகளும் சேர்ந்து ஒரே நூலாக, 'சிறுகதைக் கொத்து' - மூன்றாம் பாகம் என்ற பெயரில் அதே பதிப்பகத்தாரால் வெளியிடப்பட்டுள்ளது.
4. இராஜன் சிறுவர்க்குரிய கதைகள், 1948 (முதற்பதிப்பு)
5. குழந்தைப் பாடல்கள், 1960 (முதற்பதிப்பு)
6. இரண்டாம் படிவம் - இரண்டாம் பிரிவு, 1951 (முதற்பதிப்பு)

❖ ❖ ❖



கவிதை மலர்கள்

கருத்தழியச் சொல்தேயக்
　　　　கடுநோயில் தமிழ்வாடப்
பொறுத்தருளும் பண்புடைய
　　　　புலவர்களால் நோய்பெருக
வருத்திவரும் உயிர்க்கொல்லி
　　　　வடமொழியே என்றார்ந்த
மருத்துவரே மாராச
　　　　மாணிக்கப் பெரும்புலவீர்!

கவியரசு கண்ணதாசன்
மதுரை எழுத்தாளர் மாநாட்டுக்
கவியரங்க முன்னுரையின் ஒரு பகுதி
கண்ணதாசன் கவிதைகள் (முதல் தொகுதி)
1959, ப. 303

புலவர் மாணிக்கம் பொலிக!

கவியோகி சுத்தானந்த பாரதியார்

1. மாணிக்கத் தாயார்
மாணிக்க மணியாம்
மாசறு ராசமாணிக்கம்
காணிக்கை யாகத்
தன்னையே தந்தான்
கண்ணெனுந் தமிழ்வளம் பெறவே
ஆணிவே ரான
சைவத்தில் ஊன்றி
அறம்பொரு ளின்பமும் செழித்தே
மாணுறு பட்டம்
பதவிகள் எய்தி
மகிழ்ந்தனன் புவிபுகழ்ந் திடவே.

2. படிப்படி யாகப்
படித்தறி வேறிப்
படிக்க நன்னூல்களை யாக்கித்
துடிமனத் திட்பம்
வினைத்திட்ப மாகத்
தூயநற் றமிழ் விளைவேறி
அடிமுதற் பள்ளி
ஆசா னாய்ப்பின்
ஆய்வுறு பல்கலைக் கழக
முடிமணிப் புலவன்
பண்டா ரகனாய்
முத்தமிழ் வித்தகன் முதிர்ந்தான்.

3. முதுபெருஞ் சங்கத்
தமிழ்க்கடல் கடைந்தே
முத்தெடுத் தணிமணி கோத்தான்
துதிபெறு கம்பர்
சேக்கிழார் இளங்கோ
தொல்காப்பியர் வள்ளுவனார்
பதிமணி நூல்கள்
பல பல தேர்ந்தே
பாடஞ்சொல் பண்டித மணியே
முதிய நற்றமிழின்
மறுமலர்ச் சிக்கே
முரசதிர் வீறுடன் முனைந்தான்.

4. முன் மொழியான
தென்மொழி தமிழே
முதன்மை பெற்றோங்கிட முனைந்தான்
இன்னிய தமிழ்ப்பண்
பாட்டினை மாந்தர்
இயல்புறப் பயின்றிடச் செய்தான்
தன்னிக ரற்ற
தனித் தமிழ்ப் புலவன்
தன்மனை மக்களெ லாரும்
மன்னுநற் றமிழின்
மரபினி லென்றும்
வாழ்வாங்கு வாழ்ந்திட வகுத்தான்

5. திகழ்சென்னை மதுரை
சிதம்பரக் கழகம்
சிறப்புறத் தொண்டுகள் செய்தான்
அகழ்ந்துகல் வெட்டுக்
களையளந் தளித்தான்
அரியபல் லவருடன் சோழர்
உகந்த பண்பாட்டை
உலகினுக் கீந்தான்
உவப்புறு மிலக்கிய வளத்தாற்
புகழ்மணங் கமழப்
பொலிவோ னிங்கே
புலவரை ஆக்கிய புலவோன்.

6. எத்தனை பட்டம்
எத்தனை பதவி
எத்தனை அறிஞரின் இன்சொல்
எத்தனை ஆராய்
விலக்கியக் குவியல்
எத்தனை பழம்பொருள் வளமை
அத்தனை சிறப்பும்
அருட்பெருந் தமிழாம்
அன்னையின் சிறப்பென உவந்தான்
முத்தமி ழன்னை
முடிமிசை திகழும்
வித்தக மாணிக்க சிவமே!

❖ ❖ ❖

நல் ராச மாணிக்கர்

அ.கி. பரந்தாமனார்

1. கலைவளர்க்கும் தமிழ்வளர்க்கும் கற்பவர்கள் நிலைவளர்க்கும்
தலைநகரம் திருச்சென்னை தனில்வந்த நாள்முதலா
கலையறிஞர் நல்ராச மாணிக்க னாரையான்
பலநிலையில் அறிந்துள்ளேன்; பகர்வேனால் அவர் பண்பை.

2. வல்லவர்க்கு வறுமையொரு தடையாக மாட்டாது;
அல்லவரே முன்னேறா தழிகின்றார் விதியென்று;
சொல்லரிய உழைப்பாலே எம்ராச மாணிக்கர்
நல்லநிலை யுற்றதனை நாமறிந்து பற்றிடுவோம்.

3. இல்லாத மாணவர்பால் இரக்கமிகக் காட்டிடுவர்;
செல்வாக்கால் பிறர்அவர்கட் குதவிசெயத் தூண்டிடுவர்;
அல்லாமல் தாமுமவர்க் குதவிடுவார் ஆனவரை;
இல்லாமல் சொல்லவில்லை இதனையான் நன்கறிவன்.

4. சொற்பொழிவுக் கவரோடு தொடர்ந்தெங்குச் சென்றிடினும்
எத்தகைய வசதிக்கும் எக்குறையும் இருந்ததில்லை;
சொற்பேச்சுக் காளுண்டு; சோற்றுக்கும் பஞ்சமில்லை;
இத்தனையும் முன்கூட்டி இயம்பிடுவர் அழைப்பவர்க்கே!

5. எவ்விடத்துச் சென்றிடினும் எக்கோயில் கண்டிடினும்
அவ்விடத்துச் சிறப்போடே ஆங்கிருக்கும் பிறசிறப்பும்
செவ்வனவே கேட்டறிந்து செப்பிடுவர் கட்டுரையில்
இவ்வகையில் அறிந்த இடம் இந்நாட்டில் பலவுண்டு

6. எம்ராச மாணிக்கர் இயற்றிய நூல் ஒன்றன்று;
நம்மாண வர்தமக்கே நல்கியநூல் நூறாகும்;
செம்பாக உரைநடையில் செய்தவையோ பலவாகும்;
அம்மம்ம! ஒருநொடியும் ஓய்ந்திருந்த தில்லையவர்!

7. கல்வெட்டு வரலாறு கருத்துமிக்க ஆராய்ச்சி
பல்லாற்றான் நூல்பலவும் பைந்தமிழ்க்குச் செய்தளித்தார்;
கல்லாரும் கற்றாரும் தமைச்சூழ வாழ்ந்திருந்தார்;
வல்லார்காண் எம்ராச மாணிக்கர் வாழ்விலும்!

8. ஓயாது வேலைசெய் திட்டாலும் உடல்வலிமை
சாயாத வாறிருக்கப் 'போர்ன் விட்டா' சாப்பிடுவார்;
ஓயாது மோர் குடிப்பார்; ஓரளவின் மேலுண்ணார்;
ஆயாது பாவியமன் அறுபதிலே ஏய்த்துவிட்டான்.

9. கற்றவருள் தம்மக்கள் தலைசிறந்து விளங்கிடவே
உற்றதொரு கடமைசெயா ஒருசிலர்போல் இல்லாமல்
பெற்றெடுத்த மக்களெல்லாம் பிறங்கிடவே செய்துவிட்டார்;
அத்தகையர் எம்ராச மாணிக்கர்; அறிவீராய்!

10. எம்ராச மாணிக்கர் இன்றில்லை என்றிடினும்
அன்னோர்தம் புகழ்என்றும் அழியாது நிலைத்திருக்கும்;
என்றாலும் அவர்மக்கள் அப்புகழை அழிக்காது
நன்றாக வாழ்ந்திடவே நம்பனருள் வேண்டுவனே!

❖ ❖ ❖

வாழிய புகழே!

புலியூர்க் கேசிகன்

1. பொதியமலைச் சாரலிலே
பூத்தலரும் சண்பகத்தின்
புத்தம் புதுமலர்போற்
பொலிவமைந்த மேனியினான்!

2. எடுத்துவைக்கும் காலடியில்
எண்ணமென ஆயிரங்கள்
தொடுத்துவக்கும் மனவளத்தில்
துணையில்லாத் தனித்திறலான்!

3. உதயத்துச் செங்கதிர்போல்
ஒளிதாங்கி மின்னலிடும்
இதயத்துச் செம்மையிலே
இன்றமிழே ஏற்றிருந்தான்!

4. பட்டஇடம் தமிழாக்கிப்
பலதுறையும் தனதாக்கி
இட்டமுடன் தமிழ்ப்பணியே
இயற்றிமனம் களித்திருந்தான்!

5. முயற்சியெனும் ஆள்வினைக்கே
முதலுவமை தானாகி
அயர்ச்சியெனும் சொல்லொதுக்கி
அநுதினமும் உழைத்துவந்தான்!

6. அறிவை வளர்ப்பதிலே
ஆராத காதலுடன்
செறிவைத் தினம்பெருக்கிச்
சிறப்போடே தான்திகழ்ந்தான்!

7. அமுதைத் தமிழாக்கி
அருஞ்சுவைகள் தாமேற்றி
எமதென்றே யாம்உண்ண
எடுத்தளித்துத் தான்மகிழ்ந்தான்!

8. தென்குமரி முத்தெடுத்துச்
செம்பொன்னிற் சேர்த்திழைத்தே
நன்கமைக்கும் நல்லணிபோல்
நல்லபல நூலளித்தான்!

9. தாக்கித் தமிழ்கெடுக்கும்
தறுதலையர் நெஞ்சுரத்தைப்
போக்கித் தமிழ்காக்கும்
போர்ப்படையின் முன்னின்றான்!

10. கேட்டார் அறிவடையக்
கிளர்தமிழே தான்பேசி
நாட்டார் மனமெல்லாம்
நாடிவரத் தானுயர்ந்தான்!

11. முன்னோர் வரலாற்றை
முயற்சியுடன் தான்தேடிப்
பின்னோர்நாம் பெற்றிடவே
பெருமையுடன் வகுத்தளித்தான்!

12. பள்ளிச் சிறார்கள்மனம்
பண்படவே பலநூல்கள்
அள்ளிக் கொடுத்தவர்தம்
அறிவுநலம் காத்துவந்தான்!

13. சேக்கிழார் செய்யுளிலே
சிந்தைகனிந் தென்றென்றும்
வாக்கினால் அப்பெருமை
வழுத்தியுளம் சிவமானான்!

14. இல்லறத்தை நல்லறமாய்
இனிதியற்றி யாவருக்கும்
நல்லறத்தைப் பேணவழி
நன்முறையிற் காட்டிநின்றான்!

15. அன்பிற் கனிந்துவரும்
அமுதான தன்பேச்சால்
நண்பிற் பலபேர்கள்
நாள்தோறும் சேர்த்துவந்தான்!

16. புகழைப் புவியிருத்திப்
புதல்வர்களைத் தானுயர்த்தி
இகழை விதிக்கேற்றி
இறைசிவத்தோ டொன்றானான்!

17. மாராச மாணிக்கம்
மாத்தமிழ்ச்செம் மாணிக்கம்!
பேராலே தமிழ்போற்றிப்
பின்னுளர்நாம் வாழ்ந்திடுவோம்!

18. வாழிய மாராச
மாணிக்கர் வண்புகழே!
வாழிஅவர் நற்குடும்பம்
வளர்பயிர்போல் வாழியவே!

19. வாழி அவர்வளர்த்த
வண்தமிழ் இவ்வையத்தில்
ஊழிதோ றூழி
உயர்நலத்தால் வாழியவே!

❖ ❖ ❖

அதிசய அறிஞர்

ஈரோடு தமிழன்பன்

தலைமைப்
புலமை நிலையம் -
தமிழ்மொழிக்குத்
தக்க பாதுகாப்பு வளையம் -
மங்காத
இன உணர்வுக் கங்குகளின்
சங்கமம் -
ஓய்வுகள் ஓயாமல்
வேர்வை உகுத்தும்
தொடமுடியா உழைப்புகளின்
தொகுப்பு -
இவையெல்லாம் சேர்ந்து
இயற்றிவைத்த பெயர்
மா இராசமாணிக்கம்.

இவர்
வரும்வரையில் காத்திருந்து
வரலாறு தமிழர் வீட்டு
வாசலுக்கு வருகை தந்தது
நகங்களையும்
விளக்காக்கி விரல்களால்
துழாவியவர்
கைகளின் மூலமாய்ச்
செப்பேடுகள் கல்வெட்டுகள்
கடந்த காலக்
கருவூலமாய்க் கிடைத்தன.

கடல்மல்லைக்
கற்கோயில் சிற்பங்கள்
தம்
கர்ப்ப காலம் இதுவென்று
கண்டறியக் கற்றன
இவர் எழுதிய பல்லவர் வரலாற்றை.
விபூதி நாயன்மார்கள்,
சேக்கிழாரை இவராய்ந்த
வேளையிலே

கட்டியணைத்துக்
கன்னத்தில் முத்தமிட்டு
உண்மை உரைக்கும் படி
உட்கார்ந்து விட்டார்கள் இவர்வீட்டுத்
திண்ணையிலே.

உயிரில்
உணர்வில் தமிழ்ப்பற்று
ஓயாது இயக்கியது இவரை
எதற்கு? எல்லாவற்றையும்
சம்பளப்படுத்தவா?
இல்லை
தமிழரின் மேன்மையை
அம்பலப்படுத்தத்தான்.

மாராவின்
எழுத்துக்கள் தமிழினத்திற்கு
மாறான
எழுத்துக்களாய் இருந்ததில்லை.
உண்மைகளை
ஓரம்கட்டிவிட்டு ஆய்வுகளின்
உள்ளே போய்க்
கைந்நிறையப் பொய்களை
அள்ளிவராத
இராசமாணிக்கனார் வார்த்தைகளை
வரலாறு
நம்பியது முதலில்! அந்த
வரலாற்றை
அறிவாளர்கள் நம்பினார்கள் பிறகு!
பள்ளிப் பறவைகளுக்கு
அள்ளி இவர் இறைத்த
தீனியில்
அத்தனையும் அறச் சத்து; தமிழ் ஊட்டம்!
பாடநூல்களை
மூட நினைக்காததால்
மூடர்களானதில்லை மாணாக்கர்.
மூடியிட்ட
பேனா முள்ளும்
தேன் பிலிற்றிய தெனில்
எழுதிய வார்த்தைகளில்
என்ன கிடைத்திருக்கும்
தின்னத் துடித்தவர்க்கு?
பாடங்களா
நடத்தினார் இராசமாணிக்கனார்?
உயர்ந்த சரக்கு
ஓடங்கள் செலுத்தினார்
கற்பாரின் உள்ளக் கரையோரம்

ஏற்றுமதி வெளிச்சம்
கண்டவர்கள் ஏராளம்!

மொய்க்கத் தெரியாத
வண்டுக்கும்
முத்தமிழைத் துய்க்க
முறையிது வென்று வகுப்பறையில்
பூங்காவைத் திறந்து வைத்த
அதிசய ஆசிரியர் அறிஞர் மாஇரா.

முத்தாக
ஒரு மாணவனை உருவாக்கல்
பத்துப்
புத்தகம் படைப்பதற்குச்
சமம் என்பேன்.
பத்து முத்துப்
புத்தகம் படைப்பதுவோ
ஆயிரம் மாணிக்க மாணாக்கரை ஆக்குதற்குச்
சமம் என்பேன்.
இவ்வகையில்
சமன்பாடு தடுமாறச்
சரிதம் படைத்த இவரோடு
உடன்பாடு
தமிழுக்கென்றால்
மாறுபாடு
எவர்க்கிதில்.

❖ ❖ ❖

மாணிக்க மலை

வல்லம் வேங்கடபதி

மாணிக்க மான ராச
மாணிக்க னாரோ வீணை
வாணி(க்)கை எடுத்துத் தந்த
வடிவழகுத் தமிழின் வீணை;
பேணி(க்)கை ஏந்தி நாமோ
பெருமையாய் மீட்டு கின்ற
ஆணிப்பொன் வீணை; பாடும்
அறிஞர்க்கோ அறிவு வீணை!

முன்னேற்ற வெள்ளம் பாய்ந்த
முத்தாறு; கல்வி யென்னும்
மின்னேற்றம் பாயப் பாய
மின்னிய நீல வானம்!
என்னேற்றம் எவர்பெற் றாலும்
இவர்ஏற்றம் தனக்கு முன்னே
பின்னேற்றம் ஆன தன்றிப்
பெரிதேற்றம் ஆன தில்லை!

நல்லவர்; நல்லார் போற்றும்
நயத்தினர்; பொன்கு ணத்தர்!
வல்லவர்; வல்லார் வாழ்த்தும்
வலத்தினர்; செயல்தி றத்தர்!
அல்லவர் எவரென் றாலும்
அவர்தமை திருத்த வல்ல
சொல்இவர் சொல்லே யாகும்;
சோர்விலாச் செயலு மாகும்!

வரலாறு படைத்த வெற்றி
வண்டமிழ் குலத்திற் கிங்கே
வரலாறே இல்லை யென்னும்
வசையினை ஒழித்துக் கட்ட
வரலாறு எழுதி வைக்கும்
வழக்கத்தைப் பழக்க மாக்கி
வரலாறு படைத்த செம்மல்;
வணக்கத்துக் குரிய அண்ணல்!

முடிமன்னர் மூவர் தங்கள்
முகவரி தன்னை இந்த
விடிவெள்ளி மேதை யன்றோ
விளக்கமாய் எழுதித் தந்தார்!
கொடியேற்றி விழாவெ டுத்துக்
கொண்டாட வேண்டும் ராச
முடிமாணிக்க மான எங்கள்
முதறி வாளர் தொண்டை!

முன்னவர் இவரைப் போன்று
மூவேந்தர் கதையைச் சொல்லப்
பின்னவர் ஒருவர் இன்னும்
பிறந்திடக் காண்கி லேன்நான்!
என்னிவர் திறன்தா னென்றே
என்னுளோர் வியப்புத் தோன்ற
மன்னவ ரானார்! ராச
"மாணிக்க மலை"யாய் நின்றார்!

❖ ❖ ❖

வரலாற்றுப் புதையலை வாழ்த்துவோம்

மு. பி. பாலசுப்பிரமணியன்

1. பணிவுடைமை நெஞ்சத்தின் பழைய வார்ப்பு
பண்புடைமை உள்ளத்தின் கவன ஈர்ப்பு!
துணிவுடைமைக் கோபுரத்தின் கலசம்; நெஞ்சத்
துடிப்புடைமை எதிரொலிக்கும் கொள்கைக் குன்றம்!
கனிவுடைமை யால்கவரும் காந்தக் கண்கள்!
கருத்துடைமை யால்சிறக்கும் மேடைப் பேச்சு!
அணிஉடைகள் மிகஎளிமை; டாக்டர் மா.ரா.
அகத்துடைமை தமிழ்ஒன்றே; தமிழ்ஒன் றேதான்!

2. பல்லவரின் வரலாறு போன்ற நூல்கள்
பலவற்றைப் படைத்தவராம் டாக்டர் மா. ரா.
வல்லவராம் கல்வெட்டில்; இலக்கணத்தில்
வரிப்புலியாம்; தமிழாய்ந்த உள்ளம் பெற்ற
நல்லவராம்; தமிழகத்தின் வரலாற் றேட்டில்
நற்பெயரைப் பொறித்தவராம்; தமது மக்கள்
எல்லோர்க்கும் தமிழ்ப்படிப்பே சொத்தாய் ஈந்தோர்
இராசமாணிக்கம் போல யாரே உண்டு?

3. பள்ளியிலே தம்பணியைத் தொடங்கி, சென்னைப்
பல்கலையின் கழகத்திற்(கு) உயர்ந்த மேதை;
தெள்ளுதமிழ் ஆராய்ச்சி ஆர்வம்; வாழ்வில்
தினம் உழைப்பு, கடும்முயற்சி, கண்டபாதை;
உள்ளத்தால் தமிழ்உணர்வால் உழைப்பால் அன்பால்
உயர்ந்தவராம் மா.ரா.வின் புகழும் மாறா!
வள்ளுவரின் அடிச்சுவட்டில் வாழ்ந்த அந்த
வரலாற்றுப் புதையலைநாம் வாழ்த்து வோமே!

❖ ❖ ❖

மன்னு புகழ் மாணிக்கம்

மயிலை. முத்தெழிலன்

சிரிக்கின்ற மலர்முகத்தன்; அன்பின் தேக்கம்
சீரியநற் பெயராளன், செய்கைப் பாக்கம்;
தறிபோன்றே நட்பதனை நெய்யும் நல்லோன்;
தகைசான்ற பேச்சாளன்; எழுத்தில் வல்லோன்
விரிபுகழான் விழுமியசெந் தமிழைப் போன்றே
விலாநோகச் 'சிரிப்புமழை' பொழியும் மேகம்;
அரியபல நூல்தந்த அறிவின் ஊற்று;
அறிஞருளம் மகிழ்கின்ற தென்றற் காற்று!

கல்லெழுத்தைக் கண்டறிந்து தமிழர் வாழ்வைக்
கவினுறவே ஆய்தலிலோ ரின்பங் கண்டோன்!
பல்லில்லாப் பாப்பாவும் மகிழும் வண்ணம்
பாங்குறவே பாடல்பல படைத்துத் தந்தோன்;
இல்லத்தா ரனைவரையும் கற்கச் செய்தே
இசையுறவே வித்தகராய் இலங்கச் செய்தோன்!
ஒல்லும்வகை பொதுப்பணிக ளாற்றி வந்தோன்;
உயர்வாளர் அறிஞர் (இ)ராசமா ணிக்கனாரே!

எந்தைதிரு மயிலைசிவ முத்துத் தோழன்;
என்றென்றுந் தமிழறிந்தார் நலனே எண்ணும்
சிந்தையினன் சீர்திருத்தம் பேச்சி லின்றிச்
செய்கையிலே காட்டியநற் செம்மல்; சின்னக்
கந்தையிலே அரசினரைக் கலங்க வைத்தோன்
கருப்புக்கொடிப் போராட்டக் காலந் தன்னில்!
முந்திடுவான் இலக்கியநல் விருந்தே யுண்ண,
முடங்கியுளம் நடுங்கிடுவான் புகழ்வந் துற்றால்!

இரவென்றும் பகலென்றும் பாரா தென்றும்,
எழுதெழுதிக் குவித்திட்டோன் நாளும் பணத்தின்
வரவிற்காய் எழுதாத வழக்கங் கொண்டோன்
வஞ்சித்து உயராத பண்புக் குன்றம்;
அரசுதனில் அமைச்சராய்த் தமிழா சிரியர்
அமர்கின்ற காலம்பொற் கால மென்றோன்!
உரத்தினிலே இளங்கோவன்; உள்ளத் துண்மை
உரைப்பதிலே எவருக்கும் அஞ்சா மறவன்!

தனக்கென்று ஒருபாதை வகுத்துக் கொண்டோன்
தமிழுக்கென் றதையொதுக்கி உழைத்து வந்தோன்
இனமென்றால் தமிழரினம் என்பான் என்றும்
இனிதென்றால் தமிழ்நூல்கள் படித்தல் என்பான்
சினமென்றால் அறியாதான்; தமிழின் பகையைச்
சிரிப்பினையே சொல்லாக்கித் தாக்கிக் கொல்வான்
நினைவெல்லாம் நனவாக்கி வெற்றி கண்டோன்
நீள்புகழால் நிலைத்தென்றும் நிலத்தில் வாழ்வான்!

ஆட்சிவரும்; மாறிவிடும் அதற்காய்க் கொள்கை
அடகுவைத் திடுவதனை வெறுத்தோன்; தமிழின்
ஆட்சிக்கு வழிகாட்டும் நெறியை நன்றே
அமைவாக வகுத்திட்ட ஆற்றல் சான்றோன்!
காட்சிக்கு எளியவனாய்த் தோற்றங் கொண்டோன்
கடமையதன் காவலனாய் உயர்ந்து நின்றோன்
மாட்சிக்கோர் மாணிக்கம் உண்டோ என்றால்
மன்னுபுகழ் இராச மாணிக்கம் என்பேன்!

❖ ❖ ❖

பெரும் புலமை இராசமாணிக்கனார்!

ந.ரா. முருகவேள்

பெரிய புராணம், வரலாற்றுப்
பெருமை சான்ற மெய்ந்நூலென்(று)
அரிய சிறந்த ஆராய்ச்சி,
அறிஞர் வியப்ப, நாடனைத்தும்
தெரியச் செய்த பெருந்தகையார்
செம்மல் இராச மாணிக்கர்,
உரிய முறைதந் தருள்நூல்கள்
உவந்து போற்றும் மாட்சியவாம்! (1)

வரலாற் றுண்மை, கல்வெட்டின்
வழக்காறு, இலக்கி யச்சான்று,
நிரலாற் றின்கண் தொகுத்தமைத்து
நிகரில் இராச மாணிக்கர்
தரலாற் றிடும்பல் பெருநூல்கள்
சால்பார் வரலாற் றாராய்ச்சி
உரனாற் றும்சீர்ப் பேரறிஞர்
என்ப துணர்த்தும்; உரைப்பதென்னே! (2)

தளர்ந்து தமிழும் சைவமும்தான்
தடுமா றெய்தித் தயங்குமிந்நாள்
தெளிந்த வரலாற் றாராய்ச்சி
சிறந்த சமய உணர்ச்சிநலன்
வளர்ந்து செழிக்கச் செயும்நிலையில்
வயங்கும் இவர்தம் நூல்பலவும்
விளைந்த புலமைப் பெரும்பணியாய்
விரும்பிப் போற்றத் தகுவனவாம்! (3)

'சைவ சமயம்' தமிழகத்தில்
தழைத்து வளர்ந்த வரலாற்றுச்
செய்தி பலவும், பலதலைப்பில்
சிறக்க ஆராய்ந்(து), ஒளிமணிகள்
பெய்து வைத்த எழிற்சிமிழ்போல்
பிறங்கும் சிறந்த பெருநூல்கள்
எய்த இயலாப் பெரும்புலமை
இராச மாணிக்கனார் அளித்தார்! (4)

சிந்துவெளி நாகரிகம், பல்லவர்தம்
வரலாறு, சிறப்பின் ஓங்கும்
முந்தையபத் துப்பாட்டின் முழுவிளக்கம்
முதல், புலமை முதிர்ச்சி மிக்க
செந்தமிழ்நூல் பலப்பலதாம், திருத்தகநன்(கு)
இயற்றியருள் சிறந்த சான்றோர்!
எந்தமது பேரறிஞர், இராசமா
ணிக்கர், புகழ்க் கெல்லை யுண்டோ! (5)

❖ ❖ ❖

அப்பரைப் போல் . . . . . .
ஆங்கிலேயர் போல் . . . . . .

மனசை ப. கீரன்

கல்வெட்டு, வரலாற்றின் ஆராய்ச்சி நோக்கு
கனிந்தவராய்ப் புலவரிலே விளங்கியவர் என்றே
வல்லவராய் நனிசிறந்தார் ஒருவரெனில் இராச
மாணிக்கர்! மிகையில்லை! மொழியுலகே கூறும்!
தொல்லுலகை ஒளிகாட்டிச் சுட்டியநற் சான்றோர்!
தொட்டுமொழித் தொன்மையினைச் சொல்லியபேர் ஆசான்!
கல்வியிலே சிறந்தவராய்க் கமழ்ந்தபெரும் அண்ணல்!
கடனாற்றி நிறைகுடமாய்ப் புகழ்விளங்கும் தோன்றல்!

வாலாசா பாத்தினிலே மாநாட்டை இந்து
மதம்விளங்கப் பல்லாண்டின் முனம்செய்தார், முந்நாள்!
நூலாயும் குருமுருக வேளோடு சென்றேன்!
நோக்குயர்ந்த தருமபுர அடிகளாரும் ஓங்கி
ஆலாகத் திகழிராச மாணிக்கர் ஆங்கே
அருகிருந்து நாள்மூன்றும் பழகிடவும் பெற்றேன்!
மேலான செல்வியரும் மருமகளும் சேர்ந்தே
வியன்சமயப் பணியாற்றல் விம்மிடவே கண்டேன்!

'சமயத்தோர் மறுபிறவி எடுக்காமல் வீடு
தழுவிடவே விரும்பிடினும், பிறந்திட்டால் மீண்டும்
கமழுகிற தமிழகத்தில் தமிழ்ச் சேயாய்த் தோன்றக்
கருதுகிறேன்' என் றிட்டார், மாணிக்கர்; கேட்டேன்!
சமயத்தோர் மாநாட்டில் சமயம்போல் சாற்றும்
சான்றோர்போல் இவரில்லை! தணியாத காதல்
தமிழின்பால் பொருந்தியதைப் புகன்றிட்டார், அந்நாள்!
சால்புணர்ந்தேன்! தமிழன்னை தகவில்சேய் அன்னார்!

தென்றலது பொதிகையிலே உலவுமென்பார்; பாரில்
செந்தமிழே இனிமையென்பார் செப்புவன கேட்போம்!
அன்றன்னார், "சோறுசற்றே வேகவில்லை" யன்றோ?
அங்கிங்கே செல்வழியில் உசாவிட்டார், ஆன்றோர்!

மன்றாடும் பெரும்புலவர் பழகுங்கால் கன்றாம்
மாணவனாம் எனைப்போல்வார் மகிழ்விக்கும் மாண்பின்
நன்றான தென்றலவர்! உலவுமிடம் எல்லாம்
நடைபயிலும் தமிழினிமை சுவைத்திருந்தேன், அம்ம!

புலவருலா செங்கைதிருப் பாலைவனம் போலாம்
புகழூர்கள் பேருந்தில் இரண்டேறிச் சென்றோம்!
தலமமைந்த வரலாறு காணமுனம் சென்றே
தகவலெலாம் திரட்டிட்டார்! எம்முடனே சேர்ந்து
குலவுபுகழ் ஊர்ப்பெருமை கல்வெட்டால் காட்டிக்
குழுமியஊர் மக்களெலாம் பெருமையுறச் சொன்னார்!
நலமான அவர்முயற்சி வாழ்வெல்லாம் செய்தார்!
நாவரசர் பணியேபோல் ஊரெல்லாம் தோய்ந்தார்!

தஞ்சையிலே மதுரையிலே திருக்கோவில் சுவர்கள்
சாந்துடனே செம்மண்ணும் சுண்ணாம்பும் தீட்டி
விஞ்சுபுகழ் விளம்புகிற கல்வெட்டு மூடும்
மிகவருத்தும் இழிசெயலை இடித்துரைத்தார்; கேட்டேன்!
துஞ்சாத அறிதுயிலான் கோவில்கள் எங்கும்
சுண்ணாம்பும் செம்மண்ணும் பட்டையிடக் கண்டால்,
கொஞ்சுதமிழ்ச் சிறப்புணர்த்தும் கல்வெட்டுக் கண்ட
குரிசிலவர் வேட்கையங்கே குமுறிடலைக் காண்பேன்!

எங்களது மாவட்டம் வடாற்காட்டில் எம்மூர்
எழிற்புறத்தே திகழ்தேவி காபுரமும் செஞ்சி
மங்காத புகழெல்லாம் வரைந்தளித்துச் சொன்னார்!
மாநிலத்தில் இவ்வணமே பல்லோரும் தம்மூர்
தங்குபுகழ் மாணிக்கர் சாற்றியவை காண்பீர்
தமிழ்ப்பணியை மேனாட்டோர் தகைமையிலே அன்னார்
எங்குமுள திருக்கோவில் கல்வெட்டால் ஆய்ந்தே
இயம்பியுளார்! அவர்பணியை இனியாரே செய்வார்?

வாழ்ந்துயர்ந்த மாணிக்கர் மக்களெலாம் பேறு
வகையாகப் பெற்றோங்கிக் குடிவிளங்க வேண்டும்!
ஆழ்ந்தகன்ற புலமையெய்தும் முத்துக்கள் ஊறும்
அரும்இராச மாணிக்கர் போல்சான்றோர் வாழ்க!
வாழ்ந்துயர்ந்த தமிழன்னை பண்பாடும் தோய
வளர்தமிழின் புலவர்கள் எவர்க்குமிணை இன்றிச்
சூழ்ந்தகன்ற பாரினிலே துலங்கிடவே வேண்டும்!
தோன்றலவர் அடிச்சுவட்டில் தொண்டாற்றல் வேண்டும்!

❖ ❖ ❖

தமிழர் காதை!

தமிழழகன்

இருண்டிருக்கும் காலத்துக்(கு)
        ஏற்ற தீபம்
    இலக்கணநல் இலக்கியங்கள்
        போற்றும் ருபம்
திரண்டிருக்கும் கடல்அறிவால்
        திளைத்த தோணி
    தெய்விகத்தில் கிளைத்த பெரும்
        புலமைக் கேணி
சுருண்டிருக்கும் தமிழருக்கோர்
        சொற்சு ரங்கம்
    சொற்பொழிவில் ஆராய்வில்
        கோடித் தங்கம்
மருண்டிருக்கும் நமக்கெலாம்மேம்
        பட்ட மேதை
    மாராச மாணிக்கம்
        தமிழர் காதை!

❖ ❖ ❖

தகைசான்ற மாணிக்கம் *

அருணா பொன்னுசாமி

தமிழுலக வரலாறு முறைபி றழ்ந்து
    தகுமாறு கண்டாய ஆளில் லாமல்
தமியளாகத் தமிழ்த்தாய் கவன்ற போது,
    தடையற்ற கற்பனையால் சீர்சால் ஆய்வால்
தமிழ்வேந்தர் மூவரசர் வரலா றன்றித்
    தனிவேந்தர் பல்லவரின் ஆட்சிப் பாங்கைத்
தமிழுலகம் அறிந்திடவே கண்டு வைத்த
    தகைசான்ற இராசமாணிக் கனாரே நீவீர்

வரலாற்றுப் பெட்டகத்தைத் திறந்து காட்டி
    வாழ்ந்தவர்கள்தம் நிலைமரபை அறியச் செய்தீர்!
தரஇயலா நூற்களையே தமிழ்த் தாயின்
    தாட்களிலே அணிவித்து மகிழச் செய்தீர்!
....
    ....
தண்டமிழ் நிலைகண்டு செயல்மு டித்து
    தரணிதனில் வரலாறாய், நினைவாய் ஆனீர்!

❖ ❖ ❖

* 'இராசமாணிக்கனார் மலர்', கல்வி (திங்களிதழ்), ஜூன் 1967, ப. 2

கணித வேந்தன்! *

முகமது மைதீன்

விந்தைமிகு ஆராய்ச்சிப் படகால், கால
வெள்ளத்தை நீந்திப்பல் வெற்றி கண்டோன்!
சந்தனம்போல் குன்றாத திறனால் ஆய்வுச்
சரித்திரத்தில் தனிஇடத்தைப் பெற்று, நைந்த
கந்தையெனச் சிதறுண்ட பல்ல வர்தம்
காலத்தைக் கணக்கிட்ட கணித வேந்தன்!
முந்தையர்நம் குடியரசர் போல இன்றும்
மொழிவளர்த்த இராசர்; மாணிக்க னாரே!

❖ ❖ ❖

* 'இராசமாணிக்கனார் மலர்', கல்வி (திங்களிதழ்), ஜூன் 1967, ப. 31



English Articles

The centenary of Dr. M. Rajamanikkanar (1907 - 1967) pioneering Tamil scholar and historian, commemorated through seminars and lectures across the State this year, has thrown up an opportunity to recall the contributions of the man who broke new ground in historical research and writing.

His seminal works, 'History of Pallavas' and 'History of Cholas' rank among the time - tested historical records ever authored by a Tamil scholar.

S. Ganesan
'Scholar with deep Historical Insight'
The Hindu
2 - 3 - 2007

Dr. M. RAJAMANIKKANAR (1907 - 1967)
A Brief Biography

R. Kalaikkovan

Dr. M. Rajamanikkanar was born on 12th March 1907 at Karnool in Andhra Pradesh where his father was working as a Thasildar. Due to the transferable nature of his father's job Rajamanikkam was not able to get continuous education at that age and learnt only Telugu. The family settled for sometime at Nilakkottai in Madurai district of Tamilnadu and at that time he was able to learn Tamil, his mother tongue. Though it was not through formal education, he was able to read many Tamil books out of interest and hard work and helped his neighbours by reading out and explaining some folklore type of Tamil books which were brought by them.

At the age of ten Rajamanikkam lost his father Manikkam and stayed with his mother Thayarammal and his elder brother Ramakrishnan who was also in the government service as his father in the rank of revenue inspector. At Dindigul, the next place where the family was able to stay a year or so, young Rajamanikkam was able to associate himself with a master for physical education with whom he visited some historical sites and a local mutt. It was he, who planted the deep interest in History in the mind of Rajamanikkam and guided him in taking notes on places of interest which he visited along with him. A pontiff of the mutt taught him many things and created an awareness in him. A pontiff of the mutt taught him many things and created an awareness in him to work for a caste free society.

When the family shifted to Thanjavur, the disturbed education of Rajamanikkam made his brother to put him in a Tailor shop for a living. Though Rajamanikkam stayed there for sometime, his mind was thirsting to study. Fortune knocked at his door in the form of Father Principal of St. Peter's High School at Thanjavur. He joined the first form.

Mr. Ramakrishnan who got married to Ambujam of Cuddalore left for Andhra to join duty at some place there, leaving the young Rajamanikkam with his mother to continue his education at Thanjavur. The meagre amount of rupees 15 sent by his brother was not enough for him and he started earning by taking tuitions for the lower class students during the week ends. Since he was not able to buy all the books prescribed for his class, he borrowed them from his friends during the week ends and studied. It was a pleasant surprise for the family to know that he had passed the final school examination in the first class.

The stay at Thanjavur for a period of five years provided him good opportunities to move with great Tamil Stalwarts such as Umamahesvaram Pillai, Venkatachalam Pillai, J. M. Somasundaram Pillai, Venkatasami Nattar and others. After passing S.S.L.C. he joined as a clerk at a Board School at Orathanadu in Thanjavur district. After a month or so he came to Chennai to join as a Tamil Pandit at St. Thyagarayar Middle School. He worked there for eight years.

He was married to Kannammmal who was only an eighth form passed woman at that time. He made her pass Vidhvan examination after getting the degree himself some time before. It was during this period he was able to bloom out as a writer and a speaker. His first book was written in 1930 when he was only 23 years old.

He joined the Muthialpet High School at Mannadi as a Tamil Pandit in 1936 and worked there for eleven years, it was during this period he passed his B.O.L. and M.O.L. degrees. The M.O.L. degree was conferred on him for his extensive research on Periyapuranam, a Saivite literature written by Sekkilar, a great Tamil poet. The History of Pallavas and The History of Cholas were written by him only during this period.

He then joined Vivekhananda College at Mylapore as a Lecturer in Tamil and worked there for six years from 1947. His research on the History of Pallavas and Cholas and Periyapuranam earned him an esteemed place among scholars. The vast nature of the material that he was able to come across during his research works made him to write the Development of Saivism in South India from A.D. 300 to A.D. 1300 which brought him many laurels along with Ph. D. degree.

He joined as the Head pf the Department of Tamil at Thiyagarayar College at Madurai in 1953 and worked for five years. By then he had written more than seventy books in Tamil covering multi various fields such as Language, Religion, Society, History, Epigraphy and Culture. The debate that went on for nearly a year between himself and Mr. M. P. Sivagnanam, leader of Tamilarasu Party on the tying of 'Thali', the mangalya sutra among Tamils during wedding kindled a keen interest among the public of Tamilnadu and many interested persons participated in the State wide seminar either supporting Rajamanikkam or Mr. Sivagnanam. Later Rajamanikkam published a book on this subject which had seen many reprints.

In 1959 he joined as the reader in Tamil in Madras University and worked there till 1967 May. 'Pattuppattu Araichi' an extensive research work on the Ten Idyls, a great anthology of Sangam age was carried out by him during this period and the book was published posthumously in 1970. It was during this tenure at the University he attended the First World Tamil Conference held at Kaulalumpur, the capital of Malaysia as a member of the government delegation. He succumbed himself to myocardial infarction in May 1967 at the age of 60.

Most of his publications dealt with literature and History. He had written more than thirty biographies of various luminaries of different fields such as Freedom Fighters, National Leaders, Scientists, Great Thinkers, Munificent individuals, Great Kings and Poets of the Tamil country etc. focusing the students of schools and colleges in mind.

'History of Pallavas' and 'History of Cholas' are the two time tested works written by him in the early years of his career as a Tamil Pandit. The bibliographical lists of these two books throw light on the extensive nature of reading and referring, the scholar had made before setting his mind on these two great works. The amount of field studies undertaken by him to verify certain facts put forward by the previous Historians and to read all the important inscriptions related to the kings of the dynasties at the temples in Tamilnadu reveal the zeal and enthusiasm and the careful approach of the scholar towards writing History.

His extensive study of both the Pallva and Chola dynasties provided him rich Historical material which enabled him to work on the great epic of the Saivites, the Periyapuranam and poet Sekkilar, its writer. His earnest attempts paid dividends and he was able to present Sekkilar

as a Historian and his work as a collection of Historical material. This research out come had gained him the degree of Master of Oriental Languages (M.O.L).

The enormous data on various spheres of the religious life of Tamils poured during his research on Pallavas and Cholas made him to proceed with an extensive study of the development of Saivisim in Tamilnadu from 300 A.D. to 1300 A.D. The out come became a dissertation for the degree of Doctorate in Philosophy (Ph. D.) All these works had earned him a distinguished place among the scholars of Tamilnadu and he was uniformly appreciated by stalwarts of all walks of life.

Knowing his experience in the study of epigraphy and South Indian History, Prof. R. P. Sethu Pilllai, the then Head of the Department of Tamil, University of Madras entrusted with him the research work on the Ten Idyls, an anthology of Sangam period. Dr. M. Rajamanikkam gladly accepted the responsibility and worked for five years to produce the monumental work 'Patthuppattu Araichi' This work stands as a testimony to his knowledge in Historical Geography and the critical acumen he had exercised in this research.

Dr. M. Rajamanikkam was a great thinker. He concentrated more on the development of Tamil language, its people and the country. He had written more than ten books on these lines. He insisted that a deep knowledge in Tamil is a must for the uplift of Tamils in all aspects.

He aimed for an economically viable Tamil society and exercised all his talents to gain the same. His students fondly remember all his teachings and encouragement that made them to raise in life to high standards. To them, he was not only a great teacher but a good friend and a lovable philosopher. He spent much time with them and gave them all possible support to develop individuality among themselves.

He proposed many cooperative schemes in his novels, 'Tamilarasi' and 'Nattukku Nallavai' for the benefit of the beggars, helpless widows and the orphans. It is to be remembered here that almost all his suggestions had taken shape in the form of welfare schemes. 'Rehabilitation of beggars' was a popular scheme introduced by Dr. M. Karunanithi when he was the Chief Minister of Tamilnadu. Cooperative societies involving the widows and orphans were formed part of 'Kunrakkudi Scheme' implemented by the late His Holiness Thavathiru Kunrakkudi Adikalar. All this prove that good ideals dreamt by good souls always yield fruits.

Dr. M. Rajamankkkam is remembered even today through four student and research oriented forums formed by his sons at Chennai and Thiruchirappalli. Dr. M. Rajamanikkam Memorial School produces patriotic, energetic and enthusiastic young individuals through its educational plans. Dr. M. Rajamanikkanar Centre for Historical Research, Literary Research and Research in Journalism contribute memorable and monumental works to the enrichment of Tamil language and society.

❖ ❖ ❖

RAJAMANIKKANAR

The Man Who Lived for History As History

K. Veni Devi

History has to be constructed and reconstructed through a thorough analysis of the all available sources or in the context of new evidences that are discovered. Hence writing History is a continuous and life time work which has to be done in the real historical perspective. In this backdrop it should be specifically recalled here that M. Rajamanikkanar had dedicated his whole life in doing historical research. By the dint of his hard work, never failing spirit and diligence he had travelled far and wide in Tamil Nadu in pursuit of source materials to reconstruct the history of ancient Tamilagam. Though he is known more as a Tamil Scholar, he had produced Historical works that are referred to as sources for writing History by the later scholars.

M. Rajamanikkanar who is popularly known as Ma. Ra. in scholarly world is a prolific Tamil scholar. But among the books he had authored, History outnumbered those of literature. He is the author of more than hundred works and among these forty three titles are on Historical studies.

Historical writings of M. Rajamanikkanar are in two stages. His early works were written with the avowed aim of inculcating an interest in the study of history among younger generation. He concentrated on writing about the heroes of History. This fact is attested by the very first book authored by him under the title 'Narperum Vallalgal'. His other popular titles are 'Harshavardhana', 'Mudiyudai Muvender', 'Shivaji', 'Abraham Lincoln', 'Rajendra Cholan', 'Pandita Jawaharlal Nehru' and 'Mussolini'.

Rajamanikkanar was able to understand the spirit of younger generation. Life of the heroes make a fascinating study and the youth may even take them as role models.

Rajamanikkanar as a teacher had a personal involvement in the welfare of the student community. Teachers are role models and have a responsibility in shaping the future of the younger generation. He was never for a bridge between students and a teacher. He used to openly declare that by remaining close to the student community he could also learn from them. As a well wisher of the student community he strongly felt that his writings should benefit them. The courage of Rajendra Chola and Shivaji, the determination of Abraham Lincoln, religious tolerance of Harshavardhana and secularism of Jawaharlal Nehru have become the themes of his writing to impress the youth and make them understand the value of history in shaping the life of the individual and that of the nation.

Rajamanikkanar is reflecting the age in his earlier writings where the struggle for freedom had taken a momentum in early forties. Youth in Tamil Nadu should be aware of the rich cultural

* Paper presented in the Historiography session, South Indian History Congress held at Rajus College, Rajapalayam on 3 - 2 - 2007.

heritage of the Tamil people that has been existing from time immemorial. The Tamil culture just like the other world civilizations had flourished on the river valleys. Rajamanikkanar in his title 'Arrangarai Nagarigam' gives a vivid picture of this culture in three parts as Palarrankarai Nagarigam, Kavirikkarai Nagarigam and Vaiyaikkarai Nagarigam.

In the next stage he further delved deep into Historical research and authored works that carved a niche for him in the field of historical studies. His profound scholarship in Tamil language and literature was supportive in bringing out certain unknown facts to lime light and also he was able to present new thoughts on historical studies.

Rajamanikkanar firmly believed that History and literature are inextricably inter woven with each other. At a time when literature was set aside as imaginative and never taken as a primary source, Rajamanikkanar can be ranked as the first scholar who boldly ventured into Tamil literature to extract history from it. He was of opinion that literature is not irrelevant to History since it reflects the age. Rajamanikkanar cautions the Historians while handling the literary sources. Since literature is descriptive and imaginative the scholar should be able to make the distinction between History and Literature. This is the prime requisite that should be adopted while absorbing materials from literature. Rajamanikkanar predominantly considered this point and facts from literature were substantiated with the support of other sources and a candid interpretation of available related evidences like epigraphs. In this background the master pieces among his works are 'Mohanja daro - Sindhu Samaveli Nagarigam', 'Pallavar Varalaru' and 'Cholar Varalaru'. His well known literary treatises 'Pattuppattu Araichi' and 'Periyapurana Araichi' contain very rich materials about the socio-cultural life of early Tamils. Rajamanikkanar's thoughts in these works establish that they are historical in nature.

When the English rulers here projected the supremacy of western thoughts and culture and proclaimed that it was white man's burden to teach the east, Rajamanikkanar should have felt the need to create an awareness among the succeeding generation about the riches of the ancient culture of India. This is reflected in his writing in "Sindhu Samaveli Nagarigam". He had done a deep study of the works of stalwarts in the field like John Marshall, K. N. Dikshit and Father Heras and had consulted all the books and articles on the civilization. Even then he had never failed to bring out his own thoughts into it that are based on literary sources. An example that can be sighted here is while mentioning about the custom of "accompanying the dead" he thoughtfully writes about the practice mentioned in Narrinai, Aingkurunuru and Manimegalai.

In those times, when available source materials were limited and one has to go in search of them, Rajamanikkanar has cautiously analyzed the existing sources and ascertained that Brahmi script was discovered by the Tamils to write the Tamil language and then later on it was used for Prakrit and Pali. This was the most striking among his historical thoughts. The conclusion drawn by Rajamanikkanar in 1941 has been asserted by scholars like K. V. Ramesh and M. D. Sampath, the retired directors of Epigraphical section of Archaeological Survey of India. Recently Prof. K. Rajan of Epigraphical department of Tamil University of Thanjavar has proved the Tamil origin of the Brahmi script in the light of new evidences that are unearthed.

Pallavar Varalaru is the magnum opus among his works on History. The work is noted for the simple style, coherence in the arrangement of facts and consultation of different sources like literature, copper plates and epigraphs that are contemporary and later in existence. Rajamanikkanar is a pioneer in using field study experiences in writing history. In the days of very scant means of travel and communication system Rajamanikkanar had the mind set to take up any type of a strenuous journey to collect source materials. He felt the need to study monuments

like temples and the sculptures housed by them and the epigraphs to write an authentic history. He is first among the few who practiced this type of an approach in the historical methodology which is reflected in the 'Pallavar Varalaru'. The same method was adopted while writing the history of Cholas.

While writing about the History of the Pallavas and later the Cholas he had to go through the contemporary literature and associated later works. This iniated him to go deep into the study of Sekkilar's Periyapuranam which resulted in producing a classical work 'Periyapurana Araichi'. He was on constant tour to locate the places that are mentioned in Periapuranam and also the temples. He was able to identify them and prove the authenticity of the historical facts that are found in the work of Sekkilar. Thus Sekkilar has been proved to be a historian and Rajamanikkanar struck a blow to the idea that there is no historical consciousness in India and India has never produced a historian before 12th century work of Kalhana. His Pattuppattu Araichi is also brought out by adopting the similar type of methodology.

While writing a Historical work one should make an exhaustive study of all the available primary and secondary sources. The historian should analyze them and in case of doubt he should cross examine the facts through some other related sources and check the veracity of the facts. He has to read between the lines and a thread bear discussion should go in mind before the materials take the form of writing. Historian should be free from bias and should be courageous to expose wrong facts in History.

This methodology was adopted by Rajamanikkanar in all his historical writings. He stands as the role model to the scholars who venture into historical research. Students scholars and teachers of History to-day might have forgotten Rajamanikkanar, the doyen among Historians. But history never fails to remember the man who lived for history as history.

Reference

1. R. Kalaikkovan, Varalarrin Varalaru, Dr. M. Rajamanikkanar Centre for Historical Research, Tiruchirappalli-18, 2006.
2. M. Rajamanikkanar, Pattuppattu Araichi, University of Madras, Chennai, 1970.
3. M. Rajamanikkanar, Periyapurana Araichi, Pari Nilayam, Chennai, 1968.
4. M. Rajamanikkanar, Pallavar Varalaru, Kazhagam, Chennai, 1968.
5. M. Rajamanikkanar, Cholar Varalaru, Educational Publishing Co., Chennai, 1947.
6. Siva Arasi Muttukalathi, Ma. Era. Yennum Pugazh Ko., Varalaru Vol-1, Dr. M. Rajamanikkanar Centre for Historical Research, Tiruchirappalli.
7. M. Rajamanikkanar 75th Birthday Celebration Malar, M. Rajamanikkanar Ilakkiya Mandra Veliyedu, Tiruchirappalli, 1982.

❖ ❖ ❖




ஒளி மலர்கள்



செந்தமிழ்ச் சிற்பிக்கு மரபுவழிச் சிற்பியின் படையல்


அரும்பாவூர் ம. செல்வ பாண்டியன்



பி.ஒ.எல். பட்டம் பெற்றபோது...(1939)




நக்கீரர் கழக 26ஆம் ஆண்டு நிறைவு விழா (1967)




ஒளிப்பட உதவி: பேராசிரியர் மா. இளஞ்செழியன்



விவேகானந்தர் கல்லூரித் தமிழ்த்துறை ஆசிரியர்களும் மாணவர்களும்




தியாகராசர் கல்லூரித் தமிழ்த்துறை ஆசிரியர்களும் மாணவர்களும்




தியாகராசர் கல்லூரித் தமிழ்த்துறை ஆசிரியர்களும் பிறரும்




இராசமாணிக்கனாரின் குடும்பமும் மாணவர்களும்



வஞ்சிக்கோவன் இராதா திருமணம்



தமிழரசி வேலுச்சாமி திருமணம்



இராசமாணிக்கனாரின் கையெழுத்து



முதல் உலகத் தமிழ் மாநாட்டில் கலந்துகொள்ள கோலாலம்பூர் சென்ற தமிழறிஞர் குழுவில் இராசமாணிக்கனார்
(ஏப்ரல் - 1966)

ஒளிப்பட உதவி:
கல்வெட்டறிஞர் ஐராவதம் மகாதேவன்

University of Madras

FACULTY OF ARTS.


The Senate of the University of Madras hereby makes known that M. Rajamanikkam has been admitted to the Degree of Doctor of Philosophy, he having been certified by duly appointed Examiners to be qualified to receive the same in the year 1951 in Tamil.

Given under the seal of the University


Senate House.

February 14, 1952


M.D., LL.D., D.Sc., D.C.L.
Vice-Chancellor.











நூற்றாண்டு நாயகரின் நினைவு போற்றிய சிறப்பிதழ்கள்



இணைப்புகள்

மா. இராசமாணிக்கனாரின் வாழ்க்கைக் குறிப்புகள்

1907 மார்ச்சு 12ஆம் நாள் மாணிக்கம், தாயாரம்மாள் மகனாக இராச மாணிக்கனார் பிறந்தார்.

1916 நிலக்கோட்டையில் தமிழ்க்கல்வி தொடக்கம்.

1917 திண்டுக்கல்லில் ஐந்தாம் வகுப்பில் சேர்தல்; தந்தையார் மறைவு; கல்வி தடைபடல்.

1920 நன்னிலத்தில் ஐந்தாம் வகுப்புத் தேர்ச்சி பெறல்.

1921 தஞ்சாவூர் செயிண்ட் பீட்டர்ஸ் பள்ளியில் ஆறாம் வகுப்பில் சேர்ந்தார்.

1927 பள்ளி இறுதி வகுப்புத் தேர்ச்சி. ஒரத்த நாடு போர்டு உயர்நிலைப்பள்ளியில் எழுத்தராகப் பணி.

1928 ஜூலை முதல் சென்னை வண்ணாரப்பேட்டைத் தியாகராயர் நடுநிலைப் பள்ளியில் தமிழாசிரியர் பணி தொடக்கம்.

1930 செப்டம்பர் ஒன்பதாம் நாள், திரு. துரைசாமி திருமதி ஜெயலட்சுமியின் மகள்கண்ணம்மாளை மணந்தார்.

முதல் நூலான 'நாற்பெரும் வள்ளல்கள்' வெளியிடப்பட்டது.

1932 முதற் பாடநூலான 'பொற்கால வாசகம்' வெளிவந்தது.

1935 வித்துவான் பட்டம் பெற்றார்.

1936 ஜூலையில் முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராகப் பணிமாற்றம்.

1939 பி. ஓ. எல். பட்டம் பெற்றார்.

'தமிழர் நல்வாழ்க்கைக் கழகம்' என்ற அமைப்பின் வேண்டுதலுக்கு இணங்கத் 'தமிழர் திருமண நூல்' இயற்றப்பட்டது.

1941 'மொஹெஞ்சொ - தரோ அல்லது சிந்துவெளி நாகரிகம்' நூல் வெளியிடப் பட்டது.

1944 எல். டி. பட்டம் பெற்றார். 'பல்லவர் வரலாறு' நூல் வெளியானது.

1945 'பெரியபுராண ஆராய்ச்சி' என்னும் தலைப்பில் ஆய்வு செய்து எம். ஓ. எல். பட்டம் பெற்றார்.

1947 'சோழர் வரலாறு' நூல் வெளியிடப்பெற்றது. இவ்வாண்டு ஜூலை முதல் சென்னை விவேகானந்தர் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றல்.

1951 ‘சைவ சமய வளர்ச்சி’ என்னும் தலைப்பில் டாக்டர் பட்டத்திற்கு ஆய்வு செய்து பட்டம் பெறல்.

சமயத்துறைப் பணிகளுக்காகத் திருவாவடுதுறை ஆதீனம், ‘சைவ வரலாற்று ஆராய்ச்சிப் பேரறிஞர்’ பட்டம் வழங்கல்.

1953 மதுரைத் தியாகராசர் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியேற்பு.

1955 மதுரைத் திருஞான சம்பந்தர் ஆதீனம், ‘ஆராய்ச்சிக் கலைஞர்’ என்னும் பட்டம் வழங்கல்.

1956 கோயமுத்தூர் திருவள்ளுவர் கழகம் இவர் பணிகளைப் போற்றிப் பாராட்டு விழா எடுத்தது.

1957 ஜூன் 17ஆம் நாள் மூத்த மகன் மா. ரா. இளங்கோவன் திருமணம். மருமகள் புனிதவதியைக் கல்வி தொடர வாய்ப்பாக, இளங்கலை வகுப்பில் சேர்த்தல்.

ஜூன் - தமையனார் இராமகிருட்டிணன் மறைவு.

1959 சைவ சித்தாந்த சமாஜம், ‘சைவநெறிக் காவலர்’ என்னும் பட்டம் வழங்கல்.

செப்டம்பரில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துணைப் பேராசிரியராகப் பணியேற்பு.

1962 பிப்ருவரியில் இரண்டாம் மகன் மா.ரா. வஞ்சிக்கோவனுக்கும் இராதாவுக்கும் திருமணம்.

1963 தருமபுர ஆதீனம், ‘சைவ இலக்கியப் பேரறிஞர்’ என்னும் பட்டமளித்துப் பொற்பதக்கமும் பொன்னாடையும் வழங்கல்

1964 மே 30இல் மூத்த மகள் மா. ரா. தமிழரசி திருமணம். மணமகன் பேராசிரியரின் மாணவர் திரு. ச. வேலுச்சாமி.

1966 மலேசிய நாட்டுத் தலைநகரான கோலாலம்பூரில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டில் பங்கேற்றுச் ‘சங்க காலத் தமிழர் சமுதாய வாழ்க்கையின் சில பகுதிகள்’ - ஆய்வுக் கட்டுரை வழங்கல்.

‘இருபதாம் நூற்றாண்டில் தமிழ் உரைநடை வளர்ச்சி’ என்ற தலைப்பில் பிப்ருவரி 24 - 26ஆம் நாட்களில் சென்னைப் பல்கலைக்கழகத்தில், கல்கி நினைவுச்சொற்பொழிவு.

1967 மே 26ஆம் நாள் மறைவு.

1970 ‘பத்துப்பாட்டு ஆராய்ச்சி’ நூல் சென்னைப் பல்கலைக்கழகத்தின் சார்பில் வெளியிடப்பட்டது.

❖ ❖ ❖

மா. இராசமாணிக்கனாரின் நினைவுபோற்றும் அமைப்புகள்

டாக்டர் இராசமாணிக்கனார் நினைவுப் பள்ளி

சென்னை முத்தியாலுப்பேட்டையில் இராசமாணிக்கனார் வாழ்ந்த வீட்டில் 1968ஆம் ஆண்டு ஐம்பது குழந்தைகள், நான்கு ஆசிரியர்களுடன் தொடங்கப்பட்டது டாக்டர் இராசமாணிக்கனார் நினைவுப் பள்ளி. எளிய ஓட்டுக் கட்டடத்தில் தொடங்கப் பட்ட இக்கல்வி நிறுவனம், இதன் நிறுவனர் புலவர் மா. ரா. வஞ்சிக்கோவனின் அயராத உழைப்பாலும் முயற்சியாலும் இன்று அனைத்து வசதிகளும் பெற்ற முழுமையான பள்ளியாக மலர்ந்துள்ளது. 500 குழந்தைகள்படிக்கும் இப்பள்ளியில் 25 ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர். இதன் தாளாளர் திருமதி. இராதா வஞ்சிக்கோவன்.

பள்ளியில் ஒவ்வொரு கல்விநாளும் வழிபாட்டுடன் தொடங்குகிறது. மாணவரின் சிந்தனையை நெறிப்படுத்த சான்றோர்களின் பொன்மொழிகள் விளக்கப்படுகின்றன. அறிவு வளர்ச்சிக்கு உரமாகும் நல்ல நூல்கள் கொண்ட நூலகம் இங்குள்ளது. மாதந் தோறும் நடைபெறும் இலக்கியக் கூட்டத்தில் பல்வேறு அறிஞர்கள் பங்கேற்று மாணவர்களை உற்சாகப்படுத்துகின்றனர். ஆண்டுதோறும் ப்ளூகிராஸ், எஸ். பி. சி. ஏ. அமைப்புகள், திரைப்படக் காட்சிகள், சொற்பொழிவுகள்வழி, 'உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்' என்ற விதையைக் குழந்தைகள் உள்ளத்தில் ஊன்ற உதவுகின்றன.

இப்பள்ளியில் சாரணர் இயக்கப் பயிற்சி 3, 4, 5ஆம் வகுப்புக் குழந்தைகளுக்குக் கட்டாயமாக அளிக்கப்படுகின்றது. இது குழந்தைகளிடையே நல்ல பண்புகளை வளர்க்கிறது. சாரணர் குழந்தைகள், டெல்லிக்குச் சென்று போட்டிகளில் பரிசு பெற்றுள்ளனர். பள்ளியில் முதல் வகுப்பிலிருந்தே கணினிப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

டாக்டர் மா. இராசமாணிக்கனார் இலக்கிய மன்றம்

மக்களுக்குத் தமிழ் மொழியின் இலக்கிய ஆற்றலும் வளமையும் குறித்த பரவலான விழிப்புணர்வை விதைக்கும் நோக்கோடு திருச்சிராப்பள்ளியில் 1977இல் தொடங்கப் பெற்ற இவ்வமைப்பின் தலைவராக இருந்தவர் பேராசிரியர் இரம்போலா மஸ்கரேனஸ்; துணைத்தலைவராக இருந்தவர் மருத்துவர் தி. வ. அரங்கநாதன். கல்லூரி, பள்ளி மாணவர்களின் சிந்தனையாற்றல், சொல்லாற்றல் திறன் வளர்க்கும் விதமாக ஆண்டு தோறும் இலக்கிய, சமுதாய நலன் சார்ந்த கருத்துப் பரிமாற்றங்களை நடத்தி வென்ற வர்க்குப் பரிசளித்த இவ்வமைப்பு, இராசமாணிக்கனார் பெயரால் கல்லூரிக்கொன்றும் பள்ளிக்கொன்றுமாய் இரண்டு உலாவரும் வெள்ளிக் கோப்பைகளைக் கொண்டிருந்தது.

இவ்வமைப்பு, திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கம், உய்யக்கொண்டான் இள அரிமா மன்றம் இவற்றுடன் இணைந்து 1983 - 84 வரையிலும், தனித்த நிலையில் 1985 - 86 வரையிலும், இந்திய மருத்துவ மன்றத் திருச்சிராப்பள்ளிக் கிளையுடன் இணைந்து 1985 - 88 வரையிலும் பொதுமக்களுக்கான மருத்துவச் சொற்பொழிவுகள், பட்டி மன்றங்கள், வழக்காடுமன்றங்கள் நடத்தியமையுடன்,'நலவாழ்வு,' 'நலந்தானா?, 'நலம் காப்போம்', 'நலவாழ்வு நம் கையில்' எனும் தலைப்புகளில் குறைந்த விலையிலான சிறுசிறு மருத்துவக் கையேடுகளும் வெளியிட்டுள்ளது.

மலைக்கோட்டை மகளிர் மன்றத்துடன் இணைந்து மகளிர் படைப்பாற்றல் வளர்க்கும் பயிலரங்குகள், இலக்கியக் கருத்தரங்குகள் நடத்தியமையுடன் காலாண்டு இதழ் ஒன்றும் வெளியிடப்பெற்றது.

டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம்

மா. இராசமாணிக்கனாரின் எண்ணத்திற்கேற்ப அறிவியல் நோக்கில் அமைந்த வரலாற்றாய்வுகளை மேற்கொள்ளவும் தமிழ்நாட்டு வரலாற்றைச் செம்மையாக எழுதவும் 1982இல் மருத்துவர் இரா. கலைக்கோவனால் திருச்சிராப்பள்ளியில் நிறுவப்பட்ட இவ்வமைப்பு இதுநாள்வரை, 'சோழர் கால ஆடற்கலை' முதலிய பத்து வரலாற்று நூல்களை வெளியிட்டுள்ளது. ஐம்பதிற்கும் மேற்பட்ட தமிழ்நாட்டுத் திருக்கோயில்களை முழுமையாக ஆராய்ந்து ஆய்வேடுகளை உருவாக்கியுள்ளது. 'வரலாறு' என்ற பெயரில் ஆண்டு ஆய்விதழ் ஒன்றைத் தொடங்கி இதுநாள்வரை பதினாறு தொகுதிகளை வெளியிட்டுள்ளது. இந்திய வரலாற்றாய்வுக் கழகத்தின் நல்கை பெறும் இவ்விதழ், இராசமாணிக்கனாருக்கு மிக விருப்பமான 'கோயிற் கலைகள்' 'கல்வெட்டு', 'இலக்கியம்' இவை சார்ந்த ஆய்வுநுட்பம் மிக்க கட்டுரைகளைப் பதிப்பிக்கிறது.

ஐம்பதிற்கும் மேற்பட்ட முதுகலை, முதுநிறைஞர், முனைவர் பட்ட ஆய்வு மாணவர்களை நெறிப்படுத்தியுள்ள இவ்வமைப்பு, மக்களுக்கு வரலாற்று விழிப்புணர்வு ஊட்டும் நோக்கில் தொடர்ந்து ஆறாண்டுகள், திங்கட் பொழிவுகளாக அரிய வரலாற்றுச் செய்திகளை வழங்கியுள்ளது. சென்னை, பாரதிதாசன், மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகங்களின் முதுகலை வரலாற்றுப் பாடத்திட்டங்களை அமைப்பதிலும் தமிழ்நாடு அரசின் தமிழ்நாட்டு வரலாறு எழுதும் முயற்சியிலும் ஆவணக்காப்பக ஆய்வுகளிலும் இந்து சமய அறநிலையத் துறையின் கல்வெட்டாய்வுக் குழுவின் பணிகளிலும் இம்மையத்தின் பங்களிப்புக் குறிப்பிடத்தக்கது.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட புதிய கல்வெட்டுகளைக் கண்டறிந்துள்ள இம்மையம் மூன்று கோயில்களிலிருந்து நாயக்கர் ஓவியங்களை வெளிப்படுத்தியுள்ளது; முப்பதிற்கும் மேற்பட்ட பழஞ் சிற்பங்களைக் கண்டறிந்து சிராப்பள்ளி அரசு அருங்காட்சியகத்தில் பார்வைக்கு வைத்துள்ளது. இளைஞர்களை வரலாற்றாய்வில் தொடர்ந்து ஊக்குவித்து வரும் இவ்வமைப்பின் ஆய்வாளர்கள், சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகத்திலும் இலங்கை அரசின் கலாசாரத் திணைக்கள மாநாட்டிலும் பங்கேற்று இராச மாணிக்கனாரின் கனவான 'பல்லவர், சோழர் கலைகள்' பற்றி ஆய்வுரைகள் நிகழ்த்தி யுள்ளனர். அவ்வுரைகள் நூல் வடிவம் பெற்றுள்ளன.

டாக்டர் மா. இராசமாணிக்கனார் இதழியல் ஆய்வு மையம்

தமிழ் இதழியல் வரலாற்றை முறையாகத் தொகுத்து வெளியிடல், இதழியல் பற்றிய தலைப்புகளில் கருத்தரங்குகள் நடத்துதல் இவற்றை நோக்கங்களாகக் கொண்டு 1983 இல் சென்னையில் பேராசிரியர் முனைவர் மா. ரா. அரசு அவர்களால் இம்மையம் நிறுவப் பட்டது. முதலிரண்டு ஆண்டுகள் மாணவர்களுக்காக இதழியல் கருத்தரங்குகளும் பயிலரங்குகளும் நடத்திய இம்மையம், தமிழ் இதழியல் பற்றிய ஆய்வுத் தொடரொன்றை 1986 - 87இல் திங்கள் ஒரு பொழிவெனப் பன்னிரண்டு திங்கள்கள் தொடர்ந்து நடத்தியது. தமிழ் நாட்டிலேயே முதல்முறையாக இதழியல் பற்றி ஓர் ஆண்டு தொடர்ந்து நடத்தப் பெற்ற ஆய்வுத்தொடர் இதுவேயாகும்.

1997- 99, 2001இல் இம்மையம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்து இந்திய விடுதலைக்கு முந்தைய தமிழ் இதழ்கள், திராவிட இயக்க இதழ்கள், தமிழ் ஆய்வு இதழ்கள், பொதுவுடைமை இயக்க இதழ்கள், மகளிர் இதழ்கள், தமிழ் இலக்கிய இதழ்கள், தமிழில் இதழியல் எனும் தலைப்புகளில் பதினொரு கருத்தரங்குகள் நிகழ்த்தி,

எட்டுக் கருத்தரங்கக் கட்டுரைகளை இதழியல் தொகுதிகளாக வெளியிட்டுள்ளது. மூன்று தொகுதிகள் வரவுள்ளன.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்து கல்கி நூற்றாண்டு விழாக் கருத்தரங்கு (1999), மயிலை சீனி. வேங்கடசாமி நூற்றாண்டு விழாக் கருத்தரங்கு (2000) ஆகியவற்றையும் சென்னை வானொலி நிலையத்துடன் இணைந்து இரு கருத்தரங்கு களையும் இம்மையம் நிகழ்த்தியுள்ளது. 'இதழாளர் இராஜாஜி' எனும் ஆய்வு நூலையும் 'இளமையின் குரல்', 'கொறிப்பு' எனும் மாணவர்க்கான இதழ்களையும் இம்மையம் வெளியிட்டுள்ளது.

❖ ❖ ❖

மா. இராசமாணிக்கனாரின் குடும்பம்

டாக்டர் மா. இராசமாணிக்கனார் - வித்துவான் கண்ணம்மாள்

பிள்ளைகள்

இளங்கோவன் புனிதவதி	வஞ்சிக்கோவன் இராதா	கலைக்கோவன் அவ்வை	அரசு திரிபுரசுந்தரி
↓	↓	↓	↓
பாரி குமணன் குமரவேல் வள்ளி	இராசராசன் உமா சுமதி	குந்தவி இராசேந்திரன்	அருள்மொழிநங்கை செழியன்

பெண்கள்

தமிழரசி வேலுச்சாமி	மங்கையர்க்கரசி கணேஷ்	சிவஅரசி முத்துக்காளத்தி	இசையரசி பாலமுத்துசாமி
↓	↓	↓	↓
அன்புச் செல்வி கலைச் செல்வி தமிழ்ச் செல்வன்	இராசபாண்டியன் கற்பகம்	இராசமுருகன் முத்து முருகன் மீனாட்சி	சண்முகராசு தேன்மொழி சரவணன்

மா. இராசமாணிக்கனாரின் நூல்கள் - காலவரிசை

1	நாற்பெரும் வள்ளல்கள்	1930
2	ஹர்ஷவர்த்தனன்	1930
3	முடியுடை மூவேந்தர்	1931
4	நவீன இந்திய மணிகள்	1934
5	தமிழ்நாட்டுப் புலவர்கள்	1934
6	முசோலினி	1934
7	ஏப்ரஹாம்லிங்கன்	1934
8	அறிவுச்சுடர்	1938
9	நாற்பெரும் புலவர்கள்	1938
10	தமிழர் திருமண இன்பம்	1939
11	தமிழர் திருமண நூல்	1939
12	மணிமேகலை	1940
13	மொஹெஞ்சொ - தரோ அல்லது சிந்துவெளி நாகரிகம்	1941
14	பாண்டியன் தமிழ்க் கட்டுரை (முதல் தொகுதி)	1941
15	பல்லவர் வரலாறு	1944
16	மறைந்த நகரம் (மாணவர் பதிப்பு)	1944
17	சேக்கிழார் (ஆராய்ச்சி நூல்)	1945
18	இரண்டாம் குலோத்துங்கன்	1945
19	கட்டுரை மாலை	1945
20	செய்யுள் - உரைநடைப் பயிற்சி நூல்	1945
21	முத்தமிழ் வேந்தர்	1946
22	காவியம் செய்த கவியரசர்	1946
23	விசுவநாத நாயக்கர்	1946
24	சிவாஜி	1946
25	சிலப்பதிகாரக் காட்சிகள்	1946
26	இராசேந்திர சோழன்	1946
27	பல்லவப் பேரரசர்	1946
28	கட்டுரைக் கோவை	1946
29	சோழர் வரலாறு	1947
30	ஆராய்ச்சிக் கட்டுரைகள்	1947
31	பண்டித ஜவஹர்லால் நெஹ்ரு	1947
32	வீரத் தமிழர்	1947
33	இருபதாம் நூற்றாண்டுப் புலவர் பெருமக்கள்	1947
34	இந்திய அறிஞர்	1947
35	தமிழ்நாட்டு வட எல்லை	1948
36	பெரியபுராண ஆராய்ச்சி	1948
37	கதைமலர் மாலை (மலர் ஒன்று)	1948
38	இராஜன் சிறுவர்க்குரிய கதைகள்	1948
39	சிறுகதைக் களஞ்சியம் (பகுதி ஒன்று)	1949
40	சிறுகதைக் களஞ்சியம் (பகுதி இரண்டு)	1949
41	சிறுகதைக் களஞ்சியம் (பகுதி மூன்று)	1949
42	மேனாட்டுத் தமிழறிஞர்	1950
43	தென்னாட்டுப் பெருமக்கள்	1950
44	இந்தியப் பெரியார் இருவர்	1950
45	தமிழ்ப் புலவர் பெருமக்கள்	1950
46	நாற்பெரும் புலவர்	1950
47	மறைமலையடிகள்	1951
48	அயல்நாட்டு அறிஞர் அறுவர்	1951
49	சங்கநூற் காட்சிகள்	1952
50	இளைஞர் இலக்கணம் (முதல் மூன்று பாரங்கட்கு உரியது)	1953
51	விஞ்ஞானக் கலையும் மனித வாழ்க்கையும்	1953
52	பாண்டிய நாட்டுப் பெரும் புலவர்	1953
53	சேக்கிழார் (மாணவர் பதிப்பு)	1954
54	திருவள்ளுவர் காலம் யாது?	1954
55	சைவ சமயம்	1955
56	கம்பர் யார்?	1955
57	வையை	1955

58 தமிழர் திருமணத்தில் தாலி 1955
59 பத்துப்பாட்டுக் காட்சிகள் 1955
60 இலக்கிய அறிமுகம் 1955
61 அருவிகள் 1955
62 தமிழ்மொழிச் செல்வம் 1956
63 பூம்புகார் நகரம் 1956
64 தமிழ் இனம் 1956
65 தமிழர் வாழ்வு 1956
66 வழிபாடு 1957
67 இல்வாழ்க்கை 1957
68 தமிழ் இலக்கணம் (இளங்கலை வகுப்பிற்கு உரியது) 1957
69 வழியும் வகையும் 1957
70 ஆற்றங்கரை நாகரிகம் 1957
71 தமிழ் இலக்கண இலக்கியக் கால ஆராய்ச்சி 1957
72 என்றுமுள தென்றமிழ் 1957
73 சைவ சமய வளர்ச்சி 1958
74 பொருநை 1958
75 அருள்நெறி 1958
76 தமிழரசி 1958
77 இலக்கிய அமுதம் 1958
78 எல்லோரும் வாழ வேண்டும் 1958
79 தமிழகக் கலைகள் 1959
80 தமிழக ஆட்சி 1959
81 தமிழக வரலாறு 1959
82 தமிழர் நாகரிகமும் பண்பாடும் 1959
83 தென்பெண்ணை 1959
84 புதிய தமிழகம் 1959
85 நாட்டுக்கு நல்லவை 1959
86 தமிழ் அமுதம் 1959
87 பேரறிஞர் இருவர் 1959
88 துருக்கியின் தந்தை 1959
89 தமிழகக் கதைகள் 1959
90 குழந்தைப் பாடல்கள் 1960
91 கட்டுரைச் செல்வம் 1960
92 தமிழகப் புலவர் 1960
93 தமிழ் மொழி இலக்கிய வரலாறு (சங்க காலம்) 1963
94 தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும் 1964
95 தமிழ் அமுதம் (மாணவர் பதிப்பு)1965
96 சேக்கிழார் (சொர்ணம்மாள் நினைவுச் சொற்பொழிவுகள்) 1969
97 பத்துப்பாட்டு ஆராய்ச்சி 1970
98 கல்வெட்டுகளில் அரசியல், சமயம், சமுதாயம் 1977
99 இருபதாம் நூற்றாண்டில் தமிழ் உரைநடை வளர்ச்சி 1978
100 இலக்கிய ஓவியங்கள் 1979

ஆங்கில நூல்

101 The Development of Saivism in South India 1964

பதிப்பு ஆண்டு தெரியாத நூல்கள்

102 சிறுவர் சிற்றிலக்கணம்
103 பைந்தமிழ் இலக்கணமும் கட்டுரையும்
104 பாண்டியன் தமிழ்க் கட்டுரை (தொகுதி 2)

பார்வைக்குக் கிடைக்காத நூல்கள்

1 பதிற்றுப்பத்துக் காட்சிகள்
2 செந்தமிழ்ச் செல்வம்
3 தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள்
4 பள்ளித்தமிழ் இலக்கணம்
5 செந்தமிழ்க் கட்டுரை (முதல், இரண்டாம் புத்தகங்கள்)
6 செந்தமிழ்க் கதை இன்பம் (முதல், இரண்டாம் பகுதிகள்)

❖ ❖ ❖

தமிழ்க் கட்டுரைகள்

1. கம்பரும் காந்தியடிகளும், பாரதி (திங்களிதழ்), உத்தமபாளயம், மாலை - 4, மணி - 3, 1932.
2. அடிமை அகற்றிய அண்ணல், பாரதி (திங்களிதழ்), உத்தமபாளயம், மாலை - 4, மணி - 4, 1933.
3. அடால்ப் இட்லர், கலைமகள் (திங்களிதழ்), சென்னை, தொகுதி - 7, 1934.
4. பாரசீக மன்னர் ரிஜாகான், கலைமகள் (திங்களிதழ்), சென்னை, தொகுதி - 7, 1934.
5. போலந்தின் சர்வாதிகாரி, கலைமகள் (திங்களிதழ்), சென்னை, தொகுதி - 8, 1935.
6. ஐயரவர்களும் பதிப்பாசிரியர் பண்பும், டாக்டர் உ.வே. சாமிநாத ஐயரவர்கள் சதாபிஷேக வரலாறு, சென்னை, 1936.
7. மணிமேகலையில் குறள்மணிகள், திருவள்ளுவர் திருநாளில் செய்த சொற்பொழிவு, சென்னை, 21 - 6 - 1936.
8. செஞ்சோற்றுக் கடன் கழித்தோன், கலைமகள் (திங்களிதழ்), சென்னை, தொகுதி - 9, 1936.
9. தமிழும் ஆசிய ஆஸ்ட்ரேலிய மொழிகளும், திருவிளக்கு (திங்களிதழ்), சென்னை, ஒளி - 1, சுடர் - 2, 1939.
10. தமிழும் தமிழரும் - I, செந்தமிழ்ச் செல்வி (திங்களிதழ்), சென்னை, சிலம்பு - 18, பரல் - 3, 1939 - 40.
11. தமிழும் தமிழரும் - II , செந்தமிழ்ச் செல்வி (திங்களிதழ்), சென்னை, சிலம்பு - 18, பரல் - 4, 1939 - 40.
12. இராமலிங்க அடிகளும் பழந்தமிழர்க் கொள்கைகளும் -1, திருவிளக்கு (திங்களிதழ்), சென்னை, ஒளி - 2, சுடர் - 8, ஜூலை 1940.
13. இராமலிங்க அடிகளும் பழந்தமிழர்க் கொள்கைகளும் -2, திருவிளக்கு (திங்களிதழ்), சென்னை, ஒளி - 2, சுடர் - 9, ஆகஸ்ட், 1940.
14. ஆர்க்காடு, செந்தமிழ்ச் செல்வி (திங்களிதழ்), சென்னை, சிலம்பு - 20, பரல் - 3, 1941 - 42.
15. செஞ்சிக்கோட்டை, தமிழ்ப் பொழில் (திங்களிதழ்), கரந்தை, துணர் - 18, 1942 - 43.
16. âU m© z hkiyah® âU¡nfhÉš,brªjÄœ¢bršÉ (திங்களிதழ்), சென்னை, சிலம்பு - 20, பரல் - 7, 1942 - 43. தனமநனமநைநை
17. கல்வெட்டுகள் I, பத்மஜோதி (திங்கள் இருமுறை), சென்னை, சுடர் - 1, கதிர் - 1, 1947.

18. கல்வெட்டுகள் II, பத்மஜோதி (திங்கள் இருமுறை), சென்னை, சுடர் - 1, கதிர் - 2, 1947.
19. கல்வெட்டுகள் III, பத்மஜோதி (திங்கள் இருமுறை), சென்னை, சுடர் - 1, கதிர் - 3, 1947.
20. கல்வெட்டுகள் IV, பத்மஜோதி (திங்கள் இருமுறை), சென்னை, சுடர் - 1, கதிர் - 4, 1947.
21. சிவநெறி வளர்ச்சி, லோகோபகாரி (வார இதழ்), சென்னை, இதழ் - 36, 1947.
22. கல்வெட்டுகள் V, பத்மஜோதி (திங்கள் இருமுறை), சென்னை, சுடர் - 1, கதிர் - 5, 1948.
23. மீண்டும் தமிழகத்தே பிறக்க வேண்டும், ஈழமணி விபுலானந்தர் நினைவு மலர், ஈழமணி வெளியீடு, கொழும்பு, 1948.
24. டாக்டர் ராக. சண்முகனார் சொல்வன்மை, Dr. R.K. Shankugam Chettiar 61st Commemoration Volume, அண்ணாமலை நகர், 1952.
25. கவிமணி அவர்கள், கவிமணி நினைவு மலர், சென்னை, 1955.
26. பதினோராண்டுக் கல்வித்திட்டத்தில் தமிழ்மொழியின் நிலை, சென்னை மாநிலத்தமிழாசிரியர் மாநாடு (சிறப்பு மலர்), கோவை, 1958.
27. தமிழகத்து சாக்ரடீஸ், திராவிடத் தந்தை பெரியார் 79ஆம் ஆண்டு விழாச் சிறப்பு மலர், பினாங்கு, 1958.
28. பாரதியாரும் சமுதாயமும், பத்மஜோதி (திங்கள் இருமுறை), சென்னை, சுடர் - 2, கதிர் - 21, 1959.
29. இளைஞர் இயக்கம், பத்மஜோதி (திங்கள் இருமுறை), சென்னை, சுடர் - 2, கதிர்- 23, 12 - 10 - 1959.
30. தனிப்பட்ட தமிழ்நூல், திருக்குறளின் பெருமை (தொகுப்பு நூல்), இன்ப நிலையம், சென்னை, 1959.
31. வள்ளல் தியாகராசர், பத்மஜோதி (திங்கள் இருமுறை), சென்னை, சுடர் - 3, கதிர் - 24, 1960.
32. தமிழகத்தின் நெசவுத் தொழில், தமிழ்ப் பொழில் (திங்களிதழ்), கரந்தை, துணர் - 35, மலர் - 12, 1960.
33. சங்க காலத் தமிழர் உடை, சேலம் சாயத் தொழிற்சாலைச் சொந்தக்காரர்கள் சங்கம், வெள்ளி விழா மலர், சேலம், 1960.
34. எழுத்தாளர் யாவர்? பாரதி, தமிழ் எழுத்தாளர் சங்கம், சென்னை, 1960.
35. வாழவழி, பத்ம ஜோதி (திங்கள் இருமுறை), சென்னை, சுடர் - 3, கதிர் - 14, 16. 5. 1961.
36. யாதும் ஊரே யாவரும் கேளிர், பத்மஜோதி (திங்கள் இருமுறை), சென்னை, சுடர் - 4, கதிர் - 1, 1969.
37. இளைஞர் கூட்ட எழிற்பணி எழுச்சி இயக்கங்கள், பத்மஜோதி (திங்கள் இருமுறை), சென்னை, சுடர் - 4, கதிர் - 18, 16. 7. 1961.
38. அலைகடலுக்கு அப்பாலும் தமிழ்ப்பணி - சர். பொன்னம்பலம் இராமநாதன், பத்மஜோதி (திங்கள் இருமுறை), சென்னை, சுடர் - 4, கதிர் - 19, 1. 8. 1961.
39. பனியும் குளிரும் மிகுந்த அலாஸ்கா, பத்மஜோதி (திங்கள் இருமுறை), சென்னை, சுடர் - 4, கதிர் - 20, 16. 8. 1961.

40. உந்து வண்டியில் செல்லுவோர் துயரம், பத்மஜோதி (திங்கள் இருமுறை), சென்னை, சுடர் - 4, கதிர் - 24, 16. 10. 1961.
41. செந்தமிழ்ச் செல்வர் டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளை, பத்மஜோதி (திங்கள் இருமுறை), சென்னை, சுடர் - 4, கதிர் - 12, 1961.
42. மாதங்கி, தெ.பொ. மீ. மணிவிழா மலர், கோவை, 1961.
43. எழுத்தாளர், பாரதி, தமிழ் எழுத்தாளர் மாநாட்டு மலர், தமிழ் எழுத்தாளர் சங்கம், சென்னை, 1961.
44. கோவைக் காட்சி, பத்மஜோதி (திங்கள் இருமுறை), சென்னை, சுடர் - 5, கதிர் - 6, 1962.
45. ஊர்களின் பழைய பெயர்களும் இன்றுள்ள பெயர்களும், கலைக்கதிர் (திங்களிதழ்), பொங்கல் மலர், கோவை, 1962.
46. தமிழகத்துப் பழம்பெரும் பண்புகளையும் பெயர்களையும் பாதுகாருங்கள், பத்மஜோதி, (திங்கள் இருமுறை), சென்னை, சுடர் - 5, கதிர் - 24, 16. 10. 1962.
47. அருங்குணச் செல்வர், தாமரை (ஜீவா சிறப்பு மலர்), சென்னை, ஏப்ரல், 1963.
48. வானமாமலை, நெல்லை ரெயில்வே கலைக்குழு சிறப்பு மலர், திருநெல்வேலி, 1963.
49. ஊர்ப்பெயர்களின் மரூஉ, மகாவித்வான் மே. வீ. வேணுகோபால பிள்ளை 68ஆவ்து பிறந்த நாள் விழா மலர், சென்னை, 1963.
50. இரண்டாம் திருமுறை திருப்பதிகம் தேவாரம், திருக்கோயில் (திங்களிதழ்), சென்னை, மாலை - 6, மணி - 2, 1964.
51. திருத்தணிகை ஆற்றுப்படை, திருக்கோயில் (திங்களிதழ்), சென்னை, மாலை - 7, மணி - 2, 1964.
52. தமிழ் நூல்களில் சிற்பக்கலை-1, திருக்கோயில் (திங்களிதழ்), சென்னை, மாலை - 9, மணி - 10, 1964.
53. பழம்பட்டினம், அணுக்கதிர் (திங்கள் இதழ்), பொங்கல் மலர், சென்னை, 1964.
54. மதிய உணவு, வட சென்னை இராயபுரம் வட்டம், மூன்றாமாண்டு சீருடை விழா மலர், சென்னை, 13 - 4 - 1964.
55. விழிஞம், வஞ்சி நாடு (வார இதழ்), தீபாவளி மலர், திருவனந்தபுரம், மலர் - 5, இதழ் - 50, 1964.
56. ஊர்ப்பெயர்களை உணர்த்தும் வரலாறு, குறிஞ்சி (திங்களிதழ்), பொங்கல் மலர், மதுரை, 15. 1. 1965.
57. உழைப்பும் உயர்வும், பத்மஜோதி (திங்கள் இருமுறை), சென்னை, சுடர் - 8, கதிர் - 17, 1965.
58. நந்தனார் பிறந்த ஆதனூர், ஞான சம்பந்தம் (தருமையாதீனத் திங்களிதழ்), வெள்ளி விழா மலர், தருமபுரம், 1965.
59. முயற்சியும் உயர்ச்சியும், கம்பர் நாடக மலர், சிந்தாதரிப்பேட்டை கல்யாணம் பெண்கள் உயர்நிலைப் பள்ளி, சென்னை, 1965.
60. மெய்கண்டார் காலம், திருக்குறள் பீடம் குருகுலம் அழகரடிகள் மணிவிழா மலர், செங்கற்பட்டு, 1965.
61. செட்டி நாட்டு அரசர், டாக்டர் ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்கள் ராணி லேடி மெய்யம்மை ஆச்சி அவர்கள் 60ஆம் ஆண்டு நிறைவு விழா மலர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர், 1965.

62. சேக்கிழாரும் கம்பரும், கம்பன் கவியமுதம், எழுத்தாளர் கூட்டுறவுச் சங்க வெளியீடு, சென்னை, 1965.

63. சோழர் பொதுப் பெயர்களைக் கொண்ட ஊர்கள், உமாமகேசுவரர் உயர்நிலைப்பள்ளி வெள்ளிவிழா ஆண்டு மலர், கரந்தை, 1965-66.

64. நான் கண்ட மலாயா, நித்திலக்குவியல் (திங்களிதழ்), சென்னை, குவியல் - 5, முத்து - 1, 1. 2. 1966.

65. பண் ஆராய்ச்சியின் பதினேழாவது கூட்டத் தொடக்க உரை, தமிழிசைச் சங்க மலர், சென்னை, 1966.

66. செங்கற்பட்டு மாவட்டத்தில் புதைபொருள் ஆராய்ச்சி, 100th Library Souvenir, L. L. A., செங்கற்பட்டு, 1966.

67. ஊர்ப்பெயர்கள், சத்வித்யா சன்மார்க்க சங்கம், பொன்விழா மலர், கோவை, 1966.

68. சேர நாட்டுத் தமிழ், தமிழ் மன்றம், முதலாவது ஆண்டு விழாச் சிறப்பு மலர், நெய்வேலி, 1966.

69. தமிழ் நூல்களில் சிற்பக்கலை - II, திருக்கோயில் (திங்களிதழ்), சென்னை, மாலை - 9, மணி - 6, 1967.

70. பெண்ணின் வழிகாட்டி, கல்வி (திங்களிதழ்), சென்னை, மார்ச்சு, 1967.

71. பழைய பட்டங்களைப் பெயர்களாகப் பெற்ற ஊர்கள், அ.சீரா. மணிவிழா மலர், தூத்துக்குடி, 1967.

72. இராமலிங்கர் காலத்துச் சமுதாய நிலைமை, சைவப் பெரியார் நினைவு மலர் (முதலாமாண்டு), கோலாலம்பூர், 1967.

73. இலக்கியத்தில் சிற்றூர் நிகழ்ச்சிகள், தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம் - கிராமிய விழா மலர், சென்னை, 1967.

74. நாடகத் தமிழ், நாடக மேதை சங்கரதாஸ் சுவமிகள் நூற்றாண்டு விழா மலர், சென்னை, 1967.

75. செயற்கரிய செய்வார், பேராசிரியர் டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார் மணி விழா மலர், மதுரை, 1967.

76. திருக்குறளில் வரலாற்றுச் செய்திகள், திருக்குறள் கனிகள் (தொகுப்பு நூல்), சென்னை, 1968.

77. எமது பாகூர்ச் செலவு, செந்தமிழ்ச் செல்வி (திங்களிதழ்), சென்னை, சிலம்பு - 53, பரல் - 1, 1978 - 79.

❖ ❖ ❖

ஆங்கிலக் கட்டுரைகள்

1. Cultural History from the Periyapuranam, The Journal of Oriental Research, Madras, Vol. XVI Part - 1, 1946.
2. Saivism in the pre - Pallava period, Tamil Culture, The Journal of Academy of Tamil Culture, Vol. V, No. 4, 1956.
3. Growth of Temple under the Cholas, Tamil Culture, The Journal of Academy of Tamil Culture, Vol. VIII, No. 4, 1959.
4. Date of Koccenganan, Journal of Madras University, Madras,1959 - 1960.
5. Thiruppalaivanam and its Inscriptions, Annals of Oriental Research, University of Madras, Madras, Vol. XVI, Part - 2, 1959 - 1960.
6. Proverbs in Tamil, Annals of Oriental Research, University of Madras, Madras Part - 1, 1960.
7. Thiruvalangadu and its Inscriptions, Journal of Madras University, Madras, 1960 - 1961.
8. Thiruppasur and its Inscriptions, Annals of Oriental Research, University of Madras, Madras, Vol. XVII, part - 1, 1960 - 1961.
9. The Course of Palaru, Annals of Oriental Research, University of Madras, Madras, Vol. XVII, Part - 2, 1961.
10. New Light on the Kottams of Tondai - nadu, Journal of Madras University, Madras, Section - A, Humanities, Vol. XXIII, No - 2, 1962.
11. Eyil - pattinam, Annals of Oriental Research, University of Madras, Madras Vol. XVII, Part - 1, 1962.
12. Mavilangai, Journal of Madras University, Madras, Section - A, Humanaities, Vol. XXXIV, No. - 2, 1963.
13. Kudal of the Sangam Age, Annals of Oriental Research, University of Madras, Madras, Vol.XVIII, Part - 2, 1963.
14. Dr. G. U. Pope - A Great Tamil Scholar, Dr. G. U. Pope commemoration Souvenir, Pope's College, Sawyerpuram, 1963.
15. The Kacci of the Sangam Age, Journal of Madras University, Madras, Section - A, Humanaities, Vol. XXX, Nos.1 & 2, 1963 &1964.
16. The Route Described in Perumpanarruppadai, Annals of Oriental Research, Uni versity of Madras, Madras, Vol. XIX, Part - 1, 1964.

17. The Date of Tholkappiam, Annals of Oriental Research, University of Madras, Madras, Part - 2, 1964.
18. The Date of Kalithokai, Annals of Oriental Research, University of Madras, Madras, Vol. XX, Part - 1 - 2, 1965.
19. Stone Inscriptions of Devikapuram, Tamil Culture, Journal of the Academy Culture, Vol. XII, No. 1, 1966.
20. The Date of Paripadal, Annals of Oriental Research, University of Madras, Madras Vol. XXI, Part - 1, 1966.
21. Our Inscriptions, Presidential Address Delivered at the Seminar conducted by the Department of State Archaeology, Madras, 1966.
22. Aspects of Social Life of Tamils in the Sangam Age (300 B.C. - A.D. 300), Proceed ings of the First International Conference Seminar of Tamil Studies, International Association of Tamil Research, Kulalumpur, Malaysia, Vol. 1, 1968.

பார்வைக்குக் கிடைக்காத கட்டுரைகள்

1. Korkai
2. Fundamentals of Indian Culture in Tamil Literature
3. Muruga Cult
4. Note on River Vehka
5. Thakkolam and its Inscriptions
6. The Caste System in Tamil Literature of the Sangam period (B.C. 300 - A.D. 300)
7. The Culture of the Tamils from the Study of their words
8. Thirukkalathi and its Inscripions
9. Trends in Modern Tamil poetry
10. Trends in Saiva Bhakti period

❖ ❖ ❖

கட்டுரையாளர்

1. அண்ணாமலை, சுப., முனைவர்,
முதல்வர் (ஓய்வு),
தியாகராசர் கல்லூரி,
மதுரை.

2. அரசு, மா. ரா., முனைவர்,
இணைப்பேராசிரியர்,
தமிழ்த்துறை,
பச்சையப்பன் கல்லூரி,
சென்னை - 600 030.

3. அருணா பொன்னுசாமி, கவிஞர்,
சென்னை.

4. அவ்வை கலைக்கோவன்,
மருத்துவர்,
துணை இயக்குநர் (ICEH),
ஜோஸப் கண் மருத்துவமனை,
திருச்சிராப்பள்ளி - 620 001.

5. அன்புச்செல்வி பாரி,
லாஸ்ஏஞ்சல்ஸ்,
அமெரிக்கா.

6. இசையரசி பாலமுத்துசாமி,
துணைத் தலைமையாசிரியர் (ஓய்வு),
முத்தியாலுப்பேட்டை
மேனிலைப் பள்ளி,
சென்னை - 600 001.

7. இராதா வஞ்சிக்கோவன்,
தாளாளர்,
டாக்டர் இராசமாணிக்கனார்
நினைவுப் பள்ளி,
14, மேட்டுத் தெரு,
சென்னை - 600 001.

8. இளங்குமரன், இரா.,
திருவள்ளுவர் தவச்சாலை,
திருவளர்குடி அஞ்சல், அல்லூர்,
திருச்சிராப்பள்ளி - 620 101.

9. இளங்கோ குமணன்,
S. S. இண்டர்நேஷனல்,
37, 12ஆவது அவென்யூ,
அசோக் நகர்,
சென்னை - 600 083.

10. ஐராவதம் மகாதேவன், இ.ஆ.ப. (ஓய்வு),
கல்வெட்டறிஞர்,
B - 1, நறுமுகை அடுக்ககம்,
இரண்டாவது தெரு,
பிருந்தாவன் நகர் - விரிவு,
ஆதம்பாக்கம்,
சென்னை - 600 088.

11. கலைக்கோவன், இரா.
மருத்துவர் - முனைவர்,
இயக்குநர்,
டாக்டர் மா. இராசமாணிக்கனார்
வரலாற்றாய்வு மையம்,
48, புத்தூர் நெடுஞ்சாலை,
திருச்சிராப்பள்ளி - 620 017.

12. கலைச்செல்வி சுந்தர்,
அரிசோனா,
அமெரிக்கா.

13. கீரன், ப., மனசை, கவிஞர்,
நிகழ்ச்சிப் பொறுப்பாளர் (ஓய்வு),
சென்னை வானொலி நிலையம்,
சென்னை - 600 004.

14. குமரவேலன், இரா. முனைவர்,
தமிழ்ப் பேராசிரியர் (ஓய்வு),
பச்சையப்பன் கல்லூரி,
சென்னை - 600 030.

15. சங்கரவள்ளி நாயகம், முனைவர்,
தமிழ்ப் பேராசிரியர் (ஓய்வு),
கோ. வெ. நா. கல்லூரி,
கோயிற்பட்டி.

16. சிவஅரசி முத்துக்காளத்தி, முனைவர்,
தமிழ்ப் பேராசிரியர் (ஓய்வு),
இராணிமேரி கல்லூரி,
சென்னை - 600 004.

17. தமிழரசி வேலுச்சாமி, முனைவர்,
தமிழ்த்துறைத் தலைவர் (ஓய்வு),
மாநிலக் கல்லூரி,
சென்னை - 600 005.

18. தமிழழகன், கவிஞர்
சென்னை - 600 019.

19. தமிழன்பன், முனைவர்,
உறுப்பினர்,
தமிழ்மொழி மேம்பாட்டு வாரியம்,
இந்திய அரசு,
A-3, இலாயிட்ஸ் காலனி,
சென்னை 600 014.

20. திருநாவுக்கரசு, க.,
திராவிடவியல் ஆய்வாளர்,
76, கற்பகம் அவென்யு,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை - 600 028.

21. நல்லகண்ணு, இரா.,
மத்திய நிருவாகக் குழு உறுப்பினர்,
இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி,
சென்னை - 600 017.

22. பாண்டுரங்கன், முனைவர்,
சிறப்புநிலைப் பேராசிரியர்,
தமிழ்த்துறை,
புதுவைப் பல்கலைக்கழகம்,
புதுச்சேரி.

23. பாலசுப்பிரமணியன், மு. பி., முனைவர்,
உறுப்பினர்,
தமிழ்மொழி மேம்பாட்டு வாரியம்,
இந்திய அரசு,
124/3, பாரதி குடியிருப்பு,
அண்ணாநகர் மேற்கு,
சென்னை - 600 040.

24. புனிதவதி இளங்கோவன்,
நிகழ்ச்சிப் பொறுப்பாளர் (ஓய்வு),
சென்னை வானொலிநிலையம்,
சென்னை - 600 004.

25. மங்கையர்க்கரசி கணேஷ்,
தமிழாசிரியர் (ஓய்வு),
சென்னை - 600 048.

26. மணி, பெ. சு.,
11, இராமகிருஷ்ணாபுரம்,
2ஆவது தெரு,
மேற்கு மாம்பலம்,
சென்னை - 600 033.

27. முகமது மைதீன், கவிஞர்,
சென்னை.

28. வஞ்சிக்கோவன், மா. இரா., புலவர்,
செயலாளர்,
டாக்டர் இராசமாணிக்கனார்
நினைவுப் பள்ளி,
14, மேட்டுத் தெரு,
சென்னை - 600 001.

29. வேங்கடபதி, வல்லம்., முனைவர்
தமிழ்ப் பேராசிரியர் (ஓய்வு),
பச்சையப்பன் கல்லூரி,
சென்னை - 600 030.

30. வேலுச்சாமி, ச.,
முதல்நிலைப் பிரிவு அலுவலர் (ஓய்வு),
கணக்கியல் துறை - இணைப்புப்
பெட்டித் தொழிற்சாலை,
சென்னை - 600 038.

மறைந்தவர்கள்

திருமதி கண்ணம்மாள் இராசமாணிக்கனார், கி. இராமலிங்கனார், நெ.து. சுந்தர வடிவேலு, வல்லை. பாலசுப்பிரமணியம், வேதம் வேங்கடராய சாஸ்திரி, சிறுவை மோகனசுந்தரம், கே. தியாகராாசன், கவியோகி சுத்தானந்த பாரதியார், நரா. முருகவேள், அ.கி. பரந்தாமனார், புலியூர்க்கேசிகன், ம.பொ.சி., சி. ஜகந்நாதாச்சாரி, இரம்போலா மாஸ்கரனேஸ், மயிலை. முத்தெழிலன், மு. முத்துக்காளத்தி, வீ. வீராசாமி.

மா. இராசமாணிக்கனார் நூற்றாண்டைப் போற்றிய இதழ்கள்

1	தமிழ்ச் சுடர் (அட்டைப்படம்)	ம. பொ. சிவஞானம்	இலக்கியப்பீடம், ஏப்ரல் 2005.
2	ஒரு வரலாற்றின் வரலாறு	இரா. கலைக்கோவன்	தினமணி, 12. 3. 2006.
3	ஒரு வரலாற்றின் வரலாறு (அட்டைப்படம்)	இரா. கலைக்கோவன்	மக்கள் சிந்தனை, மார்ச்சு 2006.
4	ஆய்வு அறிஞர் மா. இராசமாணிக்கனார் நூற்றாண்டு	க. திருநாவுக்கரசு	சங்கொலி, 24. 3. 2006.
5	மனிதரில் தலையாய மனிதர் (அட்டைப்படம்)	இரா. கலைக்கோவன்	செந்தமிழ்ச் செல்வி, ஏப்ரல் 2006.
6	தமிழ் வளர்த்த செம்மல் இராசமாணிக்கனார்	இரா. கலைக்கோவன்	அமுதசுரபி, ஏப்ரல் 2006.
7	தமிழறிஞர் மா. இராசமாணிக்கனாரின் நூற்றாண்டுத் தொடக்கம்	இரா. கலைக்கோவன்	மீண்டும் கவிக்கொண்டல், ஏப்ரல் 2006.
8	பேராசிரியர் மா. இராசமாணிக்கனார் வாழ்வும் ஆய்வும்	கி. வெற்றிச் செல்வன்	தமிழ் இயக்கம் ஜூன் - ஜூலை 2006.
9	மனிதரில் தலையாய மனிதரே! (அட்டைப்படம்)	இரா. கலைக்கோவன்	புதுகைத் தென்றல், ஜூலை 2006.
10	வரலாற்று நாயகன் (அட்டைப்படம்)	ஆர். நல்லகண்ணு	தாமரை ஜனவரி - பிப்ருவரி 2007.
11	தனிவழி நடந்து தமிழ் தேடியவர்!	சுப்ர. பாலன்	இலக்கியப்பீடம் மார்ச்சு 2007.
12	Scholar With Deep Historical Insight	S. Ganesan	Friday Review, The Hindu, 2. 3. 2007.
13	வரலாற்றுப் புதையலை வாழ்த்துவோம் !	மு. பி. பாலசுப்பிரமணியன்	தமிழாலயம் மார்ச்சு - ஏப்ரல் 2007.
14	நினைவு மலர்கள்	மா. இரா. வஞ்சிக்கோவன்	நித்திலக் குவியல், ஏப்ரல் 2007.


❖ ❖ ❖

மா. இராசமாணிக்கனார் நூற்றாண்டு விழாப் பொழிவுகள்

நாள்		இடம்	ஏற்றுப் போற்றியோர்	தலைப்பு / உரையாளர்
1	18.12.05	திருச்சிராப்பள்ளி	பாவாணர் தமிழியக்கம்	வரலாற்றின் வரலாறு /இரா. கலைக்கோவன்.
2	14.01.06	தஞ்சாவூர்	உலகத் திருக்குறள் பேரவை	வரலாற்றின் வரலாறு /இரா. கலைக்கோவன்.
3	செப். 06	சென்னை	அகில இந்தியத் தமிழ் எழுத்தாளர் சங்கம்	டாக்டர் இராமாணிக்கனாரின் தமிழ்ப் பணிகள் / மா. ரா. அரசு
4	19.11.06	சென்னை	அண்ணாநகர் தமிழ்ச் சங்கம்	டாக்டர் மா. இராமாணிக்கனாரின் வாழ்வும் பணிகளும் / மா. ரா. அரசு
5	16.12.06	சென்னை	மாணவர் மன்றம்	டாக்டர் மா. இராமாணிக்கனார் நூற்றாண்டு பேருரை / ப. மகாலிங்கம்
6	8. 9. 06	சென்னை	அகில இந்திய வானொலி / டாக்டர் மா. இராசமாணிக்கனார் இதழியல் ஆய்வு மையம்	**மா. இராசமாணிக்கனார் நூற்றாண்டுவிழாக் கருத்தரங்கம்** தொடக்கவுரை/ கோ. ஜெயலால் தலைமை/ தோழர் இரா. நல்லகண்ணு ஆளுமைச் சித்திரம்/ ஔவை நடராசன் இலக்கிய ஆய்வுகள்/ பொன். கோதண்டராமன் வரலாற்று ஆய்வுகள்/ இ. சுந்தரமூர்த்தி கோயில் ஆய்வுகள்/ இரா கலைக்கோவன் பாடநூற் பணிகள்/ மா. ரா. அரசு
7	5.1.2007	சென்னை	தமிழ் இலக்கியத்துறை, சென்னைப் பல்கலைக்கழகம்	**மா. இராசமாணிக்கனார் நூற்றாண்டு நினைவுக் கருத்தரங்கம்** தொடக்க உரை/ ஔவை நடராசன் தலைமை/ வ. ஜெயதேவன் 'மா. இராசமாணிக்கனார்' / நூல் வெளியீடு - தோழர் இரா. நல்லகண்ணு கால ஆய்வுகள் / இரா. குமரவேலன் பத்துப்பாட்டு ஆராய்ச்சி / மு. சுதந்தரமுத்து ஆய்வுத்துறைகளும் அணுகுமுறைகளும் / இரா. கலைக்கோவன் ஆற்றங்கரை நாகரிகம் தொடர்பான ஆய்வுகள்/ சி. மகேந்திரன் இளைஞர் நூல்கள் / மா. ரா. அரசு தமிழியல் ஆய்வு வரலாற்றில் இராசமாணிக்கனாரின் இடம் / வீ. அரசு தலைமை / மே. து. ராசுகுமார் நிறைவுச் சிறப்புரை / இரா. இளவரசு

8	22.1.07	திருச்சிராப்பள்ளி	வரலாற்றுத்துறை சீதாலட்சுமி ராமசாமி கல்லூரி	இளைஞர்களின் இளவேனில் / மா. ரா. அரசு
9	4.2.07	கோயமுத்தூர்	அகில இந்திய வானொலி	மா. இராசமாணிக்கனாரின் பங்களிப்பு / கலந்துரை சிற்பி பாலசுப்பிரமணியன் / மா. ரா. அரசு / இரா. கலைக்கோவன்
10	5.2.07	பூண்டி	அ. வீரையா வாண்டையார் நினைவு புட்பம் கல்லூரி	கல்வெட்டறிஞர் மா. இராசமாணிக்கனார் நூற்றாண்டு விழா பல்கலைக்கழக அளவிலான கல்வெட்டியல் பயிற்சிப் பட்டறை வரலாற்றின் வரலாறு / இரா. கலைக்கோவன்
11	12.2.07	திருச்சிராப்பள்ளி	தமிழ்த்துறை தூய வளனார் கல்லூரி/ டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம்	**தமிழறிஞர் மா. இராசமாணிக்கனார் நூற்றாண்டு விழா** தலைமை / அருள் திரு. இர. இராசரத்தினம் வாழ்த்துரை / அருள் திரு. ஆ. ஜோசப் மையக் கருத்துரை / இரா. இளங்குமரன் **உரையரங்கு** ஆய்வறிஞர் / அந்தோனி குருசு புதிய தடங்களில் வரலாற்றுப் பதிவுகள் / மே.து. ராசுகுமார் சிந்தனையாளர் / மா. ரா. அரசு **நிறைவு நிகழ்வு** தலைமை / அருள்திரு. ச. இலாசர் நிறைவுரை / சோ. சத்தியசீலன்
12	14.2.07	புதுக்கோட்டை	மன்னர் கல்லூரி	வரலாற்று விடிவிளக்கு / இரா. கலைக்கோவன்
13	22.2.07	சென்னை	பெரியார் நூலக வாசகர் வட்டம்	**மா. இராசமாணிக்கனார் நூற்றாண்டு விழா** தலைமை/ இரா. குமரவேலன் சிறப்புரை/ வீ. அரசு
14	23.2.07	காரைக்குடி	இராமசாமி தமிழ்க் கல்லூரி	டாக்டர் மா. இராசமாணிக்கனார் நூற்றாண்டு
15	24.2.07	தஞ்சாவூர்	கரந்தைத் தமிழ்ச் சங்கம்	நூற்றாண்டு நாயகர் முனைவர் மா. இராசமாணிக்கனார் / இரா. இளங்குமரன்

16	9.3.07	திருச்சிராப்பள்ளி	சாகித்திய அகாதெமி / வரலாற்றுத்துறை, சீதாலட்சுமி ராமசாமி கல்லூரி	**தமிழறிஞர் மா. இராசமாணிக்கனார் நூற்றாண்டு விழா** தலைமை / இரா. மோகன் வாழ்த்துரை / கி. சீதா 'மா. இராசமாணிக்கனார்' நூல் வெளியிடு / தவத்திரு பொன்னம்பல அடிகளார் முதற்படி பெறுதல் / இரா. பஞ்சாபகேசன் சைவசமயப் பகலவன் / ம. சா. அறிவுடைநம்பி வரலாற்றாய்வு அணுகுமுறைகள் / மா. ரா. அரசு
17	11.3.07	வேலூர்	தமிழியக்கம்	மா. இராசமாணிக்கனார் படத்திறப்பு / மா. ரா. அரசு
18	19.3.07	சென்னை	மக்கள் நேயச் சுயமரியாதை மன்றம் - கண்ணியம்	மா. இராசமாணிக்கனார் / மா. ரா. அரசு
19	25.3.07	கோயிற்பட்டி	திருவள்ளுவர் மன்றம்	**மா. இராசமாணிக்கனார் நூற்றாண்டு விழா** தலைமை / பா. நமசிவாயம் ஆராய்ச்சிச் செம்மல் / இரா. கலைக்கோவன் மாணவர் தோழர் / மா. ரா. அரசு
20.	21.7.07	திருச்சிராப்பள்ளி	செண்பகத் தமிழரங்கு	வரலாற்றின் வரலாறு / இரா. கலைக்கோவன்





நான்காம் தலைமுறையும்
நயந்து போற்றும்

மா. ரா.



குமரன்

பரதன்